# TAMIL NADU LEGISLATIV ASSEMBLY DEBATES

FOURTEENTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

*8th, 10th, 11th and 12th November* 1975.

*VOLUME LXXVI—(Nos.* 1 *to* 4)

TABLE OF CONTENTS.

*Saturday, 8th November* 1975.


| | PAGES. |
|---|---|
| 1. Government Motion— | |
| Suspension of Rule 22 ... ... ... ... | 1—2 |
| 2. Presentation of Report— | |
| Ninth Report of the Committee on Government Assurances ... ... ... ... ... | 2 |
| 3. Non-official Business— | |
| Bills— | |
| (*a*) Tamil Nadu Agriculturists and Agricultural Labourers Debts Adjustment Bill, 1974 (L.A. Bill No. 59 of 1974)—cont. .. | 2—3, 4—38 |
| (*b*) Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1975 (L.A. Bill No. 2 of 1975). .. .. | 38—100 |
| 4. Point of Information— | |
| Supreme Court's judgment on Prime Minister's Election Case ... ... ... ... | 3 |
| 5. Announcement— | |
| Visit of the delegates of Commonwealth Parliamentary Conference to the Assembly ... | 94 |
| 6. Papers laid on the Table .. .. .. | 100 |

PAGES

*Monday, 10th November 1975.*

1. Questions and Answers .. .. .. 101—131
2. Presentation of Report—
   Eighth Report o the Committee on Delegated Legislation ... ... ... ... ... 131
3. Points of information—
   (*a*) Enquiry re. fire accident in L.I.C. building. 131
   (*b*) Sale of Defence Ministry jeeps to Legislators ... ... ... ... ... 132
4. Government Resolution—
   Location of Headquarters of proposed Leather Industries Development Corporation in Madras and the request to the Government of India to allow Leather Export Promotion Council to function with additional responsibility ... 132—175
5. Discussion on Tamil Nadu Electricity Board's Annual Financial Statement for 1975-76 .. 175—222
6. Papers laid on the Table .. .. .. 222

*Tuesday, 11th November 1975.*

1. Questions and Answers ... ... ... ... 253—299
2. Adjournment Motions—
   (*a*) Kidnapping of school-going children in many places and failure of Police to apprehend culprits and consequent concern among parents ... ... ... 300—303
   (*b*) Lock-out and Threatened retrenchment in Sakthi Textiles Limited, Pollachi ... 303—307
   (*c*) Lay-off and retrenchment in Appakoodal Sakthi Sugar Factory and its consequences ... ... ... ... 307—310
3. Calling Attention—
   Closure of Parry Confectionery at Nellikuppam and consequent unemployment ... ... 310—312
4. Discussion on Tamil Nadu Electricity Board's Annual Financial Statement for 1975-76—*cont.* 312—370, 374—39[illegible]

PAGES

*Tuesday, 11th November 1975—cont.*

5. Presentation of Statements—
   (*a*) Plunging of the Pallavan Transport Corporation bus into the Central Railway Station and the consequent accident .. .. .. 371
   (*b*) List of Members of the Committee for Welfare of Repatriates .. .. .. 395—398
6. Point of order—
   Propriety of a Minister making a statement under Rule 82 about a subject on which a Member had given notice of an adjournment motion under Rule 42 ... ... ... ... ... 372—373
7. Papers laid on the Table .. .. .. 398—399

*Wednesday, 12th November 1975.*

1. Questions and Answers ... ... ... ... 403—409, 412—457
2. Points of Information—
   (*a*) Delay in answering short notice questions. 409—412
   (*b*) Compulsory retirement of I.A.S. Officers ... 566—567
3. Announcement—
   Taking up of the privilege matter at the next meeting ... ... ... ... ... 457—458
4. Adjournment Motions—
   (*a*) Closure of Cashew factories in Kanniyakumari district and hardship to workers. 458—460
   (*b*) Strike in Mettur Spinning Mill consequent on dismissal of some workers ... ... 461—463
   (*c*) Attack and arrest of workers by Police in Sri Lekha Hotel, Madras ... ... 464—469
   (*d*) Pallavan Transport Corporation bus accident near Madras Central Station on 11th November 1975 ... ... ... 469—482

PAGES

*Wednesday, 12th November* 1975—cont.

| | |
|---|---|
| 5. Presentation of Report—<br>Report of the Committee on Public Accounts .. | 482 |
| 6. Discussion on Tamil Nadu Electricity Board's Annual Financial Statement for 1975-76—*cont.* | 483—565 |
| 7. Government Motion—<br>Adjournment of the House *sine die* ... ... | 565—566,<br>567—568 |
| 8. Papers laid on the Table .. .. .. .. | 568—571 |


# தமிழ் நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்

---

## தமிழ் நாடு ஆளுநர்

**மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா.**

---

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி (முதல் அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப்** பொறுப்பு வகிப்பார்: பொதுத் துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.) இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், மதுவிலக்கு, ஆயத்தீர்வை, பின்தங்கிய வகுப்பினர் நலன்.

2. **மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (கல்வி சுற்றுலாத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்**: தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சி மொழி, சட்டமன்றம், சுற்றுலா, சுற்றுலா அபிவிருத்திக் கழகம்.

3. **மாண்புமிகு திரு. க. அன்பழகன்** (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுச் சுகாதாரம், மருத்துவம், நகர அமைப்பு, குடிநீர் வாரியம்.

4. **மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (பொதுப் பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:** பொதுப் பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உட்பட சிறு பாசனம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

5. **மாண்புமிகு திரு. செ. மாதவன்** (வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வருவாய்த் துறை, உணவு, வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், பூமிதான் —கிராம தானம் இயக்கங்கள் ஆலைத் துணிகள், ஜவுளி நூல், கைத்தறி, சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள், பத்திரப், பதிவு, நிலச் சீர்திருத்தங்கள்.

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

### GOVERNOR OF TAMIL NADU.

His Excellency Thiru KODARDAS KALIDAS SHAH

### Members of the Council of Ministers.

1. THE HON. DR. M. KARUNANIDHI: (Chief Minister) in-charge of Pubilc, Finance, Planning, General Administration, matters relating to Indian Civil Service Officers and Indian Administrative Service Officers, District Revenue Officers, Police, Elections, Prohibition, Excise and Backward Classes.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN: (Minister for Education and Tourism) in-charge of Education including Technical Education, Official Language, Legislature, Tourism and Tourist Development Corporation.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN: (Minister for Health) in-charge of Public Health, Medicine, Town Planning and Water Board.

4. THE HON. THIRU P. U. SHANMUGAM: (Minister for Public Works) in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Ports.

5. THE HON. THIRU S. MADHAVAN: (Minister for Revenue) in-charge of Revenue, Food, Board of Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Bhoodhan and Gramdhan, Textiles, Yarn, Handlooms, Law, Courts and Prisons, Registration and Land Reforms.

6. THE HON. THIRU S. J. SADIQ PASHA: (Minister for Industries) in-charge of Industries, Electricity, Mines and Minerals, Iron and Steel Control, Companies and Waqfs.

7. THE HON. THIRU Si. Pa. ADITANAR: (Minister for Agriculture) in-charge of Agriculture, Food Production, Agricultural Engineering Wing, Agro-Engineering and Services Co-operative Societies at the Block, District and apex level including the Federation.

6. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (தொழில்-மின்சாரத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில்கள், மின்சாரம், சுரங்கங்கள், கனிப் பொருள்கள், இரும்பு-உருக்குக் கட்டுப்பாடு, கம்பெனிகள், முகம்மதியர் அறக் கட்டளைகள்.

7. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வேளாண்மை, உணவு உற்பத்தி, வேளாண்மைப் பொறியியற் பிரிவு, வேளாண்மைப் பொறியியல் சம்பந்தமான பகுதிகள், வட்டாரக் கூட்டுறவுச் சங்கங்கள், இணைப்பு அளவிலான கழகங்கள் உட்பட்ட மாவட்டச் சங்கங்கள்.

8. மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி (கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: கூட்டுறவு, வேளாண்மை மறு நிதி உதவி வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், இட வசதிக் கட்டுப்பாடு.

9. மாண்புமிகு திரு. க. இராசாராம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழிலாளர் நலம், போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி, எடைகள் — அளவைகள் குறித்த சட்டம், புள்ளிவிவரம். வேலை வாய்ப்பும் பயிற்சி அளித்தலும், முன்னாள் இராணுவத்தினர்.

10. மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை (சமூக நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: மகளிர்-சிறுவர் நலம் உட்பட சமூக நலம், மீனளம், இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகளும் கண்காணிப்புப் பணிகளும்.

11. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (வணிக வரித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வணிக வரிகள், சின்கோனா உட்பட காடுகள், கால்நடை வளர்ப்பு, கடன் கொடுத்தல் குறித்த சட்டம், கிராமவாசிகள் கடன் பட்டிருத்தல், சீட்டுகள் குறித்த சட்டம்.

12. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: நகராட்சி, நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், எழுதுபொருள் — அச்சுத் துறை, அரசு அச்சகம்.

13. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் (அற நிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அறக்கட்டளைகள், கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம், பால் வழங்குத் துறை, பால்வள முனைப்புத் திட்டங்கள், தமிழ்நாடு பால்வள நிறுவனம், விளம்பரம், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, படச் சுருள் தொழில் நுட்பம், இளைஞர் அணி சீரணி.

14. மாண்புமிகு திரு. என். இராசாங்கம் (அரிசன நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அரிசன நலம், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள், பத்திரிகை காகிதக் கட்டுப்பாடு, பயண அனுமதிச் சீட்டுகள், திரைப்படச் சட்டம்.

8. THE HON. THIRU Mannai P. NARAYANASWAMY: (Minister for Co-operation) in-charge of Co-operation, Agricultural Refinance, Housing including Slum Clearance Board and Accommodation Control.

9. THE HON. THIRU K. RAJARAM: (Minister for Labour and Transport) in-charge of Labour, Transport, Nationalised Transport, Motor Vehicles Tax, Legislation on Weights and Measures, Statistics, Employment and Training and Ex-Servicemen.

10. THE HON. THIRU C. V. M. ANNAMALAI: (Minister for Social Welfare) in-charge of Social Welfare including Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages and Approved Schools and Vigilance Service.

11. THE HON. THIRU O. P. RAMAN: (Minister for Commercial Taxes) in-charge of Commercial Taxes, Forest including Cinchona, Animal Husbandry, Legislation on Money Lending, Rural Indebtedness and Legislation on Chits.

12. THE HON. THIRU S. RAMACHANDRAN: (Minister for Local Administration) in-charge of Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions, Stationery and Printing and Government Press.

13. THE HON. THIRU M. KANNAPPAN: (Minister for Religious Endowments) in-charge of Religious Endowments, Khadi and Village Industries, Rural Industries Project, Milk, Operation Flood Project, Tamil Nadu Dairy Development Corporation, Information and Public Relations, Film Technology, Youth Service Corps and Prosperity Brigade.

14. THE HON. THIRU N. RAJANGAM: (Minister for Harijan Welfare) in-charge of Harijan Welfare, Indian Overseas and Refugees and Evacuees, Newsprint Control, Passports and Cinematograph Act.

## தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்

---

### பேரவைத் தலைவர்

**மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன், பி.ஓ.எல்., எம். ஏ.**

### பேரவைத் துணைத் தலைவர்

திரு. நா. கணபதி, ஏ.எஸ்.ஸி., பி எல்.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

**திரு. மா. வே. நாராயணசாமி.**

திரு. ஏ. ஆர். சுப்பையா.

திரு .முனு. ஆதி

திரு. ஜே. ஜேம்ஸ்

திரு. ஏ. சுப்பிரமணியம்

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்

### சட்டமன்றப் பேரவைச் செயலாளர்

திரு. மா. சண்முகசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்.

### .. துணைச் செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ.. பி.எல்.

### குழு அலுவலர்

திரு. ப. சுப்பராயன், எம். ஏ.

### உதவிச் செயலாளர்கள்

**திரு. த. இராதாகிருஷ்ணன்.**

திரு. பெஞ்சமின் நெல்சன், பி.ஏ.

திரு. இரா. பாலகுரு, பி.ஏ.

### விவாதப் பதிப்பாளர்

**திரு. கே. சுந்தரராசன்**

### .. எஸ்டேட் அதிகாரி

**திரு. வி. சீதாராமன், பி.காம்.**

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 1 அண்ணாமலை, மாண்புமிகு திரு. சி.வி.எம். (அமைச்சர்). | காஞ்சிபுரம். |
| 2 அபுசாலி, திரு. எம். அ. .. .. . | புவனகிரி |
| 3 அப்துல் ஜப்பார், திரு. வா. மை .. .. | அரவக்குறிச்சி. |
| 4 அரங்கண்ணல், திரு. இராம. .. .. | எழும்பூர். |
| 5 அரங்கநாயகம், திரு. செ. .. .. | கோயம் புத்தூர்-மேற்கு. |
| 6 அழகமுத்து, திரு. து. ப. .. .. (அரசாங்கத் தலைமைக் கொறடா). | உப்பிலியபுரம். |
| 7 அழகர்சாமி, திரு. சோ. .. .. .. | கோவில்பட்டி |
| 8 அழகுத் தேவர், திரு. எஸ். .. . | சாத்தூர். |
| 9 அனந்தநாயகி, திருமதி த. ந. .. .. | மயிலாப்பூர். |
| 10 அன்பழகன், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | புரசைவாக்கம். |
| 11 அன்புச்செழியன், திரு. நீ. .. .. | பெரியகுளம் |
| 12 ஆண்டி அம்பலம், திரு. எம். .. .. | மேலூர் வடக்கு. |
| 13 ஆண்டி என்ற குருசாமி, திரு. கு. .. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ வ.) |
| 14 ஆதித்தனார், மாண்புமிகு திரு. சி. பா. (அமைச்சர்). | ஸ்ரீவைகுண்டம். |
| 15 ஆலடி அருணா, திரு. வி. .. .. | ஆலங்குளம். |
| 16 ஆல்டா எம். பௌலர், திருமதி .. | நியமன உறுப்பினர் |
| 17 ஆறுமுகம், திரு அ. .. .. .. | எடப்பாடி. |
| 18 ஆறுமுகம், திரு. சி. .. .. .. | மதுராந்தகம். |
| 19 இரத்தினசபாபதி, திரு. மு. .. .. | விளாத்திகுளம். |
| 20 இராசகோபால், திரு. க. மு. .. .. | உத்திரமேரூர். |
| 21 இராசகோபால், திரு. வீ. .. .. | வந்தவாசி. |
| 22 இராசமாணிக்கம், திரு. அ. .. .. | நாகப்பட்டினம். |
| 23 இராசமாணிக்கம், திரு. கு. .. . | ஆடுதுறை |
| 24 இராசரத்தினம், திரு. டி. .. . | ஸ்ரீபெரும்புதூர். |
| 25 இராசாராம், மாண்புமிகு திரு. க. . (அமைச்சர்). | சேலம் 2. |
| 26 இராசு, திரு. ஜே. எஸ். .. .. .. | பெரம்பலூர் (செ.வ.). |
| 27 இராதாகிருட்டிணன், திரு. எம். எஸ். .. | தண்டராம்பட்டு. |
| 28 இராமச்சந்திரன், திரு. எம். ஜி. .. | பரங்கிமலை. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 29 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்). | பண்ருட்டி. |
| 30 இராமநாதன், திரு. சி. .. .. | அறந்தாங்கி. |
| 31 இராமலிங்கம், திரு. இரா. .. .. | தூத்துக்குடி. |
| 32 இராமலிங்கம், திரு. செ. .. .. | கடலாடி (செ.வ.). |
| 33 இராமன், மாண்புமிகு திரு. ஓ. பி. (அமைச்சர்). | மேலூர் தெற்கு (செ.வ.) |
| 34 இராமன், திரு. மு. .. .. .. | கண்டமங்கலம் (செ.வ.). |
| 35 இராஜாங்கம், மாண்புமிகு திரு. என். (அமைச்சர்). .. | குறிஞ்சிப்பாடி (செ.வ.). |
| 36 இராஜாப்பிள்ளை, திரு. வீ. கே. .. .. | கன்னியாகுமரி. |
| 37 இளங்கோவன், திரு. கோ. .. .. | திருவையாறு. |
| 38 இளஞ்செழியன், திரு. வீ. சா. .. .. | விராலிமலை. |
| 39 எட்டியப்பன், திரு. பூ. .. .. .. | பெரணமல்லூர். |
| 40 எட்மண்ட், திரு. க. உரோ. .. .. | திருச்செந்தூர். |
| 41 கணபதி, மாண்புமிகு திரு. என். (பேரவைத் துணைத் தலைவர்). .. | பாபநாசம். |
| 42 கணபதி, திரு. டி. .. .. .. | நாங்குனேரி. |
| 43 கணேசன், திரு. எம். .. .. | ஒரத்தநாடு. |
| 44 கணேசன், திரு. சி. .. .. .. | குற்றாலம். |
| 45 கண்ணப்பன், மாண்புமிகு திரு. மு. (அமைச்சர்). | கிணத்துக்கடவு. |
| 46 கண்ணன், திரு. எம். ஆர். .. .. | பேஸின் பிரிட்ஜ். |
| 47 கதிரவன், திரு. கா. மு. .. .. .. | தென்காசி. |
| 48 கந்தசாமி, திரு. கே. .. .. .. | உசிலம்பட்டி. |
| 49 கந்தசாமி, திரு. கே. பி. .. .. .. | சாத்தான்குளம். |
| 50 கந்தசாமி, திரு. எம். .. .. .. | குளித்தலை. |
| 51 கந்தப்பன், திரு. செ. .. .. .. | திருச்செங்கோடு. |
| 52 கரிவேங்கடம், திரு. மா. வெ. .. .. | பாலக்கோடு. |
| 53 கருணாநிதி, மாண்புமிகு டாக்டர் மு. (முதல் அமைச்சர்). | சைதாப்பேட்டை. |
| 54 கருணாநிதி, திரு. தாழை மு. .. .. | திருவாரூர் (செ.வ.) |
| 55 கருணைநாதன், திரு. சோ. .. .. | கூனூர். |
| 56 கருப்பையா, திரு. ஆ. .. .. .. | கங்கைகொண்டான் (செ.வ.) |
| 57 காசிராமன், திரு. நா. .. .. .. | கும்பகோணம். |
| 58 காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி, திரு. | முதுகுளத்தூர். |
| 59 காமாட்சி, திரு. கு. .. .. .. | திருவரம்பூர். |
| 60 கார்த்திசன், திரு. வீ. .. .. .. | இராதாபுரம். |
| 61 காவேரிமணியம், திரு. சொ. .. .. | திருப்பரங்குன்றம். |
| 62 காளிமுத்து, திரு. கா. .. .. .. | சிவகாசி. |
| 63 கிட்டப்பா, திரு. என். .. .. .. | மாயூரம். |
| 64 கிருட்டிணன், திரு. நா. .. .. .. | பேரணம்பட்டு (செ. வ.). |
| 65 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. .. .. | நெல்லிக்குப்பம். |
| 66 கிருஷ்ணமூர்த்தி, திரு. வ. .. .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 67 கிருஷ்ணன், திரு. கே. ஆர். .. .. | ஊத்தங்கரை. |
| 68 குப்பல் இராமகிருஷ்ணன், திரு. கே. எஸ். | மதுரை (கிழக்கு). |
| 69 குமாரசாமி, திரு. அ. சே. .. .. | திருக்கோயிலூர். |
| 70 குமாரசாமி, திரு. கே. என். .. .. | பல்லடம். |
| 71 குருசாமி, திரு. நா. வெ. .. .. | ஆண்டிப்பட்டி. |
| 72 கேசவலு, திரு. தே. .. .. .. | கள்ளக்குறிச்சி. |
| 73 கோதண்டராமய்யா, திரு. கே. எஸ். .. | உதனப்பள்ளி |
| 74 கோபால், திரு. எம். .. .. .. | குன்னத்தூர் (செ. வ.). |
| 75 கோபால், திரு. கே. பி. .. .. .. | கம்பம். |
| 76 கோவிந்தசாமி, திரு. வி. செ. .. .. | காவேரிப்பட்டினம். |
| 77 கோவிந்தராசன், திரு. ஆர். .. .. | கடலூர். |
| 78 கோவிந்தராசன் துரை, திரு. .. .. | கந்தர்வகோட்டை |
| 79 கோவிந்தன், மாண்புமிகு புலவர் கா. (பேரவைத் தலைவர்). | செய்யாறு. |
| 80 கோவை செழியன், திரு. .. .. | காங்கேயம். |
| 81 சகாதேவன், திரு. எஸ். .. .. | செஞ்சி. |
| 82 சங்குமுத்து தேவர், திரு. ச. .. .. | அம்பாசமுத்திரம். |
| 83 சதாசிவம், திரு. செ. .. .. .. | ஆண்டிமடம் |
| 84 சண்முகசுந்தரம், திரு. அ. ப. .. .. | பொள்ளாச்சி. |
| 85 சண்முகம், மாண்புமிகு திரு. ப. உ. (அமைச்சர்). | திருவண்ணாமலை |
| 86 சண்முகம், திரு. பெரி. .. .. .. | திருவாடானை |
| 87 சண்முகம், திரு. மு. .. .. .. | விழுப்புரம். |
| 88 சத்தியமூர்த்தி, திரு. மு. .. .. | புதுக்கோட்டை. |
| 89 சத்தியவாணிமுத்து, திருமதி .. .. | பெரம்பூர் (செ.வ.). |
| 90 சத்தியேந்திரன், திரு. எம்.எஸ். கே. .. | இராமநாதபுரம் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 91 சம்பத், திரு. டி. வி. | செம்பனார்கோவில் |
| 92 சாதிக் பாட்சா, மாண்புமிகு திரு. எஸ்.ஜே. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை |
| 93 சாரதி, திரு. மா. பா. | வேலூர். |
| 94 சிதம்பரம், திரு சித. | காரைக்குடி. |
| 95 சிவப்பிரகாசம், திரு. தி. சி. ஆ. | சேரன்மகாதேவி |
| 96 சிவபெருமாள், திரு. கோ. | அரியலூர். |
| 97 சிறைமீட்டான், திரு. தொ. க. | பரமக்குடி (செ.வ.) |
| 98 சீனிவாசன், திரு. பெ. | விருதுநகர். |
| 99 சீனிவாசன், திரு. தொ. ப. | பேரூர். |
| 100 சின்னசாமி, திரு. அ. | செயங்கொண்டம் (செ.வ.) |
| 101 சின்னசாமி, திரு. ஆர். | தர்மபுரி. |
| 102 சின்னசாமி திரு. மு. | மொடக்குறிச்சி, |
| 103 சின்னசாமி, திரு. வ. | எற்காடு ( ஆ. வ.) |
| 104 சின்னராசு, டாக்டர் ச. அ. | ஹரூர் (செ. வ.) |
| 105 சின்னவெள்ளையன், திரு. சி. | சேந்தமங்கலம் (ஆ. வ.) |
| 106 சுந்தரம், திரு. ஓ. என். | திண்டுக்கல். |
| 107 சுப்பிரமணியம், திரு. வ. | சிங்காநல்லூர். |
| 108 சுப்பிரமணியம், திரு. எஸ். கே. | சத்தியமங்கலம். |
| 109 சுப்பிரமணியம், திரு. கே. எம். | தியாகராயநகர். |
| 110 சுப்பிரமணியன், திரு. மா. | ஈரோடு. |
| 111 சுப்பிரமணியன், திரு. வீ. | உளுந்தூர்பேட்டை. |
| 112 சுப்பு, திரு. க. | ராஜபாளையம். |
| 113 சுப்பையா, திரு. ஆ. கு. | கோட்டூர் (செ. வ.) |
| 114 சுப்பையா, திரு. கே. வி. | ஆலங்குடி. |
| 115 சுப்பையா, திரு. ச. | சங்கரன்கோயில் (செ. வ.) |
| 116 சுப்பையா, திரு. வ. ஆர். | கடயநல்லூர். |
| 117 சுருளிவேல், திரு. மு. | போடிநாயக்கனூர். |
| 118 சுரேந்திரன், திரு. எம். | மேட்டூர். |
| 119 சுவாமிதாஸ், திரு. எ. | பத்மநாபபுரம். |
| 120 செபமாலை, திரு. கோ. | மங்களூர் (செ. வ.) |
| 121 ஜெயராமன், திரு. சி. | சேலம்-1. |
| 122 செல்லத்துரை, திரு. வீ. | ஓமலூர்.(செ. வ.) |
| 123 செல்லையா, திரு. குழ. | பேராவூரணி. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 124 செல்வராஜ், திரு. எம். | விருத்தாசலம். |
| 125 சேதுராமன், திரு. சி. | சிவகங்கை. |
| 126 சோனையா, திரு. த. | மானாமதுரை. |
| 127 சோமசுந்தரம், திரு. ந. | வலங்கைமான் (செ. வ.) |
| 128 சௌடி சுந்தரபாரதி, திரு. எஸ். | அருப்புக்கோட்டை. |
| 129 சௌந்தரபாண்டியன், திரு. பெ. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 130 டென்னிஸ், திரு. என். | கிள்ளியூர். |
| 131 தங்கமணி, திரு. கே. டி. கே. | மதுரை-மேற்கு. |
| 132 தர்மலிங்கம், மாண்புமிகு திரு. அ. பெ. (அமைச்சர்). | திருச்சிராப்பள்ளி-2. |
| 133 தருமலிங்கம், திரு. ந. | ரிஷிவந்தியம் (செ.வ.) |
| 134 தவமணித்தேவர், திரு. வி. | சேடப்பட்டி. |
| 135 திம்மராயக் கவுண்டர், திரு. டி. சி. | நாட்ராம்பள்ளி. |
| 136 தியாகராசன், திரு. அ. | திருமயம். |
| 137 தியாகராசன், திரு. இ. எஸ். | திருத்தணி. |
| 138 திருப்பதி, திரு. கு. | மதுரை (சென்ட்ரல்). |
| 139 துரைசாமி திரு. எ. க. | குடியாத்தம். |
| 140 துரைசாமி, திரு. சு. | திருப்பூர். |
| 141 துரைமுருகன், திரு. | காட்பாடி. |
| 142 துரைராஜ், திரு. சு. ம. | திருவள்ளூர் (செ.வ.) |
| 143 தூயமணி, திரு. மே. சி. | மேட்டுப்பாளையம். |
| 144 தேவராசன், திரு. எம். | உதகமண்டலம். |
| 145 தேவேந்திரன், திரு. அ. | நன்னிலம் (செ. வ.) |
| 146 தோப்பூர் திருவேங்கடம், திரு. | கணியம்பாடி. |
| 147 நடராசன், திரு. ஈ. எம். | அந்தியூர். |
| 148 நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர். |
| 149 நரசிம்மன், திரு. எ. சி. | ஆரணி. |
| 150 நல்லசாமி, திரு. எஸ். | கரூர். |
| 151 நாகராஜன், டாக்டர் க. | வடமதுரை. |
| 152 நாகலிங்கம், திரு. பா. | பொன்னேரி (செ.வ.) |
| 153 நாச்சிமுத்து, திரு. நா. | ஒட்டஞ்சத்திரம். |
| 154 நாச்சியப்பன், திரு. எ. எம். டி. | ஆத்தூர். |
| 155 நாச்சியப்பன், திரு. ந. | சங்கராபுரம். |
| 156 நாராயணசாமி, திரு. மா. வே. | திருவொற்றியூர். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 221 லத்தீப், திரு. எம். எ. | வாணியம்பாடி. |
| 222 வகாப், திரு. கே. எ. | ராணிப்பேட்டை. |
| 223 வடிவேலு, திரு. சீ. க. | தொட்டியம். |
| 224 வடிவேல், திரு. எஸ். | சீர்காழி (செ. வ.) |
| 225 விசுவநாதன், திரு. செ. கோ. | செங்கற்பட்டு. |
| 226 வீராசாமி, திரு. நா. | ஆற்காடு. |
| 227 வெங்கடசாமி, திரு. பி. | ஹோசூர். |
| 228 வெள்ளத்துரை, திரு. அ. | வாசுதேவநல்லூர். |
| 229 வேதாசலம், திரு. மு. | வண்ணாரப்பேட்டை, (சென்னை நகரம்). |
| 230 வேலப்பன், திரு. சி. வே. | கபிலமலை. |
| 231 வேழவேந்தன், திரு. கா. | கும்மிடிபூண்டி. |
| 232 ஜேம்ஸ், திரு. ஜே. | திருவட்டார். |
| 233 ஜோதி வெங்கடாசலம், திருமதி. | ஸ்ரீரங்கம் (செ. வ.) |
| 234 ஹாண்டே, டாக்டர் எச். வி. | பார்க் டவுன் (சென்னை நகரம்). |
| 235 வெற்றிடம் | வீரபாண்டி. |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்;—

1 மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி—அமைச்சர்.

2 திரு. கோவிந்த் சாமிநாதன்—தலைமை வழக்கறிஞர்.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### சனிக்கிழமை, 1975 நவம்பர் 8

**சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப்** பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. நா. கணபதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### (1) அரசினர் தீர்மானம்

### விதி 22-ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையில் முதல் ஒரு மணி நேரம் 'வினாக்கள்—விடைகள்' என்றுள்ள சட்டப் பேரவை விதி 22-ஐ இன்று தளர்த்த வேண்டும்"

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அலுவல் ஆய்வுக் குழு இது குறித்து ஏற்கெனவே ஒத்துக்கொண்டிருக்கிறது. தீர்மானம் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது என்று நான் கருதுகிறேன்.

THIRU N. K. PALANISAMI: Sir, I oppose it.

MR. DEPUTY SPEAKER: When you oppose it, I cannot declare it passed by the House. The hon. Member should give consideration to the views expressed by his leader at the B.A.C. Will the hon. Member withdraw his opposition?

THIRU K. T. K. TANGAMANI: In view of the fact that the Commonwealth Parliamentary Delegation is coming here, we are adjourning at 12.30 p.m. The matter was raised at the Business Advisory Committee meeting. By dispensing with the question hour, we are giving the maximum time to the private Members' business. We have decided and we all agreed that the Question Hour be dispensed with to-day. That was the position.

---

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.

| (1) | (2) |
|---|---|
| 157 நெடுஞ்செழியன், மாண்புமிகு டாக்டர் இரா. (அமைச்சர்). .. | திருவல்லிக்கேணி. |
| 158 நைனுமலை, திரு. இரா. .. .. | ராசிபுரம். |
| 159 பத்மநாபன், திரு. பெர. .. .. | திருநெல்வேலி. |
| 160 பத்மாவதி, திருமதி. எ. கோ. .. .. | முகையூர். |
| 161 பரந்தாமன், திரு. ஆ. .. .. .. | கடம்பத்தூர். |
| 162 பரமசிவம், திரு. எம். .. .. .. | தாரமங்கலம். |
| 163 பலராமன், திரு. என். எஸ். .. .. | அரக்கோணம். |
| 164 பழனிசாமி, திரு. நா. .. .. .. | பொங்கலூர். |
| 165 பழனிசாமி, திரு. என். கே. .. .. | பெருந்துறை. |
| 166 பழனிசாமி, திரு. மு. .. .. .. | வெள்ளக்கோயில். |
| 167 பழனிச்சாமி, புலவர் சி. .. .. | பழனி (செ.வ.) |
| 168 பழனியப்பன், டாக்டர் ச. மு. .. .. | கோபிசெட்டிபாளையம். |
| 169 பழனியம்மாள், திருமதி வி. ப. .. | தாராபுரம். |
| 170 பழனிவேலன், திரு. க. .. .. | வரகூர். |
| 171 பழனிவேலன், திரு. மு. .. .. | நாமக்கல். |
| 172 பழனிவேலு, திரு. பி. .. .. .. | ஆத்தூர். |
| 173 பழனிவேல் ராஜன், திரு. .. .. | தேனி. |
| 174 பன்னீர் செல்வம், திரு. எம். .. .. | ஆம்பூர் (செ. வ.) |
| 175 பாண்டுரங்கம், திரு. சி. .. .. .. | செங்கம் (செ. வ.) |
| 176 பாலகிருட்டிணன், திரு. கு. .. .. | மன்னார்குடி. |
| 177 பாலசுந்தரம், திரு. வை. .. .. | அச்சரபாக்கம் (செ.வ.). |
| 178 பாலையா, திரு. எ. .. .. .. | கொளச்சல். |
| 179 பெரியசாமி, திரு. கு. .. .. .. | கொடவாசல். |
| 180 பெரியசாமி, திரு. தி. ஒ. .. .. | அவினாசி. |
| 181 பெருமாள், திரு. செ. .. .. .. | காட்டுமன்னார்கோயில். |
| 182 பெருமாள், திரு. எ. ஆர். .. .. | காரியப்பட்டி. |
| 183 பொம்மன், திரு. கு. அ. .. .. | கூடலூர் (செ. வ.) |
| 184 பொன் சொக்கலிங்கம், திரு. பி. .. | சிதம்பரம். |
| 185 பொன்னப்ப நாடார், திரு. ஆர். .. .. | விளவங்கோடு. |
| 186 பொன்னுமலை, திரு. தி. .. .. | பனைமரத்துப்பட்டி. |
| 187 பொன்னுரங்கம், திரு. எ. எம். .. | சோளிங்கபுரம். |
| 188 மணலி கந்தசாமி, திரு. சி. .. .. | திருத்துறைப்பூண்டி. |
| 189 மணியன், திரு. பி. எஸ். .. .. | சோழவந்தான். |

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.

| (1) | (2) |
|---|---|
| 190 மதியழகன், திரு. கே. எ. .. .. | ஆயிரம் விளக்கு. |
| 191 மருதாசலம், திரு. என். .. .. | பேரூர் (செ. வ.). |
| 192 மலைக்கண்ணன், திரு. வீ. .. | இளையாங்குடி. |
| 193 மன்னியப்பன், திரு. சி. .. .. | கிருஷ்ணகிரி. |
| 194 மாணிக்கம், திரு. என். .. .. | பென்னாகரம். |
| 195 மாணிக்கவாசகம், திரு. இரா. .. .. | தொண்டாமுத்தூர். |
| 196 மாதவன், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்). | திருப்பத்தூர். (இராமநாதபுரம் மாவட்டம்), |
| 197 மாரிமுத்து, திரு. எ. ஆர். .. .. | பட்டுக்கோட்டை. |
| 198 மாரிமுத்து, திரு. மூ. .. . | தலைவாசல் (செ.வ.) |
| 199 மீனாட்சிசுந்தரம், திரு. மா. .. .. | வேதாரண்யம் |
| 200 முகமது கோதர் முகைதீன், திரு. எஸ். .. | மேலப்பாளையம். |
| 201 முத்தமிழ்ச செல்வன், திரு. வெ. ந. .. | லால்குடி. |
| 202 முத்து, திரு. வ. .. .. | சங்கரி (செ. வ.) |
| 203 முத்துசாமி, திரு. ப. .. .. .. | வேடசந்தூர். |
| 204 முத்துச்செல்வன், திரு. பு. செ. .. | முசிறி. |
| 205 முத்துவேல், திரு. ந. .. .. .. | வானூர் (செ. வ.) |
| 206 முத்தையா, திரு. கே. கே. .. .. | கடலூர். |
| 207 முத்தையா, திரு. எம். .. .. .. | ஒட்டப்பிடாரம் (செ. வ.) |
| 208 முருகையன், திரு. எஸ். .. . | கலசப்பாக்கம். |
| 209 முனியாண்டி, திரு. ஆ. .. .. .. | நிலக்கோட்டை (செ. வ.) |
| 210 முனு ஆதி, திரு. மு. .. . .. | திருப்போரூர். |
| 211 முனுசாமி, திரு. ரா. ரா. .. .. | மேல்மலையனூர். |
| 212 மொய்தீன், திரு. திருப்பூர் எ. எம். .. .. | துறைமுகம் (சென்னை நகரம்). |
| 213 மோசஸ், திரு. ம. .. .. .. | நாகர்கோயில் |
| 214 ரங்கநாதன், திரு. கே. .. .. .. | கோயம்புத்தூர் (கிழக்கு). |
| 215 ராமசாமி, திரு. இ. .. .. .. | வால்பாறை. |
| 216 ராமசாமி, திரு. ஜி. .. .. .. | திருப்பத்தூர் (வட ஆர்க்காடு மாவட்டம்). |
| 217 ராமராசன், திரு. வ. க. .. .. | பவானிசாகர் (செ. வ.) |
| 218 இராஜா, திரு. எ. எம். .. .. | பவானி. |
| 219 ராஜாராம், திரு. ஜி. .. .. .. | திண்டிவனம். |
| 220 ரெத்தினசாமித் தேவர், திரு. மு. சி. ஆ. | திருமங்கலம். |

விதி 22-ஐத் தளர்த்தல்

MR. DEPUTY SPEAKER: I want to know from the hon. Member, Thiru N. K. Palanisami, whether he withdraws his opposition to the motion, in view of his leader's statement.

THIRU N. K. PALANISAMI: Sir, I withdraw my opposition.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எனவே இந்தத் தீர்மானத்தைப் பேரவை ஒருமனதாக ஏற்றுக்கொள்கிறது என்று கருதுகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்று எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய வினாப் பட்டியலில் கண்டுள்ள வினாக்கள் 10—11—1975 திங்கட்கிழமையன்று எடுத்துக் கொள்ளப்படும்.

## (2) அறிக்கை அளித்தல்

### அரசினர் உறுதிமொழிக் குழுவின் (ஒன்பதாவது) அறிக்கை

திரு. ஏ. சுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் அரசினர் உறுதிமொழிக் குழுவின் ஒன்பதாவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## (3) தனியார் அலுவல்கள்

### சட்ட முன்வடிவுகள்

(அ) தமிழ்நாடு, 1974 ஆம் ஆண்டு, உழவர்கள், வேளாண்மைத் தொழிலாளர்கள் கடன்கள் சரிகட்டுதல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 59/74) (தொடர்ச்சி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, தனியார் அலுவல்கள். தமிழ்நாடு, 1974 ஆம் ஆண்டு, உழவர்கள், வேளாண்மைத் தொழிலாளர்கள் கடன்கள் சரிகட்டுதல் சட்ட



முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 59/74) மீதான விவாதம் தொடரும். திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்கள் பேசலாம்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, . . .

## (4) தகவல் கோரல்

### இந்திய தலைமை அமைச்சரின் தேர்தல் வழக்கில் உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பு குறித்து

THIRU K. T. K. TANGAMANI: Sir, on a point of information. Even yesterday, I wanted to know about the result of the Supreme Court judgment on Prime Minister's case. In view of the fact that the Supreme Court judgment has been pronounced, has the Chair got anything to say on this?

MR. DEPUTY SPEAKER: I think the judgment has been given wide publicity. That is all I can say now.

THIRU R. PONNAPPA NADAR: Is the hon. Member. Thiru K. T. K. Tangamani giving us a party for the judgment?

MR. DEPUTY SPEAKER: Mr. K. T. K. Tangamani, the hon. Member, Thiru R. Ponnappa Nadar is asking some information from you. He is asking: 'Will you give us some treat or party for the judgment?'

THIRU K. T. K. TANGAMANI: It is for the Congress Party to do this. I invite Thiru Subramaniam to say if he has anything to tell on this.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, இன்றே 'ட்ரீட்' கொடுத்திருக்கலாம். ஆனால், இன்று மூன்று வேளையும் ட்ரீட் கிடைப்பதால் அஜீரணம் வந்துவிடும். அதற்குப் பயந்து கொண்டுதான் ட்ரீட் கொடுப்பதைப்பற்றி யோசிக்க வேண்டியிருக்கிறது.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, என் போன்றவர்களுக்கு மூன்று நான்கு தடவை சாப்பிட்டாலும் அஜீரணம் வராது.

வில்லை. அந்தத் துறையில் இருக்கிற அத்தனையையும் ஒழுங்காக, ஜனநாயக முறையில் திருத்தி அமைத்து, அந்த கோவாப்பரேடிவ் துறை விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பதற்கு வழி செய்தாக வேண்டும்.

அது மட்டுமல்ல, கோவாப்பரேடிவ் துறையிலிருந்து நிலமற்றவர்களுக்கு, மிகத் தாழ்ந்தவர்களுக்கு, வசதி இல்லாத ஏழைகளுக்குக் கடன் கிடைப்பதற்கு வாய்ப்பு இல்லை. எனவே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டது போல சரியான மாற்று ஏற்பாடுகளை ஒவ்வொரு கிராமத்திலும் செய்து சாதாரண மக்களுக்குக் குறைந்த வட்டியில் கடன் கிடைப்பதற்கு வகை செய்தாக வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்தக் கடன்களை, இருக்கின்ற கடன்களை ரத்து செய்து, புதிய கடன்கள் கிடைப்பதற்கு மாற்று ஏற்பாடுகளைச் செய்தாக வேண்டும் என்று சொல்லும்போது நான் ஏற்கெனவே குறிப்பிட்டது போல இதைத் தனிமைப்படுத்திப் பார்க்க முடியாது. இதற்காகப் பல்வேறு வேலைகளை, பல்வேறு பணிகளை, பல்வேறு உதவிகளை, பல்வேறு சலுகைகளை இந்தச் சாதாரண மக்களுக்குச் செய்தால்தான் அவர்கள் தங்கள் வாழ்க்கையைச் செம்மைப்படுத்திக் கொள்ள முடியும். அவர்கள் ஏன் கடனுக்கு ஆளாகிறார்கள் என்றால் அவர்களுக்குக் கிராமப்புறத்திலே வேலை வாய்ப்புகள் மிக, மிகக் குறைவு. கிராமங்களில் உள்ளவர்கள் ஏழ்மை நிலையில் இருக்கிறார்கள். அங்கு வேலை வாய்ப்புகள் குறைவு. அதற்குக் காரணம், அரசாங்கம் செய்யக் கூடிய புதிய பொருளாதார நடவடிக்கைகள் எல்லாம் பெரும்பாலும் நகரங்களிலும், நகரைச் சுற்றி உள்ள பகுதிகளோடும் நின்று விடுகின்றன. கிராமங்களுக்கு எட்டுவது கிடையாது. இதன் பலன்கள் கிராமத்து மக்களுக்குக் கிடைப்பதில்லை. அப்படியே கிராமத்திற்கு எட்டினாலும் கிராமத்துப் பெரிய மனிதர்கள், அங்குள்ள வசதி படைத்தவர்கள் இவர்களோடு நின்று விடுகிறதே தவிர கீழ் மட்டத்திற்கு அது வருவதில்லை. கிராமப்புற கடன் சொசைடிகளை அமைத்தாலும், கிராம கூட்டுறவு சொசைடிகளை அமைத்தாலும் அவைகள் கிராமத்துப் பெரிய மனிதர்களுக்கு, கிராமப் பெரிய தனக்காரர்களுக்குத்தான்



பயன்படுகிறது. காரணம் அவர்கள்தான் அதில் ஆதிக்கம் செலுத்துகிறார்கள். அவர்கள், அல்லது அவர்களுடைய ஆட்கள் அங்கு ஆதிக்கம் செலுத்துகிறார்கள். சமுதாயத்தில் உள்ள ஏற்றத் தாழ்வுகளின் காரணத்தால், ஜாதிச் வழக்குகளின் காரணத்தால் கிராமங்களில் வலிமை இருக்கிற காரணத்தால், சாதியில் உயர்ந்தவர்கள் பண வசதி, ஆதிக்கம் படைத்தவர்கள் ஆகியவர்களின் ஆதிக்கத்தில் கூட்டுறவு அமைப்புகள் அடங்கி விடுவதை நாம் பார்க்கிறோம்.

ஆகவே, அரசு செய்கின்ற திட்டங்கள் மிகச் சாதாரண மக்களுக்கும் போய்ச் சேருகின்ற அளவிற்குச் செய்ய வேண்டுமென்று சொன்னால் ஏராளமான மாறுதல்களைச் செய்ய வேண்டியிருக்கிறது. அதிலும் குறிப்பாக அவர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்க முடியாத நிலைமை இருக்கிறது. கிராமப்புறத்தில் இருக்கிற மக்களுக்கு இன்றைக்கு இருக்கிற வேலை வாய்ப்பு வேளாண்மைத் தொழில் அல்லது கூலி வேலைக்குப் போக வேண்டும். இவற்றைத் தவிர வேறு வழியில்லை.

நேற்றையதினம் கூட ஒரு பத்திரிக்கையில் ஒரு கட்டுரையைப் படித்தேன். கிராமப்புற விவசாய மக்களுடைய நிலவரங்களை மிகத் தெளிவாகவும், அழகாகவும் சித்தரித்துக் காட்டியிருந்தார். எப்படி 20 ஏக்கரா புஞ்சை நிலம் இருக்கிற விவசாயி கூட சோற்றுக்குத் திண்டாடிக் கொண்டிருக்கிறான், அவனுடைய பூமியை வேளாண்மை செய்வதற்கு வசதியில்லை, ஆக கொஞ்சம், கொஞ்சமாகக் கடன்பட்டுக் கடன்பட்டு 500 ரூபாய்க்குப் பட்ட கடனைக் கூட அடைக்க முடியாமல் தன்னுடைய நிலத்தை இழந்து விடுகிறான்' என்பதைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

ஆகவே, அவர்களுக்கு வேளாண்மையைச் சிறப்புற செய்வதற்கு, வேலைவாய்ப்புப் பெறுவதற்கு ஏற்பாடுகளைச் செய்து தரவேண்டும். வேலைவாய்ப்பு என்பது இன்றையதினம் பெரிய தொழில்களில் தான். நகரப்புறங்களில் மட்டுமே பெரிய தொழில்கள் அமைந்துள்ளன. கிராமப்புற மக்களுக்கு அதனால் எந்தவிதப் பலனும் இல்லாமல் போகிறது. வேலை வாய்ப்பு வேண்டுமென்று சொன்னால் கிராமப்புறங்களில் சிறு சிறு

## (3) தனியார் அலுவல்கள் (தொடர்ச்சி)

### தமிழ்நாடு, 1974 ஆம் ஆண்டு, உழவர்கள், வேளாண்மைத் தொழிலாளர்கள் கடன்கள் சரிகட்டுதல் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 59/74) (தொடர்ச்சி)

***திரு. ஏ. சுப்பிரமணியம்:** துணைத் தலைவர் அவர்களே, 31 ஆம் தேதி பேசியதைத் தொடர்ந்து ஒரு சில கருத்துக்கள் கூறி முடித்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

விவசாயிகளுக்குக் கடன் வழங்குவதற்காக இருப்பது கூட்டுறவு நிலவள வங்கிகள் போன்ற அமைப்புக்களாகும். அந்த அமைப்புக்கள் கூட இன்றையதினம் துரதிருஷ்டவசமாக, விவசாயிகளுக்கு—மெய்யான விவசாயிகளுக்கு—கடன் வழங்குகிற முறையைவிட அதிலே பல தவறுகள் செய்வதிலே நாட்டம் காட்டுகிற நிலைமையினை நாம் பார்க்கிறோம்.

தருமபுரி மாவட்டத்திலிருந்தும், வேறு சில மாவட்டங்களி லிருந்தும் விவசாயிகளின் பெயரால் பொய்யாக—பினாமியாக—அவர்களுக்குக் கடன் கொடுத்ததாகப் பத்திரங்கள் தயாரித்து, பிறகு அந்தக் கடனை வசூலிக்க வழி இல்லாமல் பல இலட்சக் கணக்கான ரூபாய்களைத் தள்ளுபடி செய்ய வேண்டிய—ரைட் ஆஃப் செய்ய வேண்டிய—நிலைமையெல்லாம் வந்ததை இந்த நாடு நன்கு அறியும்.

ஆக, அம்மாதிரி மோசமான முறைகள் கையாளப்படுமானால், உண்மையான விவசாயிகளுக்குக் கடன் கொடுக்காமல், அது ஏதோ தனி நபர்களுடைய வசதிக்காகத் தவறாகப் பயன் படுத்துகிற முறைகள் இருக்கின்ற காரணத்தினால் நல்ல நோக்கத் திற்காக அமைக்கப்பட்ட நிலவள வங்கிகள் கூட பயன்படாமல்



போகிற காட்சியை நாம் பார்க்கிறோம். ஆகவே, இத்தகைய ஊழல்கள்—தவறுகள் நடைபெறாமல் கூட்டுறவுத் துறையைச் செம்மைப்படுத்த வேண்டியது அவசியமாகிறது.

கூட்டுறவுத் துறை பற்றிய ஒரு கருத்தை நான் சொல்ல விரும்பாவிட்டாலுங்கூட இங்கே சொல்லியாகவேண்டும். ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்களுக்குப் பதவி அளிப்பதற்கான ஒரு முக்கியமான அமைப்பாக இன்றையதினம் சமுதாயத்தில் இந்தக் கூட்டுறவுத் துறை இருந்துகொண்டிருக்கிறது. கூட்டுறவுத் துறை ஜனநாயகத்திற்கு மிக உயர்ந்த எடுத்துக்காட்டு என்று தான் சொல்லப்படுகிறது. 'எல்லோருக்குமாக நான், எனக்காக எல்லோரும்' என்ற அந்தத் தத்துவத்தின்படி மிகச் சாதாரண மான மக்கள்கூட வசதி படைத்தவர்களுடைய [illegible], அவர்களுடைய ஆதிக்கத்திற்கு ஆட்படாமல், அவர்கள் தங்க ளுடைய வாழ்க்கையை—குறிப்பாக பொருளாதார வாழ்க் கையை—தாங்களாகவே அமைத்துக்கொண்டு செம்மைப்படுத்திக் கொள்வதற்கு வாய்ப்பு அளிக்கின்ற ஒரு சிறந்த அமைப்பு கூட்டுறவு அமைப்பு என்ற வகையில்தான் சோஷலிசப் பொரு ளாதாரத்தினுடைய ஒரு இன்றியமையாத உறுப்பு கூட்டுறவுத் துறை என்று எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

ஆனால், அந்தக் கூட்டுறவு அமைப்பு தவறாக பயன்படுத்தப் பட்டால், அது சோஷலிசத்திற்கு நேர் எதிரான பலனை விளைவிக்கும் என்பதில் சந்தேகம் கிடையாது. அதையும் பல இடங்களில் நாம் பார்க்கிறோம். அந்தக் கூட்டுறவு அமைப்பில், ஜனநாயகத்தின்படி தேர்தல் என்பதையெல்லாம் அப்பாலே வைத்துவிட்டு டைரக்டர்களை அரசாங்கம் நியமனம் செய்யும் போது, கூட்டுறவை இயக்குகின்றவர்களுக்கும் சம்பந்தம் இருக்கிறதா என்று பார்க்காமல் நியமனம் செய்வது, 'விம்ஸ் அண்டு ஃபான்ஸீஸ் ஆப் தி பவர்ஸ் தட் பி' என்று ஆட்களை டைரக்டர்களாக நியமிப்பது, கூட்டுறவு அமைப்பைக் கலைப்பது, சூபர்சீட் செய்வது, மீண்டும் உண்டாக்குவது என்று இப்படி யெல்லாம் இருக்கும் முறை காரணமாக கூட்டுறவுத் துறையில் எது வேண்டுமானாலும் செய்யலாம் என்ற ஒரு நிலைமை இருக்கிறது. ஆக, அந்தத் துறை சரியாகப் பயன்படுத்தப்பட

தொழில்கள், குடிசைத் தொழில்களை ஏற்படுத்துவதற்கு ஏற்பாடு செய்தாக வேண்டும். அப்போதுதான் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தில் கொஞ்சமாவது முன்னேற்றம் ஏற்பட முடியும்.

ஆக, அந்த அளவிற்கு வேலைவாய்ப்புப் பெறுகின்றவகையில் குடிசைத் தொழில்களை, சிறு சிறு தொழில்களையெல்லாம் கிராமப்புறங்களில் அதிகமாக ஏற்படுத்துவது மிக, மிக இன்றியமையாததாகும் என்பதை நான் இங்கே குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன்.

அடுத்து, இன்னொன்றையும் நான் சொல்ல வேண்டும். கிராமப் புறத்து மக்கள் ஏழ்மை நிலைக்குப் போவதற்கு இன்னொரு காரணம் இன்றைக்கு தொழில்களுக்கும், வேளாண்மைக்கும் அரசு செய்கின்ற உதவிகளில் பெரும் வேறுபாடு இருக்கிறது. தொழில்களைப் பொறுத்து எடுத்துக்கொண்டு பார்த்தால் ஒரு விதமான நிலைமையை நாம் பார்க்கிறோம்.

இரண்டு நாட்களுக்கு முன்னே ஒரு மசோதா சட்டமாகியது. சில தொழில்களை அரசு உடைமை ஆக்குகின்ற மசோதா. ஒருவருக்கு சிறிது பண வசதி இருந்தால் தன்னுடைய பணம் ரூபாய் 1 லட்சத்தைப் போட்டு, ஊரிலே இருக்கக் கூடிய பெரிய மனிதர்கள் இருந்தால் இன்னும் கொஞ்சம் வசதியைத் திரட்டி அந்த ஒரு லட்சத்தை இருபது லட்சமாகச் செய்து கொள்ளலாம். அந்த 20 லட்சத்தை மூலதனமாகக் காட்டி 2 கோடி ரூபாய் வங்கிகளிலிருந்து, சர்க்காரிலிருந்து கடனைப் பெறலாம். அப்படி செய்து விட்டு ஒரு தொழிலில் இறங்குகிறார். தொழில் தொடங்கி நல்ல லாபம், தொடர்ந்து ஏராளமான லாபம் குவிகிறது. இப்படிக் குவிகிற லாபத்தைக் கொண்டு போகிறார், எல்லா வற்றையும் கபளீகரம் செய்கிறார். எல்லாவற்றையும் செய்து விட்டு பிறகு அந்தத் தொழிலை நொடித்துப் போகச் செய்து விட்டு, நொண்டி ஆக்கி விட்டு, ஒன்றும் இல்லாமல் செய்து விட்டு, இறுதி மூச்சு இழுக்கிற நேரத்தில்தான் அரசாங்கத்தினிடத்தில் பேசாமல் ஒப்படைத்து விடுகிறார். அரசாங்கமும் இப்படி ஒப்படைக்கப்படுகிற



தொழில்களை அந்தத் தொழிலைப் பாதுகாக்க வேண்டும், அந்தத் தொழிலாளர்களைப் பாதுகாக்க வேண்டும், என்ற எண்ணத்திலும், சில நேரங்களில் அந்த முதலாளியைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணத்திலும் எடுத்துக்கொள்கிறது. இந்தச் சுமைகளைத் தலையில் போட்டுக்கொண்டு அந்தத் தொழில்களை அரசாங்கம் எடுத்துக்கொள்கிறது. இது தொழில் துறையில் இருக்கிற நிலைமை.

ஆனால் வேளாண்மைத் துறையில் என்ன நிலைமை? விவசாயிக்கு யாரும் ஒத்தாசை செய்ய வருவதில்லை. தன் சொந்த உழைப்பைக் கொடுத்து, மழை பெய்தால் வேளாண்மை செய்து வாழ்க்கையை நடத்த வேண்டும், மழை பொய்த்துப் போனால் அவனுடைய வாழ்வும் பொசுங்கி பாழாகி விடும். இன்றைக்கு உள்ள நிலைமையில் அவன் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள கடன் வாங்க வேண்டும், அவன் தன்னுடைய சொந்தப் பொறுப்பிலே கடன் வாங்க வேண்டும். பிறகு அந்தக் கடனை அடைப்பதற்குக் கடன் வாங்க வேண்டும். இருக்கின்ற கடனை அடைப்பதற்குக் கடன் வாங்க வேண்டும். இந்தக் கடன்களை அடைப்பதற்குத் தன்னுடைய பூமியை அடகு வைக்க வேண்டும். வாழ்க்கையைக் குறைத்துக்கொள்ள வழி இருக்கிறதே தவிர, வாழ்க்கையை மேம்படுத்திக்கொள்ள வழியில்லை. இத்தகைய பொருளாதார அமைப்பில் இருந்து கொண்டு இருக்கிறோம். இந்த நிலை மாறியாக வேண்டும். விவசாயிகளுடைய தொழிலுக்குப் பாதுகாப்பு வேண்டும்.

பயிர் இன்ஷ்யூரன்ஸ் என்று நாம் சொல்லி வருகிறோம். இதனைச் செய்வதற்கு சில இடங்களில் "பைலட் பிராஜக்ட்" ஏற்பாடு செய்து இருக்கிறார்கள். பஞ்சாபிலே செய்திருக்கிறார்கள். அந்தப் பயிர் இன்ஷ்யூரன்சை நாம் இந்த மாநிலத்திலே கொண்டு வந்தாக வேண்டும். பயிர் இன்ஷ்யூரன்சோடு கால்நடை இன்ஷ்யூரன்சையும் கொண்டு வந்தாக வேண்டும். ஆயிரம், இரண்டாயிரம் போட்டு வாங்கிய கால்நடைகளுக்கு நோய் வந்து செத்து விட்டால் அவன் நொடித்துத் தொலைந்து விடுகிறான். எனவே அவர்களுக்கு கால்நடை இன்ஷ்யூரன்ஸ் தேவை.

இன்னொன்றையும் நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, வேலை வாய்ப்பைப் பற்றிக் கூறும்போது கிராமப் புறங்களில் வேலை அற்ற வாலிபர்கள் நிரம்பி இருக்கிறார்கள். இந்த வாலிபர்களுக்கு அப்படியே வேலை கிடைத்தாலும் சில நேரங்களில்தான் வேலை கிடைக்கும், அதிலும் சில பேருக்குத்தான் கிடைக்குமே தவிர எல்லோருக்கும் கிடைக்காது.

அதே நேரத்தில் ஏராளமான நிலங்கள் பண்படுத்தப்படாமல், பண்படுத்தப்பட வேண்டிய நிலங்கள், பண்படுத்தப்படாமல், கிராமப்புறங்களில் இருக்கின்றன. வேலையற்றவர்கள் ஒரு பக்கம் இருக்கிறார்கள். பண்படுக்கப்பட வேண்டிய நிலங்கள், பயிர் செய்யப்பட வேண்டிய நிலங்கள் மற்றொருபுறம் இருக்கின்றன. இந்த இரண்டையும் ஒன்றோடொன்று எப்படி "marry one to the other" என்று செய்து பொருளாதார மேம்பாட்டைக் காணுவது என்று நாம் வழிவகை காண வேண்டும்.

நம்முடைய நாட்டைப் பொறுத்த வரையில் "மேன் பவர்" என்பது மிகப் பெரிய செல்வம். Man power includes woman power. This is International Women's Year. நாட்டைப் பொறுத்த வரையில் 'மேன் பவர்'—மனித சக்திதான் மிகப் பெரிய செல்வம். இப்படி அவர்களுடைய மனித சக்தியைப் பயன்படுத்தி நம்முடைய நாட்டுப் பொருளாதார மேம்பாட்டுக்கு நாம் பெரிதும் வழி காணவேண்டும். கிராமப் புறங்களில் இருக்கிற "ஐடில் மேன் பவர்" ஐடில் என்று சொன்னால் அவர்கள் ஐடிலாக இல்லை, சோம்பேறியாக இல்லை, they are Compelled to be idle. இந்த ஐடில் மேன்பவரைப் பயன்படுத்தி அந்த நிலங்களைப் பண்படுத்த "லாண்ட் ஆர்மி" ஏற்படுத்தப்பட வேண்டும். இதைப் பற்றி நம்முடைய நாட்டிலே பலவாறு பேசப்படுகிறது. "லாண்ட் ஆர்மி" நிலப்படை, வேலை அற்ற வாலிபர்களைப் பயன்படுத்தி, இப்படிப் பண்படுத்த வேண்டிய பூமியை, நிலங்களைப் பயிர் செய்வதற்கு, இந்த அமைப்பைப் பயன்படுத்தினோமானால் இரண்டு, மூன்று வகையான பலன்கள் நமக்கு கிடைக்கும் [illegible]



(1) வேலை இல்லாத கிராமப்புற மக்களுக்கு வேலை கிடைத்திடும்;

(2) உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு வழி செய்யும்;

(3) வேலை அற்ற வாலிபர்கள் நிரம்ப இருப்பதாலும் வறுமையினாலும் ஏற்படுகின்ற பல்வேறு சமூகக் கேடுகள், சமூக விரோதச் செயல்கள் குறையும். இப்படிப் பல விதங்களில் சமூக மாறுதல்களை ஏற்படுத்துகின்ற, கிராமப்புறத்து ஏழ்மையைப் போக்குவதற்கு உறுதுணையாக இருக்கக்கூடிய இதனைச் செய்தால் நாம் பயன் பெற்றவர்களாக ஆவோம் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், பல்வேறு வகைகளில் கிராமப்புற மக்களின் நிலை தாழ்ந்து கிடக்கிறது. பொருளாதாரத் துறையில் மாத்திரமல்ல, கல்வித் துறையிலும் அவர்கள் அதிகமாக ஈடுபாடு கொள்ள முடியாமல் இருக்கிறார்கள். எனவே, பொருளாதாரத் துறையில் மாற்றத்தை ஏற்படுத்தினால் அவர்கள் கல்வித் துறையிலும் அதிகமாக ஈடுபாடு கொள்வதோடு அவர்களின் முன்னேற்றம் தடைப்பட்டுக் கிடக்கும் தேக்க நிலை மாற வழி பிறக்கக் கூடும்.

இந்த நேரத்தில் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்தப் பொருளாதார மற்றும் ஏனைய துறைகளில் கிராமப்புற மக்களை மேம்பாடடையச் செய்ய குறைந்தபட்சமாக, முதலில் ஒவ்வொரு பிர்க்காவிற்கும் ஐந்து கிராமங்களாக எடுத்துக் கொண்டு அவைகளை மாதிரி கிராமங்களாக அமைக்கலாம். ஒட்டு மொத்தமாக எல்லாக் கிராமங்களையும் மேம்பாடு அடையச் செய்வது என்பது ஒரு சுமையாக இருக்கக் கூடும்.

எனவே, இந்தமாதிரி கிராமங்களிலுள்ள மக்களின் வாழ்வை மேம்பாடு அடையச் செய்ய முனைப்புக் காட்டுவது—அந்தக் கிராம மக்களுக்குப் பொருளாதாரத் துறையில் வசதி தருவது, வேலை வாய்ப்புத் தேடித் தருவது, கல்வி வசதி, மருத்துவ வசதி [illegible] உண்டாக்கித் தருவது. இன்னும் பல்வேறு [illegible] இரண்டு, மூன்று ஆண்டுக் காலத்தில் படிப்படியாக [illegible]

புறச் சூழ்நிலையை மாற்றுவதற்கு வழி ஏற்படும். இல்லை என்றால், அவசரக் கோலம் அள்ளித் தெளித்தது போலச் செய்தால் பலன் இருக்காது.

எனவே, கிராமப்புற மக்களின் வாழ்வு மேலோங்கச் செய்வதற்கு, முனைப்புத் திட்டம் வைத்து அரசு காரியமாற்ற வேண்டுமென்று கூறி, இந்த மசோதாவை நான் முழுமனதோடு வரவேற்கிறேன்.

நண்பர் பழனிசாமி அவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய இந்த மசோதா நல்ல மசோதா. விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று விரும்புகிறவர் திரு. பழனிசாமி என்பதில் யாருக்கும் கருத்துவேறுபாடு இருக்க முடியாது. எனவே, அவர் கொண்டு வந்துள்ள இந்த மசோதாவை அரசு தரப்பினர்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இதை நிறைவேற்றித் தர வேண்டும். நிறைவேற்றி, கிராமப்புற மக்களின் வாழ்க்கையில் நல்ல ஒரு மாற்றத்தைச் செய்ய முன்வருவார்கள் என்ற நம்பிக்கையோடு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

***திருமதி ஜோதி வெங்கடாசலம்:** தலைவரவர்களே, திரு. பழனிசாமி அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த பிரைவேட் மெம்பர் பில்லை நான் ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

விவசாயிகளும் விவசாயத் தொழிலாளர்களும் படக் கூடிய கடன்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்த மசோதாவை பார்க்கும்போது, விவசாயிகளுக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கும் கடன் எப்படி ஏற்படுகிறது என்ற அடிப்படைக் காரணங்களை நினைத்துப் பார்க்கும்போது அவர்களுக்கு சமயத்தில் உரம் கிடைப்பதில்லை, விதைகள் கிடைப்பதில்லை, பூச்சி மருந்துகள் கிடைப்பதில்லை போன்ற பல குறைபாடுகள் இருக்கின்றன. விவசாயிகளுக்கு அத்தியாவசியமான இப்படிப்பட்ட பொருள்கள் கிடைப்பதற்கு [illegible] நிலைதான் அவர்கள் கடன் சுமைக்கு [illegible] ஒரு காரணமாக இருக்கிறது.

அதோடு, 'வேகரீஸ் ஆஃப் மான்சூன்' இருக்கிறது. தமிழ் [illegible] பல நிலங்கள் இயற்கை மழையை பார்த்த பூமியாக [இ]ருக்கின்றன. மற்ற நிலங்கள் ஆற்று நீரை நம்பி இருக்கின்றன. [ம]ற்றும் சில விவசாயிகள் குளம், குட்டை ஆகிய நீரைக் [கொ]ண்டு பாசனம் செய்கின்ற நிலைமை ஏற்படுகிறது. பல [ச]மயங்களில் நீர்த் தேக்கங்களிலிருந்து நிலத்திற்கு நீர் பாய் [வத]ற்குத் தாமதம் ஏற்படுகின்ற காரணத்தால் சரிவர நீர்ப் [பா]ய்ச்சல் இல்லாத காரணத்தால், அதற்கான நடவடிக்கையை [ச]ம்பந்தப்பட்டவர்கள் எடுக்காத காரணத்தால், விவசாயம் [பா]திக்கப்படுகிறது.

[வி]வசாயத்தில், பசுமைப் புரட்சி என்று பேசுகிறோம். ஆனால் [நா]ட்டினைச் சேர்ந்த மறைந்த தலைவர் மதிப்புக்குரிய அண்ணா [அவ]ர்களே கூறியிருக்கிறார்கள்—உழவன் எங்கே இருக்கிறானோ, [அ]வனைத் தேடி உரம் போக வேண்டும்—உழவர்கள் வந்து [உ]ரங்கள், விதைகள் ஆகியவைகளைப் பெறக்கூடிய நிலைமை [ஏ]ற்படச் செய்யக் கூடாது. ஆனால், கோவாபரேடிவ் [சொ]சைடிகள் மூலமாகக் கொடுக்கக்கூடிய உரங்கள்-விதைகள் [ம]ற்றும் விவசாயப் பொருள்கள் தேவைப்படுகின்ற நேரத்தில் கிடைப்பதில்லை. அதனால் அவர்கள் கடன் தொல்லைக்கு உள்ளாகக் [கூ]டிய நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட விவசாயப் பொருள்கள் [உ]ரிய நேரத்தில் அவர்களுக்குக் கிடைத்தால் கடன் தொல்லை[க]ளிலிருந்து விடுபட ஒரு வாய்ப்பாக இருக்கும்.

அடுத்தபடியாக, பல ஆண்டுகளாக இந்தப் பயிர்கள் எல்லாம் எதிர்பாராத விதமாக பூச்சிகளின் காரணமாகவும் பல எதிர் [பா]ராத காரணங்களினாலும் பாழ்பட்டுவிடுகின்ற காட்சியைப் [பா]ர்க்கிறோம். ஆகவே, பயிர் இன்சூரன்ஸ் செய்ய வேண்டும் [எ]ன்று இந்த சட்டசபையில் பல முறை விவாதித்திருக்கிறோம். [இ]தை இந்த அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு பயிர் இன்சூ[ர]ன்சுக்கு தக்க முக்கியத்துவம் கொடுத்து நடவடிக்கை எடுக்க [வே]ண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பல இடைஞ்சல்களுக்கு இடையே இந்த விவசாயத் தொழி[லா]ளர்கள் உணவு உற்பத்தி செய்யக் கூடிய நிலைமை இருக்கிறது. [விவசா]யிகளின் உற்பத்திப் பொருள்களை [illegible]

[திருமதி ஜோதி வெங்கடாசலம்] [1975 நவம்பர்

செய்ய வேண்டிய சமயத்தில் புரொக்யூர்—அரசு கொள்முதல் செய்யாத காரணத்தால் பல இடங்களில் உணவுப் பொருள்கள் தேக்கம் ஏற்பட்டு விவசாயிகள் அரையும் குறையும் ஆன விலையில் விற்க வேண்டிய நிலை ஏற்பட்டு விடுகிறது. விவசாயி நஷ்டப்படுவதற்கு அதுவும் ஒரு காரணமாக இருக்கிறது.

கரும்பு உற்பத்தி செய்கிற விவசாயிகளைப் பொறுத்தவரையில் மற்ற மாநிலங்களில் கரும்புக்குக் கொடுக்கின்ற விலையைக் காட்டிலும் நமது மாநிலத்தில் கொடுக்கின்ற விலை குறைவாக இருக்கிறது. இதனால் பல இடைஞ்சல்கள் ஏற்படுகின்றன. விவசாயிகள் கடனுக்கு உள்ளாகிறார்கள். அப்படிப்பட்ட காரணங்களால் அவர்கள் படக்கூடிய கடன்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டியது அரசின் பொறுப்பு என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

தனியார் மசோதாவாக இங்கு பில் வந்திருந்த காரணத்தால் இதை அரசு நிராகரிக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. மேல் சபையில் திரு. ஏ. லட்சுமணசாமி முதலியார் அவர்கள் பிரைவேட் மெம்பர் பில் ஒன்றைக் கொண்டு வந்தார்கள். அதை அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதை இந்த நோக்கில் தெரிவிப்பதோடு இது ஒரு நல்ல மசோதாவாக இருக்கிறது—விவசாயத் தொழிலாளர்களுக்கும் இதனால் பெரும் அனுகூலம் கிடைக்கும் என்ற காரணத்தால் இதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் என்னுடைய கட்சியின் சார்பாகக் கூறி இதை ஆதரித்து அமர்கிறேன்.

* திரு. ஆ. கு. சுப்பையா: மதிப்பிற்குரிய சட்டமன்ற உதவித் தலைவர் அவர்களே, இன்றைய தினம் விவசாயிகள் பட்ட கடன்களை ரத்து செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு தோழர் பழனிசாமி அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த மசோதாவை ஆதரிக்க நான் என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். விவசாயிகள் என்றாலே, மனித சமுதாயத்தின் முதுகெலும்பாக இருப்பவர்கள் என்று சொல்லப்படுகிறது. விவசாயிகள் இல்லை என்றால் இந்த மனித சமுதாயமே உயிர் வாழ முடியாது. அத்தகைய மனித சமுதாயத்



1974 நவம்பர் 4] [திரு. ஆ. கு. சுப்பையா]

திற்கு மிகவும் முக்கியமான உணவு உற்பத்தியில் அவர்கள் ஈடுபட்டு உணவுப் பொருட்களை உற்பத்தி செய்து மலைமலையாகக் குவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் அப்படிப்பட்ட சிறப்பு மிக்க விவசாயிகள் வாழ்க்கை மிகவும் மோசமாக இருக்கிறது. பெரும்பாலான விவசாயிகள் கடன் தொல்லைக்கு உட்பட்டிருக்கிறார்கள். விவசாயிகளுடைய வாழ்க்கை நிலைகளை ஆராய்ச்சி செய்த அறிஞர்கள் எல்லாம் பல பழமொழிகளைச் சொல்லி இருக்கிறார்கள். விவசாயி கடனிலே பிறந்து கடனிலே வாழ்ந்து கடனிலேயே இறந்து விடுகிறான் என்று ஒரு அறிஞர் சொல்லி இருக்கிறார். உண்மையிலேயே அந்தப் பழமொழி மிகவும் பொருத்தமானது. ஒரு விவசாயி கடனிலே பிறக்கிறான்; கடனிலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறான், இறக்கும்போது கூட தன்னுடைய பிள்ளைகளை அழைத்து, தான் யார் யாருக்கெல்லாம் கடன் கொடுக்கவேண்டும் என்று தன்னுடைய கடன்களை எல்லாம் சொல்லி விட்டுச் சாகிறான். அந்த அளவுக்கு நம்முடைய நாட்டில் விவசாயிகளின் வாழ்க்கை அமைந்திருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஒரு சமயத்தில், நாராயணசாமி என்ற நிபுணர் தமிழகத்திலே உள்ள விவசாயிகளின் வாழ்க்கை நிலையை ஆராய்ந்து அரசாங்கத்திற்கு ஒரு அறிக்கையை சமர்ப்பித்திருக்கிறார். அந்த அறிக்கையிலே அவர் சொல்லும்போதுதான், விவசாயி கடனிலே பிறந்து கடனிலே வாழ்ந்து கடனிலேயே இறக்கிறான் என்று தெரிவித்திருக்கிறார். அந்த முறையிலே இன்றையதினம் விவசாயிகளுடைய வாழ்க்கை அமைந்திருக்கிறது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

[முற்பகல் 9.30]

இம்மாதிரி கடன்பெற்று திருப்பிச் செலுத்த முடியாத, திருப்பிச் செலுத்த சக்தியில்லாத விவசாயிகளுக்கு ஆதரவு அளிக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். அரசாங்கம் தான் அவர்களைக் கைதூக்கிவிட வேண்டும். அவர்கள் நிம்மதியாக வாழ்வதற்கு வேண்டிய உத்தரவாதத்தை அளிக்க வேண்டிய கடமை அரசாங்கத்தினுடையது.

நாட்டில் இருக்கக்கூடிய லேவாதேவிக்காரர்கள் இன்றைய தினம் ஒவ்வொரு கிராமத்திலும் நான்கைந்து கடைகளைத் திறந்திருக்கிறார்கள். பண்டபாத்திரங்கள் மண்பாண்டங்களைத் தவிர எல்லாவற்றையும் வாங்குகிறார்கள். விவசாயிகளுடைய கொஞ்சநஞ்சம் வருவாயையும் சுரண்டுவதற்கே பல ஸ்தாபனங்களை ஆரம்பித்திருக்கிறார்கள். இப்படி அங்கங்கே கடைகளைத் திறந்து கொண்டு, கந்து வட்டி வாங்கக்கூடியவர்களை எப்படித் தடைசெய்வது என்பதை அரசு யோசித்தாக வேண்டும். இவற்றைத் தடுப்பதற்குச் சரியான மார்க்கத்தை அரசு கண்டுபிடித்தாகவேண்டும். குறிப்பாக கிராமப் புறங்களில் விவசாயிகளுக்குக் குறைந்த வட்டியில் பணம் கிடைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதிலாவது கவனம் செலுத்தியாக வேண்டும்.

நேற்றையதினம் கூட்டுறவு அமைச்சர் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கிற சங்கங்கள் சொத்துக்கள் இருந்தால்தான் கடன் கொடுக்கும் என்கிற நியதியை வைத்திருப்பதாகச் சொன்னார்கள். இது அநியாயமான நியதி. சொந்து இல்லாதவர்கள் எங்கே கடன் வாங்குவார்கள்? அரசாங்கம் இவர்களைச் சாகத்தான்விட வேண்டுமா? ரிசர்வ் பாங்கில் இருந்து உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். நில உடைமையாளர்களுக்கு, நிலத்தைச் சொந்தமாக வைத்திருக்கிற பணக்காரர்களுக்குத்தான் கடன் கொடுக்கப்படும் என்றால் சொத்து இல்லாதவர்கள் என்ன செய்வார்கள்? கந்துவட்டி வாங்குகிற தனியார்களிடம் அகப்பட்டுத்தான் சாகவேண்டுமா? இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும். தனது உழைப்பையே உயிர் மூச்சாகக் கொண்டிருக்கக்கூடிய விவசாயிகளுக்கு எந்தவகையில் நாம் கடன் வசதியை அளிக்க முடியும் என்பதை சிந்தித்தாக வேண்டும்.

மற்ற மாநிலங்களில் எல்லாம் கடன்களை ரத்து செய்திருக்கிறார்கள். ஆனால் நாம் இங்கே ஓராண்டுக்கு ஒத்திவைத்திருக்கிறோம். பிறகு என்ன ஆகும் என்று தெரியவில்லை. என்னுடைய ஆலோசனை என்னவென்றால் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கக்கூடிய பெரும்பாலானவர்கள்—நூற்றுக்கு 90 பேர்கள் ஏழை அரிசனங்கள்—மலைவாசிகள். இவர்கள் மண்ணோடு மண்ணாக



பண்புழுவாக விவசாயத்தில் ஈடுபடுகிறார்கள். மற்ற வகுப்புகளைச் சேர்ந்தவர்களாவது பல்வேறு தொழில்களில் ஈடுபட வாய்ப்பு இருக்கிறது.

இந்த அரிசனங்கள், மலைவாசிகள் விவசாயத்தையே நம்பியிருக்கக்கூடியவர்கள். விவசாயம் இல்லையென்றால் அழிந்து போகக்கூடிய நிலையில் உள்ளவர்கள். இந்த அரிசனங்கள், மலைவாசிகள் பெற்றிருக்கக்கூடிய கடன்களையாவது உடனடியாக ரத்து செய்து, இவர்களைக் கடன் பளுவில் இருந்து காப்பாற்றி, இவர்களுக்கு உதவி அளிக்க அரசு முன்வரவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொண்டு தோழர் பழனிசாமி கொண்டுவந்திருக்கக்கூடிய சட்டமுன்வடிவை ஆதரித்து அமர்கிறேன்.

*** திரு. எம். சுரேந்திரன்:** மாண்புமிகு உதவி சபாநாயகர் அவர்களே, மதிப்பிற்குரிய நண்பர் திரு. பழனிசாமி அவர்கள் கொண்டுவந்திருக்கிற தனியார் மசோதாவில் ஒருசில கருத்துக்களை மட்டும் கூறி, அதை ஆதரித்து முடிக்கலாம் என்று நினைக்கின்றேன்.

இங்கே நம்முடைய தேசத்தை, ஒட்டுமொத்தமாக எடுத்துக் கொண்டால் கடன்காரர் கூட்டத்தில் விவசாயத்துறையில் இருக்கின்றவர்களின் எண்ணிக்கை பெரும்பான்மையாக இருக்கிறது. மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகிறபோது இங்கேதான் விவசாயத் துறையில் அதிகமாகக் கடன்பட்டவர்கள் இருக்கிறார்கள் என்று புள்ளிவிவரம் கூறுகின்றது.

மற்ற மாநிலங்கள் ஒவ்வொன்றிலும், மாநில மக்களுடைய மேம்பாட்டிற்காக பல்வேறு காரியங்களைச் செய்துவருகிறார்கள். அம்மாதிரி நாம் பல்வேறு காரியங்களைச் செய்கிறபோது எல்லாக் காரியங்களும், எல்லா நேரத்திலும் பொருந்தி வருவதில்லை. சில சட்டங்கள் சில வருஷங்களுக்கு முன்னால் முற்போக்கான சட்டங்களாகக் கருதப்பட்டன.

(திரு. வா. மை. அப்துல் ஜப்பார் தலைமை)

நில உச்சவரம்புச் சட்டத்தை முன்னால் கொண்டுவந்தபோது அதை முற்போக்கான சட்டமாக அன்றைக்கு இருந்தவர்கள் கருதினார்கள். இன்றைக்கு அதையே பிற்போக்காக்கிவிட்டதாகக் கருதி, நாம் அதில் சில திருத்தங்களை முற்போக்கு என்று கொண்டுவந்தோம். இன்றைக்கு அதுவே முற்போக்கு இல்லை இன்னும் அதில் முற்போக்காகப் பல மாற்றங்களைச் செய்ய வேண்டும் என்ற நிலை வந்துவிட்டது. ஆக ஒரு நாள் முற்போக்காக இருக்கிற நிலை, சில காலத்திற்குப் பிறகு பிற்போக்காக ஆகிவிடுகிறது என்று சரித்திர வரலாறு கூறுகிறது.

அதேபோன்று கடன் பிரச்சினையை எடுத்துக் கொண்டால் சில காலத்திற்கு முன்பு கடன்களை ரத்து செய்யவேண்டுமென்று சொல்லியிருந்தால் நம்பிக்கை விசுவாசத்திற்குத் துரோகமாகும் என்று பேசியிருப்போம். ராஜமானிய ஒழிப்பு வந்தபோது கூட நாணயத்திற்கு விரோதமானது, உலக நாடுகள் எல்லாம் எதிர்க்கும் என்றெல்லாம் பல வாதங்களைக் கிளப்பினார்கள்.

இன்றைக்குக் கடன் தருகிறவர்கள் சமுதாய நன்மையில் தாராள மனப்பான்மை கொண்டு மக்களுக்கு உதவி செய்வதைப் போலப் பேசலாம். ஆனால், உண்மை என்ன? மற்றவர்களது துன்பத்தையும், துயரத்தையும் தங்கள் மூலதனத்தைப் பெருக்கிக்கொள்ளப் பயன்படுத்திக்கொள்கிறார்களே தவிர வேறு இல்லை. ஆயிரம் ரூபாய் வைத்திருந்தால், எவ்வித உழைப்பும் இன்றி அதை ஓராண்டில் எப்படி பத்தாயிரமாகப் பெருக்கிக் கொள்ளலாம் என்றே நினைக்கிறார்கள். ஆகவே இதைக் கணக்கில் கொண்டு—உழைப்பு இல்லாமல் பணத்தை வட்டிக்கு விட்டே பிழைக்கலாம் என்று நம் நாட்டில் சிலரிடத்தில் இருக்கக்கூடிய மனப்பான்மையைப் போக்க நாம் துணிந்து நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

ஏற்கனவே முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். காந்திய வழியில் இந்த மாநிலமும், குஜராத்தும்தான் மதுவிலக்குச் சட்டத்தைக் கொண்டுவந்தன, லாட்டரியை ஒழித்தன, குதிரைப் பந்தயத்தை ஒழித்தன, நாம் தான் மற்றவர்களைவிட உயர்ந்த



வர்களாக இருக்கிறோம் என்று—சொன்னார்கள். முதலமைச்சர் அப்படிக் கூறுவதற்குத் தகுதியிருக்கிறது. அவர் தம்மை சாமானியர் என்று சொல்லிக்கொள்வார். சாமானியர்கள் தான் காந்திய வழியில் போக முடியும். வேறுவழியில் போக முடியாது.

காந்திய வழி என்றால் என்ன? சாதாரண ஏழை மக்களைச் சுரண்டுகின்றவர்களைத் தடுக்க வேண்டுமென்பதுதான் காந்தியின் இலட்சியம். அந்தப் பாதைக்குச் செல்வதற்குத் தொடங்கியிருக்கிறார்கள். இந்தக் காலகட்டம் மிகவும் நல்ல காலகட்டம். திரு. பழனிச்சாமி அவர்கள் மசோதா கொண்டு வந்திருக்கக் கூடிய நேரம் மிகவும் நல்ல நேரம் உழைப்பே இல்லாமல் சுரண்டுகின்றவர்களை மாற்ற வேண்டுமென்ற காலகட்டம்.

அதுமட்டுமல்லாமல் நம் நாட்டின் பிரதம மந்திரி அவர்கள் இருபது அம்சத் திட்டத்தை கொண்டு வந்திருப்பதில் மிக முக்கியமானதாக, மிகப் பொருத்தமானதாகக் கருத வேண்டியவர்கள் யார் என்றால் அடித்தளத்தில் இருக்கின்ற மக்கள். உற்பத்தியில் சம்பந்தப்பட்டிருக்கின்ற சாதாரண ஏழை எளியவர்களை முதலில் கடன் பளுவிலேயிருந்து விடுவிக்க வேண்டும். அரசியலில் விடுவிப்பது என்பது ஒன்று. பொருளாதாரத்தில் விடுவிப்பது என்பது ஒன்று. பொருளாதாரத்தில் எல்லோரையும் விடுவிப்பது என்பதை வேகமாகச் செய்ய முடியாது. படிப்படியாகத்தான் செய்ய வேண்டும். பொருளாதாரப் பளுவின் காரணமாக யார் சுதந்திரம் இழந்து இருக்கிறார்களோ, யார் அடிமைப் பட்டிருக்கிறார்களோ. யார் சுரண்டலுக்கு உள்ளாகியிருக்கின்றார்களோ அவர்களை முதலிலே விடுவிப்பது நம்முடைய முக்கியமான கடமையாகும். காந்தீயத்தை நம்புகின்றவர்களின், இந்திராகாந்தியின் தலைமையை நம்புகின்றவர்களின், தேசத்தின் சோஷலிசத்தை நம்புகின்றவர்களின், சாமான்யர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களின் கடமை அது. அதில் இவ்வளவு பிரச்னைகளும் சேர்ந்திருக்கிறது.

ஆகவே, அடித்தளத்திலுள்ள விவசாயிகளுக்கு, விவசாயத் தொழிலாளர்களுக்கு கடன்களை ரத்து செய்ய வேண்டுமென்ற காரியம் நாட்டின் பல மாநிலங்களில் இன்றைக்கு நடந்திருக்

கிறது. நாமும் கடன்களை ஒத்தி வைத்திருக்கிறோம், ஆனால் அதற்குப் பிறகு கடன்களை ரத்து செய்வது என்ற கருத்துக்கு இங்கேயுள்ள அரசு இன்னும் வரவில்லை. அதற்குக் காரணம் என்ன? காந்தியக் கருத்தை, சாமானியர்கள் என்ற கருத்தை, சோஷலிச லட்சியத்தின் கருத்தை, கண்ணியம், கடமை, கட்டுப்பாடு என்ற கருத்தை, ஆக இப்படிப் பல்வேறு கருத்துக்களையும் தன்னகத்தே கொண்டிருக்கின்ற இந்த அரசு சாதாரண விவசாயிகளின் கடன்களை ரத்து செய்யும் கருத்துக்கு ஏன் தன்னை ஆளாக்கிக் கொள்ளக் கூடாது? மற்றவர்கள் செய்வதற்கு முன் தன்னை அதற்கு ஆளாக்கிக் கொண்டிருக்க வேண்டாமா? அப்படிச் செய்ய வேண்டுமென்றுதான் திரு. பழனிச்சாமி அவர்களின் மசோதா கொண்டுவரப்பட்டிருக்கின்றது என்று நான் கருதுகிறேன்.

ஆகவே, எந்தவிதமான ஆலோசனைக்கும், எந்தவிதமான சந்தேகங்களுக்கும் இடமில்லாமல், கிட்டத்தட்ட 1,500 ரூபாய் வருமானத்திற்கும் குறைவாக இருப்பவர்களின் கடன்கள் எப்படி உள்ளதாக இருந்தாலும் அது முழுவதையும் ரத்து செய்ய வேண்டும்.

ஏற்கனவே ஒரு மசோதா கொண்டு வரப்பட்ட நேரத்தில் ஆங்காங்கு கடன் கொடுத்தவர்கள் எப்படி இருப்பார்கள் என்று ஆராயலாம் என்று ஒரு சந்தர்ப்பத்தில் சொல்லப்பட்டது. கடன் தருகின்றவர்கள் வட்டியை மட்டும் எதிர்பார்த்துக் கடன் தருகிறார்கள் என்றால் தாங்க முடியாத வட்டி, பத்திரத்திலே புரோ நோட்டிலே எழுதுவது ஒன்று, கொடுப்பது ஒன்று, ஆயிரம் ரூபாய் கொடுத்துவிட்டு ஐயாயிரம் ரூபாய் என்று எழுதி வாங்கி வைத்துக் கொள்கிறார்கள்.

இப்படிப்பட்ட பல மோசடிகள் கிராமங்களில் நடைபெறுகின்றன. வீட்டிலே ஒரு சாவு ஏற்பட்டால், அல்லது கல்யாணம் நடக்க வேண்டியிருக்கிறது என்றால், அல்லது நிலத்திலே விவசாயம் அழிந்து விட்டது என்றால், மாடு செத்து விட்டது என்றால் இப்படிப்பட்ட நேரங்களில்தான் பல தொல்லைகளுக்கிடையில் கடன் வாங்கச் செல்கிறார்கள். அப்படி அவர்கள் வாழ்



வதற்கு நடத்துகின்ற போராட்டங்களைத் தன் இலாபமாக ஆக்கிக்கொண்டு, தான் தருகின்ற பணத்திற்கும் எழுதுகின்ற எழுத்துக்கும் சம்பந்தமில்லை, சொல்லுகின்ற வட்டிக்கும், வாங்குகின்ற வட்டிக்கும் சம்பந்தமில்லை என்ற அளவிற்கு இருக்கிறது. இது இன்றைய சரித்திரம் அல்ல, இது நீண்ட வரலாறு.

பல பேர் இப்படிக் கடன் வாங்கி நிலத்தை இழந்து நிலமில்லாதவர்களாக ஆகியிருக்கிறார்கள் என்பது வரலாற்றிலே செய்தியாக தெரிகிறது. இதை மாற்றியமைப்பதற்கான கால கட்டம் வந்து விட்டது. இதை மாற்றியமைப்பதன் மூலமாகத்தான் நில உடைமையாளர்களுக்கும், நிலத்திலே சம்பந்தப்பட்டு உற்பத்தியில் ஈடுபட்டிருப்பவர்களுக்குமான உறவில் பெரும் மாற்றத்தைக் காண முடியும். இதைச் செய்யும்பொழுது ஏற்படுகின்ற சமுதாய எதிர்ப்புகளைச் சமாளிப்பதற்கான வல்லமை இந்த அரசுக்கு உண்டாகிறது.

முதலிலே உச்சவரம்புச் சட்டம் வந்த நேரத்தில், ஊரிலே உள்ள எல்லா நிலச்சுவாந்தார்களும் சேர்ந்து ஊர்வலம் வந்து, விவகாரம் வந்து, தகராறு செய்வோம் என்ற அளவிற்குச் சென்றார்கள் என்பது என்னுடைய ஞாபகத்தில் இருக்கிறது.

ஆகவே, ஒவ்வொரு முறையும் அடித்தளத்திலே இருக்கின்றவர்களுக்குக் காரியம் செய்யும்பொழுது, சுரண்டிக் கொண்டிருப்பவர்களை அது பாதிக்கத்தான் செய்யும். ஏராளமான நாட்கள் மற்றவர்களைச் சுரண்டி ஆதிக்கம் செய்து கொண்டிருந்த கூட்டத்திற்கு எல்லா நாட்களும் அப்படித்தான் இருக்க வேண்டுமென்ற ஆசை இருக்கத்தான் செய்யும். அந்த ஆசையை உடைப்பதற்கான காலகட்டம், துணிவு ஒரு காலத்திலே ஏற்படும். இன்றைக்கு அதற்கு எல்லாவிதமான நிலைமைகளும் பக்குவமாகவேதான் இருக்கிறது. தேசத்தின் நிலைமைகள் பக்குவமாக இருக்கின்றன. மாநிலத்திலேயும், மத்தியிலேயும் ஆளுகின்ற அரசுகளின் நிலைமைகளும் பக்குவமாகத்தான் இருக்கின்றன. மக்களின் உணர்வுகள் பக்குவமாகத்தான் இருக்கின்றன. எற்கெனவே பல காரியங்களைச் செய்திருப்பதால் இதை நியாயப்படுத்துவதற்கான வாய்ப்பும் இருக்கிறது.

ஆகவே, இவ்வளவு சூழ்நிலைகள் இருக்கின்றபொழுது தனியார் மசோதா என்பதால் இதைப் புறக்கணித்து விடாமல் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆளுங்கட்சியில் இருப்பவர்கள் ஆழ்ந்து தெரிந்தவர்கள் என்று நம்புகிறேன். அதற்கும் ஒரு காலம் வரட்டும், ஒரு விளம்பரத்திற்கான வாய்ப்போடு இதைச் செய்ய வேண்டுமென்ற கருத்து இருக்கக் கூடும். நல்ல காரியங்களை விளம்பரம் செய்யுங்கள், ஆனால் நல்ல காரியங்கள் என்று வரும் பொழுது அதையும் நீங்கள் ஏற்றுக்கொண்டு செய்யுங்கள் என்று சொல்லிக்கொண்டு, திரு. பழனிசாமி அவர்கள் கொண்டு வந்த மசோதாவை முழுமனதுடன் வரவேற்று அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் மூலமாகக் கொண்டு வரப்பட்டிருக்கின்ற மசோதா இந்த மாமன்றத்திலே மூன்றும் முறையாக விவாதிக்கப்பட்டு, அரசின் தரப்பிலே சில கருத்துக்களைச் சொல்லுகின்ற நிலையில் இருக்கிறேன்.

பேசிய எல்லாத் தரப்பு மாண்புமிகு உறுப்பினர்களும் இது ஒரு நல்ல முற்போக்கான மசோதா என்றும், இந்த மசோதாவை ஒட்டி இன்னும் பல்வேறு நல்ல அம்சங்களை எடுத்துச் சொல்லி, அதற்கெல்லாம் ஒட்டுமொத்தமான பரிகாரம் காணும் வகையிலே இன்னும் தீவிரமான மசோதாவைக் கொண்டு வர முடியுமா என்பதை அரசு பரிசீலிக்க வேண்டுமென்பதையும் இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள்.

பொதுவாக, இதுபோன்ற முற்போக்கான கருத்துக்களுக்கு இந்த அரசு படிப்படியே உருக்கொடுத்து வந்திருக்கிறது என்பதற்குப் பல்வேறு உதாரணங்களை நம்மால் சொல்ல முடியும். 1972-ம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டம் என்பதை இந்தச் சட்டமன்றத்தின் மூலமாக நாம் நிறைவேற்றினோம். கடன் தொல்லையால் சிரமப்பட்டிருப்பவர்களுக்குச் சற்று விடுதலை அளிக்கும் வகையிலே ஒரு முற்போக்கான அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தோம்.



அந்தச் சட்டத்தை நாம் கொண்டு வந்த நிலையில், எஞ்சிய மாநிலங்களில், 1972-ஆம் ஆண்டு இதுபோன்ற சட்டத்தைக் கொண்டு வந்தார்களா என்பதைப் பார்த்தால் இல்லை; அப்படிப்பட்ட முற்போக்கான திட்டத்தை 20 அம்சத் திட்டம் என்று சொல்கிறோமே அதெல்லாம் பேசப்படுவதற்கு முன்பே, இந்தியாவில் கொண்டு வந்தது தமிழ்நாடு சட்டமன்றம்தான் என்பதை நாம் ஏற்கெனவே தெரிந்திருக்கிறோம்.

அதற்கடுத்தபடியாக, வறட்சி நிவாரணக் காலத்திலே, விவசாயிகள் கடன் தொல்லையால் பாதிக்கப்படுகிறார்கள் என்ற கருதிய நேரத்திலேயும்கூட,—இன்றைக்குப் பேசப்படுகின்ற 20 அம்சத் திட்டம் இல்லாத நேரம் என்று கருதுகிறேன் — அப்பொழுதே கூட விவசாயிகளுக்கு கடன் சுமையிலிருந்து தற்காலிக நிவாரணம் அளிக்க வேண்டுமென்ற கருத்தின் அடிப்படையிலே அரசின் தரப்பிலே ஒரு சட்டம் இயற்றப்பட்டது என்பதையும் நாம் அறிவோம்.

அதற்கடுத்தபடியாக, மூன்றாவது சட்டமாக இந்த அரசின் மூலமாகவே இந்தத் தொடர் கூட்டத்திலேயே, விவசாயிகளுக்கு மட்டுமல்லாமல், சமுதாயத்திலே சற்றுக் குறைவான பொருளாதார நிலையிலே உள்ளவர்களுக்கும் ஒரு விடுதலை கிடைக்க வேண்டுமென்று கருதி, Indebted Persons (Temporary Relief) Bill, 1975 என்ற பில்லை கடன் நிவாரணச் சட்டத்தை இங்கே கொண்டு வந்தோம். இப்படி மூன்று முற்போக்கான சட்டங்களை நாம் நிறைவேற்றியிருக்கின்றோம்.

இதற்கிடையிலேதான் மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஏற்கெனவே இந்தத் தீர்மானத்தைக் கொடுத்து மூன்றும் முறையாக விவாதித்து இருக்கிறோம். ஆனால் பேசியவர்கள், இந்தச் சட்டத்தை விவாதிக்கும்பொழுது, மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள்கூட, இதுபோன்று கடன்களை ரத்து செய்து கொண்டே போகிறோம், இதை நாம் யோசித்துச் செய்ய வேண்டும், கடன்களை ரத்து செய்வதன் மூலம் மட்டும் ஏழை மக்களுக்கு நன்மை கிடைத்துவிடும் என்று நாம் நினைத்துவிடக் கூடாது என்ற கருத்தை—உள்ளிப்பாக சிந்தித்த காரணத்தால்—சொன்னார்கள் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பதில் சொல்லும் நேரத்தில் கூடச் சொன்னார்கள், 'இந்த நிவாரணச் சட்டங்களைக் கொண்டு வரும்பொழுது, நாம் யோசித்துக் கொண்டு வர வேண்டும், ரத்து செய்து விடுவதன் மூலமாக இன்றைய தினம் சாதாரண ஏழ்மைப் பட்ட விவசாயிகள் அல்லது பின் தங்கிய மக்கள் அல்லது ஏழை மக்களுக்குக் கடன் வசதிகள் கிடைப்பதற்கான சந்தர்ப்பங்களைச் செய்தாக வேண்டும்' என்றார்கள்.

இருபது அம்சத் திட்டத்தைப்பற்றிப் பலமாக இன்றைக்குப் பேசப்படுகிறது. ரூரல் பேங்குகள் என்று சொல்கிறார்கள், வருகிறது வருகிறது என்று சொல்கிறார்கள். நாம்கூடக் கடிதம் எழுதியிருக்கிறோம்.

இது போன்ற சட்டத்தை இன்னும் தீவிரமாகக் கொண்டு வருவதிலே இந்த அரசு என்றைக்கும் சளைத்தது கிடையாது. ஆனால், ஏதாவது ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து அதன்மூலம் உற்பத்தியைப் பாதிக்கக்கூடிய மிகப் பெரிய விளைவு ஏற்பட்டு விடக்கூடாது. சென்ற முறை விதை போடுகிற சமயத்திலே கூட பலபேர் என்னிடத்திலே வந்து சொன்னார்கள். நீங்கள் ஆர்டினன்ஸ் போட்டீர்கள், எங்கு பார்த்தாலும் கடன் கிடைப்பதில்லை. தனியார் கொடுக்கிற கடன் தடைப்படுகிற காரணத்தாலே விவசாயம் செய்ய முடியவில்லையென்ற புகார்கள் எல்லாம் என்னிடத்திலே வந்தது.

ஆகவே, தீவிரமான சட்டம் கொண்டு வருவதற்கு முன்னாலே கிராம மக்களுக்குக் கடன் கிடைக்கிற நிலை உருவாக வேண்டும். அதன் காரணமாகத் தான் நாம் என்ன சொல்கிறோம்? மத்திய அரசு ரூரல் வங்கியைத் துவக்கப் போவது பற்றி குறிப்பிட்டிருக்கிறது. அதைத் துவக்குவதிலே நமக்கு ஆட்சேபணை இல்லை. கிராம மக்களுக்குக் கடன் கிடைக்க வேண்டும். தமிழ் நாட்டில் கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற பல்வேறு ஸ்தாபனங்களிருக்கின்றன. எவ்வளவு கோடி என்றாலும் சரி, எவ்வளவு காலக் கெடுவாக இருந்தாலும் சரி, அவற்றை நிர்வகிக்க, அரசாங்கத்தின் கையிலே நிர்வாக இயந்திரம் இருக்கிறது.



ஆகவே, நீங்கள் பணம் கொடுத்தால்கூடப் போதும் என்று மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம். ஆகவே, கிராம மக்களுக்குக்கடன் கிடைக்கின்ற வகையிலே கிராம வங்கி வந்தாலும் சரி, நிர்வாக அமைப்புத் தமிழ் நாட்டிலேயிருக்கிற காரணத்தாலே, தமிழ் நாட்டு அரசுக்கு—தமிழ் அரசுக்குக்கூட அல்ல, தமிழ் நாட்டு மக்களுக்கு, விவசாய மக்களுக்கு, ஏழை மக்களுக்குப் பண வசதியை உருவாக்க வேண்டுமென்பதை—உதவ வேண்டுமென்பதை நமது அரசின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சரவர்கள் டெல்லிக்கு எழுதியிருக்கிறார்கள். நான் வரும் என்றுதான் எதிர்பார்க்கிறேன்.

இதற்கிடையிலே நாம் ஒன்றைப் பார்க்கவேண்டும், பல்வேறு சட்டங்களை பல்வேறு மாநிலங்களிலே கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்கு டெல்லி சுப்ரீம் கோர்ட்டிலே தடை விதிக்கப் பட்டிருக்கிறது. என்பதை பக்திரிகையிலே படித்திருப்பீர்கள், நான் சொல்ல வேண்டியதில்லை.

இந்த மசோதாகூட விவசாயக் கூலிகளுக்குக் கடன் நிவாரணம் என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. நம்மைப் பொறுத்தவரையிலே விவசாயிகள், விவசாயக் கூலிகள், சமுதாயத்திலே குறைந்த பொருளாதாரத்திலேயுள்ள எல்லாத் தரப்பைச் சேர்ந்தவர்களுக்கும் ஒட்டுமொத்தமான மசோதாவை நாம் கொண்டு வந்தாக வேண்டும். இருக்கிற நிலைமைகளைச் சீர் திருத்திய பின்னர்தான் அம்மசோதாவை நாம் கொண்டு வர வேண்டுமென்று அரசு முடிவு செய்திருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சில நேரங்களிலே, கொண்டு வந்த மசோதாக்களுக்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, எந்த அளவுக்குச் செல்லும் என்ற நிலை நம்மிடத்திலே தெளிவாக இல்லாத காரணத்தாலே, ஒட்டுமொத்தமாக, அரசே கொண்டு வரக் கருதி இருக்கிறது என்பதை எடுத்துச்சொல்லி, அப்படி ஒரு மசோதா வர இருக்கின்ற காரணத்தினால், ஒரு பகுதிக்கு மட்டும் நிவாரணம் அளிக்கிற மசோதாவாக இது இருக்கிற காரணத்தினால் அரசின் தரப்பிலே, இது

தேவையில்லையென்று தெரிவிக்கிறேன். இதைவிடத் தீவிரமான மசோதாவைக் கொண்டு வர அரசு தயாராக இருக்கிறது என்று சொல்லி இந்த மசோதாவை எதிர்த்து நான் அமர்கிறேன்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** அமைச்சர் சொன்னதிலே ஓரே ஒரு விளக்கம். இதைவிட முற்போக்கான மசோதா ஒன்றைக் கொண்டுவர இருப்பதாகச் சொன்னார்கள். அது எப்பொழுது வரும்? அதில் முற்போக்கு அம்சங்கள் என்ன இருக்கும் என்று கோடிட்டுக் காட்டுவாரா அமைச்சரவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** முற்போக்கு என்று சொன்னால் 3 சட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறோம். இதைக் காட்டிலும் சலுகை அளிக்க வேண்டுமென்பதுதான். எந்த மசோதா கொண்டு வந்தாலும் அது உற்பத்தியைக் குறைப்பதாக இருக்கக்கூடாது. தமிழ்நாட்டு விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டும், அதற்குப் பணம் தாருங்கள் என்று மத்திய அரசுக்கு எழுதி இருக்கிறோம். நீங்களும் எடுத்துச் செல்லுங்கள். அவர்கள் பணம் கொடுக்கட்டும். ஆனால் இப்பொழுதிருக்கிற மசோதாவின் மூலம் விவசாயிகள் கடன் பிரச்சினை தீரப்போவதில்லை. விவசாயிகள்பட்ட கடன் கடனாகத்தானிருக்கும், ஓரிரு வருஷத்திலே தீர்ந்துவிடப்போவதில்லை.

**திரு. எஸ். வடிவேல்:** சார், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முற்போக்கான சட்டம் வரும் என்று கூறியதை வரவேற்கிறேன். அந்த நிவாரணம் விவசாயத் தொழிலாளிகளுக்கும் கிடைக்க வேண்டும். தமிழ்நாட்டில் பெரும்பகுதி விவசாயக் கூலிகள். அவர்களுக்கு நிவாரணம் அளிக்க இதனைப் பயன்படுத்திக்கொள்ள அரசு முனைய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. என். கே. பழனிசாமி:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவுக்குப் பல கட்சி நண்பர்கள் ஆதரவு கொடுத்ததற்காக முதன் முதலிலே நன்றி பாராட்டிக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.'



முதன்முதலாக 1953-ம் வருஷத்திலே கடன் ஒத்தி வைப்புச் சட்டம் பலமான எதிர்ப்புக்கிடையிலே நிறைவேற்றப்பட்டது. அன்றையதினம் எதிர்த்தவர்கள் பூராவும் இந்த மாதிரி ஒத்தி வைப்புச் சட்டம் கொண்டு வந்தால் கைம்பெண்கள் கஷ்டப் படுவார்கள். அவர்களுடைய கடன்களை எல்லாம் வசூல் செய்ய முடியாது; மைனர்களாக இருந்தால் அவர்களுடைய கடன்களை வசூல் செய்ய முடியாது, ஆகவே இந்தச் சட்டம் வேண்டா மென்று சொன்னார்கள்.

அதற்கு முன்னால் உச்ச வரம்பு சட்டம் வந்தது. அந்தச் சட்டம் கொண்டு வந்த நேரத்திலே பெரிய கிளர்ச்சி உண்டானது. உற்பத்தி எல்லாம் பாதிக்கும், பட்டினி கிடக்க நேரிடும், ஆகவே, உச்ச வரம்பு சட்டம் வேண்டாமென்று சொன்னார்கள்.

ஆகவே, இந்த முற்போக்கான சட்டம் என்ன சொல்லப் போகிறது? இப்பொழுது வேண்டிய அளவுக்கு கடன் கிடைக்கிற மாதிரியும் இம் மசோதா நிறைவேறினால் கிடைக்காதது போலவும் சொல்கிறார்கள்.

இப்பொழுது 3 வீட்டுக்கு ஒரு வீடு வட்டிக் கடை. இச் சட்டம் வந்தால், வட்டிக் கடையை மூடிவிட்டுப் போய் விடுவானோ என்று எண்ணிட வேண்டிய அவசியம் இல்லை. கடனை எல்லாம் என்ன செய்வது? யார் கொடுக்கப் போகிறார்கள்? என்று இந்த ரீதியிலே சர்க்கார் சொல்வது சரியல்ல. பிரின்சிப்பிளை ஒத்துக்கொண்டு அந்த ரீதியிலே சட்டம் கொண்டு வருவோம் என்று சொல்லியிருந்தால்கூட அதை ஒத்துக் கொண்டிருக்கலாம். Save him from the clutches of money-lenders; அவர்களை விடுதலை செய்வது என்பதுகூட முக்கியமல்ல.

இன்றையதினம் நாட்டிலே மில்கள் மூடப்படுகின்றன. அதனால் வேலை வாய்ப்புகள் குறைந்திருக்கின்றன. பொருள்களுக்கு வெளி நாட்டு மார்க்கெட் கிடையாது. உள்நாட்டு வியாபாரத் திலும் மந்தம். வறுமை—அதனால் துணி வாங்கமுடியவில்லை, சைக்கிள் வாங்கமுடியவில்லை. அதனால் மில்களைப் படிப்படியாக மூட வேண்டியிருக்கிறது. நிலம் இல்லாதவர்களுக்கு நிலமும், கடன் பட்டவர்களுக்கு, கடனிலிருந்து விடுதலையும் கொடுத்து,

அவர்களுக்கு உற்பத்தியிலே ஊக்கம் கொடுத்தால் உற்பத்தி அதிகமாகும், கையிலே பணம் சேரும். அதை வைத்துக்கொண்டு எல்லா பொருள்களையும் வாங்குவார்கள்

ஆகவே, வியாபாரம் வளரும், மில்களும் அதிகமாகும், வேலையில்லாத் திண்டாட்டம் தீரும். ஆகவே, இது ஒரு தேசிய பிரச்னை. தேசிய பிரச்னை முன்னாலிருக்கும்பொழுது சர்க்கார் தட்டிக் கழிக்கும் என்று நான் நினைக்கவில்லை.

ஒவ்வொரு சட்டசபையிலும் சொல்லப்படுகிறது, சாதனைகளைப் பற்றி, வளர்ச்சியைப் பற்றி—நான் ஒத்துக்கொள்கிறேன். எல்லாமே உற்பத்தியாகிறது, ஐசுவரியம் வருகிறது. இது ஒரு சைட்—லாப் சைடட்,

நீங்கள் வைத்த கமிஷன்—பிளானிங் கமிஷன் என்ன சொல்கிறது? 4¼ கோடி ஜனத்தொகையிலே 2½ கோடி ஜனங்கள் பாவர்ட்டி லைனுக்கு கீழே இருக்கிறார்கள் என்று சொல்கிறது. உங்களுடைய டெவலப்மென்ட் சாதனைகள் எங்கே போயிற்று? அப்படியென்றால் குறிப்பிட்ட செக்ஷன்களுக்குத் தான் நீங்கள் செய்து கொண்டிருக்கிறீர்கள். விவசாய மக்கள், நடுத்தர விவசாயிகள், சிறு விவசாயிகள் ஆகியோருக்கு இந்த மாதிரி விஷயத்திலே உங்களுடைய டெவலப்மென்ட் திட்டம் என்னவாகிறது? மத்திய சர்க்கார்—மாநில சர்க்கார் செலவு செய்வது குறிப்பிட்ட செக்ஷன்களுக்குத்தான் போயிருக்கிறது—மற்ற செக்ஷன்களுக்குப் போய் சேரவில்லையென்பதுதான் ஸ்டேட் பிளானிங் கமிஷன் கொடுத்த சிபாரிசு.

கடன் எப்படி ஏற்படுகிறது என்று ஏற்கெனவே நான் விவரமாகச் சொல்லியிருக்கிறேன். முதலிலே, பராமரிக்கக் கடன். கோவாப்பரேட்டிவ் சொசைட்டி என்று சொன்னால் மாநில கோவாப்பரேட்டிவ் சொசைட்டியிலே பணம் கொடுத்தார்கள். இப்பொழுது கொடுப்பதில்லை. 40 சதவிகிதம் கடன் எதற்குப் போகிறதென்றால் உழவுக்குப் போகிறது. திருப்பிக் கொடுக்க முடியவில்லை. பிறகு கல்யாண செலவு — இப்படிப்பட்ட செலவுகளுக்கு கடன்படுகிறார்கள். ஒரு தடவை கடன்பட்டால் பிறகு



மீள முடியவில்லை. பூமி எரிக்கப்படுகிறது. அக்ரிகல்ச்சுரல் லேபரர்தான் கஷ்டப்படுகிறான் indebtedness to semi-slavery systemதான் வருகிறது.

அது மட்டுமல்ல, இன்றையதினம் பெரிய விவசாயத்திலே காபிட்டலிசம் ஊடுருவி வருகிறது. அதிலே உற்பத்தி ஜாஸ்தியாக வருகிறது. இருந்தாலும் இன்றைக்குச் சிறு விவசாயிகளை எடுத்துக் கொண்டாலும் raw materials for industry எடுத்துக்கொண்டாலும் பிரதானமாக இருக்கக்கூடிய காபிடலிஸ்ட் ஃபார்மர்ஸாக இருந்தாலும், இன்றைக்கு உணவு உற்பத்தியிலும் மற்ற உற்பத்தியிலும் டாமினன்ட் ஃபோர்ஸ் சிறு விவசாயிகள்தான்.

(முற்பகல் 10-00)

சிறு விவசாயிகள் நிலைமை என்ன? அவனுக்கு பேயிங் கெபாசிடி கிடையாது; இன்வெஸ்டிங் கெபாசிடி கிடையாது. அவன் மூலதனம் போட்டு உற்பத்தியைப் பெருக்க வழி இல்லை. மோட்டாருக்குப் பெட்ரோல், ஆயில் இருந்தால்தான் ஓடும். அதே போல் விவசாயிகளுக்குச் சாப்பாடு வேண்டும், கடனிலிருந்து அவனை விடுவிக்க வேண்டும். அப்போதுதான் அவனுக்கு விவசாய உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்ற ஆர்வம் ஏற்படும். அவர்களுக்குக் கடன் நிவாரணம் அளிப்பது ரொம்ப முக்கியம்.

நம்முடைய மாநிலத்தில் 11 லட்சம் கிணற்றுப் பாசனம். 7¼ லட்சம் பம்ப் செட்ஸ் வைத்துக் கொடுத்திருக்கிறோம். அதிலே முதல் போகம் வைத்தால் அது செலவு, கூலி இவற்றுக்குச் சரியாகிவிடும். இரண்டாவது போகம் விவசாயம் செய்தால்தான் அவனுக்குப் பணம் கொஞ்சம் மிஞ்சும். ஆனால், கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக மின்சாரம் கிடையாது, தண்ணீர் கிடையாது. அவன் நிலைமை என்ன? இந்த நிலைமையில் அவனுடைய கடனைத் தள்ள வேண்டுமா? வேண்டாமா?

1956-ல்ரூரல் கிரெடிட் சர்வே செய்திருக்கிறார்கள். 1965-ல் ரிசர்வ் பாங்க் ஒரு சர்வே செய்திருக்கிறது. இங்கு எது எதற்கோ கமிட்டி போடுகிறார்கள். ஆனால், விவசாயிகள் எப்படிக்

கடன்படுகிறார்கள், அவனுக்குக் கடன் வராமல் இருக்க என்ன செய்ய வேண்டுமென்பதைப் பற்றி—உறுப்பினர்கள் எல்லாம் சொன்னதுபோல்—ஒரு கமிட்டி கிடையாதே. மற்ற மாநிலங்களைக் காட்டிலும் விவசாயிகள் இன்டெடட்னஸ் நம்முடைய மாநிலத்தில் அதிகம். நம்முடையது டெவலப் அக்ரிகல்சர். கடன் இல்லாமல் விவசாய உற்பத்தியே செய்ய முடியாது. சர்க்கார் ஏற்கனவே விவசாயிகளுடைய கடனைப் பற்றி ஆராய ஒரு கமிட்டியைப் போடாவிட்டாலும் இனியாவது அப்படி ஒரு கமிட்டி போட முன்வருவார்களானால் முற்போக்கான அரசாங்கம் என்று பாராட்ட முடியும்.

விவசாயத் தொழிலாளர்கள் பட்ட கடனை ரத்து செய்யாது நாங்கள் விவசாயிகள். சர்க்கார், தொழிலாளர் சர்க்கார் என்று சொல்லிக் கொள்வதில் எந்தவிதமான அர்த்தமும் இல்லை. எல்லா மாநிலங்களிலும் விவசாயத் தொழிலாளிகளுடைய கடனை ரத்து செய்ய வேண்டுமென்ற கொள்கையை மத்திய சர்க்கார் ஏற்றுக் கொண்டது. இந்த நியாயமான கோரிக்கையைக்கூட இந்தச் சர்க்கார் ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் என்ன செய்வது? விவசாயிக்கு வருஷத்தில் 200 நாட்கள்தான் வேலை, 135 நாட்கள் கடன் வாங்கிச் சாப்பிடுகிறான். 100 ரூபாய் கடன் வாங்கிச் சாப்பிட்டால் அறுவடையானவுடன் இரண்டு, மூன்று மூட்டை நெல்லைக் கொண்டுபோய் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுக்க முடியாதவன் 'பான்டட் லேபர்' என்ற அளவுக்கு ஆகி விடுகிறான். விவசாயியாக இருந்தாலும், கூலி விவசாயியாக இருந்தாலும் கடனைத் திருப்பிக் கொடுக்க முடியவில்லை என்றால் --He becomes indebted to semi-slavery. இதைக்கூட இந்தச் சர்க்கார் போக்கவில்லை என்று சொன்னால் என்ன சொல்வது?

இந்த அடிப்படையில்தான் நான் ஒரு மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறேன். மசோதாவில் என்ன சொல்லியிருக்கிறது? இரண்டு ஹெக்டேர்—ஒரு ஹெக்டேருக்கு 2 ஏக்கர் 47 சென்ட்—ஐந்து ஏக்கர் வரை நிலம் வைத்துள்ளவர்கள் கடன்பட்டால், விற்பனை வரி, வருமான வரி கட்டவில்லை என்றால், கிட்டத்தட்ட 30,000 ரூபாய்க்குள்ள கடன் இருந்தால் அதிலே பாதியை



அவனுடைய குடும்பம், குழந்தைகளுடைய படிப்புச் செலவு போக மீதி இருக்கும் தொகையை 15 இன்ஸ்டால்மென்ட்டில் கட்டுவதற்கான முறையில் பிரிவு அமைக்கப்பட்டிருக்கிறது.

இன்னொன்று—நில அடமான பாங்கில் கடன் வாங்கி இருந்தால், கோவாப்பரேட்டிவ் சொசைடியில் கடன் வாங்கியிருந்தால், ஐந்து தவணைகளில் திருப்பிக் கொடுக்க வேண்டியதாக இருந்தால் அதைப் பத்துத் தவணையிலும், பத்து தவணையாக இருந்தால் 20 தவணையாகவும் தவணையை அதிகமாக்க வேண்டும். ஏதாவது ஒரு வருஷத்தில் வறட்சி ஏற்பட்டு கடன் கொடுக்க முடியாமற் போனால் அந்தக் கடனை ஒரு வருஷம் ஒத்தி வைத்து மற்றப் பகுதியோடு சேர்த்து வசூலிக்க வேண்டும்.

விவசாயி தனிப்பட்ட முறையில் ஆயிரம் ரூபாய் கடன் வாங்கியிருந்தால் கடன் கொடுத்தவன் மூவாயிரம் ரூபாய் என்று எழுதி வாங்கிக் கொண்டிருப்பான். அந்த விவகாரம் கோர்ட்டுக்கு வந்தால், அந்த கோர்ட் பார்த்து குறிப்பிட்ட ஊர் பஞ்சாயத்து சேர்மன், மற்றவர்கள் எல்லாம் சேர்ந்து இந்தக் கடனைப் பற்றி விசாரித்து, பணம் வாங்கியது எவ்வளவு, வட்டி எவ்வளவு என்ற நியாயமான கணக்கைப் பார்த்து கோர்ட்டுக்குத் தெரிவிக்க வேண்டும். இவைதான் இந்த மசோதாவில் இருக்கக்கூடிய முக்கியமான அம்சங்கள். சர்க்கார் இவற்றை ஏன் எதிர்க்கிறார்கள் என்று தெரியவில்லை.

இது சமீபத்தில் நம்முடைய பிரதமர் அறிவித்த சிபாரிசு அடிப்படையில் இருக்கிறதா? அவர்கள் சொல்லியிருப்பது—

action by stages to liquidate rural indebtedness while new schemes will be drawn up to devise alternative agencies to provide institutional credit to landless labourers, rural artisans, small and marginal farmers who own less than 2 hectares.

என்பதாகும். இந்த அடிப்படையில் எல்லா மாநிலங்களிலும் செய்திருக்கிறார்கள்.

அதுபோக,

There is Inter-Ministerial group which was established in the Department of Rural Development of the Union Ministry of Agriculture. Quick action to follow for moratorium with means of reduction of debts in the case of poor and the liquidation of debts in stages, is envisaged.

Definition of weaker sections and the reduction and scaling down of debts of poor peasants and marginal poor farmers – இவைகளும் suggestions.

'செப்டம்பர் மாதத்திற்குள்', என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது அக்டோபர்—நவம்பர் ஆகிவிட்டது. அவர்கள் இதைப்பற்றிய சிபாரிசை எல்லா முதலமைச்சர்களுக்கும் அனுப்பியிருக்கிறார்கள்.

They sent it to our Chief Minister also. மற்ற சஜஷன்ஸ்—

The major suggestions of Inter-Ministerial group are:—
"permanent relief—definition of debt—legislation for compulsory restriction of money lending. Total reduction of debts for weaker sections and need to bar jurisdiction of civil courts in certain proceedings total relief from indebtedness for landless and village artisans and also marginal farmers—scaling down of debts.

இவ்வளவு சிபாரிசுகள் இருக்கின்றன. அவசரச் சட்டம் இருக்கிறது. செப்டம்பர் மாதத்திற்குள் ரிலீப் கொடுக்க வேண்டுமென்று மத்திய சர்க்கார் இந்தச் சர்க்காருக்குச் சொல்லியும்கூட இந்தச் சர்க்கார் அதைப் பற்றி ஒன்றும் செய்ய வில்லை, இவை முழுவதையுமே அவர்கள் எதிர்ப்பதாலோ என்னவோ தெரியவில்லை.

அமைச்சர் அவர்கள் சர்க்காருக்கு விவசாயிகள் மீது ரொம்ப அக்கறை இருக்கிறது, வேண்டிய சட்டம் எல்லாம் கொண்டு வந்திருக்கிறது என்று சொன்னார்கள். பிரயோசனம் என்ன? 1969-ல் சட்டம் கொண்டு வந்தீர்கள். வாஸ்தவம். 1972-லும் கொண்டு வந்தீர்கள். இப்போதும் கொண்டு வந்திருக்கிறீர்கள். ஜனவரிக்குள் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டுமென்ற நோட்டீஸ் வந்தாகிவிட்டது.



பம்ப் செட்களைப் பிடுங்குவது, ஆடுமாடுகளைப் பிடுங்குவது என்ற நிலைதான் ஏற்படுகிறது. இது போஸ்ட்போன்மென்ட் ஆப் டெட்ஸ்க்குத்தான். கன்ஸாலிடேஷன் ஆப் டெட்ஸ்க்கு என்ன செய்யப்பட்டிருக்கிறது? 1972-ல் கொண்டு வந்த சட்டம் என்ன? இரண்டு ஆண்டுகள் ரிலீப் கொடுக்கப்பட்டது. ரிலீப் பீரியட் தீர்ந்தபிறகு வாங்காத வட்டியையும் சேர்த்து வசூல் செய்கிறார்கள். அப்போது அந்த மசோதாவால் என்ன பயன் என்பது தான் என் கேள்வி.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

கிராமப்புறங்களில் மணி லெண்டிங் பிஸினஸ் நடக்கிறது. அதேபோல் ரூரல் மணி லேண்டிங்கும் இருக்கிறது. இந்த ரூரல் மணி லெண்டிங் ஒரு வொர்ஸ்ட் டைப் ஆப் எக்ஸ்ப்ளாயிடேஷன். மார்ட்கேஜ்க்கு வாங்கும்போதே சேல்ஸ் டீட்-ம் எழுதிவிடுகிறார்கள். அப்படி ஒரு வொர்ஸ்ட் டைப் ஆப் எக்ஸ்ப்ளாயிட்டேஷனை இருக்கிறது, இந்த ரூரல் மணி லெண்டிங். கடன் கொடுக்கும்போது கொடுக்கிற தொகைக்கு ஒன்றுக்கு நான்காக எழுதி வாங்கிக் கொள்கிறார்கள். இந்தமாதிரி செய்யப்படுவதற்கு என்ன செய்திருக்கிறீர்கள்? ஆகவே, விவசாயிகளுக்கு, விவசாயத் தொழிலாளர்களுக்கு நீங்கள் செய்திருக்கக்கூடிய நன்மை என்ன என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் அவர்கள் அமைச்சர் அவர்களுடைய ஸ்பீச்-க்கு ரிப்ளை செய்கிறீர்கள். ஸ்கோப் ஆப் ஆர்குமென்ட் பெரிதாகும்போது, மற்ற பில்கள் இருக்கின்றன அல்லவா, அவற்றை எப்போது எடுப்பது?

**திரு. என். கே. பழனிசாமி:** இந்த பில்லை அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொண்டால் ஆர்குமென்டே இல்லை. அவர்கள் ஒத்துக் கொள்ளாததால் இவற்றைச் சொல்லவேண்டியிருக்கிறது.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** இவ்வளவு பேசியும் அந்தப் பக்கத்திலிருந்து மனம் வராததால் இன்னும் கொஞ்சம் கூடுதலாகப் பேசினாலாவது மனம் மாறுமா என்பதுதான்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : இப்படி வளர்த்துக் கொண்டே போனால் மற்ற பில்களை எடுக்கமுடியாமல் போகும். அவ்வளவுதான்.

**திரு. என். கே. பழனிசாமி**: நம் மாநிலம், குஜராத் மாநிலம் இந்த இரண்டு மாநிலங்களையும் தவிர மற்ற எல்லா மாநிலங்களிலும் இந்தக் கடன் நிவாரணச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். நான் வரிசையாகச் சொல்கிறேன்.

மணி லெண்டிங் பிஸினஸ் ரெஜிஸ்டர் செய்யப்படவேண்டும் என்று சொல்லியிருப்பதால்தான் ஸ்டே வாங்கப்பட்டிருக்கிறது. மஹாராஷ்ட்ராவில் இந்த மணி லெண்டிங் பிஸினஸ் பூராவையும் ரெஜிஸ்டர் செய்யவேண்டும் என்று ஒரு அவசரச் சட்டம் போட்டார்கள். அதை எதிர்த்துத்தான் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போனார்கள். கடன் லிக்விடேஷன் பற்றியோ அல்லது அக்ரிகல்ச்சரல் லோன்ஸ் ரத்து செய்யப்பட்டது பற்றியோ கோர்ட்டுக்குப் போகவில்லை. ஒவ்வொரு மணி லெண்டரும் ரெஜிஸ்டர் செய்ய வேண்டும் என்று மஹாராஷ்ட்ராவில் ஒரு அவசரச் சட்டம் கொண்டு வந்தார்கள். அதை எதிர்த்துத்தான் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போனார்கள்.

பஞ்சாப் மாநிலத்தை நாம் எடுத்துக்கொண்டால், ரூ. 50,000 வரை கடன் இருந்தால் இரண்டு ஆண்டுகளுக்குக் கடன் வசூல் பண்ணுவதில்லை, அதற்குப் பிறகு வருடத்திற்குக் கொஞ்சமாக ஸ்கேல் டௌன் செய்யவேண்டும் என்று சட்டம் போட்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல. நகைகள் அல்லது வேறு ஏதாவது பொருள்களை அடமானம் வைத்திருந்தால் அவற்றைத் திருப்பிக் கொடுக்கவேண்டும்.

கர்நாடக மாநிலத்தை எடுத்துக்கொண்டால், இரண்டு ஹெக்டேருக்குள் இருந்தால் கடன் பூராவும் ரத்து செய்யப் பட்டிருக்கிறது.

அதேபோல் மத்திய பிரதேசை எடுத்துக்கொண்டால் நிலம் இல்லாத விவசாயிகளுடைய கடன்கள் பூராவும் ரத்து செய்யப் பட்டிருக்கிறது.



இப்படி பல மாநிலங்களில் செய்யப்பட்டிருக்கிறது. நமது மாநிலத்திலும், குஜராத் மாநிலத்திலும் இந்த இரண்டு மாநிலங்களில் மட்டும்தான் இப்படி சட்டம் செய்யப்படவில்லை.

இங்கு மின்சாரத்தை உபயோகப்பதில்தான் அவசரச் சட்டம் போடப்படுகிறது. சினிமா கொட்டகைகளில் பீடி குடிப்பதற்குத்தான் அவசரச் சட்டம் போடப்படுகிறது. ஆனால் இப்படி உழவர்கள், வேளாண்மைத் தொழிலாளர்கள் **இவர்கள் கடன்களைச் சரிக்கட்ட, ஏன் ஒரு மசோதவைக்** கொண்டு வர இந்த சர்க்கார் பயப்படுகிறார்கள்? ஜனவரி 16-ம் தேதிக்கு மேல் ஒரு நோட்டீஸ் இப்போதே வந்தாகிவிட்டது. பூராவும் ஜப்திதான் செய்வார்கள். 72-ல் ஒரு கிளர்ச்சி மாநிலத்தில் ஏற்பட்டது நினைவிருக்கலாம். உழவர்கள், வேளாண்மைத் தொழிலாளர்கள் இவர்கள் பட்டுள்ள கடன்களை எல்லாம் பரிசீலனை செய்து, கட்டமுடியாத கடன்களைப் பரிசீலனை செய்து ரத்து செய்யவேண்டும். பல சட்டங்கள் இருக்கின்றன. கோர்ட்டுக்குப் போகலாம் என்றிருந்தாலும் ஏழை மக்களால் போக முடிவதில்லை. வட்டிக்காரன் ஆடு, மாடுகளைப் பிடிப்பது, **ஜப்தி செய்வது—இதற்குப் போலீஸ் உடந்தை.**

ஆக, மணி லெண்டிங்குக்கு இந்த சர்க்கார் உடந்தை என்றுதான் சொல்லவேண்டும். பத்து ரூபாய் கடன் கொடுத்துவிட்டு வாரத்திற்கு ஒரு ரூபாய் வட்டி வாங்குகிறார்கள். 400 சதவிகிதம், 500 சதவிகிதம் வரை வட்டி வசூலிக்கப்படுகிறது. கந்து வட்டிக்காரர்களுக்கு இந்த சர்க்கார் ஆதரவாயிருக்கிறது.

**திரு. மா. மீனாட்சிசுந்தரம்** : உறுப்பினர் அவர்கள் இப்படிச் சொல்வதன் மூலம் விவசாயப் பெருமக்களுக்கு உழவுத் தொழில் செய்ய உற்பத்திச் செலவிற்குக்கூட கடன் கிடைக்காத நிலை உருவாகி மிகவும் பாதிப்பு ஏற்படும். அதை உறுப்பினர் அவர்கள் கவனத்தில் எடுத்துக் கொண்டுள்ளார்களா?

**திரு. என். கே. பழனிசாமி: கூட்டுறவு பாங்குகள் எல்லாம்** உங்களிடம்தான் இருக்கின்றன.

**திரு. மா. மீனாட்சிசுந்தரம்:** கடனை நிறுத்திவைப்பதால் ஓவர்ட்யூஸ் ஏற்பட்டு அந்த பாங்கிற்கு ரிசர்வ் பாங்க் பணம் தர மறுத்துவிடுகிறது. அதையும் உறுப்பினர் அவர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும்.

**திரு. என். கே. பழனிசாமி:** ஓவர் ட்யூஸ் ஏற்படுவது வாஸ்தவந்தான். அரசாங்கம் யாரை நம்புகிறார்கள்?

தர்மபுரியை எடுத்துக்கொண்டால் ஒரு கோடி ரூபாய் வரை காணோம். க்ரெடிட் சொசைட்டிகளில் பினாமி கடன்கள் இருக்கின்றன. ஆளும் கட்சிக்காரர்கள் தலைவர்களாக வந்து விடுகிறார்கள். இருபது பேர்கள் கடன் எடுத்துக்கொண்டு கட்டாமல் இருந்தால் மற்றவர்களுக்கு பின் எப்படிக் கடன் கிடைக்கும்? பாங்குகளிலிருந்து நேரடியாக விவசாயிகளுக்கு பணம் கடன் கிடைக்கக்கூடிய முறையில் ஏற்பாடு செய்ய வேண்டும். தலைவர்கள் மூலம் கொடுப்பதால் குழப்பம் ஏற்படுகிறது.

54 பாங்குகள் என்பது சமுத்திரத்தில் கரைத்த பெருங்காயம் தான். இந்த மாரட்டோரியத்தை ஆறு மாதங்களுக்கு எக்ஸ்டென்ட் செய்யவேண்டும். இன்று பல இடங்களில் மழை பெய்யவில்லை, சில இடங்களில்தான் மழை கொஞ்சம் பெய்திருக்கிறது என்ற நிலைதான் இருக்கிறது. மழை பெய்யா விட்டால் வேண்டுமானால் நிவாரணம் கொடுக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் அன்று ஒரு உறுதிமொழி அளித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் இன்னும் 6 மாதத்திற்குள்ளாக ஒரு அவசரச் சட்டம் போடவேண்டும். பல இடங்களில் மழை பெய்யவில்லை. ஆகவே, பாதிக்கப்பட்ட விவசாயி பணத்தை உடனே கட்ட முடியாது. ஆகவே, அவர்களுக்கு ரிலீப் கொடுக்கும் வகையில், இதை எக்ஸ்டென்ட் செய்யவேண்டுமென்று சொல்லி, இந்த மசோதாவைக் கண்டிப்பாகச் சட்டமாக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறேன்.



**திரு. கோவை செழியன்:** தலைவரவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது இது சம்பந்தமாகச் சில சீர்திருத்தங்களைக் கொண்டு வந்து முற்போக்கான வகையில் அரசாங்கமே சில சட்டங்களை நிறைவேற்றப் போவதாகச் சொன்னார்கள்.

ஆனால் இன்றைய யதார்த்தமான நிலை, கிராமத்தில் என்ன வென்றால், விவசாயிகளுக்கோ, அல்லது விவசாயத் தொழிலாளர்களுக்கோ, கடன் கொடுக்க யாரும் முன் வருவது இல்லை. காரணம், இந்தச் சட்டத்திற்கு பயந்துகொண்டு நிறுத்தி இருக்கிறார்கள். ஆனால் ஒரு புதிய முறையில் இந்தத் தொழிலை ஆரம்பித்து இருக்கிறார்கள். எல்லாக் கிராமங்களிலும், 'ஹயர் பர்சேஸ்' என்ற முறையில் விவசாயக் கருவிகளையோ, மற்றவற்றையோ, உதாரணமாக ரூ. 50 பெறுமான சரக்கு என்றால் அதை ரூ. 100-க்கு விற்கிறார்கள். அதைத் தவணைமுறையில் வாங்கிக்கொள்கிறேன் என்று சொல்கிறார்கள். இப்படி மறைமுகமான வட்டியை வசூலிக்கிறார்கள். எல்லா கிராமங்களிலும் இது இப்போது நடந்துகொண்டு இருக்கிறது. நகரங்களிலும் நடக்கிறது. இதை மனதில் வைத்துக்கொண்டு, இதைத் தடுக்க அரசாங்கம் ஏதாவது சட்டம் கொண்டுவர எண்ணி இருக்கிறதா?

தமிழ் நாட்டிலிருந்து வடநாட்டிற்குச் சென்று தொழில் நடத்திக்கொண்டு இருந்தவர்கள்கூட, இப்போது அங்கே கடையை மூடிவிட்டு இங்கே வந்து எல்லாக் கிராமங்களிலும் இப்படி 'ஹயர் பர்சேஸ்' முறையில் விற்பனை என்று சொல்லி மறைமுகமாக வட்டி வசூலிக்கிறார்கள். இதை மனதில் வைத்துக் கொண்டு, அதைத் தடுக்க அரசாங்கம் சட்டம் கொண்டுவருமா?

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, இதை விட முற்போக்கான சட்டத்தைச் சர்க்காரே, நிவாரணம் அளிக்கும் முறையில், கொண்டுவருவதாக இருக்கிறது என்று சொன்னார்கள். நம்முடைய சட்டப்படி கடன் நிறுத்திவைக்கும் காலம் ஜனவரி 16 ஆம் தேதி, அதற்கு முன்னால் சட்டம் வர ஏற்பாடு இருக்கிறதா? சட்டம் வருவதற்குக் காலதாமத மானால், வசி

[திரு. சோ. அழகர்சாமி] [1975 நவம்பர் 8

வசூல் நடக்கும். ஆகவே, அந்த வரி வசூலை ஜனவரி 16 ஆம் தேதிக்குப் பிறகு மேலும் இரண்டு ஆண்டுகளுக்குத் தள்ளி வைக்க ஏற்பாடு உண்டா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, சில சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஏன்தான் இந்தச் சந்தேகமோ, ஜனவரியோடு முடிகிறதே, சட்டம் வருமா, சட்டமன்றம் இருக்குமா என்று. சட்டம் போட்டு இருக்கிறோம். போட்டு இருக்கிற சட்டம் இருக்கும். சட்டமன்றமும் இருக்கும். சட்ட மன்றம் இருந்தால் காலத்திற்கு ஏற்ற வகையில் சட்டமும் கொண்டுவருகிற வாய்ப்பும் நமக்கு இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு, உழவர்கள், வேளாண்மைத் தொழிலாளர்கள் கடன்கள் சரிகட்டுதல் சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 59/74) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

(ஆ) தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/75).

* திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, "தமிழ் நாடு 1975 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்டமுன்வடிவை * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/75) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று நான் முன்மொழிகிறேன்.

திரு. செ. அரங்கநாயகம்: நான் அதை வழிமொழிகிறேன்.

---

*1975 நவம்பர் 4 ஆம் தேதிய தமிழ்நாடு அரசிதழ் சிறப்பிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



1975 டிசம்பர் 8]

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, இந்த மசோதாவை இந்த மாமன்றத்தில் அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கும் வாய்ப்பளித்ததற்காக உள்ளபடியே நான் மெத்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்த மசோதா கொண்டுவருவதன் முக்கிய நோக்கம், நிர்வாகத் துறையில் இருந்து நீதி பிரிக்கப்பட வேண்டும் என்பதுதான்.

இன்றைக்கு நிர்வாகத் துறையில் நீதி செயல்படுகிறது. அந்தக் காட்சியை நாம் அறநிலையத் துறையில் பார்க்கிறோம். அவர்களே வழக்குத் தொடுக்கிறார்கள், அவர்களே நீதிபதிகளாக அமர்கிறார்கள், அவர்களே குறுக்கு விசாரணை செய்கிறார்கள், அவர்களே சாட்சியங்களைத் தயாரிக்கிறார்கள், அவர்களே டாக்குமென்ட்டுகளை உருவாக்குகிறார்கள். ஆகவே, அவர்களுடைய வழக்குக்கு அவர்களே நீதிபதிகளாகவும், அவர்களே சாட்சியாகவும், அவர்களே டாக்குமென்ட் தயாரிக்கும் அதிகாரிகளாகவும் இருக்கிற காரணத்தால், நிர்வாகத்தில் இருந்து நீதி பிரிக்கப்பட வேண்டுமென்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

உலகத்திலே நிலவிவரும் நீதிக் கொள்கை, "No man can be a Judge of his own Case" என்பது தான். ஆனால் அறநிலையத் துறையைப் பொறுத்தவரையிலும் அவர்களுடைய வழக்குக்கு அவர்களே நீதிபதிகளாக இருக்கும் காட்சியை நாம் பார்க்கிறோம். ஆகவேதான், நிர்வாகத் துறையிலிருந்து நீதி பிரிக்கப்பட வேண்டுமென்று இந்தச் சட்டத்தை நான் இந்த அவையிலே கொண்டுவருவதற்கும், அதைக் குறித்து விரிவாக எடுத்துப் பேசுவதற்கும் முன்வந்து இருக்கிறேன்.

இந்தச் சட்டத்தை அலசிப் பார்ப்பதற்கு முன்பு இந்தச் சட்டம் எப்போது உருவாக்கப்பட்டது, எதற்காக உருவாக்கப்பட்டது என்பதை எல்லாம் நான் முன்னாலே எடுத்து வைக்க விரும்புகிறேன்.

இந்து சமய அற நிலையச் சட்டம், தமிழ்நாட்டிலே உருவான போது கோவில்களின் சொத்துக்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான் உருவானது. பிறகு, நிர்வாகத்தைப் பார்ப்பதற்காக அது விரிவாக்கப்பட்டது. இடையிலேதான்

[திரு. பெ. சௌந்தரபாண்டியன்] [1975 நவம்பர் 8

நீதியைப் புகுத்த வேண்டும் என்பதற்காக இந்தச் சட்டத்தில் நீதி முறை இணைக்கப்பட்டுள்ளது. ஆகவேதான் நிர்வாகத் துறையையும், நீதித் துறையையும் இணைந்து இருப்பது சரியல்ல என்ற அடிப்படையில் நான் இதைக் கொண்டுவந்து இருக்கிறேன். அதற்குப் பல சான்றுகள் இங்கே வைக்க விரும்புகிறேன்.

நம்முடைய இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஆர்ட்டிகிள் 50 இல் தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கிறார்கள்,
"The State shall take steps to separate the judiciary from the executive in the public services of the State"
என்று.

ஆகவே, நம்முடைய அரசியல் அமைப்புச் சட்டத்தில் தெளிவாக்கப்பட்டிருப்பது போல், நிர்வாகத் துறையில் இருந்து ரெவின்யூத் துறையாக இருந்தாலும், அல்லது அறநிலையத் துறையாக இருந்தாலும், வேறு எந்தத் துறையாக இருந்தாலும்—நீதி பிரிக்கப்பட வேண்டும். நிர்வாகம் தனியாக இயங்க வேண்டும், நீதித் துறை தனியாக இயங்க வேண்டும். அப்போது தான் நியாயமான உரிமைகளைப் பொதுமக்கள் பெறுவதற்கும், நியாயமான முறையில் கடமையை நிர்வாகிகள் ஆற்றுவதற்கும் வசதியாக இருக்கும்.

ஆகவே, நம்முடைய அறநிலையத் துறையைப் பொறுத்த வரையிலும், நிர்வாகமும், நீதியும் இணைந்திருப்பதைப் பொதுவாக யாரும் வரவேற்கமாட்டார்கள் என்று கருதுகிறேன். நம்முடைய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் இதைக் கூர்ந்து கேட்டு, ஆழ்ந்து சிந்தித்து, வரும் காலத்தில் அதை எப்படி மாற்றியமைக்கலாம், அல்லது எப்படித் திருத்தி அமைக்கலாம் என்பதற்கு நல்ல பரிகாரம் காண வேண்டும் என்பதற்காகத்தான் இந்தச் சட்டத்தை நான் இந்த அவையிலே அறிமுகம் செய்து இருக்கிறேன்.

இந்தச் சட்டத்தைப்பற்றி நான் விரிவாகவும், விளக்கமாகவும் ஆதாரத்தோடு சுட்டிக்காட்ட முற்படுவதோடு, ஒரு சில கருத்துக்களையும் இந்த மன்றத்தின் கவனத்திற்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கும், இந்த அரசின் கவனத்திற்கும் கொண்டுவர விரும்புகிறேன்.



1975 நவம்பர் 8] [திரு. பெ. சௌந்தரபாண்டியன்]

இந்தச் சட்டம் எதிர்க்கட்சி உறுப்பினரால் கொண்டு வரப்படுகிற சட்டம் ஆயிற்றே என்று கருதாமல், இதில் உள்ள நியாயமான கருத்தை, மக்களின் நியாயமான கோரிக்கை இது என்பதை அரசாங்கம் மனதில்கொண்டு, அரசாங்கம் இந்தச் சட்டத்தைப் புறக்கணிக்காது ஏற்றுக்கொள்ள வேண்டும். என்பதற்காகத்தான் சிலவற்றை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

1938 ஆம் ஆண்டில் இந்த மாமன்றத்தில் முதலமைச்சராக இருந்த ராஜாஜி அவர்கள் காலத்தில், அன்றையக் காங்கிரஸ் ஆட்சிக்கு ஏறத்தாழ 160 உறுப்பினர்களுக்கு மேல் இருந்தார்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது—அன்று எதிர்க்கட்சி வரிசையில் இருந்த திவான் பகதூர் எம். சி. ராஜா அவர்கள்
'The Removal of Civil Disabilities Act, 1938'.
என்ற ஒரு சட்டத்தை இந்த மாமன்றத்தில் அறிமுகம் செய்தார்கள். அந்த நேரத்தில் அந்தச் சட்டம் விரிவாக ஆய்வு செய்யப்பட்டது. திரு. ராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருந்த காரணத்தால் சொன்னார்கள், "எம். சி. ராஜா அவர்கள் கொண்டுவந்த சட்டத்தை நான் பாராட்டுகிறேன், அவர்கள் கொண்டுவந்த நோக்கத்தின் உள்கருத்தை உள்ளபடியே நான் வரவேற்கிறேன், நீங்கள் எதிர்க்கட்சி வரிசையில் இருந்தாலும் நியாயமான சட்டத்தை, சமுதாயச் சீர்திருத்த சட்டத்தை, சமுதாய மக்களுக்காக, நாட்டின் முன்னேற்றத்திற்காக, நல்ல எண்ணத்தோடு கொண்டுவந்திருக்கிற சட்டத்தை நான் பாராட்டுகிறேன்" என்று கூறியதோடு அல்லாமல், காங்கிரஸ் கட்சியின் 160 சட்டமன்ற உறுப்பினர்களின் வாக்கு பலத்தை வைத்துக்கொண்டு அந்தச் சட்டத்தைத் தோற்கடிக்காமல், அந்த சட்டத்தின் நியாயத்தை உணர்ந்து, அதைச் சட்டமாக்கினார்கள். அதை நான் மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

[முற்பகல் 10.30]

மரியாதைக்குரிய முதலமைச்சர் அவர்களும், இது நியாயமான சட்டமா என்பதை நான் எடுத்து வைக்கின்ற வாதங்களைக் கேட்டு, இரவிலே உறங்குகின்ற நேரத்திலே ஒரு நிமிட நேரம் மனதிலே எண்ணிப் பார்த்து, இதன் நியாயத்தை உணர்ந்து, 1938 ஆம்

ஆண்டு ஒரு எதிர்க்கட்சி உறுப்பினரால் கொண்டுவரப்பட்ட சட்டத்தை ராஜாஜி அவர்கள் எப்படி ஏற்றுக்கொண்டாரோ, அதே போல் இன்று முதலமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு கலைஞர் கருணாநிதி அவர்களும் இதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் நான் என்னுடைய முன்னுரையிலே இதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைய சூழ்நிலையில், நிர்வாகத் துறையில் இருக்கிறவர்கள் நீதி செலுத்துவது எப்படி நியாயமாகும் என்பதுதான் இந்தச் சட்டம் கொண்டு வருவதன் முக்கிய நோக்கம். இன்று அறநிலையத் துறை என்ன செய்கிறது என்பதை நாம் முதலில் எண்ணிப் பார்க்க வேண்டும். அறநிலையத் துறையினர் ஒரு கோவிலையோ அல்லது வேறு எந்தச் சொத்தையோ எடுத்துக்கொள்ள வேண்டுமென்றால், தாங்களாகவே முன்வந்து வழக்குத் தொடுகின்றார்கள். அந்தச் சொத்துக்கு யார் உரிமையாளர்களாக இருக்கிறார்களோ, அவர்களை மனுப் போடச் சொல்கிறார்கள். மனுப் போட்ட பிறகு, தன்னுடைய துறையில் இருக்கின்ற அதிகாரியை அனுப்பி அதற்குரிய தடயங்களையும், இன்ன பிற விவரங்களையும் விசாரித்து, எழுதித் தாக்கல் செய்யச் சொல்லுகிறார்கள்.

அப்படித் தொடுக்கப்பட்ட வழக்கினை நிர்வாக அதிகாரியே நீதிபதியாக அமர்ந்து, அவர்களே வழக்கினை விசாரிக்கின்ற நிலைமையும், சாட்சியங்களை குறுக்கு விசாரணை செய்கின்ற தன்மையும், தம்முடைய துறையைச் சேர்ந்த ஒருவரால் தாக்கல் செய்யப்படுகின்ற டாக்குமெண்டைப் பார்த்து, பரிசீலனை செய்து தமது முடிவினை அறிவிக்கும் சூழ்நிலையையும் இன்று நாம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஆகவே, தமது துறையின் வழக்குக்கு தாமே நீதிபதியாக இருப்பது எப்படிப் பொருத்தமாகும் என்பதுதான் என்னுடைய கேள்வியாகும்.

அகில உலகத்தின் வரலாற்றைப் புரட்டிப் பார்ப்போமேயானால், அகில உலகத்தின் நிர்வாகத் துறையை அலசிப் பார்ப்போமேயானால், அகில உலகத்திலும் நிலவுகின்ற ஒவ்வொரு நீதித் துறையையும் பரிசீலனை செய்து பார்ப்போமேயானால், நமது இந்திய நாட்டைத் தவிர வேறு எந்த நாட்டிலும் நிர்வாகத் துறையும், நீதித் துறையும் இணைந்திருப்பதாக தடயங்களைக்



காணோம். ஆகவேதான், நிர்வாகத் துறையிலிருந்து நீதித் துறையைப் பிரிக்க வேண்டும் என்பது என்னுடைய ஆணித் தரமான கோரிக்கையாகும் இதில் எவ்வளவு இடர்ப்பாடுகள், எவ்வளவு முறைகேடுகள், எவ்வளவு குறைபாடுகள், நியாயத்தைப் புறக்கணிக்கின்ற தன்மைகள் இருக்கின்றன என்பதற்குப் பின்னாலே நான் பல ஆதாரங்களை இந்த மாமன்றத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, நிர்வாகத் துறையிலிருந்து நீதியைப் பிரிக்க வேண்டுமென்பதுதான் இந்தச் சட்டத்தின் முக்கிய நோக்கமாக நான் கொண்டு வந்திருக்கிறேன் என்று முதலிலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

இந்தச் சட்டத்தை அலசி ஆராயுமுன், இந்தச் சட்டம் எப்போது இயற்றப்பட்டது, ஏன் இயற்றப்பட்டது, எதற்காக இயற்றப்பட்டது என்கின்ற வரலாற்றை இந்த மாமன்றம் தெரிந்து கொண்டால்தான், இந்தச் சட்டம் உள்ளபடியே குறைபாடு உள்ளதுதானா, இந்தச் சட்டத்தை மேலும் திருத்த வேண்டியது அவசியம்தானா என்பதை நாம் அத்தனை பேரும் புரிந்து கொள்ள வாய்ப்பாக இருக்கும். ஆகவே இந்த மாமன்றத்தில் இருக்கின்ற அத்தனை உறுப்பினர்களும் 1922 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்த நிலைமை என்ன, அன்றைக்கு அறநிலையங்கள் எப்படி இருந்தன, எப்படிப் பாதுகாக்கப்பட்டன என்பதை எல்லாம் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக சிலவற்றை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் சங்க காலத்தில் ஏராளமான கோவில்கள் உருவாக்கப்பட்டன. நமது தமிழ்ச் சமுதாய மக்கள், தாங்கள் வழிபடும் தெய்வங்களுக்கு கோவில்கள் எடுத்து, அவற்றின் பராமரிப்புச் செலவுக்காக சொத்துக்களையும், இன்ன பிற உடைமைகளையும் அவற்றிற்கு உரிமையாக்கினார்கள் என்பதை நாம் நன்றாக அறிவோம்.

இப்படி உருவாக்கப்பட்ட கோவில்கள் வெள்ளைக்காரன் ஆட்சிக் காலத்திலே எந்த அளவுக்குப் பராமரிக்கப்பட்டன, அதில் என்னென்ன குறைபாடுகள் இருந்தன, கோவில்கள் புறக்கணிக்கப் பட்டு பாதுகாக்கப்படாமல் அன்றாட நிகழ்ச்சிகள் நடைபெறாமல் தடையாக இருந்தன என்பதைக் கண்ட பொதுமக்கள், இதற்கு

என்று ஒரு பாதுகாப்பு ஏற்பட வேண்டுமென்று பல கோரிக்கைகளை எழுப்பினார்கள். பொதுமக்களின் நல்லெண்ணத்தையும், நல்ல நோக்கத்தையும் நிறைவேற்றுவதற்காக வெள்ளைக்காரன் ஆட்சிக் காலத்தில், இந்தக் கோவில்களின் சொத்துக்களைப் பராமரிக்க ஒரு தனியான அமைப்பையும், நிர்வாக அமைப்பையும் உருவாக்க முற்பட்டார்கள்.

வெள்ளையன் ஆட்சிக் காலத்தில் பனகல் அரசர் முதலமைச்சரானார். அவர் முதலமைச்சர் ஆன பிறகுதான் கோவில்களின் சொத்து பற்றி ஆய்வு செய்வதற்கு முற்பட்டார். ஏனென்றால், கோவில்களுக்காக எழுதி வைக்கப்பட்ட சொத்துக்கள், முறைப்படி அந்தக் கோவில்களின் பராமரிப்புக்காகவும், அபிவிருத்திக்காகவும், அன்றாட காரியங்களைச் செய்வதற்காகவும் பயன்படுத்தப்படாமல், பல வழிகளிலே சொத்துக்கள் மோசடி செய்யப்பட்டு வேறு பல செலவுகளுக்கு பயன்படுத்தப்பட்டிருந்த காரணத்தால், அதை ஒழுங்கு படுத்துவதற்காக 1922 ஆம் ஆண்டு அன்றைய முதலமைச்சராக இருந்த பனகல் அரசர் அவர்கள் ஒரு ஆய்வுக் குழுவினை ஏற்படுத்தினார்.

அந்த ஆய்வுக் குழுவினர் கோவில்களின் சொத்துக்களை எப்படிப் பராமரிப்பது, அந்தப் பொறுப்பை யாரிடம் ஒப்படைப்பது, யாரிடத்தில் ஒப்படைத்தால் கோவில் நிர்வாகம் சரியாக இயங்கும், சொத்துக்கள் மோசடி செய்யப்படாமல் பாதுகாக்கப்படும் என்பதையெல்லாம் ஆய்ந்து, விரிவான ஒரு அறிக்கையை அளித்தனர்.

அந்த ஆய்வு அறிக்கையின் பிரகாரம் சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக எண்டோமெண்டு போர்டு என்று அப்போது உருவாக்கப்பட்டது. 1922 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட அந்தக் குழு 1923-க்குள் அறிக்கையை அளித்திருக்கிறார்கள். 1923 ஆம் ஆண்டுதான் முறையான சட்டம் உருவாக்கப்பட்டது அன்றைய முதலமைச்சராக இருந்த பனகல் அரசரால்.





அதற்குப் பிறகு அந்தச் சட்டத்தில் இருக்கின்ற குறைபாடுகளை, கோவில் சொத்துக்களை நிர்வாகம் செய்வதில் இருக்கின்ற தவறுகளை முறைப்படுத்துவதற்காக 1927 ஆம் ஆண்டு வரை அவ்வப்போது திருத்தங்களைச் செய்து, இறுதி வடிவமாக 1927 ஆம் ஆண்டு இன்னொரு சட்டத்தை முறைப்படி தந்திருக்கிறார்கள். இந்தச் சட்டம் கொண்டு வந்ததன் நோக்கம் மூலச் சட்டம் இயற்றப்பட்ட பிறகும், முறையாக கோவில் சொத்துக்கள் பராமரிக்கப்படவில்லை, பல நில்லுமுல்லுகள் நடந்திருக்கின்றன, இவற்றை எந்த வகையிலே மாற்றியமைக்கலாம் என்பதற்காகத்தான் அடுத்தடுத்து பல திருத்தங்களைக் கொண்டு வந்துள்ளார்கள். அந்தச் சட்டத்திலும் குறைபாடுகள் இருந்தன, அதன் நோக்கம் நிறைவேற்றப்படாமல் தட்டிக் கழிக்கப்பட்டன.

இதைப் பார்த்த பிறகுதான் 1941 ஆம் ஆண்டு மீண்டும் அந்தச் சட்டத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு, இந்த அவையின் செயலாளராக பணியாற்றியவரும், நமது சட்டப் பேரவையின் விதிமுறைகளை வகுத்துக் கொடுத்தவருமான திரு. ஆர். வி. கிருஷ்ண ஐயரை வைத்து ஒரு தனி நபர் ஆணைக் குழுவை அரசாங்கம் நியமித்தது. திரு. ஆர். வி. கிருஷ்ண ஐயர் தமது ஆய்வை விரிவாக நடத்தினார். எந்தெந்த இடத்தில் கோளாறு இருக்கிறது, எந்தெந்த விதிமுறை திருத்தப்பட வேண்டும், எந்தெந்த விதியை ஒழுங்குபடுத்தினால் அறநிலையத் துறை செம்மைப்படும், எந்தெந்த தவறை திருத்தியமைத்தால் அறநிலையத் துறையின் சொத்துக்கள் பாதுகாக்கப்படும், எந்தெந்த விதிமுறையை அகற்றினால் அறநிலையச் சட்டம் முழுமை பெற்ற வடிவமாக இருக்கும் என்பதையெல்லாம் பரிசீலனை செய்து ஒரு அறிக்கையை சமர்ப்பித்தார். அந்த அறிக்கையையும் அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது.

அதற்குப் பிறகு அந்த அறிக்கையை தீவிரமாகப் பரிசீலனை செய்வதற்காக 1943 ஆம் ஆண்டு நீதிபதி வெங்கட்டரமண ராவ் அவர்களையும், ஆர். வி. கிருஷ்ண ஐயர் அவர்களையும், ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்களையும் கொண்ட மூவர் குழு ஒன்றினை அரசாங்கம் நியமித்தது. இந்த 3 பேர்களும் அறநிலையச் சட்டத்தில் செய்யப்பட்ட பல திருத்தங்களை ஆய்வு செய்தார்கள்.

அன்றைய சூழ்நிலைக்கேற்ப அப்போதுள்ள பல குறைபாடுகளை ஆராய்ந்து ஒவ்வொரு விதியாக பல மாற்றங்களை ஏற்படுத்தி தங்கள் அறிக்கையை 1946 ஆம் ஆண்டு அரசாங்கத்திற்கு சமர்ப்பித்தார்கள்.

ஆக, 1922 ஆம் ஆண்டிலிருந்து 1946 ஆம் ஆண்டு வரை செய்யப்பட்டுள்ள திருத்தங்களுடன் மாற்றப்பட்ட விதிமுறைகளுடன்தான் 1959 ஆம் ஆண்டு இந்த அறநிலையச் சட்டம் நிறைவேற்றப்பட்டது என்பதை நாம் முதலில் மனதில் கொள்ள வேண்டும்.

இந்த மாமன்றத்தை நான் சிந்திக்கச் சொல்வது, 1922 ஆம் ஆண்டு முதல் 1946 ஆம் ஆண்டு வரை அலசிப் பார்த்து பல திருத்தங்களை செய்து 1959 ஆம் ஆண்டு கொண்டு வந்த சட்டத்தை நாம் இன்றைக்கு ஏற்றுக்கொண்டிருக்கிறோம்.

1947 ஆம் ஆண்டு, இந்தியா சுதந்திரம் அடைந்தது. சமதர்ம சமுதாயத்தை அமைப்பதற்கு நமது தலைவர்கள் பாடுபட்டார்கள். புதிய அரசியல் சட்டத்தை உருவாக்குவதற்கு முற்பட்டார்கள். ஆகவே, புதிய அரசியல் சட்டத்தை உருவாக்கியதற்குப் பிறகு—1922 ஆம் ஆண்டு முதல் 1946 ஆம் ஆண்டு வரை சில குறைபாடுகளுடன் செய்யப்பட்ட திருத்த சட்டத்தை நாம் எந்த வகையில் பின்பற்ற முடியும் என்பதை முதலில் எண்ணிப் பார்க்க வேண்டும். அதற்குப் பிறகு நாம் ஆய்வு செய்தோமா என்றால் இல்லவே இல்லை.

இந்தச் சட்டத்தை ஆய்வு செய்த திரு. கிருஷ்ண ஐயர் அவர்களே, தன்னாலே ஆய்வு செய்யப்பட்ட சட்டம் திருத்தப்பட வேண்டும்—பல ஆண்டுகளுக்கு முன்னால் செய்யப்பட்ட சட்டம்—பல குறைபாடுகள் உடையது—ஆகவே மீண்டும் மறுபரிசீலனை செய்யப்பட்டு இச்சட்டம் குறைபாடுகளற்றதாக, முழுமையானதாகச் செய்யப்பட வேண்டுமென்று தம் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

நமது மரியாதைக்கு உரிய பேரவைத் தலைவரிடம் 29—3—75 அன்று திரு. ஆர். வி. கிருஷ்ண ஐயரின் அறிக்கை எனக்குக் கொடுக்கவேண்டும் என்ற ஒரு மனுவைக் கொடுத்தேன். இதுநாள்



வரை அந்த அறிக்கை எனக்குக் கிடைக்கவில்லை. அந்த அறிக்கை இருக்கிறதா, இல்லையா என்றே கூட தெரியவில்லை—பதில் கிடைக்கவில்லை என்பதை மெத்த வருத்தத்துடன் கூற விரும்புகிறேன். அந்த அறிக்கை எனக்குக் கிடைத்திருக்குமானால் இன்னும் பல குறைபாடுகளை இந்தச் சட்டத்தில் நான் எடுத்து வைத்திருக்க முடியும். அந்த அறிக்கையை எனக்குத் தராவிட்டாலும் பரவாயில்லை, இருக்கிறதா, இல்லையா என்ற பதிலைக் கூட அனுப்பவில்லை என்று எண்ணும்போது மெத்த வருத்தப்படுகிறேன். ஆகவே, குறைபாடு உடைய ஒரு சட்டத்தை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது என்றால் என்ன நியாயம் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அன்றைக்கு அறநிலையத் துறை அமைச்சராக இருந்த மரியாதைக்குரிய திரு. பக்தவத்சலம் அவர்கள் பேசும்போது கூறிய சில கருத்துக்களை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அதாவது 1959 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8 ஆம் தேதி இந்து அறநிலையச் சட்டத்தினை இந்த மாமன்றம் ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட நேரத்தில் பல உறுப்பினர்கள் பல கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். அப்போது பேசும்போது நிர்வாகத் துறையினரிடமிருந்து நீதி பிரிக்கப்பட வேண்டுமென்ற கருத்தினை பல எதிர்க்கட்சித் தலைவர்களும் உறுப்பினர்களும் இங்கே வலியுறுத்திப் பேசி இருக்கிறார்கள். அதை எல்லாம் நான் இங்கே சுட்டிக்காட்டுவது சாலப் பொருத்தமானதாக இருக்குமென்று நம்புகிறேன்.

1959 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8 ஆம் தேதி இந்த மசோதாவின் மீது பேசிய திரு. பக்தவத்சலம் என்ன சொன்னார்கள் என்றால்—

"மேலும் கனம் அங்கத்தினர் அவர்கள் கருதுவது போல இந்தச் சட்டம் இப்போது புதிதாகக் கொண்டுவரப்பட்ட சட்டம் அல்ல. 30 ஆண்டுகளுக்கு முன்பாகவே இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இந்த மாதிரியான ஸ்தாபனங்கள் எல்லாம் சரியான முறையில் நடைபெற வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அத்தோடு அவ்வப்போது ஏற்படுகின்ற அனுபவங்களை வைத்துக் கொண்டு, பல மாறுதல்கள் சட்டத்தில் செய்யப்பட்டது. கடைசியாக 1951 இல் திருத்த

மசோதாவைக் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டது. அப்போது தான் அரசாங்கத்தின்கீழ் இது தனி இலாகாவாக இயங்கி வந்தது. அதன் பின்னர் ஏற்பட்ட பல அனுபவங்களின் காரணமாக சட்டத்தில் பல மாறுதல்கள் செய்யப்பட்டு இந்த திருத்த மசோதா இப்போது சபைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது." என்றும், மேலும்,

"இந்த மன்றத்தில் நீண்ட காலமாக காரியதரிசியாக இருந்த திருவாளர் ஆர். வி. கிருஷ்ண ஐயரை ஸ்பெஷல் ஆபீசாகப் போட்டு இது சம்பந்தமாக ஆலோசனைகள் கேட்டோம். அவர், சட்டத்தை ஒவ்வொரு பிரிவாக நன்றாக பரிசீலித்து அறிக்கை சமர்ப்பித்தார். அந்த அறிக்கையில் இதை ஒரு தனி இலாகாவாக அமைப்பது தான் சரி; 1951-க்கு முன்பு இருந்த நிலைமை சரியானதல்ல என்று அவர் சொன்னார். மேலும், முன்பு ஒரு கமிட்டி கூட இது சம்பந்தமாக அமைக்கப்பட்டது. சென்னை உயர் நீதிமன்ற நீதிபதியாகவும் மைசூர் உயர் நீதிமன்றத்தில் பிரதம நீதிபதியாகவும் இருந்திருக்கும் திருவாளர் வெங்கட்டரமண ராவ் அவர்களை தலைவராகக் கொண்ட கமிட்டி அது. மேலும் சென்னை உயர் நீதிமன்றத்திற்கும் இது அனுப்பப்பட்டது. சென்னை உயர் நீதிமன்றத்தாரும் இது ஒரு இலாக்காவாக இருந்தால் நன்றாக நடக்கும் என்ற அபிப்பிராயத்தைத் தெரிவித்தார்கள். இந்த அபிப்பிராயத்தை எல்லாம் கேட்டு அதன்படிதான் 1951 இல் இது இலாகாவாக அமைக்கப்பட்டது. அந்த அபிப்பிராயங்களையும் உயர் நீதிமன்றத் தீர்ப்புகளையும் அனுசரித்துத் தான் இந்த மசோதா அமைக்கப்பட்டு இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது." என்று மரியாதைக்குரிய முன்னாள் முதல்வர் திரு. பக்தவத்சலம் அவர்கள் இந்த அவையில் இந்தச் சட்டம் எந்த வகையில் கொண்டு வரப்பட்டிருக்கிறது, எதற்காகக் கொண்டு வரப்பட்டது, ஏன் திருத்தங்கள் எல்லாம் அவ்வப்போது செய்யப்பட்டன என்ற ஒரு விளக்க உரையை இந்த மன்றத்தில் வைத்திருக்கிறார்கள்.

இந்த மன்றம் இப்போது எண்ணிப் பார்க்க வேண்டியது, முன்னாள் முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் எந்த ஆர். வி. கிருஷ்ண ஐயரின் ஆய்வு உரையைப் பின்பற்றித்தான் மூலச்சட்டம் இயற்றப்பட்டது என்று சொன்னார்களோ, அந்த ஆய்வு உரை எங்கே போயிற்று என்பதை இந்த மாமன்றம்



எண்ணிப் பார்க்கவேண்டும். அந்த ஆய்வு உரையைப் பாதுகாக்க முடியாத அளவுக்கு என்ன நிலைமை ஏற்பட்டது என்பதையும் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்பதற்காகத்தான் இதைக் கூறுகிறேனே தவிர, வேறு குறை சொல்ல வேண்டுமென்ற நோக்கத்தோடு அல்ல.

அடுத்து, திரு. வெங்கட்டரமண ராவ் தலைமையில் ஏற்படுத்தப்பட்ட மூவர் குழு என்ன சிபாரிசு செய்தது? அந்த அறிக்கை இப்போது எங்கே இருக்கிறது? என்பதை எல்லாம் மரியாதைக்குரிய பேரவைத் தலைவர் ஆராய்ந்து பார்த்து இந்த அவைக்கு அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன். அந்த அறிக்கை எனக்குக் கிடைத்திருக்குமேயானால் இன்னும் பல விவரங்களை இங்கே நான் எடுத்துரைப்பதற்கு ஒரு வாய்ப்பாக இருந்திருக்கும். ஆனால் அந்த வாய்ப்பை மரியாதைக்குரிய பேரவைத் தலைவர் அவர்கள் பெற்றுத் தரத் தவறி விட்டார்கள் என்று நான் குற்றஞ்சாட்ட விரும்பவில்லை— இருந்தாலும் அந்த அறிக்கை மிகவும் நமக்குத் தேவையானது— ஆகவே அதைத் தேடி எடுத்து இந்த அவைக்குத் தரவேண்டுமென்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். இந்த நேரத்தில் நான் இன்னொன்றையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது தேடி எடுத்துக் கொடுக்க வேண்டும் என்று கூறினார். யார் தேடித் தர வேண்டுமென்று கேட்கிறார் என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: பேரவைத் தலைவர் மூலம் இதை நான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: என்னைத்தான் தேடி எடுத்துத் தரவேண்டும் என்று கேட்கிறீர்களோ என்று நினைத்தேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: 1959 ஆம் ஆண்டில் இந்த மூலச் சட்டம் இயற்றப்படுகிற நேரத்தில் அன்றைக்கு எதிர்க்கட்சி வரிசையில் இருந்த உறுப்பினர்களும், எதிர்க்கட்சித் தலைவரும் நிர்வாகத் துறையிலிருந்து நீதியைப் பிரிக்க வேண்டும்,

நீதித்துறையில் அனுபவம் உள்ளவர்களை கமிஷனராகவும், டிபுடி கமிஷனராகவும் போடவேண்டும் என்பதாகப் பேசிய நேரத்தில் அப்போது முதலமைச்சராக இருந்த மரியாதைக்குரிய பக்தவத்சலம் அவர்கள் ஒரு கருத்தினை இங்கே சொல்லியிருக்கிறார்கள்.

1959-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8-ம் தேதி பக்தவத்சலம் கூறியிருக்கிறார்கள், "டெபுடி கமிஷனரைப் போடும்போது ஜுடிஷியல் ஓர்க், அட்மினிஸ்ட்ரேட்டிவ் ஓர்க் என்று தனித் தனியாகப் பிரித்து விட வேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். இந்தச் சட்டத்தின் அடிப்படை அதுவல்ல. நிர்வாகத்திலே நீதியும் சேர்ந்து அவரவர்களுக்கு கிடைக்க வேண்டிய உரிமையை நிர்ணயிப்பது முதலிய காரியங்களையும், அதோடு கூட நிர்வாகத்தையும் கவனித்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் இந்தச் சட்டத்தின் அடிப்படை, அப்படிச் செய்யத் தகுதியுள்ளவர்கள்தான் டெபுடி கமிஷனராக நியமிக்கப்படுகிறார்கள். அவர் நீதிபதியாக இல்லாமல் இருக்கலாம். இதையெல்லாம் பரிசீலித்துத் தீர்ப்புக் கொடுக்கத் தகுதியுடையவர்கள், ஆற்றல் உள்ளவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். இந்த மசோதாவில் கமிஷனராக இருப்பவர் நீதி இலாகாவைச் சேர்ந்தவராக இருக்க வேண்டுமென்று இருக்கிறது. டெபுடி கமிஷனர் நீதி இலாகாவைச் சேர்ந்தவராக இல்லாமல் இருப்பது சரியல்ல", என்று சொன்னார்கள்.

"இப்பொழுதே சில மாதங்களாக ஒரு டெபுடி கமிஷனர் சப்-ஜட்ஜ் கேடரில் இருந்து நியமிக்கப்பட்டிருக்கிறார். நீதி இலாகாவைச் சேர்ந்தவர் இப்பொழுது டிபுடி கமிஷனராக இருக்கிறார்" என்று கூறியிருக்கிறார்கள்.

எதிர்க்கட்சி உறுப்பினர்களும், எதிர்க்கட்சித் தலைவரும் 1959-ம் ஆண்டு நிர்வாகத்துறையிலிருந்து நீதியை எடுத்து விட வேண்டுமென்று வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள். அதற்கு திரு. பக்தவத்சலம் சொல்லியிருக்கிறார் "இப்போது இருக்கிற சட்டப்படியே நிர்வாகத்துறையிலே இருந்த சிலர் நீதிபதியாக சட்டம் படித்தவர்கள் நியமிக்கப்பட வாய்ப்பு இருக்கிறது. ஆகவே அதைப் பின்பற்றித்தான் இப்போது நாங்களும் நியமித்திருக்கிறோம்", என்ற கருத்தினை அன்றைய முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் எடுத்துச் சொன்னதை இப்போது சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்.





நாம் எண்ணிப் பார்க்க வேண்டியது காங்கிரஸ் அரசாங்கம் ஓரளவிற்கு அன்றையதினம் எதிர்க்கட்சி உறுப்பினர்களும், எதிர்க்கட்சித் தலைவரும் கருத்துக்களை ஏற்றுக் கொண்டு சப்-ஜட்ஜ் கேடரில் டிபுடி கமிஷனரையும் நீதித் துறையில் அனுபவம் பெற்றவரை கமிஷனராகவும் நியமித்து, இந்தத் துறையைச் செம்மைப்படுத்தி நீதியை நிலைநாட்டி வந்ததை நாம் பார்க்கிறோம்.

ஆனால் இந்த அரசாங்கம் பொறுப்பு ஏற்ற பிறகு கடந்த ஆண்டு ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்து என்ன செய்திருக்கிறார்கள் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். நம்முடைய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் 1974-ம் ஆண்டு ஒரு திருத்தத்தை இந்த அவையின் முன் கொண்டு வந்தார்கள். உள்ளபடியே அந்தத் திருத்தம் மெத்த வருத்தத்தை உண்டு பண்ணக் கூடியதாக இருந்தது என்பதை நான் இங்கே சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். அறநிலையத் துறையில் நெடு நாட்கள் அனுபவம் பெற்றவர்கள், சட்டப்படிப்பை படித்தவர்கள், நீதியைச் செலுத்துவதற்குத் தேவையான பயிற்சி பெற்றவர்கள் ஆகியவர்களைத்தான் கமிஷனராகவும், டிபுடி கமிஷனராகவும் நியமிக்க வேண்டுமென்ற ஒரு விதி முறை மூலச் சட்டத்திலே இருந்தது. ஆனால் இந்த அரசாங்கம் 1974-ம் ஆண்டு ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்து அதிலே, objects and Reasons-லே என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால்

'Where the post of the Commissioner is not held by a Member of the Madras State Higher Judicial Service or of the Madras State Judicial Service at least one of the posts of Deputy Commissioners shall be held by a member of the Madras State Judicial Service. This makes the appointment of a sub-judge as Deputy Commissioner compulsory when the post of the Commissioner is not held by a member of the Madras State Higher Judicial Service or of the Madras State Judicial Service. This provision affected the promotions of the Members of the Hindu Religious and Charitable Endowments Department to the post of

Deputy Commissioner which are only a few.' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். என்ன அர்த்தம்? அவர்களுடைய பிரமோஷன் பாதிக்கப்படுவதாகச் சிலர் சொல்லுகிற காரணத்தால், இப்படி அவர்களுடைய பிரமோஷன் பாதிக்கப்படுவதால் அந்தச் சட்டத்திற்கு திருத்தம் தேவைப்படுகிறது என்ற காரணத்தை இந்த அவையில் காட்டி ஒரு திருத்தச் சட்டத்தை மரியாதைக்குரிய அறநிலைய அமைச்சர் அவர்கள் கொண்டு வந்து இருப்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

மூலச் சட்டத்தில் நீதித் துறையில் அனுபவம் பெற்றவர்கள், சப்-ஜட்ஜ் கேடரில் உள்ளவரில் ஒருவர் டிபுடி கமிஷனராக இருக்க வேண்டுமென்றிருந்த விதி முறையை மாற்ற வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது? பிரமோஷன் தர வேண்டும் என்பதற்காகவா?

ஏற்கெனவே நிர்வாகத்துறையினரே நீதி செலுத்துகிற காரணத்தினால், அங்கே அரசாங்கத்தின் தலையீடு இருக்கிற காரணத்தால் நியாயமான தீர்ப்பை எதிர்பார்க்க முடியாமல் வழக்குகள் பல வருடங்களாக தள்ளிப்போடப்படுகின்றன. வழக்கு குறிப்பிட்ட காலத்தில் முடிவதில்லை. தனக்கு வேண்டியவர்கள்தான் நிர்வாக நீதிபதி என்ற நிலைமை இருந்து வருகிறது. ஆகவேதான், நீதித் துறையில் அனுபவம் உள்ளவர்கள், தகுதி வாய்ந்தவர்கள், பயிற்சி பெற்றவர்கள் நீதி செலுத்துவது நியாயம் என்ற நோக்கத்தோடு தான் இந்தச் சட்டத்தின் 9-வது ஷரத்து இருந்தது என்பதை நாம் மனதிலே வைத்துக் கொள்ள வேண்டும்.

ஆகவே, இந்த அரசாங்கம் பொறுப்பு ஏற்ற பிறகு இந்த அடிப்படை நோக்கத்தை மாற்ற வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது? யாரோ ஒரு சிலருக்கு பிரமோஷன் பாதிக்கப்படுகிறதென்றாலே அரசாங்கம் இந்த அளவிற்கு தன்னுடைய கொள்கையை வகுத்துக் கொண்டிருக்கிறதே என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். யாரோ சில அதிகாரிகள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதற்காகச் சட்டத்தைத் திருத்த வேண்டுமா? யாரோ சிலபேருக்கு பிரமோஷன் கிடைக்கவில்லை என்பதற்காக நியாயத்தை நிலைநாட்ட வேண்டிய இந்த அரசு நியாயத்தைப் புறக்கணித்து சில பேருக்கு சலுகை காட்டுவது உள்ளபடியே நேர்மைதானா என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.



ஆகவே, இந்தச் சட்டத் திருத்தம், 1974-ம் ஆண்டு கொண்டு வந்தது. தேவையற்றது, நியாயமற்றது, நீதித்துறையை அவமதிப்பதாகும் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மேலும் இந்தச் சட்டத்தின் ஒவ்வொரு பிரிவையும் இங்கே அலசிப் பார்த்து அதிலே இருக்கிற குறைபாட்டை நான் சுட்டிக் காட்டுவது மிக, மிக அவசியமானது. இந்த நாட்டுக்கும், எதிர்காலத்தில் இந்தச் சட்டத் திருத்தம் ஏன் தேவை என்பதைப் புரிந்து கொள்வதற்கு ஒரு வாய்ப்பாக அமையும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நம்முடைய பழைய சட்டத்திலே, 1959 ஆம் ஆண்டுச் சட்டத்திலே செக்ஷன் 9-லே என்ன சொல்லுகிறது என்பதை நாம் பார்க்க வேண்டும்.

'The Government shall appoint the Commissioner and such number of Deputy and Assistant Commissioners as they think fit.'

அதிலே ( C ) பிரிவில்—

'(c) Where the post of the Commissioner is not held by a member of the Madras State Higher Judicial Service, at least one of the posts of Deputy Commissioners shall be held by a member of the Madras State Judicial Service.'

இதற்குத்தான் 1974-ம் ஆண்டு இந்த அரசாங்கம் ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்து இருக்கிறது.

ஆகவே, இந்தத் திருத்தம் தேவையற்றது, திரும்பப் பெற வேண்டியது. நிர்வாகத் துறையிலும் நீதி செலுத்த வேண்டியவர்கள் கண்டிப்பாக நீதிபதிகளாக இருக்க வேண்டும். அப்படி யில்லை என்றால் நிர்வாகத்திலே இருந்து நீதியைப் பிரித்து விடுவது தான் நியாயம் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

(முற்பகல் 11.00)

அதே சட்டத்தில் 63-வது பகுதியில்

'Subject to rights of suit or appeal hereinafter provided, the Deputy Commissioner shall have power to inquire into and decide the following disputes and matters :

(*d*) whether any property or money is a specific endowment;

என்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. (மணி அடிக்கப் பட்டது).

நிறைய பாயின்ட்ஸ் இருக்கின்றன. இன்னும் ஒரு மணியாவது வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இப்போதே ½ மணிக்கு மேலாகிவிட்டது. இன்னும் பத்து நிமிடங்களில் முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்** : ப்ரைவேட் மெம்பர் பில் — இதில் சொல்ல வேண்டியவைகள் நிறைய இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : ப்ரைவேட் பில்களே நிறைய இருக்கின்றன. சீக்கிரம் முடித்து விடுங்கள்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்** : தலைவர் அவர்களே, 63-வது விதியில் 'Subject to the rights of suit or appeal' என்று பல உள்விதிகள் இருக்கின்றன.

இவற்றிலே என்ன என்ன விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றன என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

அறநிலையத்துறை ஒரு கோவிலை எடுக்க வேண்டுமென்றால் ஒரு நோட்டீஸ் அனுப்புகிறார்கள். அந்தக் கோவிலின் சொந்தக்காரர் 63-வது விதிப்படி மனு தாக்கல் செய்யவேண்டும். "கோவில் என்னுடைய அனுபவத்தில் இருந்து வருகிறது. இதில் இருந்து நானோ, என் குடும்பத்தினரோ எந்தவிதமான வருவாயையும் பெற வில்லை எங்களுக்கு சொந்தம்", என்று மனுதாக்கல் செய்ய வேண்டும்.



மனுவைப் பெற்றுக்கொண்டு அறநிலையத்துறை ஒரு அதிகாரியை அனுப்பி அந்த இடத்தைப் பார்வையிட்டு, அங்குள்ள பலரையும் விசாரித்து, இது தனியார் கோவிலா, பொதுக் கோவிலா என்பதற்கு தம்முடைய அறிக்கையை இவர் கொடுக்கிறார்.

தனியார் கொடுத்த மனு, அதன் பேரில் விசாரணை நடத்திய அறநிலையத்துறை அதிகாரி கொடுத்த பதில் — இரண்டையும் — அறநிலையத்துறை கமிஷனர் அல்லது டெபுடி கமிஷனர் உட்கார்ந்து நீதிபதியாக விசாரணை நடத்துகிறார். சாட்சிகளை அழைக்கிறார். வாதி கோவிலை நிர்வகித்து வருகிறவர். பிரதிவாதி அறநிலையத்துறை அதிகாரி. நீதிபதியாக அறநிலையத் துறையைச் சேர்ந்தவரே இருந்தால் எந்தவகையில் நியாயம் கிடைக்கும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். தன்னுடைய வழக்கை தானே நீதிபதியாக அமர்ந்து விசாரிப்பது என்பது எந்த வகையில் நியாயம் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். நம்முடைய சட்டத்தில், சிவில் ப்ரொஸிஜர் கோடில் பின்பற்றக் கூடிய முறை என்ன ?

சிவில் கோர்ட்டில் வாதி இருந்து, பிரதிவாதி இல்லையென்றால் எக்ஸ்பார்ட்டியாக தீர்ப்பு அளிக்கப்படுகிறது. அறநிலையத்துறை இந்த முறையைப் பின்பற்றலாம் இல்லையா ? பிரதிவாதி இல்லாத கேசுக்கு தானே வக்காலத்து வாங்கிக்கொண்டு, தானே நீதிபதியாக அமர்ந்து—ஐந்தாண்டு, ஏழாண்டு, பத்தாண்டு வழக்கை இழுத்துப்போவது என்ன நியாயம் ? வயதான காரணத்தினால் கமிஷன்போட்டு விசாரிக்க வேண்டுமென்று மனுக் கொடுத்தால் அதை அறநிலையத்துறை ஏற்றுக்கொள்வதில்லை. அந்த மனுவைத் தள்ளுபடி செய்து— அவர் எப்படிப்பட்டவராக இருந்தாலும், சாகும் தருவாயில் இருந்தாலும். நேரில் வந்துதான் ஆஜராக வேண்டும், சாட்சி சொல்ல வேண்டும் என்று தூண்டுகிறார்களே தவிர சட்டப்படி கமிஷன்போட்டு விசாரிப்பது கிடையாது. இது நியாயமா என்பதைச் சிந்திக்க வேண்டும்.

அதே விதிமுறையில் இன்னொன்றும் சொல்லப்பட்டிருக்கிறது. 'whether any property or money is a specific endowment' property, title and rights are important.'

வழக்கில் தனக்கு நியாயம் கிடைக்கவில்லையென்றால், சிவில் கோர்ட்டில் அப்பீல் செய்யலாம் என்றும் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, ஒரு வழக்கை இரண்டு வகையான நீதிமன்றத்தில் விசாரிக்கும் நிலைமையை உருவாக்கியிருக்கிறோம். ஒரு ரைட்டை நிர்ணயம் செய்யவேண்டுமென்றால் சிவில் கோர்ட்டுக்கே அந்த அதிகாரம் இருக்கவேண்டுமே தவிர நிர்வாகத்துறைக்கு இருப்பது நியாயம் இல்லை.

இன்று கூட சிவபுரம் சிலைவழக்கில் டைட்டில் யாருடையது என்பதை நிரூபிக்கவேண்டுமென்று இலண்டன் கோர்ட்டில் தீர்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு ப்ராப்பர்டிக்கு டைட்டிலும், ரைட்டும் முக்கியம் என்று சிவபுரம் சிலைபற்றி இலண்டன் கோர்ட்டில் தீர்ப்பு அளிக்கப்பட்டிருப்பதையும் கவனிக்க வேண்டும்.

இங்கே அறநிலையத்துறை அதிகாரிகளே நீதிபதியாக உட்கார்ந்து விசாரிப்பது என்றால் — தீர்ப்பு வழங்குவதில் அவர்களுக்கே பல வழக்குகளில் சாதகமாக ஏற்பட்டு விடுகிறது . . . . .

**திரு. கு. காமாட்சி:** மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது மேல் அப்பீல் சிவில் கோர்ட்டுக்கு செய்துகொள்ளலாம் என்று இருக்கிறது என்றார்கள். அப்போது நிர்வாகம் வேறு, நீதிவேறாகத் தானே வைக்கப்பட்டிருக்கிறது?

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** திரு. சௌந்தரபாண்டியன் சொன்னது அந்த இலாக்காவையே நிர்வாகம் வேறு, நீதிவேறாகப் பிரித்து இருப்பது கூடாது என்பதுதான்.

**திரு. கு. காமாட்சி:** எனக்குச் சட்டம் தெரியாது. அவரே தான் சிவில் கோர்ட்டுக்குப் போகலாம் என்று இருக்கிறது என்று சொன்னார். அதுதான் நீதி வேறாக இருக்கிறதே என்று கேட்டேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** நீதிபதியாக அந்தத் துறையில் இருந்து விசாரணை நடத்தக்கூடிய டி.ஸி., ஏ.ஸி.க்களை நீதித் துறையைச் சேர்ந்தவர்களையே போடவேண்டும், நிர்வாகத் துறையில் இருப்பவர்களை அந்தப் பதவிகளில் போடக்கூடாது என்பதுதான்.





**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** நான் சொல்லிவந்த அடிப்படை வாதத்தையே திரு. காமாட்சி புரிந்துகொள்ளவில்லை என்று கருதுகிறேன், என்னுடைய வாதம் எல்லாம் அறநிலையத்துறை நிர்வாகிகளையே நீதிசொல்லக் கூடிய நீதிபதிகளாகப் போடக்கூடாது என்பதுதான். நிர்வாகத்தில் இருந்து நீதி பிரிக்கப்பட வேண்டுமென்பது என்னுடைய அடிப்படை வாதம். ஒரு சொத்து யாருக்குச் சொந்தம் என்பதை தீர்மானிப்பது நிர்வாக அதிகாரியல்ல. சிவில்கோர்ட்டுதான் நிர்மானிக்கவேண்டும். அந்த அடிப்படை நியாயம் இதில் இல்லை என்பதுதான் என்னுடைய வாதம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** (மணியடித்து) ஒரே ஆர்க்யூமென்ட்டுதான். சுருக்கமாகச் சொல்லிவிட்டு போங்கள். இன்னும் 5 நிமிஷத்திலே முடித்துவிடுங்கள்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** பிரைவேட் மெம்பர் தினத்திலே யாவது அந்த மணிக்குக் கொஞ்சம் ஓய்வு கொடுத்தீர்களானால் . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுப்பிரமணியம் எனக்கு ஒன்றுமில்லை. கே. டி. கே. தன் பில் வரவேண்டுமென்று சொல்கிறார். மற்ற அங்கத்தினர்கள் தங்களுடைய பில்கள் வரவேண்டுமென்று சொல்கிறார்கள்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** நிவாரணச் சட்டத்தை நாம் 3 நாள் விவாதித்திருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 3 நாள் அல்ல, 30 நாள் கூட விவாதியுங்கள்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** நாம் இன்றொன்றையும் பார்க்க வேண்டும். இந்த 1959-வது ஆண்டு சட்டத்தில் 110 விதி முறையில் என்ன சொல்லப்பட்டிருக்கிறதென்றால்—

'(1) Where a Commissioner or a Deputy Commissioner makes an inquiry or hears an appeal under Chapter V or Chapter VI, the inquiry shall be made and the appeal shall be heard, as nearly as may be, in accordance with the procedure applicable

under the Code of Civil Procedure, 1908 (Central Act V of 1908) to the trial of suits or the hearing of appeals, as the case may be.'

'(2) The provisions of the Indian Evidence Act, 1872 (Central Act I of 1872), and the Indian Oaths Act, 1873 (Central Act X of 1873), shall apply to such inquiries and appeals. . . .

என்று இருக்கிறது.

அறநிலையத் துறையில் நீதி செலுத்துகின்றவர்கள் நிர்வாகத்திலே பயிற்சி பெற்றவர்கள். சிலர் வேண்டுமானால் சட்டம் படித்தவர்களாக இருக்கலாம். சட்டம் படித்தவர்கள் அத்தனை பேரும் நீதித் துறையில் அனுபவம் பெற்றவர்கள் அல்ல, நீதி செலுத்துவதிலே பயிற்சி பெற்றவர்கள் அல்ல. நிர்வாக அதிகாரிகளாக இருந்தவர்கள் அங்கே பதவி உயர்த்தப்பட்டு நீதி செலுத்த தகுதி பெற்றிருக்கிறார்கள். அதிலே பலபேர் இண்டியன் எவிடன்ஸ் ஆக்டைப் படித்திருக்கமாட்டார்கள். ப்ரொஸிஜர் கோடை படித்திருக்க மாட்டார்கள்; தெரிந்திருக்க மாட்டார்கள். கிரிமினல் ப்ரொஸிஜர் கோடில் என்னென்ன விதிமுறைகள் இருக்கின்றனவோ, அவை அத்தனையும் படித்தவர்கள், அனுபவம் பெற்றவர்கள், அலசிப் பார்த்தவர்கள் சிலபேர் தான் இருப்பார்களே தவிர, பலபேர்கள் அல்ல. ஆகவே, ஒரு சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்யவோ, அல்லது அந்தச் சாட்சி சொல்கின்றவற்றில், ஷரத்துக்களையும் டாக்குமெண்ட்டுகளையும் எவ்வப்பொழுது ஏற்றுக்கொள்ளலாம், அந்த டாக்குமெண்ட் உண்மையான டாக்குமெண்ட்டா என்பதை அலசி ஆராய்ந்து, அதை ஏற்றுக்கொள்வதற்கு போதிய அனுபவம் அவர்களுக்கிருக்கிறதாவென்றால் நிச்சயமாகச் சொல்வேன், இல்லவே இல்லை. இவையெல்லாம், அனுபவத்தில் வரவேண்டியவையே தவிர, திடீரென்று வந்து விடக்கூடியதல்ல.

ஆகவே, சட்டம் படித்தவர்கள் அத்தனைபேரும் நீதிபதிகளாகிவிட முடியாது. நீதி செலுத்துவதாலே அவர்கள் அந்தத் துறையிலே பயிற்சி பெற்றவர்களாகவோ அல்லது சட்டம் தெரிந்தவர்களாகவோ ஆகிவிட முடியாது. இந்தியன் எவிடன்ஸ் ஆக்டைப் பற்றி தெரியாதவர்கள், சிவில் ப்ரொஸிஜர் கோடைப் பற்றி தெரியாதவர்கள், அவற்றைப் படிக்காதவர்கள் இப்படிப்பட்ட சூழ்நிலையில் நீதி செலுத்துவது எந்தவிதத்தில் நியாயம்



என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். ஆகவே, இன்றிருக்கிற சட்டத்தில் பல கோளாறுகள் இருக்கின்றன என்பதை நாம் எண்ணிப்பார்த்து, இந்தச் சட்டத்திற்கு ஒரு திருத்தம் கொண்டு வருவது அல்லது மீண்டும் இந்தச் சட்டத்தை அலசி ஆராய்ந்து பார்த்து மறுபரிசீலனை செய்வது நியாயம் என்பதுதான் என்னுடைய வாதமாகும்.

இந்த நேரத்தில் நான் இன்னொரு ஆதாரத்தையும் இந்த மாமன்றத்திற்கு அளிக்க விரும்புகிறேன். அறநிலையத் துறையிலே இருக்கிறவர்கள் சிவில் சூட்டை மட்டும் நடத்துவதில்லை. இன்னும் கிரிமினல் சம்பந்தப்பட்டவைகளையும் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு உதாரணம் வேண்டுமென்றால் திருத்தணி சம்பந்தப்பட்ட ஒரு வழக்கினை இங்கே நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அந்த வழக்கைப் பற்றி இந்த மாமன்றத்தில் பல்வேறாகப் பேசப்பட்டதையும் அதிலே வாதங்கள் எதிர் வாதங்கள் இங்கே வைக்கப்பட்டதையும் அறநிலையத் துறையினர் வழக்குத் தொடர்ந்ததையும் அவர்கள் மேல் அப்பீல் செய்ததையும் அதையெல்லாம் எண்ணிப் பார்க்கிறபொழுது இந்தச் சட்டத்தில் எவ்வளவு குறைபாடு இருக்கிறது என்பதற்கு இதுவும் ஒரு ஆதாரம் என்பதை நாம் மனதிலே வைக்க வேண்டும்.

திருத்தணியில் ஒரு தாழ்த்தப்பட்டவர் அறங்காவலராக இருந்தார். அந்த அறங்காவலர் ஏதோ தவறு செய்தார் என்பதற்காக பதவியிலிருந்து நீக்கப்பட்டதை இந்த மாமன்றத்தில் விரிவாகப் பேசினோம். அப்பொழுது மதிப்பிற்குரிய உறுப்பினர் மணலி கந்தசாமி அவர்கள் 1973-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 10-ந் தேதி இங்கே பேசினார்கள். அதற்கு மாண்புமிகு முதலமைச்சரவர்களும், அறநிலையத் துறை அமைச்சர் அவர்களும் அளித்த பதிலை நடவடிக்கைக் குறிப்பில் பார்ப்போமானால் இந்தச் சட்டத்தை இந்த நிர்வாகத் துறையினர் எந்த அளவுக்குப் பின்பற்றி நியாயம் வழங்கியிருக்கிறார்கள் என்பதற்கு ஒரு சான்றாக அது அமையும் என்பதைத்தான் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அப்பொழுது மதிப்பிற்குரிய பெரியவர் மணலி அவர்கள் குறிப்பிட்டார் :

"**திரு. மணலி சி., கந்தசாமி:** அடுத்தபடியாக, ஆளும் கட்சிக்கு ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். சுதேசமித்திரன் தலையங்கம் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். முன்னாள் முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் ஒரு விஷயத்தைப் பற்றி எழுதியிருக்கிறார்கள். தயவுசெய்து படித்துப் பார்க்க வேண்டும். திருத்தணி தலத்தில் அங்கு இருக்கக்கூடிய கோயில் தர்மகர்த்தா நடந்து கொண்ட விதத்தைப்பற்றி பத்திரிகையில் முன்னாள் முதலமைச்சர் அவர்கள் எழுதி இருக்கிறார்கள்." தயவு செய்து படித்துப் பார்க்க வேண்டும். "திருத்தணி தலத்தில் அங்கு இருக்கக்கூடிய கோயில் தர்மகர்த்தா நடந்து கொண்ட விதத்தைப் பற்றி பத்திரிகையில் முன்னாள் முதலமைச்சர் அவர்கள் எழுதி இருக்கிறார்கள். அந்த ஸ்தலத்திற்குத் தரிசனம் செய்ய வந்திருந்த பெண்ணை அங்கிருக்கக்கூடிய தர்மகர்த்தா ஒருவர் கெஸ்ட் ஹவுசில் துன்புறுத்தியிருக்கிறார். கணவன் வந்து தடுத்திருக்கிறான். இதைப்பற்றி பக்தவத்சலம் அவர்களாலே எழுதப்பட்டிருக்கிறது"

என்று மதிப்பிற்குரிய மணலி அவர்கள் இங்கே அன்று குறிப்பிட்டார்.

அதற்கு முதலமைச்சரவர்கள், "அந்த அரிசனத் தோழர் செய்த தவறுதான் அது. விசாரிக்காமல் அந்தத் தோழர் மீது நடவடிக்கை எடுத்துவிட்டால், அரிசனத் தோழர் மீது அரசாங்கம் விசாரிக்காமலேயே கடுமையான நடவடிக்கை எடுத்துவிட்டது என்ற புகார்கூட வரும். விசாரித்து, உண்மை என்று ஆகிவிட்டால் நிச்சயமாக ஏற்ற நடவடிக்கை எடுக்கப்படும்" என்று சொல்லியது மட்டுமல்ல, பின்னாலே என்ன சொல்கிறார்கள்.

"தன்னைத் தற்காலிகமாக விலக்கி வைத்திருக்கிறார்கள் என்றும் மன்னிக்க வேண்டும்" என்றும் கூறினார். "இவ்வளவு பெரிய தவறைச் செய்த நீங்கள் என் முகத்தில்கூட விழிக்கக் கூடாது, வெளியே போய்விடுங்கள்' என்று சொன்னேன் நிச்சயமாக விசாரணை செய்தபிறகு நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறி அமைகிறேன்" என்று மதிப்பிற்குரிய இன்றைய முதலமைச்சரவர்கள் அன்று குறிப்பிட்டதை நாம் இணைத்துப் பார்க்க வேண்டும்.



அதற்குப் பிறகு 1974-ம் ஆண்டு இதே அவையில் நானும் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறேன்.

"... திருத்தணியைப் பொறுத்தவரையில் அங்கே தாழ்த்தப் பட்ட சமூகத்தைச் சார்ந்தவரை அறங்காவலராக நியமித்தது இந்த அரசு. ஆனால், அந்த அறங்காவலர் மீது தவறான குற்றச் சாட்டு சாட்டப்பட்டு, அதன்பேரில் பதவியில் இருந்து நீக்கப் பட்டதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். இதில் உண்மை என்னவென்பதை இந்தத் துறை பரிசீலிக்கத் தவறிவிட்டது. தற்போது தீர்ப்பு வழங்கும் நிலையில் வழக்கு இருந்து வருகிறது. ஆகவே, சர்க்கார் இந்தத் தவறுக்கு யார் காரணம் என்பதை முதலில் சிந்தித்துப் பார்த்து தவறு செய்கிறவர்களைத் தண்டிக்க வேண்டுமே தவிர தவறு செய்யாதவர்களைத் தண்டிப்பது பொருத்தம் ஆகாது"

என்று 1974-ம் ஆண்டு இதே அவையில் நானும் சுட்டிக்காட்டி யிருக்கிறேன்.

நாம் எண்ணிப் பார்க்கவேண்டியது இரண்டு கருத்து: ஒன்று, அறநிலையத் துறையில் தர்மகர்த்தாவாக இருந்த ஒரு தாழ்த்தப் பட்ட மகன் உள்ளபடியே தவறு செய்தானா என்பதை முதலிலே எண்ணிப் பார்க்க வேண்டும். 'இது வேண்டுமென்றே சொல்லப் படுவது. அறங்காவலர் என்னைத் துன்புறுத்தவில்லை', என்று அந்த அம்மையாரே வாக்குமூலத்தில் கூறியிருக்கிறார். இது ஒரு கிரிமினல் குற்றமாகும். கிரிமினல் குற்றமாக இருக்குமானால் முறைப்படி போலீசில் புகார் கொடுத்திருக்க வேண்டும். போலீசார் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருக்க வேண்டும். நீதிமன்றத்தில் எதிரி வக்கீல் வைத்து வாதாடி நீதியை நிலைநாட்ட உரிமை தந்திருக்க வேண்டும். ஆனால், இத்தனையையும் தராமல் நிர்வாகத் துறையே இந்த வழக்கை ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது ஒரு மணி நேரம் ஆகிவிட்டது. மற்ற பில்களெல்லாம் இருக்கிறதே. (குறுக்கீடு.) எந்த நாளாக இருந்தாலும் சுருக்கமாகச் சொல்ல வேண்டும். தனியார் அலுவல் நாள் என்றால் எவ்வளவு நேரம் வேண்டு மானாலும் பேசலாமா? மற்ற பில்கள் எல்லாம் இருக்கின்றன, உங்கள் பில் முக்கியம் என்று எப்படிக் கருதுகிறீர்களோ அதைப்

போலத்தான் மற்ற உறுப்பினர்களுக்கும் இருக்கும். ஒரு மணி நேரத்திற்கு மேலாகிவிட்டது. இன்னும் ஐந்து நிமிடங்களில் முடித்துவிடுங்கள்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்** : தலைவரவர்களே, தர்மகர்த்தா விவகாரத்தில் கிரிமினல் கோர்ட்டுக்குச் செல்லாமலே இந்த வழக்கு முடிக்கப்பட்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே, கிரிமினல் வழக்குகளின்மீதும் தீர்ப்புச் சொல்லும் அதிகாரத்தை இன்றையதினம் அறநிலையத் துறையினர் வைத்துக் கொண்டிருப்பது எந்தவிதத்தில் நியாயமாக இருக்கும்? இது கிரிமினல் கோர்ட்டுக்குச் சென்றிருந்தால் நியாயம் நிலை நாட்டப்பட்டிருக்கும்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்** : தலைவரவர்களே, பாதிக்கப் பட்டிருப்பதாக யார் கருதுகிறார்களோ அவர்கள் கிரிமினல் கோர்ட்டுக்குச் செல்ல அதற்குரிய உரிமையிருக்கிறது. தாராள மாகச் சென்றிருக்கலாம். அதை யாரும் தடை செய்யவில்லை, இந்தச் சட்டத்திலேயும் தடை செய்யவில்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்** : தலைவரவர்களே, கிரிமினல் குற்றவாளியைக் கண்டுபிடிக்க வேண்டியவர்கள் போலீசார், புகார் செய்ய வேண்டியவர்கள் பாதிக்கப்பட்டவர்கள். ஆனால். பாதிக்கப் பட்டவர்கள் போலீஸ் ஸ்டேஷனில் புகார் தரவில்லை, கோர்ட்டுக் கும் செல்லவில்லை. நிர்வாகத் துறையினரே வழக்கை எடுத்துக் கொண்டார்கள், இதுதான் என்னுடைய வாதம்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்** : தலைவரவர்களே, தவறு செய்தவர்கள்மீது நடவடிக்கை எடுத்தது தவறு என்று உறுப்பின ரவர்கள் கருதுகிறார்களா?

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்** : தலைவரவர்களே, என்னுடைய வாதம், தவறு செய்யாதவர்கள்மீது நடவடிக்கை எடுத்ததுதான் தவறு. அவர் தவறு செய்திருந்தால் . . .

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்** : யாரோ ஒரு பெண் சம்பந்தப்பட்டதாகச் சொல்கிறார்கள். அந்தத் தவறுக்காக மட்டும் நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. மற்றக் காரணங்களோடு இதுவும் ஒன்றாகத்தான் இருந்தது. அந்தப்



பெண் இல்லத்திலே தங்கியிருந்த நேரத்தில் முறைகேடாக நடந்து கொண்டார் என்ற அதுவும் ஒரு காரணமாக இருந்ததே தவிர, இந்தக் காரணத்திற்காகத்தான் விலக்கப்பட்டார் என்று சொல்ல முடியாது. ஆணையாளர் விலக்கியது தவறு என்றால் மேல் நீதிமன்றத்தில் அப்பீல் செய்ய வழி இருக்கிறது, அதைத் தடை செய்யவில்லை.

**திருமதி சத்தியவாணிமுத்து** : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தனித் தீர்மானம் வரவேற்கக் கூடியதுதான். ஆனால், இந்த திருத்தணி விவகாரத்தில் அறங்காவலர் தவறு செய்தார், குறிப்பாக ஒரு பெண்ணைக் கற்பழித்தார் என்பது குற்றச்சாட்டு. அவருடைய வாதமெல்லாம் விசாரிப்பவர்களே குற்றத்திற்கு ஆளாக்கப்பட்ட நிலையிருந்தால் யாரைத் தண்டிப்பது என்பதுதான். ஏ.சி.டி.ஓ., டி.சி.டி.ஓ., எக்சிகியூடிவ் ஆபீசர் குற்றம் செய்திருப்பார்களே யானால் அவர்களை யார் விசாரணை செய்வது? விசாரிப்பவர்களும் அவர்களாகவே இருந்தால் எப்படித் தீர்ப்பு கிடைக்கும்? கோர்ட்டுக்குப் போக வேண்டுமென்றால், சாதாரண அறங்காவலர் அல்லது ஒரு பியூன் எப்படி போவது? இப்படி எல்லா இலாக் காகளிலேயும் இருக்கிறது, கமர்ஷியல் டாக்ஸ் இலாக்காவிலேயும் இருக்கிறது, ரெவின்யூ இலாக்காவிலேயும் இருக்கிறது.

ஆகவே, சாதாரண பியூனோ அல்லது சிப்பந்தியோ இருக்கும் பொழுது அந்தக் குற்றத்திற்கு ஆளாக்கப்பட்டவர்கள் மற்ற அதிகாரிகளாக இருந்தால், அவர்களே விசாரணை செய்பவர்களாக இருந்தால் என்ன நியாயம் கிடைக்கும்? சாதாரண சிப்பந்தி . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இந்த விவாதத்திலே கலந்து கொண்டு பின்னால் பேசுங்கள். ஆனால், குறுக்கிட்டு இவ்வளவு கருத்துக்களைச் சொல்ல முடியாது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்** : தலைவரவர்களே, மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சரவர்கள் அந்தத் தர்மகர்த்தா இந்தத் தவறு செய்ததற்காக இல்லை, வேறு பல காரணங்கள் என்று சொன்னார்கள். நம்முடைய சட்டப்பேரவை நடவடிக்கைக் குறிப்பிலே, அவர் இந்தத் தவறு செய்ததன் காரணமாக நீக்கப் பட்டார் என்று தெளிவாக இருக்கிறது. மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சரவர்கள், மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இந்த

[திரு. பெ. சௌந்தரபாண்டியன்] [1975 நவம்பர் 8

அவையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆகவே, அவர் உண்மையிலேயே அந்தப் பெண்ணிடம் தகாத முறையில் நடந்திருந்தால் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த வாதம் இப்போது வேண்டியதில்லை. பில்லைப் பற்றிப் பேசுங்கள். (குறுக்கீடு.) ஆதாரத்தை மட்டும் சொல்லுங்கள், அது நடந்த நிகழ்ச்சி, என்னென்ன என்பதையெல்லாம் பற்றிச் சொல்ல வேண்டாம். வாதம் வேறு எங்கேயோ போகிறது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவரவர்களே, நீதி செலுத்துவதில் எங்கெங்கு தவறு இருக்கிறது என்பதற்கான ஆதாரத்தைச் சொல்கிறேனே தவிர . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்தக் கேஸைப்பற்றி மட்டுமே விளக்கிக்கொண்டிருந்தால் முடியாது. அதை 'கோட்' செய்யலாமே தவிர, அதையே டெவலப் செய்து கொண்டு போக வேண்டாமென்று சொல்கிறேன்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** நான் 'கோட்' பண்ணுவது மட்டுமல்ல, நிர்வாகத் துறையில் நீதி செலுத்துவதனால் எப்படித் தவறு செய்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுகிறேனே தவிர வேறு எதற்கும் அல்ல. உள்ளபடியே சொல்கிறேன், அந்த தர்மகர்த்தா மீது தவறு இருக்குமேயானால் பாதிக்கப்பட்டவர்கள் போலீசில் புகார் செய்திருக்க வேண்டும். கிரிமினல் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்திருக்க வேண்டும். அதுதான் நியாயம். ஆனால் அறநிலையத் துறை அதிகாரிகள் அந்த வழக்கை எடுத்துக்கொண்டு அதற்கு ஆதாரங்கள் தயார் செய்து, அவர்மீது குற்றஞ்சாட்டி, பழி சுமத்தி பதவியிலிருந்து நீக்குவது எந்தவிதத்திலே நியாயம் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். (மணியடிக்கப்பட்டது) பிரைவேட் மெம்பர் பில்லில்கூட அவசரப்படுத்தினால் என்ன செய்வது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரைவேட் மெம்பர் பில் என்றாலும்கூட இது ஒரு பில் மட்டுமல்ல, சௌந்தரபாண்டியன் கொடுத்த ஒரு பில் மட்டுமல்ல, மற்ற உறுப்பினர்கள் கொடுத்திருக்கின்ற பிரைவேட் மெம்பர் பில்களும் இருக்கின்றன. சௌந்தரபாண்டியன் பில்லை மட்டும் ஒருநாள் முழுவதும் எடுத்துக்கொள்ள முடியாது.



1975 நவம்பர் 8]

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** போன பில் மூன்று நாட்கள் நடந்திருக்கிறதே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்காக எல்லாவற்றிற்குமே மூன்று நாட்கள் என்று சொல்ல முடியாது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** ஒரு உறுப்பினருக்கு ஒரு மாதிரி, இன்னொரு உறுப்பினருக்கு ஒரு மாதிரி என்றால் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சுருக்கமாகத்தான் முடிக்க வேண்டும். 11-30 மணிக்கு முடித்து விடுங்கள்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** அது எப்படி முடியும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வழக்கைப்பற்றி நீதி மன்றத்திலே சொன்னாலும் நீதிபதிகளுக்கு எரிச்சல் வரும் அளவிற்கு, பொறுமையைச் சோதிக்கும் அளவிற்குச் சொன்னால் நீதியே கிடைக்காமல் கூட போகலாம்.

**திரு. எஸ். வடிவேல்:** தலைவரவர்களே, நான் ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். திருத்தணிக்கு வந்த ஒரு பெண்ணிடம் ஒரு அறங்காவலர் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது திருத்தணியைப் பற்றிய வாதம் அல்ல.

**திரு. எஸ். வடிவேல்:** திருத்தணியில் ஒரு பெண்ணிடம் அறங்காவலர் தவறாக நடந்து கொண்டார் என்றால் அது சம்பந்தமாகத் தீர்ப்பு அளிக்க வேண்டியது நிர்வாகத்திலேயா அல்லது நீதி இலாக்காவிலேயா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை 'கோட்' பண்ணுகின்ற அளவிலே இருக்கலாமே தவிர என்ன நடந்தது என்பதையெல்லாம் எடுத்துச் சொல்வது முறையல்ல.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவரவர்களே, நான் அந்த விவரங்களுக்குள் செல்லவில்லை. தீர்ப்பு வழங்கியதைத்தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, ஏதோ அரிசன அறங்காவலர் மீது இப்படிப்பட்ட தவறான தீர்ப்பு வழங்கப்பட்டுவிட்டது என்று சொல்லப்படுகிறது. நான் அந்தத் தீர்ப்புக்கு உள்ளே போகவில்லை, நடந்த விவகாரத்திற்குள்ளே செல்ல விரும்பவில்லை. மணலி அவர்கள் பேசுகின்ற நேரத்தில் முன்னாள் முதல்வர் பக்தவத்சலம் அவர்கள் குறிப்பிட்டு பத்திரிகையிலே அறிக்கை விட்டிருக்கிறார்கள், இப்படி அறங்காவலர் தவறாக நடந்து கொண்டிருக்கிறார் என்று, இதைக் கவனிக்க வேண்டுமென்று மணலி அவர்கள் குறிப்பிட்டார்கள். கவனிக்கப்படும் என்று சொன்னேன். அரிசன அறங்காவலர் பழி வாங்கப்பட்டார் என்று திசை மாற்றுவது நல்லதல்ல. அந்த அறங்காவலருக்குப் பதிலாக நியமிக்கப்பட்டிருக்கின்ற இன்னொரு அறங்காவலரும் அரிசன் தான். இன்னும் சொல்லப்போனால் தண்டிக்கப்பட்டவர் முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்தான், அவர்தான் தண்டிக்கப்பட்டார்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, அரிசன அறங்காவலரா என்ற வாதத்தை நான் எடுத்துக்கொள்ளவில்லை. இந்த அறங்காவலர் மீது நடவடிக்கை எடுத்தது சரியா என்பதுதான் என்னுடைய வாதம். நிர்வாகத்துறையினர் அதை ஏற்றுக்கொண்டு செய்தது நியாயமா என்பதுதான் என்னுடைய வாதமே தவிர, அரிசனா அல்லது பிற்பட்ட வகுப்பைச் சார்ந்தவரா என்பது என்னுடைய வாதம் அல்ல.

பேரவைத் தலைவரவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். நீதிபதியின் பொறுமையைச் சோதிக்கக் கூடாது, எவ்வளவு சுருக்கமாகச் சொல்ல வேண்டுமோ அவ்வளவு சுருக்கமாகச் சொன்னால்தான் நீதிபதி ஏற்றுக் கொள்வார் என்று கூறினார்கள். உள்ளபடியே சொல்கிறேன், நீதிமன்றமாக இருக்குமேயானால் நான் சுருக்கமாகத்தான் சொல்லியிருப்பேன். ஆனால் இது சட்டமன்றம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது நீதிமன்றத்தைவிட மேலானது. ஆகவே, இதிலே ரொம்பவும் சுருக்கமாகச் சொல்லப் பழகிக்கொள்ளவேண்டும்.



**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** இது சட்டமன்றம். எவ்வளவுதான் வாதிட்டாலும், எவ்வளவுதான் ஆதாரங்களைச் சொன்னாலும் . . . . (மணியடிக்கப்பட்டது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் பேசுவார்கள்.

THIRU K. M. SUBRAMANIAM : Hon. Speaker, Sir . . .

DR. H. V. HANDE : Sir, on a point of order. I just would like to know whether it would be in order for the Hon. Speaker to suddenly ask the hon. Member who is speaking, to resume his seat. The Chair could have given him a few minutes to complete his speach. If the Chair had given him one or two minutes, he would have wound up his speech. At least in to-day's meeting, let there be no heat generated in regard to the matter/ under discussion.

(முற்பகல் 11-30)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதிலே பாயிண்ட் ஆப் ஆர்டர் எதுவும் இல்லை. நேரம் குறிப்பிட பேரவைத் தலைவருக்கு உரிமை உண்டு. நான் பல முறை கூறிவிட்டேன். 11-15 மணியிலிருந்து அவர் 5 நிமிஷம், 5 நிமிஷம் என்று சொல்லிக் கொண்டே வருகிறார். ஒரே கருத்தைத் திருப்பித் திருப்பிச் சொல்லி வருகிறார்கள் என்பதை நீங்களே பார்த்தீர்கள்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** ஒரே கருத்தைச் சொல்லவில்லை. ஒரு கருத்துக்குப் பல ஆதாரங்களைச் சுட்டிக் காட்டினேன். நிர்வாகத் துறையிலே நீதித் துறையும் இணைந்திருப்பது எந்த விதத்திலும் நியாயம் இல்லை. இந்திய அரசியல் சட்டத்திலேயே தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆர்டிகிள் 50-ல் நிர்வாகத் துறையிலிருந்து நீதியைப் பிரித்து தனித்து இயங்குவதுதான் பொருத்தம் என்று கூறுகிறது.

வேறு எந்த நாட்டிலும் இல்லாத வழி முறை நம்முடைய தமிழகத்தில், குறிப்பாக அறநிலையத்துறையில் பின்பற்றப்பட்டு வருகிறது. அறநிலையத் துறையில் நிர்வாகிகளாக இருப்பவர்கள் நீதியையும் ஏற்றுச் செய்வதால் பல பொதுமக்களுக்கு நியாயம் கிடைக்கவில்லை, நீதி நிலைநாட்டப்படவில்லை. ஆகவே, இந்த நியாயமான மசோதாவை, ராஜாஜி அவர்கள் 1938-ஆம் ஆண்டு

முதலமைச்சராக இருந்த காலத்தில் எதிர்க்கட்சியிலிருந்து எம். சி. ராஜா அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை ஏற்றுக் கொண்டதுபோல் இந்த அரசாங்கம் மீண்டும் நன்கு சிந்தித்து ஆய்ந்து பார்த்து இந்த நியாயமான மசோதாவை அரசியல் சட்டத்திற்கு உட்பட்ட மசோதாவை ஏற்று நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த அளவோடு என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம். (ஆரவாரம்).

* THIRU K. M. SUBRAMANIAM: So far as this Bill is concerned, Sir, I have only two points. There is a proviso to Clause 2, which states—

"Provided further that no religious institutions shall be taken over for administration, if they are inside residential quarters fully occupied by the owners; and if no gift of any kind is collected from any outsiders".

This is the first point. I oppose it. When we went on tour while collecting evidence for the Land Ceiling Bill, we found this. In a house a photo of Lord Krishna was there and for that 30 acres were given as gift. It is also an endowment. I think it is totally wrong to say that such temples should not be taken over because there are many instances of misuse like that.

I am vitally interested in religion not because of 'santhanam' or 'vibuthi' but because I believe in heart that religious institutions should be run properly. There is also another thing which says "and if no gifts of any kind is collected from any outsider"; I would have welcomed it if outsiders and family members also are included. As such, I oppose it.

There is another point also. I had a lot to do with religious endowments while I was a heriditary trustee. Now I am not. There is first appeal. That is departmental appeal. Second appeal is Court appeal. I am not a lawyer. I do not know whether we can call both as judicial appeals. In the first appeal, we bring before authorities many grievances. I do not know whether it can be called judicial appeal, whether it is before judicial authority—I leave this question to lawyer members



As it stands, the proviso which says that if a temple is within a private compound, it should not be taken over by Endowment Board is absolutely wrong. What is wrong in the Board examining and taking it over? Power of examination should be there. With these words, I resume my seat.

* திருமதி த. ந. அனந்தநாயகி: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவைப் பற்றி விரிவாகவும், விளக்கமாகவும் இதைக் கொண்டு வந்த அங்கத்தினர் சட்டசபைக்கு எடுத்துச் சொன்னார். இன்னும் அதிலே சில கருத்துக்களை எடுத்துச் சொல்லி இந்த மசோதா எவ்வளவு அவசியம் என்பதை வலியுறுத்த ஆசைப் படுகிறேன்.

இந்த மசோதாவின் முக்கிய அம்சம் ரொம்ப வரவேற்கத் தக்கது. ஒரே அதிகாரி நீதித் துறையையும், நிர்வாகத் துறையையும் சேர்ந்து கவனிப்பது நல்லதல்ல என்பதுதான் முக்கியமான சாராம்சம். ஒருசில ஆண்டுகளுக்கு முன்னாலே நம்முடைய நிர்வாகத்திலே இருந்து நீதித் துறையையும் நிர்வாகத் துறையையும் பிரித்து விட வேண்டுமென்று எக்சிக்யூட்டிவ், ஜுடிஷியரி இரண்டையும் தனித் தனியாகப் பிரித்து வைத்திருக்கிறோம். இரண்டும் தனித் தனியாகப் பிரிந்திருந்தால் தான், நிர்வாகத்திலே இருப்பவர்கள் ஒருவித எண்ணத்தோடு நீதியைப் பரிமாறாமலும், நீதித் துறையிலே இருப்பவர்கள் நிர்வாகத்திலே சலுகை செய்து கொள்ள முடியும் என்ற எண்ணத்தோடு நீதியை அளிக்காமலும் இருக்க ஒரு சூழ்நிலை இருக்குமென்று கருதுகிறேன். இது ரொம்ப முக்கியமானது என்ற காரணத்தால்தான் ஜனநாயகத்தில் வரவேற்கத்தக்கது என்று எண்ணி நீதித் துறையையும், நிர்வாகத் துறையையும் பிரித்து வைத்திருக்கிறார்கள்.

இந்து அறநிலைய போர்டை எடுத்துக் கொள்வோமானால் அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக தமிழகத்திலுள்ள அறக் கட்டளைகள், ஆலயங்களை எல்லாம் தங்கள் நிர்வாகத்திற்குள் கொண்டு வந்து கொண்டிருக்கிறார்கள். நேற்றுக் கூடப் பார்த்தோம்—ஹெரிடிடரி டிரஸ்டியாக இருந்த இடத்தில் கூட 'நான்—ஹெரிடிடரி டிரஸ்டி'யைப் போடலாம் என்ற நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. ஜெயின் அறக்கட்டளையைக் கூட

இந்து அறநிலையத் துறையின்கீழ் கொண்டு வந்து விடலாம் என்ற நிலை வளர்ந்திருக்கிறது. வர வர இவர்களுடைய கரங்கள் விரிந்து கொண்டே வருவதைப் பார்க்கிறோம். சாதாரண பிள்ளையார் கோயில், முனியாண்டி கோயில் எல்லாம்கூட இதன் நிர்வாகத்தில் வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அந்த அளவுக்குச் சட்டத்தை விரித்துக் கொண்டே போகிறார்கள், திருத்திக் கொண்டே போகிறார்கள்.

உதாரணமாக, ஒரு கோயில் ஹெரிடிடரி டெம்பிளா அல்லது 'நான்-ஹெரிடிடரி டெம்பிளா' என்பதை விசாரிக்க அசிஸ்டண்ட் கமிஷனருக்கோ, டெபுடி கமிஷனருக்கோ, கமிஷனருக்கோ ரிவிஷன் அப்பீல் வருகிறது. இவர்களே நிர்வாக அதிகாரிகள், இவர்களே நீதித் துறையிலும் இருந்து கொண்டு விசாரிப்பது என்றால் அது முறையல்ல என்பதோடு காலதாமதமும் ஏற்படுகிறது. கமிஷனர் முன்னால் ரிவிஷன் அப்பீல் எடுத்துக் கொள்ள வேண்டிய நாளில் அவர் ஏதாவது கோயிலுக்குப் போயிருப்பார்; கோயில் விழாவுக்குப் போயிருப்பார். திருவிழாக்கள் நடந்து கொண்டிருக்கும் இடங்களில் கமிஷனர் போய்ப் பார்க்க வேண்டியிருக்கும்.

இப்படி வருஷத்தில் 365 நாட்களில் அவர்கள் நிர்வாக வேலைகளைக் கவனிக்கவே நேரம் இல்லாதிருக்கும்போது அவர் ஜட்ஜாக உட்கார்ந்து வழக்குகளை விசாரிப்பது கஷ்டமாக இருக்கிறது. இதனால் அந்த வழக்குகள் அடிக்கடி ஒத்திப் போடப்பட்டு வருகின்றன. எச். ஆர். அண்டு சி. இ. ட்ரிப்யூனல் என்றாலே இரண்டு மூன்று ஆண்டுகள் ஆகாமல் முடிப்பது கிடையாது. வக்கீல்களைக் கேட்டால் தெரியும்: அவர்கள் போய்ப் போய் வந்து கொண்டிருக்க வேண்டும். அந்த அதிகாரி எப்போதும் கோயில், திருவிழா என்றுதான் போய்க் கொண்டிருக்கிறார். இதனால் எந்த அளவுக்கு நீதி பாதிக்கப் பட்டிருக்கிறது என்று பார்க்க வேண்டும்.

இதற்கு ஆதாரமாக திருத்தணி சம்பவத்தைச் சொன்னார். ஒருவர் அறங்காவலராக இருக்க தகுதி இருக்கிறதா இல்லையா என்று நிர்ணயிக்கக்கூடிய அதிகாரம் சாதாரண அதிகாரியிடம் இருப்பது சரியல்ல. அவர் தவறு செய்தாரா, இல்லையா என்பதை நல்ல முறையில் ஆராய்ந்து பார்க்காமல் திடீரென்று நீக்கி



விட்டார்கள். இதுவே ஒரு ட்ரிப்யூனல் மூலமாக ஒரு நீதிபதியைத் தனியாகப் போட்டு அந்த டிரஸ்டி தகுதியுள்ளவரா, இல்லையா, நீக்க வேண்டுமா என்று பார்த்தால் நல்ல முறையில் இருந்திருக்கும். இப்போது திடீரென்று டிஸ்குவாலிபிகேஷன் வந்து விட்டது. நீதிபதியைப் போட்டு விசாரித்தால் அவசர முடிவுகளுக்கு அவசியம் கிடையாது. இன்றைக்கு என்ன நிலை? 'விருப்பப்பட்டால் தர்மகர்த்தா; விருப்பம் இல்லை என்றால் வீட்டுக்குப் போ' நேற்று ஒரு திருத்தம்—

They can dissolve any Trust Board.

இனிமேல் நோட்டீஸ் கூடக் கொடுக்காமல் ஒரு தர்மகர்த்தா குழுவை கலைத்துவிடும் அதிகாரத்தை இன்று அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கிறது. இவ்வளவு பெரிய அதிகாரங்களை வைத்திருப்பவர்கள் சட்டத்தில் பல தகுதிகளைப் போட்டிருக்கிறார்கள். அந்தத் தகுதிகள் எல்லாம் முழுக்க முழுக்க புறக்கணிக்கப்படுகின்றன. இவ்வளவு பெரிய ஒரு பொறுப்பிற்கு ஒரு நீதிபதியைப் போட்டால் என்ன? மோட்டார் வெகிக்கிள்ஸ்க்காக என்று ஒரு ட்ரிப்யூனல் இருக்கிறது. சேல்ஸ் டாக்ஸுக்கு ஒரு சேல்ஸ் டாக்ஸ் ட்ரிப்யூனல் இருக்கிறது. லேபர் கேஸ்களுக்கு லேபர் ட்ரிப்யூனல் இருக்கிறது. அதேமாதிரி இருபதாயிரம், முப்பதாயிரம் கோவில்கள் உங்களுடைய நிர்வாகத்தின் கீழ் வரப்போகின்றன. அப்படியிருக்க ஏன் எச்.ஆர்.அண்ட் ஸி.இ. க்கு ஒரு ட்ரிப்யூனல் போடக்கூடாது? அதை ஏன் இந்தச் சர்க்கார் செய்யக் கூடாது? தர்மகர்த்தாக்கள் பதவிக்கு ஒரு 300 பேர்கள் அப்ளிகேஷன்ஸ் போடுகிறார்கள் என்றால் உங்களுக்கு வேண்டிய மூன்று பேர்களைப் போடுகிறீர்கள். எதைவைத்து தகுதிபடைத்தவர்கள் என்று நிர்ணயிக்கிறீர்கள்? இப்போது ஏ.ஸி., டி.ஸி. இவர்கள் எல்லாம் உங்கள் நிர்வாகத்தின்கீழ் இருக்கிறார்கள். அது உங்கள் கீழ் உள்ள ஒரு இலாகாவாக இருப்பதால் நியாயத்தை எப்படி எதிர்பார்க்கமுடியும்? ஆனால், அதே நேரத்தில் ஒரு நீதிபதியைப் போட்டால், இந்த இலாகாவில் அவர்கள் வேலை செய்யாமல் இருப்பதால் யாருக்கு தகுதி இருக்கிறது, யார் தேர்ந்தெடுக்கப் படவேண்டும், யார் தேர்ந்தெடுக்கப் படக்கூடாது என்ற முறையில் நீதி வழங்க நல்ல வாய்ப்பிருக்கிறது. அறநிலையங்கள் ஆலயங்கள் இன்று எடுத்துக் கொள்கிறார்கள். ஆலயங்களின் சொத்துக்கள் சரியானமுறையில்

பராமரிக்கப்படாமல் இருக்கின்றன. ஆலயத்திற்குச் சொந்தமான சொத்துக்களை எல்லாம் ஆங்காங்கு அவரவர்கள் விருப்பப்படி, இன்று துஷ்பிரயோகம் செய்துவருவதைப் பார்க்கிறோம். ஆலயங்களைச் சேர்ந்த எந்த வழக்காக இருந்தாலும் ஒரு நீதிபதியைப் போட்டு ஒரு ட்ரிப்யூனலைப் போட்டு— not less than the rank of a District Judge—
மாவட்டங்களில் பிரச்னைகள் வரும்போது அவற்றை அங்குள்ள சாதாரண சிவில் கோர்ட்ஸ்க்கு விட்டுவிடலாமா, அதற்கு மேல் அப்பீல் ட்ரிப்யூனலுக்கு வரலாமா என்பதை ஆய்வு செய்து நிர்வாகத்தையும் நீதிபதியையும் தனியாகப் பிரிப்பது சாலச்சிறந்தது. இதற்கு முன்னால் கமிஷனர் அல்லது டெப்டி கமிஷனருக்கு One of them must have legal background— அவர்களில் ஒருவராவது சட்டப் படிப்பை, சட்ட அனுபவத்தைப் பெற்றவராக இருக்கவேண்டும் என்று முதலிலே 1959-ல் இந்த அறநிலையப் பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டுவந்தபோது, யாராவது ஒருவருக்காவது சட்ட அனுபவம் இருக்கவேண்டும் என்று போட்டோம். அதை இவர்கள் வசதிக்காக ஒரு இடத்தில் திருத்திக் கொண்டார்கள், அதுவும் தேவை இல்லை என்று. ஆகவே, நிர்வாகத்தைத் தனியாகப் பிரித்துவிடுங்கள். ஏ.ஸி. டி.ஸி. கமிஷனர் என்று ப்ரமோஷன் தன்னால் வந்துகொண்டேயிருக்கட்டும். நீதித்துறையைச் சார்ந்த ஒருவரை ட்ரிப்யூனலாகப் போட்டு அவர்கள் மூலம் அறநிலையங்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரிக்கவேண்டும் என்ற ஒரு நிலை ஏற்பட்டால் காலதாமதமும் ஏற்படாது, நீதியும் கிடைக்கும். யாருக்கு தகுதி இருக்கிறது, யாருக்கு தகுதி இல்லை என்று விசாரித்து முடிவு எடுக்க அப்போது வாய்ப்பாக இருக்கும். ஆக, இந்த மசோதாவை நான் முழுக்க முழுக்க வரவேற்று இதன் சாராம்சத்தைப் புரிந்துகொண்டு ஒரு ட்ரிப்யூனலை ஏற்படுத்த முன்வருவார்கள் என்று நினைத்து முடித்துக்கொள்கிறேன்.

**திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த மசோதாவை ஆதரித்து நான் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.



இந்த மசோதாவின் அடிப்படைக் கொள்கை எல்லோராலும் வரவேற்கப்படவேண்டிய ஒன்றாகும். நீதியும் நிர்வாகமும் ஒரே யிடத்தில் இருக்குமானால் மக்களுக்கு நீதி கிடைக்காது என்ற ஒரு அடிப்படையில்தான் இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அரசியலமைப்புச் சட்டத்தில் டயரக்டிவ் ப்ரின்ஸிபிள்ஸில் ஒன்றாக 50-வது பிரிவில் நீதியும் நிர்வாகமும் பிரிக்கப்பட வேண்டும் என்பதைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.
'The State shall take steps to separate Judiciary from the Executive in the public services of the State'
என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, அரசியல் சட்டத்திலேயே டயரக்டிவ் ப்ரின்ஸிபிள்ஸில் வருகிற காரணத்தால் எல்லோரும் ஒத்துக்கொள்ளக்கூடிய நல்லதொரு கருத்தாக இருக்கிற காரணத்தால் இந்த மசோதாவின் அடிப்படைக் கொள்கையை எல்லோரும் வரவேற்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி நாம் நீதியையும் நிர்வாகத்தையும் பிரிக்காமல் போவோமேயானால் அதனால் ஏற்படக்கூடிய தீங்குகளைப் பற்றியும் அதற்குக் கீழே ஒரு விளக்கம் தந்திருக்கிறார்கள்.

'The general principle involves two consequences, first that a judge or magistrate who tries a case must not be in any manner connected with the prosecution or interested in the prosecution. Second, that he must not be in direct administrative subordination to any one connected with the prosecution (or indeed the offence).
என்று ஒரு விளக்கம் தந்திருக்கிறார்கள்.
ஆகவே, நீதி வழங்க இருக்கிற ஒரு நபர் நிர்வாகத்தில் சம்பந்தமுடையவர்களாக இருப்பார்களேயானால் நிச்சயமாக மக்களுக்கு நீதி கிடைக்காது என்ற அளவிற்கு இதில் வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள். அந்தக் கருத்தை தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொண்டதா இல்லையா என்று கேட்போமானால் தமிழக அரசு பல்லாண்டுக்காலமாக ஏற்றுக்கொண்டிருக்கிறது என்ற அந்த அடிப்படையில்தான் மாஜிஸ்ட்ரேட் பவர்ஸை கலெக்டர் அவர்களிடமிருந்து தனியாகப் பிரித்து இன்று நீதிமன்றங்களை உருவாக்கியிருக்கிறார்கள். ஆனால் இந்தக் கொள்கையை பல்வேறு துறைகளுக்கும் கொண்டு செல்ல வேண்டும் என்ற அடிப்படையில்தான் இன்றைக்கு இந்த மன்றத்திற்கு முன்னால் வந்திருக்கிற மசோதா இருக்கிறது. நீதி நிர்வாகப் பிரிவினையை ஆராய்ந்த சட்டத் துறை நிபுணர்களும் இந்தக் கருத்துக்களை வலியுறுத்தியிருக்கிறார்கள்.

Steps have been taken to separate Judiciary from the Executive but measures have not been taken to its logical conclusion. என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இந்த நீதி நிர்வாகப் பிரிவினையை மற்ற துறைகளுக்கும் கொண்டு செல்லவேண்டும், மற்றத் துறைகளும் இதைப் பின்பற்ற வேண்டும் என்ற கருத்தை சட்ட நிபுணர்கள் வலியுறுத்திக் கூறி யிருக்கிறார்கள். அந்த அடிப்படையில்தான் திரு. சௌந்தர பாண்டியன் அவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்த மசோதா அமைந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு இந்து அறநிலையத்துறை இதை எற்றுக்கொள்ள வில்லை என்று என்றால் சொல்லமுடியாது. காரணம், இன்று அறநிலையத் துறையில், கோவையில் பார்க்கிறபோது வழக்குகளை விசாரிக்க டெப்டி கமிஷனர் பார் அட்மினிஸ்ட்ரேஷன் என்று ஒருவர் இருக்கிறார். வேறு சில வழக்குகளை விசாரிக்க டெப்டி கமிஷனர் (ஜுடிஷியல்) என்று ஒருவர் போடப்பட்டிருக்கிறார். ஆக, அந்தக் கொள்கையை இந்தத் துறை ஒத்துக்கொள்ளவில்லையா என்றால் ஒத்துக்கொண்டிருக்கிறது. ஓரளவிற்கு நடைமுறைப் படுத்திக் கொண்டும் இருக்கிறது. ஆக, முழுமையாக அது செயல்படவேண்டும் என்ற கோரிக்கையாகத்தான் இந்த மசோதா இருக்கிறது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நான் ஒரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன்.

கோவை மாவட்டத்தில் நம்பியூரில் சோளீஸ்வரர் தேவஸ் தானம் என்ற ஒரு தேவஸ்தானம் இருக்கிறது. அதற்கு தர்ம கர்த்தாக்களைப் போடவேண்டிய ஒரு நிலை ஏற்பட்டது. அந்தப் பகுதியில் உள்ள ஒரு தி.மு.க. பிரமுகரின் சிபாரிசின்பேரில் ஐந்து பேர்களைப் போட்டார்கள். அதனால் பாதிக்கப்பட்ட ஒருவர் என்னிடம் வந்தார். நான் அது சம்பந்தமாக வழக்கு ஒன்றை டெப்டி கமிஷனர் முன்பு போட்டேன். என் குறை எல்லாம் அந்த ஐந்து பேர்களில் ஒருவர் ஹரிஜனாக இருக்கவேண்டும் என்று சர்க்காரின் விதி ஒன்று இருக்கிறது. ஆனால் அந்த விதிப்படி டெப்டி கமிஷனர் போடவில்லை. அதோடு கூட பகுத்தறிவுக் கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கிற திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை இந்து மதத்தில் நம்பிக்கை கொண்டிருப் பவர்கள் மட்டும் நியமிக்கப்படக்கூடிய பதவிகளில் எப்படி நிய மிக்கலாம் என்ற இரண்டு அடிப்படையில் வழக்கு தொடர்ந்திருந்



தேன். நான் எம்.எல்.ஏ. ஆக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு ஆண்டு காலம் வரை அந்த வழக்கு விசாரிக்கப்படவில்லை. எனக்குத் தெரியும், அது விசாரிக்கப்படமாட்டாது. மூன்று ஆண்டு களுக்குப் பின்னால் அந்த ஐந்து பேர்களும் பதவியை விட்டுச் செல்கிறார்கள் என்று காரணம் கூறி அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படும்.

ஆகவே, நல்லமுறையில் ஆராய்ந்து தீர்ப்புகள் வழங்குவதற்கும், இந்தத் துறையில் ஏற்படக்கூடிய தவறுகளைச் சுட்டிக்காட்டி திருத்திக்கொள்ளும் வாய்ப்பும் நீதி நிர்வாகம் இவை பிரிக்கப்படு வதன் மூலம் நமக்குக் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

ஆகவே, இத்தகைய காரணங்களுக்காக திரு. சௌந்தர பாண்டியன் அவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்த மசோதாவை நான் மனப்பூர்வமாக ஆதரித்து அமர்கிறேன். அதுமட்டுமல்ல. ஜனநாயகத்தைக் காப்போம் என்று சூளுரை எடுத்துக்கொண் டுள்ள ஆளும் கட்சியினரைப் பார்த்து ஜனநாயக உரிமைகளைக் காப்போம், வாரீர் என்று சொல்லி இந்த மசோதாவை எல்லோரும் ஆதரிக்கவேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** தலைவர் அவர்களே, அருமை நண்பர் சௌந்தரபாண்டியன் அவர்கள் இந்த மன்றத்தில் கொண்டு வந்துள்ள இந்த மசோதாவை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் நான் பேச விரும்புகிறேன்.

இந்த மசோதாவை அந்தப் பகுதியில் இருக்கிறவர்கள் மகி யோடு ஆதரிப்பார்கள் என்றுதான் நான் எதிர்பார்த்தேன். காரணம், இந்த மசோதா எந்தச் சிக்கலும் இல்லாத ஒரு மசோதா. இதற்கு முன்னே வந்த கடன் பற்றிய மசோதாவாவது பணப் பொறுப்புகளை அரசாங்கத்திற்கு ஏற்படுத்துகிற மசோதா. கொள்கை அளவில் அதை அரசு ஆதரிக்கவேண்டும். ஆனால் பணப்பொறுப்புகளை வழங்குகிற மசோதா என்ற காரணத்தால் ஒருவேளை அதை ஆதரிக்க மறுத்திருக்கக்கூடும். ஆனால் இந்த மசோதா அப்படிப்பட்ட பொறுப்புகள் எதையும் அவர்களுக்குத் தரவில்லை.

அதுமட்டுமல்லாமல், ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்திருக்கிற அரசாங்கம், சொல்லப்போனால் நாட்டில் எல்லாம் ஜனநாயகம் அழிந்துவிட்டது என்றும் தமிழ்நாட்டில் நாங்கள் மட்டும்தான்

ஜனநாயகத்தின் காவலர்களாக இருக்கிறோம் என்ற தோரணையில் இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரில் கூட அமைச்சர்கள் பலர் இங்கே அடிக்கடி பேசியதை நாம் எல்லோரும் கேட்டோம். அப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் நான் எதிர்பார்த்தேன். அந்த ஜனநாயக கருத்தின் அடிப்படையில் உள்ள கோட்பாடானது, நீதி நிர்வாகத்தைப் பிரித்து வைக்கவேண்டும். ஆகவே, அந்தக் கருத்தை வலியுறுத்தும் வகையில் உள்ள இந்த மசோதாவை ஆளும் கட்சியில் இருக்கிறவர்கள் ஆதரித்துத் தீருவார்கள், எதிர்க்க மாட்டார்கள், இந்த சட்டமன்றத்திலே ஒரு தனி வரலாறு உண்டுபண்ணுவது போல், எதிர்க்கட்சியினர் கொண்டு வந்த மசோதாவை ஆளும் கட்சியினர் ஆதரித்து, இரண்டு பேரும் சேர்ந்து ஒரு மனதாக நிறைவேற்றினார்கள் என்ற புதிய வரலாற்றினை இந்த மன்றத்தில் ஏற்படுத்துவார்கள் என்று எதிர்பார்த்தேன்.

ஆளும் கட்சியினர் கொண்டு வந்த பல மசோதாக்களை நாங்கள் ஆதரித்து இருக்கிறோம், ஒரு மனதாக நிறைவேற்றித் தந்து இருக்கிறோம். அதே போன்று இந்த நல்ல மசோதாவை எதிர்க் கட்சியினர் கொண்டு வந்தார்கள், அந்த மசோதாவின் கருத்து, உட்கருத்து நல்ல கருத்து, என்று எண்ணி ஆதரிப்பார்கள் என்று எதிர்பார்த்தேன். அமைச்சர் அவர்கள் இடையிலே குறுக்கிட்டுப் பேசியதால் ஐயப்பாடு வந்தது. இருந்தாலும் நான் முழு நம்பிக்கையை இழந்து விடவில்லை. இந்த மசோதாவை அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது, நான் அதை ஏற்றுக் கொள்கிறேன் என்று சொல்வார்கள் என்று இன்னும் நம்பிக் கொண்டு இருக்கிறேன்.

இதிலே இருப்பது எல்லாம் என்டோமெண்ட் போர்டில் இருக்கக்கூடிய கமிஷனர், டெபுடி கமிஷனர் ஆகியவர்களிடத்தில் நீதி வழங்குகின்ற அதிகாரம் இருக்கக்கூடாது, அதற்குத் தனியாக அமைப்பு வேண்டும் என்பதுதான். காரணம், அதிலே பல பல கோவில்களில் உள்ள பல்வேறு நபர்களைக் குறித்து வழக்கு வருகிற அமைப்பாக இருக்கிறது. அப்படி இருக்கும்போது அது பற்றிய வழக்கு வருகிறபோது, நண்பர் சௌந்தரபாண்டியன் அவர்கள் சுட்டிக் காட்டியதுபோல், பிரதிவாதி, நீதிபதி, வழக்கறிஞர், எல்லாம் ஒருவராக, ஒரே அமைப்பாக இருக்குமானால் நீதி கிடைக்காது.





அதற்குப் பல சான்றுகளைச் சொல்ல முடியும். இங்கேயுள்ள ஒவ்வொரு ஆளும்கட்சி உறுப்பினர்களும் தங்களைப் பகுத்தறிவு வாதிகள் என்று சொல்லிக்கொள்கிறார்கள். அவர்களுக்கு கடவுளிடம் நம்பிக்கை இல்லை. (குறுக்கீடு) 'ஒன்றே கடவுள்' என்று சொல்லுகிறார்களா—சரி, ஒரு கடவுளிடத்தில் நம்பிக்கை இருக்கிறது. பகுத்தறிவுவாதியாக இருக்கும் ஒருவரை அங்கே டிரஸ்டியாகப் போட்டால் உடனே பக்தராக மாறி விடுவாரா என்பது தெரியவில்லை. தர்மகர்த்தாக்களாக யாரைப் போடுகிறீர்கள்? . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது எப்படி இந்த பில்லில் வரும்? இந்த பில் பற்றி மட்டும் பேசுங்கள்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** வருகிறது. கோவிலுக்குப் போகாதவர்களை, சாமி இல்லை என்று சொல்லிக்கொண்டு இருக்கிறவர்களை தர்மகர்த்தாக்களாகப் போடுகிறீர்கள். (குறுக்கீடு) நான் நாத்திகவாதிதான். கோவிலில், சாமியில் நம்பிக்கை இல்லாதவர்கள், அவர்களை தர்மகர்த்தாக்களாகப் போடுவது எப்படி பொருந்திவரும் என்று எனக்குப் புரியவில்லை. எந்தக்கோவிலும், எந்த ஒரு மன்றத்திலும் இந்த நாட்டிலே இருக்கின்ற எந்த ஒரு அமைப்பிலும் அத்தனையிலும் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களால், ஆளும் கட்சியினரால்தான் ஆளப்படவேண்டும் என்ற நோக்கத்தைத் தவிர, இதிலே வேறு நோக்கம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

இப்படிப் போடுவதால் அதிலே பல கோளாறுகள் ஏற்படுகின்றன. நான் அவற்றையெல்லாம் சொல்ல விரும்பவில்லை. அப்படிச் சொல்ல ஆரம்பித்தால், யார், ஏன், எப்படி என்று எல்லாம் வரும். ஆகவே, இப்படி நேரும்போது அது பற்றிய வழக்குகள் வருகின்றன.

நண்பர் அரங்கநாயகம் ஒன்றை அழகாகச் சொன்னார்கள். அவர் வழக்கறிஞர் என்ற முறையில் கொடுத்த வழக்கு ஓராண்டு காலம் ஆகியும் இன்னும் விசாரணைக்கு வரவில்லை என்று சொன்னார்கள். அது அப்படித்தான் வரும். அதிகாரிகள் அரசாங்கத்தின் ஆணைக்கு உட்பட்டவர்கள், அமைச்சரின் ஆணைக்கு உட்பட்டவர்கள் அந்த வழக்கை விசாரணைக்கு எடுத்தால் என்ன நடக்கும் என்பது தெரியும், அந்த தர்மகர்த்தாக்கள் ஆளும் கட்சியில் உள்ள முக்கியஸ்தர்கள், கழகத்தின் பெரிய பதவியில் இருப்

பவர்கள், அல்லது அரசியல் காரணமாக அந்த ஆளைப் போடுகிறீர்கள், அப்படிப்பட்டவர்களை நீக்கவேண்டும், சரியல்ல, முறையல்ல என்று வழக்கு வரும். அந்த முறைப்படி அவரை நீக்கினால் என்ன ஆகும்? அமைச்சர் போட்டது தவறு என்று வரும். அப்படி வரும்போது சங்கடமாக இருக்கும். ஆளை மாற்ற வேண்டியிருக்கும். அதற்குத் தயாராக இல்லை. இதையெல்லாம் அதிகாரிகள் சொல்லிச் செய்கிறார்கள் என்றே இல்லை, சொல்லாமலேயே பல அதிகாரிகள் இப்படிச் செய்கிறார்கள். அவர்களுக்குத் தெரியும். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் இப்படித்தான். எந்த விஷயமும் அமைச்சரின் விருப்பத்திற்கு ஒத்த மாதிரிதான் இருக்கும். அவர் எப்படி நினைப்பார் என்று நினைத்து அதிகாரிகள் நிறைவேற்றி விடுவார்கள். ஆகவே, அந்த அதிகாரிகளுக்குத் தெரியும், அந்த வழக்கு பைசல் செய்யப்பட வேண்டுமா, வேண்டாமா என்று. பைசல் செய்தால் வம்பு வரும், ஆகவே, அதை விசாரணைக்கு எடுக்க மாட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது எங்கும் இருக்கிறது.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** அந்த வம்புக்குப் போவதற்கு அதிகாரிகள் தயாராக இல்லை. ஆகையால், அந்த வழக்கு நடத்தப்படாமலேயே, வழக்கு முடிக்கப்படாமலேயே நீண்ட நாட்கள் போகும். இது சரியானது தானா?

இங்கே தமிழ்நாட்டில் பல்வேறு துறைகள் இருக்கின்றன. தொழிலாளர்கள் நலனைப் பொறுத்தவரையில் லேபர் கோர்ட் இருக்கிறது. டிரிபியூனல் இருக்கிறது. அதிலே சொல்லப்போனால் லேபர் டிபார்ட்மெண்டில் பல அதிகாரிகள் கன்சிலியேஷன் அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்கள் எந்தத் தரப்பையும் சேர்ந்தவர்கள் அல்ல. முதலாளி பக்கமும், தொழிலாளி பக்கமும் நின்று, நடுநிலையாக நின்று தொழிலாளர்கள் நலனை தீர்க்கிறார்கள் என்றாலும், அங்கே தனி நீதிபதி போட்டு, தனி நீதிமன்றம் வைத்து இருக்கிறோம். அதேபோன்ற பல்வேறு துறைகளிலும் வைத்து இருக்கிறோம். அப்படியிருக்கும்போது இந்தத் துறைக்கு மட்டும், ஏன் தனியாக நீதித்துறை வைக்கக்கூடாது? இதில் ஏதோ அதிகாரிகள் தவறு செய்கிறார்கள் என்பதற்காகச் சொல்லவில்லை. பொருள் அப்படிக் கொள்ளக்கூடாது. மனிதன் தெரிந்தோ, தெரியாமலோ தவறு செய்து விடுகிறான், தவறு ஏற்பட்டு விடுகிறது. ஏற்பட்டு விடும். அதிலும் குறிப்பாக, இந்த அரசைப் பொறுத்த



வரையில் அதிகாரிகள் சிறப்பாக தனித்தியங்க முடியவில்லை. அமைச்சர்களுக்கு மட்டுமல்ல, மேலே இருந்து கீழே இருக்கிறவர்கள் எல்லோருக்கும் இந்த நிலைமை தெரியும். அப்படிப்பட்ட நிலைமையில், நிர்வாகத்திலிருந்து நீதித்துறையை பிரிப்பது மிகவும் அவசியம் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன். நான் இதில் சில ஒட்டிய கருத்துக்களைச் சொல்லலாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் ஒட்டிப் பேசினால், பிறகு வெட்டி பேச்சு வரும்? பில்லைப் பற்றி மட்டும் பேசுங்கள்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** நான் ஏற்கனவே தலைவர்களிடத்தில் சொன்னேன், இன்று தான் எங்கள் நாள். ஒரு நாள் தான். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்று உங்கள் நாள் தான், மசோதாவைப் பற்றி மட்டும் பேசுங்கள்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** இன்னொன்றையும் நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இனிமேலாவது கட்சியில் இருக்கிறவர்களை, ஆளும் கட்சிக்காரர்களை, இந்தத் துறையைப் பொறுத்தவரையில் அறங்காவலர்களாக நியமிக்கிற முறையைக் கைவிடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கெனவே இங்கே ஒரு மசோதா நிறைவேறியிருக்கிறது. அந்த மசோதாவை வைத்துக்கொண்டு என்னென்ன நடக்குமோ தெரியாது. ஆனால் நான் கேட்டுக்கொள்வேன், நீங்கள் அந்த முறையைக் கைவிடுங்கள். நான் அடிக்கடி சொல்வதற்குக் காரணம், எனக்கு இன்னமும் நம்பிக்கை இருக்கிறது. நான் எதுவும் இன்று இல்லாவிட்டாலும் நாளை நடக்கும் என்ற நம்பிக்கை கொண்டவன். இன்று நீங்கள் திருந்தாமல் இருக்கலாம். ஆனால், நாளை அல்லது மறு நாள், திருந்த மாட்டீர்களா என்ற நம்பிக்கை இருக்கிறது. ஆகவே, நாளைக்கேகூட நீங்கள் இந்த மசோதாவை நிறைவேற்றித் தரலாம்.

ஆகவே, நான் கேட்டுக்கொள்வது எல்லாம், நாம் செய்கிற காரியங்கள் சரியாகச் செய்யப்பட வேண்டும், சரியாகச் செய்வதற்கு உள்ள ஆட்களைப் போட வேண்டும். அவர்கள் தவறு செய்கிறார்கள் என்று மக்கள் மட்டுமல்ல, ஆளும் கட்சியைச் சேர்ந்த பல பேர் சொல்லியிருக்கிறார்கள். என்னென்ன தவறுகள்

நடக்கின்றன, என்ற விளக்கத்திற்கு நான் செல்ல விரும்ப வில்லை. நான் கேட்டுக்கொள்வது எல்லாம், தர்மகர்த்தாக்கள் போடும்போது, கோவிலில், சாமியில் யாருக்கு நம்பிக்கை இருக்கிறதோ, யார் ஒழுங்காக பக்தியோடு, அக்கறையோடு, நியாயத்தோடு கோவிலுக்கு போகிறார்களோ அவர்களைப் போடுங்கள். அத்தகைய ஒரு பழக்கத்தை வைத்துக் கொள்ளுங்கள் என்றுதான் கேட்டுக்கொள்கிறேன்.

(நண்பகல் 12-00)

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் திரும்பத் திரும்ப, ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களை அறங்காவலர்களாக போட்டு கோவில் பணத்தை வீணாகச் செலவழிக்கிறார்கள் என்பது போல் பேசுவது சரியல்ல. அப்படி ஏதாவது இருந்தால் குறிப்பிட்டுச் சொன்னால், அதற்கு தக்க நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம்.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, இரண்டு நாட்களாக விவாதம் நடைபெறும் போது, தகுதியானவர்களைத் தான் அரசு அறங்காவலர்களாக நியமிக்கிறது என்று முதலமைச்சர் அவர்கள் கூட நேற்று முன்தினம் பதிலில் சொன்னார்கள். ஆனால் திரு. சுப்பிரமணியம் அவர்கள் திரும்பத் திரும்ப நம்பிக்கை இல்லாதவர்களை எல்லாம், கோவில் நம்பிக்கை இல்லாதவர்கள், சாமி நம்பிக்கை இல்லாதவர்கள், இவர்களையெல்லாம் டிரஸ்டிகளாகப் போடுவது நியாயமா என்கிறார்கள். ஜனநாயகத்தில் நம்பிக்கை இல்லாதவர்கள் எல்லாம் சட்டமன்ற உறுப்பினர்களாகவும், பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் இருக்கின்றபோது, சாமி நம்பிக்கை இல்லாதவர்களை அறங்காவலர்களாக நியமித்தால் அதில் என்ன தவறு என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**திரு. கே. எம். சுப்பிரமணியம் :** உறுப்பினர்களை எல்லாம் ஜனநாயகத்தில் நம்பிக்கை இல்லாதவர்கள் என்கிறார்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவரவர்களே, யார் தவறாகச் செய்கிறார்கள் என்று சொன்னால் நடவடிக்கை எடுக்கலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் ஒன்றை மட்டும் கேட்டுக்கொள்வேன், பட்டியல் தரத் தயாராக இருக்கிறோம். அப்படிப் பட்டியல் தந்தால், அது நிரூபணமானால், நம்பிக்கை இல்லாதவர்களைப் போட்டிருப்பதாக . . . .



**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, சில ஆலயங்களில் அறங்காவலர்களாக இருக்கின்றவர்கள் தகுதியானவர்கள் அல்ல என்று சொன்னார்கள். பக்தி உள்ளவர்கள், பக்தியற்றவர்களாக உள்ளவர்கள் என்றால், விபூதி அணிந்தவர்கள், நாமம் போட்டவர்கள்தான் உண்மையான பக்திமான் என்று கருதுகிறார்களா ?

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** நிச்சயமாக இல்லை. கோவில் அறங்காவலர்களாக போடப்படுகின்றவர்கள் . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, ருத்திராட்சம் போட்டிருந்தாலும், விபூதி பூசியிருந்தாலும், நாமம் போட்டிருந்தாலும் கண்டு பிடிக்கமுடியாது. பிறகு கடவுள் நம்பிக்கை உள்ளவர், கடவுள் நம்பிக்கை இல்லாதவர் என்பதை எப்படித் தெரிந்து கொள்ள முடியும் ?

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களைத் தெரிந்து கொள்ளமுடியும். பிராசஸ் ஆப் எலிமினேஷனில் தெரிந்து கொள்ளமுடியும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்கிறேன் என்று தாகூர் சொன்னார். அதைத்தான் அண்ணா அவர்கள் எங்களுக்குச் சொன்னார். திராவிட முன்னேற்றக் கழகம் ஏழையின் சிரிப்பில் இறைவன் இருப்பதாகச் சொல்கிறது. மனசாட்சியைக் கடவுளாகக் கருதுகிறது. ஆகவே கடவுள் நம்பிக்கை அற்றது கழகம் என்று எண்ண வேண்டாம். ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

மனத்துக்கு மாசாக மாண்டார் நீர் ஆடி
மறைந்தொழுகு மாந்தர் பலர்.

ஆகவே அந்த வாதம் எல்லாம் வேண்டாம். யாரை அறங்காவலராக நியமிப்பது என்பதல்ல இந்த மசோதாவில் விவாதிக்க வேண்டியது. நீதித் துறையை நிர்வாகத்திலிருந்து பிரிக்க வேண்டுமா என்பதுதான்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னார்கள். தாங்கள் இன்னும் அழகாகச் சொன்னீர்கள்.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவரவர்களே, தாங்கள் ஏதோ பாட்டைச் சொன்னீர்கள். அதற்கு அர்த்தத்தையும் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

மனத்தது மாசாக—மனதில் நிறைய குற்றத்தோடு,
மாண்டார் நீராடி—ரொம்ப பெரியவர்கள் போல் திருநீறு போட்டுக்கொண்டு,
மறைந்தொழுகு மாந்தர் பலர் — மனதில் குற்றம் வெளியில் யோக்கியர்கள் போல நடந்து கொள்கிறவர்கள் இந்த உலகத்தில் அதிகம். இது

தான் அந்தக் குறளில் பொருள். (சிரிப்பு).

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, இந்த மாதிரி உங்களை ஆதரிக்கின்றவர்களையே நீங்கள் *** செய்யக்கூடாது. இதுவரையில் போடப்பட்டவர்கள் எல்லாம் . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் சொன்னது குறள். வள்ளுவர் படத்தை இங்கே வைத்திருக்கிறோம். படத்தை மாத்திரம் வைத்திருந்தால் போதாது. அவரின் குறள்படி நடக்கவேண்டும்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, தாங்கள் சொன்னதை ஆதரிக்கிறேன். அதனால்தான் . . . .

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, உறுப்பினர் திரு. பெருமாள் அவர்களுக்குக் கோபம் . . . .

திரு. ஏ. ஆர். பெருமாள் : தலைவரவர்களே, கோபம் என்பது எனக்கு வராது. அம்மையாருக்குக் கோபம் இருந்தால் சொல்லலாம். என்னைப் போட்டு இழுக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாந்தர் பலர் என்று சொல்லியிருப்பதால் சிலர் உண்மையாக இருக்கலாம். வள்ளுவர், சொல்லை எண்ணிப் போட்டிருக்கிறார்கள்.

---

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.





திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இங்கே நான் கூறிய கருத்தைத் தவறாகக் கூறியதாகக் கருதி சொன்னதற்கு விளக்கம் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களைப்பற்றி இங்கே யாரும் சொல்லவில்லை.

திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, ஆளுங்கட்சியைச் சார்ந்தவர்களை அறங்காவலர்களாகப் போடக்கூடாது என்று நான் சொல்லவில்லை. இப்போது இருக்கின்ற சட்டப்படி போட முடியாது என்று சொன்னேன். அப்படி போட விரும்பினால், இங்கேயிருக்கின்ற சட்டத்தில் 'இந்து மதத்தில் இருப்பவர்கள்' என்பதற்குப் பதிலாக, 'கடவுள் நம்பிக்கை இருப்பவர்கள்' என்று மாற்றம் செய்தால் நல்லதாக இருக்கும் என்ற கருத்தைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஆர். மாணிக்கவாசகம் : உறுப்பினர் *** என்ற வார்த்தையைச் சொன்னார்கள். அதைத் திரும்பப் பெற வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் (உறுப்பினர் திரு. சுப்பிரமணியத்தைப் பார்த்து) : யாரைப் போடப் போகிறார்கள் என்பதல்ல இப்போதுள்ள பிரச்சினை. ஜுடிஷியரியைப் பிரிக்க வேண்டுமா என்பதைப் பற்றிப் பேசுங்கள். நீங்கள் எதையோ ஒட்டிப் பேசுகிறேன் என்று சொன்னால், அந்தத் தாப்பிலிருந்து வெட்டிப் பேசும் கருத்து வரும் என்று ஏற்கெனவே சொன்னேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, பெரும்பாலானவர்களைப் பற்றியும், சிறுபான்மையாக இருப்பவர்களைப் பற்றியும் சொல்லி விட்டீர்கள். அதற்காக நன்றி.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்கள் சட்ட மன்றத்தைப் பற்றியோ, பாராளுமன்றத்தைப் பற்றியோ சொல்லவில்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, ஒன்றொன்றையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், இப்போது கோவில்களைப் பாதுகாப்பதற்கு அறநிலையத் துறை

---

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

இருக்கிறது. அதே நேரத்தில் தமிழ்நாட்டிலே பல இடங்களிலே நான் பார்க்கின்றேன். சாலைகளிலே எல்லாம் திடீர் திடீரென்று கோவில்கள் முளைக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதெல்லாம் இந்த விவாதத்தில் வராது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, இந்த பில்லைப் பற்றி சுருக்கமாக விவாதித்து மற்ற பில்களில் பேச எங்களைப் போன்றவர்களுக்கு அவகாசம் கொடுக்க வேண்டுமென்று தங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் (உறுப்பினர் திரு. ஏ. சுப்பிரமணியத்தைப் பார்த்து): நீங்கள் பாராளுமன்ற முறை** தெரிந்து பேசுகிறவர்கள். நீங்களே இப்படிப் பேசினால் எப்படி? இந்த பில்லைப் பற்றி பேசுங்கள். அப்படி பேசமுடியவில்லை என்றால் முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. நா. வீராசாமி:** இவ்வளவு உறுப்பினர்களை வைத்துக் கொண்டு, பாராளுமன்ற முறை அவருக்கு மட்டும்தான் தெரியும் என்று எப்படிச் சொல்ல முடியும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒவ்வொருவர் பேசும் போதும், இதைச் சொல்கிறேன். இதில் வித்தியாசம் ஒன்றுமில்லை.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** தலைவரவர்களே, நான் யாருக்கும் தொந்தரவு கொடுக்க விரும்பவில்லை. ஆகவே, இந்த மசோதாவைப் பொறுத்த வரையில் நான் மீண்டும் மிகுந்த நம்பிக்கையோடு ஆளுங்கட்சியினரையும், குறிப்பாக அமைச்சர் அவர்களையும் கேட்டுக் கொள்ளுவேன். இந்த மசோதாவின் கருப்பொருள், உட்கருத்து, அடிப்படைக் கோட்பாடு நீதியை நிர்வாகத்திலிருந்து பிரிக்க வேண்டும் என்பதுதான். இந்த நாடு ஏற்றுக் கொண்டிருக்கின்ற, இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில் பல துறைகளில் ஏற்று பல ஆண்டுகளாக நிறைவேற்றி வருகின்ற ஒரு கோட்பாடு. இந்தக் கோட்பாட்டுக்காகத்தான் இந்த மசோதா வந்திருக்கிறது." அதற்கு ஆதாரமான சான்றுகள் இங்கே ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கின்றன. இதற்கு மறுப்பாக



எந்தச் சான்றும் சொல்லப்படவில்லை. சொல்லப்படவும் முடியாது. நீதி நிர்வாகத்தைத் தனியாகப் பிரிக்க வேண்டாமென்று 1975-லே யாராலும் சொல்ல முடியாது.

ஆகவே, இந்த மசோதாவை நான் மனப்பூர்வமாக ஆதரித்து, இந்த மசோதாவினை அமைச்சர் அவர்களும் ஆதரிக்க வேண்டும், ஆளுங் கட்சியினரும் ஆதரிக்க வேண்டும், ஏகமனதாக இந்த மசோதாவை நிறைவேற்றி, சட்டமாக்குவதற்கு வழி செய்ய வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டு வார்த்தையை முடிக்கிறேன்.

**திரு. துரை முருகன்:** தலைவரவர்களே, திரு. சௌந்தர பாண்டியன் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற தீர்மானத்தை எதிர்த்து எனது கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன்.

இந்த மசோதாவிலே ஒட்டுமொத்தமாகக் கூறப்பட்டதை எடுத்துப் பார்த்தால் இதிலே ஒரு பெரிய தத்துவம் அடங்கி இருப்பது போலத் தோன்றும். நீதியும் நிர்வாகமும் ஒன்றாக இருக்கக்கூடாது; அது ஜனநாயக முறைக்கு முரணானது என்ற தத்துவம் தெளிந்திருப்பது போல இருக்கும் என்ற காரணத்தால் அதைப்பற்றிப் பேசுகிறேன்.

அவர்கள் கொடுத்திருக்கிற தீர்மானத்தைப் படித்தேன். பல்வேறு விதிகளை நீக்க வேண்டுமென்று அவர் குறிப்பிட்டிருப்பதை ஒப்பிட்டுப் பார்த்தேன். இந்த மசோதாவை ஒரே ஒரு வரியில்கூட முடித்திருக்கலாம். ஆனால் நண்பர் சௌந்தர பாண்டியன் அவர்கள் நீண்ட கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள். அதில் புகுந்து மீண்டும் நீண்ட விவாதத்தைக் கிளப்ப நான் விரும்பவில்லை.

ஆனால், இந்த மசோதாவைப் பயன்படுத்திக் கொண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அறங்காவலர்களாக நியமிக்கப்படுகின்றனர் என்றும், யார் யாரைப் போட வேண்டும் என்றும் யார் யாருக்குக் கடவுள் பற்று உண்டு என்றெல்லாம் விவாதத்தைக் கிளப்பினார்கள். அதற்காக மிகப் பெரிய விவரங்களை எல்லாம் தலைவர் அவர்கள் அளித்து, திருக்குறளைக் கூறி முடித்திருக்கிறார்கள்.

ஆனால், என்னைப் பொறுத்த வரையில், நான் கேட்பதெல்லாம் இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழகக்காரர்களை அறங்காவலர்களாகப் போடுகிறோம் என்று சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கட்சி இன்றைக்கு ஆளுகின்ற கட்சி என்ற காரணத்தால் இந்த ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள் மட்டும் அறங்காவலர்களாகப் போடப்படவில்லை. இன்றைக்கு இங்கே ஜோதி வெங்கடாசலம் அம்மையார் அவர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள். ஜோதி அம்மையார் அவர்கள்கூட அறங்காவலர்தான் என்று நினைக்கிறேன். அவர் வேறு கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் அவரை இன்றைக்கு அறங்காவலராக நியமித்திருக்கிறோம். திரு முருகக் கிருபானந்த வாரியார் வணங்குகின்ற முருகன் உறையும் திருக்கோயில் என்னுடைய தொகுதியில் இருக்கிறது. அதில் அறங்காவலராகக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அதை நாங்கள் எதிர்க்கவில்லை. ஆனால் இதே காங்கிரஸ் கட்சி ஆளுகிற கட்சியாக இருந்தபோது எங்கள் கட்சியிலிருந்து ஒருவரையாவது போட்டதாகச் சொல்ல முடியுமா? வரலாறு உண்டா? இதே மாமன்றத்தில் திரு. வெங்கட்ராமன் அவர்கள் சொன்னது ஞாபகத்தில் . . . .

(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மசோதாவிற்குள் பேசுங்கள். யாரை அறங்காவலராக நியமிப்பது என்பதல்ல இப்போது பேசப்படுவது.

திரு. துரை முருகன்: இப்போது பேசப்பட்ட பிரச்சினையை ஒட்டிதான் பேசுகிறேன். திரு. வெங்கட்ராமன் சொன்னார், "எங்களுடைய கட்சிக்காரர்களைத்தான் போடுவோம்" என்று. நான் அதற்குத்தான் வருகிறேன். இன்னொன்றுகூட சொன்னார்கள். இந்த நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இருக்கிற நேரத்தில் தொகுதியில் அரசாங்க சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடக்கும். திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு அழைப்பிதழ் உண்டா? போனால் ஒரு நாற்காலியாவது உண்டா? எவ்வளவு அனுபவித்திருக்கிறோம்? அப்போது அதை எல்லாம் . . . (குறுக்கீடு)



ஆகவே நான் சொல்ல வந்தது என்னவென்றால், நீதியும் நிர்வாகமும் ஒன்றாக இருக்கக்கூடாது என்று ஒரு பெரிய தத்துவத்தைச் சொல்லி இருக்கிறார்கள். தத்துவம் பாராட்டப்பட வேண்டியதாக இருக்கலாம். ஆனால் நடைமுறையில் அப்படி இருக்கிறதா?

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, தத்துவம் என்று சொன்னார்கள். இது என்னுடைய தத்துவம் ஒன்றும் இல்லை. இந்திய அரசியல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தத்துவம்.

திரு. துரை முருகன்: நன்றி. திரு. சௌந்தரபாண்டியன் தத்துவத்தைச் சொன்னார் என்று கூறி அவரைப் பாராட்டலாம் என்று இருந்தேன். ஆனால் அது இந்திய அரசியல் சட்டத்தில் இருக்கிறது என்று கூறி விட்டார். அது கூட பாராட்டுக்கு உரிய ஒன்றுதான், தத்துவம் அப்படி இருக்கலாம். ஆனால் நடைமுறையில் என்ன நிலை இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும்.

டைரக்டிவ் பிரின்சிபிளில்—இந்திய அரசியல் சட்டத்திலுள்ள எல்லாக் கொள்கைகளையும் நிறைவேற்ற வேண்டுமென்றுதான் இந்திய சர்க்கார் கூட நினைக்கிறது. அவ்வளவு அதிகாரம் அவர்கள் கையில் இருக்கிறது. இருக்கிற அவ்வளவு அதிகாரத்தையும் வைத்துக்கொண்டு இந்திய அரசியல் சட்டத்தில் இருக்கிற எல்லா தத்துவங்களையும் நடைமுறைப்படுத்த முடிகிறதா என்றால் முடியவில்லை. எல்லோரும் சமம்; எல்லோருக்கும் சம உரிமை தேவை, சகோதரத்துவத்துடன் இருக்க வேண்டும்; ஆண்டான், அடிமை இருக்கக் கூடாது என்றெல்லாம் பேசுகிறார்கள். அரசியல் சட்டம் படித்தவர்கள், ஜனநாயகம், தத்துவம் அது, இது என்றெல்லாம் எடுத்து விடுகிறோம். ஆனால் நடக்கிற நிலை என்னவென்றால் நடைமுறையில் சில நேரங்களில் அவற்றைச் செயல்படுத்த முடியவில்லை. பல தடங்கல்கள் ஏற்படுகின்றன.

இந்தப் பிரச்சினையை—இந்த மசோதாவை எடுத்துக்கொள்வோமானால்கூட, இதிலே நீதியும் நிர்வாகமும் ஒன்றாக இருக்கக் கூடாது என்று கூறியிருக்கிறார்கள். சரி, இருக்கக் கூடாது என்று சொன்ன மாண்புமிகு உறுப்பினர் மாற்று யோசனையையும்

**[திரு. துரை முருகன்]** [1975 நவம்பர் 8

சொல்லி இருப்பாரேயானால் அதை நான் வரவேற்றிருப்பேன். இது, இது தவருக இருக்கிறது, இந்தத் திருத்தம் நீக்கப்பட வேண்டும் அந்தத் திருத்தம் நீக்கப்பட வேண்டும் என்று சொல்வதோடு விட்டு விட்டாரே தவிர, மாற்று யோசனையைச் சொல்லவில்லை. அப்படி மாற்று யோசனைகளைச் சொல்வார் என்று எதிர்பார்த்துக் கொண்டு இருந்தேன். யோசனை சொல்வதையே சிலர் தொழிலாகக் கொண்டிருக்கிருர்கள். யோசனை சொல்வது என்பது ரொம்பச் சுலபம். பொய் சொல்லக் கூடாது. காலையில் எழுந்திருக்க வேண்டும். குளிக்க வேண்டும் என்று சொல்லலாம்—இப்படிச் சொல்வது என்பது ரொம்பச் சுலபம். . .

**THIRU G. R. EDMUND**: Sir, as a Member of the Ruling Party, when a Bill has been moved from the Opposition side, he should say why he is opposing the Bill. We are not expected here to get some philosophical idea from him.

**திரு. துரை முருகன்**: தயவு செய்து நான் சொல்வதைப் பொறுமையாகக் கேளுங்கள். திரு. சௌந்தரபாண்டியன் அவ்வளவு நேரம் பேசியதை நாங்கள் பொறுமையாகக் கேட்டோமே, நான் பேசுவதை ஐந்து நிமிஷம் கேட்கக் கூடாதா? (சிரிப்பு) (கரவொலி) நான் இதை எதற்காகச் சொல்கிறேன் என்ருல், ஒரு செக்ஷனை எடுத்து விட வேண்டுமென்று சொல்கிருர். உதாரணத்திற்கு, செக்ஷன் 63-ஐ எடுத்து விட வேண்டுமென்று சொல்கிருர். சரி, எடுத்து விடுவோம். அப்புறம் என்ன செய்வது? என்ன அந்த செக்ஷன் 63?

"Deputy Commissioner to decide certain disputes and matters . . ."

அப்படி என்ன டிசைட் பண்ணுகிருர்கள்?

"whether an institution is a religious institution".

ஒரு இன்ஸ்டிட்யூஷன் ரிலிஜியஸா இல்லையா என்று டிசைட் பண்ணுகிருர்கள். இதை எடுத்து விடுவோம். எடுத்து விட்டு யார்கிட்டே கொடுக்கிறது? டிசைட் பண்ணுவது யார், யார்? மாற்று யோசனை சொல்லி இருந்தால் நன்ருக இருந்திருக்கும். ஆனல் அவர் சொல்லவில்லை.

(திரு. பெ. சௌந்தரபாண்டியன் எழுந்தார்)



1975 நவம்பர் 8]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: சௌந்தரபாண்டியன், உட்காருங்கள், அவர் சொல்வதை எல்லாம் குறித்துக்கொண்டு கடைசியில் பதிலளியுங்கள், கடைசியில் பதிலளிப்பதற்கு உங்களுக்கு வாய்ப்பு இருக்கிறது.

**திரு. துரை முருகன்**: 'whether a trustee holds or held office as a hereditary trustee'

டிசைட் செய்ய வேண்டுமா, வேண்டாமா? இதை டிசைட் பண்ணுவதுதான் செக்ஷன் 63. இதை எடுத்து விட்டால் யார் டிசைட் பண்ணுவது?

'whether any property or money is a religious endowment'

ரிலிஜியஸ் எண்டோமெண்டைச் சேர்ந்ததா, இல்லையா என்பதை டிசைட் பண்ணுவது டெபுடி கமிஷனர். இந்த செக்ஷனை எடுத்து விட்டால் இந்த அதிகாரத்தை யாருக்குத் தருவது? நண்பர் மாற்று யோசனையைச் சொல்லி இருக்க வேண்டும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி**: மாற்று யோசனை தானே இந்த மசோதாவே. டி.சி., ஏ.சி., கவனிப்பதை எல்லாம் நீதிபதிக்கு விட்டுவிடுங்கள் என்பதுதான் இதன் பொருள்.

**திரு. துரை முருகன்**: அதை இந்த மசோதாவில் போட்டிருக்கலாமே. இதிலே, நீதிபதிக்கு விட்டுவிட வேண்டுமென்று இல்லையே அம்மா! இருக்கிற பிரச்சினையே இதுதானே.

**திருமதி த. ந. அனந்தநாயகி**: அதை, ஸ்டேட்மெண்ட் ஆப் ஆப்ஜெக்ட்ஸை படித்துப் பார்த்தே புரிந்து கொள்ளலாமே!

**திரு. துரை முருகன்**: 'Further, it says; whether any property or money is a specific endowment'.

ஒரு குறிப்பிட்ட எண்டோமண்டைச் சேர்ந்ததா இல்லையா என்பதைக் கூறுவது செக்ஷன் 63. யார் டிசைட் பண்ணுவது?

அடுத்து, ஒன்றைச் சொல்லி இருக்கிருர்கள். செக்ஷன் 68 என்ன சொல்கிறது? (சிரிப்பு).

நான் இதைச் சிரிப்பதற்க்காகச் சொல்லவில்லை. செக்ஷன் 68 என்ன சொல்கிறது என்ருல். . .

'*Deputy Commissioner to forward copies.*—The Deputy Commissioner shall, within a week from the date of his order made under any of the foregoing sections of this Chapter, forward a copy of such order to the Commissioner . . .'

பேரவைத் தலைவர் அவர்களே, நீங்களே சொல்லுங்கள், இதை எடுக்கா விட்டால் என்ன பெரிய பிரளயம் ஏற்பட்டுவிடும்? அல்லது இது இருப்பதால் என்ன பெரிய தொல்லை அல்லது எடுப்பதால் என்ன நன்மை வந்து விடும்? என்று எடுத்துச் சொல்லி இருப்பாரேயானால் நன்றாக இருந்திருக்கும்.

அடுத்து, நீதியும் நிர்வாகமும் தனியாக இருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். இன்றையதினம் நடைமுறையில் எடுத்துக் கொண்டால் சர்க்கார் காரியங்கள் எவ்வளவோ நடக்கின்றன. உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால் வில்லேஜ் ஹெட்மேன் இருக்கிறார். அவருக்கு மேலே தாசில்தார், ஆர்.டி.ஓ. ஹெட்மேன் சஸ்பெண்ட் பண்ணப்படுகிறார் என்றால் அவர் அப்பீல் செய்து கொள்கிறார். இப்படி எடுத்துப் பார்த்தால் நீதியும் நிர்வாகமும் இணைந்துதான் இருக்கிறது. அது ஒன்றும் நாம் செய்தது அல்ல. ஏற்கனவே வெள்ளைக்காரன் காலத்திலிருந்து, அதற்கு முன்னால் மொகலாயர்கள் காலத்திலிருந்தே கூட இப்படிப்பட்ட நிலைகள் பின்னிப் பிணைந்தேதான் இருந்திருக்கின்றன (சிரிப்பு) இதை நான் சிரிப்பதற்காகச் சொல்லவில்லை. 'கஜானா' என்று சொல்கிறோம். 'சிரஸ்தார்' என்று சொல்கிறோம். இவைகள் எல்லாம் பாரசீக வார்த்தைகள் அல்லது அராபிய வார்த்தைகள். மொகலாயர்கள் ஆளும்போது இருந்த வார்த்தைகள் அவைகள் இன்னும் தொடர்ந்து நடைமுறையில் இருந்து கொண்டு இருக்கின்றன. அவை காலகாலமாக பின்பற்றப்பட்டு வருகின்றன. அதை ஒரே நாளில் சட்டத்தைத் திருத்திவிட்டு இது நாளை காலையிலிருந்து நடைமுறைக்கு வந்து விட்டது என்று செய்து விட முடியாது. அப்படிச் செய்தால் நிர்வாகத்தை நடத்த முடியாமல் போய்விடும். அதற்காகச் சொல்கிறேன். 58-வது செக்ஷனை, பிரிவை எடுத்து விட வேண்டுமென்று சொல்கிறார். அதனாலே என்ன வரும் என்று தெரியவேண்டும். அதற்கு விளக்கம் தந்திருக்கிறாரா என்றால் இல்லை. அவர் விளக்கம் தந்திருந்தால் அவரைப் பாராட்டியிருப்பேன். . . .



"'omission of section 69"

வேண்டும் என்கிறார்கள். அது என்ன என்று பார்ப்போம். அப்பீல் டு தி கமிஷனர் "Appeal to the Commissioner" அதற்குக் கீழே என்ன இருக்கிறது என்றால்

"Any person aggrieved by any order passed by the Deputy Commissioner under any of the foregoing sections of this Chapter, may, within sixty days from the date of the publication of the order or of the receipt thereof by him, as the case may be, appeal to the Commissioner and the Commissioner may pass such order thereon as he thinks fit".

நான் சொல்வதை ஒழுங்காகச் சொல்கிறேன். நான் என்ன சொல்கிறேன் என்றால் அது அப்பீலுக்குப் போகிறது என்பதற்காக இதை எடுக்கவேண்டும் என்று சொல்கிறார்கள். இதை எடுத்து விட்டு என்ன செய்வது என்று சொல்லவில்லை. (சிரிப்பு)

**திரு. டி. வி. சம்பத்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முருகன் பேசுகின்றபோது கிராம முன்சீப்பை தாசில்தார் சஸ்பெண்ட் செய்தால் அவர் ஆர். டி. ஓ.-க்கு அப்பீல் செய்யலாம். டி. ஆர். ஓ-வுக்கு அப்பீல் செய்யலாம் என்றார். அவர்கள் அதிகாரிகள். அவர்கள் சம்பளம் பெறுகின்றவர்கள். ஆனால் அறங்காவலர்கள் அப்படிப்பட்டவர்கள் அல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. துரை முருகன்:** நிர்வாகம் எப்படி நடைபெறுகிறது என்பதை நாடு உணர்ந்திருக்கிறது. ஒன்றை உதாரணத்திற்காகச் சொன்னால் அதையே முழுக்க, முழுக்க அப்படியே எடுத்துக் கொள்ளக் கூடாது. உதாரணத்திற்கு ஒருவளைப் பார்த்துக் கிளி மாதிரி இருக்கிறாள் என்றால் அவள் பச்சையாக இருக்கிறாள். கண் கிளிக்கு இருப்பது போல இருக்கிறது, மூக்கு கிளிக்கு இருப்பது போல இருக்கிறது என்று எடுத்துக் கொள்ளக் கூடாது. உதாரணத்தை ஓரளவிற்குத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும். (சிரிப்பு). அதற்காகச் சொல்கிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி:** (நெல்லிக்குப்பம்) மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முருகனே பேசிக்கொண்டிருந்தால் எங்களுக்கு நேரம் கிடைக்காது. எனக்கும் டி.வி.யில் பேச சான்ஸ் கொடுக்க வேண்டும்.

**திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன்:** எல்லோரும் அறநிலைய அதிகாரிகளிடத்தில் நீதி நிர்வாகம் இருக்கக்கூடாது என்று சொல்கிறார்கள். எனக்குத் தெரிந்த வரையில் நீதிபதியாக இருக்கும்போது அவர்களுக்குத் தனிப் பொறுப்புகள் வந்து விடுகின்றன. ஒரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். இராமாயணத்திலே வருகின்றது. இராவணன் தர்பாரிலே பல்வேறு மந்திரிகள் இருந்தார்கள். அதிலே ஒருவன் சொன்னான் நீ சீதையை எடுத்துச் செல்வதற்கு இவ்வளவு கஷ்டப்பட்டிருக்க வேண்டாம், நீ இராமனைப் போல வேஷம் போட்டுக் கொண்டு சென்றிருந்தால் போதும் என்று மகோதரன் என்பவன் சொன்னான். உடனே இராவணன் சொன்னான், இராமனைப் போல நான் வேஷம் போட்டுக் கொண்டால் அவனைப் போன்ற தன்மை, எண்ணம் வந்து விடுகின்றது என்றானாம். எனவே, நீதிபதிகளாக அவர்கள் வந்து உட்காரும்போது நியாயம் வழங்க வேண்டுமென்ற எண்ணம்தான் வருமேயன்றி நான் அதிகாரி, அந்தத் துறையிலிருந்து வந்தவன், அந்தத் துறையின் உத்தரவுகளுக்குக் கட்டுப்பட்டுச் செய்ய வேண்டுமென்ற அந்த எண்ணம் வராது.

**திரு. துரைமுருகன்:** தலைவரவர்களே, டி. வி. வருகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். டி. வி. வருகிறதோ இல்லையோ டி.ஏ. வருகிறது. டி.வி. வரும்போது வரட்டும்.

**திரு. எஸ். வடிவேல்:** இந்த அறநிலைய மசோதாவின் மீது கடவுள் உண்டா இல்லையா என்பதைப் பற்றி விளக்கம் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த மசோதாவின் மீது கருத்தைச் சொல்வது நல்லது. வாழ்நாள் பூராவும் கடவுள் இல்லை என்று சொல்லிக் கொண்டிருந்தவன் தன் மகன் இறந்தபோது "ஓ, மை காட்" என்று சொன்னானாம். அது போல இன்றைக்கு நீதியும், நிர்வாகமும் ஒரே அதிகாரியிடத்தில் இருக்க வேண்டுமா, வேண்டாமா என்பதைப் பற்றிப் பேசுவதை விட்டு கடவுள் உண்டா இல்லையா என்று பேசிக் கொண்டு இருக்கிறோம்.

**திரு. துரை முருகன்:** தலைவரவர்களே, மசோதாவை விட்டு வெகுதூரம் போய் விட்டோம். இப்போது மசோதாவிற்கு வருகிறேன். அதேபோல செக்ஷன் 70-ஐ எடுத்து விட வேண்டு



மென்று சொல்லியிருக்கிறார்கள். செக்ஷன் 70 என்னவென்றால் "Any party aggrieved by an order passed by the Commissioner". அதாவது எந்தப் பார்ட்டியும் கோர்ட்டுக்குப் போகலாம் என்பது செக்ஷன் 70. இந்த ஆர்டரை எடுக்க வேண்டும் என்கிறார்கள். எடுப்பதைப் பற்றி ஆட்சேபணையில்லை. எடுத்துவிட்டால் கோர்ட்டுக்குப் போக முடியாது. எந்த நீதிபதியிடமும் போக முடியாது. ஒரு செக்ஷனை எடுப்பது சுலபம். அதற்குப் பிறகு என்ன மாற்று யோசனை என்று சொல்ல வேண்டும். சர்க்காரிலே ஒரேயடியாக மாற்றத்தைக் கொண்டு வந்துவிட முடியாது. நிர்வாகத்திலே ஒரு மாற்றத்தைக் கொண்டு வர வேண்டுமென்றால் படிப்படியாக, கொஞ்சம் கொஞ்சமாகத்தான் கொண்டு வர வேண்டும் என்பதாலே கொஞ்சம் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். இதை இன்றைக்கே சட்டமாக்கி அது நாளை காலையிலிருந்து சட்டமாக வந்துவிட வேண்டுமென்றால் அது முடியாத காரியம்.

இன்றைய நிலையைப் பார்க்க வேண்டும். கமிஷனருக்கு ரிவிஷன பவர் செக்ஷன் 21-லே இருக்கிறது. கவர்ன்மெண்டிற்கு ரிவிஷன் பவர் இருக்கிறது. இதை எடுக்க முடியுமா? அப்படி என்ன சொல்கிறார்கள். அவர்கள் சொல்வதையெல்லாம் செய்து முடிந்து விட்டால் கோர்ட்டிற்குப் போய் விட்டால் மட்டும் எல்லாம் சரியாகப் போய்விடுமா? (சிரிப்பு) கோர்ட்டிற்குப் போனால் கேஸ் சீக்கிரத்தில் முடிந்து விடுமா? அங்கே கேசுகள் எக்கச்சக்கமாக இருக்கின்றன. எவ்வளவோ பெடிஷன்கள் இருக்கின்றன. நம்முடைய ஹைகோர்ட்டை எடுத்துக் கொண்டால் எக்கச்சக்கமான கேசுகள் இருக்கின்றன. ஏராளமான வேலை பாக்கி இருக்கின்றது. எதற்கெடுத்தாலும் கோர்ட்டுக்குப் போக வேண்டுமென்ற மனோபாவம் மக்களிடத்தில் இருப்பதால் கோர்ட்டுகளில் கேசுகள் ஏராளமாக பாக்கி நிற்கின்றன. இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றபோது நிர்வாகத்தில் உடனடியாக மாறுதல்களைக் கொண்டு வர வேண்டுமென்றால் முடியாத காரியம். இப்போது நண்பர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மசோதாவை ஏற்கெனவே இருக்கிற சட்டத்திற்கு ஒரு திருத்தமாக, ஒரு மாற்று யோசனையாக, ஒரு பரிகாரமாகச் சொல்லாத காரணத்தினால், இந்த மசோதாவை நான் ஒரு நிறைவு பெற்ற மசோதாவாகக் கருதவில்லை. எனவே இந்த மசோதாவை, நிறைவு பெற்ற (சிரிப்பு) மசோதா என்று

சொல்லுவார்களானால், அது ஏற்றுக்கொள்ளத் தக்கது அல்ல, இதை நிராகரிக்க வேண்டும் என்பதை எடுத்துச் சொல்லி என் கருத்தை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அமைச்சரவர்கள் அவருடைய கருத்தினைத் தெரிவிப்பார்கள்.

**திரு. கோவை செழியன்** : மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முருகன் இருக்கும் பக்கமே டி.வி.யை அதிக நேரம் திருப்பாமல் தயவு செய்து எங்கள் பக்கமும் திருப்பினால் நன்றாக இருக்கும். எனவே விவாதத்தைச் சுருக்கமாக எல்லோரும் முடித்துக் கொண்டால் நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : டி.வி.யை எல்லாப் பக்கமும் திருப்புவார்கள். எல்லாப் பக்கமும் திருப்பிப் படம் எடுப்பார்கள். ஆனால் நாளைக்குப் போட்டுப் பார்த்தால் நான் எதைப் போடுவார்கள் என்று தெரியும்.

(திருமதி சத்தியவாணிமுத்து எழுந்திருந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அமைச்சரவர்கள் அவருடைய கருத்தைத் தெரிவித்த பிறகு பின்னால் விளக்கம் வேண்டுமென்றால் பேசலாம். அமைச்சரவர்கள் விடை அளிக்கட்டும்.

DR. H. V. HANDE : Point of order, Sir, a lady member, an Ex-Minister wants to participate in the discussion. I just want to know whether it would be in order to prevent her from participating in the debate.

**திருமதி சத்தியவாணிமுத்து** : தலைவரவர்களே. . . .

## (5) அறிவிப்பு

### காமன்வெல்த் நாடாளுமன்ற மாநாட்டுப் பிரதிநிதிகள் சட்ட மன்றப் பேரவைக்கு வந்திருப்பது குறித்து

MR. SPEAKER : Some of the Parliamentary delegates, who attended the Commonwealth Parliamentary Conference held recently at New Delhi had come to Tamil Nadu. They are now in the Visitors' Gallery watching the proceedings of the House. On behalf of this august body and myself, I have great pleasure in extending a warm welcome to them. (cheers)



## (3) தனியார் அலுவல்கள்—(தொடர்ச்சி)

### சட்ட முன்வடிவுகள்.

(ஆ) தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/75)—தொடர்ச்சி.

**திருமதி சத்தியவாணிமுத்து** : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌந்திர பாண்டியன் கொண்டு வந்துள்ள இந்த மசோதாவை ஆதரித்து நான் ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

நீதியும், நிர்வாகமும் வெவ்வேறாக இருக்க வேண்டும் என்பதை ஜனநாயக அரசு எதுவாக இருந்தாலும் நிச்சயமாக ஒப்புக் கொள்ளும். அதிலும் குறிப்பாக இந்த அறநிலைய இலாகாவிலே இப்படிப்பட்ட ஒரு வேறுபாடு, நீதியும், நிர்வாகமும் வெவ்வேறாக இருக்க வேண்டியது மிக மிக அவசியம். இந்த அறநிலைய இலாகாவில் சம்பளம் பெறுகின்ற ஊழியர்கள், சம்பளம் பெறாத தனியார்கள் இரண்டு பேரும் பங்கு பெற்று நிர்வாகத்தை நடத்திக் கொண்டு வருகிறார்கள். பல ஆலயங்களில் தவறுகள் நடைபெறுவதைக் காண்கிறோம். கோவில் சொத்துக்கள் கொள்ளையிடப்படுகின்றன. சிலைகள் கொள்ளையிடப்படுகின்றன. நிர்வாகத்தில் பல தவறுகள் ஏற்படுகின்றன என்பதை அங்கே இருக்கிற அரசு சம்பளம் பெறுகின்ற ஊழியர்களும், சம்பளம் பெறாத தனியார்கள், அல்லது இருவரும் சேர்ந்து செய்கிறார்கள் என்பதை மறந்து விட முடியாது. அங்கே நடைபெறுகிற குற்றங்களைப் பற்றியும், பல்வேறு குறைபாடுகளைப் பற்றியும் நாம் தீவிரமாகப் பரிசீலனை செய்ய வேண்டும்.

(பிற்பகல் 12-30)

அறங்காவலர்களைப் பற்றிப் பேசும்போது, சிலர் நியமிக்கப் படுகிறார்கள்—குறிப்பாக அரசாங்கத்தால் நியமிக்கப்படுகிறார்கள். அந்த அறங்காவலர்கள் மீது பல குற்றச்சாட்டுகள் சுமத்தப் படுகின்றன. அதை டி.சி. விசாரணை செய்ய வேண்டும். ஏ. ஸி. விசாரணை செய்ய வேண்டும். அதன் காரணமாகத்தான் நிர்வாகத் துறையைச் சேர்ந்தவர்களையே அந்த விசாரணை அதிகாரிகளாகப் போடுவதனால் நியாயம் கிடைக்கவில்லை என்பதை திரு. சௌந்தர பாண்டியன் எடுத்துச் சொன்னார்கள். நானும் கூட அதனையே சொல்வேன். திருத்தணி அறங்காவலர் மீது குற்றஞ்சாட்டப்பட்ட போது . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த நிகழ்ச்சியை விரிவுபடுத்த வேண்டியதில்லை. இந்த மசோதா பற்றி உங்கள் கருத்தைச் சொன்னால் போதும்.

திருமதி சத்தியவாணிமுத்து: அதை நான் விரிவாகச் சொல்லவில்லை. அந்த அறங்காவலர் குழுவின் தலைவர் நகைகளை பம்பாயில் கொண்டு சென்று விற்றார் என்றார்கள். அதற்கு சில அதிகாரிகளே உடந்தையாக இருந்தார்கள். இந்தத் துறை அதிகாரிகளே இதற்கு விசாரணைப் பொறுப்பில் இருந்தால் எப்படி சரியான நியாயம் கிடைக்கும்? ஆகவேதான் நிர்வாகத் துறை வேறாக இருக்கவேண்டும், நீதித் துறை வேறாக இருக்க வேண்டுமென்ற நல்ல கருத்தை மனதில் வைத்து—ஆதாரமாக அடிப்படையை வைத்து, நியாயமான உணர்ச்சியுடன் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த மசோதாவினை ஆதரிக்க வேண்டும் என்கின்ற எனது கருத்தினையும் அதனோடு சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லி அமர்கிறேன்.

*மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் இங்கே ஒரு மசோதாவைக் கொண்டுவந்து நீண்ட நேரம் பேசி, முடிக்கின்ற நேரத்தில் கைத்தட்டலையும் பெற்று, இங்கே முடித்திருக்கிறார்கள்.

அவர்கள் நீண்ட நேரம் பேசியிருந்தாலும், அவர் சொன்னவற்றின் மையக் கருத்து எந்தவகையிலும் நீதியும் நிர்வாகமும் இணைந்து இருக்கக் கூடாது என்பதுதான். இன்றைக்கு நீதியும், நிர்வாகமும் இணைந்து இருப்பதன் காரணமாக எவ்விதமான தவறுகளும் நடைபெறவில்லை என்பதை தெளிவாகவும் உறுதியாகவும் நான் மன்றத்திற்குச் சொல்ல முடியும்.

இன்னும் சொல்லப்போனால் இந்தத் துறை தனிப்பட்டவர்களை பாதுகாப்பது என்று இல்லாமல் பொது நிறுவனங்களை பாதுகாக்க வேண்டும். பொது நிறுவனங்களின் சொத்துக்கள் பொதுமக்களுக்குப் பயன்படத்தக்க வகையில் இருக்க வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறையும், கவனமும் செலுத்திக் கொண்டு வருகிறது. அதேநேரத்தில் தனியார்களுடைய நியாயமான உரிமைகளைப் பாதுகாக்கவும் என்றைக்கும் தயங்கியதில்லை. அவர்கள் தாங்கள் பாதிக்கப்பட்டதாகக் கருதினால் மே



இருக்கிற நீதிமன்றங்களுக்கு அவர்கள் அப்பீல் செய்துகொள்ள எல்லா வழிவகைகளும் இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல வாதி, பிரதிவாதி என்கிற பிரச்சினைகள் எதுவும் எழவேயில்லை. ஒரு அறநிலையத்தை இந்தத் துறை எடுத்துக்கொள்ளவேண்டுமென்றால் கீழ்மட்டத்தில் இருந்து முறையாக விசாரணைகள் செய்யப் படுகின்றன. அந்தத் தலத்திலுள்ள ஆய்வாளர் பரிசீலித்து, உதவி ஆணையர் பரிசீலித்து, துணை ஆணையர் பரிசீலித்து, ஆணையர் பரிசீலித்து பின்னரே முடிவு மேற்கொள்ளப்படுகிறது.

ஒரு கோவிலை எடுத்துக்கொள்ளவேண்டுமென்றால் அந்த ஊரிலுள்ள கோவிலைச் சென்று பார்த்து, அதற்கு ஆவணங்கள் இருந்தால் அவற்றைப் பரிசீலித்து, கல்வெட்டுகள் இருந்தால் அவற்றைப் பரிசீலித்து விரிவான விசாரணைகள் சம்பந்தப்பட்ட மக்களிடத்தில் நடத்தி பின்னரேதான் முடிவு எடுக்கப்படுகிறது.

அறநிலையத் துறை ஏதாவது ஒரு கோவிலை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றால் தனிப்பட்டவர்கள் சிலர் அதை எடுத்துக் கொள்ளக் கூடாது என்று சொல்கிறார்கள். அந்தக் கோவில் எனக்குத்தான் சொந்தம், அரசாங்கம் தலையிடக்கூடாது என்கிறார்கள். இதுபோன்ற நிலைமையில் நேரிடையாகக் கோர்ட்டுக்குச் செல்வதென்றால் — கோர்ட்டார் நான் முன்னே சொன்னபடி விரிவான முறையில் விசாரணை நடத்துவதற்கு வழியில்லை. அவர்கள் ஏதாவது ஆதாரங்கள் காட்டினால் அதை வைத்துத்தான் பரிசீலிக்க அவர்களுக்கு வாய்ப்பு உண்டு. “அந்தக் கோவில் எனக்குத்தான் சொந்தம், நான்தான் வழிபடலாம்” என்று ஆட்சேபணை எழுப்பப்படுகிறபோது இப்போது துறையினர்—அந்தந்த இடங்களுக்கே சென்று விசாரணை கீழ்மட்டத்தில் இருந்து செய்கிறார்கள். ஊர் மக்களை விசாரிக்கிறார்கள். ஒருவர் ஒரு கோயிலைப் பொறுத்தவரை அப்படி உரிமை கொண்டாட, அவரது குடும்பத்தினர் அந்தக் கோவிலுக்கு ஏதாவது சொத்துக்கள் எழுதி வைத்திருக்கிறார்களா என்றெல்லாம் ஆராய்கிறார்கள். அவரிடத்திலும் விசாரிக்கிறார். அவ்வூர் மக்களிடத்திலும் விசாரிக்கிறார். பிறகு அந்த ஆய்வாளர் மேலதிகாரிக்கு அனுப்புகிறார். மேலே உதவி ஆணையர் பரிசீலித்து, அதற்கு மேலே துணை ஆணையர் பரிசீலித்து முடிவு செய்கிறார்கள்.

துணை ஆணையரின் தீர்ப்பை எதிர்த்து ஆணையருக்கு அப்பீல் செய்துகொள்ள வசதி இருக்கிறது. ஆணையரின் தீர்ப்பை எதிர்த்தும் சிவில் கோர்ட்டுகளுக்குப் போகவும் வாய்ப்பு இருக்கிறது. இப்படி விரிவாக ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வர இப்போதுள்ள முறைதான் சிறந்ததாக இருக்கிறதே தவிர, நேரிடையாகக் கோர்ட்டுக்குப் போனால் கோர்ட்டாரால் இத்தனை விவரங்களையும் பற்றி ஆராய்வதற்கு வழியில்லை.

அதோடு கூட, தமிழகத்தைப் பொறுத்தவரையில் பல்லாயிரக் கணக்கான கோவில்களை துறையின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வர பல முயற்சிகளை எடுத்துக்கொண்டு வருகிறோம். பலபேர் நீதி மன்றத்திற்குச் சென்று நான்காண்டு, ஐந்தாண்டு துறை செயல்படக்கூட முடியாத வகையில், நியாயமான காரியங்களைக் கூட செய்ய முடியாத வகையில் தடைபெற்றிருப்பது மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் அறிந்திருக்கிற ஒன்றுதான். இந்தத் துறை நல்ல முறையில் செயல்பட வேண்டும், 42 ஆயிரம் கோவில்களை எடுத்துக்கொள்ள வகை செய்ய வேண்டும் அதற்கு என்ன வழி என்றுதான் பார்க்க வேண்டும். நேற்றையதினம் நாம் நிறைவேற்றிய திருத்தம் கூட பல்வேறுவிதமான அறக்கட்டளைகள் பொதுமக்களுக்குப் பயன்படும் வகையில் செயல்படுவதற்கு வழி வகுக்க வேண்டும் என்கிற அடிப்படையில்தான் அமைந்திருக்கின்றது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** பல்வேறு இடங்களில் சமாதியின் அடிப்படையில் கோவில்கள் இருக்கின்றன. அவற்றையும் கோவில்கள் என்று இந்த இலாக்காவில் எடுத்துக் கொள்ள முயற்சி செய்கிறார்களே, அதெல்லாம் மூன்றுவிதமான— உதவி ஆணையர், துணை ஆணையர், ஆணையர் என்று அப்பீல் செய்து, சிவில் கோர்ட்டுக்குப் போவதானால் மிகுந்த சங்கடம் ஏற்படுமே, இந்தமாதிரியாக இருப்பதைப்பற்றி என்ன கருத்து என்று தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, சமாதிகள் என்று நாம் எதையும் எடுப்பதில்லை. எடுத்ததாகவும் குறிப்பு இல்லை. சட்டத்திலேயே நாம் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். சாப்டர் 1, செக்ஷன் 1 (3) இல் நாம் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம்.



" It applies to all Hindu public religious institutions . " என்று நாம் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். அதற்குக் கூட ஒரு திருத்தத்தினை உறுப்பினர் சௌந்தரபாண்டியன் அவர்கள் இங்கே கொடுத்திருக்கிறார்கள். பப்ளிக் இன்ஸ்டிட்யூஷன்ஸ் என்று வருகிறபொழுது பொதுமக்கள் வழிபடுகிற இடம், காணிக்கை செலுத்துகின்ற இடம் என்று இவைதான் இருக்குமே தவிர, தனிப்பட்ட ஏதோ வீட்டுக்குள்ளே கட்டியிருந்தால், சமாதியிருந்தால் என்று இறுதியிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதைப் பற்றி சிந்திப்பதும் இல்லை, நமக்குக் கவலையும் இல்லையென்ற அளவிலேதான் பப்ளிக் இன்ஸ்டிட்யூஷன்ஸ் என்று மிகத் தெளிவாகக் கொடுத்திருக்கிறோம். திருத்தத்திலே கூட அதைத் திருத்த வேண்டும், தனியார் கோயில்களையெல்லாம் எடுக்கக் கூடாது என்று அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். ஏற்கனவே நம்முடைய சட்டத்திலேயே இந்துக்களுடைய பொதுவழிபாட்டுக் கோயில்கள், ரிலிஜியஸ் இன்ஸ்டிட்யூஷன்ஸ் என்று மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். ஆகவே, அவர்கள் கொடுத்திருக்கிற திருத்த மசோதா இப்பொழுதிருக்கிற சட்டப்படி நாம் நடத்திக் கொண்டிருக்கிற நிர்வாகத்தில் தேவையில்லை. இப்பொழுதுள்ள வகையிலேயே தனியாருடைய உரிமைகள் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் சொல்லிக் கொள்கிறேன்.

அரசியல் சட்டத்திற்கு விரோதமான காரியம் என்று கூடச் சொன்னார்கள். எந்தவிதத்திலும் அரசியல் சட்டத்திற்கு விரோதமானதல்ல. 1950 ஆவது ஆண்டு இந்த நாட்டிற்கு அரசியல் சட்டம் கொடுக்கப்பட்டது. 1959 ஆவது ஆண்டு இந்து அறநிலையச் சட்டம் இயற்றப்பட்டது. இந்தச் சட்டத்தை இயற்றுகிற நேரத்திலேயே அரசியல் சட்டத்தை மையமாக வைத்து, அடிப்படையாக வைத்துத்தான் இந்தச் சட்டத்தை தயார் செய்திருக்கிறார்களே தவிர, நிச்சயமாக அரசியல் சட்டத்திற்கு விரோதமான காரியம் என்று நாம் எந்த வகையிலேயும் சொல்ல வேண்டியதில்லை. இந்த நீதி நிர்வாகம் இந்தத் துறையிலே இருக்கிற காரணத்தாலே இன்றைக்குப் பல்லாயிரக்கணக்கான கேஸ்களிலே ஊழல்களைக் கண்டுபிடித்து, விடுவித்து, இவைகளையெல்லாம் செய்திருக்கிறோமே தவிர, யாரோ சில பேருக்குச் சலுகைகளைச் செய்ய வேண்டும், சில வழக்குகளைத் தாமதப்படுத்த வேண்டுமென்று நிச்சயமாகச்

செய்யவில்லை. இந்த அறநிலையத் துறையினுடைய ஆணையர் கூட அங்கங்கே இருக்கிற துணை ஆணையர்களிடம் மாதந்தோறும் எத்தனை வழக்குகள் தீர்க்கப்பட வேண்டும்? குறைந்தமாக, நீண்ட காலமாக இருப்பவை எத்தனை? எத்தனையை முடித்திருக்கிறீர்கள்? என்று சுற்றறிக்கைகளையெல்லாம் விடுத்து, தகவல்களை வரவழைத்து வெகு சீக்கிரத்திலே முடிக்கத்தக்க நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம். ஆகவே, யாரோ சிலருக்குச் சலுகை கொடுக்க இவைகளையெல்லாம் செய்திருக்கிறோம் என்று யாரும் நினைக்க வேண்டிய அவசியமில்லை. ஆகவே, இப்பொழுது இருக்கிற விதிமுறைகளே தொடர்ந்து இருக்க வேண்டுமென்ற முறையில் இந்த மசோதாவை வற்புறுத்தத் தேவையில்லையென்று கூறி, இந்த மசோதாவை எதிர்த்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த தனியார் அலுவல் நாளன்று, திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் இவ்விவாதத்திற்கு பதிலளிக்கலாம். பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, 10—11—1975 திங்கட்கிழமை காலை 9.00 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 12.43 மணியளவில் ஒத்தி வைக்கப்பட்டது.

### (6). பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders

218. Notification issued in G.O. Ms. No. 1300, Rural Development and Local Administration, dated the 30th July 1975, in regard to framing of rules relating to the Madurai Corporation Services (Discipline and Appeal) Rules, 1975. [Laid on the table of the House under section 432 (2) of the Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil Nadu Act 15 of 1971).]

219. Notification issued in G.O. Ms. No. 363, Housing, dated the 2nd May 1975, in regard to an amendment to the Tamil Nadu Slum Clearance Board Non-Technical Officers Service Rules, 1972. [Laid on the table of the House under section 72 (2) of the Tamil Nadu Slum Areas Improvement and Clearance Act, 1971 (Tamil Nadu Act 11 of 1971).]

### B. Reports, Notifications and Other Papers

131. Ninth Report (Fifth Assembly) of the Committee on Government Assurances.

## தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை

61726

திங்கட்கிழமை, 1975 நவம்பர் 10

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள ... பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

3/N76-7632

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறுகிய கால வினா எண் 3 மாண்புமிகு அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப் படுகிறது. வினாக்கள் 260, 261, 262, 263, 264 ஆகியவை மாண்புமிகு அமைச்சரின் வேண்டுகோளுக்கேற்ப முதலில் எடுத்துக்கொள்ளப் படுகின்றன.

### குறைந்த அளவு ஊதியங்கள்.

*260. **வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு தொழிலாளர் நலன்–போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பார்—

(அ) விவசாயத் தொழிலாளர்களின் கூலியை மாற்றி அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரம் யாது?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) & (இ) 1948-ம் ஆண்டு குறைந்த அளவு ஊதியச் சட்டத்தின்கீழ் விவசாயத் தொழிலாளர்களுக்கான குறைந்த அளவு ஊதிய விகிதங்களை மாற்றியமைப்பதுகுறித்து அரசுக்கு ஆலோசனை கூறக் குழு ஒன்றினை 1—9—1975 அன்று அரசு அமைத்துள்ளது.

*261. வினு—திரு. இ. ராமசாமி : மாண்புமிகு தொழிலாளர் நலன்-போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தோட்டத் தொழில் அனைத்துக்கும் குறைந்தபட்சக் கூலி நிர்ணயச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட குழு அண்மையில் மாற்றியமைக்கப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) 1975 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மேற்படி தோட்டத் தொழிலாளர்களுக்கான குழு மாற்றியமைக்கப்பட்டது.

(இ) தொழிலதிபர்களுக்கும், தொழிலாளர் பிரதிநிதி களுக்கும் சரிசமமான பிரதிநிதித்துவத்தை அளிக்கவும் மேலும் மேற்படி பிரதிநிதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் 1974-ம் ஆண்டு அமைக்கப்பட்ட குழு 1975-ம் ஆண்டில் மாற்றியமைக்கப் பட்டது.

*262. Q.—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Labour and Transport be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to set up Advisory Committees to recommend minimum wages for workers engaged in building constructions, road building and repairs, quarries, hotels and restaurants; and

(b) if so, the details of the same?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) & (இ) கட்டடங்கள், கட்டுமானப் பணிகள், சாலை அமைத்தல், பழுது பார்த்தல், கல் வெட்டி எடுத்தல், உணவகங்கள், சிற்றுண்டிச் சாலைகள் ஆகிய வற்றில் பணியாற்றும் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்ய ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப் பட்டு செயல்பட்டு வருகின்றன. அவற்றின் அறிக்கை இன்னும் அரசுக்கு வரவில்லை.

*263. வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழி லாளர் நலன்-போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—



உப்பளங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயித்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : உப்பளங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு 1968-ஆம் ஆண்டு, குறைந்த பட்ச ஊதியம் (Minimum Wges) நிர்ணயிக்கப்பட்டது. இதனை மாற்றியமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக் கிறது.

*264 வினு—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு தொழி லாளர் நலன்-போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அச்சகத் தொழிலாளர்க்கும் திரை அரங்குகளில் பணியாற்றும் தொழிலாளர்க்கும் குறைந்த அளவு ஊதியம் நிர்ணயிக்கும் திட்டம் ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) & (இ) அச்சகத் தொழிலாளர்க்கும் திரை அரங்குகளில் பணியாற்றும் தொழி லாளர்க்கும் குறைந்த அளவு ஊதியம் நிர்ணயிப்பதற்காக சென்ற ஆண்டு மார்ச் மாதத்தில் மேற்படித் தொழில்களை 1948-ம் ஆண்டு குறைந்த அளவு ஊதியச் சட்டத்தின் அட்டவணையில் சேர்த்து அரசாணை இடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் குறைந்த அளவு ஊதியம் நிர்ணயிப்பதற்காக ஒரு குழு அமைப் பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, கீழத் தஞ்சை மாவட்டத்தில் விவசாயத் தொழிலாளர்களுக்குரிய கூலியினை நமது கழக அரசு இதற்கு முன்பே நிர்ணயித்திருக்கிறது. விவசாயத் தொழிலாளர் கூலி நிர்ணயம் சம்பந்தமாக கீழ்த் தஞ்சை மாவட்டத்திற்கு மட்டுமல்லாமல், தமிழகத்தில் உள்ள அத்தனை விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் பொருந்தும் அளவுக்கு நிர்ணயம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, ஏற்கனவே விவசாயிகளுக்கான ஒரு கூலி நிர்ணயக் குழு அமைக்

கப்பட்டு, அது தமிழகம் பூராவிற்குமாக ஒரு அறிக்கை தந்திருக்கிறது. அதற்கு கார்த்திகேயன் குழு என்று பெயர். தற்போது திரு. எஸ். பி. சீனிவாசன் அவர்கள் தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டு, அது தமிழகம் பூராவும் சுற்றி வந்துகொண்டிருக்கிறது. அவர்கள் விரைவில் அறிக்கை சமர்ப்பிக்க இருக்கிறார்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தொழிலாளர் நல அமைச்சர்கள் மாநாடு சமீபத்தில் நடந்தபோது நமது அமைச்சர் அவர்களும் கலந்துகொண்டார்கள். அப்பொழுது விவசாயத் தொழிலாளர்களுக்கு ஊதியத்தை உயர்த்துவது சம்பந்தமாக விவாதிக்கப்பட்டு, ஆகஸ்டு 15-ம் தேதிக்குள் உயர்த்தப்படும் என்று முடிவு செய்யப்பட்டதா? அப்படியானால், நேரடியாக ஓர் உத்தரவைப் போட்டுக் கூலியை அதிகப்படுத்துவதற்குப் பதிலாக, இந்தக் கமிட்டி போட்டதன் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** விவசாயிகளுக்கு ஏற்கனவே குறைந்த பட்ச கூலியை நாம் 1973-ஆம் ஆண்டு குழு போட்டு நிர்ணயித்திருக்கிறோம். ஆகஸ்டு 15 ஆம் தேதிக்குள் நிர்ணயிக்க வேண்டும் என்று பேசப்படவில்லை. ஆனால், விவசாயிகளுக்கான கூலியை நிர்ணயிப்பதற்கு ஆக்கப் பூர்வமான காரியங்களைச் செய்யவேண்டுமென்ற எண்ணத்தை இருபது அம்சத் திட்டத்தின்கீழ் மத்தியில் இருந்து எடுத்துச் சொன்னார்கள். அமைச்சர்கள் கலந்துகொண்ட அந்தக் கூட்டத்தில் பிரதமர் அவர்களும் கலந்துகொண்டார்கள். தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், விவசாயிகளுக்குக் குறைந்த பட்ச கூலிக்குக் குறையாமல் கூலி கிடைத்துக்கொண்டு வருகிறபடியால் இங்கே கிளர்ச்சி இல்லை; விவசாயிகள் நல்லபடியாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறார்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, இப்பொழுது விவசாயிகளுக்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு விதமாக, பல்வேறு வித்தியாசமான கூலி அமைந்திருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தகுந்தாற்போல், இப்பொழுது இயற்றப்பட்டிருக்கும் சட்டத்தின் அடிப்படையில், விவசாயிகளுக்குத் தக்க ஊதிய உயர்வு அளிக்க அரசு ஆவன செய்யுமா?



**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** நாம் அமைத்திருப்பது குறைந்த பட்சக் கூலிதான். அங்கங்கே இருக்கிற நிலைமைக்கேற்ப கூலி அதிகமாகிறது, அல்லது குறைவாகிறது. ஆனால், நாம் நிர்ணயித்திருக்கிற கூலிக்குக் குறைவாக யாரும் கொடுக்காதபடி பார்த்துக்கொள்வது இந்தக் குழுவின் நோக்கம். அதைத்தான் அது சட்டப்படிச் செயல்முறைப்படுத்தி வருகிறது.

**திரு. என். கே. பழனிசாமி:** மற்ற மாநிலங்களைக் காட்டிலும் இந்த மாநிலத்தில் மிகவும் குறைவான கூலிதான் தரப்படுகிறது. இந்த மாநிலத்தில் மூன்று ரூபாய், ஒன்றேமுக்கால் ரூபாய் என்ற அளவுக்குப் பல இடங்களில் கூலி அளிக்கப்படுகிறது. இதை ஒரு ரூபாய் அதிகமாக்கி, அவசரச் சட்டத்தின் மூலம் செய்வதற்கும், சர்க்கார் நியமித்திருக்கும் குழு, சிபாரிசு செய்தால் அதை அமல் செய்வதற்கு ஏதாவது மெஷினரி ஏற்படுத்தவும் சர்க்காருக்கு உத்தேசம் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மற்ற மாநிலங்களில் என்ன நிர்ணயம் செய்திருக்கிறார்கள் என்ற புள்ளி விவரம் என்னிடம் தற்போது இல்லை. மற்ற மாநிலங்களைவிட நம் மாநிலத்தில் குறைவான கூலி தரப்படுவதாக எந்த இடத்திலிருந்தும் எனக்குக் குற்றச்சாட்டுகளோ விண்ணப்பங்களோ இதுவரை வரவில்லை. ஆகவே, அந்த வகையில் விவசாயிகள் ஓரளவுக்கு நிம்மதியாக இருக்கிறார்கள் என்று நான் நம்புகிறேன். இக்குழுவில் எல்லாக் கட்சிகளையும் சார்ந்தவர்களை உறுப்பினர்களாகப் போட்டிருக்கிறோம். உடனடியாக சுற்றிப் பார்த்து அறிக்கை சமர்ப்பிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். விவசாயிகளுக்குத் தகுந்த பாதுகாப்பு அளிப்பதற்கு நாங்கள் எல்லா விதமான முன்னேற்பாடுகளையும் செய்திருக்கிறோம் இதுவரை குறைபாடு இல்லை. அப்படி ஏதேனும் குறைபாடு இருந்தால், அரசு தக்க நடவடிக்கை எடுக்கத் தயங்காது.

**திரு. நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலே கூட இந்த வாரம் விவசாயத் தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயிக்கின்ற குழு சுற்றுப் பயணம் செய்ய இருக்கிறது. இதேபோல் பல குழுக்கள் அமைக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவை எல்லாம் 20 அம்சத் திட்டத்தின்படி அமைக்கப்பட்ட

குழுக்களா? அல்லது நம்முடைய அரசாங்கமே விவசாயத் தொழிலாளர்களின் குறைகளை அறிந்து அவற்றைத் தீர்க்க வேண்டுமென்று அமைக்கப்பட்ட குழுக்களா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, பல குழுக்களை நாமே அமைத்துக் கொண்டிருக்கிறோம். 20 அம்சத் திட்டத்தில் மீண்டும் அது இடம் பெறவேண்டுமென்று விவசாயத் தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் நாமும் நம்பினோம், அதற்காகக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. தோட்டத் தொழிலாளர்கள், கட்டடத் தொழிலாளர்கள், சாலை அமைக்கின்ற தொழிலாளர்கள் போன்ற தொழிலாளர்களுக்கு எல்லாம் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. உணவகங்களைப் பொறுத்த வரையில் பணியாற்றுகின்ற தொழிலாளர்கள், சிற்றுண்டிசாலைகளிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் ஆகியவர்களுக்காகவும் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. தோட்டத் தொழிலாளர்களுக்காக அமைக்கப்பட்டிருக்கின்ற குழு இதுவரையில் ஒன்பது முறைகள் அமர்ந்து ஆலோசித்து இருக்கிறது. உப்பளத் தொழிலாளர்களுக்காகவும் குழு அமைக்கப்படுவதுபற்றி அரசாங்கம் ஆலோசனை செய்து வருகிறது. ஆகவே, தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் இந்தக் குழு வேகமாகச் செயல்பட்டு வருகிறது.

**திரு. ஆ. சுப்பையா:** தலைவர் அவர்களே, இப்போது அமைக்கப்பட்டிருக்கிற உயர்திரு சீனிவாசன் அவர்கள் குழு விவசாயத் தொழிலாளர்களுக்காக கூலி நிர்ணயம் செய்வதாக இருக்கிறது. அந்தக் குழு கீழத் தஞ்சையில் கூலி நிர்ணயம் செய்வதற்காகவும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறதா? இல்லையென்றால் அதையும் சேர்த்துப் பரிசீலனை செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** கனம் உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனையை அரசு ஆலோசிக்கலாம்.

**திரு. வெ. ந. முத்தமிழ்ச்செல்வன்:** தலைவர் அவர்களே, விவசாயக் கூலி நிர்ணயம் செய்கின்றபோது, விவசாயக் கூலியாட்கள் வேலைக்கு வருவதிலும் வேலையிலிருந்து திரும்பிச் செல்வதிலும் மாவட்டத்திற்கு மாவட்டம், கிராமத்திற்குக் கிராமம் வித்தியாசங்கள் இருக்கின்றன. இதை ஒழுங்குபடுத்துவதற்கும், ஒழுங்குபடுத்திக் கூலியை நிர்ணயிப்பதற்கும் அரசு தனி முயற்சி மேற்கொள்ளுமா?



**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, இந்த வித்தியாசங்களை மாற்றுவது என்பது கடினமான காரியம். சில வேளைகளில் வேலையாட்கள் அதிகமாகக் கிடைத்தால் குறைந்த கூலி தருவதும் சில வேளைகளில் வேலையாட்கள் குறைவாகக் கிடைத்தால் அதிகமாகக் கூலி தருவதும் ஒரு இயற்கைச் சூழலாக நடைபெற்று வருகிறது. ஆனால் நம்மைப் பொறுத்தவரையில் விவசாயத் தொழிலாளர்கள் எந்த வகையிலும் பாதிக்காத வகையில் கூலி நிர்ணயித்து இருக்கிறோம்.

**திரு. எம். சுரேந்திரன்:** தலைவர் அவர்களே, இங்கே விவசாயத் தொழிலாளர்கள், பிளான்டேஷன் தொழிலாளர்கள், உப்பளத் தொழிலாளர்கள், பிரஸ் தொழிலாளர்கள் போன்ற பல்வேறு பிரிவினர்கள் சம்பந்தமாகக் குறைந்தபட்சக் கூலி சம்பந்தமாகக் கேட்கப்பட்டிருக்கிறது. இந்தப் பிரிவினர்கள் எல்லாம் கிளர்ச்சிகள் செய்து தங்களுடைய உரிமையைப் பெறக்கூடிய வாய்ப்பும் வசதியும் இல்லாமல் இருக்கிறார்கள். அப்படி அவர்கள் கிளர்ச்சி செய்யாத காரணத்தினால் அவர்கள் யாரும் கேட்கவில்லை என்பதாக அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். கேரளா போன்ற மாநிலங்களிலே விவசாயக் கூலிகளுக்கு கிராஜுவட்டி, பிராவிடண்ட் பண்ட் இவைகளுக்கான சட்டங்களையெல்லாம் கொண்டுவந்திருக்கிறார்கள். இன்னும் இங்கே குறைந்தபட்சக் கூலி கொடுப்பதற்குக்கூட காலந்தாழ்த்திக் கொண்டே வருகிறோம். 20 அம்சத் திட்டம் அறிவிக்கப்பட்டு அது உறுதியாக வேகமாகச் செயல்படுத்தப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டும்கூட இது காலந்தாழ்த்தப்பட்டுக் குழு மூலம் கொண்டு வரப்போவதாகச் சொல்வது சரிதானா? குழுக்கள் போடப்பட்டு அவை அறிக்கை கொடுப்பதற்கு முன்னாலே இருக்கிற இடைக்காலத்தில் ஒரு இடைக்காலக் கூலி நிர்ணயம் செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** ஏதோ 20 அம்சத் திட்டத்தை நாம் கைவிடவேண்டுமென்பதற்காகத்தான் இப்படியெல்லாம் செய்கிறோம் என்ற எண்ணத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொல்கிறார்கள். அது தவறான கருத்தாகும். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில்—மற்ற எல்லா மாநிலங்களிலேயும் சட்டம் போட்டிருக்கிறார்கள் என்றாலும்கூட அவற்றை நிறைவேற்றுவது கிடையாது, முறைப்படுத்துவது கிடையாது—நடைமுறைப்படுத்துகிறார்களா என்பதில்

தான் சிக்கல் இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால், பீடித் தொழிலிலே இந்தியாவிலேயே நம்முடைய மாநிலத்தில்தான் சரியான கூலி நிர்ணயித்திருக்கிறோம். நாம் நிர்ணயித்திருக்கிற கூலியைப் பொறுத்தவரையில் பீடித் தொழில் முதலாளிகள்கூடச் சமாளிக்க முடியவில்லை என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள், அமைச்சர்கள் கலந்து கொள்கிற மாநாடுகளிலே சொல்கிறார்கள், நாங்கள் உடனடியாகத் தமிழ்நாடு அளவிற்குக் கொடுக்க ஏற்பாடு செய்கிறோம், தமிழ்நாட்டைவிட அதிகமாகக்கூடக் கொடுக்கப் போகிறோம் என்று பேசுகிறார்கள், ஆனால் அவற்றை நடைமுறைப்படுத்துவதில்லை. தமிழ்நாட்டிலே நாம் 4 ரூபாய் தருகிறோம் என்றால் அவர்கள் இன்னும் மூன்று ரூபாய் என்ற அளவிலேதான் தருகிறார்கள். ஆகவே யார் நிறைவேற்றுகிறார்கள், யார் நிறைவேற்றாமல் இருக்கிறார்கள் என்பதையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது தஞ்சையில் 3 ரூபாய் கூலி கொடுக்கப்படுவதாகக் கூறினார்கள். எங்களுடைய மாவட்டத்திலே 5 ரூபாய் கூலியாக இருக்கிறது. இப்படிக் கூலி அளவு ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு மாதிரியாக இருக்கிறது. அப்படி இருப்பதை மாற்றி மாநிலம் பூராவிற்கும் ஒரே கூலியளவு என்று கொண்டு வந்தால் எங்கள் பகுதியில் உள்ள தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள், ஆகவே, அவர்கள் பாதிக்காத முறையிலே எங்கே அதிகமாகக் கூலி கொடுக்கப்படுகிறதோ, அந்த அதிகமான கூலியைவிட அதிகமான அளவிற்குக் குறைந்தபட்சக் கூலியை நிர்ணயிக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** ஏற்கனவே நாம் நிர்ணயித்திருக்கிற குறைந்த பட்சக் கூலியை அதிகமாக்கித் தருவதை சர்க்கார் வரவேற்கிறது.

**திரு. கு. காமாட்சி:** தலைவர் அவர்களே, விவசாயத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்சக் கூலி கொடுக்க வேண்டியது நியாயமானது. ஆனால் அதே நேரத்திலே விவசாயத் தொழிலாளர்களில் திறமையானவர்கள் எல்லாம் இருக்கிறார்களே, அவர்கள் எல்லாம் அதிகமான வேலை செய்கிறார்களே, அவர்களுக்கு எப்படி கூலி நிர்ணயம் செய்யப்படும் என்பதை அறிய





விரும்புகிறேன். ஒரு கட்டு நாற்றைப் பறித்து நடுவதற்கு என்று கூலி தரப்படுவது இல்லை, ஒன்றரைக் கட்டு, இரண்டு கட்டு நாற்றைப் பறித்து நடுகிறவர்களும் இருக்கிறார்கள், 3½ கட்டு, 4 கட்டு பறித்து நடுகிறவர்களும் இருக்கிறார்கள். இவர்களுக்கு எல்லாம் எந்த அடிப்படையில் கூலி நிர்ணயம் செய்ய இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். 20 அம்சத் திட்டத்திலே இதைப்பற்றி ஏதாவது சொல்லியிருக்கிறார்களா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, 20 அம்சத் திட்டத்தில் இதையெல்லாம் சொல்லவில்லை. சராசரியாக கூலி நிர்ணயம் செய்யப்படுகிறது. 1½ கட்டு, 3 கட்டு என்றெல்லாம் நல்ல வேளையாக அவர்கள் ஆராய்ச்சி செய்யவில்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** ஓட்டல் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சச் சம்பளம் நிர்ணயிப்பதற்காக ஒரு குழு அமைத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் குழுவின் முடிவு எப்போது வரும்? பிரஸ் சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுக்கும் குழு அமைத்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** அச்சகத் தொழிலாளர்களுக்கும் திரையரங்குத் தொழிலாளர்களுக்கும் குழு நியமிக்க ஏற்பாடு செய்துவருகிறோம். தோட்டத் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட வரையில் ஒரு குழு அமைக்கப்பட்டு பல இடங்களில் அந்தக் குழு சுற்றுப் பயணம் செய்து இதுவரையில் 9 சிட்டிங்ஸ் நடந்திருக்கிறது. உப்பளத் தொழிலாளர்களுக்காகக் குழு அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இந்த ஓட்டல் தொழிலாளர்களுக்காக அமைக்கப்படுகிற குழு விரைவிலே தன்னுடைய அறிக்கையைச் சமர்ப்பிக்க இருக்கிறது.

**திரு. ஆ. கு. சுப்பையா:** தலைவர் அவர்களே, குறைந்த பட்சக் கூலி நிர்ணயம் செய்வதற்குப் பதில் ஒரு குடும்பத்திற்கு வருஷத்திற்கு இவ்வளவு செலவாகும் என்பதைக் கணக்கெடுத்து அதை அடிப்படையாக வைத்துக் குறைந்தபட்சக் கூலியை நிர்ணயித்துச் சட்டப்பூர்வமாகக் கொண்டுவர அரசு ஆலோசிக்குமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** இப்போது போடப்பட்டிருக்கிற குழுக்கள் எல்லாம் பகுதி நேரத் தொழிலாளர்கள் சம்பந்தமாகப் போடப்பட்டிருக்கின்றன. விவசாயத் தொழிலாளர்களை எடுத்துக்கொண்டால் ஆண்டு முழுவதும் நடைபெறுவதில்லை. ஆகவே ஒரு குடும்பத்திற்கு இவ்வளவு கூலி என்று பார்த்துக் கொடுப்பதற்கான சந்தர்ப்பங்கள் விவசாயத் தொழிலிலே சாத்தியப்படாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. என். கே. பழனிசாமி:** சார், மற்ற நாடுகளைப் பொறுத்த வரையிலே போனஸ் கிடையாது. இப்போது மத்திய சர்க்காரிலே போனஸ் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே எந்த அளவிற்குக் கூலி நிர்ணயிக்க வேண்டுமென்பது அவசியமாகிறது. அதாவது நீட் பேஸ்டு வேஜஸ் என்பது அவசியமாகிறது. ஆகவே இந்த அரசு கொண்டுவரப்போவது கூலி நிர்ணயமா அல்லது சாதாரண—தேவை அடிப்படையில்—கொடுக்கப்படுகிற மினிமம் வேஜா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** உழைப்புக்கேற்ற ஊதியம் என்ற கொள்கையை நாம் வரவேற்கிறோம். ஆனால் போனஸ் இல்லையென்று அறவே மத்திய அரசாங்கம் நீக்கிவிடவில்லை. லாபம் வந்தாலும் நஷ்டம் வந்தாலும் 8.33 சதவீதம் என்ற நிலைமை இருந்தது. இப்போது 4 சதவீதம் முதல் 20 சதவீதம் வரை என்று வைத்திருக்கிறார்கள். அறவே போனஸ் என்பது நீக்கப்படவில்லை. நம்முடைய குழுக்கள் எல்லாம் ஒரு தொழிலிலே எந்த அளவிற்குக் குறைந்த கூலி நிர்ணயம் செய்தால் அவர்களுடைய வாழ்க்கைப் பாதிக்கப்படாமல் இருக்கும், அதே நேரத்திலே அந்தத் தொழிலும் பாதிக்கப்படாமல் இருக்கும் என்பதைப் பார்த்து நிர்ணயிக்க இருக்கிறோம்.

**திரு. கா. வேழவேந்தன்:** திரையரங்குகளிலே டிக்கட் கிழிக்கிற பணியிலே ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் அவர்களுடைய டிக்கட்டுகளையே முதலாளிகள் எந்த நேரத்திலும் கிழித்துவிடக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே அவர்களுடைய வேலையை நிரந்தரமாக்கவும் குறைந்தபட்ச ஊதியம் அவர்களுக்குக் கொடுக்கவும் நடவடிக்கை எடுத்துக் கொள்ள அரசு முன்வருமா?

வினாக்கள்-விடைகள்

1975 நவம்பர் 10]

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப்போல, அச்சகத் தொழிலாளர்களுக்கும், திரையரங்கு தொழிலாளர்களுக்கும் விரைவில் ஒரு குழு அமைக்கப்பட இருக்கிறது.

### கண்ணொளி வழங்கு திட்டம்.

*250 வினா—**திரு. எல். கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

முதலமைச்சர் கண்ணொளி வழங்கும் திட்டத்தின் மூலம் இதுவரை எத்தனை பேர்களுக்கு கண்ணொளி வழங்கப்பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியின் பெயரால் அமைந்துள்ள கண்ணொளி வழங்கும் திட்டத்தின்மூலம் இதுவரை—31—3—1975 வரை—6,66,432 பேர்களுக்குக் கண் சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.

**திரு. என். டென்னிஸ்:** தலைவரவர்களே, கண் சிகிச்சை பெற்று ஆபரேஷன் நடந்தவர்களுக்குக் கண்ணாடி வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டு வருகிறது. இதைத் தவிர்ப்பதற்காக வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, அவ்வாறு கண்ணிலே புரை அறுவை சிகிச்சை நடந்த 93,476 பேர்களுக்கு ஏறக்குறைய ஒரு வார காலத்தில் அல்லது இரண்டு நாட்கள் வேற்றுமையில் கண்ணாடி வழங்கப்பட்டிருக்கிறது. ஒரு வாரம் கழித்து வரும்பொழுது சிலருக்கு அந்தக் கண்ணாடி அல்லது ஃப்ரேம் பொருத்தமாக இல்லை என்று தாமதம் ஆகலாமே தவிர, பெரும்பாலும் மாவட்ட ஆட்சித் தலைவர் கண்காணிப்பிலே நடைபெறுகிறது. ஆகவே, பெரும்பாலும் கண்ணாடி வழங்குவதில் தாமதம் ஏற்பட்டதாகப் புகார் இல்லை.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** தலைவரவர்களே, இந்தக் கண் சிகிச்சை செய்வதில் தனிப்பட்ட சில தொண்டுள்ளம் படைத்த சங்கங்கள்கூட ஈடுபடுகிறார்கள். உதாரணமாக, லயன்ஸ்

இளப் போன்றவைகள் கண் சிகிச்சை முகாம் அமைத்து சிகிச்சை செய்து வருகின்றன. அதற்காக ஒரு மருத்துவ மனையையே வைத்துக்கூட திருப்பூர் போன்ற இடங்களில் நடத்தப்படுகிறது. அவைகளுக்கு அரசாங்கம் உதவி செய்து அவர்களின் பணியை இன்னும் தீவிரப்படுத்தவும், அதிகப் படுத்தவும் ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, அப்படி நடைபெறுவது மிகக் குறைவானது. அப்படி நடைபெற்றாலும் ஒன்றிரண்டு இடங்களில் ஒரு நாளைக்கு ஒருவர் இருவர்தான் சிகிச்சை பெறும் வாய்ப்பு இருக்கிறது. முகாம் நடத்தும் முறையிலே அரசு ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு பரவலாகத் திட்டமிட்டு கிராமங்களுக்குத் தெரிவித்து அரசு அலுவலாளர் கள் பலயிடங்களுக்குச் சென்று கண் பரிசோதனை நடத்தி மக்களை அழைத்து வந்து நடத்துகிறார்கள். அப்படிப்பட்ட முகாம்களில் 300 பேர், 400 பேர், 1000 பேர்களுக்குப் புரை அறுவை சிகிச்சை நடைபெறுவது என்பதைப் பார்க்கும் பொழுது மற்றவர்கள் அதில் 100-க்கு 1 பங்குகூட நடத்த வாய்ப் பில்லை. எங்கேயாவது அவர்கள் ஆர்வத்தோடு நடத்தினால் அது பாராட்டுக்குரியதாகும்.

**திரு. எம். சுரேந்திரன்:** சார், கண் கோளாறு உள்ள இலட்சக் கணக்கானவர்களுக்குச் சிகிச்சை செய்திருப்பதாக அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். இப்படிக் கண்ணில் கோளாறு உள்ளவர்கள் சிகிச்சை செய்து கொண்டதற்குப் பின்னால் அவர் களுக்கு மீண்டும் மீண்டும் கண்ணில் கோளாறு உண்டாகாமல் தடுப்பதற்கான வாய்ப்பு ஏற்படச் செய்ய வேண்டியது அவசிய மாகும். அப்படி மீண்டும் கோளாறு வருவதற்குச் சத்துணவு இல்லாமை இன்னும் இதர காரணங்கள் இருக்கலாம் என்று சொல்கிறார்களே. ஆகவே, சிகிச்சை செய்தவுடன் கோளாறு மேலும் உண்டாகாமல் தடுக்கத்தக்க ஏற்பாட்டை இந்த அரசாங்கம் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, பாரத பூமி தங்க பூமியாக ஆனதற்குப் பிறகு சுரேந்திரன் அவர் களுடைய ஆசை நிறைவேறும். 50 வயதுக்கு மேல் ஆனவர் களுக்கு இந்தச் சத்துணவு தருவது என்ற முறையிலே பெரும் பலன் ஏற்படுவது இல்லை. 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குத்



தரப்படுகின்ற சத்துணவுதான் 20 வயதுவரை வளம் தரும். அதுவும் 20 வயதுக்குள் தரும் வளம்தான் 60 வயதுவரை ஊட்டத்தைத் தரும். ஆகவே, திரு. சுரேந்திரன் இனி குழந்தை யாக முடியாது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், இந்த 'மெட்ராஸ் ஐ' என்பது பரவ ஆரம்பித்து, அது 'எபிடமிக்' மாதிரி பரவியது. அது முழுமையாக மாநிலத்தில் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்னால் அதுபற்றி அவையிலே நான் தனியாக விளக்கம் தந்தேன். பெரும்பாலும் நின்று விட்டது. காற்று அடிக்கிற வகையிலே வந்தது. மறுபடி எந்தக் காற்று அடித் ததோ, போய் இருக்கிறது.

## மாதர்பாக்கம் மருத்துவ மனைக் கட்டடம்.

*251 வினா—**திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கற்பட்டு மாவட்டம், பாதிரிவேடு மாதர்பாக்கம் அரசினர் மருத்துவ மனைக்குரிய புதிய கட்டடம் கட்டித்தரும் செயற்குறிப்பு ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், இது எப்போது நிறைவேறும்?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ & இ) இதுபற்றிச் சுகாதாரம், குடும்பக் கட்டுப்பாடு இயக்குநரின் ஆய்வு மேற் கொள்ளப்பட்டிருக்கிறது.

**திரு. கா. வேழவேந்தன்:** தலைவரவர்களே, மேற்கண்ட ஊரில் அரசினர் மருத்துவமனைக்குரிய கட்டிடம் கட்ட ஊர் மக்களே சேர்ந்து அமைச்சரிடம் நேரில் ஒரு பகுதி நிதியைத் தந்திருக்கிறார்கள். ஆகவே, அந்தத் தொகை அரசாங்கத்திற்கு வந்திருக்கிறது. இதற்கு விரைவாக முன்னுரிமை கொடுத்து அந்த ஊரிலே அரசாங்க மருத்துவ மனைக்கான கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா? ஏனென்றால் அங்கே ஏராளமான

நோயாளிகள் வருவதால் நெருக்கடியாக இருக்கிறது. எனவே உரிய நடவடிக்கைகள் விரைந்து எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இது இரண்டு மூன்று வகையான நெருக்கடி நேரம். மருத்துவ மனைகளிலே வரும் எண்ணிக்கை அதிகம். அதிலும் ஒரு நெருக்கடி. நிதி நெருக்கடி இன்னொரு பக்கம். 25,000 ரூபாய் நிதி கிடைத்தது. நன்கொடையாக அவர்கள் அளித்த அந்த நிதி போதாது. அதேபோல இடமும் போதுமானதாக இல்லை. நிலம் சம்பந்தமாக மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. அந்த இடமும் கிடைத்த பிறகு, இந்த நிதியை அதிகப்படுத்தி கட்டடத்தைத் துவக்க முயற்சிக்கப்படும்.

## குடிநீர் வழங்கு திட்டங்கள்

*252 வினா—திரு. ஏ. பாலையா: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், கல்லுக்கூட்டம் குடிதண்ணீர்த் திட்டத்தை நிறைவேற்ற எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கல்லுக்கூட்டம், திங்கள் சந்தை மற்றும் நெய்யூர் பேரூராட்சிகளுக்குக் கூட்டுக் குடிநீர் வழங்கும் திட்டத்திற்காக ஆய்வு மதிப்பீடு ஒன்றுக்கு 17—10—74 அன்று ஒப்புதலளித்தது. மேல் குறிப்பிட்ட மூன்று பேரூராட்சிகளும் அவரவர்களின் விகிதாசார ஆய்வுத்தொகை முழுவதையும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்குச் செலுத்தியுள்ளார்கள். மேற்படி திட்டத்திற்கான ஆய்வு வேலைகள் 1975 ஏப்ரல் முதல் வாரத்தில் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. ஆய்வு வேலைகள் முடிவடைந்தவுடன் இப்பேரூராட்சிகளின் குடிநீர்த் திட்டத்திற்கான உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்படும்.

*253 வினா—திரு. சீ. க. வடிவேலு: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி வட்டம், மேட்டுப்பாளையம், தாத்தையங்கார்பேட்டை ஆகிய பேரூராட்சி





களுக்குக் குடிதண்ணீர் திட்டம் வேண்டும் என்று கோரிக்கைகள் ஏதேனும் அண்மையில் வந்துள்ளனவா?

(இ) ஆம் எனில், அதன்மீது என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) (1) மேட்டுப்பாளையம் பேரூராட்சி குடிநீர் கோரிக்கையின் ஆய்வுக்கான மதிப்பீடு ரூ. 10,300 ஐச் செலுத்திய பின் ஆய்வு மேற்கொள்ளப்படும்.

(2) தாத்தையங்கார்பேட்டை பேரூராட்சி, குடிநீர் கோரிக்கையின் ஆய்வுக்கான மதிப்பீடு ரூ. 22,000-ஐச் செலுத்த முன்வரவில்லையாகையால் அப்பேரூராட்சியின் கோரிக்கை கைவிடப்பட்டுள்ளது.

திரு. சீ. க. வடிவேலு: தலைவரவர்களே, சில பேரூராட்சிகளில் நிர்வாகம் செய்வதற்கே மிகவும் நெருக்கடியான நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. அதை உணர்ந்து தமிழக அரசே ஆய்வுக்கான செலவை ஏற்று நடத்த முன்வருமா? அது நீண்ட நாட்களாக வறட்சிப் பகுதியாக இருக்கிறது. குறிப்பாகச் சென்ற ஆண்டில் தண்ணீர்ப் பஞ்சம் அதிக அளவில் ஏற்பட்டு மக்கள் மிகவும் அவதிப்பட்டார்கள். அதை மனதில் வைத்து அரசாங்கம் துரித நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, தமிழ் நாட்டிலே உள்ள கிராமங்கள், பேரூராட்சிகள்—அகில இந்தியாவில்—மாநில அளவில் பார்த்தால் ஏராளம். இந்த ஏராளமான இடங்களுக்கு முன்னுரிமை தந்து செயலாற்றும் முறையில், ஆய்வு நடத்துவதற்காகப் பணம் கட்டிய இடங்களுக்கு ஆற்ற வேண்டிய பணியை ஆற்றிவிட்டு, ஆய்வுக்கும் சேர்த்துப் பணம் போட வேண்டிய பேரூராட்சிகளுக்கு அதைத் திரும்பக் கட்டுவதற்கான ஆற்றல் இருக்காது என்பதால் பிறகு நிதி வசதி உள்ளபோதுதான் கவனிக்கப்படும்.

* 254 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், காவேரிப்பாக்கம் குடிநீர்த் திட்ட வேலை எப்போது துவங்கப்படும் ?

(இ) இந்தத் திட்டத்தினால் பயன்பெறும் ஊர்கள் எத்தனை ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) வடாற்காடு மாவட்டம் காவேரிப்பாக்கம் குடிநீர்த் திட்ட வேலைகள் 1971 ஆம் ஆண்டு மே மாதம் துவங்கப்பட்டன. திட்ட வேலைகள் யாவும் முடிக்கப்பெற்று 1—8—1974 அன்று பஞ்சாயத்து வசம் ஒப்படைக்கப்பட்டது.

(இ) இந்தத் திட்டத்தினால் (1) அத்திப்பட்டு, (2) திருப்பாற் கடல், (3) ராமாபுரம் ஆகிய ஊர்கள் பயன் பெற்றுள்ளன.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, இந்த காவேரிப்பாக்கம் குடிநீர்த் திட்டத்தில் மூன்று கிராமங்கள்தான் இணைக்கப்பட்டிருக்கின்றன. அந்த ஒன்றியத்திலே ஏறக்குறைய 20 கிராமங்களுக்குக் குடிநீர் வசதி வேண்டுமென்று குடிநீர் வடிகால் வாரியத்திற்கும், அரசாங்கத்திற்கும் கூட அந்த ஒன்றியத் தலைவர் விண்ணப்பம் அளித்துள்ளார். அரசாங்கத்திடம் நிதி இல்லை. ஒன்றியத்திடம் 11 இலட்சம் ரூபாய் பொது நிதியாக இருக்கிறது. அந்தப் பொது நிதியிலேயிருந்து பணம் எடுக்கக் கூடாது என்ற முறை இருப்பதால் அதிலிருந்து எடுத்து நிறைவேற்ற முடியாது. எனவே, மாண்புமிகு முதலமைச்சரவர்களும், நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்களும் உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களும் கலந்து எங்கெங்கே ஒன்றியங்களிலே பொது நிதி இருக்கிறதோ, அதையெடுத்து அவர்கள் குடிநீர்த் திட்டத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற ஏற்பாட்டைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, இந்த மூன்று கிராமங்களுக்கும் இணைக்கப்படவே 10 இலட்சம் ரூபாய் செலவாகி இருக்கிறது. ஒன்றியத்திலே 20 கிராமங்கள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். 11 இலட்சம் ரூபாய் ஒன்றியத்திடம் இருக்கிறது என்றால் மீதம் 40 இலட்சம் ரூபாயை





அந்த ஒன்றியத்தால் எங்கிருந்து பெற்றுத்தர முடியும்? ஒன்றியத்தின் பெயரால் கடன் வழங்க மேற்கொள்ளப் பட்டிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. பேரூராட்சியின் பெயரால் கடன் வழங்கினால், பேரூராட்சிகளும், ஊராட்சிகளும் அதைத் திருப்பிக் கட்டுவதற்கான வாய்ப்பு இருக்க வேண்டும். இல்லையென்றால் தற்காலிகமாகக் குடிநீர்க் குழாய்களை ஆங்காங்கே போட்டுக் கொள்ளலாம்.

## பொறியியல் பகுதிநேர பட்டப் படிப்பு

* 246 வினா—திரு. எம். முத்தையா: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொறியியல் (B.E.) பட்டப் படிப்பு வகுப்புகளில் 1974–75 ஆம் கல்வி ஆண்டில் பகுதி நேரப் படிப்புக்காக எத்தனை மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் ?

(இ) அதில் தாழ்த்தப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) 392 பேர்கள்.

(இ) 26 பேர்கள்.

[முற்பகல் 9.30]

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** பகுதி நேர பி.இ. கோர்சுக்கு மாணவர்களைச் சேர்க்க உள்ள விதி முறைகள் என்ன? தாழ்த்தப்பட்ட மாணவர்கள், பின்தங்கிய மாணவர்கள் போதிய அளவுக்கு வரவில்லை என்பது உண்மையா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** முழு நேரப் பொறியியற் கல்லூரியில் எந்த விகிதாசார அடிப்படையில் மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்களோ அதே விகிதாசார அடிப்படையில்தான் பகுதி நேரப் படிப்புக்கும் சேர்க்கப்படுகிறார்கள். தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு 18 சதவிகிதம். பிற்பட்ட மாணவர்களுக்கு 31 சதவிகிதம், மற்றைய பிற வகுப்பினர்கள் எல்லோருக்கும் சேர்த்துப் பொதுவாக 51 சதவிகிதம் என்ற அந்த விகிதத்தின் அடிப்படையில்தான் சேர்க்கப்படுகிறார்கள். 1974–75 ஆம் ஆண்டில் சேர்ந்த 392 பேரில் பிற்பட்ட வகுப்பினர் 198 பேர் ; தாழ்த்தப்பட்டவர்கள் 26 பேர் ; பிற வகுப்பினர் எல்லோரும் சேர்ந்து 168 பேர். ஆக,

[மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1975 நவம்பர் 10]

தாழ்த்தப்பட்டவர்களில் தகுதி உள்ளவர்கள் அனைவரும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்; அதிலே மீதி இருந்த இடங்கள் முழுவதும் பிற்பட்ட வகுப்பினருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. சதவிகித அடிப்படையில் பார்த்தால் 7 சதவிகிதம் தாழ்த்தப்பட்டவர்கள்; 50 சதவிகிதத்தினர் பிற்பட்ட வகுப்பினர்; பிற வகுப்பினர் எல்லோரும் சேர்ந்து 42 சதவிகிதத்தினர்.

திரு. நா. வீராசாமி: பார்ட் டைம் பி.இ. கோர்சில் ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள்? சிவில் எஞ்சினியரிங் மாணவர்களுக்கு கிராக்கி இருக்கிறது. எட்டு ஆண்டுகள் அனுபவம் உள்ளவர்களுக்குத்தான் பி.இ. சிவில் எஞ்சினியரிங் கொடுக்கிறார்கள். ஐந்து ஆண்டுகள் அனுபவம் பெற்றவர்களுக்குத்தான் பி.இ. எலட்ரிகல், மெகானிக்கல் கோர்சில் இடம் கிடைக்கின்றது. ஆகவே, வயதானவர்களுக்குத்தான் வாய்ப்பு இருக்கிறதே தவிர, இரண்டாண்டுகள், மூன்றாண்டுகள் அனுபவம் பெற்றவர்களுக்கு வாய்ப்புக் கிடைப்பதில்லை. ஆக, இதை மனதில் கொண்டு 5 ஆண்டுகள், 8 ஆண்டுகள் அனுபவம் இருக்கவேண்டுமென்ற முறையை நீக்க முன்வருவார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: குறைந்தது மூன்று ஆண்டுக் காலம் வெளியே பணியாற்றியிருக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அதற்கு வருகிறவர்கள், 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள், 17 ஆண்டுகள் அனுபவம் பெற்றவர்கள் எல்லாம் வருகிறபோது அவர்களுக்குதான் முதலிடம் கொடுக்க வேண்டியிருக்கிறது. அப்படி முதலிடம் தருகிறபோது பின்னால் தேர்வு பெற்று வருகிறவர்கள் தேங்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அவ்வளவு பேரையும் எடுத்துக் கொள்ள போதுமான அளவுக்கு 'பொறியியற் கல்லூரிகளில் இடம் இல்லை. சிவில், மெகானிகல், எலெக்ட்ரிகல் ஒவ்வொன்றுக்கும் 30 இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. சில இடங்களில் இட வசதியைப் பொறுத்து 20 இடங்கள் வீதம் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

## திருவொற்றியூரில் தொழில் நுணுக்கப் பள்ளி

* 247 வினா—திரு. மா. வெ. நாராயணசாமி: மாண்புமிகு கல்வி—சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் நகரில், ஒரு தொழில் நுணுக்கப் பள்ளி துவக்கிடும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத் தொடக்கத்திலிருந்தே புதிய தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களைத் துவங்க வேண்டியதில்லை என்றும் இருக்கிற வசதிகளைச் சீர் செய்வதிலும், தரத்தை மேம்படுத்துவதிலும்தான் அதிகக் கவனம் செலுத்தவேண்டுமென்றும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. ஆகையால் திருவொற்றியூரில் ஒரு தொழில் நுட்பப் பள்ளி துவக்க வேண்டுமென்ற தொழில் நுட்பப் பள்ளி துவக்க வேண்டுமென்ற கோரிக்கையை அரசு ஏற்றுக் கொள்ளவில்லை.

திரு. மா. வெ. நாராயணசாமி: திருவொற்றியூர் நிரம்ப தொழிற்சாலைகள் உள்ள பகுதியாக உள்ளதாலும், பக்கத்தில் எண்ணூர், மணலி போன்றவை தொழில் பகுதிகளாக விளங்கி வருவதாலும் இப்படி ஒரு பாலிடெக்னிக்கை அந்தப் பகுதியில் தொடங்க வேண்டுமென்ற கோரிக்கை நிரம்ப நாட்களாக இருந்து கொண்டிருக்கிறது. அதற்கு அரசு போதிய அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்யக்கூடிய சூழ்நிலை இல்லை என்றாலும் அந்த வட்டாரத்தில் இருக்கிற தொழிலதிபர்களை வற்புறுத்தி நிதி அளிக்கச் சொல்லி தொழில் நுட்பப் பள்ளியைத் தொடங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அகில இந்திய அளவிலும், மாநில அளவிலும் கொள்கை அளவில் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இருக்கின்ற பல்தொழில் நுட்பப் பள்ளிகளின் அளவு, மாணவர்கள் அளவு, வேலை வாய்ப்புப் பெறுகிற அளவு ஆகியவற்றை வைத்துக் கணக்கிட்டு புதிய தொழில் நுட்பப் பள்ளிகள் தொடங்கப்படக் கூடாது என்று அகில இந்தியத் தொழில் நுட்ப போர்டும் குறிப்பிட்டிருக்கிறது, மாநில தொழில் நுட்ப போர்டும் அந்த வகையில்தான் கருத்தறிவித்திருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலம் முழுவதும் புதிய தொழில் நுட்பப் பள்ளிகளைத் தொடங்கக் கூடாது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. சிலபல

கோர்சுகளை, சான்ட்விச் கோர்ஸ் போன்றவற்றை ஏற்படுத்த வேண்டுமென்றால் இருக்கிற பல்தொழில் நுட்பப் பள்ளிகளிலேயே அவற்றைச் சேர்த்துக் கொள்ளலாம், மேம்பாடு செய்யலாம் என்று அகில இந்திய அளவிலும், மாநில அளவிலும் முடிவெடுக்கப் பட்டிருக்கிறது. சென்னையைப் பொறுத்தவரை மூன்று, நான்கு பல்தொழில் நுட்பப் பள்ளிகள் இருக்கின்றன. அவற்றிலே யாரும் சேர வாய்ப்பிருக்கிறது.

### திருமுல்லைவாசலில் உயர்நிலைப்பள்ளி

***248 வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி வட்டம், திருமுல்லைவாசலில் உயர்நிலைப்பள்ளி அமைத்திட பொதுமக்கள் பங்குத் தொகை ஏதேனும் கொடுத்துள்ளார்களா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) & (இ) ஆம். பள்ளிக் கட்டிடம் கட்டுவதற்காக ரூ. 12,500-ம், பள்ளி பராமரிப்புக்காக ரூ. 10,000-ம் கொடுக்கப்பட்டது.

**திரு. என். கிட்டப்பா:** சீர்காழி வட்டம், திருமுல்லைவாயிலில் உயர்நிலைப் பள்ளி அமைத்திட வேண்டுமென்று கடல் கடந்து வாழ்கின்ற கொடிணம்பாளையம், திருமுல்லைவாயிலைச் சார்ந்தவர்கள் அதற்காக நிதி அனுப்பியிருப்பதாகக் கூறப்படுகிறது. இந்த நீண்ட நாளைய கோரிக்கையை நிறைவேற்றும் முகத்தான் பள்ளிக் கட்டடத்தைக் கட்ட ஆவன செய்யப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பள்ளிக் கட்டடம் கட்டுவது பற்றிய நிலைமைகள் எப்படி இருக்கின்றன என்பது பற்றிய விவரக் குறிப்புகள் இல்லை. போதுமான அளவுக்குக் கட்டிட வசதி இல்லாத பள்ளிகளுக்குக் கட்டிட வசதி ஏற்படுத்த ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட தொகை மாவட்ட அளவில் ஒதுக்கப்படுகிறது. மாவட்ட முதன்மைக் கல்வியதிகாரி பள்ளிகளின் நிலைமையை ஆராய்ந்து குறிப்பிட்ட தொகையை ஆங்காங்கு ஒதுக்குகிறார்கள். ஆங்காங்கு இருக்கும் கட்டடக் குழுவினரும் நிதி திரட்டி ஈட்டு மானியமாகப் பெற்று சிலபல



இடங்களில் கட்டடங்களைக் கட்டுகிறார்கள். இது மாவட்ட முதன்மைக் கல்வியதிகாரி அவர்களால் முடிவு எடுக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

### சிவபுரம் நடராஜர் சிலை

***249 வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவபுரம் நடராஜர் சிலையைத் திரும்பக் கொண்டுவருவது குறித்து இந்திய அரசு செய்து கொண்டு உள்ள ஒப்பந்தத்திற்கு முன்னதாக தமிழ்நாடு அரசை இந்திய அரசு கலந்தாலோசித்ததா?

(இ) நடராஜர் சிலை இறுதியாக தமிழ்நாட்டிற்கு எப்போது வந்துசேரும்?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) இல்லை.

(இ) இதுபற்றித் தகவல் இல்லை.

**திரு. என். கிட்டப்பா:** சிவபுரம் நடராஜர் சிலையை மீட்டுக் கொண்டு வரும்போது அதை டில்லியில் வைத்துக்கொள்வது என்ற முடிவு மேற்கொள்ளப்பட்டிருப்பதாகச் செய்திகள் வருகின்றன. அப்படி மீட்கப்படும்போது சிவபுரத்திற்கே நடராஜர் வருவாரா அல்லது டில்லியிலேயே தங்கிவிடுவாரா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இந்தப் பிரச்சினை இப்போது எழவில்லை. சிவபுரம் நடராஜர் சிலை இங்கிருந்து போன பிறகு தமிழக அரசு வழக்குப் பதிவு செய்தது. அது பம்பாய்க்குச் சென்று, பம்பாயில் பழம் பொருள் வாங்கும் வியாபாரிக்குச் சென்று, அவரிடத்திலிருந்து 'நார்ட்டன் சைமன் பவுன்டேஷன்' என்ற நிறுவனம் அதை வாங்கிக் கொண்டது—75 லட்சம் ரூபாய்க்கு. அதை மீட்க வேண்டுமென்பதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் மத்திய அரசுக்கு இதுபற்றிய முழு விவரங்களும் அடங்கிய கடிதத்தை அனுப்பினார்கள். அதன் பேரில் அவர்கள் வெளி நாட்டோடு தொடர்பு கொண்டார்கள். அதற்குப் பிறகு வழக்கும் தொடுத்தோம். வழக்குப் பூர்த்தியாவதற்கு முன்பே ஒப்பந்தம் செய்து கொள்ளலாம் என்ற

அளவுக்கு இந்தியத் தூதரும் அந்த நிறுவனத்தினரும் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். இப்போது அந்தச் சிலை பாதுகாப்பாக லண்டனில் வைக்கப்பட்டிருக்கிறது. பழுது பார்க்க அனுப்பப்பட்ட இடத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. ஏற்படுத்தப் பட்ட உடன்பாட்டின்படி 'நார்ட்டன் சைமன் பவுன்டேஷன்' பத்தாண்டு காலத்திற்கு அதை பல்வேறு பொருட்காட்சி சாலைகளில் வைத்துவிட்டுத்தான் அனுப்புவார்கள். பத்தாண்டு காலத்திற்குப் பிறகு அது இங்கு வந்து சேரும். அது வந்தால் உரிய முறையில் தமிழகத்திற்குத்தான் வந்து சேர வேண்டும். டில்லியிலே வைத்துக்கொள்ளக்கூடிய சூழ்நிலை ஏற்படாது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** சிவபுரம் நடராஜர் சிலை வழக்கில் இலண்டன் நீதிபதி இந்தச் சிலை யாருக்கு உரிமை உள்ளது என்பதை நிரூபிக்கும் வகையில் தேவையான ஆதாரங்களைத் தாக்கல் செய்யக் கோரியுள்ளாரே, இந்த அரசாங்கம் தேடிக் கண்டு பிடித்துக் கொடுத்ததா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த அளவில் முழு ஆவணங்களையும், முழு விவரங்களையும் மத்திய சர்க்காருக்கு அனுப்பி மத்திய சர்க்கார் அதை வைத்துத்தான் வழக்குப் பதிவு செய்தார்கள். நாம் தொடுத்த வழக்கிற்கும் கூட நீதிமன்றத்தில் சிலை தேவைப்படுகிறது. சிலையைக் கொடுங்கள், திருப்பித் தந்து விடுகிறோம் என்று எழுதியிருக்கிறோம்; அது பற்றி அவர்களைக் கேட்டுத்தான் முடிவு செய்ய வேண்டுமென்று மத்திய சார்க்கார் சொல்லியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி எண்கள் 255, 256, 257, 258, 259 ஆகியவை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகின்றன.

### *Auction of elephants at Theppakadu.*

* 265. Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state

(a) whether an auction sale of elephants was conducted by the Forest Department on 19th March 1975 at Theppakadu near Ootacamund; and

(b) if so, the details of the same?





**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** (அ) ஆம்.

(இ) 19—3—75 அன்று தெப்பக்காடு யானை வளர்ப்பகத்தில் நடத்தப்பட்ட பொது ஏலத்தில் 1 ஆண்டு முதல் 19 ஆண்டு வயது வரையுள்ள பதினொரு யானைகள் விற்கப்பட்டன. ஏல விற்பனையில் கிடைத்த மொத்தத் தொகை ரூ. 1,60,600.

**திரு. என். கே. பழனிசாமி:** எல்லாப் பொருள்களின் விலையும் ஏறிக் கொண்டே போக யானை விலை மட்டும் குறைந்து கொண்டே போகக் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** ஒவ்வொரு ஆண்டும் விலை கூடுவதாகத்தான் இருக்கிறதே தவிர, விலை குறைவதாக்க் கணக்கு இல்லை. பொது ஏலத்தில் விடும்போது, மார்க்கட் ரேட் குறிப்பிட்டு, அதற்கு மேல்தான் விற்க வேண்டுமென்று விலை நிர்ணயிக்கப்படுகிறது.

### முதலைப் பண்ணை.

*266 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் முதலைப் பண்ணை ஒன்று அமைத்திட உத்தேசிக்கப்பட்டு உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரம் யாது?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** (அ) ஆம்.

(இ) திருச்சி மாவட்டம் திருவரங்கத்திற்கருகே கொள்ளிடக் கரையோரமாக அமைந்துள்ள கிளிக்கூடு கிராமத்தில் உள்ள குட்டையில் முதலைப் பண்ணை ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. என். கிட்டப்பா:** இந்த முதலைகளில் மூன்று வகை முதலைகள், காரியாறு முதலை, உப்பினியாறு, மக்கர் முதலை என்று மூன்று வகை முதலைகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதில் எந்த வகை முதலைக்குத் தமிழ்நாட்டில் பண்ணை ஏற்படுத்தப்பட இருக்கிறது? கொள்ளிடம் மேற்கில் முதலைப் பண்ணை அமைக்கப்பட இருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். சிதம்பரத்தில் உள்ள கொள்ளிடம் பகுதியில் நிறைய முதலைகள்

இருப்பதாக அங்குள்ளவர்கள் சொல்கிறார்கள். ஆகவே, அந்தப் பகுதியில் ஒரு முதலைப் பண்ணை ஆரம்பிப்பதற்கு அரசு ஆலோசிக்குமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** சிதம்பரத்திற்கு அருகில் வக்கிரமாரி ஏரியில் இருப்பதாகத் தகவல் இருக்கிறது. அதையும் எடுக்கலாமா என்று அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. நான் முதலைகள், பண முதலைகள் என்று இரண்டு வகைதான் கேள்விப்பட்டிருக்கிறேன்.

**திரு. கு. காமாட்சி:** இந்த முதலைப் பண்ணை காவிரி ஆற்றில் கிளிக்கூடு பக்கத்தில் இருக்கிற இது இயற்கையாக அமைந்த ஒன்று. அங்கு பல முதலைகள் இருக்கின்றன. அந்த முதலைகளுக்கு ஒரு பாதுகாப்பு இல்லாததால் சிலநேரங்களில் தப்பி வந்து ஆடுமாடுகளை எல்லாம் அடித்து இழுத்துக் கொண்டு போய் விடுகின்றன. ஆகவே அதற்கு வேலி அமைக்கும் உத்தேசம் இருக்கிறதா? அதற்கும் ஆகாரம் போடும் உத்தேசமும் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** அந்தக் குட்டையில் 12 பெரிய முதலைகளும் 100 குட்டிகளும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. வேலி அமைக்கும் முறையெல்லாம் இப்போது எடுக்கிற முயற்சியில் இருக்கிறது. உணவு அளிக்கிற வகையில்-மீன்களும் சிலசமயங்களில் இறைச்சியும் இப்போது அளிக்கப்படுகிறது.

### சங்கரன்கோயில் சாலை மராமத்து

*267—வினா திரு. ச. சங்குமுத்து தேவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தாலுக்கா, அம்பாசமுத்திரம் யூனியன் பகுதியில், சங்கரன்கோயில் செல்லும் எஸ்டிமேட் தயாரிக்கப்பட்ட யூனியன் ரோட்டை செப்பனிட டெண்டர் விடப்பட்டதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?





**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) ஆம்.

(இ) ரூ. 33,500 மதிப்பீட்டில் இந்த வேலை நடைபெற்று வருகிறது.

**திரு. ச. சங்குமுத்து தேவர்:** இந்த ரோட்டின் நீளம் எவ்வளவு? இவ்வளவு காலம் வேலை முடிவடையாமல் இருப்பதற்குக் காரணம் என்ன? ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க அரசு உத்தரவு பிறப்பிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** இந்த ரோட்டின் நீளம் 3.6 கிலோமீட்டர்ஸ். இந்த வேலை ஏற்கெனவே ஊராட்சி ஒன்றியத்தால் டெண்டர் விடப்பட்டு வேலை நடைபெற்று வருவதாகவும் சீக்கிரத்தில் முடிந்து விடும் என்றும் தகவல் வந்திருக்கிறது.

### ஒன்றியங்களுக்குத் தேவைப்படும் குழாய்கள்

*268 வினா—திரு. ஆ. கு. சுப்பையா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில், நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை மூலமாக ஊராட்சி ஒன்றியப் பணிகளுக்குத் தேவைப்படும் ஜி.ஐ. பைப்புகள் ஒரு குறிப்பிட்ட கம்பெனியில் வாங்கவேண்டுமென்று 30—10—1974-ல் உத்தரவு போடப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதற்குரிய காரணம் யாது?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஆ. கு. சுப்பையா:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்கிறார்கள். தஞ்சை மாவட்ட கீழத் தஞ்சை டிவிஷனல் என்ஜினியர் 31—7—74-ம் தேதி அன்று நாகப்பா கார்ப்பரேஷன் என்ற கம்பெனியின் டெண்டரை அப்ரூவ் செய்திருக்கிறார்கள். பிறகு அதே கம்பெனிக்கு 3—10—1974-ம் தேதி மேலும் இரண்டு மாதங்களுக்கு அந்த டெண்டரை நீட்டித்து

உத்தரவு போட்டிருக்கிறார்கள். இவ்வாறு போடுவது சரிதானா? அந்தந்த சமயத்திற்குத் தேவையான பைப்புகளை டெண்டர் கோரி வாங்குவதுதான் முறையா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** இந்தக் கேள்வியில் குறிப்பிட்டிருப்பது, ஒரு குறிப்பிட்ட கம்பெனியில் வாங்க வேண்டுமென்று உத்தரவு போடப்பட்டதா என்பதுபற்றி. நான் சொன்னேன், ஒரு குறிப்பிட்ட கம்பெனியில் வாங்க வேண்டும் என்று உத்தரவு போடப்படவில்லை என்று. அங்கு என்ன நடந்தது என்றால் ஊராட்சி ஒன்றியங்கள். ஜி.ஐ. பைப்ஸ் வாங்குவது என்பது ஒன்றிய வாரியாக டெண்டர் வைத்து வாங்குவது. ஆனால் அந்த மாவட்டத்தின் கோட்டப் பொறியாளர் அவர்கள் ஒரு ஒன்றியத்திற்கு என்று டெண்டர் வாங்குகிறபோது விலை அதிகமாகிறது என்றும் ஒரு மாவட்டத்திற்கு அல்லது அவர்களது பகுதியில் இருக்கிற எல்லா ஒன்றியங்களுக்கும் சேர்ந்து ஒரு டெண்டர் கேட்கிறபோது விலை குறைகிறது, ஆகவே அவர்கள் அப்படி டெண்டர் கோரினார் எல்லா ஊராட்சி ஒன்றியங்களுக்கும் சேர்த்து. அதில் நாகப்பா கம்பெனியின் டெண்டர்தான் லோயஸ்ட் டெண்டர். அதேபோல் மற்ற ஒன்றியங்கள் தனிப்பட்டமுறையில் டெண்டர் கோரியதும் அதிலுள்ள லோயஸ்ட் டெண்டர், நாகப்பா கம்பெனியின் டெண்டர்தான் லோயஸ்ட் டெண்டர். ஆகவே இந்த வசதியை ஒன்றியங்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்ற நல்லெண்ணத்தோடும்தான் அது செய்யப்பட்டிருக்கிறது.

## தொட்டியம்—சீனிவாசநல்லூர் சாலை

* 269 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி வட்டம், தொட்டியத்திலிருந்து சித்தூர் வழியாக சீனிவாசநல்லூர் வரை செல்லும் சாலையை செப்பனிட அரசு திட்டமிட்டிருப்பது உண்மையா?

(இ) ஆம் எனில், இதுவரை நிறைவேற்றப்படாமல் காலதாமதம் ஆவதற்குரிய காரணம் யாது?



**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) ஊரக சாலைத் திட்டத்தின் மூன்றாம் படிவத்தில் இச்சாலையை மேம்பாடு செய்ய அரசு ஆணையிட்டுள்ளது.

(இ) இத்திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு போதுமானதாக இல்லாததால் ஊரக சாலை திட்டத்தின் மூன்றாம் படிவத்தில் "மேம்பாடு செய்தல்" என்ற தலைப்பில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வேலைகளை உடனே எடுத்து செய்ய இயலாத நிலை உள்ளது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தொட்டியம்—சீனிவாச நல்லூர் வரை செல்கிற சாலை தற்போது மேலும் பழுதடைந்திருக்கிறது. அங்கு கார் அல்லது வண்டி போக முடியாத நிலைமை தற்போது இருந்துவருகிறது. ஆகவே, கொஞ்சம் அனுதாபத்தோடு கவனித்து விரைவிலே இதை நிறைவேற்றித் தர அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்துக்கொள்வார்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** இந்தச் சாலை எப்படி இருக்கிறது என்பதைப் பற்றி உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இதற்கான சாங்க்ஷன் எல்லாம் ஆகியிருக்கிறது. அவர்கள் இந்தச் சாலையை அனுதாபத்தோடு கவனிக்கவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். அதேபோல் அரசாங்கத்திற்கு இருக்கிற நிதி நெருக்கடியையும் அவர்கள் அனுதாபத்தோடு கவனிக்கவேண்டும்.

**திரு சி. க. வடிவேலு:** இரண்டு மாதங்களுக்கு முன் இத்திட்டத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள முன்வந்திருக்கிறது என்றும் அடுத்த ஆண்டு இத் திட்டம் நிறைவேற்றப்படும் என்றும் அரசாங்கத்திலிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது. இதுவரையில் தொட்டியம் பக்கத்தில் ஒரு அடி கூட ரோடு வொர்க்ஸ் செய்யப்படவில்லை. ஆகவே, அமைச்சர் அவர்கள் துரித நடவடிக்கை எடுத்து தொட்டியம்—சீனிவாசநல்லூர் சாலையைப் போட முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** துரித நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்ற எண்ணத்தில்தான் அரசு இதற்கு அனுமதி வழங்கியிருக்கிறது. போதுமான நிதி வசதி ஏற்பட்டவுடன் இந்த வேலை மேற்கொள்ளப்படும்.

[1975 நவம்பர் 10

## கோயில் திருப்பணிகள்

* 270 வினா—திரு. வை. பாலசுந்தரம் : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அச்சிறுபாக்கம் ஆட்சீஸ்வரர் கோயிலைத் திருப்பணி செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** இல்லை.

**திரு. வை. பாலசுந்தரம்:** இந்த அச்சிறுபாக்கம் ஆட்சீஸ்வரர் கோவிலை, மிகப் பழம்பெருமை வாய்ந்த கோவிலை மதுராந்தக சோழன் என்ற புகழ்பெற்ற மன்னன்தான் கட்டினான். அப்பர், சுந்தரர் போன்ற பழம்பெரும் புலவர்கள் எல்லாம் இந்தக் கோவிலில் உட்கார்ந்துதான் பெருமை பெற்றார்கள் என்று சொல்லப்படுகிறது. அந்தக் கோவிலுக்கு எவ்வளவோ ஆண்டுக் காலம், நூறாண்டுகளுக்கு மேல் ஆகிறது கும்பாபிஷேகம் செய்து என்று பக்தர்களால் சொல்லப்படுகிறது. ஆகவே கருணை உள்ள நம் அரசு இதை கருணையோடு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** ஏற்கனவே இந்தக் கோவிலினுடைய திருப்பணிக்கு ரூ. 50,000 க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. போதுமான நிதி வசதி இல்லாத காரணத்தால் வேலை இன்னும் தொடங்கப்படாமல் இருக்கிறது. உடனடியாக வேலைகள் தொடங்கப்படுவதற்கு ஒரு திருப்பணிக் குழு அமைக்க வேண்டும் என்று அறநிலைய உதவி ஆணையாளரால் கேட்கப்பட்டுள்ளது.

**திரு. சி. ஆறுமுகம்:** பொதுவாக தமிழ்நாட்டின் பெரிய கோவில்களுக்கு எல்லாம் கும்பாபிஷேகம் செய்து வருகிறார்கள். அப்படி கும்பாபிஷேகம் செய்வதனால் நாட்டு மக்களுக்கு பயன்கள் ஏற்படுகின்றன என்று அப்படி ஏதாவது தகவல் உண்டா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** பொதுவாகவே நன்மை ஏற்படுவதாகச் சொல்கிறார்கள்.



1975 நவம்பர் 10]

* 271 வினா—திரு. எம். முத்தையா: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், கயத்தாரில் உள்ள சிவன் கோயில் திருப்பணி அறநிலையத் துறையின்கீழ் எடுத்துச் செய்யும் உத்தேசம் ஏதேனும் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** (அ) ஆம்.

(இ) இத்திருக்கோயிலுக்கு 1964 ஆம் ஆண்டு ஒரு திருப்பணிக் குழு அமைக்கப்பட்டது. அது முறையாக செயல்படவில்லை. ஆதலால் திருப்பணி வேலைகள் தொடர்ந்து செய்ய, திருப்பணிக் குழுவை திருத்தி அமைக்கவோ அல்லது புதிய குழுவை அமைக்கவோ உதவி ஆணையருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மேலும் தேவையான மதிப்பீடுகள் தயார் செய்து ஒப்புதல் பெற அறநிலைய உதவி ஆணையர் கோரப்பட்டிருக்கிறார்.

## இராமேஸ்வரம் கோயில்

* 272 வினா—திரு. த. சோனையா: மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1975 ஆம் ஆண்டில் இராமேஸ்வரம் கோயில் கும்பாபிஷேகத்திற்கான அரசு செலவு எவ்வளவு?

(இ) அதற்கென வசூலிக்கப்பட்ட தொகை என்ன?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** (அ) இராமே குடமுழுக்கு விழாவிற்காக அரசு ஒன்றும் செலவு செய்ய

(இ) வசூலிக்கப்பட்ட தொகை ரூ. 3,06,951-22

* 273 வினா—திரு. வ. முத்து: மாண்புமிகு அரிசன அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்ட அரிசன நலத்துறை அலுவலகத்தை தனிக் கட்டடத்திற்கு மாற்றும் திட்டம் ஏதேனும் உண்டா?

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம்:** இல்லை.

[1975 நவம்பர் 10

**திருநெல்வேலி மாவட்ட அரிசன நலப் பணிக்கு நிதி ஒதுக்கீடு**

* 274 வினு—திரு. எம். முத்தையா: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்திற்கு அரிசன நலத்துறைக்கென ஒதுக்கப்பட்ட 1973-74-ம் ஆண்டுக்கான நிதி செலவு செய்யப்பட்டதா?

(இ) இல்லை எனில், அதற்கான காரணம் யாது?

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம்:** (அ) ஆம். ஏறக்குறைய முழுவதும் செலவு செய்யப்பட்டுள்ளது.

(இ) இடமில்லை.

அன்னுவரம் அரிசனக் குடியிருப்பு

* 275 வினு—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

கே. (அ) கும்முடிப்பூண்டி வட்டம், அன்னுவரம் அரிசனக் செய்யலனிக்கு குடிநீர் வழங்குவதற்கான திட்டம் ஏதேனும் ஆய்வில் இல்லாதுதா?

இருக்கிற(இ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது நிறைவேறும்?

திருப்பண-மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: (அ) ஆம்.

ஆணையாள(இ) இன்னும் ஒரு மாதத்தில் வேலை முடிந்து விடும்.

**திரு. டி. கா. வேழவேந்தன் :** தலைவரவர்களே, இந்த அன்னுவரம் கோவில்க யில் இருக்கிற அரிசன மக்கள், மிகவும் பிற்பட்ட நிலையில் கிருர்கள். ஒரு மாதத்தில் முடிந்து விடும் என்று அமைச்சர் அப்படிர்கள் சொன்னுர்கள். அது எல்லர்த் தெருக்களுக்கும் ஏற்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம்:** தலைவரவர்களே, அந்தக் குறிப்பு இல்லை. அன்னுவரம் காலனிக்கு குடிநீர் வழங்கும் திட்டம் எப்போது முடிவடையும் என்று கேள்வி. அதற்கு ஒரு



1975 நவம்பர் 10]

மாதத்தில் முடிந்து விடும் என்று மாவட்ட ஆட்சியாளர் பதில் தந்து இருக்கிருர். மேற்கொண்டு குறிப்பு, ஏதும் இங்கே இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினுக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) அறிக்கை அளித்தல்

**சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் எட்டாவது அறிக்கை.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் (திரு. நா. கணபதி) :** தலைவரவர்களே, சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் எட்டாவது (ஐந்தாம் சட்டமன்றப் பேரவை) அறிக்கையை அளிக்கிறேன்.

(3) தகவல் கோரல்

**(அ) எல்.ஐ.சி. கட்டடத்தில் ஏற்பட்ட தீ விபத்து சம்பந்தமான விசாரணை குறித்து.**

THIRU K. T. K. TANGAMANI: Sir, Yesterday, news appeared in the Press about the statement of the I.G. of Police about the fire that broke out in the L.I.C. building. The House has not been informed about the cause of the fire and the steps taken for investigating it. We would like to know whether the Government would be in a position to tell this House, about the type of investigation which is going on and the details of the fire accident ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எல்.ஐ.சி. விபத்தைப்பற்றி அரசாங்கத் தரப்பில் அறிக்கை ஏதேனும் தர இருக்கிருர்களா என்று கேட்கிருர்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** எல்.ஐ.சி.யில் ஏற்பட்ட விபத்து குறித்து இன்வெஸ்டிகேஷன் நடப்பதாக ஐ.ஜி. அவர்கள் ஒரு அறிக்கை கொடுத்து இருக்கிருர்கள். அது சம்பந்தமான விசாரணையை மத்திய அரசாங்கம் செய்கிறதா, மாநில அரசாங்கம்

செய்கிறதா, சர்க்கார் அது சம்பந்தமாக ஏதேனும் சொல்ல முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, மாநில அரசில் சி.ஐ.டி. இலாகா அங்கே அந்த விசாரணையை நடத்தினார்கள். அவர்கள் அது பற்றி ரிப்போர்ட் அனுப்பியிருக்கிறார்கள். இறுதி அறிக்கை வந்தவுடன் அந்த ரிப்போர்ட் மத்திய அரசின் சி.ஐ.டி. டிபார்ட்மெண்டிற்கு அனுப்பப்பட்டு, அவர்களின் கருத்துக்கு விடப்படும்.

## (ஆ) பாதுகாப்புத் துறை ஜீப்கள் உறுப்பினர்களுக்கு விற்கப் படுவது குறித்து

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, ஆனதர் பாயின்ட் ஆப் ஆர்டர், நேற்றையதினம் டிபன்ஸ் டிபார்ட்மெண்டிலிருந்து அங்கத்தினர்களுக்கு ஜீப் விலைக்குத் தருவதாக அறிக்கை வந்தது. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது எப்படி பாயின்ட் ஆப் ஆர்டரில் வரும்? உறுப்பினர்கள் வேண்டுமானால் ஏலம் கேட்டு எடுத்துக்கொள்ளலாம். நமக்கு வந்த தகவலை உறுப்பினர்களுக்குச் சொல்லியிருக்கிறோமே தவிர, உறுப்பினர்களுக்குத் தேவையானால் ஏலம் கேட்டு எடுத்துக்கொள்ளலாம். இது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல.

## (4) அரசினர் தனித் தீர்மானம்.

**தோல் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் தலைமையிடத்தை சென்னையில் அமைத்திடவும், தோல் ஏற்றுமதி மேம்பாட்டு மன்றம் கூடுதல் பொறுப்பை அனுமதிக்கவும் இந்திய அரசைக் கோருதல்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கே. டி. கே. தங்கமணி, உங்கள் திருத்தத்தின்மீது பேசுகிறீர்களா ?

**திரு. கே. டி. கே. தங்கமணி:** அரசினர் தீர்மானத்தில் ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ள விவரம் சம்பந்தமாக அரசு



சார்பாக ஏதாவது கருத்து சொல்வதாக இருந்தால், அதற்குப் பிறகு என் திருத்தத்தையொட்டிச் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, தமிழ் நாட்டில் இந்தத் தோல் தொழில் மிகவும் பழமையான தொழில். அதிலே சுமார் 600 தோல் பதனிடும் நிலையங்கள் இருந்து வருகின்றன. முக்கியமாக நாம் கொடுத்துள்ள தீர்மானத்தில் உள்ள சில விஷயங்களுக்கு முதலிலே சில விளக்கங்களைக் கொடுத்து விட்டால் தவிகரமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

இப்போது இரண்டு லெதர் எக்ஸ்போர்ட் பிரமோஷன் கவுன்சில்கள் இருக்கின்றன. அதிலே ஒன்று சென்னையில் இருக்கிறது. மற்றொன்று கான்பூரில் இருக்கிறது.

At present the Madras Council is handling semi-finished leathers, tanning materials etc., அதிலே வெட்-ப்ளூ என்பது செமி-பினிஷ்ட் லெதர். அது ஏற்கனவே கான்பூர் லெதர் எக்ஸ்போர்ட் கவுன்சிலில் சேர்த்துக் கொள்ளப்பட்டு இருக்கிறது. Kanpur Export Promotion Council is handling finished leather and leather manufactures, wet blue, hides and skins etc. இதிலே ஈடுபட்டு இருக்கிறது. நம்முடைய தமிழ் நாட்டில் இருக்கும் எக்ஸ்போர்ட் லெதர் கவுன்சில், கான்பூரில் லெதர் எக்ஸ்போர்ட் கவுன்சில் ஆரம்பிப்பதற்கு பல ஆண்டுகளுக்கு முன்னாலே ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறது.

இதிலே இருக்கும் முக்கியமான பிரச்னை, மத்திய சர்க்கார் அனுமதித்து இருக்கும் சீதாராமையா கமிட்டி, செமி-பினிஷ்ட் லெதர் குட்ஸ்க்குப் பதிலாக பினிஷ்ட் லெதர் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதுவும் ஐந்தாண்டு காலத்திற்குள் 'We should switch-over from semi-finished leather goods to finished leather goods' என்று முடிவு எடுத்து இருக்கிறார்கள்.

### தோல் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் தலைமையிடத்தை சென்னையில் அமைத்திடவும், தோல் ஏற்றுமதி மேம்பாட்டு மன்றம் கூடுதல் பொறுப்பை அனுமதிக்கவும் இந்திய அரசைக் கோருதல்

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1975 நவம்பர் 10

இதிலே கோட்டா சிஸ்டம் வந்து, அது பற்றி இந்த மன்றத்தில் விவாதிக்கப்பட்டு இருக்கிறது. இப்போது இருக்கும் பிரச்னை. இப்போது சென்னையில் இருக்கும் லெதர் எக்ஸ்போர்ட் கவுன்சிலையும், கான்பூரில் இருக்கிற லெதர் எக்ஸ்போர்ட் கவுன்சிலையும் இணைத்து, அதை ஒரு கார்ப்பரேஷனாக அமைப்பதற்கு ஏற்பாடு நடைபெற்றுக்கொண்டு வருகிறது. அந்த லெதர் எக்ஸ்போர்ட் பிரமோஷன் கார்ப்பரேஷன் தலைமையகம் டெல்லியில் அமைக்கப்படும் என்று முதலில் சொன்னார்கள். இப்போது டெல்லியில் அமைக்க முடியாது என்று குறிப்பு வந்து இருக்கிறது. அது தமிழ்நாட்டிலும் இல்லை என்ற நிலைமை இருக்கிறது. இதில் முக்கியமான பிரச்னை என்னவென்றால் இரண்டு கவுன்சிலையும் சேர்த்து, ஏற்றுமதி செய்வதில் தமிழ் நாட்டில் இருந்து மட்டும் 80 சதவிகிதம் லெதர் கூட்ஸ் ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

இது 'பாரின் எக்ஸ்சேஞ்ச்' அந்நியச் செலாவணி ஈட்டித் தருகிற மிகப் பெரிய தொழில். கிட்டத்தட்ட 3 லட்சத்திலிருந்து 5 லட்சம் பேர்கள் இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளதாக விவரங்கள் சொல்லப்படுகின்றன. அதிலும் பெரும்பாலும், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் இருந்து வருகிறார்கள். இப்போது இரண்டு கவுன்சிலையும் இணைந்து ஒரே கார்ப்பரேஷனாக அதை அமைத்தால் அதனுடைய ஹெட் குவார்ட்டர்ஸ் சென்னையில் அமைக்கப்பட வேண்டுமென்று நாம் கேட்டு இருக்கிறோம்.

இதில் ஒன்றை நாம் புரிந்து கொள்ளவேண்டும். தமிழ் நாட்டில் இருக்கிற லெதர் எக்ஸ்போர்ட் பிரமோஷன் கவுன்சில், செமி-பினிஷ்ட் லெதர் கூட்ஸ் உற்பத்தி செய்து வருகிறது. கான்பூர் லெதர் எக்ஸ்போர்ட் பிரமோஷன் கவுன்சில் பினிஷ்ட் லெதர் கூட்ஸ் மான்யுபாக்சர் என்று சொல்லக்கூடிய 'Finished leather manufacture, footwear, leather garments, leather goods and leather manufactures' அந்த பணிகளைச் செய்து வருகிறது. இப்போது மத்திய அரசாங்கம் எடுத்து

### தோல் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் தலைமையிடத்தை சென்னையில் அமைத்திடவும், தோல் ஏற்றுமதி மேம்பாட்டு மன்றம் கூடுதல் பொறுப்பை அனுமதிக்கவும் இந்திய அரசைக் கோருதல்

1975 நவம்பர் 10] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

இருக்கும் கொள்கை முடிவின்படி, மத்திய அரசாங்கம் நியமித்த கமிட்டி எடுத்து இருக்கிற முடிவுப்படி

We should switch-over from semi-finished leather goods to finished leather goods. So, in course of time semi-finished leather என்று ஏற்றுமதி செய்வதற்கே வாய்ப்பு இல்லை. அப்படி ஏற்படும்போது நம்முடைய மாநிலத்தில். இப்போதே செமி-பினிஷ்ட் லெதரில் இருந்து பினிஷ்ட் லெதருக்குப் போய் இருக்கிறார்கள். அதாவது சீதாராமையா குழு அறிக்கை எடுத்த முடிவிற்குப் பிறகு மத்திய அரசின் கொள்கை முடிவிற்கு கொஞ்சம் கொஞ்சமாக நம்முடைய தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் இந்த தோல் பதனிடும் தொழிலில் பினிஷ்ட் கூட்ஸ் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்துகொண்டு வருகின்றார்கள். அப்படி நிலைமை ஏற்படுகிறபோது நம்முடைய மாநிலத்திலே இந்த லெதர் எக்ஸ்போர்ட் பிரமோஷன் கார்ப்பரேஷன் அமைக்கவேண்டுமென்று பிரச்னை எழுந்தது. அதாவது, இந்த இரண்டு கவுன்சிலையும் மெர்ஜ் செய்யும்போது, அதனுடைய தலைமையகம் இங்கே அமைக்கப்படவேண்டும் என்று கேட்கிறோம். இப்போது தமிழ்நாட்டில் இருக்கும் லெதர் எக்ஸ்போர்ட் பிரமோஷன் கவுன்சில், செமி-பினிஷ்ட் கூட்ஸ் செய்து வருகிறது. It deals only with semi-finished leather. In course of time semi-finished leather, finished leather products என்று வரப்போகிறது. ஆகவே, நம்முடைய மாநிலத்திலே இருக்கிற எக்ஸ்போர்ட் பிரமோஷன் கவுன்சிலே அந்த பினிஷ்ட் லெதர் கூட்ஸ்க்குப் பொறுப்பு எடுத்துக் கொள்ளவேண்டுமென்று சொல்கிறோம்.

இதற்கு முக்கியமான காரணம் என்னவென்றால், இப்போது மத்திய அரசாங்கத்தின் மூலமாக இந்த பினிஷ்ட் லெதர் பிராடக்ட்ஸ் செய்யும் கோட்டாக்களை பெரிய நிறுவனங்கள் வாங்கிக்கொண்டு இருக்கின்றன. அதாவது, டாட்டா, மொராக்கோ போன்ற நிறுவனங்கள் அனுமதி பெற்று செய்து வருகின்றன. நம்முடைய நாட்டில் உள்ள இந்தப் பழமையான தொழில், லட்சக்கணக்கான தொழிலாளர்கள் ஈடுபட்டு நடத்தி வரும் இந்தத் தொழில், நசிந்து விடாமல் பார்த்துக்கொள்ளும்

பொறுப்பு நமக்கு இருக்கிற காரணத்தால்தான், இது பற்றி மத்திய அரசாங்கத்தோடு நாம் அடிக்கடி தொடர்பு கொண்டு இருக்கிறோம்.

மத்திய சர்க்காரின் சார்பாக முதலாவதாக வந்த கடிதத்தில் நம்முடைய மத்திய அர்சாங்கத்தின் அமைச்சர் சட்டோபாத்தியாயா அவர்கள், லெதர் எக்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் செயல்படுவதைப் பற்றிச் சொல்கிறபோது, அது டெல்லியில் அமைக்க இருப்பதாகச் சொன்னார்கள். இப்போது நமக்குத் தெரிய வருவது—டெல்லியில் அமைக்கச் சாத்தியக்கூறுகள் இல்லை என்று சொல்கிறார்கள். கடைசியாக வந்து இருக்கிற 23—10—1975 கடிதத்திலே, மத்திய அரசாங்கத்தின் தொழில் அமைச்சர் திரு. டி. ஏ. பாய் அவர்கள் எழுதியுள்ள கடிதத்திலே

'Leather Development Corporation has not yet been formed and we are evaluating various alternative locations for the Headquarters of this Corporation and while doing so, we shall certainly bear in mind the claims of Madras which, as you have mentioned, is one of the important centres of concentration of leather industry in the country. . . .' என்று குறிப்பிட்டு இருக்கிறார், அடுத்து

(முற்பகல் 10-00)

'You are aware that the location of the Headquarters of the All-India Corporation like the Leather Industries Development Corporation will have to be viewed in the context of various aspects including the future direction of the industry that we are envisaging, and the balance of convenience from the point of view of existing structure of the industry in the country. I would however like to mention that the Headquarters of the Leather Industries Development Corporation is conceived to be of the modest output and the real operational area of this Corporation will necessarily have to be a Regional Centre like Madras. . '.

மெட்ராஸ் ரீஜனல் சென்டராக இருக்கலாம் என்ற கருத்தைச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த வேலைகளும், எக்ஸ்போர்ட் அப் பினிஷ்டு லெதர்ஸ் செய்வதற்கு 'ஆடெட் ரெஸ்பான்சிபிலிடி'யும்



(added responsibility) இந்த லெதர் எக்ஸ்போர்ட் கவுன்சிலுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்று தெரிவித்திருக்கிறோம்.

Location of activities like common facility centres for finishing leather would be of far more relevance and importance to the furtherance of leather industry.

எனவே, மொத்தமாகப் பார்க்கின்றபோது, இதில் முக்கியமானதாக நாம் தெரிந்துகொண்டுள்ளது, பினிஷ்ட் லெதர்ஸ், செமி பினிஷ்ட் லெதர்ஸ் என்பதில் என்ன வித்தியாசம் என்றால், செமி பினிஷ்ட் என்பது 99 சத விகிதம் பினிஷ் செய்யப்பட்ட லெதர் என்கிறார்கள். சாயம் கொடுப்பது, பாலிஷ் கொடுப்பது இந்த அளவுக்குத்தான் செமி பினிஷ்டாக இருக்கிறது என்கிறார்கள். மற்றபடி 99 சதவிகிதம் பினிஷ்ட் கூட்ஸாக இருக்கிறது என்று சொல்கிறார்கள்.

நமது தமிழ்நாட்டிலிருந்து இந்த செமி பினிஷ்ட் கூட்ஸ் 85 சதவிகிதத்திற்கு மேலே ஏற்றுமதி செய்யப்பட்டு ஃபாரின் எக்ஸ்சேஞ் ஏர்னராக, அன்னியச் செலாவணியை ஈட்டித் தருவதாக இருந்து கொண்டிருக்கிறது. நாமும் செமி பினிஷ்டிலிருந்து பினிஷ்ட் லெதருக்குப் போகவிருக்கிறோம். தமிழ்நாட்டு தொழிலதிபர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படி வந்த பிறகு நம்முடைய தமிழ்நாட்டின் நன்மையைக் கருதி, இந்தத் தீர்மானம் அவசியமான தீர்மானமாகக் கருதப்படுகிறது. நமது தமிழ்நாட்டு எக்ஸ்போர்ட் பிரமோஷன் கவுன்சில் சார்பாகவும் இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். தமிழ்நாட்டு டானரி ஓனர்ஸ் அவ்வளவு பேரும், மற்றும் தொழிலாளர்கள் சார்பாகவும் சொல்லியிருக்கிறார்கள். இது ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாக இருக்கிறது.

தமிழ்நாட்டில் லட்சக்கணக்கான தொழிலாளர்கள் தொழில் செய்து வருகின்ற தொழில் நசிந்து விடக்கூடாது, ஏற்கனவே பல ஆண்டு காலமாக இருந்த வருகிற எக்ஸ்போர்ட் பிரமோஷன் கவுன்சில் தொடர்ந்து இருக்க வேண்டும், அதற்கு ஏற்றுமதி

செய்வதற்கான அனுமதியும் தேவை என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறோம். இது யாருடைய 'இன்டிரஸ்டுக்கும்' பாதகமான பிரச்னையல்ல. நாம் பினிஷ்ட் லெதர் எக்ஸ்போர்ட் செய்ய வாய்ப்பிருந்தது எப்படியோ போய்விட்டது. ஆகவே தான் நாம் இந்த லெதர் எக்ஸ்போர்ட் பிரமோஷன் கவுன்சில் தொடர்ந்து சென்னையில் இருக்க வேண்டும், அதற்கு, 'ஆடெட் ரெஸ்பான்சிபிலிடியாக' பினிஷ்ட் லெதர்ஸ் எக்ஸ்போர்ட் இருக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். தமிழகத்தின் பொருளாதார முன்னேற்றத்தைக் கருதி இது அவசியமான தீர்மானம் என்பதால், அரசாங்கத்தின் சார்பில் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். ஆகவே தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, இந்தத் தீர்மானத்தை சபையின் முன்னால் வைத்த போது, அதை விளக்கக்கூடிய குறிப்பு கொடுக்கப்பட்டிருந்தது. அந்தக் குறிப்பில் வரக்கூடிய இரண்டு முக்கியமான அம்சங்களில் ஒன்று, எக்ஸ்போர்ட் பிரமோஷன் கவுன்சில் சம்பந்தமானது. எக்ஸ்போர்ட் பிரமோஷன் கவுன்சில் ஒன்று ஏற்கனவே சென்னையில் இருக்கிறது. மற்றொன்று கான்பூரில் இருக்கிறது. இது சம்பந்தமாக என்னுடைய கருத்தைப் பின்னால் சொல்லலாம் என்று இருக்கிறேன்.

சீத்தாராமையா கமிட்டி சிபார்சுக்குப் பின்னால், மத்திய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இந்த தோல் தொழில் வளர்ச்சி சம்பந்தமாக ஒரு கார்ப்பரேஷனை அமைக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஏற்கனவே எக்ஸ்போர்ட் பிரமோஷன் கவுன்சில் இருக்கிறது. அதற்கு இருக்கிற அதிகாரம் எந்த அளவுக்குத் தனியாக இருக்கும்? அதன் அதிகாரமும் புதிதாக அமைக்கப்பட இருக்கின்ற லெதர் இன்டஸ்டிரீஸ் டெவலப்மென்ட் கார்ப்பொரேஷனிடம் உள்ளிட்டு வந்துவிடுமோ என்ற நிலைமை இருக்கிறது. புதிதாக அமைக்கப்பட இருக்கின்ற கார்ப்பொரேஷன் சென்னையிலும் இருக்காது, கான்



பூரிலும் இருக்காது என்ற கருத்து இருக்கிறது. அப்படி கார்ப்பொரேஷன் அமைக்கப்படுமானால், டில்லியில் அமைக்கலாம் என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். இங்கே வந்திருக்கின்ற தீர்மானத்தில், இந்தக் கார்ப்பொரேஷன் சென்னையில் அமைக்கப்படவேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறது. அதை நான் முழுக்க முழுக்க ஆதரிக்கின்றேன். ஏனென்றால், இன்றைக்கு ஒவ்வொரு பகுதியாக பார்க்கின்றபோது, கான்பூர், ஆக்ரா போன்ற பகுதிகளில் தோல் பதனிடும் தொழில் நடந்து கொண்டிருக்கிறது. உண்மையிலேயே 40,000 தொழிலாளர்கள் ஆக்ராவில் மட்டும் தொழில் செய்கிறார்கள். உலகத்திலேயே இந்த மாதிரி செருப்புத் தைக்கின்ற தொழிலாளிகள் குறிப்பிட்ட ஊரில் அதிகமாக இருப்பது ஆக்ராவில்தான். மிகவும் ஏழை மக்கள்.

அதே போன்று தமிழ் நாட்டில், வட ஆற்காடு ஜில்லாவைப் பொறுத்தவரை அதிகமான பேர் தோல் பதனிடும் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். எல்லா இடங்களிலும் தாழ்த்தப்பட்ட ஒதுக்கப்பட்ட மக்கள்தான் அந்த தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொழில் மேலும் வளர வேண்டும் என்ற முறையில் நவீனப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது.

தற்போது கான்பூரில் ஒரு எக்ஸ்போர்ட் பிரமோஷன் கவுன்சில் இருக்கிறது. தமிழ்நாட்டிலும் இங்கே ஒன்று இருக்கிறது. இப்போதும் நாம் ஏற்றுமதி செய்வதற்கு எந்தத் தடையும் இல்லை.

ஆனால் இதில் குறிப்பிடத் தக்க விஷயம் என்னவென்றால், எப்படி எக்ஸ்ப்ளோசிவ்ஸ் சம்பந்தமாக சிவகாசியில் அந்தத் தொழில் அதிகமாக இருப்பதால், அதன் தலைமையகம் சென்னையில் வைக்கப்பட வேண்டும் என்று சொன்னோமோ, அதே மாதிரி தோல் சம்பந்தப்பட்ட இந்த கார்ப்பொரேஷன் சென்னையில் இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறோம். மத்திய

சர்க்கார் இன்னும் முடிவு செய்யவில்லை. சென்னையில் அந்தக் கார்ப்பொரேஷனின் தலைமையகம் இருக்க வேண்டும் என்று நாம் மத்திய அரசாங்கத்தை வற்புறுத்துகிறோம்.

இரண்டாவது அம்சத்தில்தான் ஒரு சிக்கல் இருக்கிறது. காரணம் நாம் எதைக் கோருகிறோமோ, அதைக் கான்பூரிலும் கோருகிறார்கள். போன தடவை இங்கே தீர்மானம் நிறைவேற்றினோம். பினிஷ்ட் குட்ஸ், செமி பினிஷ்ட் குட்ஸ் என்று பாகுபாடு செய்யக்கூடாது, ஏற்றுமதி செய்வதில் ஒரே மாதிரியாக அனுமதிக்க வேண்டும் என்று தீர்மானம் போட்டோம். இப்போது ஏற்றுமதி செய்யப்படுவதில், இந்த விவரத்தை வைத்துப் பார்த்தால், பினிஷ்ட் குட்ஸ் ஏற்றுமதி செய்யப்படுவதில் 80 சதவிகிதம் தமிழ் நாட்டிலிருந்து போயிருக்கிறது. அதற்காக பிரத்தியேகமாக அதிகாரம் தேட வேண்டியதில்லை. நடைமுறையில் எப்படி கான்பூரைப் பொறுத்த வரையில் அவர்கள் பினிஷ்ட் பிராடக்ட்ஸ் என்றிருந்தாலும் செமி பினிஷ்ட் பிராடக்ட்ஸை ஏற்றுமதி செய்ய அதிகாரம் பெற்றிருக்கிறார்களோ, அந்த மாதிரியான அதிகாரம் நமக்கும் நடைமுறையில் வரும். ஆனால் 'எம்பசிஸ்' எதில் இருக்கவேண்டுமென்றால், தமிழ் நாட்டில் இந்தக் கார்ப்பொரேஷனின் தலைமையகம் இருக்க வேண்டும் என்பதில்தான் இருக்கவேண்டும்.

ஆகவே இரண்டாவது விஷயத்தைப் போடுவது என்பது it is rubbing the Kanpur people on the wrong side கான்பூரோடு போட்டி போடக்கூடிய தன்மை வருகிறது. இன்றைக்கு கான்பூர் தமிழ் நாட்டோடு போட்டி போடத் தயாராக இல்லை. அவர்கள் சொல்லுகிறார்கள், நாங்கள் பினிஷ்ட் பிராடக்ட்ஸ் அதிகமாக ஏற்றுமதி செய்யமுடியவில்லை என்று. ஆகவே நாம் ஏற்றுமதி செய்வதில் தடை ஏற்படப் போவதில்லை. இந்த வேலை எல்லாவற்றையும் எக்ஸ்போர்ட் பிரமோஷன் கவுன்சில் செய்கிறது.



இரண்டாவது பகுதியில் 'to allow the Export Promotion Council to continue to function in Madras என்று இருக்கிறது. அவர்களே Export Promotion Council in Madras must work in liason with that in Kanpur.. என்று ஆலோசனை வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

நாம் இந்தியாவைப் பொறுத்த வரையில் இரண்டு முக்கியமான லெதர் சென்டர்கள் இருக்கின்றன என்பதை வலியுறுத்தி, இந்த இரண்டுக்கும், அதாவது சென்னைக்கும், கான்பூருக்கும் எந்த விதமான முரண்பாடும் இல்லை என்பதை வலியுறுத்தியாக வேண்டும். அப்படியில்லாமல் இந்த விஷயத்தைச் சேர்த்தால் அது கிட்டத்தட்ட

We will be making the Export Promotion Council in Kanpur superfluous.

நான் எந்த நோக்கத்தோடு இந்தக் கருத்தைக் கொண்டு வந்தேன் என்றால்

I am not opposing the spirit of the resolution. Let it not be assumed that I am opposing the spirit of export promotion. The emphasis is on locating the headquarters of the proposed Leather Industries Development Corporation in Madras.

இரண்டாவது அம்சத்தில் இந்தப் பகுதியில்லாமல் இருந்தால் எந்த முரண்பாடும் வராது. இரண்டையும் இணைக்கின்ற சக்தியாக கார்ப்பொரேஷன் வரும். கார்ப்பொரேஷன் சென்னையில் இருக்க வேண்டும் என்றும், அதே நேரத்தில் எக்ஸ்போர்ட் பிரமோஷன் கவுன்சில் சென்னையில் இருக்க வேண்டும், அதுவும் பினிஷ்ட் குட்ஸ்களை ஏற்றுமதி செய்வதை அபிவிருத்தி செய்யும் பொறுப்போடு இருக்கவேண்டும் என்று சொல்வது:

But to say that with the additional responsibility of promoting the export of finished leather அப்படிப் போட்டு விடுவது வம்புக்கு இழுப்பதாக இருக்கும். கான்பூரில் ஏற்கனவே தொழில் செய்து கொண்டு இருப்பவர்களுக்கு முரண்பாடாக நாம்

எடுத்துக்கொண்டு போவதாக இருக்கும். அங்கே 25 சதவிகிதம் ஏற்றுமதி செய்யப்படுகிறது. கான்பூர் லெதருக்கு உலகத்திலேயே செல்வாக்கு இருந்துகொண்டிருக்கிறது. அதுவும் குடிசைத் தொழிலாக இருக்கிறது. நம்மை விட மோசமான நிலைமையில் அங்கே தொழிலாளர்கள் இருக்கிறார்கள். ஆகவே இந்த மாதிரி இருக்க வேண்டும் என்பதற்காகச் சொன்னேன்.

Government must also tell us where the emphasis should lie. The emphasis is on the first portion. The object of the first portion is whether we are asking the Government of India to locate the proposed Leather Industries Development Corporation in Madras. அதுதான் முக்கியம். அப்படி வந்தபிறகு கண்டிப்பாக நமக்கு கான்பூர் சப்சிடிரியரியாக வந்துவிடுவார்கள். இருக்கின்ற கவுன்சிலை எடுத்துக் கொண்டு போகாமல் பார்த்துக் கொள்கிறோம்.

On our part we are not opposed to have the location of the Corporation in Madras. But, we consider the other part i.e. " with the additional responsibility of promoting the export of finished leather " as superfluous

*திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, அரசாங்கம் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

பல்லாண்டு காலமாகத் தமிழ் நாட்டிலே இந்தத் தோல் பதனிடும் தொழில் நடைபெற்று வருகிறது. அதன் மூலம் பல்லாயிரக் கணக்கான ஏழை மக்கள், பிற்போக்கான மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் வேலைவாய்ப்பு அடைந்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல; இத்தோற்பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் பல கோடிக்கணக்கான ரூபாய் அன்னியச் செலவாணியை ஈட்டி தந்து வரும் பெரும் தொழில் ஆகும். இத் தொழிலை ஆதரிப்பதற்கு என்று லெதர் எக்ஸ்போர்ட் கவுன்சில் சென்னையில் ஆரம்பிக்கப்பட்டது. அதன்பிறகு கான்பூரிலும் இத்தொழில் நடைபெறுகின்ற காரணத்தால் 1965-ம் ஆண்டுதான் இந்த லெதர் எக்ஸ்போர்ட் கவுன்சில் கான்பூரிலும் ஆரம்பிக்கப்பட்டது.



இன்றைக்கு இந்த அரசாங்கம் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தில் சென்னையில் இருக்கக் கூடிய லெதர் எக்ஸ் போர்ட் புரமோஷன் கவுன்சில் இங்கேயே இருக்க வேண்டுமென்று வலியுறுத்துகின்ற வகையில் லெதர் எக்ஸ்போர்ட் டெவலப்மென்ட் கார்ப்பரேஷனும் இருக்கின்றது. ஏற்கெனவே நாங்கள் ஒன்றை வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம், இந்த வெட் புளு லெதர் என்று கான்பூருக்குக் கொடுக்கப்படுகின்ற சலுகை தமிழ்நாட்டில் இத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றவர்களுக்கும் கொடுத்தாக வேண்டுமென்று. அது ஏற்கெனவே தமிழ்நாட்டிலே இத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றவர்களுக்குச் சொந்தமான ஒன்று.

அது மாத்திரமல்ல. லெதர் எக்ஸ்போர்ட் புரோமோஷன் கவுன்சில் மூலமாக சமீப காலத்தில் இப்பொருட்கள் வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டு ரூ. 25 கோடி அன்னியச் செலாவணியை ஈட்டித் தந்திருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

இதில் 80, 85 சதவிகிதம் தமிழ் நாட்டிலிருந்துதான் ஏற்றுமதி ஆகியிருக்கிறது. கனம் அங்கத்தினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் கூறியது போல கான்பூர் கவுன்சில் பற்றி இங்கே முடிவு செய்வது என்பது இயலாத ஒன்று. அங்கு தனி கவுன்சில் இருக்கட்டும்—அதைப் பற்றி விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை.

ஆனால் சென்னையிலே பல்லாண்டுகளாக பலன் அளிக்கக்கூடிய அளவில் இந்த லெதர் எக்ஸ்போர்ட் கவுன்சில் இயங்கிக் கொண்டிருக்கின்றது. இத்தகைய ஒன்றை அதோடு சேர்ப்பதா அல்லது வேண்டாமா என்று கேள்வி வருகிறது. இங்கு இது இல்லாவிட்டால் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் பெருமளவில் பாதிக்கப்படுவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. மத்திய அரசாங்கம் ஆரம்பிக்க இருக்கிற ஒரு லெதர் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் தலைமையகத்தை சென்னையில் வைக்க வேண்டுமென்று மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் உரையில்

கூறினார்கள். இந்த லெதர் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் வரும் என்று நினைக்கும்போது என்னுடைய கருத்தை நான் இங்கே அழுத்தந்திருத்தமாகக் கூற விரும்புகிறேன்.

காரணம், லெதர் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் எந்த உருவத்தில் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று மத்திய அரசாங்கம் நினைக்கிறதோ அதிலே இந்த தோல் பதனிடும் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றவர்களுக்கு ஓரளவுக்கு லாபமோ, உதவியோ கிடைக்குமென்று நினைத்து ஆரம்பித்த பிறகு இந்த லெதர் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷனுடைய தலையீடு எப்படி இருக்கும் என்றால் அது வியாபாரத்துறையிலும் இறங்க வேண்டிய நிலை ஏற்படும். அப்படி, தானே வியாபாரத்தை எடுத்து இந்தத் தோல் ஏற்றுமதி செய்ய வேண்டுமென்று நினைக்குமேயானால் இத்தொழில் கண்டிப்பாக க்ஷீணித்துவிடும் என்று இங்கே நான் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன்.

காரணம், நாம் பார்த்திருக்கின்றோம். ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் மூலமாக பல தனியார் துறைகளில் ஈடுபட்டிருக்கின்ற தொழில்களை—குறிப்பாக, ஹ்யூமன் ஹேர் எக்ஸ்போர்ட் செய்ய முன்வந்து தனிப்பட்டவர்கள் செய்து வந்த தொழிலில் லாபம் வந்து விடுகிறது என்று நினைத்து அதை ஸ்டேட் டிரேடிங் மூலமாகச் செய்ய வேண்டுமென்று நினைத்தார்கள். ஆனால் பிறகு அது எந்த அளவுக்குக் கஷ்டத்தையும், நஷ்டத்தையும் ஏற்படுத்தியது என்பதைப் பார்த்தோம்.

எனவே, என்னுடைய கவலை எல்லாம், இந்த லெதர் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் ஏற்படுமேயானால் கண்டிப்பாக இந்தத் தொழில் முன்னேறுவதற்கும் இந்தத் தொழில் வாழ்வதற்கும் வழிவகை ஏற்படாது என்று கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்த ஃபினிஷ்ட் கூட்ஸ்—அன்ஃபினிஷ்ட் கூட்ஸ் என்பதைப் பற்றி வரும்போது, டாக்டர் சீதாராமையா கமிட்டி வந்து சென்றபோது—அது சென்னைக்கு வராவிட்டாலும் கூட—அவர்கள் இவற்றை எப்படிப் பாகுபடுத்தி இருக்கிறார்கள்



என்று பார்க்கும்போது, இந்த பினிஷ்ட் கூட்ஸ் என்று வரும் போது ஏதோ அதற்கு ஏற்கனவே பளபளப்பு, மினுமினுப்பு கொடுப்பது, கலர் கொடுப்பது—அது தான் பினிஷ்ட் கூட்ஸ் என்று கூறி அதற்குத் தக்கவாறு நமது தமிழ் நாட்டில் இருக்கக் கூடிய தொழிலாளர்கள் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக் கிறவர்கள் மீது பல குறைகள் இருக்கின்றன, அந்தக் குறைகளை எல்லாம் மத்திய அரசு தீர்த்து வைக்கின்ற அளவில் தீர்ந்து வைப்பதோடு இந்தக் கவுன்சில் இங்கேதான் இருக்க வேண்டும், அந்தக் கவுன்சிலுக்கு எந்தவிதமான ஆபத்தும் ஏற்படாமல் அதை இணைப்பது என்று வரும்போது, அவர்கள் மேலும் யோசித்து இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு ஊக்கம் கொடுத்து, இத்தொழிலை விருத்தி செய்து இன்னும் அதிகப்படியான எக்ஸ்போர்ட் செய்வதற்கும் அதன் மூலம் அன்னியச் செலாவணியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் வழிவகை செய்வதைப் பற்றி நினைக்க வேண்டுமே அல்லாமல் இதை ஒரு பொன் முட்டை இடுகின்ற வாத்து என்ற கதை போல் நினைத்து விழுங்கிவிடக்கூடாது, இந்த லெதர் டெவலப் மெண்ட் கவுன்சிலை அமைப்பதற்கு நினைப்பது சரியாகாது.

கனம் அமைச்சர் அவர்கள் வாசிக்கும்போது, மத்திய அரசு அமைச்சர் திரு. டீ. ஏ. பை அவர்களுடைய கடிதத்தைக் குறிப்பிட்டார்கள். அதில் திரு. டீ. ஏ. பை அவர்கள்கூட லெதர் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் வருவதாகக் கூறவில்லை. அவர்களுக்கே அது சந்தேகமாக இருக்கிற காரணத்தால், இப்போது ஒன்றும் பெரிதாக முழுகிப் போய் விடாத காரணத்தால், இதைப் பற்றி மத்திய அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று அவர்கள் நினைப்பார்களேயானால் அதை அமைப்பதற்கு முன்பு, இத்தொழிலில் ஈடுபட்டிருக்கின்றவர்களுக்கு எந்தெந்த வகையில் ஆதரவு இருக்க வேண்டுமோ அத்தனை ஆதரவையும் அவர்களுக்குக் கொடுப்பது என்ற முறையில் இந்த லெதர் எக்ஸ் போர்ட் கவுன்சில் இங்கே இருக்க வேண்டுமென்ற என்னுடைய கருத்தைக் கூறி அரசாங்கம் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தை வரவேற்று அமர்கின்றேன்.

## தோல் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் தலைமையிடத்தை சென்னையில் அமைத்திடவும், தோல் ஏற்றுமதி மேம்பாட்டு மன்றம் கூடுதல் பொறுப்பை அனுமதிக்கவும் இந்திய அரசைக் கோருதல்

[1975 நவம்பர் 10

**திரு. கு. காமாட்சி:** தலைவரவர்களே, நம்முடைய அரசால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்த முக்கியமான தீர்மானம் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களின் நலன்களைப் பேணிப் பாதுகாப்பதற்காக அமைந்திருக்கிற தீர்மானம் என்பதனை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்திய நாட்டில் அதிகமான அந்நியச் செலாவணியை ஈட்டித் தரக்கூடிய ஒரு பெரிய தொழில் இந்த தோல் பதனிடும் தொழில். ஏறத்தாழ 80 சதவிகிதம் நமது தமிழ்நாட்டில் தயாரிக்கப்படுகிறது. அதிலேயும் வட ஆற்காடு மாவட்டத்திலும், திருச்சி மாவட்டத்திலும் இத்தொழிலிலே ஈடுபட்டுள்ளவர்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த லெதர் இண்டஸ்டிரீஸ் டெவலப்மெண்டு கார்ப்பரேஷன் இங்கு அமைந்தால்தான் இந்தப் பகுதியில் இருக்கின்ற தொழிற்சாலைகளை நவீனப்படுத்துவதற்கும், அந்தத் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களின் நலன்களைப் பேணிக் காப்பதற்கும் ஒரு வாய்ப்பு ஏற்படும் என்பதை மத்திய சர்க்கார் தயவு கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

நம்முடைய தொழிற்சாலைகள் அமைந்திருக்கிற இடங்களைச் சுற்றிப் பார்த்தால் இந்தக் கார்ப்பரேஷன் இங்கே ஏன் அமைய வேண்டும் என்பதில் இருக்கிற நியாயங்கள் நூற்றுக்கு நூறு சரியானவை என்பது நமக்குப் புலப்படும். இருக்கிற தொழிற்சாலைகள் அத்தனையும் பொதுமக்கள் இருக்கிற பகுதியில் அல்லது பொது சுகாதார வசதி இல்லாத சூழ்நிலையில் அமைந்திருப்பதை நாம் பார்க்கிறோம். திருச்சி மாவட்டத்தில் ஏறத்தாழ நான்கு அல்லது ஐயாயிரம் தொழிலாளர்கள் அந்தப் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்கள் அத்தனை பேரும் தாழ்த்தப்பட்டவர்கள், ஏழை இஸ்லாமிய சமூகத்தைச் சார்ந்தவர்கள், அவர்கள்தான் அங்கே நிறைய வேலை செய்கிறார்கள். வேலையில் ஈடுபட்டிருக்கின்ற நேரத்தில் அவர்களைப் பார்த்தால் இவர்கள் செய்வது இந்தத் தொழில்தானா, இந்தத் தொழிலை இவர்கள் இவ்வாறு செய்துவிட்டு எப்படி உணவு அருந்துகிறார்கள், எப்படி தங்களுடைய வாழ்க்கையை



நடத்துகிறார்கள் என்று நாம் வேதனைப்படுகிற அளவுக்கு அந்தத் தொழில் இருந்து கொண்டிருக்கிறது.

ஆகவே, இந்தத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பான நல்ல முறையில் அவர்களுக்கு வேண்டிய உடைகள் அமைதல் வேண்டும்; இந்தத் தோல் பதனிடும் இடங்களை இன்னும் நவீனப்படுத்தல், சுத்தப்படுத்தல் வேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

அதற்காகவாவது இந்தப் பகுதியில் தமிழ்நாட்டில் தோல் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் தலைமையிடம் அமைய வேண்டும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதே நேரத்தில் திருச்சியில் இருக்கிற ஆகாய விமான நிலையத்திற்குப் பக்கத்தில் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகளையெல்லாம் அப்புறப்படுத்த வேண்டுமென்ற ஒரு தாக்கீதை மத்திய சர்க்கார் அனுப்பியிருக்கிறது. காரணம் ஆகாய விமான நிலையத்திற்குப் பக்கத்தில், அதிகமாகப் பருந்துகள் எல்லாம் பறந்து, ஆகாய விமானத்திற்கு அதிக தொந்தரவு கொடுக்கிறது என்ற ஒரு காரணத்தைக் கூறுகிறார்கள். அந்தக் காரணம் எனக்கு என்னமோ அவ்வளவு சரியாகப் படவில்லை. இறங்குகிற இடத்தில்தான் தொழிற்சாலைகள் இருக்கின்றனவே தவிர, வேறல்ல; இதற்காக தொழிற்சாலைகளை அப்புறப்படுத்தினால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழக்க நேரிடும். தொழிற்சாலை வேறு இடத்திற்கு மாற்றப்பட்டால் அந்த இடத்தின் முக்கியத்துவம் கெட நேரிடும் என்பதைச் சொல்லிக் கொண்டு இந்தக் கார்ப்பரேஷன் தலைமையிடம் இங்கே அமைவதை நான் முழுக்க முழுக்க வரவேற்று, இங்குள்ள கவுன்சிலுக்கு அடிஷனல் அதிகாரம் கொடுப்பதையும் வரவேற்று நான் விடை பெறுகிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தைப் பொறுத்தவரையில் இது அவசியமான தீர்மானம் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது என்று கருதுகிறேன். ஏற்கனவே இந்த லெதர் எக்ஸ்போர்ட்டைப் பொறுத்தவரையில் நம்முடைய தமிழகத்தில்

## தோல் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் தலைமையிடத்தை சென்னையில் அமைத்திடவும், தோல் ஏற்றுமதி மேம்பாட்டு மன்றம் கூடுதல் பொறுப்பை அனுமதிக்கவும் இந்திய அரசைக் கோருதல்

[டாக்டர் எச். வி. ஹாண்டே] [1975 நவம்பர் 10

ஒரு கவலைக்குரிய நிலைமை ஏற்பட்டு இருப்பதை இந்த அவையில் கனம் அங்கத்தினர்களும் நானும பேசியிருக்கிறோம்.

குறிப்பாக, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவையில்—சென்ற கூட்டத் தொடர் என்று கருதுகிறேன்—எக்ஸ்போர்ட்டை பொறுத்தவரையில் ஏற்பட்ட சிரமங்களை இங்கு எடுத்து விளக்கியிருக்கிறார்கள். நானும் கனம் ஒத்திப் போன்றவர்கள் எல்லாம் இந்தக் கருத்தினை வலியுறுத்தியிருக்கிறோம். அந்த ஆபத்தான நிலைமை என்னவென்றால் எக்ஸ்போர்ட் பூராவும் எஸ். டி. சி. மூலம் சானலைஸ் பண்ண வேண்டுமென்ற ஒரு நிலைமை இருந்தது. ஆகவே, ஏற்கனவே ஒரு ஆபத்து இருந்து அந்த ஆபத்திலிருந்து எப்படி தப்பித்துக் கொள்வது என்று முயற்சி எடுத்த பிறகு இரண்டாவது ஒரு சூழ்நிலை, ஆபத்து என்று சொல்வதற்கில்லை, ஆபத்து வரக்கூடிய சூழ்நிலை இன்றையதினம் நம் நாட்டில் இருக்கிறது. அந்த அடிப்படையில்தான் இப்போது இந்த லெதர் இண்டஸ்டிரீஸ் டெவலப்மெண்டு கார்ப்பரேஷன் சென்னையில் இருக்க வேண்டுமென்று வலியுறுத்தக்கூடிய தீர்மானம் இங்கு வந்திருக்கிறது.

நம்முடைய மதிப்பிற்குரிய திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் ஒரு கவலையைத் தெரிவித்திருக்கிறார்கள். அது உண்மையாக இருந்தால் கான்பூரில் இந்த லெதர் இண்டஸ்டிரீஸ் டெவலப்மெண்டு கார்ப்பரேஷனை வைப்பது சரியானது அல்ல என்பதில் நானும் அதே கருத்தை உடையவன். ஆனால் இந்தத் தீர்மானத்தின் மூலம் 'Kub them on wrong side' என்று ஏற்படக்கூடிய நிலைமை ஏற்படுகிறதா என்பதை ஆராய வேண்டும்.

காரணம், கான்பூரைப் பொறுத்தவரையில் பினிஷ்டு லெதர் கூட்ஸ் எக்ஸ்போர்ட் செய்ய அதற்கு ஒரு அமைப்பு இருக்கிறது. இங்கு உருவாக்கக்கூடிய இந்த அமைப்பு ஸ்லைட்லி டிபாண்ட். ஆகவே, இந்த அமைப்பைப் பொறுத்தவரையில் இங்கே ஏற்கனவே பினிஷ்டு லெதர் குட்ஸ் இருக்கிறது. அன் பினிஷ்டு குட்ஸுக்கு ஆபத்து வருகிறது. இரண்டையும் அனுப்ப வேண்டுமென்ற காரணத்தால் இந்தப் பொறுப்பை பினிஷ்டு குட்ஸ் லெதர் கார்ப்பரேஷன் ஏற்றுக்கொள்வது முடியாத காரியம்.

தோல் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் தலைமையிடத்தை சென்னையில் அமைத்திடவும், தோல் ஏற்றுமதி மேம்பாட்டு மன்றம் கூடுதல் பொறுப்பை அனுமதிக்கவும் இந்திய அரசைக் கோருதல்

1975 நவம்பர் 10] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

இரண்டாவது செமி பினிஷ்டு, அன் பினிஷ்டு குட்ஸ் இரண்டும் வெளிநாட்டுக்கு அனுப்புவதற்கு அந்த அமைப்பு சென்னையில் இருந்தால் மிக நன்றாக இருக்கும். அந்த அடிப்படையில் இந்தத் தீர்மானத்தைப் பொறுத்தவரையில் கருத்து வேறுபாடு அவ்வளவு இருக்க முடியாது. எந்தப் பகுதியில் அக்செண்ட் போட வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொல்லுவார்கள் என்று அங்கத்தினர் திரு. கே. டி. கே. தங்கமணி சொன்னார்கள். அவர்கள் பதில் சொல்லுகிற நேரத்தில் எந்தவிதமான சந்தேகத்திற்கும் இடமில்லாமல் பதில் கூறுவார்கள் என்று கருதுகிறேன். இந்தத் தொழிலைப் பொறுத்தவரையில் என்னுடைய தொகுதியில் இந்தத் தொழிலில் பலர் ஈடுபட்டிருக்கிறார்கள்.

சாதாரணமாக, அங்கே இருக்கின்ற தொழிலாளர்கள் சரியான வகையில் சம்பளம் இல்லாத நிலைமையும், வேலையில்லாத நிலைமையும் உருவாகியிருக்கிறது. ஏற்கனவே, வேலை வாய்ப்பு இழந்துவிடக் கூடிய நிலைமை இருக்கிறது. இந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் மத்திய சர்க்காரை வலியுறுத்தி மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ளவில்லையென்றால் இன்னும் ஆபத்தான நிலைமை ஏற்படும்.

ஆகவே, இந்தத் தீர்மானத்தைப் பொறுத்தவரையில் இன்னொரு கருத்தைச் சொல்லிவிட்டு விடை பெறலாம் என்று கருதுகிறேன். இங்கு எல்லாக் கட்சி அங்கத்தினர்களும் ஒரே கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள், அதாவது இந்தத் தீர்மானம் அவசியம் என்று தெரிவித்து. ஆகவே ஒவ்வொரு கட்சியின் சார்பாக ஒருவரை சேர்த்து ஒரு குழுவை அமைத்து அந்தக் குழு டில்லிக்குச் சென்று மத்திய சர்க்கார் அமைச்சரைப் பார்த்து அவர்களுக்கு இந்தத் தீர்மானத்தைச் சரியான வகையில் விளக்கினால் நலமாக இருக்கும். இந்தத் தீர்மானத்தை அனுப்பினாலும் கூட அவர்கள் அதைப் புரிந்து கொள்ளும் நிலைமை இருக்குமோ என்பது தெரியாது. தீர்மானத்துடன் ஒரு குழுவை அமைத்து அந்தக் குழு உறுப்பினர்கள், அனைவரும் 'லெட் அஸ் வெயிட் ஆன் டெபுட்டேஷன்'. அமைச்சர் அவர்களும் கூட வரவேண்டும். அந்தக் குழுவில் இருக்கும் அங்கத்தினர்கள் ஒவ்வொரு விஷயமாக எடுத்துக் கொண்டு இங்கு எப்படி விரிவாகப் பேசுகிறோமோ அதுமாதிரி, மத்திய அமைச்சர்

**தோல் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் தலைமையிடத்தை சென்னையில் அமைத்திடவும், தோல் ஏற்றுமதி மேம் பாட்டு மன்றம் கூடுதல் பொறுப்பை அனுமதிக்கவும் இந்திய அரசைக் கோருதல்**

[டாக்டர் எச். வி. ஹான்டே] [1975 நவம்பர் 10

அவர்களை கன்வின்ஸ் செய்துவிட்டு, அதற்குப் பிறகு பெற வேண்டிய இந்த நன்மையை சென்னைக்கு வரவேண்டிய லெதர் டெவலப்மெண்டு கார்ப்பரேஷனின் தலைமையிடம் இங்கு வரக் கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு விடைபெறுகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** கனம் தலைவர் சபாநாயகர் அவர்களே, இந்தத் தீர்மானத்தின் மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல நான் ஆசைப்படுகிறேன்.

என் கருத்தைச் சொல்லும்போது அமைச்சர் அவர்களைக் காணோம். இந்தத் தோல் தொழில் பொறுத்த வரையில் சென்னைக்கு ஒரு சிறந்த இடம் இருந்து கொண்டிருக்கிறது. எந்தக் காரணத்தாலோ அந்த இடம் பறிக்கப்பட்டுவிடுமோ என்று அபாயம் ஏற்பட்டிருக்கிறது. எப்பொழுது பார்த்தாலும் மத்திய சர்க்கார், மத்திய சர்க்கார் என்று பேசிக் கொண்டிருக்கிற தமிழக அரசு இந்தப் பிரச்னையில் கொஞ்சம் தைரியமாக இருந்து தன்னுடைய நிலைமையைப் பாதுகாத்துக் கொண்டால் அது பாராட்டுக்குரியது என்று கருதுகிறேன். எப்போதும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் நாங்கள் ஒரு கை பார்க்கிறோம் என்று. இந்தப் பிரச்னையில் பார்க்க வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். இது ரொம்பவும் நியாயமான பிரச்னை, யாரும் எதிர்க்க முடியாது. அந்த வகையில் நாங்கள் கூட ஆதரவு தருவதற்குத் தயாராக இருக்கிறோம் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

எங்களுடைய கட்சி மத்தியில் ஆளும் கட்சியாக இருந்தாலும் கூட இந்தப் பிரச்னையில் சென்னையின் பெருமையைக் காப்பாற்றுவதில் நாங்கள் பின் தங்கத் தயாராய் இல்லை. பக்கத்தில் இருந்து கொண்டு எங்களாலான உதவியைத் தருவதற்கு இருக்கிறோம். ஏனென்றால் இன்றைக்கு ஏற்றுமதி ஆகிற தோல் பொருள்களில் 100-க்கு 85 சதவிகிதம் சென்னையிலிருந்து அனுப்பப்படுகிறது. பதனிடுகிற தோலுக்கு கான்பூரில் ஒரு கவுன்சில் இருக்கிறது. அங்கு செருப்பும் மற்ற லெதர் குட்ஸ்கள் தயாரிக்கப்படுகின்றன. எக்ஸ்போர்ட்க்கு என்று ஒரு கவுன்சில் கான்பூரில் ஆரம்பித்தார் கள். இருந்தாலும் அதிகமான பொருள் இங்கிருந்து தான் போகிறது. ஒரு கோட்டா சிஸ்டம் கொண்டு வந்தார்கள்.

**தோல் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் தலைமையிடத்தை சென்னையில் அமைத்திடவும், தோல் ஏற்றுமதி மேம் பாட்டு மன்றம் கூடுதல் பொறுப்பை அனுமதிக்கவும் இந்திய அரசைக் கோருதல்**

1975 நவம்பர் 10]

**திரு. ஜே. ஜேம்ஸ்:** ஆன் எ பாய்ன்ட் ஆப் ஆர்டர். அம்மையார்
அவர்கள் தங்கள் கட்சியின் ஆதரவைத் தருவதாகத் தெரிவித்
தார்கள். அது அம்மையாரின் சொந்தக் கருத்தா அல்லது
கட்சியினுடைய கருத்தா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்பு
கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** கட்சியின் கருத்து.
எங்களுடைய அமைச்சர்கள் மோகன் குமாரமங்கலம்,
சி. சுப்ரமணியம் அவர்கள் எல்லோரும் இந்தப் பிரச்னையில்
அக்கறை காட்டினார்கள். எப்படியாவது சென்னையை பாதிக்கப்
படாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று. ஆகவே கனம்
உறுப்பினர் அவர்கள் சந்தேகப்படவேண்டாம். எங்கள் கட்சியில்
ஆதரவும் இருக்கிறது. மேலும் அந்தத் தொழிலில் சாதாரண
தொழில் அதிபர்களைத் தவிர பெரிய பெரிய தொழில் அதிபர்கள்

(முற்பகல் 10-30)

எல்லாம் அதில் ஈடுபட்டிருக்கிறார்கள். இதிலே சில பெரிய
தொழிலதிபர்கள் இப்படிச் செய்தால் தங்களுக்கு அதிகமான
லாபம் வரும் என்று கருதிக் கூடச் செய்யலாம். இதிலே அரசியல்
சிக்கலைக் காட்டிலும் வியாபாரச் சிக்கல் தான் இருக்கும் என்று
கருதுகிறேன்.

அன்றைக்கே கூட கோட்டா சிஸ்டம் கொண்டுவந்தபோது
நாம் இங்கே ஏகமனதாகத் தீர்மானம் போட்டோம். சென்னையில்
இருந்து முன்னால் அதிகமான அளவுக்கு பதனிடப்படாத தோல்,
ஓரளவு பதனிடப்பட்ட தோல் ஏற்றுமதியாகிக் கொண்டிருந்தது.
வெஜிடபிள் டான்ட்-இ.ஐ. டான்ட் லெதர்தான் அதிகமாக
ஏற்றுமதியாகி வந்தது. இவர்கள் ரா-ஹைட்ஸின் 50 சதவிகிதம்
ஏற்றுமதி செய்யவேண்டும். பினிஷ்ட் லெதர் 50 சதவிகிதம்
ஏற்றுமதி செய்ய வேண்டும் என்று கோட்டா சிஸ்டம் கொண்டு
வந்தபோது நாம் ஏகமனதாகத் தீர்மானம் போட்டோம். இதிலே
இன்றையதினம் 2 லட்சம் தொழிலாளர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள்.
திடீரென்று 50 சதவிகிதம் பதனிடப்படாத தோலை ஏற்றுமதி
செய்யக்கூடாது என்று சொல்லிவிட்டால் இவர்கள் பாதிக்கப்படு
வார்கள். குறைந்தது ஐந்து வருஷமாவது டைம் கொடுத்து,
அதற்குள் இங்கேயே பதனிடப்படாத தோலை பதனிடுவதற்கு

## தோல் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் தலைமையிடத்தை சென்னையில் அமைத்திடவும், தோல் ஏற்றுமதி மேம் பாட்டு மன்றம் கழிதல் பொறுப்பை அனுமதிக்கவும் இந்திய அரசைக் கோருதல்

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1975 நவம்பர் 10

வேண்டிய வசதிகளை ஏற்படுத்தி, இதற்குத் தேவையான வெளி நாட்டு இயந்திரங்களைத் தருவிக்க வசதி அளித்து—இங்கு பதனிடப் படும் தோலைத் தயாரிப்பதற்கு வசதி முழு அளவில் ஏற்படும் வரையில் இந்தக் கோட்டா சிஸ்டத்தைக் கைவிடவேண்டும், அல்லது கொஞ்சம் கொஞ்சமாகக் கொண்டுவர வேண்டும் என்று சொன்னேம். நாங்களும் அது பற்றி பலமுறை வற்புறுத்திய காரணத்தினுல்தான் சென்ற ஆண்டு இருந்ததை அப்படியே வைத்தார்கள்.

இங்கு இருக்கக்கூடிய தொழில் அமைச்சர் அதிகமாக அக்கறை காட்டி பதனிடப்படாத தோல், ஓரளவு பதனிடப்பட்ட தோல் இங்கிருந்து ஏற்றுமதியாவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் இருந்து கொண்டிருக்கச் செய்ய வேண்டும். கான்பூரில் ஒரு கவுன்சில் இருந்தால், இந்தக் கவுன்சில் இங்கேயே இருக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி செய்யவேண்டும். இது அரசியல் சிக்கல் அல்ல. வியாபாரச் சிக்கல்தான். சற்று நமது அமைச்சர் அவர்கள் அக்கறை எடுத்துக்கொண்டு, டெல்லிக்கு தூதுகோஷ்டி சென்று அங்குள்ளவர்களிடத்திலும் இப்பிரச் சினையை விளக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா :** அம்மையார் நன்றாக வாதாடுகிறார்கள். அவர்களே டெல்லிக்குப் போனால் நன்றாக இருக்கும்.

**திருமதி. த. ந. அனந்தநாயகி:** We will give all support. உங்கள் கட்சி உறுப்பினர்கள்கூட டெல்லியில் இருக்கிறார்கள் எல்லாருமாகச் சேர்ந்துதான் நமது தமிழகத்தில் இந்தத்தொழில் பாதிக்கப்படாதிருக்க பாதுகாப்பு அளித்தாக வேண்டும். லெதர் கவுன்சில் சீதாராமையா அவர்கள் கான்பூர் கவுன்சில், மெட்ராஸ் கவுன்சில் இரண்டையும் ஒன்றாக இணைத்து அதனை வடக்கே கொண்டுபோகலாம் என்று நினைக்கிறார்கள். டாக்டர் சீதாராமையா அவர்கள் பங்களுருக்கு வந்துவிட்டு அப்படியே போய்விட்டார்கள். சென்னைக்கு வரவேயில்லை. நம்முடைய ப்ராப்ளம்ஸ் என்ன என்றே இங்குள்ளவர்களைக் கேட்டு அறிந்துகொண்டது கிடையாது. அந்த நேரம் இங்குள்ளவர்களும் சற்று விழிப்போடு இல்லாமல் இருந்துவிட்டார்கள், பெரிய

## தோல் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் தலைமையிடத்தைச் சென்னையில் அமைத்திடவும், தோல் ஏற்றுமதி மேம் பாட்டு மன்றம் கூடுதல் பொறுப்பை அனுமதிக்கவும் இந்திய அரசைக் கோருதல்

1975 நவம்பர் 10] [திருமதி த. ந. அனந்தநாயகி]

வியாபாரிகள் கொஞ்சம் விழிப்போடு, வியாபார நோக்கத்தோடு எதைச் செய்து கொள்ள வேண்டுமோ அதைச் செய்து கொண்டு விட்டார்கள். திரு. சீதாராமையா அவர்களின் இதர பரிந்து ரைகள் எதையும் செயல்படுத்த முன்வராத நேரத்தில் இந்த இரண்டு கவுன்சில்களையும் ஒன்றாக இணைப்பதில் என்ன அவ்வளவு அவசரம் வந்தது? ஆகவே, கனம் தொழில் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது எல்லாம் இந்தப் பிரச்னையில் மத்திய சர்க்காரோடு வாதாடுங்கள். இந்தப் பிரச்னையில் சற்று அக்கறை எடுத்துக்கொண்டு, பாராளுமன்ற அங்கத்தினர்களையும் வற்புறுத்தச் சொல்லி, மத்திய சர்க்காருக்கு எடுத்துச்சொல்லுங் கள். , You will be adding a feather to your cap. இல்லையென்றால் தொழில் அமைச்சருடைய நிலைமை சங்கடமாகி விடும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மற்றவர்கள் மூன்று, மூன்று நிமிடங்கள்தான் எடுத்துக்கொண்டார்கள். நீங்கள் 10 நிமிஷம் பேசியிருக்கிறீர்கள். சீக்கிரமாக முடித்துக்கொள்ளுங் கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** இன்னும் ஐந்து நிமிடம் கொடுங் கள். இன்னும் இந்தத் தொழில் நடக்கும் இடங்களைப் போய்ப் பார்க்கவேண்டும். வாணியம்பாடி, ஆர்க்காடு போன்ற இடங்களில் எல்லாம் தொழிலதிபர்கள் தொழிலாளர்களுக்கு எந்தவிதமான வசதிகளையும் செய்துகொடுப்பதில்லை. கழிவு நீரைவிட்டு— எங்குபார்த்தாலும் துர்நாற்றம். பெரும்பாலும் அரிசன தாழ்த்தப் பட்ட மக்கள் இத்தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் ரேஷன் கூடக் கிடைக்காது கஷ்டப்படுகிறார்கள்.

இன்னும் அந்தத் தொழிலை நடத்துகிறவர்கள். வருமான வரி, விற்பனைவரி ஆகியவற்றினுல் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நமக்கு அதிக அளவுக்கு அந்நியச் செலாவணியைத் தேடித் தருகின்ற அவர்கள் ஒருநேரம் நவாப்பாக இருக்கிறார்கள். மற்றொரு நேரம் பக்கிரிகளாகிவிடுகிறார்கள். அந்தத் தொழிலே ஸ்பெகுலேஷனுக இருக்கிறது—அப்ஸ் அண்டு டவுன்ஸ் ரொம்ப ஜாஸ்தி, அதனுல் அவர்களுக்குப் பல பிரச்னைகள் எழுகின்றன.

அவர்களுடைய விஷயத்திலும் அரசாங்கம் சிறிது கவனம் செலுத்தவேண்டும்.

பெரியமேடு பகுதியில்தான் தோல் மண்டிகள் இருக்கின்றன. இட்டாலி, ஸ்வீடன், ஸ்பெயின், லண்டன், யுனைடெட் ஸ்டேட்ஸ் என்று இங்கெல்லாம் இருந்து வெளிநாட்டு வியாபாரிகள் வந்து போகிற தோல் சந்தை பெரியமேடு பகுதி. அங்கு எப்படி இருக்கிறது என்று பாருங்கள், ஒரே சாக்கடை நாற்றம். ஏன் கார்ப்பரேஷனுக்குச் சொல்லி—வெளிநாட்டார் அடிக்கடி வரக் கூடிய அந்தப் பகுதியின் சுகாதார நிலை நல்ல முறையில் இருக்கும் படியாக கவனம் செலுத்தக்கூடாது?

நமக்கு இன்றைக்கு வெளிநாடுகளில் பெரும் அளவுக்கு பதனிடப்படாத தோலுக்கு இருந்த சந்தை குறைந்துவிட்டது. இதுபோல் நமது சந்தையை இதரநாடுகள் வந்து பிடித்துக் கொள்ளும் சூழ்நிலையை உண்டாக்கக்கூடாது. ஆகவேதான் இந்த கவுன்சில் சென்னையில் இருப்பது அப்படியே இருக்க வேண்டும். பினிஷ்டு தோலை அனுப்புவதோடுகூட பதனிடப் படாத, ஓரளவு பதனிடப்பட்ட தோலுக்கு நமது வெளிநாட்டி லுள்ள சந்தை பாதிக்கப்படாமல் இருக்கும்படியும் பார்த்துக் கொள்ள வேண்டும். இந்தக் காரணத்தை முன்னிட்டு சென்னையில் உள்ள கவுன்சில் வடக்கே போய்விடக் கூடாது. தொடர்ந்து சென்னையிலேயே இருக்க வேண்டும்; அதற்கான எல்லா முயற்சி களையும் இந்த அரசு செய்ய வேண்டுமென்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** துணைத் தலைவரவர்களே, சரியான நேரத்தில் உரிய இந்தத் தீர்மானத்தை அமைச்சரவர்கள் இங்கே கொண்டு வந்திருப்பதற்காக அவர்களுக்கு நான் என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய மதிப்பிற்குரிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் மாண்புமிகு கே. டி. கே. தங்கமணி அவர்கள் இங்கே ஒரு சந்தேகத்தைக் கிளப்பினார்கள். நியாயமான ஒரு சந்தேகம் என்ற அடிப்படையில் நான் அந்தச் சந்தேகத்திற்கு விளக்கம் தர இந்த நேரத்தில் ஆசைப்படுகிறேன். கான்பூரிலேயிருக்கிற



கழகத்தை எந்த வகையிலும் தோல் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகத்தை எந்த வகையிலும் குறைத்திடவோ அல்லது அதனுடைய முக்கியத்துவத்தைக் குறைத்திடவோ அல்லது அங்கேயிருக்கிற மேம்பாட்டுக் கழகத்தைத் தமிழ் நாட்டுக்கு மாற்றி விடவோ இந்தத் தீர்மானத்தின் மூலமாக அரசாங்கம் விரும்பவில்லையென்று நான் நினைக்கிறேன்.

ஆனால், என்னைப் பொறுத்த வரையிலே அப்படிப்பட்ட ஒரு விருப்பத்தை நாங்கள் கொண்டிருக்கவில்லை என்பதை இந்த நேரத்திலே தெளிவாக்கிட விரும்புகிறேன். ஏனென்றால் கான்பூரிலேயிருக்கிற மேம்பாட்டுக் கழகம்—ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம் Leather finished product க்கு வைக்கப்பட்டிருப்பது. அதாவது ஃபினிஷ்ட் பிராடக்ட் என்று சொல்லக்கூடிய செருப்பு, லெதர் கார்மென்ட்ஸ் போன்ற முழுமை பெற்ற உற்பத்தி செய்யப் பட்ட, தோலால் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்களை ஏற்றுமதி செய்வதற்காக ஒரு மேம்பாட்டுக் கழகத்தை கான்பூரிலே வைத்திருக்கிறார்கள். அந்த மேம்பாட்டுக் கழகம் தோல் பிராடக்ட்ஸ். லெதர் பிராடக்ட்ஸ் எக்ஸ்போர்ட் பிரமோஷன் செய்வதற்காக வைக்கப்பட்டிருக்கிற அந்த மேம்பாட்டுக் கழகம் மேலும் வளர வேண்டும். அதன் வாயிலாக உற்பத்திப் பொருள்கள் இந்தியாவிலிருந்து மிக அதிகமான அளவுக்கு ஏற்றுமதி செய்யப்பட வேண்டும், அதனுடைய செயல் திட்டங்கள் எல்லாம் மிக அதிகமாக வளர வேண்டுமென்று திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் விரும்புவதைப் போலவே நாங்களும் விரும்பு கிறோம்.

ஆனால் சென்னையிலுள்ள மேம்பாட்டுக் கழகம் எப்படியிருக்க வேண்டுமென்று தீர்மான வாசகத்தைக் கூட மிக ஜாக்கிரதையாக அமைத்திருக்கிறார்கள். சென்னையைப் பொறுத்த வரையிலே அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

'to allow the Leather Export Promotion Council to continue to function in Madras with the additional responsibility of promoting the export of *finished leathers*'—

பினிஷ்டு லெதர்ஸ் என்றுதான் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகையினால், இங்கே ஏற்கனவே சென்னையிலேயுள்ள லெதர் எக்ஸ்போர்ட் பிரமோஷன் கவுன்சில். செமி ஃபினிஷ்ட் லெதர்

என்ற வகையிலே ஓரளவுக்கு முழுமைப் படுத்தப்படாத தோல்களை ஏற்றுமதி செய்ய இந்த லெதர் பிரமோஷன் கவுன்சில் இயங்கி வந்தது.

ஆனால், இங்கே மாண்புமிகு அமைச்சர் எடுத்துச் சொன்னதைப் போல் மத்திய ஆட்சியினுடைய புதிய கொள்கையின் காரணமாக, சில ஃபினிஷ்ட் லெதர் என்கின்ற அளவிலேயிருக்கிற tanned skin என்று சொல்லப்படுகின்ற ஓரளவுக்கு முழுமைப்படுத்தப் படாத தோலை நாம் ஏற்றுமதி செய்யப் போதிய அளவுக்குத் தடுக்கப்படவேண்டுமென்ற புதிய கொள்கையின் காரணமாக அதேசமயத்தில் தமிழ் நாட்டிலேகூட, ஃபினிஷ்ட் லெதர் யூனிட்ஸைத்தான் நாம் அதிகமாக்கவேண்டுமென்ற மத்திய ஆட்சியின் புதிய திட்டத்தின் காரணமாகவும், வருங்காலத்திலே செமி ஃபினிஷ்ட் ஏற்றுமதிக்கான வாய்ப்பில்லை என்ற காரணத்தினாலும் செமி ஃபினிஷ்ட் லெதர்ஸ்ஸாக இருக்கிறதென்ற கொள்கையை ஏற்றுக்கொள்வோமானால் வருங்காலத்தில் அது லெதர் பிரமோஷன் கவுன்சிலாக இயங்கச் சாத்தியக்கூறுகளில்லையென்ற காரணத்திற்காகவும் ஃபினிஷ்ட் கூட்ஸ்ஸாக மாறிக்கொள்ள வேண்டுமென்று, சுவிச் ஓவர் செய்யவேண்டுமென்ற முக்கியமான கொள்கையின் காரணமாக, இன்றைக்குத் தமிழ்நாட்டிலேயிருக்கிற தோல் பதனிடும் தொழில்கள் தொடர்ந்து நடைபெற பல சிக்கல்கள் இருந்தாலும், முட்டுக்கட்டைகள் இருந்தாலும், தடங்கள்கள் இருந்தாலும் அவைகளைச் சரிப்படுத்தி, ஃபினிஷ்ட் பிராடக்ட்ஸ் யூனிட்டுகளை ஏற்படுத்திக் கொண்டு வருகிற நேரத்தில் நாம் அதிகமான பொறுப்பை மேற்கொண்டு, ஃபினிஷ்ட் பிராடக்ட்ஸ்லை அதிகமாக ஏற்றுமதி செய்யக்கூடிய பொறுப்பை மேற்கொண்டு நிறைவேற்றுவதற்காக இந்த லெதர் பிரமோஷன் கவுன்சில் சென்னையிலே இருக்க வேண்டுமென்று வாதாடுவதன் வாயிலாக இங்கே ஏற்கனவேயிருக்கிற ஏற்றுமதி கழகத்தை இங்கேயே நிலைத்திருக்க வழி செய்ய வேண்டுமென்ற வகையிலே தான் இந்தத் தீர்மானத்தின் பிற்பகுதியிருக்கிறதென்று நான் எடுத்துச் சொல்லி, அதைத் தமிழ்நாட்டிலே வைத்திருப்பதன் காரணமாக கான்பூரிலேயிருக்கிற ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகத்திற்கு எந்த வகையிலும் பாதிப்பு ஏற்படாது; அது அங்கிருந்து மாற்றப்பட வேண்டுமென்ற எண்ணமே இந்த



அரசுக்கோ அல்லது இங்கேயிருக்கிற தோல் ஏற்றுமதியாளர்களுக்கோ தமிழ்நாட்டுக்கோ இல்லையென்பதை இந்த நேரத்தில் தெளிவாக மதிப்பிற்குரிய திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களுக்குத் தெரிவித்து, ஆகவே அவர்கள் தன் திருத்தத்தை வாபஸ் பெற்றுக்கொண்டு இதை ஏகமனதாக நிறைவேற்ற ஒத்துக் கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

தீர்மானத்தின் முற்பகுதி 'to locate the headquarters of the proposed Leather Industries Development Corporation in Madras; என்றிருக்கிறது. அது ஒரு நியாயமான வாதம்.

இன்றைக்கு இந்த லெதர் எக்ஸ்போர்ட் மட்டுமல்ல, பொதுவாக, எக்ஸ்போர்ட் டெவலப்மென்ட் கவுன்சில்கள் ஒவ்வொரு மாநிலத்திலும் எந்த அடிப்படையில் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது என்பதை நாம் ஆராய வேண்டும். சாதாரணமாக, அதற்கு முதல் கிரைட்டீரியன் என்று சொல்வார்கள். அந்த முதல் அம்சம் என்ன என்று பார்த்தால், எந்த மாநிலத்தில், எந்த இடத்தில் ஒரு பொருள் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறதோ, அந்த மாநிலத்தில், அந்த இடத்தில்தான் ஏற்றுமதி செய்ய வாய்ப்புகள் அதிகமாக இருக்கின்றன. ஆகவே, அப்படிப்பட்ட இடங்களில்தான் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகத்தை ஏற்படுத்துவது இன்றைக்கு புதிதாகக் கேட்கப்படுவதல்ல, ஏற்கனவே, மத்திய அரசு கொண்டிருக்கிற கொள்கையே அப்படித்தானிருக்கிறது, தெளிவாகவிருக்கிறது. உதாரணமாக Textile Export Promotion Council. It is established for exporting textiles. அதாவது, துணி ஏற்றுமதிக்காக, துணி ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம் வைத்திருக்கிறார்கள். மத்திய அரசினர் ஏற்படுத்தியிருக்கிற அந்தக் கழகம் பம்பாயிலே இருக்கிறது, டெல்லியிலே இல்லை. பம்பாயிலே தான் டெக்ஸ்டைல் பிரமோஷன் கவுன்சில் வைத்திருக்கிறார்கள். காரணம் Industrial Localisation பம்பாயிலிருக்கிறது. அங்கே உற்பத்தி அதிகமாக இருக்கிறது. அங்கே ஸ்பெஷலைசேஷன் செய்திருக்கிறார்கள். அதிகமான சதவிகிதம் பம்பாயிலே உற்பத்தியாகிறது,

## தோல் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் தலைமையிடத்தை சென்னையில் அமைத்திடவும், தோல் ஏற்றுமதி மேம்பாட்டு மன்றம் கூடுதல் பொறுப்பை அனுமதிக்கவும் இந்திய அரசைக் கோருதல்

[திரு. எம். ஏ. லத்தீப்] [1975 நவம்பர் 10

மகாராஷ்டிரத்திலே உற்பத்தியாகிறது என்ற காரணத்தினால் பம்பாயிலே வைத்திருக்கிறார்கள். அதே மாதிரியாக ஜூட் கார்ப்பரேஷன் என்று வைத்திருக்கிறார்கள். ஜூட் எக்ஸ்போர்ட் பிரமோஷன் கார்ப்பரேஷனை கல்கத்தாவிலே வைத்திருக்கிறார்கள். காரணம் ஜூட் அதிக அளவு மேற்கு வங்கத்திலே உற்பத்தியாகிறது, ஏற்றுமதியாகிறது. ஆகவே, உற்பத்தியாளர்களும் ஏற்றுமதியாளர்களும் அதிகமாக இருக்கிற வங்காளத்திலே ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம் இருக்க வேண்டுமென்று கல்கத்தாவிலே வைத்திருக்கிறார்கள்.

The Spices Export Promotion Council and Spices Export Development Corporation are at Cochin.

அதே நேரத்தில் ரப்பர் டெவலப்மென்ட் கார்ப்பரேஷன் அதையும் கேரளாவிலேயுள்ள கொச்சினிலே வைத்திருக்கிறார்கள். டீ எக்ஸ்போர்ட் பிரமோஷன் கழகம் கல்கத்தாவிலிருக்கிறது. காஃபிக்காக மேம்பாட்டுக் கழகம் கர்நாடக மாநிலத்திலேயிருக்கிற பெங்களூரிலே வைத்திருக்கிறார்கள்.

Wherever there are specialists, wherever there is specialisation and where the highest percentage of production is there and largest number of people have been involved in a particular industry, thereby to boost the production. measures have been taken to locate the Export Promotion Council. It is only with this object, steps have been taken to locate the Promotion Councils and Export Promotion Corporations. That has been the consistent policy of the Government of India. Whereas in Tamil Nadu. we have 85 per cent of the production of leather and leather goods. A discrimination has been shown to Tamil Nadu. We have to fight tooth and nail and use all our forces at our command to prevail upon the Union Government to see that the proposed Leather Development Corporation is located in the City of Madras and the present Export Promotion Council is not shifted to Kanpur area. That should be our stand.

ஆகையினால், இங்கே எல்லாம் இருக்கும்போது இதை ஏன் மாற்றுகிறார்கள் என்பதுதான் நமக்குந் தெரியவில்லை. ஓரிடத்திலே இனிமேல் செமி ஃபினிஷ்ட் லெதரை நீங்கள் எக்ஸ்போர்ட் செய்யக் கூடாது என்று சொன்னார்கள். அதைத்தான் நாம் எதிர்த்தோம்.

## தோல் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் தலைமையிடத்தை சென்னையில் அமைத்திடவும், தோல் ஏற்றுமதி மேம்பாட்டு மன்றம் கூடுதல் பொறுப்பை அனுமதிக்கவும் இந்திய அரசைக் கோருதல்

1975 நவம்பர் 10] [திரு. எம். ஏ. லத்தீப்]

நாம் ஒத்துக்கொள்கிறோம். உங்களுடைய கொள்கையை ஒத்துக் கொள்கிறோம். ஆனால் இந்த ஃபினிஷ்ட் யூனிட்டுகளை ஏற்படுத்துவதற்காக, கேப்பிட்டல் தேவை. அதற்கென, சரியான காலம் தேவை—மெஷினரியை இம்போர்ட் செய்ய—

To provide infra-structure to the new conceived units in Tamil Nadu, we require some time and also we require capital. We must also see that there is smooth switch over from the semi-finished goods to the finished goods. At the same time, we require imported machines for the manufacture of finished goods. This was the important factor. Therefore we wanted about 5 years time, so that there may be a smooth switch over from the un finished product to the finished product, without there being any disturbance to the basic character of the industry. Therefore, we have requested the Government of India to give us more time and agree to this suggestion. Therefore, there is justification in our asking the Union Government. Now the Government of India has adopted a different policy and decisions have been taken at the highest level by the Ministers of the Union Government. We have to use all our knowledge and experience to make the Government of India concede to our request. That is my submission.

மொத்தத்தில் 85 சதவிகிதத்துக்கு மேலாக நாம் இன்றைக்கு ஏற்றுமதி செய்கிறோம்; எவ்வளவு எக்ஸ்போர்ட் செய்கிறோமோ அவைகளுக்கெல்லாம் எஸ். டி. சி. க்கு ரூ. 100-க்கு ரூ. 1-ஐ கமிஷனைச் செலுத்துகிறோம். இப்படி கோடிக்கணக்கான ரூபாயை அவர்கள் சம்பாதித்து வைத்திருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே இந்தத் தொழிலை டெவலப் செய்வதற்கு மத்திய அரசாங்கம் எவ்வளவு பணம் செலவழிக்கிறார்கள் என்று கேட்டால் வெட்கக் கேடாக இருக்கிறது.

எனவே தமிழ்நாடு அரசு இதைத் தீவிரமாக எடுத்துச் சொல்ல வேண்டும். இங்கே டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள், திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். நீங்கள் ரெசொல்யூஷனை பாஸ் செய்து மத்திய அரசுக்கு அனுப்பி வைத்துவிட்டால் என்ன யூஸ் என்ற முறையிலே,

This will only adorn some office of the Ministry of Commerce in New Delhi.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு உறுப்பினர் 'டெல்லி சலோ' என்ற தத்துவத்தை உபயோகப் படுத்த வேண்டுமென்று சொல்கிறார்

**திரு. எம். ஏ. லத்தீப்:** Delhi is 'dhoor hai' 'டெல்லி வெகு தூரத்தில் இருக்கிறது. அடிக்கடி உங்களுடைய தபால்கள் கிடைப்பதற்குத் தாமதம் ஏற்படுகிறது, நீங்கள் எவ்வளவுதான் உருக்கமாக இங்கே இருந்து கத்தினாலும் அவர்கள் கேட்பதற்குத் தாமதமாகிறது.

நான் அமைச்சரவர்களைப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். தயவுசெய்து நீங்கள் ஏற்பாடு செய்யுங்கள். உங்களுடைய தலைமையிலே இங்கே இருக்கிற எல்லா எதிர்க்கட்சித் தலைவர்களையும் அழைத்துக்கொண்டு ஒரு தூதுகோஷ்டியாக திருமதி அனந்தநாயகி அவர்களும் அதிலே இருக்கட்டும், திரு. கே. டி. கே. போன்றவர்கள் இருக்கட்டும். திரு. மாரிமுத்து போன்றவர்கள் இருக்கட்டும். மற்றும் காங்கிரஸ் கட்சித் தலைவர் போன்றவர்களும் இருக்கட்டும் இவர்களையெல்லாம் டில்லிக்கு அழைத்துச் சென்று இந்தத் துறையிலே இருக்கின்ற சிக்கல்களை எல்லாம் முழுமையாக உணர்த்தி இந்த மேம்பாட்டுக் கழகம் தமிழ்நாட்டிலேதான் இருக்கவேண்டுமென்ற முறையிலே வற்புறுத்திச் சொல்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அமைச்சரவர்கள் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றித் தருவதோடு மட்டுமல்ல, ஒரு தூதுகோஷ்டி என்ற முறையிலே அவர்களே ஏற்பாடு செய்து டெல்லிக்குச் சென்று அங்கேயுள்ள டெல்லி மந்திரி சட்டோபாத்தியா அவர்களை சந்தித்து, தமிழ்நாட்டைச் சேர்ந்த மத்திய அமைச்சர் சி. சுப்பிரமணியம் அவர்களைச் சந்தித்து பிறகு அவர்களையும் அழைத்துக்கொண்டு பிரதம மந்திரி அவர்களைச் சந்தித்து வற்புறுத்தினால்தான் இதனால் ஏற்படுகிற நிலைமைகளை எடுத்துச் சொன்னால்தான் இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிற பல்லாயிரக்கணக்கான மக்களின் சோதனைகளை எடுத்துச் சொல்ல முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



பெரும் பணக்காரர்கள் 10 பேர்கள்தான் இந்தத் தொழிலில் இருக்கிறார்கள், கிட்டத்தட்ட 500 சிறிய தொழிலதிபர்கள் 2, 3 லட்சம் ரூபாய் அளவிற்கு மூலதனம் போட்டு நடத்துகிறவர்கள் நசுக்கப்படுவார்கள், அவர்களைக் காப்பாற்ற இந்த அரசு முன்வர வேண்டுமென்பது மட்டுமல்ல, எங்கள் ஊர் வாணியம்பாடி போன்ற இடங்களிலே இந்தத் தொழிலிலே பணியாற்றுகின்ற லட்சக்கணக்கான தாழ்த்தப்பட்ட மக்கள் பிற்படுத்தப்பட்ட மக்கள் இவர்களை யெல்லாம் அபாயத்திலேயிருந்து காப்பாற்றுகிற பொறுப்பு தமிழ்நாடு அரசுக்கு உண்டு என்ற முறையிலேயும் நாம் நேரடியாகச் சென்று சொல்லவேண்டுமென்பது மட்டுமல்ல, அவர்கள் கொடுக்காவிட்டால் பொறுப்பு யார் மீது என்று நாம் நிர்ணயித்துக் கொள்ளலாம். நாம் எல்லோருமே சேர்ந்து சொன்னால் மத்திய அரசு ஏன் தயக்கம் காட்டப் போகிறது? ஆகவே அமைச்சர் அவர்கள் தயவுசெய்து இந்தத் தீர்மானத்தின் நகலை நாமே எடுத்துக்கொண்டு அமைச்சர் அவர்களே வந்தால் கூடப் பரவாயில்லை, ஏன் நம்முடைய முதலமைச்சர் அவர்களே வந்தால்கூடப் பரவாயில்லை, இதை வற்புறுத்திச் சொல்லக்கூடிய முறையிலே ஏற்பாடு செய்யவேண்டும், அந்த வகையிலே இந்தத் தீர்மானம் உரிய நேரத்திலே உரிய முறையிலே அவசியமான மிகவும் முக்கியமான தீர்மானமாக இருக்கிறது இதை நான் முழு மனதோடு ஆதரிப்பதோடு மட்டுமல்லாமல் இந்த அவையும் முழு மனதோடு இதை ஆதரிக்கும் என்று நம்பி என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, இந்திய அரசு அமைக்கத் தகுதியுள்ள தோல் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் தலைமையிடத்தைச் சென்னையிலேயே அமைத்திடவேண்டுமென்றும் சென்னையில் தற்போதுள்ள தோல் ஏற்றுமதி மேம்பாட்டு மன்றம் வேலை நிறைவுபெற்ற தோல்களின் ஏற்றுமதி மேம்பாடு குறித்த கூடுதல் பொறுப்பினையும் ஏற்றுத் தொடர்ந்து செயல்பட அனுமதிக்க வேண்டுமென்றும் கொண்டுவரப்பட்டுள்ள இந்தத் தீர்மானத்தை நான் மனமார வரவேற்கிறேன். இந்தத் தீர்மானத்தை, நம்முடைய அரசாங்கமே கொண்டுவந்திருப்பதை, இன்றையதினம் எதிர்க்கட்சிக்காரர்களெல்லாம் பாராட்டியிருக்கிறார்கள். இதிலே குறிப்பாக இந்திய ஆளுங்கட்சியைச் சேர்ந்த

உறுப்பினர் திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் இந்தத் தீர்மானத்தை வரவேற்பதோடு மட்டுமல்லாமல் இந்தத் தீர் மானத்தை வைத்துப் போராடுங்கள் நாங்கள் உங்களுக்கு ஆதரவு தருகிறோம் என்றுகூடச் சொல்லியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்று சொன்ன நேரத்தில் எங்களைக் கிண்டலும் கேலியும் செய்தவர்கள் எல்லாம் இன்றைக்கு உங்களோடு நாங்களும் போராடுகிறோம் என்ற அளவிற்கு வந்திருக்கிறார்கள் என்பதற்காக நாம் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம் . . . . .

**திரு. எஸ். வடிவேல்:** திரு. வீராசாமி அவர்கள் வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்று சொல்கிறார்கள், அப்படி யானால் தெற்கு தேய்ந்து கொண்டிருக்கிறது என்பதை ஒப்புக் கொள்கிறார்களா என்பதை அறியவிரும்புகிறேன்.

**திரு. நா. வீராசாமி:** நான் மாண்புமிகு உறுப்பினர் அவர் களுக்கு விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே நண்பர் லத்தீப் அவர்கள் ஒரு நியாயமான வாதத்தை எடுத்துச் சொன்னார்கள். வட மாநிலங்களுக்கு, ஏகபோகத் தொழில்களைப் பொறுத்த வரையில், ஏற்றுமதி செய்யும் உரிமை கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆனால் 100க்கு 85 சதவீதம் தோல் ஏற்றுமதி செய்கின்ற நிலைமையில் உள்ள நம்முடைய சென்னைக்கு உரிமையை கொடுக்காமல் ஏற்றுமதி உரிமையை சென்னையை விட்டுவிட்டு வேறு வடமாநிலத்திற்குக் கொடுக்க யோசித்துக் கொண்டிருக்கிறது என்று சொன்னால் இதனாலே வடக்கு வாழ்கிறதா இல்லையா என்பதை உறுப்பினர் அவர்களே யோசித்துப் பார்க்க வேண்டும்.

**திரு. கு. காமாட்சி:** இந்தத் தீர்மானத்தை அவர்கள் வரவேற்கிறார்கள். நாம் ஏன் அதைக் கெடுக்க வேண்டும்?

**திரு. நா. வீராசாமி:** இப்போதுதான் அவர்கள் நம் கருத்து பக்கம் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள், அவர்கள் ஆதரிக்கவில்லை யென்றால் அவர்கள் அரசியலே நடத்த முடியாது. இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்கள் ஏழை எளியவர்கள்.



குறிப்பாக வட ஆற்காடு மாவட்டத்திலே இந்தத் தொழி லாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்பதை அவர்கள் நன்றாக அறிவார்கள். இங்கே அனந்தநாயகி அம்மையார் அவர்கள் பேசும் போது நியாயமானது என்ற கருத்தை எடுத்துச் சொல்லியிருக் கிறார்கள். இதிலே தோல் ஏற்றுமதி என்ற நிலையோடு மட்டும் நின்றுவிடக் கூடாது, இதனால் எதிர்காலத்திலே ஏற்படக்கூடிய பொருளாதார முன்னேற்றங்களையும் கருத்திலே கொள்ளவேண்டும். சென்னையிலிருந்து மாற்றிவிட்டால் பொருளாதார முன்னேற்றம் இருக்காது. தோல் பதனிடும் தொழிலாக இருந்தாலும் சரி, அல்லது அதோடு தொடர்புடைய தொழிலாக இருந்தாலும் சரி நாம் அதனுடைய பல அடிப்படைகளைப் பார்க்கவேண்டும். தோல் தொழிலுக்கு அடிப்படையாக இருக்கிற கால்நடைகளைப் பற்றி நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். கால்நடைகளிலிருந்து நமக்கு தோல் கிடைக்கிறது, நமக்கு கறி கிடைக்கிறது, நமக்கு எலும்பு கிடைக்கிறது, ரத்தம் கிடைக்கிறது, பிளட் மீல் கிடைக்கிறது, லிவர் எக்ஸ்ட்ராக்ட் கிடைக்கிறது, இன்சுலீன் கிடைக்கிறது . . .

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா:** இவ்வளவையும் சொல்கிற உறுப்பினர் அவர்கள் சைவமாயிற்றே என்று நான் வருத்தப்படுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் ரகசியமாகச் சாப்பிட்டாலும் சாப்பிடலாம், யாருக்குத் தெரியும்?

**திரு வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** திரு வீராசாமி வீட்டிலே சைவம், வெளியிலே அசைவம்.

**திரு. நா. வீராசாமி:** யாருக்கும் பயந்து நான் சைவமாக இருக்க வேண்டிய அவசியமில்லை, யாருக்கும் தெரியாமலும் நான் அசைவமாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

**திரு. கு. காமாட்சி:** திரு. வீராசாமி அவர்கள் வீர சைவமா அல்லது சாதாரண சைவமா?

**திரு. நா. வீராசாமி:** இரண்டும் கலந்த சைவம். தலைவர் அவர்களே இந்தத் தொழிலிலே அதிகக் கவனம் செலுத்த வேண்டு மென்று சொல்வதற்குக் காரணம் தோல் உற்பத்தி, ஏற்றுமதி

## தோல் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் தலைமையிடத்தை சென்னையில் அமைத்திடவும், தோல் ஏற்றுமதி மேம்பாட்டு மன்றம் கூடுதல் பொறுப்பை அனுமதிக்கவும் இந்திய அரசைக் கோருதல்



மூலம் வருவாய் கிடைக்கிறது என்று சொன்னாலும் அதிலும் 85 சதவிகிதம் சென்னையிலே நடக்கிறது என்று சொன்னாலும் இன்னும் இந்தத் தொழிலை அதிகமாக முன்னேற்ற வேண்டுமென்று சொல்வதற்குக் காரணம் இராணிப்பேட்டை போன்ற பகுதிகளில் தோல்பதனிடப்படுகின்ற இடங்களில் இருந்து வருகின்ற தண்ணீர் நிலங்களில் பாய்கின்ற காரணத்தினால் நிலங் படுகின்றன. அதனுடைய சுற்றுப்புறத்தில் இருக்கிற ஐந்தாறு மைல் தூரத்தில் உள்ள இடங்களில் அந்தத் தண்ணீர் பாய்கிறது. ஆகவே, அதைத் தடுக்கக்கூடிய வகையில் ஸ்லட்ஜ் வைத்து அதைத் தவிர்ப்பதற்கான முயற்சியைச் செய்யவேண்டும். முயற்சியெடுக்க வேண்டுமென்று நான் சொல்கிறபோது அரசாங்கம் தானாக அதைச் செய்துவிடமுடியாது. ஒரு கார்ப்பரேஷன் இந்தத் தொழிலுக்கு என்று இருக்கிற நிலையில் இந்தக் கால்நடைகளை எப்படி வளர்ப்பது, எப்படி கால்நடைகளின் தோல்களைப் பயன் படுத்துவது, எப்படி பதனப்படுத்துவது, எப்படி அதிலிருந்து கிடைக்கின்ற பொருள்களையெல்லாம் பயன்படுத்தமுடியும் என்று ஆராய்ச்சி செய்து நடவடிக்கை எடுக்கமுடியும்.

கேரள மாநிலத்திற்கு நாம் கால்நடைகளை அனுப்புகிறோம், அவர்கள் தோலை எடுத்துக்கொள்வது ஒரு பக்கம் இருந்தாலும் கறியை எடுத்துக் கொள்வது ஒரு பக்கம் இருந்தாலும், கால்நடைகளிலிருந்து போன்மீல், பெர்ட்டிலிசர் போன்றவை செய்வதற்கும் பயன்படுத்துகிறார்கள். ஜப்பான் நாட்டுக்காரன் நம்முடைய நாட்டிலிருந்து எவ்வளவு எலும்பை வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளத் தயாராக இருக்கிறான். ஆகவே, இந்தத் தொழில் வளர்ச்சியடைவதற்கும், அன்னியச் செலாவணி பெருகுவதற்கும் இந்தத் தொழிலை அபிவிருத்தி செய்வதன் மூலமாக வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கும் இந்தக் கார்ப்பரேஷன் அமைவதன் மூலமாக இப்படிப்பட்ட தொழில்கள் பெருகக்கூடிய நிலைமை ஏற்படும். இதிலிருந்து கிடைக்கும் மூலப் பொருட்களிலிருந்து பலபொருள்களை உற்பத்தி செய்ய முடியும். இதை எண்ணிப் பார்த்துத் தான் இந்தக் கழகம் சென்னையிலே அமைய வேண்டுமென்ற தீர்மானத்தை கொண்டு வந்திருக்கிறது. அதை ஆதரிக்கும் நேரத்தில் இந்த கார்ப்ரேஷன் அமைப்பதன் மூலம்—இங்கிருந்து ஏற்றுமதியாகும் தோல் 'பினிஷ்ட் குட்ஸ்'—ஆக

தோல் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் தலைமையிடத்தை சென்னையில் அமைத்திடவும், தோல் ஏற்றுமதி மேம்பாட்டு மன்றம் கூடுதல் பொறுப்பை அனுமதிக்கவும் இந்திய அரசைக் கோருதல்



வருகிறது—இந்த கார்ப்ரேஷன் அமையும் நேரத்தில் அதில்
பெரும்பகுதியை இங்கேயே ஃபினிஷ்ட் குட்ஸாக மாற்றி வேறு சில
நாடுகளுக்கு அனுப்ப வேண்டும். அப்படிப்பட்ட நல்ல வாய்ப்பு
இருப்பதால் இந்தக் கார்ப்பரேஷன் இங்கே அமைய வேண்டும்.

(முற்பகல் 11-00)

அதோடு 'மீட் இன்டஸ்ட்ரி' யையும் தமிழ்நாட்டிலே உரு
வாக்குவதற்கு தொழிலமைச்சரவர்கள் பெருமுயற்சி எடுக்க வேண்
மென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி முயற்சிக்கின்ற நேரத்தில்
இராணிப்பேட்டையில் அமைந்திருக்கின்ற 'சிப்காட்'டிலே அந்தத்
தொழிற்சாலை அமைய வேண்டுமென்ற உறுதியையும் எடுத்துக்
கொள்ள வேண்டும். இன்றைக்கு கால்நடை அதிகமாகக் கிடைக்
கிறது என்பது மட்டுமல்ல, தொழில்மயமாகி வரும் சிப்காட்
பகுதியிலே மீட் இன்டஸ்ட்ரியை வைப்பதன் மூலம் நம் மாநிலத்
திலேயிருந்து கிடைப்பது மட்டுமல்ல, பக்கத்திலே உள்ள ஆந்திர
மாநிலத்திலிருந்தும் கிடைப்பதற்கான வாய்ப்பிருக்கிறது.
ஆகவே, மீட் இன்டஸ்ட்ரியை ஆரம்பிக்க வேண்டும். இந்தக்
கழகம் சென்னை நகரத்திலே இருக்க வேண்டும் என்று இந்த
இரண்டு வார் முழு கவனத்தை நம்முடைய அமைச்சரவர்கள்
செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

* **திரு. ஏ. ஆர். மாரிமுத்து** : மதிப்பிற்குரிய தலைவரவர்களே,
தமிழ்நாட்டிலே பாரம்பரையாக இருந்து வரும் ஒரு தொழிலை நல்ல
முறையிலே வளப்படுத்துவதற்கான வழிமுறையாக இருக்க
வேண்டுமென்ற வகையிலே இந்தத் தீர்மானத்தை அரசு கொண்டு
வந்திருக்கிறது. இதை அரசியலுக்குப் பயன்படுத்த வேண்டிய
அவசியமே இல்லை. தமிழ்நாட்டிலே உள்ள சாதாரண மக்கள் தம்
தொழிலை வளப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் கொண்டு
வந்திருப்பதால் இதிலே அரசியல் புகுவதற்கான இடம் இல்லை
என்று நான் கருதுகிறேன். முன்னால் பேசிய மதிப்பிற்குரிய
உறுப்பினர் அவர்கள் இதிலே பெரிய அரசியல் இருப்பதாகவும்.
அப்படியே டில்லிக்குப் போய்விட்டது என்பதாகவும் கருத்தைச்
சொன்னார்கள். அது, சதா அவர் எண்ணிக்கொண்டிருக்கின்ற
எண்ணத்தின் பிரதிபலிப்பு என்றுதான் நான் கருதுகிறேனே

தவிர இந்தத் தீர்மானத்தைப் பொருத்தது அல்ல என்று எடுத்துக்கொள்கிறேன்.

ஏதோ மத்தியிலே இருப்பவர்கள் இது தென்னகத்திற்கு வரவே கூடாது என்ற முடிவையெடுத்துவிட்டது போலக் கூறினார்கள். இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை. மத்திய தொழில்துறை அமைச்சரவர்கள், இது தென்னகத்தில் இருக்க வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் கருத்தை அடிப் படையாக வைத்து, அந்தக் கருத்துக்கு வலுவூட்டக் கூடிய முறையில் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறோமே தவிர வேறல்ல. இந்த Leather Development Corporation. தென்னகத்தில் இருக்க வேண்டிய நியாயம், அதற்கான புள்ளி விவரங்களையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப் பிட்டார்கள். இதில் நமக்குள்ள சங்கடம் என்னவென்றால், மத்திய அரசாங்கம் பல்வேறு ஏற்றுமதிக்கான முறைகளைக் கவனிக்கும் பொழுதும், நாம் ஏற்றுமதி செய்யும் பொருள்கள் தரமானதாக இருக்கவேண்டும், தரமானதாக இருந்தால்தான் நமக்கு வெளிநாட்டு மார்க்கெட்டிலே நல்ல விலை கிடைக்கும், நம்முடைய எக்ஸ்போர்ட் அதிகமாக இருக்கும் என்பதால், பழமை யிலிருந்து புதுமையாக வேகமாக மாறி முயற்சிகளைச் செய்யும் பொழுது இடைக்காலத்தில் சில சிரமங்கள் அப்பொழுதைக்கப் பொழுது ஏற்படுவது சகஜம்.

இரண்டாண்டுகளுக்கு முன்னால் தமிழ்நாட்டிலே இந்தத் தோல் சம்பந்தமான தொழிலில் ஈடுபட்டவர்கள் பெரிய சிரமத்திற்கு ஆளாயினர். ஃபினிஷ்ட் லெதரை ஏற்றுமதி செய்ய வேண்டு மென்றபொழுது இடைக்காலத்திலே ஒரு சிரமத்தைச் சமாளிக்க வேண்டியிருக்கிறது. இதைக் கருத்திற் கொண்டு நம்முடைய ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டுமென்ற முயற்சிகளில் ஈடுபடும் பொழுது அதற்கேற்றவாறு வகைப்படுத்திக்கொள்ள முடியாமல் இருக்கும்பொழுது இடைக்காலத்தில் சில சிரமங்கள் இருக்கலாம். இருந்தாலும்கூட அதைச் சமாளித்து ஏற்றுமதியை அதிகரிக்க முடியும் என்பதை கடந்த கால நிகழ்ச்சிகள் ஞாபகமூட்டுகின்றன.

எக்ஸ்போர்ட் ப்ரமோஷன் கவுன்சில் இரண்டு இருக்கின்றன. வடக்கே கான்பூரிலே ஒன்று, சென்னையிலே ஒன்று. வடக்கே



இருப்பதில் 'finished leather' and 'finished leather goods' இவைகளை ஏற்றுமதி செய்து கொண்டிருந்தார்கள். நாம் செமி ஃபினிஷ்ட் லெதரை மட்டும் ஏற்றுமதி செய்துகொண்டிருந்தோம். இடைக்காலத்தில் அவர்களும் செமி ஃபினிஷ்ட் லெதரை ஏற்றுமதி செய்யலாம் என்று அனுமதிக்கப்பட்டிருக்கிறது. தென் பகுதியிலே உள்ள எக்ஸ்போர்ட் பிரமோஷன் கவுன்ஸில் செமி ஃபினிஷ்ட் லெதரை ஏற்றுமதி செய்ய வேண்டுமென்று இருந்த அனுமதியை, கான்பூரில் உள்ள கவுன்சிலும் ஓரளவு ஏற்றுமதி செய்ய அனுமதிக்கும்பொழுது அதேபோல் ஃபினிஷ்ட் லெதரை அனுப்புவதற்கான அனுமதி தென்னகத்திலே உள்ள எக்ஸ்போர்ட் ப்ரமோஷன் கவுன்சிலுக்கும் வேண்டுமென்று கேட்கிறோம். அதுதான் தீர்மானத்தில் இருப்பது. சீதாராமையா கமிட்டி, செமி ஃபினிஷ்ட் லெதரை அதிக காலத்திற்கு வைத்துக்கொள்ள முடியாது என்று கூறியதால் ஃபினிஷ்ட் லெதர் வேண்டுமென்று உற்பத்தியை ஆரம்பித்தோம். அப்படியிருக்கும்பொழுது செமி ஃபினிஷ்ட் லெதரை மட்டும் உற்பத்தி செய்தால் நம்முடைய ஏற்றுமதி குறையும். அது குறையாமலிருக்க நாமும் ஃபினிஷ்ட் லெதரை ஏற்றுமதி செய்ய அனுமதிக்க வேண்டுமென்று கேட்பது நியாயம். ஃபினிஷ்ட் லெதர் குட்ஸ் என்று போட்டால் ஒருவேளை கான்பூரிலே உள்ளவர்களுக்குச் சிரமம் ஏற்படலாம். ஆகவே, மதிப்பிற்குரிய கே. டி. கே. தங்கமணி அவர்கள் கொடுத்துள்ள திருத்தத்தைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆகவே, எக்ஸ்போர்ட்டை அதிகரித்துக் கொண்டே போகும் பொழுது அதன் விகிதாச்சாரம் குறையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அப்படி இருக்கும்பொழுது கான்பூரில் உள்ளவர் களுக்குச் சங்கடம் ஏற்படாது. ஆகவே, இந்தத் தீர்மானத்தின், இரண்டாவது பகுதியையும் முதல் பகுதியையும் அப்படியே இருப்பதைப் போல ஆதரிப்பதால் தேசிய அளவிலே பார்த்தால் சங்கடம் உண்டாகாது. எனவே, இதை அப்படியே ஏற்றுக் கொள்ளலாம். ஆகவே, மத்திய அரசின் தொழில் அமைச்சரின் கருத்து பரிபூரண ஆதரவாக இருக்கிறது. டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் எங்கே வரும் என்று முடிவே எடுக்கவில்லை,

எத்தனை நாள் ஆகும் என்றும் தெரியவில்லை. இதனால் எக்ஸ்போர்ட் ப்ரமோஷன் கவுன்சிலுக்கு ஃபினிஷ்ட் லெதரை ஏற்றுமதி செய்வதற்கான உரிமை கொடுக்க வேண்டுமென்ற கருத்தைச் சொல்லியிருக்கிறோம் என்று நான் கருதுகிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்)** : கல்கத்தாவிலே வைக்க முடிவு செய்து விட்டதாகத் தெரிகிறது. நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரவர்கள் அதுவிஷயமாக ஏதாவது சொல்ல முடியுமா?

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து** : தலைவரவர்களே, இம்மாதிரி மூன்று விதமான கருத்து. ஒரு தொழிலை ஆரம்பிக்க வேண்டுமென்றால் எந்தெந்த இடத்திலே அமைக்கலாம் என்று வரும்பொழுது பல்வேறு கருத்துக்கள் கூறப்படுகின்றன. அந்த நேரத்தில் இரண்டு செண்டர்கள், மூன்று செண்டர்கள் என்று எடுப்பார்கள். அதிலேயிருந்து ஒரு செண்டரை தேர்ந்தெடுப்பார்கள். It has not yet been finalised. அமைச்சர் சொன்னதிலிருந்து நான் சொல்கிறேன். அங்கேயிருந்து வந்த தகவல் இல்லை. இங்கே வைப்பது பொருத்தம் என்று டி. ஏ. வை அவர்கள் நோட் எழுதியிருப்பதால் நாமும் நம்முடைய கருத்தைப் பலப்படுத்துகின்ற முறையிலே இந்தத் தீர்மானத்தை நான் ஆதரித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருமே இந்தத் தீர்மானத்தை ஆதரித்திருக்கிறார்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் உட்பட. அவர்கள் சொன்னது 'ஸ்பிரிட் ஆஃப் தி ரிசல்யூஷன்' க்கு ஆதாரமாகச் சொல்லியிருக்கிறார்கள். அவருக்கு ஏற்பட்ட சந்தேகம், இந்தக் கடைசி வாக்கியம்,

'Additional responsibility of promoting the export of finished leathers'

என்ற இந்த முறை கான்பூரில் உள்ள தொழில் அதிபர்களுக்கு அல்லது தொழிற்சாலைகளுக்குப் பாதகமாக அமைந்து விடுமே என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அனந்தநாயகி அம்மையார் அவர்கள் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.



அவர்கள் இன்னும் ஒருபடி முன்னால் சென்று சொல்லியிருக்கிறார்கள். செமி ஃபினிஷ்ட் குட்ஸை இன்னும் கொஞ்ச காலத்திற்கு அனுமதிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

இதை இரண்டு பகுதியாக எடுக்க வேண்டும். ஒன்று, லெதர் இண்டஸ்ட்ரீஸ் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன். இந்த கார்ப்பரேஷனை அமைக்க தலைமையகம் எங்கே என்ற பிரச்னை. திரு. லத்தீப் அவர்கள் சொன்னதைப் போல, எங்கே இந்தத் தொழில் அதிகமாக இருக்கிறதோ அங்கே அமைப்பதுதான் நியாயத்தின் அடிப்படையில் உள்ளதாக இருக்கும். நம்முடைய மாநிலத்தில் 80 சதவிகிதத்திற்கு மேல் தோல் ஏற்றுமதி நடைபெறுவதால், எதிர்காலத்தில் இந்தத் தொழிலை முன்னேற்றம் செய்ய வழிவகை காண லெதர் இண்டஸ்ட்ரீஸ் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷனை அமைக்க வேண்டுமென்று நாம் கேட்டிருக்கிறோம்.

மற்றொரு பிரச்னை என்னவென்றால், தமிழ்நாட்டிலுள்ள லெதர் எக்ஸ்போர்ட் ப்ரமோஷன் கவுன்சிலையும், கான்பூரிலுள்ள லெதர் எக்ஸ்போர்ட் ப்ரமோஷன் கவுன்சிலையும் இணைத்து ஒரு அமைப்பை அமைக்க குறிப்பு இருப்பதுதான் முக்கியமான பிரச்னை என்று நான் கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்களும், திருமதி ஜோதி அம்மையார் அவர்களும் சொன்னதைப்போல தமிழ்நாட்டிலே உள்ள லெதர் எக்ஸ்போர்ட் ப்ரமோஷன் கவுன்சிலுக்கு சில வாய்ப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. செமி ஃபினிஷ்ட் லெதரை ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்பு தமிழ்நாட்டிலுள்ள லெதர் எக்ஸ்போர்ட் ப்ரமோஷன் கவுன்சிலுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

'வெட் ப்ளூ' என்பது 'செமி பினிஷ்டு லெதர்' என்றுதான் சொல்லப்படுகிறது. ஜோதி அம்மையார் அவர்கள் சொன்னது நம்முடைய மாநிலத்திலிருந்து 'வெட் ப்ளூ' கான்பூருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். மத்திய சர்க்கார் கொள்கையே செமி பினிஷ்ட் லெதர் பினிஷ்ட் லெதராக மாற வேண்டுமென்பது சீதாராமையா கமிட்டி ரிப்போர்ட்டின் அடிப்படையில் சொல்லப்பட்டிருக்கிறது. நம்முடைய துரதிருஷ்டம் அந்த சீதாராமையா கமிட்டி சென்னைக்கு வரவில்லை. சீதாராமையா கமிட்டி பல ரெகமென்டேஷன்களைக் கொடுத்திருக்

கிறார்கள். அவற்றை முழுவதையும் ஏற்றுக்கொண்டு செயல்பட்டால் சிரமங்கள் ஏற்பட்டு இருக்காது. அவற்றிலே சிலவற்றை ஏற்பட்டு இருக்காது. அவற்றிலே சிலவற்றை மாத்திரமே ஏற்றுக் மாத்திரமே ஏற்றுக் கொண்ட காரணத்தால்தான் கஷ்டம்.

பொதுவாக, உறுப்பினர்கள் இந்தத் தீர்மானத்தை ஆதரித்திருக்கிறார்கள். மாண்புமிகு கே. டி. கே. அவர்களுடைய திருத்தத்தைப் பொறுத்தவரை நான் ஏற்கனவே விளக்கமளித்துள்ளேன். நம்முடைய தமிழ்நாட்டில் அந்தத் தொழில் நசித்து விடக் கூடாது.

"We should switch over from semi-finished leather goods to finished leather goods'

என்று சொல்லியிருக்கிறார்கள். பினிஷ்டு லெதரை ஏற்றுமதி செய்யும் உரிமை நமக்கு இருக்க வேண்டும். அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம்.

மாண்புமிகு திரு. மாரிமுத்து அவர்கள் சொன்னது போல் நான் மத்திய சர்க்கார் அமைச்சர் எழுதிய கடிதத்தைப் படித்துக் காண்பித்தேன். லெதர் டெவலப்மென்ட் கார்ப்பரேஷன் அதைப் பற்றி முடிவு செய்யவில்லை என்ற கருத்து சொல்லப்படுகிறது. திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னது போல் கல்கத்தாவில் அமைக்க ஒரு யோசனை இருப்பதாகவும் தெரிகிறது. கான்பூரில் அமைப்பதா, கல்கத்தாவில் அமைப்பதா என்ற முடிவை எடுக்காத நிலைமையில் நம்முடைய உரிமையை நிலைநாட்டும் வகையில் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. லத்தீப் அவர்கள் சொன்னார்கள்—ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் மூலம் ஏற்றுமதி செய்யும்போது கமிஷன் சார்ஜ் ஒரு பர்சன்ட் எடுத்துக் கொள்ளுகிறார்கள்; அந்தப் பணமே ஒரு கோடி ரூபாய்க்கு மேல் இருக்கும் என்று சொன்னார்கள். நம்முடைய மாநிலத் தொழிற்துறை மூலமாகவே இதுபோன்ற உதவிகள் செய்ய—

'Service Centres for finished leather'





ஆகியவற்றை வட ஆற்காடு மாவட்டத்தில் அமைக்க மத்திய சர்க்கார் அனுமதி கேட்டிருக்கிறோம். அந்த அனுமதி கிடைத்தால் நிச்சயமாக அந்த ஒரு கோடி ரூபாயை நாம் பெற வாய்ப்பிருக்கிறது. நிச்சயமாக அனுமதி கிடைக்கும்.

மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியது போல் பொதுவாக இந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் பின்தங்கியவர்கள். இந்தத் தொழில் நசித்துப் போனால் அந்த மக்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள்.

டாக்டர் ஹாண்டே அவர்களும், அனந்தநாயகி அம்மையார் அவர்களும் டில்லிக்குப் போகலாம் என்று சொன்னார்கள். டில்லிக்குப் போவதில் ஆட்சேபணை இல்லை. முதலமைச்சர் அவர்களைக் கலந்தாலோசித்து முடிவுக்கு வரலாம்.

மாண்புமிகு லத்தீப் அவர்களே ஏற்கனவே டில்லிக்குப் போன போது பிரதமர் அவர்களிடத்திலும், ஜனாதிபதி அவர்களிடத்திலும் இந்தப் பிரச்சினை பற்றி நேரடியாகச் சொல்லியிருக்கிறார்கள். திருமதி அனந்தநாயகி அவர்களுடைய பேச்சு மாண்புமிகு கே. டி. கே. எழுப்பிய பிரச்சினைக்குப் பதிலாக அமைந்திருந்தது. திருமதி அனந்தநாயகி அவர்கள் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு கே. டி. கே. அவர்கள் திருத்தத்தை வாபஸ் வாங்கிக் கொண்டு தீர்மானத்தை முழுமனதாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. நா. வீராசாமி:** மீட் கார்ப்பரேஷன். . .

MR. DEPUTY SPEAKER: The hon. Member is confusing Meat Corporation with Leather Corporation.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மீட் தொழிற்சாலை ஆரம்பிக்கலாம் என்ற திட்டம் இருக்கிறது. மிடில் ஈஸ்ட் கன்ட்ரீசில் மீட்டுக்கு அதிகமான கிராக்கி இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அவர்கள் அதற்கு ஒரு ப்ராஜக்ட் தயார் செய்து கொண்டிருக்கிறார். அந்த ப்ராஜக்ட் வரும்போது உதவிகளைச் செய்யலாம். அந்நியச் செலாவணியை ஈட்டுகின்ற வகையில் அதனை தமிழ்நாட்டில் ஆரம்பிக்க அதிக வாய்ப்புக்கள் இருக்கின்றன.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) :** தொழிலமைச்சர் அவர்கள் அடுத்த வாரத்தில் டில்லிக்குப் போவதாக அறிகிறேன். 18 ஆம் தேதி அல்லது 19 ஆம் தேதி போகிற சமயத்தில், இங்கு பேசிய உறுப்பினர்கள் சொந்தச் செலவில் அவர்களுடன் டெல்லிக்குச் சென்றால் 'ஆல் பார்ட்டி' தூதுக் குழுவாக அது அமையும். எனக்குக் கிடைத்த தகவல்படி கல்கத்தாவில் தலைமையகம் அமைக்க முடிவு செய்து விட்டதாகத் தெரிகிறது. ஆகவே, அடுத்த வாரத்தில் டில்லி செல்லக்கூடிய அமைச்சர் அவர்கள் இந்த அங்கத்தினர்களையும் அழைத்துச் சென்று பிரதமரிடத்தில் டெப்யூடேஷன் போக முன்வருவார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவரவர்கள் செலவில் டில்லி போக வேண்டுமென்று சொன்னார்கள். 'அவரவர் வீட்டில் என்னமோ சாம்பார்' என்று சொல்லுவார்கள். அப்படி அவரவர் பணம் போட்டுச் செல்ல வேண்டுமென்ற நிலை இல்லை. இதைப் பற்றி முதலமைச்சரைக் கலந்து முடிவு செய்யலாம்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** நான் பிரதமரைச் சந்தித்தபோது இந்தத் தொழிலைப் பற்றி மிகுந்த அக்கறை காட்டினார்கள். அவர்களுக்கு இதைப் பற்றிய போதிய விளக்கங்கள் கிடைக்கவில்லை என்றும், உங்கள் மூலமாக விளக்கங்கள் வந்தால் மற்ற அமைச்சர்களைக் கலந்தாலோசித்து முடிவு எடுக்க வசதியாக இருக்குமென்ற கருத்தைத் தெரிவித்தார்கள்.

ஆகவே, நம்முடைய கருத்தை எல்லாக் கட்சிக்காரர்களும் சென்று தெரிவித்தால் நல்ல முடிவு ஏற்படும். அண்மையில் அமைச்சர் அவர்கள் டில்லி செல்லுவதாக திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் வாயிலாக அறிகிறேன். ஆகவே, ஒரு குழு போல் அமைத்து டில்லிக்குச் செல்ல அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இதுபற்றி முதலமைச்சர் அவர்களைக் கலந்து முடிவு செய்யலாம்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, I want one explanation. I have given notice of an amendment. The



Kanpur Council has made representation that semi-finished
leather goods are not made available to them to make finished
leather goods. Suppose you take up the responsibility of export-
ing finished leather from Madras, would it affect the industry in
Kanpur? Also, would it amount to confrontation with the
Centre ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் மத்திய அரசாங்கத்தோடு
கன்ப்ரான்டேஷனுக்கு எந்தவிதமான நிலைமையும் இதிலே
கிடையாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உள்நாட்டுத்
தேவையைப் பூர்த்தி செய்வதிலே இடைஞ்சல ஏற்படுமா என்று
கேட்டார்கள். அதிலே எந்தவிதமான கஷ்டமும் இருக்காது
என்ற குறிப்பைக் கொடுத்திருக்கிறார்கள்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, during the
year 1972, the Kanpur Council made representation to the Govern-
ment and less and less of leathers were being made available to
the leather goods people and therefore, it was necessary that quota
restrictions on the export of E.I. tanned leathers should be
imposed.

I have already represented that even semi-tanned leather is
not made available to them for their industry. When that is the
case, the same thing should not be repeated with finished leather.
That is why I say that we should not allow a contingency where
Kanpur people would say that we are interfering with them un-
necessarily. Something like that should not happen. I hope Hon.
Minister will explain the position.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : உள்நாட்டுத்
தேவையைப் பூர்த்தி செய்ய எந்தவிதமான தடையும் இருக்காது.
இங்கு தேவையான ராமெட்டீரியல்லை கேட்பதில் ஆட்சேபனை
சொல்லவில்லை. பினிஷ்ட் லெதர் எக்ஸ்போர்ட்டுக்கு கான்பூர்
போகக் கடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. செமி பினிஷ்ட்
குட்ஸ் அனுப்ப வாய்ப்பு இருக்க வேண்டும் என்றும் சொல்லப்
பட்டிருக்கிறது.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** எக்ஸ்போர்ட் பிரமோஷன் கௌன்சில் நேரடியாக எக்ஸ்போர்ட் செய்யக்கூடிய ஸ்தாபனமல்ல. எக்ஸ்போர்ட் செய்யக்கூடியவற்றின் தரத்தை நிர்ணயிப்பதுதான் அந்த எக்ஸ்போர்ட் ப்ரமோஷன் கௌன்சிலின் வேலை. தென் நாட்டு எக்ஸ்போர்ட் ப்ரமோஷன் கௌன்சிலின் வேலை செமி பினிஷ்ட் குட்ஸ் தரமாக இருக்கின்றனவா இல்லையா என்பதுபற்றி மட்டும் ஆராய அதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பினிஷ்ட் குட்சின் தரம் பற்றி நிர்ணயிப்பது, அந்தப் பொறுப்பு அவர்களுடையது. ஆகவே, தரத்தை நிர்ணயிப்பதற்குத்தான் இந்த ஸ்தாபனம்.

(திரு. வா. மை. அப்துல் ஜப்பார்—தலைமை)

**திரு. கே. டி. கே. தங்கமணி :** பல விளக்கங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதில் ஒன்று தெளிவாக இல்லாமல் இருக்கிறது. அதை மட்டும் தெளிவுபடுத்த வேண்டும். பினிஷ்ட் லெதர் என்று சொல்வதற்கும் பினிஷ்ட் லெதர் குட்ஸ் என்பதற்கும் வித்தியாசம் இருப்பதாக லத்தீப் அவர்கள் சொன்னார்கள். கான்பூரைப் பொறுத்தவரை பினிஷ்ட் லெதர் குட்ஸ் என்று நினைக்கிறேன். அப்போது இங்கே 'பினிஷ்ட் லெதர்' என்று வந்திருக்கக்கூடிய தீர்மானத்திற்கு எந்தவிதமான ஆட்சேபணையும் சொல்வதற்கில்லை. அதைத் தெளிவுபடுத்தினால் என் திருத்தத்தை நான் வற்புறுத்தவில்லை.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** கொடுத்திருக்கும் தீர்மானம் சரிதான்.

THIRU K. T. K. TANGAMANI : In view of the explanation given, I am not pressing my amendment.

திருத்தம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பட்டது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் :** (திரு. வா. மை. அப்துல் ஜபார்) பேரவையின் முன்னுள்ள கேள்வி :

" தமிழ்நாட்டிலிருந்து பெருமளவில் உற்பத்தியாகி ஏற்றுமதி செய்யப்படுகின்ற வேலை நிறைவு பெற்ற, ஓரளவு வேலை நிறைவு



பெற்ற தோல்களின் அளவு, அனைத்து இந்தியாவிலும் ஏற்றுமதி
செய்யப்படுகின்ற தோல்களின், அளவில் 85 சதவீதம் ஆகும்
என்பதாலும்,

தமிழ்நாட்டில் தோல் தயாரிக்கும் தொழிலில், சமுதாயத்தில் நலிந்த பிரிவினரைச் சேர்ந்தவர்கள் பெருமளவில் தொழிலாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளபடியாலும்,

எனவே, இப்போது—

(1) இந்திய அரசு அமைக்கக் கருதியுள்ள தோல் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் தலைமையிடத்தைச் சென்னையிலேயே அமைத்திட வேண்டும் என்றும்,

(2) சென்னையில் தற்போதுள்ள தோல் ஏற்றுமதி
மேம்பாட்டு மன்றம் வேலை நிறைவு பெற்ற தோல்களின் ஏற்றுமதி
மேம்பாடு குறித்த கூடுதல் பொறுப்பினையும் ஏற்றுத் தொடர்ந்து
செயல்பட அனுமதிக்க வேண்டுமென்றும்,
இந்திய அரசைக் கேட்டுக்கொள்வதென இப்பேரவை
தீர்மானிக்கிறது."

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

## (5) தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1975–76 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை மீதான விவாதம்

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர்
அவர்களே, இந்த மின்சார வாரியத்தினுடைய நிதிநிலை
அறிக்கை ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர்களுக்குக்
கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆண்டு அறிக்கையும் கொடுக்கப்
பட்டிருக்கிறது. இந்த மின்சாரத் துறை சம்பந்தமாக என்னுடைய
உரையும் @ அச்சடித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை எல்லா
உறுப்பினர்களும் படித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

---

@ 123-151-ம் பக்கங்களில் இணைப்பு 1 ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மீண்டும் அதை நான் பூராவும் படிக்காமல் அதைப் படித்ததாக ஏற்றுக்கொண்டு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொன்னால் அந்தக் கருத்துக்களுக்கு நான் பதில் சொல்ல உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்த இலாகாபூர்வமாக இருக்கிற நிலைமைகளை, உறுப்பினர்கள் சொல்கிற கருத்துக்களை ஏற்றுக்கொண்டு இந்த மின்சார வாரியம் தன் பணியை நிச்சயமாகச் செய்யும் என்ற உறுதியைத் தெரிவித்து இந்த விவாதத்தைத் தொடக்கி வைக்கிறேன்.

* Dr. H. V. HANDE : Sir, I am very happy at being given the opportunity to initiate the discussion on the Electricity Board Budget for 1975–76.

Sir, I have gone through the speech of the Hon. Minister carefully. I am very sorry to say that in that speech there is nothing new but only a confession of omissions and commissions of the Electricity Board.

On page 5 he states as follows : " Steps have been initiated to remedy the situation by way of tariff revision, economy in operation and maintenance costs, maximisation of generation, improvements in overall operational efficiency, line loss reduction measures, better management, rationalisation of work loads, etc. " These are the very points, which I have been pointing out on the floor of the House, *ad infinitum*.

I have been pleading that remedial steps should be taken to set right these defects. I am glad that at least now the Minister agrees with me. Actually, to speak plainly, the affairs of the Electricity Board are far from satisfactory. If I may be permitted to be frank, I shall say that the Electricity Board is be set with a number of maladies increasing in geometric progression year after year because the Government do not seem to have made any earnest attempt to evolve a pragmatic and scientific approach to solve the Power Board's problems.

Ad hoc decisions are taken by Ad hoc men. Suddenly the man in the top thinks of something and an order is issued by the Chairman or the Chief Engineer without bestowing any thought. The result is chaos. More and more power politics are injected into



the Electricity Board and less and less power is produced by it. That is the sum and substance. The result is a pathetic performance by the Board.

There is not even proper finalisation of uptodate accounts. Accounts of 1972–73 are still not yet finalised. Our State was the first in the matter of accounts during 1964–65. The position is just the reverse now.

The morale of the officials is at a low ebb. After the taking over of the power board by the present Government, things have deteriorated. Ad hoc decisions are taken and executed on the spur of the moment. Regarding the accounts of the Board, I shall quote ' the Hindu ' dated 10th May 1975 which says : " the accounts for 1972–73 of the Tamil Nadu Electricity Board are not yet finalised and that is the only Electricity Board in the country to have taken such an unduly long time for this purpose. The Union Energy Minister, Mr. Pant, who is watching the day to day performance of Electricity Boards, is not particularly pleased with this state of affairs ". There are very many things, which are not being done properly, apart from the finalisation of accounts.

I shall give another example. Let us take the budget provision, so far as capital works are concerned. The budget provision is Rs. 39 crores. Last year it was Rs. 48 crores. Now, it is reduced to Rs. 39 crores. We have got to pay Rs. 14 crores by way of interest for the loans taken from institutions for capital works. So, Rs. 53 crores is the total capital outlay. But what about the resources? If you consider that you will find that there is a gap of nearly Rs. 13 crores between resources and capital works envisaged. In other words, the outlay is only Rs. 39 crores and the difference is Rs. 13 crores, a gap of nearly 331/3 per cent, roughly one-third. There is no parallel to this in any other part of our country. Between installed capacity and production, there again is a wide gap.

The morale of officials is at a low ebb. No proper planned system is evolved in the matter of imposing power cuts. I had mentioned this on earlier occasions. You go on changing the officials before they come to grips with the problem. The previous Chairman had now been transferred before he could properly understand the problems facing the Board. I am not

making any disparaging remark against any particular person. I am placing the facts so that the affairs of the Board may be put on proper lines.

Suddenly one fine morning power cut is being imposed without any rationale as a result of Ad hoc and haphazard decisions. Even the Central Government was against such frequent power-cuts. There is also rampant favouritism to companies of Government's choice. I had mentioned this even in my last year's speech. I find no improvement now. There is frequent breakdown of electricity, regular fluctuation in voltage, etc. I am sure every member will agree with me on that at least.

[முற்பகல் 30-11]

This fluctuation of the voltage is a perennial one which spoils electrical equipment. According to the Electricity Supply Act, supply or sub-standard power is a cognisable offence. It specifies that voltage should not fluctuate beyond a certain percentage.

Another very interesting point is with regard to the quantum of electricity generated about which I have mentioned a number of times. My charge is that the actual installed capacity is one thing and the actual power that is generated is something totally irrelevant to the installed capacity. We have an installed capacity of 2,300 MW. What is the generation of power? It is about 7,000 million units. In 1964–65 what was the installed capacity? The installed capacity was 950 MW and the power generated was 3,500 units. Now for an installed capacity of 2,300 MW, we are getting power generation of only 7,000 million units. Instead of 8½ thousand million units. I am only pointing out the facts which have been admitted inadvertently by Hon. Thiru Sadiq Pasha in his speech.

I am also surprised to find that with regard to the production of thermal power also, there is a shortfall. In the case of hydel power, I can understand the shortfall in production because if there is not enough water, there will not be adequate power generated. But in the case of thermal power, the plant is fed with coal. Therefore, I do not understand how there could be such a huge gap between the installed capacity and the actual power generated. In the case of thermal power, in 1964–65, for



an installed capacity of 101 MW, they have produced 433 million units, i.e., at the time when Thiru R. Venkataraman was in charge of Electricity. Even then I told him in the Legislative Council that I was not satisfied with that amount of generation. Then it was about 60 per cent of the installed capacity. Now to-day when the Hon. Thiru Sadiq Pasha is in charge of Electricity, what is the actual power generated? It is 1,249 million units. We should have produced 1,850 million units. This only shows that under the brilliant stewardship of the present Minister, the power generation has further deteriorated. This is a dismal picture which does not give any credit to any top persons in the Electricity Board. Thus, I have conclusively proved how sub-standard is the working of the Electricity Board.

I come to another point. There has been no planning with regard to the production of power. In this connection, I wish to point out that only Rs. 10 crores have been allotted for the Tuticorin Project for this year. At this rate it would take 15 years to complete the project costing about Rs. 150 crores. We will be able to complete the project only during the Seventh Five-Year Plan period and not even during the Sixth-Five Year Plan period. This only shows that there is no realistic appraisal of the planning front with regard to power generation.

Now, so far as Kalpakkam Atomic Power project is concerned, I wish to caution the Government that no State in India has done a good job in atomic power projects and I doubt whether our State will be able to deliver the goods. Even in Maharashtra the production of atomic power is not more than 300 to 400 MW, even though the plant attained criticality seven years ago.

Sir, we raise certain points every year in this House and when the Hon. Minister replies to them, we seek clarifications. The Chair would invariably say that we can seek clarifications after the Minister's reply. But after his reply, we are not allowed to seek clarifications pointing out time factor and then closure is applied to the discussion. This is a method by which the Government escapes from considering a point: I hope this will not be repeated this year.

With regard to the Erukancherry affair, I and Mrs. Anandanayaki raised certain points last year. The reply given on behalf

of the Board in its printed book is that the matter is closed. How did they close it? Who asked them to close it? What was the legal basis on which it was closed? We have given facts and figures to show that there is a lot of mismanagement so far as this affair is concerned. The top person who was responsible for this mismanagement has been made an adjudicator. He has been asked to look into the charges. The charges were first raised when Thiru V. R. Nedunchezhiyan was the Leader of the Opposition. Though nine years have elapsed nothing has come out of it. We can even raise a Privilege Motion against the Electricity Board for giving wrong answers. They have no business to close the matter. There has been an attempt in the later years to hush up the whole affair. We want to know why all the papers connected with it are not laid on the table of the House.

Another charge I made last year was with regard to a big company in Tirunelveli—Dharangadhara Chemicals. Why did the Electricity Board go for negotiations with them when they had a court order in their favour for collecting the entire amount of Rs. 54 lakhs as against the nogotiated value of Rs. 29 lakhs, involving a loss in revenue to the Board of Rs. 25 lakhs? The reply given is that the matter was referred to a Working Group. This is a hoax. Where does this group exist? Who are the members of this group and what are its terms of reference or powers? They have no business to refer it to a Working Group.

Have they referred the request of the agriculturists to reduce the power tariff, to this working group? Has this mysterious working group shown any concession to Mettur Chemicals or any other company? This clearly shows that there is favouritism in the matter by the Government.

Coming to Ennore, I have already pointed out that there is grievous lapse in maintenance and operation. I had pointed out that there is gap between installed capacity and generation and that it is nearly 70 per cent. In another works they are generating only 30 per cent of installed capacity. What is the cause? It is because they have a Chief Engineer who has absolutely no experience of operation and maintenance of a thermal plant, When I point this out, the reply of the Board is at a tangent. Even Mr. K. C. Pant has, I understand, written to this Government how a particular person without requisite thermal experi-



ence had been posted as Chief Engineer at Ennore. When I pointed this out last time, the Government appointed the Mahalingam Committee. What is the result?

A Tata Engineer was incorporated in the Committee. The Committee was to put things on the right. What did the Tata man say? He said there should be consultancy to the Tatas and this has been offered to them. Is this not favouritism? The net result? You find that only 30 per cent of the installed capacity is produced. Previously there was only one Chief Engineer (General). We pointed out previously (in 1969) that it could be increased to 2. If they had done this, I would have been happy. At that time they told 'No'. But now what do we find? There are 6 Chief Engineers. There has been a sudden spurt. If it had been gradual, one could understand. Why this extra Chief Engineers? This is done to rehabilitate a couple of their favourites, blue eyed boys of the Government.

I shall give more period of favouritism. Previously Chief Engineer (General) was there for the sole purpose of administrative control of staff. But, subsequently the subject of 'purchases' which was handled by a Chief Engineer specially created for that purpose was transferred to the Chief Engineer (General). This same person is now Technical Member also. He is a super Chief Engineer. This super Chief Engineer has no knowledge of operation, maintenance or any such thing. He has served as Assistant Engineer for five years only, and later left the Board and joined Sakthi Pipes Ltd. We all know what a mess he has made of Sakthi Pipes. I have nothing personal against this gentleman. I do not even know him personally. But it is my duty to point out the maladies that come to my notice, so that things could be put on proper lines and the Board improved.

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, ஒரு கிளாரிபிகேஷன். சீஃப் என்ஜினியர் நியமனத்தைப் பற்றிச் சொன்னார்கள். அவருடைய தலைவராக இருந்த ராஜாஜி காலத்தில் தான் சீஃப் என்ஜினியர் பதவி என்பது ஸ்டிரிக்ட்லி ஆன் மெரிட் பேசிஸ் என்று வைத்து சீனியாரிட்டி பார்க்க வேண்டியதில்லை என்று சொல்லி, மிகக் கீழேயிருந்த திரு. அப்பாதுரை அவர்களைக்கூட சீஃப் என்ஜினியராகக் கொண்டு வந்தார்கள். இன்றைக்கு நமது அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் சீஃப் என்ஜினியர்

பதவிகளைப் பொறுத்த வரையில் அங்கேயிருக்கின்ற மெரிட்டைப் பார்த்து, சீனியாரிட்டியைப் பார்க்காமல் தான் எல்லா இலாக்காவிலும் நியமனம் செய்து கொண்டிருக்கிறோம். சக்தி வைப்புக்குப் போய்விட்டார் என்று தவருகப் பொருள்படும்படி தகவல் கொடுக்கிறார். . . . .

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** நீங்கள் பேசும்போது மறுத்துச் சொல்லுங்கள்.

**திரு. நா. வீராசாமி :** சக்தி பைப்புக்குப் போனார் என்றால் டெபுடேஷனில் போனார்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** அப்படியானால், அது குறிப்பிடப்பட வேண்டியதில்லையா ?

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வா. மை. அப்துல் ஜப்பார்) :** திரு. வீராசாமி அவர்களே, நீங்கள் உட்காருங்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசட்டும்.

(Mr. Veerasamy please take your seat)

**திரு. எம். சுரேந்திரன் :** தலைவரவர்களே, ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர். இப்போது மின்சார பட்ஜெட் சம்பந்தமாக விவாதம் நடக்கிறது. அதில் உறுப்பினர் ஒருவர் குற்றச்சாட்டுக்களை சொல்லும்போது, அமைச்சர் அவர்கள் உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறார். அமைச்சர் இருக்கின்றபோது, திரு. வீராசாமி அவர்கள் அமைச்சரின் வேலையை ஏன் பார்க்கிறார் ?

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** தவறான தகவலைச் சொல்லுகிறேன் என்று சொல்லிவிட்டு, திரு. வீராசாமி நான் சொல்வதை ஏற்றுக் கொண்டிருக்கிறார். சக்தி பைப்புக்கு அந்த என்ஜினியர் போனார் என்று நான் சொல்வதில் என்ன தவறு ? போன காரணம் எனக்குத் தெரியும். நீங்கள் அவரைப் பாதுகாக்கத் தேவையில்லை.

This Engineer has absolutely no experience in operation and maintenance. Such a man is super chief.

The obvious lack of experience at the highest level naturally leads to disgruntlement, frustration and inefficiency in the functioning of the lower echelons in the board. In order to give



opportunity of promotion for this blue-eyed boy of Government, the posts of Chief Engineers has been increased.

As I said earlier, he is also Technical Member. ' The subject of purchases, has been transferred to this super Chief. It was handled separately by another Chief Engineer. He is in charge of important subjects like ordering materials, transfer of staff etc. Previously these subjects were being handled by three Chief Engineers. How can one turn out this work. if the vardstick for a Chief Engineer held out by the Board is to be truly followed? The result as I had said previously, is inefficiency throughout. I have nothing personal against the person. I am saying this so that remedial action could be taken and things could be set right and performance of the Board improved.

THE HON. THIRU S. J. SADIQ PASHA : That shows that you have informants in the Board.

DR. H. V. HANDE : Yes, We have informants everywhere. Even when both I and D.M.K. were in the opposition, I used to get information and supply them. It was appreciated by the D.M.K. at that time.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வா. மை. அப்துல் ஜப்பார்) :** இன்னும் இரண்டு நிமிடங்கள் தான் இருக்கின்றன. சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** நான் ஸ்பீக்கரிடம் கேட்டிருக்கிறேன். நான் சொல்வதை தயவு செய்து கேளுங்கள். நீங்கள் உட்கார் என்று சொன்னால் நான் உட்கார்ந்து விடுகிறேன். நான் இந்த பட்ஜெட் விவாதத்தை இனிஷியேட் செய்கிறேன் என்று ஸ்பீக்கரிடம் கேட்டு 35 அல்லது 45 நிமிடங்கள் எடுத்துக் கொள்கிறேன் என்று சொல்லி, அவரும் அனுமதித்திருக்கிறார். நீங்கள் வேண்டுமானால் ஸ்பீக்கரிடம் யாரையாவது அனுப்பிக் கேட்டுப் பாருங்கள். அவர் ஒத்துக் கொண்டிருக்கிறார். நான் பாயின்ட்டுக்கு போய்க் கொண்டிருக்கிறேன். இன்னும் பத்து நிமிடங்களில் முடித்து விடுகிறேன். விவாதம் மூன்று நாள் இருக்கிறது. ஆகவே, இன்னும் பத்து நிமிடம் எடுத்து முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வா. மை. அப்துல் ஜப்பார்) :** சீக்கிரம் முடியுங்கள்.

DR. H. V. HANDE : When in the Council with 64 members, we have discussion on the Electricity Board budget, for 3 days, with 234 members if we have debate on Electricity Board, here, in the Assembly only for 2½ days, it is not possible. We cannot do justice to the task. I shall try to finish quickly.

There has been a sudden spurt in other appointment too. I refer to the appointment of a Special Officer at the secretariat attached to the Minister. What was the need for such appointment? Do Government, intend posting such Special Officers for other Boards like Water Board, Slum Board, etc., and attach them to the Secretariat and the concerned Ministers? I understand that this Special Officer is being used to collect all confidential information relating to notings of tenders and to communicate the 'instructions' to concerned officers for compliance. He becomes a sort of Super Chairman of the Board, over and above the Chairman.

THE HON. THIRU S. J. SADIQ PASHA : No. He is like any other P.A. It is not like what Dr. Hande says.

*மிகத் தவறாகச் சொல்லுகிறார்கள். அவர் கான்பிடென்ஷியல் ரிப்போர்ட் கேதர் செய்வது கிடையாது. டெக்னிகல் விஷயங்களில் உதவியாக இருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர்கள் ரெப்ரசன்டேஷன் கொடுக்கிறபோது உடனடியாக விவரங்களைச் சேகரிக்க உதவியாக இருக்கிறார். பர்சனல் அசிஸ்டண்டு மாதிரி வைத்திருக்கிறோம். எனக்கு என்ஜினியரிங் தெரியாது. அந்த டெக்னிகல் விஷயத்தில் உதவியாக இருக்க வைத்திருக்கிறோம். தயவு செய்து, தவறாகச் சொல்லக் கூடாது.*

DR. H. V. HANDE : Mr. Anbazhagan, heads the Medical Portfolio. He is not a medical man. Is he having such a Special Officer for dealing with technical subject? Here it is peculiar. This Special Officer is also appointed as a Vigilance Officer of the Board. He is Director of Vigilance here. I do not know when the vigilance work and important policies and programmes regarding the Board has been transferred to the ante-room of the Minister. This S.O. is working in the ante-room of the Minister. It is not as if he is like a P.A. He is also acting as Director of Vigilance for the Board.

I understand that this was also resented by the previous Chairman.



Then coming to staff union matters, in the Basin Bridge Power House, step-motherly treatment is given to the non-D.M.K. Union. They have made a number of representations. They have given special treatment to the pro-D.M.K. Union for the Parambikulam–Aliyar Project. There is the Turbine and Boiler Unit and the workers belonging to the non-D.M.K. Union are getitng overtime wages of Rs. 10,000 per month in this section, whereas the workers belonging to the D.M.K. Union in the Paramarippu *(பராமரிப்பு)* Department are getting Rs. 1 lakh per month. In other words the Board is forcing everyone of the workers to join the D.M.K. Union. I can quote from 'Swadeshamithran' a number of instances.

Then a co-operative credit society has been closed for all non-D.M.K. Workers. There is no problem for a D.M.K. worker because he is paid an extra wage of Rs. 200 per month. Likewise, D.M.K. Unions in many sections have been pampered and consequently there have been bickerings among the workers. This has created a labour problem and damaged discipline among workers. This has also created inter-Union rivalry and political rivalry among them.

Then I come to a very important subject, namely, failure of the Government in implementing wage revision. Even the Central Minister, Thiru Raghunatha Reddy had directed the Board on 2nd June 1975 to conduct negotiations in this regard. Nearly five months have elapsed and nothing has happened. What you should do, you have not done, what you should not have done, you have done.........

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வா. மை. அப்துல் ஜப்பார்) :** *சீக்கிரம் முடித்து விடுங்கள், இன்னும் ஏழு பேர்கள் பேச வேண்டுமென்று டைம் குறிப்பிட்டுக் கொடுத்து விட்டுப் போயிருக்கிறார் ஸ்பீக்கர்.*

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** *நீங்கள் சேரில் உட்காருவீர்கள் என்று தெரியாது. ஸ்பீக்கர் எனக்கு டைம் அலாட் பண்ணி இருக்கிறார். வேண்டுமானால் ஆளை அனுப்பிக் கேட்டுப் பாருங்கள்.*

**திரு. நா. வீராசாமி :** *பாயிண்ட் ஆப் ஆர்டர்.*

(டாக்டர் எச். வி. ஹாண்டே எழுந்தார்)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வா. மை. அப்துல் ஜப்பார்) :** அவர் பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்பி இருக்கிறார். அவர் சொல்லட்டும்.

**திரு. நா. வீராசாமி :** உறுப்பினர் அவர்கள் சேரை இன்சல்ட் பண்ணுவது போல 'நீங்கள் உட்காருவீர்கள் என்று தெரியாது' என்று கூறுகிறார். இது சேரை இன்சல்ட் செய்வது போல. . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வா. மை. அப்துல் ஜப்பார்) :** அவர் ஒன்றும் சேரை இன்சல்ட் செய்யவில்லை. Let Dr. Hande conclude his speech.

DR. H. V. HANDE : I will conclude my speech in a few minutes.

I shall explain how the complete morale of the Electricity Board has been destroyed.

A Special Adviser has been appointed recently. What is the purpose of appointing him? What is he doing? Even in 1967 when revered Anna was the Chief Minister, a specific charge was made that the then Chairman of the Electricity Board had violated Section 9 of the Electricity Supply Act and that his relations had some shares in the company with which the Board was negotiating.

Now after seven or eight years, the same person has been appointed as a Special Adviser and he is committing grave offence. He has got some interest with a private company with whom the Board is having negotiations. He is the Director of that Company. This particular person has asked the Chief Engineer and the Board to take away the penal provisions with regard to the imposition of penalty for non-payment of arrears by private company. This particular company, for which he is the Director has not paid the arrears and this Special Adviser has recommended to the Chief Engineer not to impose the penalty clause and that the matter should not go to the Board. This only shows how he is functioning.



What is the fruitful advice that he has given the Board? Nothing. What has actually happened is that a Committee has been formed to advise the Special Adviser. This Committee consists of men from the original 1968 retirement list who had formed this special adviser's inner circle then. These members now draw daily allowances at rates very much beyond the rate in the original salary drawn by them and these daily allowances are in addition to the pension drawn by them. What makes matters worse is that these members in addition draw fat daily allowances on camp as well as free food, free transport, lodging, etc., even while in camp at Delhi.

One small illustration would make this clearer. The food bill for the Guest House at Ennore where these committee members usually lodge, has been of the order of over Rs. 4,000 per month for the last several months. This only shows that the Special Adviser is the Super Power Board Chief and the Board is completely demoralised. He has brought his own persons who are considered as not qualified. The Chairman of the Board is helpless in the matter.

Sir, there are a number of other charges which I want to level against the Board and if necessary I can give the relevant papers to the Hon. Minister as I had given them to Anna in 1967. I again emphasise that the Board should not be spoiled by suddenly bringing a person against whom charges had already been made. With these words, I conclude my speech.

**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்வாரிய நிதிநிலை அறிக்கை மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். மற்ற மாநிலங்களை இம்மாநிலத்தோடு ஒப்பிடுகிற நேரத்தில், மனச்சாட்சியோடு பேச வேண்டுமேயானால், தமிழ்நாட்டினுடைய மின்வாரியம் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் பெரிய மாநிலங்களில் ஒன்றான தமிழ்நாட்டில் அற்புதமான சாதனைகளை நிகழ்த்தி வருவதை நடுநிலையோடு எண்ணிப் பார்ப்பவர்கள் நிச்சயமாகப் பாராட்டத் தான் செய்வார்கள்.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்களும் இங்கே வெகு வேகமாகச் சொன்னார்கள்—ஓரிரு சிறு குறைபாடுகள் இருந்தாலும்கூட தமிழ்நாடு மின்சார வாரியம் தமிழ்நாட்டிற்கு ஏற்படவிருந்த மிகப் பெரிய ஆபத்தை

கடந்த நாட்களில் தவிர்த்து ஒரு காட்சியை நாம் நினைத்து அந்த வாரியத்தைப் பாராட்டத்தான் வேண்டும். நூற்றாண்டுகள் காணாத ஒரு வறட்சி ஏற்பட்ட பின்னால், மேகங்கள் எல்லாம் மலடுகளாகி, மழை பொழியாமல் ஏரிகளும் குளங்களும் வரண்டு விட்ட நேரத்தில் பூமியின் கீழிருந்து தண்ணீரை மேலே கொண்டு வந்து, வறட்சியை சமாளித்து, வறட்சி காரணமாக ஆங்காங்கே இறப்புகள் ஏற்பட்டன என்று சொல்லக்கூடிய நிலை இல்லாமல் பார்த்துக்கொண்டது இந்த அரசு என்பதை எல்லோரும் நன்றாக அறிவார்கள் என்பது மட்டுமல்ல, இதை வெளியிலிருந்து வந்தவர்கள்கூடப் பாராட்டி இருக்கிறார்கள் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(நண்பகல் 12-00)

இன்றைக்கு உணவுப் பிரச்சினையைப் பொறுத்தமட்டில் மின்சார வாரியம் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் ஒரு மகத்தான சாதனையைப் புரிந்திருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டு, இந்தியாவில் எல்லா மாநிலங்களைக் காட்டிலும், வேளாண்மைக்கு விவசாயத் துறைக்கு அதிகமான அளவு மின்சாரத்தைப் பயன்படுத்துவது தமிழ்நாடு என்பதை நாம் அனைவரும் உணர வேண்டும்.

இன்றைக்கு இந்தியாவில் 300 பம்பு செட்டுகள் ஓடுகிறதென்றால், இங்கு 100 ஓடுவது மட்டுமல்ல; வேளாண்மைக்குத் தமிழகத்தில் எல்லா மாவட்டங்களுக்கும் மின்சாரத்தைப் பரவலாகப் பயன்படுத்தி ஒரு பசுமைப் புரட்சியை உருவாக்க முடிந்தது. அதற்குக் காரணமாக இருந்த மின்சார வாரியத்தை நெஞ்சார உளமார பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

எனக்கு முன்னால் பேசியவர்கள் சொன்னார்கள். 'இல்-பிளானிங்' சரியாகத் திட்டம் இடப்படவில்லையென்று வெகுவாக அ. தி. மு. க. உறுப்பினர்கள் சொன்னார்கள். இந்தக் குற்றச்சாட்டை தமிழ்நாடு அரசின் மேல் மின்சார வாரியத்தின் மேல் சொல்லுகிற குற்றச்சாட்டை எந்தப் பக்கத்திலே சொல்ல வேண்டும் என்பதை முதலில் எடுத்துச் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன்.

மத்திய சர்க்கார் இந்தியா முழுமைக்கும் ஒழுங்கான திட்டம் வகுத்திருக்குமானால் நாட்டில் மின்சக்தி பற்றாக்குறை, நிலக்கரி



பற்றாக்குறை, வேறு இதுமாதிரி பற்றாக்குறை இல்லாமல் இருக்க வேண்டுமென்று ஒரு நீண்ட தொலைதூர திட்டத்தை வகுத்திருக்குமானால் ஒரு முன்னோடி திட்டத்தை உருவாக்கியிருந்தால் இவ்வளவு பெரிய பேராபத்து அடிக்கடி மின்சார வெட்டு வருகிற சூழ்நிலைமை வருமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அவர் கூட எண்ணூர் நிலையத்தைப் பற்றிச் சொன்னார். அமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் ஒரு மகிழ்ச்சியான செய்தியினைச் சொல்லியிருக்கிறார்கள். கொஞ்ச நாளைக்குள் ஐந்தாவது யுனிட் பிரிவு உற்பத்தியைத் தொடங்கவிருக்கிறது என்ற செய்தியைச் சொன்னார்கள். அப்படித் தமிழக அரசு தன்னுடைய கையிலிருக்கிற நிதிநிலைமையைப் பொறுத்தவரையில் அவர்கள் வேகமாக முடுக்கிவிட்டு இன்றைக்கு ஐந்தாவது பிரிவு வேலை செய்து உற்பத்தி தொடங்குகிற சூழ்நிலையைப் பார்க்கிறோம். அதே நேரத்தில் மத்திய சர்க்கார் பல ஆண்டுகளுக்கு முன்னால் அறிவித்துவிட்டு தூங்கிக் கொண்டிருக்கிற கல்பாக்கம் அணு மின் நிலையத் திட்டம் ஏன் கொஞ்சம் கூட வளர்ச்சி பெறவில்லை என்பது பற்றி எனக்கு முன்னால் பேசியவர்கள் குறிப்பிட்டிருக்க வேண்டும். மராட்டிய மாநிலத்திலும் வேறு மாநிலங்களிலும் அணு மின் நிலையத் திட்டம் வெற்றி பெறவில்லை ஒழுங்காக இல்லை என்று சொல்லலாம். அதற்கு ஒரு படி மேல் நான் சொல்லுகிறேன்.

பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் தேர்தலில் நின்ற நேரத்தில் உத்தரப் பிரதேசத்தில் ஒரு புதிய அணு மின் நிலையத்தை உருவாக்க வேண்டும் என்று அடிக்கல் நாட்டுவிழா செய்தார்கள். உத்தரப் பிரதேசத்தில் தேர்தலில் நின்ற நேரத்தில் மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக, ஒரு அணு மின் நிலையம் உருவாக்கப் போகிறோம் என்று அடிக்கல் நாட்டு விழா அங்கே நடத்துகிறார்கள். அதற்கு முன்பே, இலை போடப்பட்டு பரிமாறப்படும் உணவுக்கு காத்துக் கொண்டிருப்பது போல், இங்கே கல்பாக்கம் அணு மின் நிலையத் திட்டம் காத்துக் கொண்டிருக்கிறது. அங்கே இன்னும் வேலை தொடங்கவில்லை என்பது மட்டுமல்ல. எப்போது வரும் என்று கூடச் சொல்ல முடியாத சூழ்நிலை இன்னும் இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அங்கத்தினர்கள் அடிக்கடி இப்படி ஒரு மின்சார வெட்டு வருகிறதே என்று கொஞ்சம் கிண்டலாகப் பேசுகிற சூழ்நிலையைப் பார்க்கிறோம். ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். உரிய அளவுக்கு மத்திய சர்க்கார் கொடுக்கவேண்டிய அனுமதிகளை, நிதி ஆதாரங்களை வழங்கியிருக்குமானால் எப்போதோ இவற்றை யெல்லாம் கூட நிறைவேறச் செய்திருக்க முடியும். உதாரணத் திற்கு ஒன்று சொல்லுவேன்.

தூத்துக்குடி அனல் மின் திட்டத்திற்கு எப்போதோ அனுமதி தந்திருக்க வேண்டும். வேண்டுமென்றே காலத்தைக் கடத்திக் கடத்தி பின்னால் அனுமதி தந்த காரணத்தால் இப்போது வேலை தொடங்கி 1978–79 இல் மின் உற்பத்தியைத் தொடங்கும் சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அதுகூட ஏன் விரைவுபடுத்தக் கூடாது என்று உறுப்பினர்கள் கேட்கலாம். ஆனால் உண்மை நிலைமை என்ன? மத்திய சர்க்கார் இந்தத் திட்டத்திற்கு அனுமதி வழங்கிற்றே, கொடுக்க வேண்டிய தொகையைக் கொடுத்ததா? இன்றைக்கு 40 சதவிகிதம் தொகை கூடக் கொடுக்கவில்லை என்ற சூழ்நிலை இருக்கிறபொழுது தூத்துக்குடி அனல் மின் நிலையத் திட்டம் எப்படி நிறைவு பெற முடியும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். முதலில் அனுமதி மறுக்கிறார்கள். காலம் தள்ளிப் போடுகிறார்கள். அனுமதி கொடுத்த பிறகு ஒதுக்க வேண்டிய தொகையை வேண்டுமென்றே கொடுக்காமல் தள்ளிப் போடுகிற காரணத்தால்தான் மின் உற்பத்தி நிலையங்கள் மின் உற்பத்தியை அதிகமாகப் பெருக்க முடியாத சூழ்நிலை இருப்பது மட்டுமல்ல, இந்தியாவில் நம் மாநிலம் தான் மிக அதிகமாகத் தேவைப்படுகிற காரணத்தால் வெளி மாநிலங்களிலிருந்து கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இன்றைக்கு 20 சதவிகிதம் மின்சாரம் கேரளாவிலிருந்தும் மைசூர் மாநிலத்தி லிருந்தும் எதிர்பார்க்கப்படுகிறது. ஆந்திர மாநிலத்திலும் எதிர்பார்க்கிறோம்.

ஆனால் அந்த மாநிலங்களைக் காட்டிலும் எல்லா கிராமங்களி லும் மின்சாரம் வழங்கி யாராவது இரவு நேரத்தில் விமானத்தில் பறந்து போனால் தமிழ்நாட்டில் இருக்கிற கிராமங்களில் எல்லாம் மல்லிகை பூத்தாற் போல் மின் விளக்குகள் நிரம்பிய பகுதியாக வும், பக்கத்தில் இருக்கிற ஆந்திரா மைசூர் அங்கெல்லாம் இருள் அடைந்திருக்கிற காட்சியைப் பார்க்க முடிகிறது.





இப்படி உற்சாகத்தோடு பணியாற்றுகிற தமிழக அரசுக்கு மத்திய சர்க்கார் ஓரவஞ்சனை செய்வது மட்டுமல்ல மிகுந்த பாரபட்சத்தோடு நடந்து கொள்ளுகிறது என்ற குற்றச்சாட்டை சுமத்த ஆசைப்படுகிறேன்.

அதன் காரணத்தால் தான் நெய்வேலி இரண்டாவது சுரங்கம் வெட்டப்படுவது மட்டுமல்ல, நெய்வேலி விரிவாக்கப்படும் திட்டம் காலதாமதம் அடைகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இதுகுறித்து இம்மாமன்றத்தில் தீர்மானம் போட்டு அனுப்பியிருப்பதை அங்கத்தினர்கள் அறிவார்கள்.

ஒவ்வொரு பிரிவிலும் உள்ள குறைபாடுகளை மைகிராஸ்கோப் வைத்து பெரிதுபடுத்தும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பெரிய நீண்ட தூரத் தொலை நோக்கத்தோடு தமிழக அரசின். . .

**திருமதி த. ந. அனந்தநாயகி:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். மைகிராஸ்கோப் வைத்து பெரிதுபடுத்த முடியுமா? மாக்னிபையிங் கிளாஸ் தான் வேண்டும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வா. மை. அப்துல் ஜப்பார்):** இதில் ஒன்றும் பாயின்ட் ஆப் ஆர்டர் எழவில்லை.

**திரு. கா. வேழவேந்தன்:** இப்படி இவைகளில் கவனம் செலுத்துவதைக் காட்டிலும் இன்றைக்கு யார் ஆளும் கட்சி என்று கவலைப்படாமல், எத்தனை திட்டங்களில் ஓரவஞ்சனை செய்யப்பட்டுள்ளது என்பதை எண்ணிப் பார்த்து அதற்காக அவரவர்கள் கட்சி மாநாடுகளில் பேரவைக் கூட்டங்களில் தீர்மானம் போட்டு மத்திய சர்க்காரை வலியுறுத்த வேண்டும் என்பதை இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கே சில யோசனைகளையும் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இங்கே சில யோசனைகளையும் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சொன்ன பதில்களை யெல்லாம் மிகச் சிறப்பாக நம்முடைய உறுப்பினர்கள் தொகைப்படுத்தி அச்சிட்டுக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக மின்சார வாரியத்திற்கு நன்றி சொல்லுகிற நேரத்தில் இப்படிப் பேசப்படுகிற கருத்துக்களை . அவ்வப்போது நிறைவேற்றுகிற நேரத்தில் முடிவுகளை உறுப்பினர்களுக்கு எழுதி

அனுப்ப வேண்டுமென்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். சொல்லப்படுகிற கருத்துக்கள் திட்டங்கள் எந்த நிலையில் உள்ளன. எது எது செய்ய முடியவில்லை என்பதற்கான விளக்கங்களை தயார் செய்து அனுப்பினால் உரிய அதிகாரிகளை அணுகி நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்று இந்த நேரத்தில் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன்.

நம்முடைய முன்னாள் மின்சார வாரியத்தின் தலைவர் திரு. அப்பாதுரை அவர்களின் ஆலோசனையின் பெயரில் சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள், இன்னும் எப்படி உற்பத்தியை அதிகரிக்கலாம் என்று. அதற்கான உடனடி நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இவ்வளவு சிறப்பாகப் பணியாற்றும் மின்சார வாரியத்தில் இருக்கிற ஒன்றிரண்டு சிறு குறைபாடுகளை நீக்கினால் பொன்மலர் நாற்றம் பெற்றது போல் இன்னும் சிறப்பான முறையில் இருக்கும்.

ஒன்று, எல்லா கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்கியிருக்கிறோம் என்று சொல்லுகிற நேரத்தில் ஊராட்சிகளில் மின் விளக்குகள் எரியவில்லை என்ற குறைபாடு இருக்கிறது. ஒரு கிராமத்தில் 10 விளக்குகள் என்றால் 3 அல்லது 5 விளக்குகள் எரியவில்லை என்று சொல்லப்படுகிறது. அமைச்சர் அவர்கள் இதில் அக்கறை காட்டி தீவிரமாக நடவடிக்கை எடுத்து எப்போதும் எல்லா விளக்குகளும் எரிய வேண்டுமென்ற முறையில் தரமான பல்புகளை வாங்கிக் கொடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதே போன்று ஊராட்சி மன்றங்களுக்குத் தனித்தனியாக மீட்டர்கள் வழங்குவதில் காலதாமதம் ஏற்படுகிறது. அதற்கு உடனடியாக மாண்புமிகு தொழில் அமைச்சர் உரிய நடவடிக்கை எடுத்து உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும் கலந்து கொண்டு இதற்கு விரைவாக ஒரு முறை வகுத்துக் கொடுத்து எல்லா ஊராட்சிகளுக்கும் தனித்தனி மீட்டர் வழங்கப்பட வேண்டும். சாதாரணமாக ஹோட்டலில் நாம் சாப்பிடுவதற்கு பில் கொடுக்கிறோமேயல்லாது வேறு யாரோ சாப்பிட்டதற்கு நாம் பில் கொடுப்பதில்லை. அந்த அந்த ஊராட்சி எந்த அளவுக்கு



மின்சாரம் பயன்படுத்துகிறது என்பதைக் கணக்கிட தனித்தனி மீட்டர் அமைத்துக் கொடுக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதே மாதிரி மின்சார பம்பு செட்டுகள் மிகப் பெரிய வரலாறு உடையது. இதுவரை 7 லட்சத்துக்கு மேல் பம்பு செட்டுகளுக்கு இணைப்புகள் கொடுக்கப்பட்டிருந்தாலும் இன்னும் லட்சக்கணக்கான பம்பு செட்டு இணைப்புகளுக்கான விண்ணப்பங்கள் காத்துக் கொண்டிருக்கின்றன. விவசாயிகள் பூமிக்கடியில் உள்ள தண்ணீரை மேலே கொண்டு வந்து உற்பத்தியைப் பெருக்குவதற்கு காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கனவே ஐயாயிரம் பத்தாயிரம் செலவு செய்து போர் பம்பு போட்டு காத்துக் கொண்டிருக்கிறார்கள். சில, மாதக் கணக்கிலும், சில வருஷக் கணக்கிலும் அப்படிப்பட்ட விண்ணப்பங்கள் தாமதப்பட்டுக் கிடக்கின்றன. நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுவேன். இனி பவர் கட் நீக்கப்பட்டு எல்லா இடங்களுக்கும் கொடுக்கலாம் என்ற சூழ்நிலை வந்தும், சில பகுதிகளில் மோட்டார் கிடைக்கவில்லை, கண்டக்டர் கிடைக்கவில்லை, வேண்டிய அளவு போஸ்ட் கிடைக்கவில்லை, கொண்டு போகக்கூட லாரிகள் கிடைக்கவில்லை என்ற நிலைதான் இருக்கிறது. தயவு செய்து ஒவ்வொரு சிஸ்டத்தின் கூட்டங்களையும் கூட்டி, வட்டாரக் கூட்டங்களைக் கூட்டி மின்சார பம்பு இணைப்புக்காக எவ்வளவு விண்ணப்பங்கள் வந்தன, எந்த ஆண்டு முதல் காத்துக் கிடக்கின்றன என்பதை எல்லாம் பரிசீலனை செய்து உடனடியாக அவற்றுக்கு மின்சார இணைப்புக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதிலும் குறிப்பாக செங்கல்பட்டு மின்வட்டத்தில்—பெரியபாளையம் துணைக் கோட்டத்தில் ஏராளமான பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்படவில்லை. ஏராளமான விவசாயிகள் விண்ணப்பங்கள் போட்டுக் காத்துக் கிடக்கிறார்கள். உடனடியாக பெரியபாளையம் துணைக் கோட்டம், பொன்னேரி துணைக் கோட்டம் ஆகியவற்றில் பல ஆண்டுகளாகக் காத்துக் கிடக்கிற பம்பு செட்டுகளுக்கு எல்லாம் உடனடியாக மின் இணைப்புக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பொன்னேரி டிவிஷனை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்பதை நான் மூன்றும் முறையாக இந்த மன்றத்தில் பேசுகின்றேன். நீண்டநாள் கோரிக்கை இது. அதை இரண்டாகப் பிரித்து பொன்னேரி துணை வட்டம் கும்முடிப்பூண்டி துணை வட்டம் என்று இரண்டாக்கி கும்முடிப் பூண்டியில் தனியாக ஏ. ஈ. ஒருவரை நியமிக்க வேண்டும்.

அதேமாதிரி பெரியபாளையம் துணை வட்டத்தை செங்கல்பட்டு மாவட்டத்தோடு இணைத்திருப்பதை மறுபரிசீலனை செய்து, அதை சென்னையோடு இணைப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். எங்களுடைய பெரியபாளையம் பகுதியில் இருந்து காஞ்சீபுரம் எஸ். இ. ஆபீசுக்குப் போக வேண்டுமென்றால் 80 மைல்கள் இருக்கின்றன. சென்னை திட்டத்தோடு பொன்னேரியில் இணைக்கப்பட்டதுபோல, இந்தப் பெரியபாளையம் துணை வட்டத்தையும் சென்னையோடு இணைப்பது பற்றி மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொழிலாளர்களுக்கு சில சலுகைகளை அளித்திருக்கிறார்கள். தொழிலாளர்களது சார்பில் நானும் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். மெக்கானிகல் என்ஜினியர்ஸ் அசோஸியேஷனுக்கு நான் தலைவனாக இருக்கிற காரணத்தினால் 250 பேர்களுக்கும் மேற்பட்ட அந்தச் சங்க உறுப்பினர்களின் சார்பில் நாங்கள் ஒரு மெமாராண்டத்தைக் கொடுத்திருக்கிறோம். விரைவாக அதன்மீது அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எலெக்ட்ரிகல் என்ஜினியர்சுகளுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது, மெக்கானிகல் என்ஜினியர்சுகளுக்கு கொடுக்கப்பட வேண்டிய முக்கியத்துவம் கூட வழங்கப்படவில்லை என்ற எண்ணம் இருந்து கொண்டிருக்கிறது.

எந்த எந்த போஸ்டுகளில் மெக்கானிகல் என்ஜினியர்களைப் போட வேண்டுமோ அந்தந்த போஸ்டுகளில் மெக்கானிகல் என்ஜினியர்களைத்தான் போட வேண்டும். இந்த இடங்களிலும் கூட எலெக்ட்ரிகல் என்ஜினியர்களைப் போட்டுவிடுகிறார்கள்.



மெக்கானிகல் என்ஜினியர் 'ஆர்' என்று இருப்பதை எடுத்து விட்டு, மெக்கானிகல் என்ஜினியர்களைத்தான் போட வேண்டும் என்று செய்ய வேண்டும்.

திரு. ஹாண்டே அவர்கள் எதிர்த்தாலும் நான் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். எலெக்ட்ரிகல் சீப் என்ஜினியர் என்று போடப்பட்டிருப்பதை வரவேற்கிறேன். அதேபோல மெக்கானிகல் சீப் என்ஜினியர் பதவி ஒன்றை ஏற்படுத்த வேண்டும்.

பொதுவாகப் பார்க்கிறபோது மின்சார வாரியம் சிறப்பாகச் செயல்படுகிறது. இப்படிச் சிறப்பாகச் செயல்படுவதற்குக் காரணமான பெருமதிப்பிற்குரிய அமைச்சர் அவர்களையும், முதல் அமைச்சர் அவர்களையும், மின்சார வாரிய அதிகாரிகளையும் மனமார, உளமாரப் பாராட்டி என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, 75-76 ஆம் ஆண்டுக்கான மின்சார வாரியத்தின் அறிக்கை இந்த மன்றத்தில் வைக்கப்பட்டு விவாதிக்கிற நேரத்தில் நானும் ஒரு சில கருத்துக்களைக் கூறுவதற்கு தாங்கள் அனுமதி அளித்திருப்பதற்காக என்னுடைய நன்றியைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஏறத்தாழ 135 கோடி ரூபாய் அளவில் இந்த நிதிநிலை அறிக்கை இங்கே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. இதில் 35 கோடி டெபிசிட் வந்திருக்கிறது. இந்த அளவுக்கு இருக்கக்கூடிய அறிக்கையில் பார்க்கும்போது—மிகுந்த அளவுக்கு மாநிலத்தில் மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறதே, அதற்குக் காரணம் என்ன என்பதை நாம் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

1966-67 ஆம் ஆண்டுக் கணக்கைப் பார்க்கும்போது—வருமானம் இதைவிடக் குறைவாகத்தான் இருந்திருக்கிறது. 1966-67 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை ரூ. 37.48 கோடிக்குத்தான். என்றாலும் அந்தக் காலத்தில்தான் மாநிலத்தின் பல்வேறு திட்டங்கள் எடுத்து கொள்ளப்பட்டன. மாநிலத்தின் மின்சாரத்தேவை ஓரளவு சிறந்த முறையில் பூர்த்தி செய்யப்பட்டது.

ஆனால், கடந்த மூன்றாண்டுகளில் தொடர்ந்து சராசரி 75% மின்சார பற்றாக்குறை இருந்து வருகிறது. இதன் காரணம் என்ன என்பதை அரசு சற்று சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறது.

1966-67 க்கு முன் அரசு பல்வேறு திட்டங்களை எடுத்துச் செயல்படுத்திய காரணத்தினால் ஏறத்தாழ 1170 மெகாவாட் மின்சார உற்பத்தி செய்கிற நிலையை நம் மாநிலம் எய்தியது. ஆனால் அதற்குப் பிறகு பத்து ஆண்டுக்காலமாக இந்த மாநிலத்தில் ஏதாவது புதிய திட்டங்கள் போடப்பட்டிருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லையென்று ஆதாரத்தோடு கூற முடியும்.

அதுமட்டுமல்ல. 1966-67க்கு முன்னாலேயே இன்வெஸ்டிகேஷன் செய்யப்பட்டு, மத்திய சர்க்காருக்கு அனுப்பப்பட்டு, அவர்களது அனுமதியைப் பெற்றிருந்த திட்டங்களைக் கூட நிறைவேற்ற தவறிவிட்ட காரணத்தினால்தான் நமது மாநிலத்தில் இந்த அளவுக்கு மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது என்பதை ஒத்துக் கொண்டாக வேண்டும்.

ஹொகனேகல் திட்டம் 1964 ஆம் ஆண்டே இன்வெஸ்டிகேஷன் செய்யப்பட்டது. 800 மெகாவாட் மின்சாரம் கிடைக்கக்கூடிய திட்டம். 1975 ஆகியும் கூட இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை. அறிக்கையைப் பார்க்கும்போது 74 இல்தான் நமது மாநில அமைச்சர் கருநாடக மாநில அமைச்சருடன் இது பற்றி பேச்சு வார்த்தை நடத்தியிருப்பதாகத் தெரிகிறது. மாநிலத்திற்கு மிகவும் வரப்பிரசாதமான இந்தப் பெரிய திட்டத்தைக்கூட செயல்படுத்த இந்த அரசு தயங்குகிறது.

தூத்துக்குடி அனல் மின் திட்டம் 600 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்டது—1967க்கு முன்னாலேயே இன்வெஸ்டிகேஷன் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. இன்னும் பூர்த்தி செய்யப்பட வில்லை.

பாண்டியாறு-புன்னம்புழா திட்டம்—நூறு மெகாவாட் உற்பத்தி திறன் கொண்டது — அதுவும் இன்றையதினம் கைவிடப் பட்டிருக்கிறது.

காடம்பாறைத் திட்டம் — 35 மெகாவாட் திறன் கொண்டது — அறிக்கையைப் பார்த்தால் கடந்த ஆண்டு 4.4 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு அந்தத் திட்டமும் கைவிடப்பட்டிருக்கிறது. இந்த மாதிரியாக முக்கியமான திட்டங்கள் எல்லாம் கைவிடப்பட்ட காரணத்தினால்தான் இன்றைய தினம் நமது மாநிலத்தில் 75 சத விகிதம் மின்சார வெட்டு என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகி விட்டதோ என்று



சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். உணவு உற்பத்தி சென்ற 3 ஆண்டுகளாக எந்த அளவு பாதிக்கப்பட்டது? அடிக் கடி மின்சாரத் தடை வந்தது அது மட்டுமல்ல, தொழில் துறையை எடுத்துக் கொண்டால் மின்சார வெட்டினால் எந்த அளவு உற்பத்தி பாதிக்கப்பட்டது? தொழிலாளர் வர்க்கத்தினர் எந்த அளவு பாதிக்கப்பட்டார்கள்? அடிக்கடி பாக்டரிகள் எல்லாம் மூடப்பட்டு லே ஆப் விடப்பட்டு தொழிலாளர்கள் வேலை வாய்ப்பிழந்தார்கள் என்றால், அதற்கு நான் நிச்சயமாக, இந்த மின்சார வாரியத்தைக் குறை கூறக் கடமைப்பட்டிருக் கிறேன்.

அடுத்ததாக, மின்சார வாரியத்தின் நிதிநிலை எந்த அளவு நாளுக்கு நாள் தேய்ந்து கொண்டு போகிறது என்பதற்கு இன்னொரு காரணத்தைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். தேவை யற்ற செலவுகள் எந்த அளவு பெருகியிருக்கின்றன என்று பார்த்தால் 1966-67 அறிக்கையைப் பார்த்தால், ஒரே ஒரு சி.இ. இருந்தார். ஆனால், இன்றைய தினம் 6 சி.இக்கள் அந்த வேலைக்காக அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். இதனால் எந்த அளவு மின்சார வாரியச் செலவு கூடிக் கொண்டு போகிறது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும்.

அடுத்ததாக, பப்ளிசிட்டி ஆஃபீசர் என்று ஒருவர் இடைக் காலத்தில் நியமிக்கப்பட்டிருக்கிறார். அந்த ஆபீசர் இந்த இலாகா விற்குத் தேவையா என்று சிந்திக்க வேண்டும். மக்களுக்குத் தேவையான அளவு மின்சார உற்பத்தியைப் பெருக்க வாரியத்தால் முடியவில்லை. மக்கள் தேவையைப் பூர்த்தி செய்யத் தயாராயில்லை. இந்தச் சமயத்தில் பப்ளிசிட்டி ஆஃபீசருக்கு என்ன தேவை என்று ஐயப்பாடு எனக்கு எழுகிறது. ஆகவே, இம்மாதிரியான தேவை யற்ற செலவுகளை அதிகமாகச் செய்கின்ற காரணத்தால் மின்சார வாரியம், சிறப்பாகச் செயல்படவில்லையென்ற குற்றச் சாட்டையும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக, எனக்கு இன்னொரு தகவல். இந்த மின்சார வாரியத்தில் ஒரு அக்கவுன்ட்ஸ் ஆபீசர் இருப்பதாகக் கேள்விப் பட்டேன். அவருக்காக, வாரியத்திற்குச் சொந்தமில்லாத ஒரு கட்டிடம் பல்லாயிரக்கணக்கான ரூபாய் செலவு செய்து அலங்காரங் கள் செய்யப்பட்டிருக்கின்றது. ஏறத்தாழ ரூ 75,000 மதிப்பீட்டில் டெக்கரேஷன், ஏர் கண்டிஷன் போன்ற பல்வேறு வசதிகள்

செய்து கொடுத்திருப்பதாகத் தகவல். அதிகாரிகளுக்கு வசதிகள் செய்து கொடுப்பதைக் குறை கூறவில்லை. ஆனால், மின்சார வாரியத்திற்குச் சொந்தமில்லாத கட்டிடத்திற்கு மின்சார வாரிய பணத்தைச் செலவு செய்வது நல்ல முறையா என்பதைச் சிந்திக்க வேண்டும். ஏழைத் தொழிலாளிகளுக்கு நியாயமான ஊதியத்தைக் கொடுக்க வழியில்லாமலிருக்கிறோம். இந்தச் சந்தர்ப்பத்தில் அதிக தேவையற்ற செலவுகள் செய்தால் இந்த வாரியம் உருப்படுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பப்ளிக் ரிலேஷன் ஆஃபீசர் போஸ்டை நிரப்ப 1 இலட்சம் தொழிலாளிகள் இருக்கிற மின்சார வாரியத்தில், அவர்களில் ஒருவருக்கு உத்தியோக உயர்வு அளிப்பதற்குப் பதிலாக, செக்ரடேரியட்டிலேயிருந்து ஒரு அதிகாரியைக் கொண்டு வர முற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அது நியாயம்தானா, முறைதானா, தருமம்தானா என்பதை இந்த அரசு சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயிகளுக்கு விதிக்கும் மின்சாரக் கட்டணத்தை எடுத்துக் கொண்டால், 1966-67-ல் ஒரு யூனிட் மின்சாரத்தை 8.5 பைசாவுக்குக் கொடுத்தோம் என்று சொன்னால், அது 1975-ல் 16 காசாக உயர்த்தப்பட்டது. கடந்த 9 ஆண்டுக்காலத்தில் 14 தடவை இந்த வாரியம் மின்சாரக் கட்டணத்தை உயர்த்தியிருக்கிறது. இதை உயர்த்துவதனால் ஏழை விவசாயிகள் எந்த அளவு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இப்பொழுது நிலவியிருக்கும் எமர்ஜன்ஸியைப் பயன்படுத்தி விவசாயிகளுக்கு ஆதரவு அளிப்பதற்குப் பதிலாக, மக்கள் யாரும் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க முடியாது என்பதையுணர்ந்து 12 காசாக இருந்த மின்சாரக் கட்டணத்தை 16 காசாக உயர்த்தினார்கள். 12 காசாக உயர்த்தியபொழுது எத்தனை உயிர்ச் சேதம் ஏற்பட்டிருக்கிறது? இப்பொழுது மத்திய அரசாங்கத்தின் எமர்ஜன்சியைப் பயன்படுத்தி 16 காசாக உயர்த்தியிருக்கிறீர்கள் என்று சொன்னால் இது விவசாயத்தை எந்த அளவு பாதிக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்



அடுத்து, இந்த அளவுக்கு நீங்கள் மின்சாரக் கட்டணத்தை உயர்த்தியிருக்கிறீர்கள் என்றால், அதற்கு மின்சாரத் துறை அமைச்சரவர்கள் அறிக்கையில் என்ன காரணம் கூறியிருக்கிறார்கள் நெய்வேலியில் ஒரு அக்ரிமென்ட் செய்து கொண்டார்கள். அந்த அக்ரிமெண்ட்படி, நெய்வேலியில் பணியாற்றுகிற தொழிலாளிகளுக்கு உயர்த்திக் கொடுக்கிற ஊதியத்தை இந்த மின்சார வாரியம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதற்கு என்ன அவசியம் என்று சிந்திக்க வேண்டும். நெய்வேலி தொழிலாளிகளைக் காப்பாற்ற அரசாங்கம் முன் வந்ததைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் இம்மாதிரி அக்ரிமென்ட் செய்திருப்பதால் நம் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். கூடுதலாகக் கொடுக்கிற தொகையை மத்திய அரசாங்கம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுப் பெறவேண்டும். நமது அரசாங்கம் ஏற்றதன் காரணமாக இங்கேயிருக்கிற ஏழை விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, அதை வன்மையாகக் கண்டிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்ததாக, கல் கரி டிரான்ஸ்போர்டேஷனுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக இந்த அறிக்கையில் சொல்லப்பட்டு இருக்கிறது. இதுவரையில் கரி டிரெயின் மார்க்கமாக வந்தது இப்பொழுது, நாம் ஏற்படுத்தியிருக்கிற ஷிப்பிங் கார்ப்பரேஷன் மூலமாக அதைச் செய்து கொண்டிருப்பதாக நம் அறிக்கையில் பார்க்கிறோம். அது வரவேற்கத்தக்கது. ரயில் மார்க்க டிரான்ஸ்போர்ட் செய்ததைவிட, கப்பல் மார்க்கமாக டிரான்ஸ்போர்டேஷன் சார்ஜ் குறைந்திருக்க வேண்டும். ஆனால், ரயிலைவிட கப்பல் மார்க்கமாக சார்ஜ் கூடுதல் என்று சொன்னால் அதன் இரகசியம் என்ன என்று நாம் தெரிந்துகொள்ள வழியில்லாமலிருக்கிறோம். ஆகவே, நிச்சயமாக நிர்வாகத்தில் பல கோளாறுகள் இருக்கின்றன என்பதைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்

அடுத்ததாக, இதுவரையிலும் மின்சார வாரியத்திற்கு ஏதாவது கடன் வேண்டுமென்றால் அதை அரசாங்கம்தான் கொடுத்துக் கொண்டிருந்தது. 1966-67 வரையிலும் அரசாங்கம் கொடுக்கிற கடன் என்று சொன்னால் ஒழுங்காக வட்டி கொடுக்க வேண்டுமே தவிர மற்றபடி இல்லையென்று விதிமுறைகளிருக்கின்றன. ஆனால், இன்றைய தினம் மின்சார வாரியத்தின் நிலை என்னவென்று சொன்னால் பல்வேறு இடங்களிலிருந்து கடன் வாங்கியிருக்

கிறார்கள். எந்த அளவு வட்டி கொடுக்க வேண்டியிருக்கிறது என்பதைச் சிந்திக்க வேண்டும். வட்டி அதிக அளவு கொடுக்கிற காரணத்தால் மின்சாரக் கட்டணம் உயர்வாக இருக்கிறது.

ரெயில்வே இலாகாவில் ஃபினான்ஸை கன்ட்ரோல் செய்வதற்காக பிரத்தியேகமாக அதிகாரிகள் இருக்கிறார்கள். ஆனால், மின்சார வாரியத்தில் எக்ஸிக்யூடிவ் அதிகாரிகள்தான் ஃபினான்ஷியல் கன்ட்ரோல் செய்கிற காரணத்தினால், ஏற்படுகிற ஊழல்களை கன்ட்ரோல் செய்ய வழிவகை ஏற்படாத நிலைமை இருக்கிறது. ஆகவே, மின்சார வாரியத்தில் ஃபினான்ஷியல் கன்ட்ரோல் இன்டிபென்டன்ட்டாகச் செயல்படக்கூடிய ஆஃபீஸரை நியமிக்க வேண்டும். அவ்வாறு நியமித்தால் அங்கேயிருக்கிற கோளாறுகளைச் சரிக்கட்ட வாய்ப்பிருக்கும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக, இன்றையதினம் மின்சார வாரியத்தில் ஏறத்தாழ ஒரு இலட்சம் தொழிலாளிகள் வேலை செய்கிறார்கள். எனது அருமை நண்பர் வீராசாமி அவர்கள் கடந்த ஏப்ரல் திங்கள் 5-ஆம் நாள் இந்த மன்றத்தில் 41-வது விதியின்கீழ் பிரேரணை ஒன்றை சமர்ப்பித்தார்கள். அதில் அவர் என்ன கோரினார் என்றால், தமிழ் நாட்டு மின்சார வாரியத் தொழிலாளிகளுக்கு ஒப்பந்தப்படி ஊதிய உயர்வு அளிக்க மின்வாரியம் காலம் கடத்துவதால் ஏற்பட்ட நிலை குறித்து என்ற காரியத்தைப்பற்றி 41 வது விதியின்கீழ் சட்டசபையில் கொண்டுவந்தார். அதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொன்னார்கள். கடைசியாக நண்பர் வீராசாமி, இன்னும் இதனைக் காலந்தாழ்த்தாமல் ஒரு மாதத்திற்குள் இந்தத் தொழிலாளிகளுக்கு ஊதிய உயர்வு அளிக்கப்படுமா என்ற கேள்வியை அமைச்சரவர்களிடம் கேட்டபொழுது, உறுதியாக அதற்குண்டான ஏற்பாடுகளைச் செய்யுமாறு எல்லா அதிகாரிகளுக்கும் சொல்கிறேன், அது நடைபெறும் என்ற வாக்குறுதியை அளித்தார்கள். ஆனால் என்னவாயிற்று? ஏறத்தாழ 7, 8 மாதங்களாகிவிட்டன. ஆனால் இதுவரையில் நடைபெறவில்லை.

ஊதிய மாற்றத்தைக் கடந்த 1—12—1974 ஆண்டு தந்திருக்க வேண்டும். ஓராண்டு ஆகியுங்கூட இதுவரையிலும் அதற்கான எந்த முயற்சியையும் இந்த அரசாங்கம் செய்யவில்லை இது ஒரு தொழிலாளர் அரசாங்கம் என்று அடிக்கடி இங்கு மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கூறுகிறார்கள். தொழிலாளிகள் மீது அக்கறை இருக்கும் என்று சொன்னால் இந்த மின்சார வாரியத்



தில் பணியாற்றும் 1 இலட்சம் தொழிலாளிகளுக்கும் ஊதிய மாற்றம் அளிக்காமல் இந்த அளவு அசிரத்தையாக இந்த அரசு இருக்காது. ஆகவே, ஊதிய மாற்றம் உடனடியாகச் செய்யப்படவேண்டும்.

அடுத்ததாக, மின்சார வாரியத்தில் ஏறத்தாழ 30,000 டி.சி.எல். தொழிலாளிகள் இருப்பதாக நான் அறிகிறேன். அந்த டி.சி.எல். தொழிலாளிகளைப் பொறுத்தவரையில் இந்த அரசு மத்திய அரசாங்கத்தின் 20 அம்சத் திட்டத்திற்கு முற்பட்டு செயல்பட்டு வருவதாக நான் கருதுகிறேன். 20 அம்சத் திட்டத்தின்படி எந்தத் தொழில் துறையிலும், டி. சி. எல். அல்லது என். எம். ஆர் தொழிலாளரை மூன்று ஆண்டுகளுக்குள் நிரந்தரப்படுத்தியாக வேண்டும். ஆனால், இங்கே 30,000 தொழிலாளிகள் பல ஆண்டுகளாக டெம்பரரியாக பணியாற்றுகிறார்கள். ஆகவே, அவர்களை உடனடியாக நிரந்தரப் பணியாளர்களாக ஆக்க வேண்டும்.

கூலியைப் பொறுத்தவரையில் நிரந்தரப் பணியாளர்களுக்குக் கொடுக்கிற குறைந்த கூலியை அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று டெல்லியில் நடந்த மாநாட்டில் முடிவு செய்திருப்பதாக இந்த அரசாங்கத்திற்குத் தகவல் வந்திருக்கிறது. அவர்களுக்கு தகுதிக்கேற்ற உத்தியோக உயர்வும் அளிக்கவேண்டும். ஆனால்

(பிற்பகல் 12-30)

அதை வாரியம் செய்யவில்லை என்பதை வருத்தத்தோடு கூறிக் கொள்கிறேன்.

தேசிய மின்சார தொழிற்சங்கத்தின் தலைவர் என்ற முறையில் நான் இவற்றையெல்லாம் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன், இந்த டி.சி.எல். தொழிலாளர்களுக்கு குடும்ப நலத் திட்டம் கொண்டுவரப்படவில்லை, மற்ற தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படுவதைப்போல் டி.சி.எல்.களாகப் பணியாற்றும் தொழிலாளர்களுக்கும் அமுல் நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மின்வாரியத்தில் பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் ரிடையரானால் பென்ஷன், கிராஜுவெட்டி போன்றவை கிடைப்பதற்கு பல ஆண்டுகள் பல மாதங்கள் ஆகின்றன. ஆனால் இந்த அரசாங்கத்தின் கொள்கைப்படி ரிடையரானவுடன் அவை

யெல்லாம் கிடைக்கவேண்டும், ஆனால் அப்படி கிடைப்பதில்லை, அவ்வாறு கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும்.

பேசின்பிரிட்ஜ் மின் உற்பத்தி நிலையத்தில் பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் வீட்டு வசதி பெறவேண்டுமென்ற முறையில் 64-ஆம் ஆண்டிலேயே எருக்கஞ்சேரியில் வீடு கட்ட பூமி எடுக்கப் பட்டது, ஆனால் அந்தத் தொழிலாளர்களுக்கு இன்னும் வீடு கட்டிக் கொடுக்கப்படாமல் இருக்கிறது, அதையும் செய்து கொடுக்க வேண்டும். எண்ணூரில் கன்ஸ்ட்ரக்ஷனில் வேலை செய் கின்ற தொழிலாளர்களை தூத்துகுடிக்கு மாற்றம் செய்வதாக இருக்கிறது. அப்போது அந்தத் தொழிலாளர்களின் வசதி, சம்மதம் பெற்று இடமாற்றம் செய்ய வேண்டும்.

மின்சார வாரியத்தில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கு வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக கிடைக்கக்கூடிய பெனி லிட்டிஸ் கிடைக்கவில்லை என்ற குறைபாடு இருக்கிறது. வீட்டு வசதி வாரியத்தில் உள்ள நன்மைகள் அவர்களுக்கும் கிடைக் கச் செய்ய வேண்டும்.

எஞ்சினியர்களைப் பொறுத்த வரையில் அவர்களுடைய ஒரு கோரிக்கை நீண்டநாட்களாக சிலருக்கு அடிஷனல் லோன் கேட்டு வாரியத்திடம் கோரிக்கை இருக்கிறது. அவர்களுக்கு அடிஷனல் லோன் கொடுக்கவில்லை என்றால் அவர்கள் கட்டத் தொடங்கிய கட்டிடத்தை பூர்த்தி செய்ய முடியாது. கட்டத் தொடங்கிய கட்டிடம் பூர்த்தி ஆகாத நிலையிலிருப்பதால் அவர் களுடைய கோரிக்கையை வாரியம் கவனிக்க வேண்டும்.

இப்போது இங்கே ஜே. இ.க்களாக இருக்கிறவர்களைப் போல் வட மாநிலங்களிலே, உள்ளவர்களுக்கு டெஸிக்னேஷன் ஏ.இ. என்று கொடுத்திருக்கிறார்கள், மத்திய அரசாங்கத்திலே வேலைக்கு எடுக்கிறபோது இவர்களுக்கு — இவர்கள் ஜே.இ.க்கள் என்று சொல்லப்படுகிற காரணத்தினால் வட நாட்டில் அவர்களுக்கு சமமாக உள்ள ஏ.இக்களுக்குள்ள அந்தஸ்து மத்திய, வட மாநில அரசுகள் கொடுக்கவில்லை. ஆனால் வட மாநிலங்களிலே உள்ளவர்கள் ஏ.இ-க்கள் என்று இருப்பதால் அவர்களுக்கு பல்வேறு நன்மைகள் எல்லாம் கிடைக்கின்றன என்று சொல்லப் படுகிறது. ஆகவே ஜே.இ-க்கள் என்று இருப்பவர்களை ஏ.இ-க்கள்



என்று ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதனால் வாரியத்திற்கு எந்தவிதமான பெக்யூனரி லையபிலிட்டியும் கிடையாது.

அதே போன்று சூப்பர்வைசர்களை ஒரே கிரேடாக மாற்றி அவர்களை ஜே.இ-க்களாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பரளியாறு திட்டம் ஒன்று இருக்கிறது. இது மிகக் குறைந்த செலவில் அதிக மின்சாரத்தை உற்பத்திச் செய்யக் கூடியது. இதனை உடனடியாக முடிக்க வேண்டும்.

கோதையாறுக்கு பேச்சிப்பாறை பாயிண்டிலிருந்தும் நாகர் கோவிலிலிருந்து முத்துக்குளியல் வழியாகவும் செல்லும் ரோடுகள் மிகவும் மோசமாக இருக்கின்றன. அவற்றை உடனயாகப் பழுது பார்க்க வேண்டும்.

கடைசியாக இந்த மாநிலத்தில் மின்சார உற்பத்திக்கும் மாநில வளர்ச்சிக்கும் அதிகமாகப் பாடுபட்டு நம்மை விட்டுப் பிரிந்துவிட்ட தலைவர் காமராஜ் அவர்களின் திருவுருவப் படத்தைப் பல்வேறு திட்ட அலுவலகங்களில் மின்சார இலாகா தொழிலாளர்கள் வைக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள், அரசாங்கத்தின் செலவில் இல்லை, தொழிலாளர்கள் அவர்கள் வைக்க வேண்டுமென்று விரும்பினால் அதற்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று நான் முதலமைச்சர் அவர்களையும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு ஏ. எம். இராஜா: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற மின்சார துறை நிதிநிலை அறிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்களைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது மிகவும் வர வேற்கத் தகுந்த ஒன்றாகும். தங்களுடைய பண்ணைகளுக்கும் தொழிற்சாலைகளுக்கும் போதிய மின்சாரம் கிடைக்குமா என்று

[திரு. ஏ. எம். இராஜா] [1975 நவம்பர் 10

தொழில்கள் தொடங்குவோர் யாரும் எவ்வித மனக்கிலேசமும்
அடையத் தேவையில்லை என்று கூறியிருக்கிறார்கள். இது
அமைச்சரவர்களுடைய தன்னம்பிக்கையை எடுத்துக் காட்டு
கிறது. தொடர்ந்து மின்வெட்டு வந்து கொண்டிருந்த நேரத்திலே
இனிமேல் மின் இணைப்புப் பெறுவதற்கும் பண்ணைகள் தொடங்கு
வதற்கும் யாரும் அச்சப்படத் தேவையில்லை என்ற முறையிலே
தன்னம்பிக்கையோடு கூறியிருக்கிறார்கள். இது எதிர்காலத்தில்
மின்வெட்டு வராது என்பதை எடுத்துக் காட்டுகிறது. அந்த
வகையிலே நான் அமைச்சர் அவர்களைப் பாராட்டக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

நம்முடைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும்
என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ள நான் கடமை
பட்டிருக்கிறேன். காரணம், முன்னெச்சரிக்கையாக 1970 ஆம்
ஆண்டிலே இந்த நாட்டிலே இருக்கிற அனைத்துக் கிராமங்
களுக்கும் மின்வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்ற
முறையிலே ஒரு திட்டத்தை உருவாக்கி 1973ஆம் ஆண்டுக்குள்
90 சதவீதம் கிராமங்களுக்கு உபரிச் செலவு ரூ. 26.19 கோடி
தான், இந்தத் திட்டத்தையே இன்றைக்கு நாம் செயல்படுத்துவ
தென்றால் குறைந்தது 50 முதல் 60 கோடி ரூபாய் தேவைப்படும்.
ஆகவே முன்னெச்சரிக்கையாகச் செய்ததால் ஏறத்தாழ
30 கோடி ரூபாய் வரையில் மிச்சமாயிருக்கிறது, அந்த வகை
யிலே நம்முடைய முதலமைச்சர் அவர்களை நான் மனமாரப்
பாராட்டுகிறேன்.

மின்சார வாரியம் கொடுத்திருக்கிற நிதிநிலை அறிக்கையைப்
பார்த்தால் அதிலே ரிவைஸ்ட் பட்ஜெட்தான் கொடுக்கப்பட்டிருக்
கிறது. 1973-74 ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை அச்சிலிருப்
பதாகச் சொல்லியிருக்கிறார்கள். 1974-75ஆம் நிதியாண்டு முடிந்து
7 மாதங்கள் ஆகியும் இன்னும் வரவில்லை என்றால் என்ன செய்கி
றார்கள் என்று தெரியவில்லை.

இவர்கள் கொடுக்கிற நிதிநிலை அறிக்கையை எங்களைப்
போன்றவர்களால் புரிந்துகொள்ளவே முடியவில்லை, கஷ்டமாக
இருக்கிறது, பக்கங்களைக்கூட சரியாகப் போடாமல் இருக்
கிறார்கள், வேண்டுமென்றே இப்படி செய்கிறார்களோ என்று
தெரியவில்லை. சென்ற முறை இந்த நிதிநிலை அறிக்கையின் மீது



1975 நவம்பர் 10] [திரு. ஏ. எம். இராஜா]

நடந்த விவாதத்தின் போதே மாண்புமிகு உறுப்பினர்கள்
எல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்கள். எங்களுக்குப் புரிகின்ற
முறையில் நிதி நிலை அறிக்கையைக் கொடுக்கவேண்டுமென்று
சொல்லி இருக்கிறார்கள், அப்படிச் சொல்லியிருந்தும்கூட
அப்போது முயற்சி செய்வதாகச் சொன்னார்கள், ஆனால் இந்த
ஆண்டும் அதேபோல்தான் வந்திருக்கிறது, இந்த முறையை
மாற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மின் தேவை 1972-73 ஆம் ஆண்டு வரை
ஆண்டிற்கு 10 சதவீதமாக உயர்ந்தது, கடந்த ஆண்டுக்கு முன்பு
இது குறைந்திருக்கிறது என்று அறிக்கையிலே கூறப்பட்டிருக்
கிறது. இதற்குக் காரணம் மின்வெட்டுத்தான், மின்வெட்டுக்
காரணமாக தொழிலதிபர்கள் தொழில் தொடங்க அஞ்சிய
காரணத்தினால் தேவை குறைந்திருக்கிறது. ஜனவரி முதல்
ஜூன் மாதம் முடிய நீர்வரத்து இல்லாததால் அதன் மூலமாக
மின்சார உற்பத்தி குறைகிறது. அப்படிக் குறைகிற காரணத்
தினால் மின்வெட்டு ஏற்படுகிறது என்று சொன்னார்கள்.

சென்ற ஆண்டு நம்முடைய நிலைமை என்ன? மின்வெட்டு
டிசம்பர் 74-ல் 40 சதவீதம் என்று சொன்னார்கள். மொத்த
ஜெனரேஷன் ஒரு மாதத்தில் லீன் மாதங்களில் 660 மிலியன்
யூனிட் என்று சொல்லப்படுகிறது. ஆனால் டிசம்பர் மாதத்திலே
நமக்கு 624 மிலியன் யூனிட் கிடைத்திருக்கிறது. எப்படி
40 சதவீதம் வெட்டு என்று தெரியவில்லை. 660 கிடைத்தது
நமக்கு 624 வரையில் கிடைத்திருக்கிறது.

1975 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் 60 சதவீதம் வெட்டு
இருந்திருக்கிறது, ஆனால், நமக்கு கிடைத்தது 584 மிலியன் யூனிட்
ஆகும். எப்படி 60 சதவீதம் கட் வந்திருக்கிறது என்று தெரிய
வில்லை. பிப்ரவரியிலே 60 சதவிகிதம், மார்ச் மாதத்தில் 60 சத
விகிதம். பிப்ரவரி மாதத்திலே 525 மிலியன் யூனிட் கிடைத்
திருக்கிறது, மார்ச் மாதத்திலே 554 மிலியன் யூனிட் கிடைத்
திருக்கிறது, ஏப்ரல் மாதத்தில் 459.43 மிலியன் யூனிட் கிடைத்
திருக்கிறது. மே மாதத்தில் 75 சதவிகிதம் கட் வந்திருக்கிறது.
நமக்குக் கிடைத்திருப்பது 480.85 மிலியன் யூனிட், ஆகவே
இதிலே எங்கேயோ கோளாறு இருக்கிறது. அமைச்சர் அவர்கள்

இதைக் கண்டிப்பாகப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதன்படி பார்த்தால் நிச்சயமாக 20 சதவீதம் வெட்டு கூட தேவையில்லை என்று தெரிகிறது, மக்களிடத்தில் பீதியைக் கிளப்புகிற முறையிலே இது இருக்கிறது. ஆகவே, அமைச்சர் அவர்கள் கண்டிப்பாக கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாம் வெளி மாநிலங்களிலிருந்து 20 சதவீதத்திற்குக் குறைவில்லாமல் மின்சாரம் வாங்குகிறோம். ஆந்திர மாநிலம், கர்நாடக மாநிலம், கேரளா மாநிலம் போன்ற மாநிலங்களிலிருந்து ஒப்பந்தங்களைச் செய்துகொண்டு வாங்குகிறோம். அவர்கள் அடிக்கடி ரேட்டை உயர்த்திக் கொண்டிருக்கிறார்கள் அல்லது கொடுக்கின்ற மின்சாரத்தையும் அவர்கள் விருப்பம்போல் கொடுக்கிறார்கள். ஆகவே நம்முடைய மாநிலத்திலேயே தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்யவேண்டும்.

நிதிநிலை அறிக்கையிலே அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள் சோலார் எனர்ஜி ஆராய்ச்சியில் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் வெளிநாடுகளைப் பார்த்தால் எப்படி அதைக் கொண்டுவருவது என்று அறிக்கைகள் எல்லாம் வருகின்றன. அதைப்போலவே, ஜியோ தெர்மல், பிரீடர் ஃபிஷன், ஃப்யூஷன் பவர் என்றெல்லாம் சொல்லப்படுகிறது. இதைப்பற்றியெல்லாம் நம்முடைய பொறியாளர்கள் கவனம் செலுத்த வேண்டும். இதற்கென்று தனி விங் ஒன்றை ஆரம்பிக்க வேண்டும்.

தொழில் மயமாக்க வேண்டுமென்றால், விவசாயத்தில் மின்சாரத்தைப் பயன்படுத்த வேண்டுமென்றால் நமக்கு மின்சாரம் அதிகமாகத் தேவைப்படுகிறது. நமக்குள்ள நீர்நிலைகள் அனைத்தையும் நாம் பயன்படுத்தி முடித்துவிட்டோம். இனி தெர்மல் எனர்ஜி, ஜியோ தெர்மல் எனர்ஜி முதலியவற்றிற்குத் தான் செல்ல வேண்டும். அது நிலத்திற்கு அடியிலிருந்து கிடைக்கிறது. ஒரு குழாய் மூலம் தோண்டினால் நீராவி கிடைக்கிறது. இந்த முறை மேல்நாடுகளில், இரஷ்யா, அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் இப்பொழுது செயல்படுவதாகச் சொல்கிறார்கள். 40 பெரிய 'அட்டாமிக் ஸ்டேஷனை' உருவாக்கினால் எவ்வளவு எனர்ஜி கிடைக்குமோ அந்த



அளவிற்கு 5,000 ஜியோ தெர்மல் ஸ்டேஷன் உருவாக்கினால் கிடைக்குமென்று சொல்கிறார்கள். ஆகவே, இந்தத் துறையிலே நம்முடைய மின்சார வாரியம் கவனத்தைச் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

காடம்பாறை குழாய் நீரேற்றுத் திட்டம் என்ற திட்டமும் நாம் உருவாக்கிய திட்டம்.

இப்பொழுது நமக்கு எண்ணூர் தெர்மல் ஸ்டேஷன் முடியும் தறுவாயில் இருக்கிறது.

கல்பாக்கம் திட்டமும் 1973-74 ஆம் ஆண்டில் வர வேண்டிய திட்டம், ஆனால் என்ன காரணத்தினாலோ அது வரவில்லை. அது 1979 ஆம் ஆண்டிலேதான் வருமென்று சொல்லப்படுகிறது. நம்முடைய அமைச்சருடைய உரையிலிருந்து அதுவும் நிச்சயமில்லை என்று தெரிகிறது.

இப்பொழுதே காடம்பாறை திட்டத்தை ஆரம்பித்தால்தான் 1979 ஆம் ஆண்டிலே கல்பாக்கம் பீக்கிங் லோடோடு சேரச் செய்ய முடியும்.

சோலையாறு திட்டத்தையும், பாலாறு திட்டத்தையும்கூட இப்பொழுதே எடுத்துக்கொள்வது நல்லது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நெல்லித்துறை திட்டத்திலே ஏறக்குறைய 6,000 கன அடி தண்ணீருக்குமேல் வருகிறது. இந்தத் தண்ணீரை ஒரு கால்வாய்க்குத் திருப்பலாம் என்ற யோசனை இருப்பதாகத் தெரிய வருகிறது. அப்படி கால்வாய்க்குத் திருப்பிவிடுவது சரியாக இருக்காது. வாய்க்காலுக்குத் திருப்பினால் 6,000 கன அடி நீர் அதில் கொள்ளுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அந்த எனவே, அதற்குப் பதிலாக ஒரு அணை கட்ட வேண்டும். எடுக்க அணையைக் கட்டுவதற்கான முயற்சியையும் இப்பொழுதே வேலையில்லாத வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதனால் இப்பொழுதே வர்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கும். அதை கிடையாது ஆரம்பித்தால் மின்சாரப் பற்றாக்குறை இனிமேல் உண்டாகும் என்று சொல்லக்கூடிய அளவிற்கு நிலைமைகள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்தைப் பாசனத் திட்டத்துடன் சேர்த்திருப்பதால் அதில் காலதாமதம் ஏற்படுகிறது. அதை விட்டுவிட்டு மின்சாரத்திற்காக அந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மற்றொன்றையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஒரு இன்ஸ் பெக்ஷன் விங் ஏற்படுத்தப்பட வேண்டும். நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், இப்பொழுது லயன் லாஸ் என்று சொல் கிறோம். அமைச்சரவர்கள் உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள் அது குறைவு என்று, 21 சதவிகிதம் என்று கூறுவது எப்படிக்

விவசாயிகளைப் பொறுத்தவரையில் கிணற்றிலிருந்து மாட்டுக் கட்டுத்துறைக்கு லயன் எடுக்க வேண்டுமென்றால் 100 அடிக்குள் தான் இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். 100 அடிக்குள் எப்படிக் கிணறு இருக்க முடியும்? பல தோட்டங்களில் கிணறு தூர இருக்கும் என்பது அமைச்சரவர்களுக்கும் தெரியும். எனவே 100 அடிக்குள் என்பதை மாற்றியமைக்க வேண்டும். இதனால் நமக்கு எந்தவிதமான அடிஷனல் செலவும் ஏற்படாது. எனவே, இதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தொழிற்சங்கங்களெல்லாம் இன்டிசிப்ளினை உருவாக்குகின்றன என்ற பொதுவான குற்றச்சாட்டு கூறப் படுகிறது. இந்த நேரத்தில் திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் ஆல் இந்தியா ரேடியோவில்

குறைவானது என்று எனக்குத் தெரியவில்லை. லயன் லாஸ் என்பது 14 சதவிகிதம் ஏற்படும். பாக்கியிருப்பது ஃபால்டி மீட்டரிங், டிஃபெக்டிவ் ஒயரிங், அப்யூஸ் ஆஃப் டாரிப், தெப்ட் ஆஃப் எனர்ஜி இது போன்றவைகளால்தான் ஏறக் குறைய 7 சதவிகிதம், 8 சதவிகிதம் நமக்கு இழப்பு ஏற்படுகிறது. நம்முடைய மீட்டர்கள் டெஸ்ட் செய்யப்படுவதே இல்லை. 3 பேஸ் மீட்டர் என்றால் குறைந்தது இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை செக்கப் செய்யப்பட வேண்டும். சிங்கிள் பேஸ் மீட்டர் என்றால் குறைந்தது மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை செக்கப் செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால் என்ன நடக்கிறது?





ஹெல்பர் வருகிறார், மீட்டரைக் கழற்றுவார், கோழியை உரித்துப் போடுவதைப்போல் போட்டு எடுத்துக் கொண்டு செல்வார். அவர் எடுத்துச் செல்கின்ற பொழுது ஏற்படுகின்ற ஆட்டத்தினாலேயே நல்ல மீட்டர்கள்கூட டிஃபெக்டாக ஆகிவிடும். டிஃபெக்டை சரி செய்து மறுபடியும் கொண்டு வரும்பொழுதும் அப்படித்தான் வரும். அப்படி வந்தாலும் அது சரியாக இருப்பதில்லை. எனவே அவர்களுக்குப் பெட்டிகள் செய்து கொடுத்து மீட்டர்களை ஆடாமல் அசையாமல் எடுத்துச் செல்வதற்கும், கொண்டு வருவதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மீட்டரிங் டிஃபெக்ட், ஒயரிங் டிஃபெக்ட் ஆகியவைகளினால் கரண்ட் லீக் ஏற்படக் கூடும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்து, அப்யூஸ் ஆஃப் டாரிஃப் என்று எடுத்துக் கொண்டால், வீட்டுக்கு என்று வாங்கி கடைக்கு கொண்டு செல்கிறார்கள். தெஃப்ட் என்ற வகையில் 230 கேஸ்தான் பிடித்ததாகச் சொல்கிறார்கள். ஆனால் இது நிறைய இருக்கிறது. எனவே, இதற்காக ஒரு இன்ஸ்பெக்ஷன் விங் ஏற்படுத்த வேண்டும். இவ்வாறு ஏற்படுத்தினால் ஆண்டு ஒன்றுக்கு 25 இலட்சம் ரூபாய் செலவாகக் கூடும். அதற்காக சார்ஜ் வேண்டு மென்றால்கூடச் செய்து கொள்ளலாம், இதனால் 11 கோடி ரூபாய்க்கும் அதிகமாக வருமானம் வர வழியிருக்கிறது. மேலும், இதன்மூலம் பலருக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும். முப்பது ஏ.ஈ.-க்கள், 100 ஜே.ஈ.-க்கள், 120 ஹெல்பர்கள் என்று இப்படிப் பலருக்கும் வேலைவாய்ப்பு இருக்கிறது. அதனால் நம்முடைய லயன் லாஸ் குறையும். எனவே, இதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, தொழிற்சங்கத்தைப்பற்றிச் சில கருத்துக்களை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதிகமாக இருப்பதால் தலைவரவர்களின் அனுமதியோடு படித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் அவரிடம் கொடுத்துவிடுங்களேன்.

**திரு. ஏ. எம். இராஜா:** இல்லையில்லை, படித்து விடுகிறேன். "தமிழ்நாடு மின்சாரவாரியத் தொழிலாளர்கட்கு 1—12—74 முதல்

வழங்கப்பட வேண்டிய ஊதிய உயர்வு குறித்து பேச்சு வார்த்தைகளை நடத்தி இப்பிரச்சினைக்கு விரைவானதொரு தீர்வு கண்டிட மாண்புமிகு முதல்வர் அவர்கள் பணித்திருந்தும் மின்சார வாரியத்தால் தேவையான நடவடிக்கைகள் இன்னமும் மேற்கொள்ளப்படாமலேயே உள்ளதென்பதனை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சம்பள விகிதங்கள் குறித்தும், இதர படிகள் குறித்தும் கோரிக்கைகள் தமிழ்நாடு மின்கழகத் தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தால் இந்த ஆண்டு சனவரி திங்களிலேயே மின்சாரவாரியத்தின் முன் வைக்கப் பட்டுள்ளன. இருந்தும் மின்சாரவாரியம் தந்திட உள்ள ஊதிய விகிதங்கள் குறித்தும், படிகள் குறித்தும் தனது திட்டங்களை இதுவரையில் தெரிவித்திடவில்லை.

"26.4.75ல் நடைபெற்ற பேச்சு வார்த்தையின்போது அடுத்த பேச்சு வார்த்தையின்போது விவரங்கள் தருவதாகத் தெரிவித்தார்கள். அடுத்த கூட்டம் 9—10—1975-ல் நடத்தப்பட்டது. ஐந்து மாதங்கள் கழித்துக் கூடியபோதும் தருவதாக வாக்களிக்கப் பட்ட விவரங்கள் தரப்படவில்லை. எனவே, ஊதிய உயர்வு குறித்து இதுவரையில் நடத்தப்பட்ட பேச்சு வார்த்தைகள் கூடிக் கலைவதாக இருந்துள்ளதே தவிர, உருவான முன்னேற்றம் எதனையும் கண்டிடவில்லை.

ஊதிய உயர்வு குறித்த தீர்வு கண்டிட அகில இந்திய மட்டத்தில் முயற்சிகள் மேற்கொண்டு தோல்வி கண்டுள்ளவர்கள் இப்பிரச்சினை தமிழக மட்டத்தில் பேசி சுமுகமாகத் தீர்க்கப் படுவதை விரும்பாதவர்களாகவே உள்ளனர். எனவே, காலங் கடத்திடும் வகையில் அவர்களும் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

ஊதிய உயர்வு மற்றும் தொடர்புடையதும், தீர்க்கப்பட வேண்டியதுமான பின்வரும் பிரச்சினைகளின் மீதும் இச் சந்தர்ப்பத்தில் இந்தப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வந்திட விரும்புகிறேன்.

ஊதிய உயர்வுப் பிரச்சினையில் ரூ. 65, ரூ. 70 ஆகிய சம்பள விதங்களையும் ரூ. 84 சம்பள விதங்களோடு இணைத்து புதிய சம்பள விதத்தினை அமைத்திட வேண்டும். இப் பிரச்சினை குறித்து



1-12-74 முதல் ஊதிய உயர்வு வழங்கப்படும்போது பரிவோடு கவனித்து வேண்டுவன செய்யப்படுமென மாண்புமிகு முதல்வர் அவர்களும் அலுவலக உதவியாளர்கள் மாநில மாநாட்டிலே கலந்து கொண்டு உரையாற்றிய போது தெரிவித்திருக்கிறார்கள் என்பதனையும் இச்சந்தர்ப்பத்தில் கவனப்படுத்திட விரும்பு கிறேன்.

களப் பணியாளர்கள், அலுவலகப் பணியாளர்கள் ஆகியோருக்குத் தற்போதுள்ள தனித் தனி சம்பள விதங்களை அகற்றி ஒரே மாதிரியான சம்பள விதங்களை இரு பாலாருக்கும் ஏற்படுத்திட வேண்டும். இந்தக் கோரிக்கை மின்சார வாரியத் திலுள்ள பெரும்பாலான சங்கங்களால் முன்வைக்கப்பட்டுள்ளது.

சில பொதுத் துறைத் தொழில்களில் சம்பளமும், அகவிலைப் படியுமாகச் சேர்ந்து குறைந்தபட்ச சம்பளமும் ரூ. 400 அளவில் வழங்கப்படுகிறது. ஆனால் மின்சார வாரியத்தில் அடி மட்டத்தில் உள்ள தொழிலாளர்கள் குறைந்த பட்ச சம்பளமாக ரூ. 266/25-ம் ரூ. 285/25-ம் பெற்றுக் கொண்டுள்ளனர். எனவே, மின்சார வாரியத்திலும் குறைந்தபட்ச சம்பளம் கணிசமான அளவில் வழங்கப்பட வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பெரிய ஸ்டேட்மென்டாக இருந்தால் படிக்காதீர்கள். அப்படிப் படிக்க விதி முறைகளில் வழி கிடையாது. புள்ளி விவரத்தைக் கூறி சீக்கிர மாக முடியுங்கள்.

**திரு. ஏ. எம். இராஜா:** 30-9-73 முடிய அவர்கள் பெற்றுக் கொண்டிருந்தது 202 புள்ளி. 1-7-75 முதல் விலைவாசி உயர்வுப் புள்ளி 326. 30-9-74 முடிய 293 புள்ளிக்கு வழங்கப்பட்ட தொகையை அடிப்படைச் சம்பளத்துடன் இணைத்திட வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

விலைவாசிப் புள்ளிக்கு 0.75 வீதம் வழங்கப்படும் அகவிலைப் படியை ரூ. 1.30 என்று ஆக்கவேண்டும். அமைச்சர் அவர்கள் மின் வாரியத்திற்கு அந்த வகையில் பரிந்துரை செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மணி அடிக்கப்பட்டது)

[திரு. ஏ. எம். இராஜா] [1975 நவம்பர் 10

இன்னும் நாலைந்து கோரிக்கைகள், முடித்து விடுகிறேன்.

மலைவாழ் படியோ அல்லது படிகளோ வழங்கப்படாத
இடங்களில் காடு மலைகளுக்கிடையே மின் நிலையங்களிலும், மின்
உற்பத்திக்காக கட்டுமானப் பணிகளிலும் ஈடுபட்டுள்ள தொழி
லாளர்கட்கு தனிமையிட வாழ்வுப்படி வழங்கப்படுகிறது. சென்ற
ஊதிய உயர்வின்போதும், அதன் பின்னர் சில படிகள் திருத்தி
அமைக்கப்பட்ட போதும் கூட தனிமையிட வாழ்வுபடி மட்டும்
திருத்தி அமைக்கப்படாமல் இருந்தது. இப்பிரச்சினை குறித்து
இரண்டொரு முறை வாரிய மட்டத்தில் விவாதத்திற்கு எடுத்துச்
சொன்னபோது அடுத்த ஊதிய உயர்வின்போது பார்த்துக்
கொள்ளலாம் என்று சொல்லிவிட்டார்கள். இந்த முறையாவது
அதிலே கவனம் செலுத்தி அதையும் மாற்றிக் கொடுக்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மற்றொன்று ஷிப்ட் அலவன்ஸ் பொறியாளர்களுக்குக் கொடுக்
கிறார்கள், சூப்பர்வைசர்களுக்குக் கொடுக்கிறார்கள்; களப்
பணியாளர்களுக்குக் கொடுப்பதில்லை. அதையும் இவர்களுக்குக்
கொடுக்கவேண்டும்.

பண்டகசாலைப் பணியாளர்களுக்கும் சிறப்பூதியம் கொடுக்க
வேண்டும். கட்டுமானத் திட்டத்தில் பணியாற்றிக்கொண்
டிருக்கும் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்குக் கொடுக்க
வேண்டும். மின் ஆய்வு வட்டத் தொழிலாளர்கட்கும் இது
வழங்கப்பட வேண்டும்.

அன்றாட ஊதியத் தொழிலாளர்களை நிரந்தரம் செய்ய
வேண்டும். ஏறக்குறைய 22,000 பேர் இருக்கிறார்கள். மாண்புமிகு
முதல்வர் அவர்கள் 1972-ம் ஆண்டில் அளித்திட்ட உறுதிமொழிக்
கேற்ப நான்காண்டு பணி முடித்தவர்களை நிரந்தரம் செய்தலை
1973-ம் ஆண்டிலிருந்து செய்து வருகின்றனர். 1-1-1975 முதல்
மேலும் 15,000 அன்றாட ஊதியத் தொழிலாளர்களை இத்திட்
டத்தின்படி. நிரந்தரம் செய்யவேண்டும். 1-1-76 முதல் மீதமுள்ள
7,000 தொழிலாளர்களை நிரந்தரம் செய்திட வேண்டும். ஆக
22,000 தொழிலாளர்களையும் 1-12-1974 முதலே நிரந்தரம் செய்திட
வேண்டுமென வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்
பட்டது)



1975 நவம்பர் 10] [திரு. ஏ. எம். இராஜா]

பதவி உயர்வுகளில் ஒருவருடைய பதவிக்காலத்தில் நான்கு
பதவி உயர்வாவது அளித்திட வேண்டும். டிரான்ஸ்போர்ட் கார்ப்ப
ரேஷனில் அந்த மாதிரித் திட்டத்தைக் கொண்டு வந்திருக்
கிறார்கள். அதுபோன்ற திட்டத்தை இங்கும் உருவாக்க வேண்டு
மென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. என். கே. பழனிசாமி:** கனம் சபாநாயகர் அவர்களே,
1974–75-ல் 94 கோடி ரூபாயாக இருந்த வருமானம் 1975–76-ல் 124
கோடி ரூபாய் அளவுக்கு அதிகரித்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் 10 நிமிஷம் எடுத்துக்
கொள்ளுங்கள். அதிக உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது.
ஒரு உறுப்பினருக்குப் பத்து நிமிடங்கள்.

**திரு. என். கே. பழனிசாமி:** ஒரு உறுப்பினருக்கு அரை மணி
நேரம் கொடுத்தீர்கள். எங்கள் கட்சியில் நான் ஒருவன்தான்
பேசுகிறேன். ஒரு நியாயம் வேண்டாமா?

30 கோடி ரூபாய் அதிக வருமானம் வந்திருக்கிறது.
மின்சாரம் அதிகப்படியாக விற்று அந்த அதிகப்படி வருமானம்
வரவில்லை. டாரிஃபை ரிவைஸ் பண்ணித்தான் வந்திருக்கிறது.
மின்சாரம் கொடுக்காமல் வருமானம் வரவேண்டும். இதுதான்
சர்க்கார் கொள்கை. சப்சிடி—1971-72-ல் 10 கோடி ரூபாய் கொடுத்
திருக்கிறார்கள். 1972-73, 1973-74, 1974-75, 1975-76 ஆகிய நான்கு
வருஷத்தில் 40 கோடி ரூபாய் சப்சிடி கொடுத்திருக்கவேண்டும்.
ஆனால் வரவு-செலவு திட்டத்தில் அது குறிப்பிடப்படவில்லை.

மத்திய சர்க்கார் கொடுத்த கடன் 30 கோடி ரூபாய். அது
நமக்கு லாபந்தான். ஏன் அதை ஈக்விடி காபிடலாக மாற்ற
சர்க்கார் மறுக்கிறது?

1956-ம் வருஷத்தில் எலக்ட்ரிசிடி போர்டில் 75 கோடி ரூபாய்
மூலதனம். 1967-ம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சி இருந்தவரை 375
கோடி ரூபாய் மூலதனம். அன்று ரேட் ஆப் புராகிரஸ் 850 மெகா
வாட்ஸ். 1967 முதல் இன்று 1975-ல் பார்க்கும்போது மூலதனம்
675 கோடி ரூபாய். ரேட் ஆப் புராகிரஸ் 50 சதவிகிதம்தான்.
400 மெகா வாட்ஸ்தான் அதிகம். அப்படி என்ன குறைபாடு?

[திரு. என். கே. பழனிசாமி] [1975 நவம்பர் 10

18-ம் நூற்றாண்டில் நம்முடைய நாடு அடிமையாக இருந்தது. சுதந்திரத்திற்குப்பிறகுதான் மின்சாரத்தை உபயோகப்படுத்தக் கூடிய சந்தர்ப்பம் அதிகரித்து வருகிறது. தற்போது சோலார் எனர்ஜியை மற்ற நாடுகள் பயன்படுத்தத் துவங்கியிருக்கின்றன. அதிலே நாம் இப்போது பின் வாங்கக்கூடாது. அதற்காக ஒரு சிறு தொகையாவது ஒதுக்க வேண்டும். ரேட் ஆப் கெபாசிடி 1,280 மெகாவாட். பிளாண்ட் எபிஷியன்சி 50 சதவிகிதம் தான்.

கேரளத்திலிருந்து, மற்ற மாநிலங்களிலிருந்து, சிலோனிலிருந்து கூட நாம் பவர் வாங்குகிறோம். அதை நம்மைத் தவிர கேட்க ஆள் இல்லை. ஆல் இந்தியா லெவலில் நேஷனல் கிரிட் இல்லை. சிலோன், கேரளா, மைசூர் ஆகியவை நமக்குத்தான் விற்க வேண்டும். தற்போது வீட்டுக்கு யூனிட்டுக்கு 37 காசு, சர்சார்ஜ் எல்லாம் சேர்த்து 42, 43 காசு வாங்குகிறார்கள். இந்த நிலையில் ஏன் குறைந்த விலைக்கு அவர்களிடமிருந்து மின்சாரத்தை வாங்கக்கூடாது? மின்சாரத்தைப் பயன்படுத்துகிற நிலையில் உலகத்திலுள்ள நிலைமை ஆள் ஒன்றுக்கு 1.200 கிலோ வாட்ஸ் பயன்படுத்துகிறார்கள். இந்தியாவில் ஆள் ஒன்றுக்கு 100 கிலோ வாட்ஸ்தான். எந்த அளவுக்கு அபிவிருத்தி இருக்கிறது?

விவசாயம் அபிவிருத்தியாக வேண்டும், தொழில் அபிவிருத்தியாக வேண்டும். மின்சாரம் இல்லாமல் அவற்றைச் செய்ய முடியாது. ஆகவே, தென் மண்டலங்கள் கூடி அவர்களிடமிருந்து குறைந்த விலையில் மின்சாரத்தைப் பெற முயற்சி செய்ய வேண்டும். சோலார் எனர்ஜியை உண்டாக்கவும் முயற்சி செய்ய வேண்டுமென்று வற்புறுத்திக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

நாம் ஹைடல் பவர் 4,000 மிலியன் யூனிட்ஸ் எடுக்கிறோம்; தெர்மல் 3,500 மிலியன் யூனிட்ஸ்.

(பிற்பகல் 1-00)

இன்றையதினம் மற்ற நாடுகளை எடுத்துக்கொண்டால் ஹைடல் பவர் 15 சதவிகிதம், தர்மல் பவர் 85 சதவிகிதம் என்றும்தான் இருக்கிறது. ஆனால் இங்கு ஹைடல் பவர் அதிகமாகவும் தர்மல் பவர் குறைவாகவும்தான் இருக்கிறது. எனவே தர்மல் பவர் ஜாஸ்தியாக்க வேண்டும்.

காவிரி நீர் பிரச்னைபற்றி ஒப்பந்தம் ஏற்படும்போது பவர் பற்றியும் சேர்த்துக்கொள்ள வேண்டும், இரிகேஷனுக்கும்



[திரு. என். கே. பழனிசாமி]
1975 நவம்பர் 10]

மின்சாரத்திற்கும் இரண்டுக்கும் சேர்ந்து ஒப்பந்தம் செய்ய வேண்டும். தண்ணீரோடு மட்டும் நின்றுவிடாமல் மின்சாரத்தைப் பெறுவதற்கும் சேர்த்து பேசவேண்டும்.

அடுத்தபடியாக, இந்த மின்சாரம், இரிகேஷன் இரண்டையும் டீ லிங்க் செய்யவேண்டும். தண்ணீரை ஸ்டோர் செய்து தண்ணீர் கிடைக்காதபோது தண்ணீர் கொடுக்கவேண்டும், விவசாயிகளுக்கு அந்தமாதிரி கண்ட்ரோட்டம் இருக்கவேண்டும். இப்போது 50 சதவிகிதம் தான் யூட்டிலைசேஷன் இருக்கிறது.

டிரான்ஸ்மிஷன் லாஸை எடுத்துக்கொண்டால் ஆல் இந்தியா ஆவரேஜ் 15 சதவிகிதம். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 25 சதவிகிதம் என்ற அளவில் இருக்கிறது. இந்த டிரான்ஸ்மிஷன் லாஸ்க்கு காரணம் ரூரல் எலக்ட்ரிபிக்கேஷன். அது நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நாம் ஒன்பது ஸ்கீம்கள் போட்டோம். நாம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் போட்ட திட்டங்களை இன்னும் கமிஷன் செய்யவில்லை. காரணம், அதிகாரிகள் போக்குதான். அதிகாரிகளில் பாதிப் பேர்கள் வேலை செய்வதேயில்லை. தொழிலாளர்கள் ஆகட்டும், அல்லது அதிகாரிகள் ஆகட்டும். எனவே கீழ் மட்டத்திலும் மேல் மட்டத்திலும் கூட்டுக் கமிட்டி போட்டு யார் யார் மேல் தப்பு என்று பார்க்கவேண்டும், அப்படிச் செய்தால்தான் விமோசனம் பிறக்கும்.

இப்போது பில்களைக் கூட மாதாமாதம் சரியாக அனுப்புவதில்லை. ஆனால் ஆள்கள் நிறையப் பேர்கள் இருக்கிறார்கள். இதை சரி செய்யவேண்டும்.

அடுத்தபடியாக, மின்சார உற்பத்தியில் திருட்டு சென்னை மாநிலத்தில்தான் ஜாஸ்தி, உற்பத்தியாவதில் கால் பங்காக திருடி விடுகிறார்கள். சர்க்கார் ஒரு சூப்பரின்டெண்டிங் என்ஜினியரைப் பிடித்தார்கள். இரண்டு மூன்று கேஸ்களைப் போட்டார்கள். மதுரை பக்கத்தில் ஒரு என்ஜினியர் போர்ட் சாமான்களை விற்று சர்க்கார் அவர் மீது கேஸ் எடுத்தது. கடைசியில் சர்க்காரே அந்தக் கேஸை வாபஸ் வாங்கிவிட்டார்கள். இதைப் பற்றி ஒரு கூட்டத்தில் மின்சார வாரியத்தினரைக் கேட்டபோது சர்க்காரைத் தான் கேட்கவேண்டும் என்று அவர்கள் சொல்லி விட்டார்கள். ஏன் அப்படி அந்தக் கேஸை வாபஸ் வாங்கி கொண்டார்கள் என்று கேட்கிறேன்.

திருட்டுக்கள் போவதைத் தடுக்க வேண்டும். அதற்காக தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

பொதுத் துறையில் அதிகப்படி லாபம், ஸூப்பர் ப்ராபிட், சம்பாதிக்கவேண்டும். இன்று மின்சார உற்பத்தி எவ்வளவு ஆகிறதோ அதில் கால் பங்கு அளவிற்கு திருட்டு போகிறது. இதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது?

பாக்கியை எடுத்துக்கொண்டால் ஸன் பேப்பேர்ஸ் 14 லட்சம் ரூபாய் பாக்கி செலுத்த வேண்டும். 1971-72-ம் ஆண்டு ஆடிட் ரிப்போர்டை எடுத்துப்பார்த்தால் அதன்படி 83,00,000 ரூபாய் இதுவரை வசூலாகவில்லை. இன்னும் எவ்வளவோ கம்பெனிகள் கொடுக்க வேண்டியிருக்கிறது. கிட்டத்தட்ட இதுவரை வசூலாகாமல் இருப்பது 15 கோடி ரூபாய்வரை இருக்கும். ஆனால் விவசாயிகள் கொடுக்கவில்லை என்றால் உடனே டிஸ்கன்டின்யூ செய்கிறார்கள். தரங்கதாரா 24 லட்சம் பாக்கி. ஏன் இவற்றையெல்லாம் வசூல் செய்யக்கூடாது? இந்த ஸ்தாபனங்கள் நிறையச் சலுகைகளைப் பெற்றுவருகிறார்கள்.

இப்போது இன்கம் டாக்ஸை குறைத்திருக்கிறார்கள். மத்திய சர்க்கார் சலுகைகளும் இருக்கின்றன. இவ்வளவு இருந்தும் மேற்கொண்டு சர்க்கார் ஏன் சலுகைகள் காட்டவேண்டும் என்று தான் கேட்கிறேன்.

பல்க் கன்ஸூமர்ஸ்க்கு வெள்ளைக்காரன் காலத்தில் சலுகை கொடுக்கப்பட்டது. அப்போதுதான் ஆரம்பிக்கப்பட்டது. காரணம், அப்போது சிமெண்ட், ரப்பர், போன்ற சாமான்கள் பூராவும் வெள்ளைக்காரன் கம்பெனிகளால் தயாரிக்கப்பட்டு வந்தன. ஆகவே, அந்தச் சலுகை தரப்பட்டது. ஆனால் இப்போது நாம் சுதந்திரம் அடைந்து 28 ஆண்டுகள் கழித்த பிறகும் அதே சலுகைகள், அவற்றை உற்பத்தி செய்யக்கூடிய கம்பெனிகளுக்கு தரப்பட்டு வருகிறது. ஒவ்வொரு இன்டஸ்ட்ரிக்கும் டாரிப் இவ்வளவு என்று அதையும் சேர்த்துப் போட்டால் நன்றாக இருக்கும். ஒரு பக்கத்தில் விளம்பரம் செய்கிறார்கள். அதேபோல் இந்த டாரிப்ரேட்ஸ் பற்றியும் விளக்கமாக அறிவிக்க வேண்டும்.

கோல் விலை ஏறியிருக்கிறது. அதற்கு ஒரு காரணம் சொல்கிறார்கள், கப்பலில் வருவதால் ஜாஸ்தியாகிறது என்று.



இன்று மேட்டூர் அலுமினியம் பாக்டரிக்கு என்ன விலைக்கு மின்சாரம் கொடுக்கிறீர்கள்? அந்த டாரிப் ரேட்டை அதிகப் படுத்தியிருக்கிறீர்களா?

1972-ல் ஒரு போராட்டம் நடைபெற்றது. சர்க்காருக்கும் விவசாயிகளுக்கும் இடையே ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது, பத்தரை காசு என்று. இப்போது அந்த ஒப்பந்தத்தை மீறிப் போயாகி விட்டது. கேட்டால் சொல்வார்கள், மத்திய சர்க்கார் கட்டணத்தை உயர்த்தவேண்டும் என்று சொல்கிறார்கள் என்று.

விவசாய வருமான வரிக்கான தொகையை அதிகரிக்கவேண்டுமென்றால் மாட்டேன் என்று சொல்லிவிட்டார்கள். இப்போது மின் கட்டணத்தை அதிகப்படுத்தியிருக்கிறார்கள். ரூ. 100 கட்டி வந்தவன் இப்போது ரூ. 145 கட்டவேண்டியிருக்கிறது. மீட்டர் ரேட் ரூ. 5. ஐந்து ஏக்கர் ஆறு ஏக்கர் வரை வைத்திருக்கக்கூடிய விவசாயிகளுக்கு இந்தக் கட்டணம் அதிகம். ஆகவே, இந்த 4⅓ பைசா உயர்வை சர்க்கார் வாபஸ் வாங்கவேண்டும்.

அடுத்தபடியாக, ஸ்டோர்களை எடுத்துக் கொண்டால் அதை ஜாக்கிரதையாக கவனிக்கவேண்டும். பத்து ஆண்டுகளாக ஸோபிஸ்டிகேட்டட் மெட்டீரியல்ஸ் வைக்கப்பட்டிருக்கின்றன. பத்து ஆண்டுகளாக அந்த ஸ்டோர்ஸில் அன்-யூட்டிலைஸ்ட் சாமான்கள் எவ்வளவு இருக்கின்றன என்று பார்க்கவேண்டும். தயவுசெய்து ஒரு கமிட்டி போட்டு விசாரியுங்கள். பத்து பதினைந்து கோடி ரூபாய் மதிப்பிருக்கும். யார் யார் கமிஷன் வாங்கினார்கள், திருடினார்கள் என்று கண்டுபிடித்து தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

திரு. கோ. செபமாலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம் தமிழ்நாடு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் 1975-76-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை வரவேற்று அரசின் சார்பில் மின்சார வாரியத்தினருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது மின்சார வாரியம் ஏற்பட்டதற்குப் பிறகு பட்டிதொட்டிகளிலெல்லாம் துரிதமான செயல்களை அவர்கள் நடத்தி வருகிறார்கள். குறிப்பாக திட்டங்களை எல்லாம் உடனடியாக நிறைவேற்றுவதற்காக இன்றையதினம் ஒரு ஸ்பெஷல் ஆபீஸரை நியமித்திருப்பதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம் நமது அரசின் பெரிய அதிகாரிகள் பட்டி தொட்டிகளுக்கு எல்லாம் சென்று, ஆங்காங்குள்ள விவசாய மக்களையும், இன்னும் பல தொழிலாளர்களையும் சந்தித்து, அவர்களுடைய குறைகளைக் கேட்டு, அவர்களுக்கு வேண்டிய நல்ல காரியங்களைச் செய்து வருகிறார்கள். அவர்கள் மக்களைச் சந்திக்கிற நேரத்தில் ஒரு அவையைக் கூட்டி, அதற்குச் சட்ட மன்ற உறுப்பினர்கள், மற்ற யூனியன் தலைவர்கள் ஆகியோரையும் அழைத்து, அவர்களின் கருத்துக்களையும் கேட்டு அப்படிப்பட்ட நல்ல காரியங்களைச் செய்து கொண்டு இருக்கிறார்கள்.

மின்வாரியத்தின் சூப்பிரன்டென்டிங் இன்ஜீனியர் அவர்கள் விருத்தாசலத்திற்கு வந்து, அங்குள்ள சட்ட மன்ற உறுப்பினர், யூனியன் தலைவர்கள் ஆகியோரை அழைத்து, அவர்களிடத்தில் அந்தப் பகுதியில் உள்ள குறைபாடுகளை அறிந்து, அங்கே என்னென்ன காரியங்கள் செய்யப்படவேண்டும் என்று கேட்டு, அவற்றையெல்லாம் இன்றையதினம் செய்து கொண்டு இருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட காரியங்களை பட்டிதொட்டிகளில் மாத்திரம் செய்யாமல், சிறிய கிராமங்களில், 10-20 வீடுகள் உள்ள கிராமங்களில் கூட செய்து வருகிறார்கள். அவர்கள் கூட இந்த மின்சார வாரியத்தினால் பயன் பெற்று வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, என்னுடைய தொகுதியில், விருத்தாசலத்திற்கு அருகே, பெண்ணாடத்தில் ஒரு சப்-ஸ்டேஷன் ஏற்படுத்தியிருக்கிறார்கள். வேப்பூரில் ஒரு துணை நிலையம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் அது நான்கு ஆண்டுகள் ஆகியும் இன்னும் வேலை செய்யாமல் இருக்கிறது. அதை உடனடியாக இயங்கச் செய்ய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்தப் பகுதி மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதி. தீவிர வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் அந்தப் பகுதியில் 'ஸ்பெஷல் ஸ்கீம்ஸ்' என்ற அடிப்படையில், ஊர்களுக்கு ரோடு வசதி, மற்ற வசதிகள் செய்து இருக்கிறார்கள். ஆகவே, இந்த மின்சார துணை நிலையத்தையும் அங்கே துரிதமாக செயல்படுத்தினால் அந்த கிராமத்திலுள்ள மக்கள் பம்ப்செட் போட்டு நல்ல முறையில் விவசாயம் செய்து பயன் பெறமுடியும் என்று



இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதைச் செய்து கொடுக்க இந்த அரசு முன் வரவேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

பெண்ணாடத்திலுள்ள சப்-ஸ்டேஷன் அமைப்பதற்காக, நம்முடைய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் விருத்தாசலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செல்வராஜ் அவர்களின் முயற்சியால்—கோவில் நிலத்தைக் கொடுத்து இருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு நான் என் நன்றியறிதலை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய மின்சார வாரியத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு—டெம்பரரியாக வேலை செய்யும் தொழிலாளர்களும், கூலி வேலை செய்யும் தொழிலாளர்களும் தற்போது விலைவாசி உயர்வால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்—கொஞ்சம் கூலியை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சாரத் துறை நல்ல முறையில் பணியாற்றி வருகிறது. மின்சாரக்கோடு புலியுடன்கூட விளையாடலாம், ஆனால் மின்சாரக்கோடு விளையாடுவது மிகவும் ஆபத்து. தொட்டால் மனிதனின் உயிரை வாங்கிவிடுகிறது. ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில் பணி புரியும் மின்சார வாரியத் தொழிலாளர்களுக்கு, மின் வாரியப் பொறியாளர்களுக்கு, மற்ற மற்ற அதிகாரிகளுக்கு நம்முடைய அரசு அவர்களை ஊக்குவிக்கிற முறையில் பல காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டு, இப்படி நல்ல பல காரியங்களைச் செய்து வரும் மின்சார வாரியம்போல், மேலும் பல வாரியங்களை தமிழ்நாடு அரசு ஏற்படுத்தி, மக்களுக்கு நல்ல முறையில் பணி புரிய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* THIRU K. M. SUBRAMANIAM: Sir, after going through the budget and the speech of the Hon. Minister, I find that the tendency to mismanage things is persisting in spite of the warnings issued previously by various committees. I find there is huge deficit. In utility concerns, at times we do have deficits. I am not one who feels that the Electricity Board should be self-supporting. But that does not mean that it should be mismanaged.

In Tamil Nadu there is a peculiarity. It is not like other States. I shall explain. In other places we have irrigation cultivation, rainfall cultivation, surface water cultivating, etc. Here in Tamil Nadu the position is different. Besides all these, we have ground water cultivation. Government provides assistance for drawing water from ground, for installation of pumpsets, etc. That is capital work. So, when it is said that the rate of electricity charges for pumpsets should be increased, it is absolutely wrong. We are energising thousands of pumpsets. That is capital work. In other States it is not so. They have perennial irrigation systems. So, increase in charge for electricity to pumpsets is wrong.

I find that we are going in for 29 MW. 30 and 40 MW hydro electric schemes, in various places. It is welcome. I hope Government will expedite all the 5 schemes in Tambaraparani basin. Electricity is important and we are now going for thermal production also. We have the Tuticorin project. We cannot blame the Central Government for everything.

Now the harbour is there and we have the road construction completed and we can bring in coal. after the ships unload it there. Previously, there was no such facility. We must realise that power is the most important thing in the world. Without that, nothing can survive. We cannot depend too much on atomic power. I remember to have read in newspapers, that Kalpakkam work may be stopped because of Canadian non-co-operation. I am subject to correction, if I am wrong. We must have more power, definitely.

So, I hope and trust that the State Government will definitely give more importance to electricity than what they have been doing hitherto.

Then, coming to the point raised by the hon. Member, Dr. Hande, we are producing lesser number of units of electricity than we require. Unless we generate more, we cannot distribute it. Unfortunately for political purposes, we are saying that we are taking electricity to villages. We are only taking cables to villages. Everywhere we see only cables. In my street there are 10 lights but only two lights are burning for the last three months. So, I hope and trust that both the Governments will devote more attention to the generation of more power.



In Kerala there is an irrigation system. In Andhra Pradesh there is also an irrigation system. So also in Bihar and U.P. they have got big rivers. But in Tamil Nadu there is only one river, the Cauveri and also a small river, Thambaraparani. How much electricity we can produce out of it? The most essential thing is to produce food and for producing food we want water. For producing electricity we also want water. I think the loss incurred for supplying electricity at a lower rate to the agriculturists should not be considered as a loss because unless they produce rice, we cannot live.

So far Engineers and others are concerned, decentralisation is a very necessary thing in an establishment whose expenses run into several crores of rupees. You cannot have one Engineer to control the whole thing. Decentralisation is necessary for efficient administration. I think you are fairly going on right lines and some drawbacks always exist in an administration. For instance, in Ennore still a plant to produce 5,000 units is not working. When we inspected it last year, it was not ready. I hope it would be ready before the next elections.

Then, Sir, we got Independence in 1947, but still the accounts of the Board have not been settled as between the Governments of Tamil Nadu, Karnataka, Andhra Pradesh and Kerala. Are there no Accountants-General to finalise it and settle it? If in a particular year the amount involved is Rs. 55 lakhs, in the next year it increases to Rs. 75 lakhs and I do not know the exact figures. This only shows that the accounts are not properly maintained. Fortunately, so far as the consumers' electricity Bills are concerned, five months' arrears of last year have been cleared and now it is fairly up-to-date. Now we are getting bills every month..........

(மணியடிக்கப்பட்டது)

தலைவர் அவர்கள் பெர்மிஷன் கொடுத்தால் நாளைக்கு கன்டினியூ பண்ணுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேசி முடித்துவிடுங்கள். நீங்கள் பேசி முடித்ததும் திரு. சீனுவாசனை பேச அழைக்கலாம் என்று நினைத்தேன்.

THIRU K. M. SUBRAMANIAM : Now, Sir, the cost of electricity is high but still we give MALCO a concessional rate of 2

paise and for chemical industries two or three paise and they say that it would be uneconomical if they do not get such a rate. The market price of aluminium is Rs. 15,000 per tonne. The rate fixed by them is Rs. 5,000 per tonne. So also chemical industries are making a huge profit.

Then, I am told that some management expert is coming here to rationalise the administration. I want to know whether he would examine the question of reducing the cost of production. We want that the electricity should be supplied to the people at a minimum cost. With these words, I conclude my speech.

***மாண்புமிகு பேரவைத் தலைவர்*** *: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று நாளைக் காலை 9 மணியளவில் பேரவை மீண்டும் கூடும்.*

*பின்னர் பேரவை பிற்பகல் 1.29 மணியளவில் ஒத்திவைக்கப் பட்டது.*

## (6) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

221. Notification issued in G.O. Ms. No. 1510, Rural Development and Local Administration, dated the 3rd September 1975 in regard to certain amendments to the Tamil Nadu Municipal Services Pension Rules, 1970. [Laid on the table of the House under section 304 *(d)* of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

222. Notification issued in G.O. Ms. No. 302, Co-operation, dated the 7th July 1975, in regard to certain amendments to the Tamil Nadu Co-operative Societies Rules, 1963. [Laid on the table of the House under section 119 (4) of the Tamil Nadu Co-operative Societies Act, 1961 (Tamil Nadu Act 53 of 1961)].

### B. *Reports, Notifications and Other Papers.*

132. The Eighth Report (Fifth Assembly) of the Committee on Delegated Legislation.

133. Speech of Hon. Thiru S. J. Sadiq Pasha, Minister for Industries and Electricity, initiating the discussions on the Annual Financial Statement for 1975–76 and the Supplementary Financial Statement for 1974–75 of the Tamil Nadu Electricity Board.



## இணைப்பு-1

[75-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1975-76 ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை குறித்தும், 1974-75 ம் ஆண்டு துணை நிதி நிலை அறிக்கை குறித்தும் மாண்புமிகு தொழில்-மின்சாரத்துறை அமைச்சர் அவர்களின் உரை.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1975—76-ம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையும் 1974–75-ம் ஆண்டு துணை நிதி நிலை அறிக்கையும் இம்மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளன. இவற்றை இம் மன்றம் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

2. 1948-ம் ஆண்டு மின்சார (வழங்கல்) சட்டத்தின் 61–வது பிரிவின்படி, தமிழ்நாடு மின்சாரவாரியம், இந்த நிதி நிலை அறிக்கைகளை தமிழ்நாடு மின்சாரவாரியக் கருத்துரைக் குழுவின் ஒப்புதலைப் பெற்ற பின், அரசுக்கு அனுப்பியது. இந்த நிதிநிலை அறிக்கையும் துணை நிதிநிலை அறிக்கையும் சட்டமன்றத்திலுல் விவாதிக்கப்படலாம் என்றாலும், இவை வாக்கெடுப்புக்கு உட்பட்டவையல்ல. எனினும், இவ்வறிக்கைகள் குறித்து சட்டமன்றத்தில் கூறப்படும் கருத்துக்களை மின்சார வாரியம் கருத்தில் கொண்டு ஆழ்ந்து சிந்தித்து ஆவன செய்யும். சென்ற ஆண்டு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கைகளின் பேரில் நடைபெற்ற விவாதத்தில் கூறப்பட்டுள்ள கருத்துக்களின் பேரில், மின்சார வாரியம் எடுத்துள்ள நடவடிக்கைகளை விவரிக்கும் அறிக்கை ஒன்று, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தனியாக வழங்கப்பட்டுள்ளது.

3. நம் மாநிலத்தில் உள்ள பொதுத்துறை நிறுவனங்களில், சுமார் ஒரு இலட்சம் பேர் பணியாற்றுகின்ற மிகப்பெரிய நிறுவனம் மின்சார வாரியம். மின்வளர்ச்சியில், பல்லாண்டுகளாகவே ஒரு முன்னோடி நிறுவனமாக தமிழக மின்வாரியம் திகழ்ந்து வருகிறது. ஆகவே, நமது மாநிலத்தின் வளர்ச்சி, மின்சார வாரியத்தின் வளர்ச்சியோடும் பணிகளோடும் பின்னிப் பிணைந்துள்ளது.

4. நம் மாநிலத்தில் உற்பத்தியைவிட மின்சாரத் தேவை எப்பொழுதுமே அதிகமாகவே இருந்து வந்துள்ளது. தொழில் வளர்ச்சியிலும் வேளாண்மை விசையேற்றங்களுக்கு மின் தொடர்பு அளிக்கப்பட்டதிலும் மாநிலத்தின் மின் தேவை அதிக அளவில் வளர்ந்துள்ளது. இன்று தமிழகத்தில் மின்சார உற்பத்திக்கான நிறுவனத்திறன் 2,254 மெகாவாட்டுகளாகும். அனைத்து இந்தியாவின் மொத்த நிறுவனத்திறனில், இது 12 சதவிகிதமாகும். அதேபோல், மாநிலத்தின் மின் உற்பத்தி அளவு நாட்டின் மின் உற்பத்தி அளவில் 10 சதவிகிதமாகும். உணவு உற்பத்திக்கு தொடர்ந்து முதல் முன்னுரிமையை அரசு அளித்து வருகிறது. தமிழ்நாட்டில் வேளாண்மைத் துறையில் பயன்படுத்தப்

படும் மின்சாரம் மொத்தம் பயன்படுத்தப்படும் மின்சாரத்தில் 25 சதவிகிதத்திற்கு மேற்பட்டதாகும். அனைத்து இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் வேளாண்மைத் துறையில் பயன்படுத்தப்படும் மின்சாரத்தின்அளவு அதிகமானதாகும்.

1971—72-ம் ஆண்டு வரை மின் தேவை உயர்வு ஆண்டுக்கு 10 சதவிகித அளவுக்கு இருந்து வந்துள்ளது. ஆனால் மின் பற்றாக் குறையினால் தேவையை முழு அளவுக்குச் சமாளிக்க முடியாமல் போகவே, கடந்த மூன்று ஆண்டுகளில் இத்தேவையானது குறைந்து போய்விட்டது.

5. கடந்த ஆண்டுகளில் மின் வளர்ச்சி நமது மாநிலத்தில் சீராகவே இருந்து வந்துள்ளது. கடந்த பத்தாண்டுக் காலத்தில் ஏற்பட்டுள்ள மின்வளர்ச்சி குறித்த விவரங்கள்* தனியாகக் கொடுக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில், நிறுவனத்திறனளவிலும் உச்சத் தேவையிலும் மின்சக்தி உற்பத்தியிலும் இருமடங்கு உயர்வும், மின் வசதி அளிக்கப்பட்ட கிராமங்களின் எண்ணிக்கையிலும், மின் தொடர்பு அளிக்கப்பட்ட விசையேற்றங்களின் எண்ணிக்கையிலும் மூன்று மடங்கு உயர்வும் ஏற்பட்டுள்ளது.

6. மின்சாரத்தைப் பயன்படுத்தும் முறை துறைவாரியாக கீழ்க் கண்டவாறு அமைந்துள்ளது :—

| | | | | |
|---|---|---|---|---|
| (1) | வீட்டுப் பயன்களுக்கு | .. | 5.9 | சதவிகிதம் |
| (2) | வணிகப் பயன்களுக்கு | .. | 6·4 | சதவிகிதம் |
| (3) | பொது விளக்குகளுக்கு | .. | 1·2 | சதவிகிதம் |
| (4) | தொழில்களுக்கு | .. .. | 42·6 | சதவிகிதம் |
| (5) | வேளாண்மைக்கு | .. .. | 29·1 | சதவிகிதம் |
| (6) | மற்றவை (இழுவை, உரிமதாரர்களுக்கு மொத்தமாக வழங்கல், அரசுத் துறைப் பணிகள், திட்டப் பணிகள், மற்ற மாநிலங்களுக்கு விற்பனை போன்றவை). | .. .. | 14·8 | சதவிகிதம் |
| | மொத்தம் | .. | 100 | சதவிகிதம் |

7. நடப்பாண்டில், எண்ணூர் அனல் மின் நிலையத்தில் 110 மெகாவாட் பிரிவு ஒன்று செயல்படத் தொடங்கும். இதுசார்ந்த பணிகளை விரைவுபடுத்தி, முன்கூட்டியே முடிக்க, தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்துடன் 69 மில்லியன் யூனிட்டுகள் திறன்கொண்ட நடுவட்டம் திருப்புத் திட்டப் பணிகளும், 40 மில்லியன் யூனிட்டுகள் திறனைக் கொண்ட குட்டியாறு குழாய்த் திட்டப்பணிகளும் 1975-76-ல் முடிவடைந்து விடும்.



8. தமிழ்நாடு மின் இணைப்பு மிகப் பெரிய அளவினதாகவும் தனித்தன்மை வாய்ந்ததாகவும் அமைந்துள்ளது. 1,224 மெகாவாட்டுகள் மொத்த நிறுவனத் திறன் கொண்ட 17 நீர் மின் நிலையங்களில், 633 மெகாவாட்டுகள் திறன் கொண்ட 9 நிலையங்கள் பாசனத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. ஒன்றன்பின் ஒன்றாக, இந்த மின் நிலையங்கள் பாசனக்காலம் முடிந்து மூடப்பட்டு விடுவதால், டிசம்பர் திங்களுக்குப் பின்னால் மின் உற்பத்திக்குப் பயன்படுவதில்லை. ஆனால், முக்கியமாக, வேளாண்மைக்கான பளு சுமை அதிகரிப்பின் காரணமாக, மின் இணைப்பின் உச்சத் தேவையானது, கோடைக் காலத்தில் தொடர்ந்து அதிகமாகிக் கொண்டே போகிறது. இதன் விளைவாக, சிக்கலானதொரு தொழில் நுட்பப் பிரச்சனையை மின்வாரியம் எப்பொழுதும் சமாளிக்க வேண்டி வருகிறது. குறிப்பாக, பாசனமில்லாத காலங்களில், அதாவது பிப்ரவரித் திங்களிலிருந்து சூன் திங்கள் வரையில்மின் நிலைமையைச் சமாளிக்க மின்சார வாரியம் பெரும் முயற்சி மேற்கொள்ள வேண்டியுள்ளது.

கடந்த ஆண்டு மின்சார நிலைமை திருப்திகரமாக இல்லை. அவ்வாண்டில் 40 சதவிகிதத்திலிருந்து 75 சதவிகிதம் வரையில் மின் வெட்டு விதிக்கவேண்டி வந்தது. நெய்வேலியில் மின் உற்பத்தி வெகுவாகக்குறைந்து விட்டதினாலும், எண்ணூரில் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டு விட்டபடியாலும், மின் இணைப்பிலிருந்து மின்சாரத்தைப்பெறவேண்டாமென்றும், ஏப்ரல் 75-ல் ஒரு சில வாரங்களுக்கு மின்இணைப்பைப் பயன்படுத்தாமல், அந்தக் காலத்தில் இயந்திரங்களை ஒழுங்குபடுத்தி, சீரானமுறையில் பராமரிப்பு செய்து கொள்ளும்படியும் தொடர்ந்து இயக்கத்தை இல்லாத தொழிற்சாலைகள் கேட்டுக்கொள்ளப்பட்டன. நெய்வேலியிலும் எண்ணூரிலும் நிலைமை சீரடையவே, சிறிய தொழில்களுக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் படிப்படியாக எடுக்கப்பட்டன 1975 சூன் மூன்றாம் வாரத்தில், தென்மேற்கு பருவ மழை தொடங்கி விடவே, 25—6—1975-லிருந்து மின்வெட்டை அறவே எடுத்துவிட தமிழக அரசு முடிவு எடுத்தது. வேளாண்மைச் சார்ந்த இணைப்புகளுக்கு விதிக்கப்பட்டிருந்த எல்லாக் கட்டுப்பாடுகளும் 15—9—75-லிருந்து நீக்கப்பட்டன. புதிய மின் தொடர்புகள் அனுமதிக்கப்படுகின்றன. 1—12—74-க்கு முன் தொடர்பு செய்யப்பட்ட இணைப்புகளுக்குப் பகல் நேர மின்வழங்கலும் அனுமதிக்கப்படுகிறது.

அனல் மின் நிலையங்கள், நீர் மின் நிலையங்கள் ஆகியவற்றின் மின் உற்பத்தி நிலைமை மிகுந்த விழிப்புடன் கவனிக்கப்பட்டு வருகிறது. எந்தவிதச் சேதமும் ஏற்படாமலும் இயன்ற அளவுக்கு அண்டை மாநிலங்களுடன் உபரியாக உள்ள மின்சாரத்தைச் சேமித்து வைத்தும், நிலைமை சீரான முறையில் இருக்கும்படி பார்த்துக் கொள்ளப்பட்டு வருகிறது.

9. தென்மேற்கு பருவமழை சாதகமாகவும், நீர்சேமிப்பு அளவு கணிசமாகவும் நன்றாகவும் உள்ளது. 1975-ம் ஆண்டு

அக்டோபர் 20-ம் நாளில் மின்சார உற்பத்திக்கு உபயோகமாகும் நீரின் அளவு 2,061 மில்லியன் யூனிட்டுகள். 1974, 1973-ம் ஆண்டுகளில் இதே தேதியில் நீரின் அளவு முறையே 1,751 மில்லியன் யூனிட்டுகளாகவும், 1,594 மில்லியன் யூனிட்டுகளாகவும் இருந்தது.

இவ்வாண்டில் மின்சார நிலைமையை நல்ல முறையில் சிரமமின்றிச் சமாளிக்க இப்பொழுதுள்ள திருப்திகரமான நிலை கை கொடுத்து உதவும் என்று நம்புகிறோம்.

10. நமது மாநிலத்தில் மின்சார நெருக்கடி திடீரென்று ஏற்பட்ட ஒன்றல்ல. திட்டமிட்ட இலக்குப்படி, 1973-74-லேயே கல்பாக்கம் அணு மின் திட்டத்தின் 235 மெகாவாட் முதல் பிரிவு செயலில் இறங்கியிருக்க வேண்டும். அதே போல், இப்பொழுது நெய்வேலியில் தோண்டப்படும் நிலக்கரியின் அளவை ஆண்டொன்றுக்கு 3.5 மில்லியன் டன்களிலிருந்து 6·5 மில்லியன் டன்களுக்கு உயர்த்துவதற்கான மேம்பாட்டுப் பணிகள் முன்பேயே முடிந்திருக்க வேண்டியவையாகும். ஆனால், மேற்குறித்த இரு நிலைகளிலும் எதிர்பார்த்தபடி செயல்கள் நடைபெறவில்லை என்பது மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்ததேயாகும். கல்பாக்கம் அணுமின் திட்டத்தின் பிரிவுகள் விரைவில் செயல்படலாம் என்பதற்கான வலுவான அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை நெய்வேலியில் விரிவாக்கப் பணிகள் இப்பொழுதுதான் தொடங்கியுள்ளன.

11. வெளியிலிருந்து கணிசமான அளவுக்கு மின்சாரத்தை வாங்குவதின் மூலம், தமிழ்நாடு மின்சார வாரியம் தன்னுடைய மின் தேவைகளைச் சமாளித்துக் கொண்டு வருகிறது. தன்னுடைய மின்சாரத் தேவையில் 20 சதவிகிதத்திற்குக் குறையாமல், வெளியிலிருந்தே தமிழ்நாடு பெற்றாக வேண்டியுள்ளது. தமிழ் நாட்டின் மின்சாரத் தேவைகள் குறித்துத் திட்டங்கள் தீட்டப்படும் பொழுது, இந்த முக்கியமான அம்சத்தை நாம் கருத்தில் கொள்ளவேண்டும். இந்தவகையில், எதிர் காலத்தைப் பற்றிக் கணிக்கும்பொழுது, மின்துறையில் எதையும் உறுதியாக நாம் முடிவுகட்டி சொல்லி விடுவதற்கில்லை.

12. வாரியத்தின் நிதி நிலைமை தொடர்ந்து நெருக்கடியான நிலையிலேயே உள்ளது. கடந்த சில ஆண்டுகளாக, தேய்மானச் செலவுகள் வட்டி கட்டுதல் ஆகியவற்றிற்கு மின்வாரியம் நிதி ஒதுக்கீடு செய்ய முடியவில்லை. தன்னுடைய செலவினங்களை முழுமையான அளவுக்கு மின்சார வாரியத்தினால் சமாளிக்க முடிவதில்லை. ஆக நிதிநிலையைப் பொறுத்தவரையில், திருப்திகரமில்லாத நிலையே உள்ளது.

13. மாநில மின்சார வாரியத்தின் ஐந்தொகைக் கணக்குகள் சாதகமில்லாத நிதி நிலையைக் காட்டுகின்றன. எரிபொருள் உட்பட எல்லாப் பொருள்களின் அதிக விலையேற்றம், ஊழியர்களுக்கு அளிக்கப்படும் ஊதியத் தொகை அதிகமாகிக் கொண்டே போவது, சில நேர்வுகளில் மின்கட்டண விகிதங்கள் போதுமான அளவுக்கு இல்லாமை; திறனை முழுமையாகப் பயன் படுத்தாமல் குறைத்து பயன்படுத்துகின்ற தன்மை—ஆகியவையே இந்த நிதிநிலைக்கு முக்கியக் காரணங்களாகும்.



மின்கட்டண விகிதங்களைத் திருத்தி அமைத்தல், இயக்குதல், பராமரிப்புச் செலவுகளில் வீண்சேதம் இல்லாமல் சிக்கனத்தைக் கடைப்பிடித்தல், மின் உற்பத்தியை இயன்ற அளவுக்கு அதிகப்படுத்தாடு மின் நிலையங்களின் இயக்கத் திறனில் ஒட்டு மொத்தமாக மேம்பாடுகாணல், கம்பி இழப்புகளைக் குறைத்தல், தரமான நிர்வாகம் வேலைச்சுமைகளை விஞ்ஞான ரீதியாகத் திருத்திஅமைத்தல் ஆகிய இந்த நடைமுறைகளைக் கடைப்பிடிப்பதின் மூலம், இந்த நிலையைப்போக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

14. அண்டை மாநிலங்களிலிருந்தும், நெய்வேலி நிலக்கரிக் கழகத்திடமிருந்தும். வாங்கப்படும் மின்சாரத்தின் விலையானது கடந்த ஐந்தாண்டுகளாக உயர்ந்துகொண்டே வந்துள்ளது. 1-4-1975 லிருந்து கேரளத்திலிருந்து வாங்கும் மின்சாரத்தின் விலை யூனிட் ஒன்றுக்கு 8 காசுகளிலிருந்து 9.5 காசுகளாகவும் நெய்வேலி நிலக்கரிக் கழகத்திலிருந்து வாங்கும் மின்சாரத்தின் விலை 8.48 காசுகளிலிருந்து 9.36 காசுகளாகவும் உயர்ந்து விட்டது. நெய்வேலி நிலக்கரிக் கழகத்தின் பணியாளர்களுக்கு கொடுக்கப்படும் ஊதிய உயர்வின் விளைவாக ஏற்படும் கூடுதல் செலவை ஏற்றுக்கொள்ள தமிழ்நாடு மின்சார வாரியம் ஒத்துக்கொண்டுள்ளது. அத்துடன், நிலக்கரிக்கான விலையும் கடல் மூலமாக நிலக்கரி கொண்டு வருவதற்கான செலவும் மிகவும் அதிகமாகி விட்டன. கடந்த ஓர் ஆண்டில் ரெயில் மூலமாக வரும் நிலக்கரியின் விலை 1 டன்னுக்கு ரூ. 102ஆக இருந்தது, ரூ. 132 ஆக உயர்ந்துவிட்டது. அதேபோல் அந்தக்கால வரையறையில், கடல் மூலமாகக் கொண்டு வரப்படும் நிலக்கரியின் விலையும் ஒரு டன்னுக்கு ரூ. 186 லிருந்து 263 ரூபாய்க்கு உயர்ந்துவிட்டது.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிலக்கரித் தேவை இவ்வாண்டுக்கு 1.44 மில்லியன் டன்களாகும். அடுத்த ஆண்டிலிருந்து, 1978-79-ல் தூத்துக்குடி அனல் மின்நிலையம் முதல் பிரிவு செயல்படும்வரை, இந்தத் தேவை 1.58 மில்லியன் டன்களாக உயர்ந்து இருக்கும். அத்துடன், நெய்வேலியில் எண்ணெயினால் எரிய விடும் மாற்றத்தினால் மின்சாரத்தின் விலையும் ஏறிவிட்டது. எண்ணெயினால் எரியவிட்டு ஆகும் மின்சாரத்தின் விலை யூனிட் ஒன்றுக்கு 30 காசுகள் என்றாகிறது.

15. 1975-76-ம் ஆண்டுக்கு வெளியிலிருந்து வாங்கப்படும் மின்சாரத்துக்காகும் செலவு ரூ. 37.02 கோடி ஆகலாம். கடந்த ஆண்டில் 1974-75-ல் இந்தச் செலவு ரூ. 25.68 கோடிதான். 1974-75-ல் வாங்கப்பட்ட மின்சாரம் 2,208 மில்லியன் யூனிட்டுகள். இந்த ஆண்டிற்கு (1975-76) 2,350 மில்லியன் யூனிட்டுகள் என்றளவுக்கு இருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

16. கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீதான உரையில் கோடிட்டுக் காட்டியவாறு, மின்கட்டண விகிதங்கள் குறித்து பரிசீலனை செய்யப்பட்டு 1974 அக்டோபரில் மின்கட்டண விகிதங்கள் திருத்தியமைக்கப்பட்டன. சனவரி 1975 முதல் கூடுதல் வரியும் 30லிருந்து 50

சதவிகிதத்திற்கு உயர்த்தப் பட்டது. மார்ச் 1975–ல், சிமெண்ட், இரசாயனப் பொருட்கள், அலுமினியத் தொழில் பிரிவுகள் ஆகியவற்றின் மீதான சிறப்புக் கட்டணங்களும் திருத்தப்பட்டன. 1975 ஆகஸ்ட் 30-ம் தேதி முதல், வேளாண்மைக்கான மின்கட்டணம் யூனிட்டுக்கு 16 காசு என்று உயர்த்தப்பட்டுள்ளது. இப்படி யெல்லாம் செய்தும் கூட 1975–76-ல் எதிர்பார்க்கப்படுகிற கூடுதல் வருவாய் கொண்டு, 1975–76-ல் தேய்மானச் செலவுகள் மற்றப்படி வட்டி கட்டுதல் போன்ற செலவினங்களை முழுமையாகச் சமாளிக்க முடியாத நிலையில், நிதிப் பற்றாக்குறை இருக்கும்.

17. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலதனப் பணிகளுக்கான 1975–76ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு ரூ. 39 கோடி. இதில் எப்பொழுதுமுள்ள நிதி வாயில்களான அதாவது வெளிச்சந்தை, ஆயுள் காப்புறுதிக் கழகம், கிராம மின்வசதிக் கழகம் மற்றும் இருப்புகள் போன்றவையிலிருந்து கிடைக்கக் கூடியவை ரூ. 40·62 கோடிதான். வங்கிகள், ஆயுள் காப்புறுதிக் கழகம் வெளிச்சந்தை போன்றவற்றிற்கு திருப்பிக் கொடுக்கப்பட வேண்டிய தொகை ரூ. 14 கோடியையும் சேர்த்து, மொத்தம் தேவைப்படுவது ரூ. 53 கோடியாகும். மூலதனப் பணிகளுக்கான ஆதாரங்களில் உள்ள 12.38 கோடி ரூபாய் இடைவெளியை நிரப்ப எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

18. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் திட்டத்தின் கீழ் வரும் மின் திட்டங்களுக்காக ஆன செலவு ரூ. 216 கோடி. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடு ரூ. 326 கோடி தான். ஆகவே, மின் திட்டங்களைக் குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவேற்றி முடிக்க வேண்டுமெனில், 5-வது திட்டக் காலத்தில் மின்சாரத்துக்கு ஆண்டொன்றுக்கு ரூ, 70-லிருந்து 80 கோடி என்றளவுக்குக் குறையாமல் அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீட்டுத் தொகை இருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். ஐந்தாவது திட்டத்தின் முதல் இரண்டு ஆண்டுகளுக்கு மத்திய நிதிக் குழுவினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு நம்முடைய தேவையில் 50 சதவிகித அளவுக்குக்கூட இல்லை.

19. ஐந்தாவது திட்டத்தில் மிக அதிக அளவில் மின் உற்பத்தியை உள்ளடக்கியுள்ள திட்டமான தூத்துக்குடி அனல் மின் திட்டம் குறித்த பேச்சு வார்த்தைகள் புதுடெல்லியில் 1975 ஆகஸ்ட் திங்களில் நடைபெற்றன. 1975–76-ம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடான ரூ.10 கோடிக்குப் பதிலாக ரூ. 19 கோடி கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என மத்திய அரசுக்கு வலியுறுத்திக் கூறப்பட்டது. சில நிபந்தனைகளுக்குட்பட்டு, ரூ. 1 கோடி கூடுதல் ஒதுக்கீடு நிதியாக அளிக்க ஒப்புக்கொள்ளப்பட்டது. நம்முடைய மொத்தத் தேவையின் அளவோடு ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது இந்தத் தொகை எந்த வகையிலும் போதுமானது என்று சொல்ல முடியாது.

போதிய அளவிலும், தேவைப்படும் காலத்திலும் நிதி உதவி அளிப்பதன் மூலமும், மாநிலத்தின் முயற்சிகளுக்கு உதவியாக இருக்கும்



வகையில் மத்திய அரசே தனியாக மின்திட்டங்களை ஏற்படுத்திச் செயல்படுத்துவதின் மூலமும், மத்திய அரசானது மாநில மின்சார வாரியத்துக்கு வெகுவாகக் கைகொடுத்து உதவ வேண்டும்.

20. 1975-ம் ஆண்டு ஜூன் திங்களில் சென்னையில் மத்திய திட்டக் குழுவின் துணைத் தலைவர் திரு. பி. என். ஹக்சர் அவர்களுடன் நடத்தப்பெற்ற பேச்சு வார்த்தைகளின் பொழுது கீழ்க்கண்டவை குறித்து மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் வெகுவாக வலியுறுத்தப்பட்டது.

(1) தமிழ்நாட்டில் பொதுவாக மின்திட்டங்களுக்கும், சிறப்பாக தூத்துக்குடி அனல் மின்திட்டத்திற்கும் போதிய நிதிவசதி.

(2) 50 மெகாவாட் கொண்ட மேலும் இரண்டு யூனிட்டுகள் நெய்வேலியில் எண்ணெயினால் எரிய விடுவதற்கு மாற்றுதல்.

(3) மாநிலத்தில் 50 மெகாவாட் கேஸ் டர்பைன்கள் ஆறு நிறுவுதல்.

(4) நெய்வேலியில் முதல் சுரங்க மேம்பாட்டுப் பணிகளைத் துரிதப்படுத்துதல்.

(5) நெய்வேலியில் 1,000 மெகாவாட் அனல் மின்நிலையத்துடன் கூடிய இரண்டாவது சுரங்கம் வெட்ட அனுமதி, திருநெல்வேலி மாவட்டத்தில் நாங்குநேரி வட்டத்தில் கூடன்குளத்தில் 1,000 மெகாவாட் திறனுடன் கூடிய இரண்டாவது அனுமின் நிலையம் அமைத்தல்.

(6) மாநில அரசினால் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ள எல்லா நீர் மின்திட்டங்களுக்கும் அனுமதி.

21. சென்ற ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற விவாதத்தின்பொழுது, தமிழ்நாட்டில் மின்கழகம் ஒன்றினை அரசு அமைக்க உள்ளது எனச் சொல்லப்பட்டது. நெருக்கடியான நிதிநிலைமையின் காரணமாக, இந்த மின் கழகம் அமைப்பது தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

22. 1975–76-ம் ஆண்டுக்கான முக்கிய வேலைத்திட்டங்கள் குறித்து சுருக்கமாகக் கூற விழைகிறேன்.

### மின் உற்பத்தித் திட்டங்கள்.

1. தொடர்ந்து உருவாகி வரும் திட்டங்கள் :

(அ) எண்ணூரில் 5-வது பிரிவு (மூன்றாவது 110 மெகாவாட் பிரிவு) வேலைகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. விரைவில் இந்தப் பிரிவு செயல்படத்துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஆ) குந்தா நீர்மின்திட்டத்தின் கீழ், நான்காவது நிலைப் பணிகளுக்கு கனடா நாடு மின் உற்பத்திக் கருவிகளை வழங்குகிறது. மின் உற்பத்திக் கருவியின் பாகங்கள் வந்து கொண்டிருக்கின்றன. மின் நிலையம் கட்டி முடிக்கும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள 110 மெகாவாட் மொத்தத் திறனுடன் கூடிய இரண்டு பிரிவுகள் 1977–78-ம் ஆண்டில் செயல்படத் திட்டமிடப்பட்டுள்ளது.

(இ) பைக்காரா, மோயாறு மின்நிலையங்களில் ஆண்டுக்கு 69 மில்லியன் யூனிட்டுகள் கூடுதல் மின்சாரம் கிடைக்கச் செய்யக்கூடிய நடுவட்டம் நீர்த்திருப்புத் திட்டப் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன.

(ஈ) கோதையாறு நீர்மின்திட்டத்தின் கீழ், குட்டியாறு குழாய் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. கோதையாறு மின் நிலையங்கள் 1, 2-க்கு இதனால் கூடுதலாக 40 மில்லியன் யூனிட்டுகள் மின்சாரம் கிடைக்கும். இவ்வாண்டில் (1975—1976) இந்தத் திட்டம் பணிகளும் முடிவடையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

II. புதிய திட்டங்கள்.

(அ) சுருளியாறு மின்நிலையத்திற்கான இயந்திரக் கருவிகள் ஆஸ்திரியா சப்ளையர்களால் தயாரிக்கப்பட்டு இக்கருவிகள் சனவரி 1977-ல் அனுப்பிவைக்கப்படும். கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அவை முடிக்கப்பட்டு 1977–1978-ல் இயந்திரங்கள் நிறுவப்படும். 35 மெகாவாட் திறன் கொண்ட இந்த மின்திட்டம் 1978–1979-ல் செயல்பட இலக்கு வகுக்கப்பட்டுள்ளது.

(ஆ) தூத்துக்குடி அனல் மின்திட்டத்திற்கான கட்டுமான வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன. டர்போஜெனரேட்டர், பவர் டிரான்ஸ்பார்மர், கொதிகலன், மற்றச் சார்புக்கருவிகள் வழங்க பாரத் ஹெவி எலக்டிரிகல்ஸ் நிறுவனத்துடன் ஆர்டர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. 210 மெகாவாட் திறனுடன் கூடிய ஒரு மின் உற்பத்திப்பிரிவு 1978–1979-ம் ஆண்டில் செயல்படத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(இ) காடம்பாறை குழாய் நீரேற்றுத் திட்டத்தின்கீழ் ஒவ்வொன்றும் 100 மெகாவாட்டுகள் திறனுடன் கூடிய நான்கு பிரிவுகள் அமையும். இருந்தாலும், ஆரம்ப கட்ட வேலையாக இரண்டு பிரிவுகளை மட்டும் கட்டி முடிக்க இப்பொழுது முடிவு செய்துள்ளோம். இயந்திரப் பிரிவு ஒன்று இங்கிலாந்து நாட்டிலிருந்து பாரத் ஹெவி எலக்டிரிகல்ஸ் நிறுவனத்தினால் இறக்குமதி செய்யப்பட்டு நமக்கு வழங்கப்படும். மற்றொரு பிரிவு அவர்களாலேயே இங்கேயே தயாரிக்கப்படும்.

(ஈ) பாண்டியாறு—புன்னப்புழா நீர் மின்திட்டத்தைப் பொறுத்த வரையில், அசல் திட்டத்தின்படியே செயல்படுவது என முடிவு செய்யப்பட்டுள்ளது. நிதி ஆதாரங்களைப் பொருத்து மீண்டும் பணிகள் தொடங்கப் பெறும்.

(உ) சேர்வலாறு நீர் மின்திட்டத்தின் கீழ், அணைக்கட்டு அடித் தளம் தோண்டுதல். ஒன்றோடொன்று தொடர்புபடுத்தும் சுரங்க வாய்க்கால் போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன. போதிய நிதி வசதியின்மையால் ஆறுவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இத்திட்டம் செயல்படத் தொடங்கலாம் என எதிர் பார்க்கப்படுகிறது.



(ஊ) நெல்லித்துறை நீர்மின்திட்டத்திற்கான தொடக்கக் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த மின்திட்டமும் ஆறுவது திட்டக்காலத்தில் செயல்படத் தொடங்கலாம் என எதிர் பார்க்கப்படுகிறது.

23. மத்திய அரசின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ள மின் திட்டங்கள் :

| | வரிசை எண்ணும் மின் திட்டத்தின் பெயரும். | மாவட்டம். | நிறுவனத் திறன் (மெகாவாட்) | கிடைக்கக்கூடிய மின்சாரம் (மில்லியன் யூனிட்டுகள்). | மதிப்பீட்டுச் செலவு (ரூ. இலட்சத்தில்). |
|---|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | அக்காமலை நீர்மின் திட்டம். | கோயமுத்தூர் | 25 | 91 | 898 |
| 2 | சோழாத்திப்புழா நீர் மின்திட்டம். | நீலகிரி | 60 | 225 | 739 |
| 3 | கீழ்மேட்டூர் நீர் மின்திட்டம். | சேலம் | 160 | 643 | 3,414 |
| 4 | மணிமுத்தாறு நீர் மின்திட்டம். | திருநெல்வேலி | 65 | 277 | 1,884 |
| 5 | பரலையாறு நீர் மின் திட்டம். | கன்னியாகுமரி | 35 | 100 | 563 |
| 6 | சண்முகாநதி நீர் மின்திட்டம். | மதுரை | 30 | 125 | 1,250 |
| 7 | மேல் அமராவதி நீர் மின்திட்டம். | மதுரை | 20 | 69 | 728 |
| 8 | மேல் தாம்பரபரணி நீர் மின்திட்டம். | திருநெல்வேலி | 165 | 557 | 4,965 |
| | துணை மொத்தம் .. | | 560 | 2,087 | 14,441 |
| 9 | மேட்டூர் அனல் மின் திட்டம். | சேலம் | 330 | 2,024 | 6,553 |
| | மொத்தம் .. | | 890 | 4,111 | 20,994 |

24. எண்ணூரில் மின் உற்பத்தி சீர்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகிறது என்பதை மனமகிழ்வுடன் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்ளுகிறேன். கடந்த ஆண்டு செய்யப்பட்ட மின் உற்பத்திக்கு மேல் 17 சதவிகிதம் அதிகமாக 1974–75-ல் எண்ணூரில் மின் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 1975—76-ல் மேலும் அதிகமாக உற்பத்தி செய்யமுடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

25. எண்ணூரில் உள்ள பிரச்சினைகள் தீர்க்கமாகப் பரிசீலிக்கப்பட்டு அப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண "340 மெகாவாட் உற்பத்தி காணும் சிறப்பு விரைவு வேலைத் திட்டம்" ஒன்று துவங்கப்பட்டுள்ளது. மாற்றங்கள் செய்யப்பட்டு பிறகு கருவிகளைத் திருப்திகரமாக இயங்க வைக்கும் பணிகளில் நெருங்கி ஒத்துழைக்கவேண்டுமென பாரத் ஹெவி எலக்ட்டிரிக்கல்ஸ் நிறுவனத்தைக் கேட்டுக்கொண்டுள்ளோம். வடிவமைப்பில் மாற்றங்கள் அவர்களாலேயே செய்யப்பட்டு வருகின்றன. மின் நிலைய முதல் இரண்டு பிரிவுகளின் சிறப்புப் பராமரிப்புப் பணிகளும் ஒட்டு மொத்தமாகப் பழுதுபார்த்தல் பணிகளும் முடிக்கப்பட்டு விட்டன. மூன்றுவது பிரிவுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அப்பணி முடிந்ததும் 4–வது பிரிவுப் பணிகள் எடுத்துக்கொள்ளப்படும். எல்லாப் பிரிவுகளையும் திருத்தி அமைத்து முழுமையாகப் பழுது பார்த்துச் சரி செய்யும் பணி 1975 டிசம்பர் திங்களிலிருந்து 1976 சனவரி திங்களுக்குள் முடிக்கப்பட்டுவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த கோடைப் பருவத்தில் இந்நிலையத்திலிருந்து முழு அளவுக்கு மின்சார உற்பத்தியைக் காண்பதற்காக வேண்டி, இந்தப் பணி மேற்கொள்ளப்படுகிறது.

26. எண்ணூர் சம்பந்தப்பட்ட வரையில் மகாலிங்கம் குழுவின் பரிந்துரைகளில் பெரும்பாலானவை செயல்படுத்தப்பட்டு விட்டன. அக்குழுவின் மற்ற பரிந்துரைகளோடு, அனல் மின் நிலையத்தை இயக்குவது குறித்த பரிந்துரைகள் தொடர்பாக எண்ணூரில் நிலைய இயக்கம் சம்பந்தமான பிரச்சினைகளை ஆய்வு செய்யும் பணி டாட்டா கன்ஸல்டிங் இன்சினியர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர்கள் தங்கள் அறிக்கைளை அளித்து விட்டனர். அவற்றை மின்வாரியம் பரிசீலித்து வருகிறது.

27. மின்சார நிலைமைகளைச் சீர்த்திருத்தவும், மேம்பாடு காணவும் சீரிய தொழில் நுட்ப ஆலோசனைகளைப் பெறவும் வேண்டி, மின்சார வாரியத்தின் முன்னாள் தலைவர் திரு. வி. பி. அப்பாதுரை அவர்கள் மின்சார வாரியத்தின் சிறப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார். குறிப்பாக, எண்ணூரிலும், பேசின்பிரிட்ஜிலும், பொதுவாக மற்ற நீர் மின் நிலையங்களிலும் இப்பொழுதுள்ள நிலைமைகளைச் சீர்படுத்தி மின்உற்பத்தியில் மேம்பாடு காண அவர் எடுத்துக் கூறியுள்ள கருத்துரைகளின் பேரில் வாரியமும், அரசும் தகுந்த கவனம் செலுத்தி வருகின்றன. எண்ணூர் அனல் மின்நிலைய அளவில், தனிக் கவனம் செலுத்தி மேம்பாடு காணவேண்டும் என்ற நோக்கத்தில் அதற்கென்று தனியாக ஒரு தலைமைப் பொறியாளர் நியமிக்கப்பட்டுள்ளார். அதே போல், தனியாகவே இரண்டு மேற்பார்வைப் பொறியாளர்கள் இப்பணியில் அவருக்கு உதவியாக இருப்பர்.



28. மாநிலங்களிடையேயான மின்திட்டங்கள் பற்றியும் தமிழ்நாடு அக்கறையுடன் முன்னோடியாகவே செயல்பட்டு வருகிறது. கேரளத்தில் உருவாக்கப்பட்டு வரும் இடிக்கி மின்திட்டப் பணிகளில் தமிழ்நாடும் சேர்ந்து தன்னுடைய பங்கினை ஆற்றுவது குறித்து, கேரள அரசுடனும், கேரள மின்வாரியத்துடனும் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டன.

29. கர்நாடகத்தின் புதிய நீர் மின்திட்டப் பணிகளில் பங்கு கொண்டு பணியாற்ற திட்டவட்டமான தன்னுடைய ஒப்புதலை தமிழ்நாடு, கர்நாடக மாநிலத்திற்குத் தெரியப்படுத்தியுள்ளது. செலவும், பயன்களும் இரு மாநிலங்களுக்கிடையே சமமாகப் பங்கிடப்பட்டுக் கொள்ளலாம். இது குறித்து, பயனுள்ள உடன்பாடு ஒன்று ஏற்படும் வகையில், மத்திய அரசு, இதைப் பரிசீலித்து தீவிரமாகக் கவனித்து ஆவன செய்யும் என எதிர்பார்க்கிறோம்.

30. ஸ்ரீலங்கா மின்இணைப்புடன், நம் மின் இணைப்பை ஒன்றோடொன்று தொடர்பு படுத்தும் அவசியம் குறித்து தமிழ்நாடு அரசு இந்திய அரசுக்கு எடுத்துக் கூறியுள்ளது மட்டுமின்றி, இது குறித்து தீவிரமாகக் கவனிக்கப்பட வேண்டும் என்றும் மத்திய அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளது. ஸ்ரீலங்காவுடன் தமிழ்நாட்டிற்குள்ள புவியியல், மற்றும் பண்பாட்டு உறவும் இந்த விஷயத்தில் தமிழ்நாட்டிற்குச் சாதகமாக கவனத்தில் கொள்ள வேண்டியதொரு சிறப்பு அம்சமாகும். மின் இணைப்புகளை ஒன்றோடொன்று தொடர்பு படுத்துவது குறித்து நடத்தப்பெறும் தொழில் நுட்ப ஆலோசனைகளில் தமிழ்நாடு பங்கேற்கவேண்டியது இயற்கையே. ஆகஸ்ட் 75–ல் டெல்லியிலும், சென்னையிலும் ஸ்ரீலங்கா மின் துறைப் பிரதிநிதிகள் குழுவுடன் நடைபெற்ற முதல் சுற்று முத்தரப்புப் பேச்சு வார்த்தைகளில் தமிழ்நாடு மின்சார வாரியம் கலந்துகொண்டது.

31. குவைத் நாட்டு எண்ணெய்—டாலர் திட்டத்தின் கீழ் வெளிநாட்டு உதவித்திட்டத்தில் தூத்துக்குடி அனல் மின் திட்டத்தைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென தமிழ்நாடு மின்சார வாரியம் எடுத்துக் கூறியுள்ளது. கர்நாடகத்தின் காளிநதித் திட்டம், ஆந்திர பிரதேசத்தின் ஸ்ரீசைலத்திட்டம் ஆகியவற்றுடன் இந்தச் செயல் திட்டமும் இந்திய அரசின் கவனத்தில் உள்ளது.

32. மாநில அரசின் சார்பில், பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் அமைக்கப்பட்டதும், நிலக்கரி கொண்டுவர அந்நிய நாட்டுக் கலங்களை தமிழ்நாடு சார்ந்திருந்த நிலை இப்பொழுது வெகுவாகக் குறைந்து விட்டது. இதர்பூர் கப்பல் துறையிலிருந்து நிலக்கரியைச் சென்னைக்கு கொண்டுவர, 1974 செப்டம்பரில், தமிழ்நாடு மின்சார வாரியம், பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்துடன் ஓர் உடன்பாடு செய்து கொண்டது. வங்காளம் பீகார், நிலக்கரி சுரங்கங்களிலிருந்து நிலக்கரியைக் கொண்டுவர தற்சமயம் டிசம்பர் 74–விருந்து "தமிழ்ப் பெரியார் ஈ.வெ.ரா." "தமிழ் அண்ணா" என்ற இரு கப்பல்களை பூம்புகார் போக்குவரத்துக் கழகம் நடத்திவருகிறது.

கடல் மூலமாக கரி கொண்டுவர மத்திய அரசு அளிக்கும் நிதி உதவித் தொகை போதுமானதாக இல்லை.

ஆகவே, மேலும் மின் உற்பத்தி செய்யவேண்டியதின் அவசியத்தை முன்னிட்டு, கடல் மூலமாக நிலக்கரி கொண்டு வருவதின் விளைவாக, மாநில மின்சார வாரியத்திற்கு ஏற்படும் கூடுதல் செலவுக்கு முழுமையான அளவில் நட்ட ஈடு தரும் ஒரு திட்டத்தினை மத்திய அரசு வகுக்க வேண்டும்.

33. மின்சார வாரியத்தின் சாதனைகளும், நடவடிக்கைகளும் இறுதியில் அதனுல் பயனீட்டாளர்கள் பெறும் திருப்தியையும், நிறைவையும் கொண்டே நிர்ணயிக்கப்படுகின்றன. ஆகவே, உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படுவதின் மூலமாக, பயனீட்டாளர்கள் பெறும் திருப்தியே தன்னுடைய இலட்சியம் என்பதை மின் வாரியம் குறிக்கோளாக வகுத்துக் கொண்டுள்ளது. இந்தக் குறிக்கோளைச் செயல்படுத்தும் கருத்தில், பொதுமக்களுடன் நெருங்கிப் பயன் தரத்தக்க தொடர்பினை ஏற்படுத்துவதற்காக வேண்டி, தீவிர பரிசீலனைக்குப் பிறகு மின்சார வாரியத்தில் "மனுநீதித் திட்டத்தினை"ச் செயல்படுத்த வாரியம் முடிவு செய்துள்ளது. லஞ்சத்தைக் களையவேண்டி, மின் வாரியத்தில் "உஷார்ப் பிரிவு" ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

34. மின்சாரத்தின் முக்கியத்துவமும், மின்சார வளர்ச்சியின் அவசியமும் நெடுங்காலமாகவே ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மைகளாகும். திட்டக் காலங்களில் தொடர்ந்து மின்துறைக்குச் செய்யப்பட்டு வரும் நிதி ஒதுக்கீடுகளிலிருந்தே இதைத் தெரிந்துகொள்ளலாம். மாநிலத்தின் நிதி ஒதுக்கீட்டில் சுமார் மூன்றில் ஒரு பங்கு மின்சாரத்துக்கு ஒதுக்கப்பட்டு வந்துள்ளது. மின் தேவையையும் அவசியத்தையும் கருத்தில் கொண்டு பார்த்தால், இந்த ஒதுக்கீட்டின் அளவே போதுமானதல்ல என்ற உண்மை புலனுகிறது. மே 75-ல் நடைபெற்ற மாநில மின்துறை அமைச்சர்களின் மாநாட்டில், மத்திய மின்துறை அமைச்சர் அவர்கள் கூறியதை இங்கு எடுத்துக் காட்டுவது பொருத்தமுடையதாகும்:—

"கடந்த ஆண்டும், இவ்வாண்டும் எல்லா வளர்ச்சிப் பணிகளுக்கும் நிதி கிடைப்பது பெரும் பிரச்சினையாக உள்ளது.

அரசு, மின் வளர்ச்சிக்கு மிக அதிகமான அளவில் முன்னுரிமை அளித்து மின் திட்டங்களுக்கு எவ்வளவு அதிகமாக முடியுமோ அந்த அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்திருந்தும் கூட, இந்த நிதிப் பற்றாக்குறை மின்துறையையும் பாதிக்காமலில்லை. மின்துறையின் தேவைக்கு ஏற்ப போதிய அளவுக்கு நிதி வசதி இல்லை என்பது யாவரும் அறிந்த ஒன்றே. எப்படி இந்த இடைவெளியைப் போக்குவது என்பது குறித்து நாம் அனைவருமே சிந்திக்க வேண்டும். மத்திய அரசிடமிருந்து கிடைக்கக்கூடிய நிதி அளவுக்கும் ஒரு வரையறை உள்ளது. ஏன் எனில், பற்றாக்குறை வரவு செலவு என்பதைத் தெளிவாக வகுக்கப்பட்ட குறைந்தபட்ச அளவிலேயே இருக்கும்படி நாம் பார்த்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

ஒரு துறைக்கும் மற்ற துறைகளுக்குமிடையே நிதி ஒதுக்கீடு செய்வதில் மாநிலங்களுக்கு சில சுதந்திரங்கள் உள்ளன. மின்துறையின்



முக்கியத்துவத்தை எல்லா மாநிலங்களும் உணர்ந்து, அதன்படி நிதிகளை ஒதுக்கும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

மின் திட்டங்களை முடிப்பதில் ஏற்படும் தாமதத்தின் விளைவாக ஏற்படும் செலவு மிகவும் அதிகமாகிவிடுகிறது. இதனுல், துறைகளுக்கிடையே நிதி ஒதுக்கம் செய்யும்பொழுது, மின்துறையின் தேவைகள் முழுமையாக நிறைவேற்றப்படும் வகையில் இருக்குமாறு பார்த்துக் கொள்ளவேண்டும்."

**மின்சாரம் அனுப்புதலும்—விநியோகித்தலும்.**

35. உயர்மட்ட அளவில் நிர்வாகத்தைச் சீர்படுத்தும் வகையில், அக்டோபர் 75-ல் மின் விநியோகத் தலைமைப் பொறியாளரின் (தெற்கு) தலைமை அலுவலகம் மதுரைக்கு மாற்றப்பட்டுவிட்டது. கன்னியாகுமரி, திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை, திருச்சிராப்பள்ளி, பைக்காரா, உடுமலைப்பேட்டை, ஈரோடு ஆகிய எட்டு மின்திட்டங்களும், திருச்சிராப்பள்ளியில் உள்ள பொதுக் கட்டுமான வட்டம் ஒன்றும் அவருடைய அதிகாரத்தின் கீழ் வரும்.

நீர் மின் உற்பத்திப் பொறுப்பில் உள்ள தலைமைப் பொறியாளரின் (இயக்குதல்) தலைமை அலுவலகமும், மின் இணைப்பில் உள்ள நீர் மின் நிலையங்கள் மேலும் தாமாகவும், நேரடி கவனத்துடன் பார்க்கப்படவேண்டி, ஈரோட்டுக்கு மாற்றப்பட்டுள்ளது.

இப்பொழுது உள்ள பைக்காரா, வேலூர் மின் திட்டங்கள் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு பெரிய அளவில் இருப்பதினுல், அந்தப் பகுதி மின்பயனீட்டாளர்களின் தேவைகளுக்கேற்ப, உடுமலைப்பேட்டையில் ஒரு மின்திட்டமும், திருவண்ணாமலையில் ஒரு மின்திட்டமும் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. இந்தப் புதிய திட்டங்கள் அமைக்கப்பட்டதினுல், அந்தப் பகுதிவாழ் மக்களுக்கு மேலும் நன்மை பயக்கும் என நம்புகிறேன்.

36. தமிழ்நாடு மின் அமைப்பில் கம்பிகளில் ஏற்படுகின்ற இழப்புகள் குறித்தும் அவ்விழப்புகளைக் குறைக்க மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் மாண்புமிகு உறுப்பினர்கள் அடிக்கடி எடுத்துக்கூறி வந்துள்ளார்கள். கம்பிகளின் நீளம், மின்தொடர்பு அளிக்கப்பட்ட விசையேற்றங்களின் எண்ணிக்கை ஆகியவற்றில் நாட்டில் மற்ற மாநிலங்களின் மின் அமைப்புகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, தமிழ்நாட்டில்தான் அவை அதிகம். அப்படியிருந்தும் கூட, நமக்கு ஏற்படுகின்ற கம்பி இழப்புகளின் சதவிகிதம் அப்படி ஒன்றும் அதிகம் என்று சொல்லிவிட முடியாது.

37. மற்றப் பணிகளோடு, ரூ 101 கோடி மதிப்பீட்டுச் செலவில் மின் அனுப்புதல், மின் விநியோகம் குறித்து பெருந்திட்டம் ஒன்றினை தமிழ்நாடு மின்சார வாரியம் உருவாக்கிச் செயல்படுத்தி வருகிறது. இதுவரையில் இந்த வகையில் ஏழு கோடி ரூபாய்

செலவிடப்பட்டுள்ளது. 4,300 கிலோ மீட்டர்கள் நீளக் கம்பிகள், 154 துணை நிலையங்களுக்கு இலக்கு வகுக்கப்பட்டு, 400 கிலோ மீட்டர்கள் நீளத்திற்கு மேல் கம்பிகள் போடப்பட்டு, 27 துணை நிலையங்களும் நிறுவப்பட்டுள்ளன. மேலும் முன்னேற்றம் காண்பது போதிய நிதி கிடைப்பதைப் பொறுத்துள்ளது. ரூ. 138 இலட்சம் செலவில் மேம்பாட்டுப் பணிகளுக்கு கிராம மின் வசதிக் கழகம் அனுமதி வழங்கி, அவை செயல்படுத்த மேற் கொள்ளப்பட்டுள்ளன.

ஐந்தாவது திட்ட முடிவுக்குள் மின் அமைப்புக்கு 450 எம்.வி.ஏ.ஆர். கெபாசிட்டர்கள் தேவைப்படலாம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. ஏற்கனவே 125 எம்.வி.ஏ.ஆர். கெபாசிட்டர்கள் இயங்க ஆரம்பித்து விட்டன. 85 எம்.வி.ஏ.ஆர். கெபாசிட்டர்கள் நிறுவப்பட்டு வருகின்றன. 65 எம்.வி.ஏ.ஆர். கெபாசிட்டர்கள் பெறவும், 25 எம்.வி.ஏ.ஆர். கன்டென்சர்கள் (Synchronous Condensers) இரண்டும் வாங்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

குறைவு அழுத்தத் தொழில்களிலும், வேளாண்மை இணைப்பு களிலும் குறைவு அழுத்த ஷண்ட் கெபாசிட்டர்கள் நிறுவப்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது. இதற்காக தகுந்த முறை யில் வாரியத்தின் மின் கட்டண விதிமுறைகள் திருத்தப்பட்டுள்ளன. குறைவு அழுத்த ஷண்ட் கெபாசிட்டர்களைப் பெற்று பயனீட்டாளர் களுக்கு வழங்க வாரியத்தினால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 36,000 குறைவு அழுத்த கெபாசிட்டர்களுக்கு ஆர்டர் செய்யப்பட்டுள்ளது. இழப்புகள் எவ்வளவு என்பதைக் கணக்கிடவும் மின்சாரம் வழங்குதலினால் கிடைக்கும் வரவினங்கள், விற்பனை ஆகியவற்றை அளவிடவேண்டியும் தேர்ந்தெடுக்கப்பட்ட விநியோகப் பிரிவுகளில் மீட்டர்கள் பொருத்தப்பட்டு வருகின்றன. இதுகுறித்து, இந்திய விஞ்ஞானக் கழகம் மேற்கொண்ட ஒரு தொழில் நுட்ப பொருளாதார ஆய்வின் படி, செங்கற்பட்டு மின் திட்டத்துக்கு மட்டும் மொத்தமாக ரூ. 15 கோடி தேவைப்படும் எனக் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

மின் விநியோகப் பகுதிகளின் மின் இழப்புகளைக் குறைப்பதற்காக வேண்டி, மின் அமைப்பு மேம்பாட்டுப் பணிகளுக்காக, 1974—75-ல் மின்வசதிக் கழகத்தினிடமிருந்து பெற்ற கடன்கள் ரூ. 205 இலட்சம் பயன்படுத்தப்பட்டுள்ளது. கம்பி இழப்புக்களைக் குறைக்க பெரும் அளவில் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆயுள் காப்புறுதிக் கழகத் தினிடமிருந்து கடன்கள் பெறுவதற்கான சாத்தியக்கூறுகளை வாரியம் பரிசீலித்துக்கொண்டு வருகிறது.

38. வாரியம் தெரு விளக்குகளைப் பராமரிப்பது குறித்து அடிக்கடி புகார்கள் வந்துகொண்டேயிருக்கின்றன. தெரு விளக்குகளுக்குத் தனியாக மீட்டர்கள் பொருத்தும் வேலை மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது. தெரு விளக்குகளை ஒழுங்காக எரிய விடுதலிலும், பல்புகளை மாற்றியமைப்பதிலும் சீரிய கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.



எதிர் காலத்தில் இப்படிப்பட்ட புகார்களுக்கு இடமிருக்காது என்று நம்புகிறோம்.

39. கடந்த ஆண்டுகளில், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் மின்சார வாரியத்தில் நடைபெற்று வரும் மின்சாரத் திருட்டு குறித்து கவலை தெரிவித்து வந்துள்ளார்கள். இப்போதெல்லாம், தேவையானபொழுது, காவல் துறையினரின் உதவியுடன் செயல்படும் வகையில் இணைப்புகளைச் சோதனை செய்ய சிறிய முறையில் அமைக்கப் பட்ட அமைப்புமுறை தமிழ்நாடு மின்சார வாரியத்தில் செயல்பட்டு வருகிறது.

1974—75-ல் 231 திருட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டு, நீதி மன்றத்தில் வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன.

40. சமூக விரோதிகளால் மின்கடத்திகள் (Conductors) திருடப் படுவது மின்வாரியத்துக்கு மற்றுமொரு பெரிய பிரச்சினையாகும், இந்த ஆபத்தைச் சுட்டிக்காட்டி இந்தத் திருட்டுக்களை ஒழிக்க பொது மக்களின் ஒத்துழைப்பைக் கோரி அண்மையில் மின்வாரியத் தலைவர் பொதுமக்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்திருந்தார், திருட்டுகள் சம்பந்தமாக தகுந்த நடவடிக்கை எடுக்க முனைப்பான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தத் திருட்டுகளைத் தவிர்ப்பது குறித்து மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துக்களும் வரவேற்கப் படுகின்றன.

41. 31—3—1975 நிலவரப்படி, 69,775 கிலோமீட்டர்கள் நீளமுள்ள கூடுதல் உயர் அழுத்த, உயர் அழுத்தக் கம்பிகளும். 2,02,645 கிலோ மீட்டர்கள் நீளமுள்ள குறைவு அழுத்தக் கம்பிகளை யும் கொண்டுள்ள மிகப் பெரிய அளவிலான மின் அனுப்புதல், மின் விநியோக அமைப்பு முறையை தமிழ்நாடு மின்சார வாரியம் கொண்டுள்ளது. இவற்றில், 1,038 கிலோ மீட்டர்கள் கூடுதல் உயர் அழுத்த, உயர் அழுத்தக் கம்பிகளும், 5,628 கிலோ மீட்டர்கள் நீளமுள்ள குறைவு அழுத்தக் கம்பிகளும் 1974—75-ம் ஆண்டில் சேர்க்கப்பட்டவையாகும். 1974-75-ம் ஆண்டு இறுதியில், தமிழக மின் அமைப்பில் 279 கூடுதல் உயர் அழுத்த, உயர் அழுத்தத் துணை நிலையங்கள் உள்ளன.

42. கேரளத்துடன் இணைக்கும் பம்பா-கயத்தாறு 230 கே. வி. இணைப்புக்கம்பி அமைக்கும் வேலை முடிவடைந்து விட்டது. இது, அந்த மாநிலத்துடன் செய்யப்படும் இரண்டாவது இணைப் பாகும். இடுக்கியையும் உடுமலைப்பேட்டையையும் தொடர்புபடுத்தும் மூன்றாவது இணைப்புக் கம்பி அமைக்கும் வேலை கருத்தில் கொள்ளப்பட்டு, அதற்கான ஆய்வு வேலைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இப்பொழுது அமைக்கப்பட்டு வரும் 230 கே.வி. எண்ணூர்- நெல்லூர் கம்பி அமைப்பு வேலை 1976-77-ல் முடிக்கப்பெறும்பொழுது தமிழ்நாட்டுடன் ஆந்திரப்பிரதேசம் மறுபடியும் தொடர்பு படுத்தப்படும்.

## கிராம மின்வசதி.

43. 1974–75-ல் மேலும் 145 கிராமங்களுக்கும் சிற்றூர்களுக்கும் மின்வசதி நீட்டிக்கப்பட்டுள்ளது. இதனால் மின்வசதி அளிக்கப்பட்ட கிராமங்கள், சிற்றூர்களின் எண்ணிக்கை 61,217 ஆக உயர்ந்துள்ளது. அதாவது தமிழ்நாட்டில் 1974–75-ஆம் ஆண்டு முடிவில், மொத்தம் உள்ள கிராமங்கள் சிற்றூர்களில் 98 சதவிகித கிராமங்களுக்கும் சிற்றூர்களுக்கும் மின்வசதி அளிக்கப்பட்டுவிட்டது. 1974–75-ல், 25,709 வேளாண்மை விசையேற்றங்களுக்கும், 140 அரிசன குடியிருப்புகளுக்கும் மின் தொடர்பு அளிக்கப்பட்டுள்ளது. கிராமங்களுக்கு அருகாமையில் உள்ள அரிசனக் குடியிருப்புகளுக்கு மின்வசதி அளிப்பதற்கு முதல் முன்னுரிமை கொடுக்கப்படுகிறது.

44. விசையேற்றங்களுக்கும் இதர இணைப்புகளுக்கும் மின்சாரம் வழங்க 10 திட்டங்களுக்கும், மின் திட்டங்களின் மேம்பாட்டுக்காக ஆறு திட்டங்களுக்கும் மொத்தம் ரூ. 316·822 இலட்சம் செலவில் கிராம மின்வசதிக் கழகம் 1974—75-ல் அனுமதி அளித்துள்ளது. இதற்காக, ரூ. 204·765 இலட்சத்தினை அக்கழகம் கொடுத்துள்ளது.

45. கடந்த ஆண்டு அமைக்கப்பட்ட ஆராய்ச்சி-வளர்ச்சி இயக்குநர் அலுவலகம், மின் உற்பத்தி, மின் அனுப்புதல், மின் வழங்குதல் ஆகியவற்றில் ஆய்வுகள் நடத்திக்கொண்டு வருகிறது. ரிலே பாதுகாப்பு, பென்ஸ்டாக் குழாய்களில் ஏற்படும் அரிப்புகள் சம்பந்தமாக ஏற்படும் பிரச்சினைகளில் இவ்வாண்டில் பயன்தரத்தக்க நல்ல முடிவுகள் பெறப்பட்டுள்ளன. பதினோரு மின் திட்டங்கள் சம்பந்தமாக ஆய்வுகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

கதிரவனின் வெப்பச் சக்தியைப் பயன்படுத்தி மின்சாரம் உருவாக்குவது சம்பந்தமான ஆராய்ச்சிப் பணியில் மத்திய விசை ஆராய்ச்சி நிறுவனமும் தமிழ்நாடு மின்சார வாரியமும் சேர்ந்து பணியாற்ற கருத்து உள்ளது.

46. 1975–76-ல் எதிர்பார்க்கப்படுகிற வருவாய் வரவினங்கள் ரூபாய் 135·5 கோடியாகும். முக்கியமாக, ரூ. 133 கோடிக்கு மின்சாரம் விற்பனை செய்வதின் மூலம், இந்தத் தொகை கிடைக்கும்.

மின்சார விற்பனை மூலம் கிடைக்கக்கூடிய பெரும் பகுதி வருவாய் தொழில்கள்–வேளாண்மை சார்ந்த இணைப்புகள் மூலமாகக் கிடைப்பதாக இருக்கும். (44·3 சதவிகிதம்) வணிக, வீட்டு இணைப்புகள் 23·1 சதவிகித வருவாய் அளிக்கும். எஞ்சியுள்ளது, உரிமதாரர்களுக்கு மொத்தமாக வழங்கல்; மற்ற மாநிலங்களுக்கு விற்பனை; கூடுதல்வரி; ரெயில்வே இழுவைக் காரியங்களுக்கு பயன்படுத்தப்படுவது ஆகிய மற்ற இனங்களிலிருந்து பெறப்படும்.



47. (1) வாரியத்தினால் எடுத்துக்கொள்ளப்பட்ட ஏழு தனியார் மின் நிறுவனங்களும் வாரியத்தின் தனித்த யூனிட்டுகளாக நிர்வகிக்கப்படுகின்றன. இந்த நிறுவனங்களினால் கவியப்பெற்ற பகுதிகளிலும், 1974 அக்டோபர் முதல், வாரியத்தின் மின் கட்டண விகிதங்களும், வாரியத்தின் மின் வழங்கு நிபந்தனைகளும் செயல்படுத்தப்படுகின்றன.

(2) கையகப்படுத்துதல் சட்டத்தின் கீழ், உரிமதாரர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய தொகை குறித்த கோரிக்கைகள், செங்கோட்டை மின் நிறுவனம் தவிர, மற்ற எல்லா உரிமதாரர்களிடமிருந்தும் வந்துள்ளன. இந்தக் கோரிக்கைகளை தமிழ்நாடு மின்சார வாரியத்துடனும் அரசின் தலைமை மின் ஆய்வாளருடன் கலந்து பேசி, அவை பரிசீலனையில் இருந்து வருகின்றன.

(3) தனியார் மின் உரிமதாரர்களின் பணியாளர்கள் மின் வாரியப் பணியாளர்களாக ஆகிவிட்டனர். ஆனால், முன்னாள் உரிமதாரர்களின் பணி நிபந்தனைகள், விதிமுறைகளுக்குட்பட்டே அவர்கள் தொடர்ந்து உள்ளனர். வாரியத்தின் பணி அமைப்பில் தகுந்த பதவி இடங்களில் அவர்களைச் சேர்த்துக்கொள்வதின் மூலமாக, இந்தப் பணியாளர்களை வாரியத்தின் பணி நிபந்தனைகளுக்கும் விதிமுறைகளுக்கும் உட்படுத்தும் பிரச்சினையானது பரிசீலனையில் உள்ளது.

48. மூலதனச் சந்தையில் கடன் முடக்கம் இவ்வாண்டும் தொடர்ந்து உள்ளது. இதனால் நாம் கடன் வாங்குவதில் மிகுந்த சிரமத்தை அடைந்து வருகிறோம்.

49. தொழிலாளர்கள் நலன் :—

(1) ஈட்டிய விடுப்பினை உயர்ந்தபட்சமாக 180 நாட்களுக்குச சேர்த்து வைத்துக் கொள்ளலாமென்றும், பணிக்காலம் முழுவதிலும் மருத்துவச் சான்றிதழின் பேரில் எடுக்கப்படும் விடுப்புக்கு, முன்பு இருந்த அரைச் சம்பளம் என்பதற்குப் பதிலாக, முழுச் சம்பளம் பெறுகின்ற வகையிலும் ஊழியர்களுக்கான தமிழ்நாடு மின்சார வாரிய விடுப்பு ஒழுங்கு முறை விதிகளும் நிலை ஆணைகளும் திருத்தப் பட்டுள்ளன.

(2) தங்களுடைய குடும்பத்தை நிராதரவாக விட்டுவிட்டு, பணியிலிருக்கும்பொழுதே வாரிய ஊழியர் இறந்து போய்விட்டால், அன்னாருடைய வாரிசுகள், அவருடைய தகுதிகள், மற்ற தன்மைகளுக்கேற்ப, தமிழ்நாடு மின்சார வாரியத்தில் வேலை வாய்ப்பு ஏற்படும் பொழுது, வாரியத்தினால் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு திட்டத்தின் கீழ், தகுந்த பரிவுடன் கவனிக்கப்படுவார்கள்.

(3) இளநிலை உதவியாளர்கள், காசாளர்கள் பதவி இடங்களுக்கு நேரடியாக ஆட்கள் எடுப்பது, வாரியத்தின் பணியில் முன்பே இருந்து வருபவர்களில் போதிய தகுதி படைத்தவர்களை அந்தப் பதவி இடங்களில் எடுத்துக்கொள்வதற்காக வேண்டி, தற்பொழுது நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது.

(4) பணியில் இருக்கும்பொழுது ஊழியர் ஒருவர் அகால மரணம் அடைந்துவிட்டால், அவருடைய குடும்பத்தினருக்கு மொத்தமாக ரூபாய் பத்தாயிரம் கொடுக்கப்படும் என்றுள்ள குடும்பப் பாதுகாப்புத் திட்டம் மின்சார வாரியத்தின் எல்லா முறையான பணியாளர்களுக்கும் கொண்டு வரப்பட்டுள்ளது.

(5) தினக்கூலி வேலையாட்களை முறையான பணிகளில் சேர்த்துக் கொள்வதை படிப்படியாக மின்வாரியம் செய்து வருகிறது. 31-12-1974-ல் நான்காண்டு காலம் பணிபுரிந்துள்ள தினக்கூலி வேலையாட்களை முறையான பணிகளில் சேர்த்துக் கொள்கின்ற மூன்றாவது கட்டப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் 4,500 வேலையாட்கள் பயனடைவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

(6) ஊதியத்திருத்தம் குறித்த முந்தைய உடன்பாடு 30-11-1974-ல் முடிவடைந்து விட்டது. புதிய உடன்பாடு காண, சம்பந்தப்பட்ட சங்கங்களுடன் பேச்சுவார்த்தைகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன.

(7) தொழிலாளர்களுக்கு மனநிறைவு இருக்க வேண்டும்; செய்கின்ற பணிகளில் அவர்களுக்குத் திருப்தியும் இருக்க வேண்டும் என்ற கருத்தில் அண்மையில், மூன்று தினங்களுக்கு, தொழிலாளர் பிரதிநிதிகள், பொறியியல் சங்கங்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பெற்றன. அவர்கள் தெரிவித்த பல்வேறு குறைகளும் முறையீடுகளும் கவனத்துடன் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. அவர்களுடைய கோரிக்கைகள் இயன்ற அளவுக்கு வாரியத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

(8) மாநிலத்தில் மின் திட்டங்களிடையே விளையாட்டுப் போட்டிகள் நடத்தவும், அகில இந்திய விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாடு மின்சார வாரிய விளையாட்டுக் குழுவினர் கலந்து கொள்ளவும் ரூபாய் நாற்பதாயிரத்துக்கு வாரியம் அனுமதி வழங்கியுள்ளது. வாரியத்தின்கீழ் உள்ள பல்வேறு விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு மன்றங்களுக்கு அவைகளுடைய தேவைகளை ஒட்டி, தொடர் மான்யங்களுக்கும் தொடரா மான்யங்களுக்கும் அனுமதி வழங்கப்படுகிறது.

பிப்ரவரி 1975-ல் இரண்டாவது அனைத்து இந்திய மின் வாரிய கூடைப்பந்தாட்ட விளையாட்டுப் போட்டியை தமிழ்நாடு மின்வாரிய விளையாட்டு ஆளுமைக் குழு ஏற்று நடத்தியது. பாட்டியாலாவில் நடைபெற்ற முதலாவது அகில இந்திய மின்வாரிய விளையாட்டுப் போட்டிகளில், தமிழ் நாடு மின்சார வாரிய விளையாட்டுக் குழு கலந்து கொண்டது.

50. 1975 ஆகஸ்ட் திங்களில், புது டெல்லியில், மின்சார வாரியத்தலைவர்கள், ஊழியர்களின் பிரதிநிதிகள், மத்திய அரசின் விசை மின்சார அமைச்சர், தொழிலாளர் நல அமைச்சர் ஆகியோர் கலந்து கொண்ட முத்தரப்புக் கூட்டமானது, நாட்டில் உள்ள மின் அமைப்புகளை இயக்குவதில் தொழிலாளர்களின் பிரதிநிதிகளையும் ஈடுபடுத்துவான் வேண்டி, ஒரு பத்து அம்ச வழிகாட்டு தல்களை உருவாக்கி உள்ளது. இவை வாரியத்தின் பரிசீலனையில் உள்ளன.



51. மின்சாரம் பயன்படுத்துவோர் மனதில் ஏதாவது அச்ச
உணர்வு இருக்குமேயானால், அதைப்போக்க நான் பெரிதும் விரும்பு
கிறேன். தொடர்ந்து மின்பற்றாக்குறையை நாம் அனுபவித்தோம்.
இருந்தாலும், அது ஒரு காலகட்டத்தில் நிகழ்ந்து,
பின்பு மறைந்து விடுகிற ஒன்றேயாகும். தங்களுடைய பண்ணை
களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் போதிய மின்சாரம் கிடைக்குமோ
என்று தொழில்கள் தொடங்குவோர் யாரும் எந்தவித
மனக்கிலேசமும் அடையத் தேவையில்லை. மின்சார நிலையைச்
சீர்திருத்தி மின் உற்பத்தியில் மேம்பாடு காண, அரசும் வாரியமும்
எல்லா இயன்ற நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண்டு வருகின்றன.

52. மின்சாரம் எல்லா வகைகளிலும் பயன்படுவதாலும்
மின்சாரத்தைப் பயன்படுத்துவதிலும் பயான்மையிலும் நுணுக்க
மான மாற்றங்கள் கடந்த ஆண்டுகளில் ஏற்பட்டுள்ளதாலும்,
பொதுவாக மின்சாரத்தைப் பயன்படுத்துவதில் எந்தவிதச்
சிக்கனத்தையும் கடைப்பிடிக்காமல் தாராளமாகவே நடந்து கொள்ள
நாம் பழக்கப்பட்டு விட்டோம். நம்முடைய இந்தப் போக்கு
குறித்து மறுபரிசீலனை செய்து, அதை மாற்றிக் கொள்ள
வேண்டிய கட்டத்தில் நாம் இப்பொழுது உள்ளோம். உலகம்
பூராவிலும் மின்சாரத்தைப் பயன்படுத்தும் முறையின் முக்கியத்
துவமானது மக்களின் ஆதரவினையும் கவனத்தையும் ஈர்த்து வரு
கிறது. ஆகவே, இன்றைய உலகில், மின்சாரத்தின் முக்கியத்து
வத்தை அனைவரும் உணர்ந்து, நிலவுகின்ற நடைமுறைகளுக்
கேற்ப, சமுதாய ரீதியாக, தங்கள் மின் தேவைகளை வகுத்துக்
கொண்டு செயல்படுவது, சமூகத்திற்கு நாம் செய்கின்ற சிறந்த
கடமைகளில் ஒன்றாகும்.

53. மின்வாரியத்தின் முன்னால் உள்ள முக்கிய வேலைகளையும் அவற்றைச் செயல்படுத்தத் தேவைப்படும் ஆதாரங்கள் பற்றியும் நான் இங்கே கோடிட்டுக் காட்டியுள்ளேன். நிதிநிலை பற்றி விவாதிக்கும்பொழுது, இம்மாமன்றம் தன்னுடைய அரிய கருத்துக்களை வழங்குவதின் மூலம், மின் வாரியமானது மக்களுக்கு மேலும் சீரிய முறையில் பணியாற்ற உறுதுணையாக இருக்கும் என்று நம்புகிறேன்.

**பயன் பெறுவோரும், பாடுபடுவோரும் மேலான நலம் பெறுவதே, மின்வாரியத்தின் நன்னோக்கம்.**

அவைத் தலைவர் அவர்கட்கும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## இணைப்பு அ

### கடந்த திட்டக் காலங்களில் தமிழ்நாட்டில் மின்சார வளர்ச்சி.

| வரிசை எண்ணும், விவரங்களும். | முதலாவது திட்டத்தின் தொடக்கத்தில் (1-4-1951). | முதலாவது திட்டத்தின் இறுதியில் (31-3-1956). | இரண்டாவது திட்டத்தின் இறுதியில் (31-3-1961). |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| **மின் உற்பத்தி—** | | | |
| 1. நிறுவப்பட்ட திற னளவு (மெகா வாட்டுகளில்). | 156 | 256 | 560 |
| 2. மின்சக்தி உச்சத் தேவை (மெகா வாட்டுகளில்). | 110 | 172 | 381 |
| 3. உற்பத்தி செய்யப் பட்ட மின்சாரமும் வாங்கப்பட்ட மின் சாரமும் (மில்லியன் யூனிட்டுகளில்). | 630 | 1,053 | 2,214 |
| **மின் அனுப்புதலும், விநியோகித்தலும்—** | | | |
| 1. கூடுதல் உயர் அழுத்த, உயர் அழுத்தக் கம்பிகளின் நீளம் (கிலோ மீட்டர்களில்). | 6,936 | 11,479 | 24,194 |
| 2. குறைவு அழுத்தக் கம்பி களின் நீளம் (கிலோ மீட்டர்களில்). | 5,728 | 13,055 | 35,352 |
| 3. கூடுதல் உயர் அழுத் தத் துணை நிலையங் கள். | 31 | 48 | 70 |
| 4. உயர் அழுத்தத் துணை நிலையங்கள். | 25 | 41 | 73 |



## இணைப்பு அ—தொடர்ச்சி.

### கடந்த திட்டக் காலங்களில் தமிழ்நாட்டில் மின்சார வளர்ச்சி—தொடர்ச்சி.

| வரிசை எண்ணும், விவரங்களும். | மூன்றாவது திட்டத்தின் இறுதியில் (31–3–1966). | நான்காவது திட்டத்தின் இறுதியில் (31-3-1974). | 31–3–1975–ல்‡ உள்ளபடி. |
|---|---|---|---|
| | (5) | (6) | (7) |
| **மின் உற்பத்தி—** | | | |
| 1 நிறுவப்பட்ட திற னளவு (மெகாவாட்டு களில்). | 1070+ 300 (நெய்வேலி) | 1654+ 600 (நெய்வேலி) | 1654+ 600 (நெய்வேலி) |
| 2 மின்சக்தி உச்சத் தேவை (மெகா வாட்டுகளில்). | 717 | 1,287* | 1,282* |
| 3 உற்பத்தி செய்யப் பட்ட மின்சாரமும் வாங்கப்பட்ட மின் சாரமும் (மில்லியன் யூனிட்டுகளில்). | 4,041 | 7,105 | 7,380 |
| **மின் அனுப்புதலும் விநியோகித்தலும்—** | | | |
| 1 கூடுதல் உயர் அழுத்த, உயர் அழுத்தக் கம்பிகளின் நீளம் (கிலோ மீட்டர்களில்). | 39,806 | 68,737 | 69,775 |
| 2 குறைவு அழுத்தக் கம்பி களின் நீளம் (கிலோ மீட்டர்களில்). | 73,198 | 1,97,017 | 2,02,645 |
| 3 கூடுதல் உயர் அழுத் தத் துணை நிலையங் கள். | 98 | 146 | 150 |
| 4 உயர் அழுத்தத் துணை நிலையங்கள். | 103 | 131 | 129 |

* மின்வெட்டின் விளைவாகக் குறைக்கப்பட்ட தேவையின் அளவு

| வரிசை எண்ணும், விவரங்களும். | முதலாவது திட்டத்தின் தொடக்கத்தில் (1–4–1951). | முதலாவது திட்டத்தின் இறுதியில் (31–3–1956). | இரண்டாவது திட்டத்தின் இறுதியில் (31–3–1961). |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| **மின் அனுப்புதலும் விநியோகித்தலும்**—தொடர்ச்சி. | | | |
| 5. மின் பங்கீட்டு நிலையங்கள். | 1,591 | 3,773 | 10,004 |
| 6. மின்சாரம் பயன்படுத்துவோர் எண்ணிக்கை (இலட்சத்தில்). | 2·5 | 4·3 | 7·7 |
| 7. நபர் ஒருவர் பயன்படுத்தும் மின்சாரத்தின் அளவு (யூனிட்டுகளில்). | 12 | 21 | 60 |
| **கிராம மின்வசதி—** | | | |
| 1. மின்வசதி அளிக்கப்பட்ட நகரங்கள், கிராமங்கள், சிற்றூர்களின் எண்ணிக்கை. | 1,813 | 3,543 | 10,760 |
| 2. மின் இணைப்பு அளிக்கப்பட்ட வேளாண்மை விசையேற்றங்களின் எண்ணிக்கை. | 14,373 | 32,440 | 1,17,695 |
| **செலவும் வருவாயும்—** | | | |
| 1. மூலதனச் செலவு (ரூபாய் கோடிக் கணக்கில்). | 23·82 | 54·01 | 133·21 |
| 2. மொத்த வருவாய் (ரூபாய் கோடிக் கணக்கில்). | 3·18 | 5·94 | 15·82 |



| வரிசை எண்ணும், விவரங்களும். | மூன்றாவது திட்டத்தின் இறுதியில் (31-3-1966). | நான்காவது திட்டத்தின் இறுதியில் (31-3-1974). | 31–3–1975-ல் உள்ளபடி. * |
|---|---|---|---|
| | (5) | (6) | (7) |
| **மின் அனுப்புதலும் விநியோகித்தலும்**—தொடர்ச்சி. | | | |
| 5. மின் பங்கீட்டு நிலையங்கள். | 17,360 | 37,453 | 38,729 |
| 6. மின்சாரம் பயன்படுத்துவோர் எண்ணிக்கை (இலட்சத்தில்). | 13·6 | 27·07 | 28·35 |
| 7. நபர் ஒருவர் பயன்படுத்தும் மின்சாரத்தின் அளவு (யூனிட்டுகளில்). | 92 | 120‡ | 125‡ |
| **கிராம மின்வசதி—** | | | |
| 1. மின்வசதி அளிக்கப்பட்ட நகரங்கள், கிராமங்கள், சிற்றூர்களின் எண்ணிக்கை. | 22,137† | 61,072, | 61,217† |
| 2. மின் இணைப்பு அளிக்கப்பட்ட வேளாண்மை விசையேற்றங்களின் எண்ணிக்கை. | 2,56,594 | 6,81,205 | 7,06,914 |
| **செலவும் வருவாயும்—** | | | |
| 1. மூலதனச் செலவு (ரூபாய் கோடிக் கணக்கில்). | 253·28 | 573·42 | 606·98 |
| 2. மொத்த வருவாய் (ரூபாய் கோடிக் கணக்கில்). | 34·67 | 85·67 △ | 104·47 △ |

† தெருவிளக்குகள் அமைத்து மின் வசதி செய்யப்பட்டவை.

△ அரசு உதவித்தொகை நீங்கலாக மத்திய நிதி ஈரிக்கட்டலேயும் சேர்த்து.

‡ 1971–72-ல் இந்த அளவு 133 ஆக இருந்தது.

‡ உத்தேசமாக.

இணைப்புகள்

1975 நவம்பர் 10]

## இணைப்பு ஆ.

**4–வது திட்டக்காலத்தில் மின் திட்டங்களின் பேரிலான செலவும், 1974—75, 1975—76-ம் ஆண்டுகளுக்கான நிதிநிலை மதிப்பீடும்.**

(ரூபாய் இலட்சத்தில்.)

| எண். | மின் திட்டத்தின் பெயர். | 1969—70-ல் ஏற்பட்ட செலவு. | 1970—71-ல் ஏற்பட்ட செலவு. | 1971—72-ல் ஏற்பட்ட செலவு. | 1972—73-ல் ஏற்பட்ட செலவு. | *1973—74-ல் ஏற்பட்ட செலவு. | *நான்காவது திட்டக் காலத்தில் (1969—70 லிருந்து 1973—74 வரை) செலவு. | 1974—75 ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. | 1974—75 ஆண்டுக்கான திருத்த மதிப்பீடு. | 1975—76 க்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| I. | **மின் உற்பத்தித் திட்டங்கள்—** | | | | | | | | | |
| | **அ. தொடர்ந்து வரும் திட்டங்கள்—** | | | | | | | | | |
| 1 | குந்தா நீர் மின் திட்டம் 3–ம் நிலை. | —35·23 | 7·56 | 25·21 | —3·78 | —11·93 | —18·17 | 20·00 | 0·72 | 20·00 |
| 2 | பரம்பிக்குளம் ஆளியாறு நீர் மின் திட்டம். | 141·29 | 160·99 | 51·97 | 71·73 | 28·33 | 397·65 | 8·64 | 11·98 | 5.00 |
| 3 | கோதையா[illegible] நீர் மின் திட்டம். | 273·98 | 203·89 | 78·90 | 32·74 | 46·34 | 635·85 | 77·10 | 70·10 | 29·52 |
| 4 | சென்னை மின் திட்ட விரிவாக்கம் நான்காவது நிலை. | 80·77 | 43·37 | 36·22 | 44·18 | 11·52 | 216·06 | 70·01 | 1·00 | 0·01 |
| 5 | எண்ணூர் அனல் மின் திட்டங்கள். | 1,741·99 | 461·01 | 331·28 | 416·85 | 256·10 | 3,207·23 | 34·55 | 34·55 | 11 10 |
| 6 | எண்ணூா அனல் மின் விரிவாக்கத் திட்டம் | .. | 50·00 | 67·10 | 299·10 | 1,075·10 | 1,491·30 | 507·42 | 507·42 | 181·16 |
| 7 | பாண்டியாறு — புன்னப்புழா நீர் மின் திட்டம். | 44·29 | 7·02 | —33·09 | —0·96 | —6·53 | 10·73 | 50 01 | 0·01 | 0·0 |
| 8 | குந்தா நீர் மின் திட்டம் 4–வது நிலை. | .. | .. | .. | 74·42 | 305·41 | 379·83 | 275·00 | 200·00 | 400·00 |
| | **ஆ. புதிய திட்டங்கள்.** | | | | | | | | | |
| 1 | நடுவட்டம் நீர்த்திருப்புத் திட்டம் | 5·12 | 13·95 | 56·96 | 55·11 | 53.14 | 184·28 | 53·08 | 87·82 | 19·62 |

| எண். (1) | மின் திட்டத்தின் பெயர். (2) | 1969–70-ல் ஏற்பட்ட செலவு. (3) | 1970–71-ல் ஏற்பட்ட செலவு. (4) | 1971–72-ல் ஏற்பட்ட செலவு. (5) | 1972–73-ல் ஏற்பட்ட செலவு. (6) | *1973–74-ல் ஏற்பட்ட செலவு. (7) | *நான்காவது திட்டக் காலத்தில் 1969–70 லிருந்து 1973–74 வரை) செலவு. (8) | 1974–75 ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (9) | 1974–75 ஆண்டுக்கான திருத்த மதிப்பீடு. (10) | 1975–76 க்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. (11) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆ. | புதிய மின் திட்டங்கள்—தொடர்ச்சி. | | | | | | | | | |
| 2 | சோழாத்திப்புழா நீர் மின் திட்டம். | .. | .. | — | .. | .. | .. | 0·001 | .. | .. |
| 3 | காடம்பாறை நீர் மின்திட்டம் | .. | .. | 0·73 | 4·03 | 2,19·87 | 2,24·63 | 4,40·00 | 1,00·00 | 0·01 |
| 4 | மேல் தாம்பிரபரணி நீர் மின் திட்டத்தின்கீழ் சேர்வலாறு மின் நிலையம். | .. | 0·95 | 12·15 | 33·68 | 48·98 | 95·76 | 1,00·00 | 75·00 | 0·01 |
| 5 | நெல்லித்துறை நீர் மின் திட்டம். | .. | 2·12 | 19·35 | 13·39 | 16·37 | 51·23 | 69·98 | 29·98 | 0·01 |
| 6 | பரளையாறு நீர் மின் திட்டம் | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 7 | சுருளியாறு நீர் மின் திட்டம். | .. | 0·80 | 20·04 | 66·91 | 1,50·26 | 2,38·01 | 2,00·00 | 1,65·00 | 1,19·00 |
| 8 | தூத்துக்குடி அனல் மின் திட்டம். | .. | .. | .. | .. | 4,04·43 | 4,04·43 | 5,00·00 | 1,00·00 | 1000·00 |
| 9 | மேல் கொடுமுந்து லோன் பள்ளத்தாக்கு மின் திட்டம். | .. | .. | .. | .. | 0·02 | 0·02 | 16·36 | 0·30 | 0·01 |
| 10 | புதிய திட்டங்கள் பேரிலான முன்னோடி நடவடிக்கை. | .. | .. | .. | .. | .. | .. | 33·64 | — | — |
| | மொத்தம் மின் உற்பத்தித் திட்டங்கள். | 22,52·21 | 9,51·66 | 6,66·82 | 11,07·40 | 25,40·75 | 75,18·84 | 23,85·79 | 13,83·88 | 18,854·6 |

| எண். | மின் திட்டத்தின் பெயர்.. | 1969–70-ல் ஏற்பட்ட செலவு. | 1970–71-ல் ஏற்பட்ட செலவு. | 1971–72-ல் ஏற்பட்ட செலவு. | 1972–73-ல் ஏற்பட்ட செலவு. | *1973–74-ல் ஏற்பட்ட செலவு. | *நான்காவது திட்டக் காலத்தில் (1969–70 லிருந்து 1973–74 வரை) செலவு. | 1974–75 ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. | 1974–75 ஆண்டுக்கான திருத்த மதிப்பீடு. | 1975–76 க்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| II. | மின் அனுப்புதல், மின்சாரம் பங்கீடு செய்தல். | 5,79·07 | 10,98·85 | 7,89·03 | 9,98·08 | 11,43·44 | 46,08·47 | 12.00.00 | 10,00·00 | 11,00·00 |
| III. | கிராம மின்வசதி. | 8,75·00 | 8,75·00 | 8,75·00 | 14,00·00 | 6,50·00 | 46,75·00 | 10,00·00 | 10,00·00 | 9,00·00 |
| IV. | மின் நிறுவனங்களைக் கையகப்படுத்துதல். | —10·10 | 74·01 | 0·28 | 40·90 | 0·39 | 1,15·48 | 1,75·00 | 0·01 | 0·01 |
| | புதிய திட்டங்கள் குறித்த ஆய்வு. | 4·75 | 13·03 | 10·62 | 10·56 | 12·14 | 51·10 | 14·00 | 14·50 | 11.50 |
| | மின்சக்தி குறித்த ஆராய்ச்சிகள். | 0·33 | 0·48 | 0·56 | 0·43 | 1·00 | 2·80 | 2·00 | 2·14 | 4·00 |
| | மொத்தம்.. | 37,11·26 | 30,13·03 | 23,42·31 | 35,57·37 | 43,47·72 | 1,69,71·69 | 47,76·79 | 34,00·53 | 39,00·97 |
| | கிராம மின் வசதித் திட்டத்தில் சேர்க்கப் படாமல் செலவிடப் படும் தொகை. | 4,95·50 | 10,49·09 | 17,72·58 | 7,30·09 | 6.00·00 | 46,47·26 | .. | .. | .. |
| | பெரு மொத்தம்.. | 42,06·76 | 40,62·12 | 41,14·89 | 42,87·46 | 49,47·72 | 2,16,18·95 | 47,76·79 | 34,00·53 | 39,00·97 |

* உத்தேசமாக.

# தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

---

செவ்வாய்க்கிழமை, 1975 நவம்பர் 11.

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. நா. கணபதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

*Tirunelveli-Kanniyakumari Railway Line*

* 3. S.N. *Q.*—THIRU J. JAMES: Will the Hon. the Minister for Public Works be pleased to state:

(*a*) whether the execution of Tirunelveli-Kanniyakumari Railway work has been suspended by the Central Government? and

(*b*) if so, what action has been taken by this Government to insist upon the Central Government to expedite the execution of the Tirunelveli–Kanniyakumari district Railway work?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவர் அவர்களே, இந்த ஆண்டு திருநெல்வேலி—கன்னியாகுமரி இரயில்வே லைன் போடுவதற்காக எவ்வளவு பணம் ஒதுக்கியிருக்கிறார்கள்? இந்த 'ரேட்'டிலே போனால் எந்தக் காலத்தில் இந்த இரயில்வே லைன் வேலை பூர்த்தியாகும்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இந்த ஆண்டு எவ்வளவு பணம் ஒதுக்கி இருக்கிறார்கள் என்பதற்கான புள்ளிவிவரம் என்னிடம் இல்லை. இதுவரை 700 இலட்ச ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. திருநெல்வேலி--கன்னியாகுமரி இரயில் பாதை அமைக்கும் வேலை 1980-ஆம் ஆண்டு முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. என். கிட்டப்பா:** தலைவர் அவர்களே, திருநெல்வேலி—கன்னியாகுமரி இடையே இரயில் பாதை அமைப்பதற்கு மொத்த மதிப்பீட்டு தொகை எவ்வளவு என்று அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** 1972 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டின்படி ரூ. 14.54 கோடி ரூபாய்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** இதுவரையிலும் என்ன என்ன வேலைகள், இரயில் பாதை அமைப்பது சம்பந்தமாக முடிவுற்றிருக்கின்றன என்பதை அறியலாமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பாலங்களைப் பொறுத்த வரையில், 671 பாலங்கள் கட்டப்பட வேண்டியவற்றில், 200 பாலங்கள் கட்டிமுடிக்க பெற்று, 245 பாலங்கள் கட்டப்பட வேண்டியிருக்கின்றன. மீதமிருக்கும் பாலங்கள் இன்னும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. மண் வேலை இன்னும் முடிவடையவில்லை. தண்டவாளம் அமைக்கும் வேலை இன்னும் நடக்கவில்லை. நிலம் கையகப்படுத்தப்படுவதைப் பொறுத்து, யார் யார் சொந்தக்காரர்களோ அவர்களுக்கு எழுதப்பட்டு, நிலம் கையகப் படுத்தும் வேலை—ஆர்ஜித வேலை—குறித்து நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது.

**திரு. நா. வீராசாமி:** 1972-ஆம் ஆண்டு மதிப்பீட்டின்படி 14 கோடி ரூபாய் என்று சொன்னார்கள். 1980-ஆம் ஆண்டில் வேலை முடியும் என்றும் சொன்னார்கள். இன்றிருக்கும் விலைவாசியைப் பார்க்கும்போது, 1960-இல் கிட்டத்தட்ட இந்த மதிப்பீடு ரூ. 20 கோடிக்குப் போகக்கூடும். ஆகவே, மத்திய அரசுக்கு இதை எடுத்துச்சொல்லி, 1980-இல் நிச்சயமாக இந்த திருநெல்வேலி-கன்னியாகுமரி இரயில்பாதை அமைக்கும் வேலை முடிய ஆவன செய்யப்படுமா? நில ஆர்ஜிதம் கூட இன்னும் நடைபெறவில்லை. உடனடியாக நம்முடைய அரசு மத்திய அரசிடம் வலியுறுத்தி அதிகமாகப் பணம் கேட்டுப்பெற்று, இந்த வேலையை எடுத்துக் கொள்ள முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** 'நில ஆர்ஜித வேலை நடைபெறவில்லை' என்று நான் சொல்லவில்லை. நில ஆர்ஜித நடவடிக்கை இந்த அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. அந்த





வேலை சீக்கிரம் முடிவடையும் என்று நம்புகிறேன். 1972-ஆம் ஆண்டு மதிப்பீட்டின்படி ரூ. 14.54 கோடி என்றாலும், 1980-ஆம் ஆண்டில் எவ்வளவு பணம் செலவிடவேண்டியிருந்தாலும், அதை மத்திய அரசுதான் ஏற்றுக்கொண்டு வேலையைச் செய்து முடிக்கவேண்டும்; செய்வார்கள் என்று நம்புகிறேன். நிச்சயம் நடைபெறும்.

*Prohibition Enforcement Committees*

* 276 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Chief Minister be pleased to state:

(a) whether the Government have constituted Committees at State and District levels to enforce Prohibition in this State; and

(b) if so, the details of the same?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. என். கே. பழனிசாமி:** தலைவர் அவர்களே, சென்னை மாநிலத்தில் மது விலக்கு அமலில் இருந்தாலும், இங்கேதான் அதிகமாக கள்ளச் சாராயம் இருக்கிறது என்று பாரதப் பிரதமர் குறிப்பிட்டிருக்கிறாரே, அதைப் பற்றி சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா? அவர்களுக்கு பதில் ஏதாவது அனுப்பப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, பாரதப் பிரதமர் அப்படி எப்பொழுது குறிப்பிட்டார் என்று எனக்கு ஒன்றும் தகவல் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தத் தகவலைத் தெரிந்து வெளியிடுவார்களானால் நலமாக இருக்கும். கள்ளச் சாராய வியாபாரிகளையெல்லாம் 'மிஸாவின்கீழ்' கைது செய்தபோது அவர்களையெல்லாம் விடுதலை செய்யவேண்டுமென்று மத்திய அரசு ரொம்ப அக்கறையோடு உத்தரவு பிறப்பித்தது.

**திரு. வை. ர. முத்தமிழ்ச்செல்வன்:** தலைவர் அவர்களே, மது விலக்குக் கொள்கையினை நல்ல முறையில் செயல்படுத்துவதற்கு அந்தக் கிராமந்தோறும் மது விலக்குக் குழுக்கள் அமைத்து,

குழுக்கள் நல்ல முறையில் பணியாற்றுவதற்கு அண்ணா அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட சீரணித் தொண்டர்களைப் பயன்படுத்த அரசு ஏதேனும் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி**: தலைவர் அவர்களே, சீரணித் தொண்டர்களும் இதுபோன்ற காரியங்களில் காவல் துறையினருக்கு உதவியாக இருக்கலாம். அதில் எந்தத் தடையும் இல்லை. ஆனால், மாநில அளவில் உள்ளதுபோன்று மாவட்ட அளவிலும், வட்ட அளவிலும் இப்படிப்பட்ட குழுக்கள் அமைப்பதுபற்றிதான் அரசு இப்பொழுது பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து**: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் ஒரத்தநாடு பகுதியில் மது என்பது காய்ச்சப்படாமலும், குடிப்பவர்களே இல்லாமலும் அறவே எடுத்து விட்டார்களே, அம்மாதிரி முறையைப் பின்பற்றி மாநிலம் பூராவிலும் இதை அகற்றுவதற்கு அரசு முன்வருமா?

இந்தத் திட்டத்தை ஒரத்தநாடு பகுதியில் நல்ல முறையில் செயல்படுத்திய அந்தப் போலீஸ் இன்ஸ்பெக்டருடைய சேவையை அரசாங்கம் பயன்படுத்திக் கொள்வதற்கு ஏதாவது உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி**: ஒரத்தநாடு திட்டம் உள்ளபடியே பாராட்டத்தக்க, வரவேற்கத்தக்க ஒரு திட்டமாகும். ஒரத்தநாடு பகுதியில் உள்ள காவல் துறையினர் குறிப்பாக அந்தப் பகுதியில் இருக்கின்ற காவல் துறை அதிகாரி திரு. குருவையா அவர்கள் தலைமையில் மதுவிலக்கை அமுல்படுத்துகிற ஒரு பெரிய இயக்கம் தொடங்கப்பட்டு, அதிலே அனைத்துக் கட்சிகளும் பங்குகொண்டு, ஒவ்வொரு கிராமத்திலுள்ள பெரியவரும் அதிலே இணைந்து நின்று பணியாற்றியதன் காரணமாக இன்றைக்கு ஒரத்தநாடு பகுதியில் மது அறவே இல்லை என்ற நல்ல சூழ்நிலை உருவாகியிருக்கிறது. காவல் துறை அதிகாரிகள் மாநாட்டில்கூட அந்தத் திட்டம் பற்றி விரிவாகப் பேசப்பட்டது. அதை மற்ற காவல் துறை அதிகாரிகளும் அந்தந்த மாவட்டத்தில் அமல்படுத்துவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அது பரிசீலனையில் இருந்து வருகிறது.



**திரு. எ. கே. துரைசாமி**: தலைவர் அவர்களே, கள்ளச் சாராய விற்பனை கோவில்களுக்குப் பின்புறத்திலும், பள்ளிக் கூடங்களின் பின்புறத்திலும், சந்தைக் கடைப் பகுதிகளிலும், இடுகாட்டுப் பகுதிகளிலும் — இது போன்ற நகரத்தைச் சுற்று பரவலாக நடைபெறுகிறது. பொறுப்புள்ள அதிகாரிகளிடத்தில் சுட்டிக்காட்டியும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே, இந்தக் குழுவை அமைப்பதற்கு முன்னால், மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட போலீஸ் அதிகாரி ஆகியவர்களுக்கு உடனடியாக இது குறித்து துரிதமான நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி**: தலைவர் அவர்களே, மாண்புமிகு குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் என்னை எத்தனையோ தடவை சந்திக்கிறார்கள். பல்வேறு விஷயங்களைப் பேசுகிறார். ஆனால், இந்த விஷயத்தை இப்போதுதான் கேட்டிருக்கிறார். பொது விஷயத்தை என்னிடத்தில் பேசியிருந்தால் நான் அவைகளைப்பற்றி உடனடியாக கவனிக்க ஏதுவாக இருந்திருக்கும்.

**THIRU B. VENKATASWAMY**: Sir, in the present context and in the present set-up, the workload of every police station has become heavy because of introduction of prohibition. For the enforcement of this policy, will the Government sanction special staff for each police station?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி**: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போல ஒவ்வொரு ஸ்டேஷனிலும் ஒரு ஸ்பெஷல் ஸ்டாப் என்பதை வைப்பதற்கு நம்முடைய நிதி ஆதாரம் இடம் தராது. ஏற்கெனவே சென்னையில், தலைநகரத்தில் டி. ஐ. ஜி தலைமையில் மதுவிலக்கு ஹெட்குவார்ட்டர்ஸ் இயங்கி வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் இப்போது மாவட்ட அளவில் ஒரு டிபுடி சூப்பரெண்ட, காவலர்கள், இரு தலைமைக் காவலர்கள், சப்-இன்ஸ்பெக்டர் ஆகியோர் இருக்கிறார்கள். இதை மேலும் விரிவுபடுத்துவதற்கு நிதி ஆதாரம் இடம் தராது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவரவர்களே, மதுவிலக்கு தற்போது அமுலில் இருந்த போதிலும் ஒவ்வொரு காவல் நிலையத்திலும் இருக்கிற சில அதிகாரிகளே கள்ளச் சாராய விற்பனையை ஊக்குவித்து வருகிறார்கள். அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, இப்படிப்பட்ட காரணங்களை மனதிலே வைத்துத் தான் அகில இந்திய ரீதியிலே பெரிய மாற்றம் ஏற்பட வேண்டும் என்பதை நாம் அடிக்கடி எடுத்துக் கூறி வருகிறோம். பக்கத்து மாநிலங்களில் இன்றைக்கு ஏராளமாக மது இருக்கிற காரணத்தினால் அங்கிருந்து திருட்டுத்தனமாக நம்முடைய மாநிலத்திற்குள் வருவதற்கு ஏது ஆகிறது. அவைகளைப் பயன்படுத்திக் கொண்டு சர்க்காரிலே இருக்கின்றவர்களாக இருந்தாலும், சில காவல் துறை அதிகாரிகளானாலும் அதிலே ஈடுபடுகிறார்கள் என்பது முற்றிலும் உண்மை. ஆனால், இப்படிப்பட்ட அதிகாரிகள் மீதும், காவலர்கள் மீதும் விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. பலர் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். பலருக்கு இன்றைக்கு சஸ்பென்ஷன் ஆர்டர் கொடுக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வருகின்றது.

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவரவர்களே, இப்போது மதுவிலக்கு அமுலில் இருக்கின்ற போதே இந்தக் குற்றங்கள் அதிகமாகிக்கொண்டு வந்து கொண்டிருக்கிறதே, இது மாநில அளவிலே எந்த அளவிற்கு குற்றங்கள் அதிகரித்து இருக்கிறது. குற்றம் புரிபவர்களுக்கு அளிக்கப்படுகிற தண்டனையை மேலும் கடுமையாக்குவதற்கான முயற்சிகளை அரசாங்கம் மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் திரு. மு. கருணாநிதி:** தலைவரவர்களே, 1—9—74-ல் நாம் மீண்டும் மதுவிலக்கை நடைமுறைப் படுத்தத் தொடங்கினோம். 31—8—75 முடிய இந்தக் குற்றங்களைச் செய்து தண்டனை பெற்றவர்கள் 3,96,463 பேர். இவர்களிலே 50 ஆயிரம் பேர் சிறைத் தண்டனையும், 2,61,000 பேர் அபராதமும் கட்டியிருக்கிறார்கள். அபராதமும், சிறைத் தண்டனையும் பெற்றவர்கள் 85 ஆயிரம் பேர். இதை விட இன்னும் வேகமாக என்ன





நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் சொல்லுவாரானால் அதைக் கருத்தில் வைத்து அரசு செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, மதுவிலக்கைத் தீவிரமாக அமுல் படுத்துவதற்காக நம்முடைய அரசாங்கம் இந்த மிசா சட்டத்தின் கீழ் ஒரு சில கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களை கைது செய்ததும் இப்படிச் சாராயம் காய்ச்சுபவர்கள் சார்பாக சில அரசியல் கட்சித் தலைவர்கள் மத்திய அமைச்சர் ஒருவரைச் சந்தித்து மனுக் கொடுத்ததாகவும், அவர் நம்முடைய அரசாங்கத்திற்கு இவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று கூறியதாகவும் தெரிகிறது. அப்படியானால் மத்திய அரசாங்கம் நம்முடைய அரசாங்கத்தை ஏதாவது விளக்கம் கேட்டு விடுதலை செய்யச் சொன்னார்களா அல்லது அவர்களே விடுதலை செய்யச் சொன்னார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, பொதுவாகக் கள்ளச் சாராயம் காய்ச்சிய சுமார் 170-க்கு மேற்பட்ட பெரிய புள்ளிகள் 'மிசா' சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டார்கள். அவர்களையெல்லாம் விடுதலை செய்துவிடலாம் என்று மத்திய அரசு தெரிவித்தது. அதன்படி அவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** தலைவரவர்களே, சில மாதங்களுக்கு முன்பு சென்னையிலே கள்ளச் சாராயம் குடித்த பலபேர் மடிந்ததாக ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து இத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெறாமல் தடுப்பதற்கு உறுதியான நடவடிக்கைகள் என்ன எடுக்கப்பட்டன? அதோடு காவல் துறையை அதிகப்படுத்தினால் மேலும் செலவு ஆகும் என்று சொன்னார்கள். அது உண்மை. ஆனால் அதே சமயத்தில் இன்றைய தினம் பட்டப்பகலிலேயே, பல இடங்களில் வெளிப்படையாகவே கள்ளச் சாராய விற்பனை நடந்து கொண்டிருக்கிறது. இதிலிருந்து மதுவிலக்கிலே பரிபூர்ண நம்பிக்கை கொண்டவர்களிடமிருந்து செவ்வனே அரசுக்கு ஒத்துழைப்பு வந்திருக்கிறதா, அப்படியானால் அவர்களிடமிருந்து ஒத்துழைப்பைப் பெறுவதற்கு உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்க முயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, மக்கள் முன் வந்து வழங்குகிற ஒத்துழைப்பை ஏற்றுக் கொள்ள முடியாது என்பதைப் போல மாண்புமிகு உறுப்பினர் கேள்வியை அமைத்திருக்கிறார். மக்கள் ஒத்துழைப்பானாலும், மக்கள் பிரதிநிதிகளிடமிருந்தானாலும், இப்படிப்பட்ட நிலைமைகள் எங்கு ஏற்பட்டாலும் அவைகளை உடனடியாக அதிகாரிகளுக்குத் தெரிவிக்கலாம். அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காவிட்டால் எங்களிடத்திலே, அரசினிடத்திலே அவைகளைத் தெரிவிக்கலாம். பொதுவாக நான் அடிக்கடி கேட்கப்பட்ட கேள்விக்குப் பதில் சொல்லியிருக்கிறேன். இப்படிப்பட்ட நிலைமையில் மிசா சட்டத்தின் கீழ் கள்ளச் சாராயக்காரர்களைக் கைது செய்து போது ஓரளவிற்கு இது அடங்கியிருந்தது. அவர்கள் விடுதலை பெற்ற பிறகு, அவர்களையெல்லாம் விடுதலை செய்து வெளியே விட்ட பிறகு இன்றைக்கு மீண்டும் அதை மிக வேகமாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. கு. காமாட்சி:** தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னது இவர்களை மிசா சட்டத்தின் கீழ் கைது செய்த நேரத்திலே நல்ல முறையிலே கள்ளச் சாராய விற்பனை கட்டுப்படுத்தப்பட்டிருந்தது, காய்ச்சுபவர்களும், விற்பனை செய்பவர்களும் கட்டுப்படுத்தப்பட்டிருந்தனர் என்றும், இப்போது அவர்களை மிசா சட்டத்தில் கைது, அரெஸ்டு செய்யாததால் இவர்களைக் கட்டுப்படுத்த, தடுக்க வேறு ஏதாவது மாற்றுத் திட்டத்தை அரசு வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, போலீஸ் அதிகாரிகள் இப்படிப்பட்டவர்கள் மீது ஒழுங்காக கண்காணிப்பு வைத்து, இப்படிப்பட்டவர்களைக் கட்டுப்படுத்த, தடுப்பதற்கு ஏற்ற வகையில் தீவிரமாகச் செயல்பட்டு சில நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். மிசா சட்டம் இல்லாவிட்டாலும் இந்தக் குற்றத்தைச் செய்து வருகிறவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



**திரு. என். கே. பழனிசாமி:** தலைவரவர்களே, சமீபத்தில் விஷ மதுவினால் 40 பேர் இறந்தும், பலபேர் பாதிக்கப்பட்டும் இருந்தார்கள், அதை இந்த மாநிலத்திற்குள் கொண்டு வருவதற்கு உடந்தையாக இருந்த அதிகாரிகள் மீதும், மற்றவர்கள் மீதும் சர்க்கார் நடவடிக்கை எடுத்ததா? அவர்கள் பேரில் சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்தது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, குறிப்பாக எந்த அதிகாரிகள் உடந்தையாக இருந்தார்கள் என்ற தகவல் இல்லை. இந்தச் சம்பவம் குறித்து பொதுவாக ஒரு வழக்கு நடைபெற்றது.

*Shooting incident at Madurai*

* 277 Q.—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Chief Minister be pleased to state:

(a) whether there was any shooting incident in Police Station at Madurai about the 4th January 1975; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** (அ) 3—1—1975 அன்று துப்பாக்கியால் சுடப்பட்ட நிகழ்ச்சியொன்று நடைபெற்றது. 4—1—1975 அன்று அல்ல.

(இ) மெய்க்காவல் பணியிலிருந்த சேமக்காவல் படைப் பிரிவின் நாயக் ஒருவர் 3—1—1975 அன்று மதுரை B1 காவல் நிலையத்திற்கு வந்தாரென்றும் வாயிலில் முறைக் காவல் பணியிலிருந்த காவலரையும், காவல் துறை இன்ஸ்பெக்டரையும் நோக்கித் துப்பாக்கியால் சுட்டாரென்றும், அதன் பின்னர் தற்கொலை செய்து கொள்ள முயன்றார் என்றும் கூறப்பட்டுள்ளது. ஒழுங்கீனமாக நடந்து கொண்ட அந்த நாயக் மீது இன்ஸ்பெக்டர் இலாக்கா நடவடிக்கை எடுத்தாரென்ற காரணத்தால் அவரிடம் அந்த நாயக் பகை கொண்டார் என்று கூறப்படுகிறது. B1 மதுரை மத்திய காவல் நிலையத்தில் அந்த நாயக் மீது குற்ற வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு மதுரை செஷன்ஸ் நீதி மன்றத்திற்கு விசாரணைக்காக அனுப்பப்பட்டுள்ளது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவரவர்களே, இம்மாதிரி ஒரு போலீஸ் அதிகாரியை, போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று, அங்கிருக்கக் கூடிய ஒரு போலீஸ் அதிகாரி பேரில் துப்பாக்கிப் பிரயோகம் செய்வது என்பது ரொம்பவும் ஆபத்தான விஷயம் அல்லவா. ஆகவே, இந்த மாதிரியான சம்பவங்கள் மதுரையில் மட்டும் அல்லாமல் மற்ற இடங்களிலும் நடக்காமல் இருப்பதற்கு அரசாங்கத்தில் என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது? குறிப்பாக, ரிசர்வில் உள்ளவர்களுக்கும், லோகல் போலீசில் இருப்பவர்களுக்கும் நல்லுறவு உருவாவதற்கு ஏதாவது ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறதா, இனி செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, 1974-ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் சம்பந்தப்பட்ட நாயக் ஜகந்நாதன் என்பவர் கைதிகளை அழைத்துச் செல்கிற வேலையில் இருந்த போது அவர் குடிபோதையில் இருந்தார் என்றும், அப்போது ஒரு பெண்ணிடம் தகாத முறையில் நடந்தார் என்றும் ஒரு புகார் வந்தது, இந்தப் புகாரை மேற்கொண்டு விசாரித்து, மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த நாயக் 2 மாதம் சஸ்பெண்ட் செய்யப்பட்டு, வேலை நீக்கம் செய்யப்பட்டிருந்தார். இதனால் ஏற்பட்ட ஆத்திரம் காரணமாக அந்தக் காவல்துறை நாயக் அந்த அதிகாரி மீது சுட்டிருக்கிறார். இப்படிப்பட்ட காரியங்கள் நடைபெறும் என்று அரசு எதிர்பார்த்து அதற்கு முன் நடவடிக்கை எடுக்க முடியாது. இது திடீரென்று நடந்து விட்ட, எதிர்பாராத நிகழ்ச்சி என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## *Transfer of Officials*

*278 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Chief Minister be pleased to state the steps taken by the Government to enable the Government servants including Government School teachers, who are at distant places, to work in the same place as far as possible in case both are employed?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** கணவன், மனைவி ஆகிய இருவருமே அரசுப் பணியில் இருப்பின், அவர்கள் அரசுப் பணியில் இன்றியமையாமைக்குப் பாதகமின்றி பொதுவாக ஒரே



இடத்தில் வேலையிலமர்த்தப்பட வேண்டுமென்று 1937 ஆம் ஆண்டில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளை மீண்டும் ஒருமுறை எடுத்துரைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்ட நீதிபதிகள் ஆகியோர் உட்பட துறைத் தலைவர்களுக்கு அரசு 1961 ஆம் ஆண்டில் முன்னரே பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளை வலியுறுத்தியுள்ளது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவரவர்களே, அரசாங்கம் இப்படிப்பட்ட உத்தரவுகளைப் போட்டிருந்தும் தற்போது பல அலுவலகங்களில் இது பின்பற்றப்படவில்லை. முதலமைச்சர் அவர்கள் இந்த உத்தரவினை நல்ல முறையில் கடுமையாகச் செயல்படுத்துவதற்கு உத்தரவிட முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இதில் மென்மையாக இருக்க வேண்டும், கடுமையாக இருக்கக் கூடாது. இந்த உத்தரவை சில சில சந்தர்ப்பங்களில் செயல்படுத்த இயலாது. இதை அமுல் படுத்த முடியாத சில சூழ்நிலைகள் ஏற்படுகின்றன. அந்தச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப அதிகாரிகள் நடந்துகொள்ளலாம் என்று இந்த உத்திரவில் ஒரு விதி இருக்கிறது.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** தலைவரவர்களே, பல துறைகளில் பணியாற்றும் அரசாங்க ஊழியர்கள் கணவனும் மனைவியும், இருவரும் ஒரே இடத்தில் போடுவதற்கு பல சூழ்நிலைகளால் மறுத்து விடலாம். இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் அவர்களை ஒருவருக்கொருவர் வெகு தொலைவில் உள்ள இடங்களுக்குப் போடாமல், அருகருகில் உள்ள இடங்களில் போடுவதற்கு அரசு உத்தரவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, கூடுமான வரையில் அரசு இவைகளை யெல்லாம் அனுதாபத்தோடு நோக்கவேண்டுமென்று சொல்லிக் கொண்டு வருகிறது.

**திரு. த. சோலையா:** தலைவரவர்களே, கணவன் ஒரு இலாகாவிலும், மனைவி ஒரு இலாகாவிலும் இருந்தால், இரண்டையும் ஒன்று சேர்ப்பதில் சிறு சிக்கல் வருகிறது. அவர்கள் இரண்டு பேரையும் ஒரே இடத்தில் போடுவதற்கு உள்ள இப்படிப்பட்ட

[1975 நவம்பர் 11

சிக்கல்களைத் தீர்ப்பதற்கு ஏதாவது ஒரு ஸ்பெஷல் ஆர்டர் போட்டு அரசாங்கம் இந்த இருவரையும் ஒன்று சேர்ப்பதற்கு ஏற்பாடுகள் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** கணவனும் மனைவியும் ஒன்று சேர்ந்து இருக்க வேண்டும் என்பதுதான் அரசினுடைய நோக்கம். அது சில நேரங்களில் இருப்பதற்கு இல்லாமல் போய் விடுகிறது.

**திரு. எஸ். வடிவேல்:** பேரவைத் தலைவர் அவர்களே, அச்சிறுப்பாக்கம் உயர்நிலைப்பள்ளியில் வேலை பார்க்கும் கந்தசாமி ஆசிரியர், அவரது மனைவியும் மாற்றல் கோரி இரண்டு ஆண்டுகள் ஆகியும் ஏன் அது கவனிக்கப்படவில்லை. அதில் என்ன சிக்கல் இருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தனியார் கோரிக்கை தனியாகக் கேட்டால் அதுபற்றி விசாரிக்கலாம்.

**திரு. நா. வீராசாமி:** 1937-ம் ஆண்டு அரசு உத்தரவுப்படி இது அமல்படுத்தப்பட்டு வருகிறது என்று சொன்னார்கள். 1937-ஆம் ஆண்டில் நூற்றுக்கு ஒன்று கணவன்-மனைவி வேலை பார்த்தார்கள். ஆனால் 1975-ம் ஆண்டில் நூற்றுக்கு 25 அல்லது 30 சதவிதம் கணவன் மனைவிகள் வேலை செய்யக்கூடிய வாய்ப்பு உருவாகியிருக்கிறது. பல இடங்களில் இப்படிப்பட்ட சிக்கல்கள் வருகின்றன. இதற்கு ஏதாவது மாற்று யோசனை அரசிடம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அதனால்தான் மாற்றாமல் பார்த்துக் கொள்வதற்கு அரசு யோசித்து வருகிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இது மாநில சர்க்காரின் கீழ் பணியாற்றுகிறவர்களுக்கு மட்டும்தான் பொருந்துமா? தம்பதிகளில் ஒருவர் மாநில அரசிலும் மற்றொருவர் மத்திய அரசிலும் பணியாற்றினால் இந்த உத்தரவு செல்லுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** முடிந்த வரையில் மாநில அரசும் மத்திய அரசும் இந்த விஷயத்தில் உறவு கொண்டு கணவன் மனைவி உறவு கெடாமல் பார்த்துக் கொள்ளும்.



1975 நவம்பர் 11]

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** ஒரு கணவனுக்கு இரண்டு மனைவிகள் இருக்கிற சமயத்தில் இரண்டு பேரையும் ஒரே இடத்தில் போட்டு கணவன் பாதிக்கப்படுகிறார். கணவனைக் காப்பாற்றுகிற முறையில் அரசாங்கம் ஏதாவது உத்தரவு போட்டிருக்கிறதா?

(பதில் இல்லை.)

**திரு. ந. சோமசுந்தரம்:** தலைவர் அவர்களே, தற்போது சில அலுவலகங்களில் கணவனும் மனைவியும் ஒன்றாக இருக்கிற இடங்களில் அசாதாரண காரணங்களுக்காக அதிகாரிகள் திடீரென்று வெவ்வேறு ஊர்களுக்கு மாற்றி விடுகிறார்கள். அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுகிறபொழுது அந்தக் குற்றச்சாட்டுகளை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வந்து கணவன் மனைவி பிரிகிற அந்த நிலையை அரசாங்கத்தின் அனுமதியோடு செய்வதற்கு அரசு ஆணை பிறப்பிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அப்படிப்பட்ட சூழ்நிலை வந்தால் அரசு அது பற்றி பரிசீலிக்கலாம். இப்போதுள்ள சங்கடம் அப்படி மாற்றுகிற நேரத்தில் கணவன் வேலை பார்க்கிற இடத்தில் மனைவிக்கு வேலை கொடுக்க அந்த இலாகாவில் காலி இடம் இருக்க வேண்டும். அப்படி இல்லையென்றால் அந்த ஊரில் கொண்டு போய் பணியாற்ற வேண்டுமென்று வற்புறுத்துவது இயலாததாகிவிடுகிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல் 1937-ம் ஆண்டு இருந்த சூழ்நிலை வேறு, இப்போதுள்ள சூழ்நிலை வேறு. அப்போது பெண்கள் மிகக் குறைவானவர்களே பணியில் ஈடுபட்டார்கள். இப்போது அதிகமான அளவுக்கு ஈடுபடுகிறார்கள். அப்போதுள்ள நிலைமைக்கு அது போதுமானதாக இருந்தது. இப்போது சங்கடங்கள் இருக்கின்றன.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** இந்த ஊராட்சி ஒன்றியங்களில் பல நேரங்களில், தன்னாட்சி நிறுவனங்களாக இருந்தாலும் கூட, பல நேரங்களில் ஒரே இடத்தில் இருக்கிற கணவன் மனைவியைப் பிரித்து ஏதோ காரணங்களுக்காக வேறு இடங்களுக்கு மாற்றி விடுகிறார்கள். அப்படிப்பட்ட செயல்களைத் தடுப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இதுபற்றி மேல் அதிகாரிகளுக்குத் தெரிவித்தால் உரிய நடவடிக்கை எடுக்கலாம். வேண்டுமென்று தவறு செய்தால் உரியவர்களுக்குத் தெரிவித்தால் அது பற்றி விசாரிக்கலாம்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** தலைவர் அவர்களே, இந்த கணவன் மனைவி இருவரையும் ஒரே இடத்தில் வேலை செய்யப் போடா விட்டாலும், ஒரு 25 மைல் தொலைவுக்குள் அவர்களை வைப்பதற்காவது முயற்சிக்க வேண்டும். அப்படிப் போடுவதில் சிரமம் இருக்காது. அதையாவது அரசு வலியுறுத்துமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஒரே இடத்தில் பணியாற்றுவதற்கு வசதிகளைச் செய்து தர விரும்புகிறோம். அதற்கேற்ற முடிவுகளை எடுக்கிறோம் அதற்கு இயலாவிட்டால் அம்மையார் அவர்கள் சுட்டிக்காட்டியது போல் அருகாமையில் பணியாற்ற செய்ய முடியுமா என்று பார்த்து ஆவன செய்கிறோம்.

**திரு. கு. காமாட்சி:** தலைவர் அவர்களே, சில இடங்களில் கணவனும் மனைவியும் ஒன்றாக இருப்பதால் வேலைகள் சரிவர நடைபெறுவதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமென்றால் ஒரு பள்ளியில் இரண்டு பேரும் ஆசிரியராக இருந்தால் ஒருவர் வீட்டில் இருக்கிறார் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உதாரணம் ஒன்றும் வேண்டாம். கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. கு. காமாட்சி:** கூடுமானவரையில் காலையில் பிரிந்து மாலையில் சேருகிற அளவுக்கு இருந்தால் போதுமானது. அதை அரசு அனுசரிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இருவரும் ஒன்றாக இருக்கிற காரணத்தால் காரியங்கள் நடைபெறாது என்று கூறுவது பொருத்தமுடையதல்ல. அதிலும் குறிப்பாக ஆசிரியப் பெருமக்கள் பள்ளிகளில் பணியாற்றுகிறார்கள். காலையில் பிரிந்துதான் தங்கள் பணியை ஆற்றிவிட்டு மாலையில் வீட்டுக்கு வருகிறார்கள். பள்ளி வேறு, வீடு வேறு.



## பெற்றோர்—ஆசிரியர் சங்கம்

* 279 வினா—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள எல்லா எலிமெண்டரி பள்ளிகளிலும், செகண்டரி பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும், பெற்றோர்—ஆசிரியர் சங்கம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) & (இ) கட்டாயப்படுத்தும் செயற்குறிப்பு இல்லை. ஏற்படுத்துவதற்கான பரிந்துரை வழங்கப்பட்டு ஊக்கம் அளிக்கப்பட்டு வருகிறது.

THIRU B. VENKATASWAMY: Sir, may I know from the Hon. Minister for Education and Tourism whether any awards have been given to the Schools which are maintained by the Parents–Teachers Association in a good manner in the State?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, பெற்றோர்கள்-ஆசிரியர்கள் சங்கத்தின் சார்பில் சாதாரணமாக பள்ளி இறுதித் தேர்வில் வெற்றி பெற்றவர்களைப் பாராட்டுகிற வகையில் அவர்களுக்கெல்லாம் மாணவர்—பெற்றோர்—ஆசிரியர்கள் சங்கத்தின் சார்பில் சுவர் கடிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல. ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் 5 பள்ளிகள், சிறந்த பள்ளிகளாக பெற்றோர்கள்-ஆசிரியர்கள் சங்கங்கள் வைத்து ஆசிரியர்களுக்கும் பொது மக்களுக்கும் சிறந்த தொடர்பை ஏற்படுத்தியவர்களை பாராட்டுகிற வகையில் சுவர் கடிகாரம் வழங்கப்பட்டு ஊக்கம் அளிக்கப்பட்டு வருகிறது.

**திரு. கா. வேழவேந்தன்:** தலைவர் அவர்களே, இந்த பெற்றோர்கள்—ஆசிரியர்கள் சங்கங்கள் சில இடங்களில் நன்றாக செயல்பட்டு வருகின்றன. அவைகளை ஊக்குவிக்கின்ற வகையில் ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் ஒரு குறிப்பிட்ட சிறப்பு நிதியை ஒதுக்கி அந்த அந்தப் பெற்றோர்கள்-ஆசிரியர்கள் சங்கங்கள் செயல்படுகிற ஊர்களில் எங்கு நன்றாக செயல்படுகின்

றனவோ அவைகளுக்கு ஈட்டு மானியம் கொடுப்பீர்களேயானால் சுற்றுச் சுவர் அமைத்தல், தோட்டம் அமைத்தல் போன்ற பள்ளி மேம்பாட்டிற்கான பணிகளை மேற்கொள்ள முடியும். அரசாங்கம் இதனை யோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, மானியம் வழங்கும் யோசனையை அரசாங்கம் ஏற்றுக் கொள்வதற்கில்லை. ஏனென்றால், இவைகளுக்கு மானியம் வழங்குவதில்லை. பெற்றோர்கள்-ஆசிரியர்கள் சங்கங்கள் சார்பாக பள்ளிகளுக்கு வேண்டிய வசதிகளைச் செய்வதற்காக பள்ளி சீரமைப்பு மாநாடுகள் நடத்தும்போது பொதுமக்களின் தொடர்பு இந்தப் பள்ளிகளுக்கு ஏற்படுத்தவும் இந்தச் சங்கங்கள் பாடுபடுகின்றன. ஆனால், பெற்றோர்கள்-ஆசிரியர்கள் சங்கம். ஒரு குறிப்பிட்ட தொகையை ஈட்டித் தரும்பொழுது ஈட்டு மானியத் தொகையாக ரூ. 20 ஆயிரம் தந்தால் அரசாங்கம் ரூ. 20 அல்லது ரூ. 30 ஆயிரம் கூடுதல் போட்டால் ரூ. 50 ஆயிரத்தில் கட்டடம் கட்டும் முயற்சிக்கு ஊக்கம் தருகிற வகையில் கொடுக்க முடியும். ஆனால், பெற்றோர்கள்-ஆசிரியர்கள் சங்கங்களை நடத்துவதற்கு மானியம் தருவதற்கில்லை.

**திரு. எம். சுரேந்திரன்:** தலைவர் அவர்களே, பெற்றோர்கள்-ஆசிரியர்கள் சங்கங்கள் இருப்பது நல்லது என்பதை அரசாங்கம் கருதித்தான் இதை எல்லா இடங்களிலும் ஊக்குவிக்க சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. இது நல்ல காரியமாக இருப்பதால் எல்லா இடங்களிலும் கட்டாயம் இம்மாதிரியான அமைப்புக்களை உண்டாக்க வேண்டுமென்றும், அதற்கான விதிமுறைகள் ஒழுங்குமுறைகளைத் தயாரித்து உருவாக்குவதற்கான, முறையான உத்தரவை ஏன் போடக் கூடாது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இப்படி இரண்டு ஆண்டுக் காலமாக அதிக ஊக்கம் காட்டியதன் விளைவாக 10,881 பள்ளிகளில் பெற்றோர்-ஆசிரியர்கள் சங்கங்கள் அமைக்கப்பட்டு பணியாற்றி வருகின்றன. உயர்நிலை பள்ளிகளைப் பொறுத்த வரையில் 1,806 உயர்நிலைப் பள்ளிகளிலும், 9,071 ஆரம்பப் பள்ளிகளிலும் பயன்பட்டு வருகின்றன. மேலும் எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும், உயர் துவக்கப் பள்ளிகளிலும் பெற்றோர்கள்-ஆசிரியர்கள் சங்கங்கள் இருக்க



வேண்டும் என்பது நமது கொள்கையாகும். அந்த வகையில் தான் மாவட்டக் கல்வி அதிகாரிகளும், மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரிகளும் இதில் அதிக ஊக்கம் காட்டவேண்டுமென்று அவர்கள் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

*Buildings for High Schools*

* 280 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to stated whether there are proposals under the consideration of the Government to put up additional building for the Nattalam Government High School in Kanyakumari district?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** ஆம், கட்டிடம் கட்டுவதற்கு தேவையான கருத்துரு உருவாக்குவது குறித்து மாவட்ட அளவில் பரிசீலனையில் உள்ளது.

* 281 வினா—திரு. மே. சி. தூயமணி: மாண்புமிகு கல்வி, சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையம் நகரிலுள்ள அரசினர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளிக்குத் தனிக் கட்டடம் அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இல்லை.

* 282 Q.—THIRU K. S. KOTHANDARAMIAH: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to construct additional buildings for the High School at Berikai Town in Hosur taluk; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

பொருட்காட்சி அமைவதால் இங்கே போகவேண்டும் என்கிற எண்ணத்தைத் தூண்டுவதாக இது அமையும். மேலும் அண்ணா நகரில் குடியிருப்புகள் தற்போது அதிகமாகிவிட்டன. அதுவும் பொருட்காட்சி என்று 1½ மாதங்கள் பல விழாக்களோடு நடைபெறுவதால் அங்கு குடியிருப்பவர்களுக்கு மிகவும் தொல்லையாக இருக்கிறது என்று பல மகஜர்கள் அனுப்பியிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் உள்ளடக்கித்தான் தற்போது பரீட்சார்த்தமாக இந்த ஆண்டு போர் நினைவு மண்டபத்திற்கு மேற்குப் பகுதியில் உள்ள இடத்தில் வைக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். இதுவே நல்ல இடமாக அமைந்தால், எதிர்காலத்தில் இங்கே நிரந்தரமாக அமையத்தக்க ஏற்பாடுகளைச் செய்ய சுற்றுலா வளர்ச்சிக்கழகம் முன்வரும்.

## *Recognised Medical Colleges.*

*284 *Q.*—THIRU N. DENNIS

THIRU N. KITTAPPA: Will the Hon. the **Minister for Health** be pleased to state—

(*a*) the Medical Colleges in the State for which recognition of the Indian Medical Council has been obtained; and

(*b*) the steps taken by the Government to get recognition for the remaining colleges?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) சென்னை மருத்துவக் கல்லூரி, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, சென்னை. மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர். கோயமுத்தூர் மருத்துவக் கல்லூரி, கோயமுத்தூர்.

(இ) செங்கற்பட்டிலுள்ள செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரிக்கும், திருநெல்வேலியிலுள்ள திருநெல்வேலி மருத்துவக் கல்லூரிக்கும் ஏற்பளிப்பது குறித்து இந்திய மருத்துவ மன்றத்திற்குக் கடிதம் எழுதப்பட்டுள்ளது.

**திரு. என். கிட்டப்பா:** ஏற்பளிப்புப் பெற வேண்டிய எஞ்சிய மருத்துவக் கல்லூரிகளுக்கு, அத்தகைய ஏற்பளிப்பு வழங்குவதில் காலதாமதம் ஆவதற்குக் காரணம் அறிவிக்க இயலுமா?



**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, ஒரு கல்லூரி தொடங்கப்பட்டு, அந்தக் கல்லூரியில் ஏற்படுத்தப்பட வேண்டிய எல்லாவிதமான வசதிகளும், கட்டிடங்களும், பிற ஆய்வுப் பகுதிகளும் முறையாக உருவான பின்னர்தான் அதை அங்கீகரிப்பது என்கிற முறையை இந்திய மருத்துவ மன்றம் கைக்கொண்டுள்ளது. செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி அந்தத் தகுதிகளை எல்லாம் பெறக்கூடிய நிலையை அடைந்திருக்கிறது. நெல்லை கல்லூரியும் அந்த நிறைவைப் பெறக்கூடிய நிலையைப் பெற்றுவிடும். ஆகவே இவற்றைப் பரிசீலனை செய்து, இவற்றுக்கும் ஏற்பளித்துவிடுவார்கள் என்று நம்புகிறோம்.

## சென்னையில் மலேரியா நோய்த் தடுப்பு.

*285 **வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னை நகரில் இந்த ஆண்டு ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் மீண்டும் மலேரியா நோய் பரவியதா?

(இ) ஆமெனில், அதைக் கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) & (இ) விவர அறிக்கை * ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. என். கிட்டப்பா:** தலைவர் அவர்களே, சென்னை நகரில் இந்த ஆண்டு ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் மலேரியா நோய் பரவிய காரணத்தினால் எத்தனைபேர் இறந்துவிட்டனர் என்று அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** எத்தனைபேர் இறந்தனர் என்கிற விவரம் இல்லை. ஆனால் மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவ மனைக்கு வந்து சிகிச்சை பெற்றவர்கள் எண்ணிக்கை ஜூலை மாதம் 2758 பேர்கள். ஆகஸ்டு மாதம் 4342 பேர்கள்.

[* 400-401-ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.]

THIRU K. M. SUBRAMANIAM: Sir, not only Malaria but many other diseases are on the increase in the City of Madras and one of the factors that contributes is the impossibility to control the civic offences like the construction of cow sheds. So, will the Government think of immediately amending the relevant Act so that effective measures can be taken to wipe out such offences?

THE HON. THIRU K. ANBAZHAGAN: I am sure the hon. Member is aware of the fact that the Special Officer of the Corporation is taking all possible steps and if any further amendment is required, he may suggest to the Government.

### குடிநீர் வழங்கு திட்டங்கள்.

*286 வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில், 1974—75 நிதியாண்டில் குடிநீர் வடிகால் வாரியம் எத்தனை புதிய திட்டங்கள் தயார் செய்தது?

(இ) அவைகளில் எத்தனை நிறைவேற்றப்பட்டன?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) & (இ) பத்து திட்டங்கள் ஆய்வு நிலையில் உள்ளன.

**திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்:** தலைவர் அவர்களே, சேரன் மாதேவி பேரூராட்சி குடிநீர் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு? அந்தத் திட்டத்தினை முக்கூடல், மயிலபுரம் ஊராட்சி குடிநீர் திட்டத்தினோடு நிறைவேற்ற அரசு என்ன நடவடிக்கை எடுத் திருக்கிறது என்பதை அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** சேரன் மாதேவி—பத்த மடை, வீரநல்லூர், ஆகிய குடிநீர் திட்டங்களின் மதிப்பீடு முறையே ரூ. 17.62 லட்சம், ரூ. 12.70 லட்சம் ஆகும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு திட்டங்களோடு கண்ணியூர் பஞ்சாயத்துத் திட்டம், வடக்கு கருகுறிச்சி சேருமா என்பது பரிசீலனையில் இருக்கிறது.





ஆய்வுத் திட்டம் குடிநீர் வாரியத்தின் பரிசீலனைக்கு அனுப்பப் பட்டிருக்கிறது. முக்கூடல் பற்றி இப்போது எந்தவிவரமும் காப்படவில்லை.

**திரு. சோ. அழகர்சாமி:** அந்தப் பத்து திட்டங்கள் எவை யெவை என்று அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, சங்கரன்கோயில் அபிவிருத்தித் திட்டம் (கூடுதல் நீர்நிலைத் தொட்டி), பாளையங்கோட்டை அபிவிருத்தித் திட்டம் (கூடுதல் நீர்நிலைத்தொட்டி), சேரன்மாதேவி, பத்தமடை குடிநீர்த் திட்டம், வீரவநல்லூர் குடிநீர் திட்டம், கரண்டை குடிநீர் திட்டம், பணகுடி குடிநீர் திட்டம், செட்டிகுளம், லெவிஞ்சிபுரம் குடிநீர்த் திட்டம், செங்கோட்டை அபிவிருத்தித் திட்டம், அகில இந்திய வானொலி, ராணி அண்ணாதுரை மகளிர் கல்லூரி, காந்திநகர் காலனி ஆகிய இடங்களுக்கு திருநெல்வேலி குடிநீர்த் திட்டம்—ஆகியவைதான் அவைகள்.

*287 வினா—திரு. த. சோனையா: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியம், தென்னவராயன் புதுக்கோட்டை கிராமத்திற்குப் பாதுகாக்கப் பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் ஏதேனும் ஆய்விலுள்ளதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** ஆம்.

**திரு. த. சோனையா:** இந்த தென்னவராயன் புதுக்கோட்டை கிராமத்தில் குடிதண்ணீர் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அந்தத் திட்டத்தை அரசாங்கம் கொஞ்சம் துரித மாக எடுத்து முடித்துக் கொடுக்க ஏற்பாடு செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** அந்தப் பகுதியில் குடி தண்ணீர் கஷ்டம் இருக்கிற காரணத்தினால்தான், குறைந்தபட்ச தேவைத் திட்டத்தின்கீழ் இதை மேற்கொண்டு செய்யவேண்டும் என்பது ஆலோசனையில் இருக்கிறது. அது இப்போது அநேக மாக தொடங்கக்கூடிய கட்டத்தில் இருக்கும் என்று எதிர்பார்க் கிறேன்.

## வடிகால் திட்டங்கள்.

*288 வினா—திரு. மா. வெ. நாராயணசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருவொற்றியூர் நகரத்தில் அடிநில வடிகால் திட்டப்பணி எப்போது முடிவுறும்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: திருவொற்றியூர் வடிகால் திட்டம் 1978—79-ம் ஆண்டில் முடிவுறும் என்று கூறப்படுகிறது.

*289 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் வினா எண். 219-க்கு, 30—1—1974 அன்று அளித்த விடையையொட்டி தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மாயூரம் நகரில் பாதாள சாக்கடை அமைத்திடும் செயற்குறிப்பு தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஆய்வு வேலைகள் முடிவடைந்து தலைமைப் பொறியாளரின் பரிசீலனையில் உள்ளது. இருப்பினும் குடிநீர் வசதிக்கு முன்னுரிமை வழங்க வேண்டியுள்ளதால் இத்திட்டம் இவ்வைந்தாண்டு திட்ட காலத்தில் மேற்கொள்ளப்படும் என்று உறுதி சொல்ல இயலாது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, மாயூரம் நகரில் பாதாள சாக்கடை அமைப்பதற்கான திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா? அதை எந்தக் காலத்திலாவது எடுத்துக் கொள்வதற்கு யோசனை இருக்கிறதா என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, எந்தக் காலத்திலே என்று என்னால் சொல்ல முடியாவிட்டாலும் அது யோசனையில் இருக்கிறது என்று சொல்லமுடியும். ஏனென்றால், பல்வேறு பகுதிகளிலே பாதாள சாக்கடைத் திட்டங்கள் வலியுறுத்தப்படுகின்றன. நகர்ப்புறத்திலே அது தேவையாகத்தானிருக்கிறது. இந்தப் பாதாள சாக்கடைத் திட்டங்களுக்கு முதலீடு செய்கிறபோது அதைத் திருப்பிக் கொடுக்கிற



ஆற்றல் பொதுவாக நகரசபைகளுக்கு இல்லை. அதாவது கால்வாய்களைக் கட்ட ஆகின்ற செலவுக்கான தொகையை நாம் கொடுத்தால் அதைத் திருப்பிக் கொடுக்கின்ற ஆற்றல் நகரசபைகளுக்கு இல்லை. குடிநீர் திட்டத்திற்காக வழங்கப்படும் மொத்தத் தொகையையும் குடிநீர் வழங்கலே பயன் படுத்துவதில் நியாயமிருக்கிறது. குடிநீர் திட்டத்திற்காகச் செலவு செய்தால் அதிலிருந்து வருமானம் வர வாய்ப்பிருக்கிறது. பாதாள சாக்கடைத் திட்டத்திற்குச் செலவு செய்தால், அதனை வரிகளை ஏற்றித்தான் நாம் ஈடுகட்ட வாய்ப்பிருக்கிறதே தவிர, தனியாக வருமானம் பெற வாய்ப்பு சற்றுக் குறைவாக இருக்கிறது.

## புதுக்கட்டளை கால்வாயின் குறுக்கே பாலம்

*255 வினா—திரு. கு. காமாட்சி: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருவெறும்பூர் தொகுதி, மணிகண்டம் ஒன்றியம், பாகனூர், ஊராட்சிக்கு அருகில் புதுக்கட்டளை உயர்மட்டக் கால்வாயின் குறுக்கே பாலம் ஒன்று கட்டும் திட்டம் ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை.

திரு. கு. காமாட்சி: தலைவரவர்களே, பாலம் அமைப்பதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. அதில் ஒரு பகுதி தொகையை, கிராமத்திலுள்ள மக்கள் கொடுக்க முன் வந்துள்ளார்கள். ஆகவே, இதனை மீண்டும் பரிசீலனை செய்து, கால்வாயின் குறுக்கே பாலம் அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, பாலம் கட்ட மட்டும் ரூ. 50,000 செலவாகும். அதற்கு அணுகு சாலைகள் அமைக்க ரூ. 50,000 செலவாகும். ஆக ரூ. 1 இலட்சம் செலவாகும் என்று சொல்லப்படுகிறது. அந்தத் தொகையை ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து செலவு செய்யவேண்டும். ஊராட்சி ஒன்றியத்திடம் நிதியில்லை. ஆகவே, அரசு வேறு வேலைத் திட்டங்களில் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் சிபாரிசு செய்திருக்கிறார். நிதிப் பற்றாக்குறை காரணமாக இப்பொழுதில்லையென்று நான் சொன்னேன்.

## வன்னத்தங்கரை பள்ளத்தில் புதிய குளம்.

* 256 வினா—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சூலூர் வட்டம், வதம்பச்சேரி பக்கத்தில் உள்ள வன்னத்தங்கரை பள்ளத்தில் ஒரு குளம் கட்டுவது குறித்து விண்ணப்பம் பொதுமக்களிடம் இருந்து அண்மையில் அரசுக்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) இல்லை. ஆனால் இத்திட்டத்தைக் குறித்து செயற் பொறியாளர், பொள்ளாச்சி கோட்டம் அவர்களுக்கு கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியாளர் மூலமாக ஒரு விண்ணப்பம் வந்துள்ளது.

(இ) நிலங்களை கையகப்படுத்துவதற்காகும் செலவு மிக அதிகமாயிருக்கும் எனவும் இத்தகைய குட்டைத் திட்டங்களுக்கு பின்பற்றப்படும் அடிப்படை விதிகளையொட்டி, இத்திட்டங்கள் ஆதாயம் தருபவையாக இரா என்றும் தொடக்க ஆய்வுகளிலிருந்து தெரியவந்துள்ளது.

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவரவர்களே, இந்தத் திட்டத்திற்கு இடம் கையகப்படுத்துவதற்கு எஸ்டிமேட் அதிகமாகிறதே என்ற காரணத்தை அமைச்சரவர்கள் பதிலிலே சொன்னார்கள். ஆனால் இந்தத் திட்டத்திலேயுள்ள பெரும் பள்ளத்தில் ஏராளமான தண்ணீர் போய்க்கொண்டிருக்கிறது. அதைத் தடுத்து நிறுத்துவதற்கு அங்கு புறம்போக்கு அதிகமாக இருக்கிறது. கரிசப்பாளையத்திலேயே புறம்போக்கு இருக்கிறது, பாப்பன்பட்டிக்கு அருகிலேயே புறம்போக்கு இருக்கிறது. அந்த அளவுக்காவது அதனை எடுத்து, சரி செய்தால் பெரும் ஏரியாவுக்கே பயனுள்ள திட்டம் ஆகும். அத்திட்டத்தினை 1967-லிருந்தே விவசாயிகள் வற்புறுத்தி வருகிறார்கள். 1967-க்கு முன்னாலே அது பெரும் குளமாக இருந்தது. அதை விவசாயிகள் 'ஆக்ருபை' பண்ணிக் கொண்டார்கள். அந்த விவசாயிகளை



அப்புறப்படுத்தி அதனை ஜாரி செய்தால், நிச்சயமாகப் பலன் ஏற்படும். அதை அரசு பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, புதிய யோசனை ஒன்றை அங்கத்தினரவர்கள் குறிப்பிடுகிறார்கள். ஏற்கனவே உள்ள குளத்தை யாரோ ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள் என்றும் கூறுகிறார்கள். ஆக்கிரமிப்பாளர்கள் யார் என்பது தெரியவில்லை. ஆக்கிரமிப்பாளர்கள் யாராக இருந்தாலும் அவர்களை அப்புறப்படுத்த வேண்டியது அவசியம் என்பதை ஒத்துக் கொள்கிறேன். அப்புறப்படுத்த வேண்டிய நடவடிக்கை எடுத்து, புதிய யோசனை சாத்தியக்கூறானதா இல்லையா என்பதை அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## சின்னக்கரையின் குறுக்கே பாலம்

* 257 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருப்பூர்—பல்லடம் பாதையில் சின்னக்கரையின் குறுக்கே பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இல்லை.

**திரு. சு. துரைசாமி:** தலைவரவர்களே, திருப்பூரிலிருந்து உடுமலைப்பேட்டை, திருப்பூரிலிருந்து பொள்ளாச்சி, திருப்பூரிலிருந்து கோயம்புத்தூர் ஆகிய மூன்று ஊர்களுக்குச் செல்லக் கூடிய முக்கியமான பாதையில் அந்த ஓடை இருக்கிறது. சிறு மழை பெய்தாலுங்கூட போக்குவரத்து மணிக்கணக்கிலே தாமதப் படுகிறது. அந்த நிலையைப் போக்க அரசாங்கம் விரைவாகப் பாலம் கட்ட ஆவன செய்யுமா என அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே பாலத்தின் அவசியத்தை அரசு முழுக்க முழுக்க உணர்ந்திருக்கிறது என்றாலும் நிதிப் பற்றாக் குறை காரணமாகத்தான் இப்பொழுது சாத்தியமில்லையென்று நான் தெரிவித்தேன்.

## கிழக்குக் கடற்கரைச்சாலை

*258 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கிழக்குக் கடற்கரை தேசிய நெடுஞ்சாலை அமைப்புத் திட்டத்திற்கு மத்திய அரசின் ஒப்புதல் பெற எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் தேசிய நெடுஞ்சாலை ஏற்பாட்டில் சேர்த்துக் கொள்வதற்காக 1973 மார்ச் திங்களில் இந்திய அரசுக்குப் பரிந்துரைத்துள்ள 16 சாலைகளில் கிழக்குக் கடற்கரைச் சாலையும் ஒன்றாகும்.

தேசிய நெடுஞ்சாலை ஏற்பாட்டில் மாநில நெடுஞ்சாலைகளைச் சேர்ப்பதற்கான செயற்குறிப்புகள் மைய அரசின் நிதி நிலைமை சீரடையும் வரை காத்திருக்க வேண்டும் என்று 1975 மே திங்களில் இந்திய அரசு தெரிவித்தது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, இந்தக் கிழக்குக் கடற்கரைச் சாலை நீண்ட நெடுங்காலமாக நமக்கு அறிவிக்கப் பட்டு வருகின்ற ஒரு சாலையாகவே தென்பட்டு வருகிறது. இந்தச் சாலையின் மொத்த மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு? இந்தச் சாலையின் ஆரம்பப் பணி எப்பொழுது துவங்கப்பட்டது? மைய அரசு மனம் வைத்து, அதை முடித்துக்கொள்வதற்காக நமக்கு அளிக்கப்பட்டிருக்கும் கால அளவு எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, தேசிய நெடுஞ்சாலைத் திட்டத்தின்கீழ் வருகின்ற இது, 75 கிலோமீட்டர் தூரமுடையதாகும். இது முழுவதிலும் ஒரு வழிப் பாதை அமைக்க ரூ. 1,800 இலட்சம் செலவாகும். இரு வழிப் பாதையானால் ரூ. 3,000 இலட்சம் செலவாகும் என்று கணக்கிடப் பட்டிருக்கிறது. மத்திய நிதி உதவியுடன் முடிக்கப்பட வேண்டிய ஒன்றாகும் இது. இத்திட்டத்திற்காக ரூ. 265.5 இலட்சத்தில் 40 பாலங்களுக்கான பணத்தை இந்திய அரசாங்கம் அனுமதித் திருக்கிறது. அவற்றைக் கட்டி முடித்துக் கொண்டிருக்கிறோம்.





இன்னும் பாதி பாலங்கள் கட்டி முடியும் தருவாயிலிருக்கின்றன. இருந்தாலும், இப்பொழுது நிதிப் பற்றாக்குறை காரணமாக, பாதையைப் பொறுத்தவரையில் கடைசியாகத்தான் கவனிக்க முடியும் என்று மத்திய அரசாங்கம் தெரிவித்திருக்கிறது. மத்திய அரசிடமிருந்து நிதிப் பற்றாக்குறை தீருகிறவரையில் பொறுத் திருக்க வேண்டுமென்று சமீபத்தில் கடிதம் வந்திருக்கிற காரணத் தினால் அந்த வேலைகள் தேங்கியிருக்கின்றன. இருந்தாலும் இந்த முக்கியமான பாதையை அரசு வற்புறுத்தி வருகிறது.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவரவர்களே, இந்தத் தேசிய நெடுஞ்சாலைகளுக்கு மத்திய சர்க்கார் எல்லா மாநிலங்களுக்கும் நிதி வழங்குகிறது. ஆனால் தமிழ் நாட்டிலேதான் தேசிய நெடுஞ் சாலைக்கு வழங்கப்பட்டிருக்கிற பணம் செலவிடப்பட்டு, பற்றாக் குறை ஏற்படுகிறது என்று குறிப்பிடப்படுகிறது. அதே நேரத்தில் வெளி மாநிலத்தில் இதற்காக ஒதுக்கப்பட்ட தொகையைச் செல வழிக்காமல் அப்படியே சரண்டர் செய்கிறார்கள் என்று சொல்லப் படுகிறதே, அது உண்மையா? அப்படி இருக்குமானால் அத் தொகையை நமது மாநிலத்திற்குப் பெற்று, இந்தத் தேசிய நெடுஞ்சாலைப் பணியைச் செய்ய அரசு முயற்சிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, மற்றைய மாநிலங்களைப் பற்றிக் குறைத்து மதிப்பிடவும் இல்லை, குறைத்துச் சொல்லவும் விரும்பவில்லை. மற்றைய மாநிலங்களைப் பற்றித் தெரியாது. ஆனால், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், மேலும் வேண்டுமென்று கேட்டோம். சென்ற ஆண்டு ரூ. 40 இலட்சம் கொடுத்தார்கள்; மேலும் தேவை என்று கேட்டிருக்கிறோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் இது முக்கியமான நெடுஞ்சாலையாக இருக் கிறது. பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டு விட்டதே, நெடுஞ்சாலை எப்பொழுது பூர்த்தியாகும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, பாலங் கள் ஏற்கனவே முடியும் தருவாயிலிருக்கின்றன. இன்னும் சில பாலங்களிலேதான் வேலை முடியவில்லை. பாதை, மத்திய சர்க்கார் பணம் கொடுத்து வேலை செய்த பிறகு முடிவடையும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** மொத்தம், அந்தப் பாதையிலே எத்தனை பாலங்கள்? இதுவரை எத்தனை கட்டப்பட்டுள்ளன? இன்னும் எத்தனை கட்டப்பட வேண்டும்? அவற்றை முடிக்க எவ்வளவு காலதாமதமாகும்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, 40 பாலங்கள் தான் கட்ட வேண்டியிருக்கிறது. இன்னும் கட்ட வேண்டிய பாலங்கள் சிறுசிறு பாலங்களாகத்தானிருக்கின்றன. அவைகளைப் பற்றி தோராய மதிப்பீடு என்னிடத்திலே இல்லை.

### சாலை ஆய்வாளர்களுக்கு ஓய்வூதியம்

* 259 வினா—திரு. ஜி. ராமசாமி
திரு. என். கே. பழனிசாமி: மாண்புமிகு
திரு. கே. டி. கே. தங்கமணி:

பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித் துறைகளில் ஆய்வாளராகப் பணிபுரிவோர்களுக்கு ஓய்வுக் கால ஊதியம் வழங்கும் திட்டம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) & (இ) அரசு ஆணை எண், 1326, பொ. ப. து., நாள் 1—9—1975 நெடுஞ்சாலைத் துறையிலுள்ள மாநில சேவையாக்கப்பட்ட சாலை ஆய்வாளர் ஓய்வு ஊதியம் வழங்கப்பட்டுள்ளது.

**திரு. என். கே. பழனிசாமி:** எவ்வளவு வழங்கப்பட்டிருக்கிறது என்ற விவரம் சொல்ல முடியுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, ஓய்வு ஊதியம் வழங்குவதற்காகத்தான் இதைக் கொடுத்திருக்கிறோம். எவ்வளவு தொகை என்பதல்ல, இதனாலே எவ்வளவு பேர்கள் பலன் பெறுகிறார்கள் என்றால், 2,517 பேர் பலன் பெறுகிறார்கள்.





**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், இந்த ரோடு இன்ஸ்பெக்டர்களைப் பொறுத்தவரையிலே நீண்ட காலத்திற்கு முன்பாக அவர்களுக்கு ஒரு வழியில் 22½ மைல், இன்னொரு வழியில் 22½ மைல என்று 45 மைல் கவனிக்க வேண்டுமென்று இருக்கிறது. இப்பொழுது ரோடுகளில் அதிகமான பஸ்கள் போகிற காரணத்தால், அவைகளைக் குறைக்க ஏதாவது ஏற்பாடு செய்ய அரசுக்கு உத்தேசம் உண்டா? அப்படி குறைக்காமலேயே ஆட்கள் குறைக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறதே, அது நிறுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் தேசிய நெடுஞ்சாலைப் பணியைப் பொறுத்தவரையில் இதுவரையில் கொடுத்துவந்த பணத்தை இப்போது குறைத்துவிட்டார்கள். அதனால் வேலைவாய்ப்பு குறைந்துவிடுகிறது. ஆகவே, கொஞ்சப் பேர்களையாவது நிறுத்த வேண்டுமென்று நிதி இலாகாவினர் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு நிறுத்துவதை நிறுத்தி வையுங்கள் என்று சொல்லியதால் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். இருந்தாலும் கொஞ்சப் பேர்களையாவது நிறுத்தவேண்டிய நிலைமை ஏற்படும். வேறு வழியில்லாத காரணத்தால் கொஞ்சப் பேர்களாவது நிறுத்தப்பட இருக்கிறார்கள்.

### கூட்டுறவு நூற்பாலைகளுக்குக் குழுக்கள்

* 290 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தியாகிடும் நூல்களை விநியோகிக்கவும் விலை நிர்ணயிக்கவும் குழு ஏதேனும் நியமிக்கப் பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரம் யாது?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) & (இ) கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தியாகும் நூல்களின் விலைகளை நிர்ணயிக்கவும், தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கு நூல் ஒதுக்கீடு செய்வதற்கும் ஒரு நிரந்தரக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தி செய்யப்படுகிற நூலை விநியோகம் செய்யவும் விலையை நிர்ணயிக்கவும் மத்திய அரசினுடைய அனுமதி ஏதேனும் பெற வேண்டியுள்ளதா? ஆமானால் அதனுடைய விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பெற வேண்டிய அவசியம் இல்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம்: இந்தக் குழுவில் உள்ள உறுப்பினர்கள் யார் யார் என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இயக்குநர் அவர்கள் தலைவராக இருக்கிறார்கள். தமிழ்நாடு மத்திய சங்கத்தினுடைய தலைவர், கோவாப்ரேடிவ் கூட்டுறவு ஆலைகளினுடைய தலைவர்களும் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். பிரைமரி சங்கங்களைப் பொறுத்த அளவிலே அவர்களுடைய பிரதிநிதிகள் 4 பேர்கள் இதிலே போடப்பட்டிருக்கிறார்கள்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: ஏனைய ஆலைகள் எல்லாம் லாபம் அடைகிற நேரத்திலே இந்தக் கூட்டுறவு நூற்பாலைகள் மட்டும் நஷ்டமடைகின்றன. நெசவாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு குறைந்த விலையில் விநியோகம் செய்கிற காரணத்தால் இந்த நஷ்டம் ஏற்படுகிறது. இதைத் தவிர மார்க்கெட்டில் எந்த எந்தத் தரமுள்ள நூல்கள் தேவை என்று நிர்ணயித்து உற்பத்தி செய்யாததும் இதற்கு ஒரு காரணம் என்று சொல்லப்படுகிறது. இவையெல்லாவற்றையும் கவனிக்கிற இந்தக் குழுவிலே நெசவாளர்களின் பிரதிநிதிகளையும் நூற்பாலை எந்த வட்டாரத்திலே இருக்கிறதோ அந்த வட்டாரத்தைச் சேர்ந்த நெசவாளர்களின் பிரதிநிதிகளைப் பொதுமக்களின் பிரதிநிதிகள் என்ற முறையிலே சட்டமன்ற உறுப்பினர்களையும் இடம்பெறச் செய்ய ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தனியார் ஆலைகள் தான் நஷ்டத்தில் நொடித்துப் போய்விடுகின்றன. ஆனால் நம்முடைய ஆலைகள் 12-ம் தைரியமாக நடந்து கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் நாம் அதிகப்படியான லாபம் இல்லாமல் சந்தை விலைக்கு—மார்க்கெட் விலைக்கு—கொடுப்பது அதற்கு ஒரு காரணம். அதுமட்டுமல்லாமல்





நாம் நம்முடைய நெசவாளிகளுக்குத் தேவையான நூலை மட்டும்தான் உற்பத்தி செய்கிறோம். லாபமுள்ள அதிக எண்ணிக்கையுள்ள 100 கவுன்ட்ஸ் உள்ள நூலை உற்பத்தி செய்யவில்லை, இதுவும் ஒரு காரணம். இப்போது உள்ள குழுவில் நெசவாளர்களின் பிரதிநிதிகள் இருக்கிறார்கள்.

திரு. சோ. அழகர்சாமி: பிரைமரி சங்கத்திலிருந்து போடப்பட்டுள்ள நான்கு உறுப்பினர்கள் யார் யார்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்போது அந்த உறுப்பினர்கள் நியமிக்கப்படவில்லை, ஆகவே பெயர் என்னிடத்திலே இல்லை.

*291 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு நெசவு ஆலைகள் ஆலோசனைக் குழு ஒன்று புதிதாக அமைக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் பணிகள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) கேள்வி எழவில்லை.

## திருநெல்வேலியில் கைத்தறிக் கண்காட்சி

*292 வினா—திரு. ஏ. சுப்பிரமணியம்:<br>
திரு. பெ. சௌந்தரபாண்டியன்: } மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லையில் இவ்வாண்டு நடைபெற்ற கைத்தறி கண்காட்சியில் 13—4—1975 அன்று இரவு தீ விபத்து ஏற்பட்டது என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதனால் ஏற்பட்ட சேதம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) ரூபாய் 24,063.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்த தீ விபத்து ஏற்பட்டதற்குக் காரணம் என்ன? இதிலே எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தற்செயலாக நேர்ந்த விபத்து என்று போலீஸார் முடிவு கட்டியிருக்கிறார்கள். சுமார் 25 ஆயிரம் ரூபாய்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இந்த விபத்தினால் இரண்டு பெரிய சொஸைடிகள் அம்பாசமுத்திரம் கூட்டுறவு சொஸைடி, தேங்காய் பட்டணம் கூட்டுறவு சொஸைடி ஆகிய இரண்டு பெரிய சொஸைடிகளில் சேதம் ஏற்பட்டிருக்கிறதே இதை ஈடுகட்ட அரசு நஷ்ட ஈடு எவ்வளவு கொடுத்திருக்கிறது? இப்படிப்பட்ட பெரிய கண்காட்சியிலே தீயணைப்பு எஞ்சின் அங்கே இல்லாமல் இருந்திருக்கிறது, கண்காட்சி நடந்து கொண்டிருக்கும்போது ஏன் அந்த எஞ்சின் அங்கே வைக்கப்படவில்லை என்பதைப் பற்றி அரசு விசாரித்திருக்கிறதா? அப்படியானால் அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது திருநெல்வேலியில் நடைபெற்றது. அந்த நகரத்திலேயே தீயணைப்புப் படை இருக்கிறது. ஆகவே, அங்கேயே வைக்கப்பட வேண்டிய அவசியமில்லை. இந்த நஷ்டத்தை ஈடுகட்ட மாவட்ட ஆட்சியாளர் அவர்கள் கூட்டுறவு சங்கங்களிலிருந்தும் கூட்டுறவு நூற்பாலைகளிலிருந்தும் நன்கொடை வசூலித்து ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : கண்காட்சிகளில் இப்படி நஷ்டம் ஏற்பட்டால் நாம் ஈடுகட்டுவதற்குப் பதிலாக இந்த கண்காட்சிகள் நடத்துகிறபோதே அவைகள் எல்லாம் ஃபையர் இன்ஷூரன்ஸ் செய்துகொள்ள வேண்டுமென்ற முறையிலே ஏதாவது வழிவகை இருக்கிறதா? அப்படி இருந்தால் இந்த கண்காட்சியும் செய்துகொள்ள வேண்டுமென்று இன்ஸ்ட்ரக்ஷன் கொடுக்கப்பட்டதா?



மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த கண்காட்சி ஆண்டுதோறும் நடைபெறுவதால் இன்ஷூரன்ஸ் செய்வது அந்த அந்த பிரைமரி சொஸைடிகளைப் பொறுத்தது.

*Distribution of essential commodities*

* 293 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Revenue be pleased to state :

(a) whether there is any proposal to open model shops in the State to distribute essential commodities at competitive prices; and

(b) if so, the details of the same ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**கோவை மாவட்டத்தில் வறட்சி நிவாரணப் பணிகள்**

* 294 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1975–76 நிதி ஆண்டில் வறட்சிப் பணிகளுக்கான துயர் துடைப்பு பணிக்காக கோவை மாவட்டத்திற்கு ஒதுக்கியுள்ள தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வறட்சி நிவாரணப் பணிகளுக்காக கோவை மாவட்டத்திற்கு 1975–76 ஆம் நிதி ஆண்டில், ரூ. 165.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

திரு. சு. துரைசாமி : கோவைத் தலைவரவர்களே, ஒதுக்கப் பட்ட பணம் பற்றாக்குறையாக இருப்பதன் காரணமாக தொடங்கப்பட்ட வேலைகள் முடிவு பெறாமல் இருந்து கொண்டிருக்கின்றன. மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வறட்சியெல்லாம் இப்போது முடிந்துவிட்டது.

## வீரசோழன் ஆற்றின் குறுக்கே பாலம்

* 295 வினா—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செம்பனார்கோவில் ஒன்றியத்தைச் சேர்ந்த எடுத்துக்கட்டி—ஆத்துப்பாக்கம் கிராமத்தை இணைக்கும் வகையில் வீரசோழன் ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

## மறையூருக்குக் கப்பிச்சாலை அமைத்தல்

* 296 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் ஒன்றியம், சித்தர்க்காட்டில் "மாணவமணி தியாகி சாரங்கபாணி" ரயில்வே மேம்பாலத்திலிருந்து மறையூர்—கோவங்குடி வரை கப்பிச்சாலை அமைத்திடும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாயூரம் ஒன்றியம் சித்தர்க்காட்டில் "மாணவமணி தியாகி சாரங்கபாணி" ரயில்வே மேம்பாலத்திலிருந்து மறையூர்—கோவங்குடி வரை கப்பிச்சாலை அமைத்திடும் வேலைக்கு இனிமேலாவது அனுமதி வழங்கி முடிக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கிலோமீட்டர் 1/4 லிலிருந்து 2/4 வரைக்கும் கருங்கல் ஜல்லி போடுவதற்கு 25 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் ஒன்றியத்தால் அந்த வேலை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. 2/4 லிலிருந்து 3/2 வரையில் 29 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் தொடர்சாலை கப்பி போடுவதற்கு செயற்குறிப்பு எதுவும் இல்லை.
3/2 லிருந்து 4 வரையில் 1975–76 இல் மண்தரையில் கப்பி போடப்படுகின்ற பணிக்கு டெண்டர்கள் கோரப்பட்டிருக்கின்றன.



## இரும்பொறை—பெரிய கொமாரபாளையம் சாலை

* 297 வினா—திரு. மே. சி. தூயமணி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, இரும்பொறையிலிருந்து பெரியகொமாரபாளையம் செல்லும் பாதையினை செப்பனிடும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

(இ) ஆமெனில், அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

## சித்தக்காட்டனூரில் கிணறுகள் வெட்டுதல்

* 298 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் ஒன்றியம், முத்துரெங்கம்பட்டி பஞ்சாயத்திலுள்ள, சித்தக்காட்டனூர் பொதுமக்களுக்கு குடிநீர் கிணறு வெட்ட டெண்டர் டிபாசிட் தொகை ஏதேனும் ஒப்பந்தக்காரரால் கட்டப்பட்டதா ?

(இ) ஆம் எனில், மேற்படி கிணறு வெட்டப்படாமல் இருப்பதற்கு உரிய காரணம் யாது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) மேற்படி பணிக்குக் கிடைக்கப் பெற்ற ஒப்பந்தப் புள்ளி ஒரே ஒப்பந்தப் புள்ளியாக இருந்தமையால், ஒப்பந்தப் புள்ளிக்கு உதவிப் பொறியாளர் ஒப்புறுதி அளிக்கவில்லை. இவ்வாண்டிலோ அல்லது அடுத்துவரும் நிதி ஆண்டிலோ இப்பணியை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியைச் சேர்ந்த சித்தக்காட்டனூரில் உள்ள கிராமப் பொதுமக்கள் குடிக்கக்கூடத் தண்ணீர் இல்லாமல் மிகவும்

[1975 நவம்பர் 11

சிரமப்படுகிறார்கள். ஒப்பந்தப் புள்ளி பலர் கேட்டாலும் கேட்காவிட்டாலும் ஒன்றிய நிதியிலிருந்தே இந்த கிணற்றை வெட்டித்தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : காலதாமதமாவதற்குக் காரணம் டெண்டர்கள் கோரப்பட்டும் ஒரே ஒருவர்தான் டெண்டர் கேட்டிருக்கிறார் என்ற காரணத்தினாலேதான். மாண்புமிகு உறுப்பினரின் தொகுதியில் இது இருப்பதால் அவர் பல டெண்டர்கள் வருவதற்கு ஏற்பாடு செய்வார் என்று நம்புகிறேன்.

### மணி அய்யனார் கோயில், முருகமங்கலம்

* 299 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் முருகமங்கலம் பகுதியிலுள்ள அருள்மிகு மணி அய்யனார் கோயிலை அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் எடுத்துக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) & (இ) மாயூரம் வட்டம், முருகமங்கலம் அருள்திரு ஸ்ரீ மணி அய்யனார் திருக்கோயில் 1974 ஆம் ஆண்டில் சமய அறநிலைய ஆட்சித் துறையின் கீழ்க் கொண்டு வரப்பட்டுள்ளது. பரம்பரை அல்லாத அறங்காவலர் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### வீதிவிடங்கன் கிராமத்தில் கண்டுபிடிக்கப்பட்ட சிலைகள்

* 300 வினா—திரு. எஸ். வடிவேல் : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் 13—3—1973 அன்று குறுகிய கால வினா எண். 3-க்கு அளித்த விடையையொட்டி, தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், நன்னிலம் தாலுகா வீதிவிடங்கன் கிராமத்தில், புதையலாகக் கண்டுபிடிக்கப்பட்ட சிலைகள் பற்றிய வழக்கு முடிவடைந்துவிட்டதா?

(இ) ஆமெனில், அதன்மீது எடுக்கப்பட்டுள்ள தொடர் நடவடிக்கை என்ன?



1975 நவம்பர் 11]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். வடிவேல் : தலைவர் அவர்களே, இந்த வீதிவிடங்கன் கிராமத்தில் சிலைகள் கண்டுபிடிக்கப்பட்டு வெள்ளைக்காரன் காலத்திலேயே ஒப்படைக்கப்பட்டு பணமும் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சிலைகள் எத்தனை லட்சம் ரூபாய் பெறுமானமுள்ளவை? அவை எல்லாம் எலிவேட்டையின்போது கிடைத்த சிலைகள். ஆகவே, அவற்றைக் கண்டுபிடித்து எடுத்துக் கொடுத்த அந்த அரிசனங்களுக்குச் சன்மானம் கொடுக்கப்படுமா?

(முற்பகல் 10.00)

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, இந்தச் சிலை 1974 ஆம் ஆண்டில் வீதிவிடங்கன் கிராமத்தில் சாமிநாத சாம்பான் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. இந்தச் சிலை யாருக்கு உரிமை என்பதைக் குறித்து தஞ்சை மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வருகிறது. அது முடிந்த பிறகுதான் முடிவுகள் மேற்கொள்ளப்படும்.

### பச்சூர் சென்றாயசாமி கோயில்

* 301 வினா—திரு. டி. சி. திம்மராய கவுண்டர் : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடார்க்காடு மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், பச்சூர் சென்றாயசாமி கோயிலை அறநிலையத் துறையின் கீழ்க் கொண்டு வரும் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இத்திருக்கோயில் ஏற்கனவே இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கீழ் உள்ளது.

## பாலேசுவரன் ஆலயம்

*302 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்முடிப்பூண்டித் துணை வட்டம், புது கும்முடிப்பூண்டி பாலேசுவரன் ஆலயத்திற்குரிய மானிய நிலத்தில் பல ஆண்டு காலம் வீடு கட்டி இருக்கும் ஏழை மக்களுக்கு அக்குடி மனைகளைப் பட்டா செய்தளிக்கும் திட்டம் காலதாமதம் ஆவதேன் ?

(இ) இது எப்போது நிறைவேறும் ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** (அ) & (இ) அருள்திரு பாலேசுவரன் திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலத்தில் குடியிருப்போர் தங்களுக்கு அந்த குடிமனைகளை பட்டா இலவசமாகச் செய்து கொடுக்க வேண்டி மனு கொடுத்துள்ளனர். இவர்கள், வாடகை செலுத்தவோ, வாடகை ஒப்பந்தம் எழுதித் தரவோ, மனையின் பரப்பளவு போன்ற விபரங்களை தரவோ மறுக்கின்றனர். இருப்பினும் வாடகை தருவது பற்றியோ அல்லது கிரயம் பெற்றுக்கொள்வது பற்றியோ ஒப்புதல் பெற்று அனுப்ப வேண்டுமென்று அறங்காவலர் குழுத் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

1959 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலைய சட்டப்படி திருக்கோயில் நிலங்களை அடமானம் வைப்பதற்கோ, மாற்றிக் கொள்வதற்கோ, விற்பதற்கோ அல்லது குத்தகைக்கு விடவோ அதற்கு மட்டும்தான் ஆணையருக்கு அதிகாரம் உள்ளது. ஆகவே அக் குடிமனைகளை வாங்க விரும்புவோர் ஆலய நிர்வாகிகளின் ஒப்புதல் பெற்று சட்டப் பிரிவு 34-ன் கீழ் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையருக்கு மனுச் செய்து கொள்ளலாம்.

**திரு. கா. வேழவேந்தன்:** தலைவரவர்களே, இந்தக் கோயில் நிலத்தில் குடியிருப்பவர்கள் பெரும்பாலும் விவசாயக் கூலிகளாகவும் தொழிலாளர்களாகவும் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு 'நாமினல் காஸ்ட்' என்று நிர்ணயித்து அவர்கள் குடியிருக்கும் பகுதியில் எப்படியும் நிலப்பட்டா செய்ய அறநிலையத் துறை முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவரவர்களே, அங்கே இருக்கின்ற மார்க்கெட் மதிப்பு என்று கொள்ளாமல் அரசின் மதிப்பீட்டுக்குத் தருவதற்கு அந்தக் கோயில் தயாராக இருக்கிறது. ஆனால் நிலத்தில் குடியிருப்பவர்கள் எந்தப் பரப்பளவில் குடியிருக்கிறார்கள் என்பதை அளந்து சொல்லக்கூட எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். அறங்காவலரால் அந்தக் காரியத்தைச் செய்ய முடியவில்லை. தனியாக நிர்வாக அதிகாரியை நியமிக்க தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரவர்களும் குடியிருப்பவர்களிடத்தில் சொல்லி எந்த அளவு பரப்பளவில் குடியிருக்கிறார்கள் என்ற விவரத்தைத் தந்தால் அரசாங்க மதிப்பீட்டுக்கு அந்த நிலத்தைக் குடியிருப்பவர்களுக்கே சொந்தமாக நாம் தரலாம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** அங்கேயுள்ளவர்களுக்கு மனை கொடுப்பது என்றால் மீதப்படும் தொகையை ரெவின்யூ இலாக்கா எச். ஆர். அண்ட் சி. இ.-க்குக் கொடுக்கட்டுமே. நாமினல் காஸ்ட் என்று எப்படி எடுத்துக்கொள்வது என்று தெரியவில்லை.

(விடை இல்லை).

## தமிழ்நாட்டில் குடியமர்த்தப்பட்ட அகதிகள்

*303 வினா—திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1971 ஆம் ஆண்டு முதல் 1974 ஆம் ஆண்டு முடிய இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, பர்மா முதலான நாடுகளிலிருந்து வந்துள்ள எத்தனை அகதி குடும்பங்கள் தமிழ்நாட்டில் குடியேற்றப்பட்டிருக்கின்றன ?

(இ) மேற்படி அகதிகள் மேம்பாட்டிற்கென குழு Commit(tee) ஏதேனும் அமைக்கப்பட்டுள்ளதா ?

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம்:** (அ) தமிழ்நாட்டில் குடியேற்றப்பட்ட அகதிக் குடும்பங்களின் விபரம்:

இலங்கை அகதிக் குடும்பங்கள்—33,437

பர்மா அகதிக் குடும்பங்கள்—3,139

மற்ற அகதிகளின் குடும்பங்கள் இல்லை.

(இ) ஆம்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்** : தலைவரவர்களே, அகதிகளாக வந்து நம்முடைய தமிழ்நாட்டில் குடியமர்த்தப்பட்டவர்களுக்கு அரசாங்கம் என்னென்ன வசதிகளைச் செய்து தருகிறது? இப்படிப்பட்ட வசதிகளைச் செய்து தருவதில் மிகுந்த காலதாமதம் ஆகின்றதே, அதைப் போக்க அரசு என்ன முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம்** : தலைவரவர்களே, அந்தக் கேள்விக்கு இதில் பதில் இல்லாவிட்டாலும் நடைமுறையில் இருப்பதைக் குறிப்பிடுகிறேன். 5,000 ரூபாய் வரையில் அதிகமாக அவர்களுக்குத் தொழில் செய்ய கடன் கொடுப்பதற்கு அரசாங்கம் நடைமுறைப்படுத்தி வருகிறது. அதற்குக் கீழே கடன் கேட்டாலும் கொடுத்து வருகிறது. அவர்கள் ஒரு இடத்தைப் பார்த்து, சாகுபடி செய்ய வசதி உள்ளவர்களாக இருந்தால், சாகுபடி செய்ய நிலம் கொடுக்கிறது. இவைகள் அனைத்தும் செயல்பட்டு வருகிறது. ஆனால் நடைமுறையில் அவர்கள் வாங்கும் பணத்தைக் கொண்டு கடைகளை வைக்கவோ அல்லது மற்றத் தொழில்களை நடத்தவோ முடியாமல் சிரமப்படுகிறார்கள். ஒரு இடத்தில் நிலைக்காமல் இருக்கிறார்கள். ஆனால் சிலபேர் நல்லமுறையில் தொழில் செய்தும் வருகிறார்கள்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்** : தலைவரவர்களே, இந்த பர்மா, ஸ்ரீலங்கா அகதிகளுக்கெல்லாம் ஒரு குழு அமைத்து அதன் மூலமாக அவர்களுக்கு வேண்டிய சலுகைகளை யெல்லாம் கொடுப்பதற்காக அந்தக் குழுவை அமைத்திருக்கிறார்கள். அவர்களின் தேவை பற்றி அந்தக் குழுவினர் என்னென்ன சிபாரிசுகளைச் செய்திருக்கிறார்கள், எத்தனை சிபாரிசுகளை அரசு பூர்த்தி செய்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம்** : தலைவரவர்களே, தேயிலைத் தோட்டங்களில் இருந்தால், ரப்பர் தோட்டங்களில் இருந்தால் அந்தத் தொழிலாளர்களின் நலன்களைக் காக்கவும், அகதிகளைக் குடியமர்த்தும் திட்டங்களைக் கவனிக்கவும், தொழில்



கடன்களை வழங்கவும், மறுவாழ்வுக்கான வாய்ப்பு, ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் அகதிகளின் புனர் வாழ்வை அமைப்பதைக் கவனிக்கவும் குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. கு. காமாட்சி** : தலைவரவர்களே, சிலோனிலிருந்தும் பர்மாவிலிருந்தும் தான் தமிழர்களை வெளியேறச் சொல்கிறார்கள், அதனால் அகதிகளாக வருகிறார்கள். சிங்கப்பூரிலும், மலேஷியாவிலும் இப்பொழுது அந்த நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம்** : தலைவரவர்களே, இங்கே குறிப்பு இல்லை. அதை நாமே நினைவுபடுத்த வேண்டிய அவசியமில்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி** : சார், இலங்கையிலிருந்தும், பர்மாவிலிருந்தும் வந்த அகதிகள் பலயிடங்களில் குடிதண்ணீரே இல்லாத இடங்களில் குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் கடன் கேட்டுப் பல்லாண்டுகளாகியும் கொடுக்கப்படுவதில்லை என்று மனுக் கொடுக்கிறார்கள். யார் யார் அந்தக் கமிட்டியில் இருக்கிறார்கள்? அதில் சட்டமன்ற உறுப்பினர்களும் இருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம்** : தலைவரவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்களா என்பதைப் பற்றிய தகவல் இப்போது இல்லை. குழு போடப்பட்டதா என்பது கேள்வி. போடப்பட்டது என்று சொன்னேன். உறுப்பினர்கள் யார் யார் என்பதை அறிய வேண்டுமென்றால் தனிக் கேள்வி போட்டால் விவரம் அளிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : மாண்புமிகு அமைச்சரவர்கள் குழு பற்றிய கேள்வி வருகின்ற நேரத்தில் குழு உறுப்பினர்களைப் பற்றிப் பதில் சொல்லாதது முறையாக இல்லை. நாளைக்காவது குழு உறுப்பினர்களைப் பற்றிய பட்டியலை * அறிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

---

* 143-145-ம் பக்கத்தில் பேரவை விதி 82(எ) இன் கீழ் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அளிக்கப்பட்டுள்ள அறிக்கையைக் காண்க.

## தஞ்சை மாவட்டத்தில் அரிசன மாணவ விடுதிகள்

* 304 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1974-75 ஆம் ஆண்டில் தஞ்சை மாவட்டத்தில் எந்தெந்த இடங்களில் ஆதி திராவிட மாணவர்களுக்கு புதிய விடுதிகள் கட்டித்தர உத்தேசிக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: தலைவரவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள கீழ்க்காணும் பத்து இடங்களில் அரசினர் அரிசன மாணவர் விடுதிகளுக்கு கட்டிடங்கள் கட்டுவதற்கான இசைவளிக்கப்பட்டுள்ளது:—

1. திருவையாறு.
2. பாபநாசம்;
3. கும்பகோணம்;
4. பந்தநல்லூர்;
5. மன்னார்குடி;
6. கோட்டூர்;
7. திருத்துறைப்பூண்டி;
8. திருவாரூர்;
9. திருக்குவளை;
10. கொரடாச்சேரி;

இதிலே முதல் ஐந்தும் அரிசன மாணவர்களுக்கும், பின்னால் கூறிய கோட்டூர், திருத்துறைப்பூண்டி, திருவாரூர், திருக்குவளை, கொரடாச்சேரி ஆகியவை பிற்பட்ட மாணவர்களுக்குமான கட்டிடங்கள் அமைத்தல்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, 1974-75 ஆம் ஆண்டில் தஞ்சை மாவட்டத்தில் பத்து இடங்களில் அரிசன நல விடுதிகள் கட்ட இருப்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் பெருமையோடு அறிவித்தார்கள். அதிலே ஒரு இடமாவது மாயாரம் கோட்டத்தில் கட்ட இடமளிக்கப்படவில்லை. நீண்ட கால கோரிக்கையை நிறைவேற்றும் முகத்தான் அந்தப் பகுதியில் இனிமேலாவது அத்தகைய விடுதிக் கட்டிடத்தைக் கட்டித் தர அரசு ஆலோசனையாவது செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: தலைவரவர்களே இப்பொழுது இங்கே குறிப்பில் இருக்கின்ற பத்து இடங்களில் கட்டிடங்கள் கட்டுவதற்கான வேலைகள் துவக்கப்பட்டிருக்கிறது. அந்த வேலைகள் நடந்து அதற்குரிய காரியங்கள் நடந்து வருகின்றன. அது வேகமாக நடைபெற வேண்டுமென்பதற்காகத்தான் முதலமைச்சரவர்கள் முதலில் 40 ஹாஸ்டல்களின் கட்டிட வேலைகளை முடித்துவிட வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொல்லியிருக்கிறார்கள். வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

## தீண்டாமை ஒழிப்புச் சட்டம்

* 305 வினா—திரு. வை. பாலசுந்தரம்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1974 ஆம் ஆண்டில் தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் எவ்வளவு பேர்?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: 1009.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவரவர்களே, 1967 ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் இந்தத் தீண்டாமை ஒழிப்பில் அரசு கவனம் செலுத்தி அதிகமான நபர்களைப் பிடித்து வருகிறது. இதைத் தீவிரப்படுத்தியதன் விளைவாக தீண்டாமை தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஒழிந்து வருகிறது. குறிப்பாக மேலும் இதில் தீவிரம் காட்டி ஒவ்வொரு தாலுக்காவிலும் இருக்கின்ற காவல் நிலையங்களில் இதற்கென்று ஒரு தனிப் பிரிவைப் போட்டு அரசு தீவிரம் காட்டுமா என்பதனை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: தலைவரவர்களே, இப்பொழுது 6 மாவட்டங்களில் இது அமல்படுத்தப்பட்டு வருகிறது, சிறப்பு காவல் படைகள் மூலம். ஆனால் பொதுவாக உள்ள காவல் துறையின் மூலமும் ஒவ்வொரு வட்டத்திலும் இதனுடைய அமைப்பு இருக்க வேண்டுமென்று உறுப்பினரவர்கள் விரும்புகிறார்கள். அதை நிதிநிலைமையைப் பொறுத்து பின்னால் அரசாங்கம் கவனிக்கும். ஆறு மாவட்டங்களிலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது. இந்தச் செயலில் சாதாரண போலீஸ்காரர்களும் பங்கெடுத்துக் கொண்டு

தான் வருகிறார்கள். இதற்காக அமைக்கப்பட்ட படைகள் மட்டும் வேலை செய்யவில்லை, பொதுவாக உள்ள போலீசும் வேலை செய்து வருகிறது.

திரு. எஸ். வடிவேல்: தீண்டாமை ஒழிப்புச் சட்டம் இருந்தாலும்கூட பல இடங்களில் அரிசனங்களின் உரிமைகள் பறிக்கப்பட்டு கட்டுப்பாடு செய்யக்கூடிய நிலை, பகிஷ்கரிக்கக் கூடிய நிலை இருக்கிறது. ஏதோ எதிர்த்துப் பேசிவிட்டான் என்ற காரணத்தால், அல்லது சுருட்டுப் பிடித்தான் என்ற காரணத்தால், அவனைக் கட்டுப்பாட்டில் வைத்து அவனுக்கு சாமான்கள் கொடுப்பதில்லை, அவன் பொது இடங்களுக்குப் போக முடியாத நிலை, கிணற்றிலே தண்ணீர் எடுக்க முடியாத நிலை, வேலை கொடுக்காத நிலை ஆகியவற்றை உண்டாக்குகிறார்கள். இந்தமாதிரி நிலைமைகளைப் போக்க துரிதமான நடவடிக்கைகளை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: தனிப்பட்ட ஒருவர் மீது வைக்கிற கோபத்தால் தனிப்பட்ட ஒருவருக்கு வேலை கொடுக்கமாட்டார்கள். ஊரிலே வேலை செய்கிற இடங்கள் பல இருக்கின்றன. தனிப்பட்ட முறையில் நடைபெறும் இந்தக் காரியங்களுக்கு அரசாங்கம் என்ன செய்ய முடியும் ?

திரு. எஸ். வடிவேல்: துணைத் தலைவர் அவர்களே, அவர் சொல்லுவது சரிதானா என்று நீங்களே யோசனை பண்ணுங்கள். .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் கேள்வி கேட்டீர்கள், அமைச்சர் பதில் அளித்துவிட்டார். இப்போது அடுத்த உறுப்பினர். . . .

திரு. கே. டி. கே. தங்கமணி: தீண்டாமை ஒழிப்பு சம்பந்தமாக சட்டம் போட்டிருக்கிறோம். சமீபத்தில் தருமபுரியில், பெண்ணாகரத்தில், அக்கிரகாரம் என்ற கிராமத்தில் கோயில் பிரவேசம் செய்ததற்காக அரிசனங்களை அவர்கள் தாக்கியது மாத்திரமல்லாமல் முன்னணியில் இருந்த ஜாதி இந்து தோழர் ஒருவரை ஜாதிக் கட்டுப்பாடு செய்து அவரை ஊரெல்லாம் பகிஷ்கரித்த காரணத்தால் அவருடைய துணைவியார் தற்கொலை செய்து கொண்டார் என்ற விஷயம் அரசுக்குத் தெரியுமா ?



மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: அதைப் பற்றிய தகவல் அரசுக்கு இதுவரை வரவில்லை. எந்த ஊர் ?

திரு. கே. டி. கே. தங்கமணி: பெண்ணாகரத்திற்குப் பக்கத்தில் அக்கிரகாரம் என்ற கிராமம். அரிசனங்கள் ஆலயப் பிரவேசம் செய்ததற்காக அரிசனங்கள் ஒதுக்கப்பட்டதோடுகூட ஜாதி இந்து வாலிபர் குடும்பத்தில் இருந்து நீக்கி வைக்கப்பட்டு அதன் காரணமாக அவருடைய துணைவியார் தற்கொலை செய்து கொண்டார் இதுபற்றிப் போலீசார் வழக்கெல்லாம்கூடப் பதிவு செய்திருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டுமென்பதற்காக இந்திய நாடு முழுவதும் பரவலாகவும், தீவிரமாகவும் பணிகள் நடைபெற்று வருகின்றன. தமிழக அளவில் நாம் அது முழு அளவில் நடைபெற்றுத் தீரவேண்டுமென்ற வகையில் நீண்ட நெடுங்காலமாக அந்தப் பிரசாரங்கள் நடைபெற்று வந்திருக்கின்றன. அரசு சார்பிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

நண்பர் வடிவேல் அவர்களும் திரு. கே. டி. கே. அவர்களும் எடுத்துக் காட்டியது போல் சில சம்பவங்கள் வருமானால் அதுபற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால் உடனடியாக அரசு ஆவன செய்யும். அதன் விவரங்களைத் தருவார்களானால் உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியும்.

திருமதி சத்தியவாணிமுத்து: கடந்த வாரம் பட்டுக்கோட்டை பக்கத்தில் அரிசன மக்கள் தாக்கப்பட்டு வீடுகள் தீக்கிரையாக்கப் பட்டது குறித்து நான் ஒரு ரூல் 41 மோஷன் கொடுத்திருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சப்ளிமென்டரி கேட்பதற்காக அனுமதி கொடுத்தேன். ரூல் 41 சம்பந்தமாக இப்போது எழுப்பக் கூடாது.

வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்படவில்லை என்பதைக் குறிக்கும்.]

## (2) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

### (அ) பள்ளி மாணவ மாணவிகள் பல ஊர்களில் கடத்தப்படுவதும், காவல் துறை குற்றவாளிகளைக் கைது செய்யத் தவறியதும் பெற்றோரிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலையும் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 42 ஆம் விதியின்கீழ்** திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள்

'kidnapping school boys and girls in various centres in Madurai, Ramnad, Tirunelveli Districts by dubious persons ostensibly for human sacrifice and failure of police to apprehend the culprits and a great concern among parents'

—என்ற பொருள் பற்றி விவாதிக்க வேண்டுமென்று அவசரப் பொது முக்கியமான ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்றைக் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப் பற்றிச் சுருக்கமாக விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** துணைத் தலைவர் அவர்களே. இந்த விஷயம் நான் சமீபத்தில் மதுரைக்குப் போயிருந்தபோது தெரிந்தது. மதுரையிலே, செங்கோட்டையிலே இருந்து இம் மாதிரியாகக் கொண்டு வரப்பட்ட ஒரு பையனை போலீஸ் ஸ்டேஷனுக்கு முன்னால் இறக்கிவிட்டுப் போயிருக்கிறார்கள். அவனைப் பற்றி உடனடியாக போலீசார் தகவல் சேகரித்து விசாரணை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். மதுரையில் பள்ளிக்குப் போன ஒரு பையனை முக்காடு போட்ட ஒரு பெண் கடத்திக் கொண்டு போனதாகவும், கடைசியில் அவனை சேலத்தில் கொண்டு போய்விட்டதாகவும் தெரிகிறது. இந்த மாதிரி செங்கோட்டையிலிருந்து இன்னொரு பையனையும் கடத்திச் சென்றிருக்கிறார்கள். அந்த பையனை விசாரித்த விசாரணையிலிருந்து, அவனைக் கடத்திச் சென்றவர்கள் அந்தப் பையன் அவனுடைய தாய்க்கு எத்தனாவது குழந்தை என்று கேட்டதாகவும், இரண்டாவது, மூன்றாவது குழந்தை என்று சொன்னால் விட்டு விட்டுப் போய்விடுவதாகவும் தெரிகிறது. தலைமகனாய் இருந்தால் கடத்திக் கொண்டு போய் விடுகிறார்கள் போல் இருக்கிறது. ஆகவே, என்ன அச்சம் ஏற்படுகிறது என்றால், தென் ஜில்லாக்களில் ஏதாவது ஒரு கோஷ்டி நடமாடிக் கொண்டு பத்து வயதுக்குட்பட்ட பையன்களைத் தலை மகனாக இருந்தால் ஹியூமன் சாக்ரிபைசுக்காக கடத்திச் செல்ல



ஏற்பாடு செய்கிறார்களோ என்ற அச்சமும் பீதியும் இருக்கிறது. இதுபற்றி கம்ப்ளெயின்ட் கொடுத்தும் கூட இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை. அரசின் கீழ் இருக்கும் போலீசார் அவ்வளவு அக்கறையாக இல்லையென்றே தெரிகிறது. இது தற்போது இரண்டு மூன்று ஜில்லாக்களில் மட்டும் இருக்கிறது. இது அதிகமாகப் பரவி விடாமல் இருப்பதற்கு இப்படி ஒரு கோஷ்டியைக் கண்டுபிடிக்க வேண்டுமென்பது பற்றி எடுத்துக் கூற அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க சந்தர்ப்பம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** துணைத் தலைவர் அவர்களே, சிறுவர்கள் கடத்தப்பட்டதாக நான்கு சம்பவங்கள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. செங்கோட்டை, பாளையங்கோட்டை, மதுரை — திருமங்கலம், மதுரை நகரம் என்ற நான்கு இடங்களில் இதுபோன்ற சம்பவங்கள் ஏற்பட்டதாகத் தகவல் வந்தது.

இந்தச் சம்பவங்களில் காணாமல் போன சிறுவர்கள் வீடு திரும்பி விட்டார்கள். கண்டு பிடிக்கப்பட வேண்டியவர்கள் யாரும் இல்லை.

இந்த நான்கு சம்பவங்களில், பாளையங்கோட்டை, மதுரை—திருமங்கலம் ஆகிய இரண்டு சம்பவங்களில் காணாமல் போனவர்கள் தங்கள் இச்சையாகவே வெளியூர் சென்றார்கள். மீண்டும் வீடு திரும்பினார்கள். யாரும் கடத்தப்படவில்லை. அந்தச் சிறுவர்கள் மூலமாகவே தகவல்கள் வந்துள்ளன.

கடத்தப்பட்ட மற்ற இரண்டு சம்பவங்கள், செங்கோட்டை, மதுரை நகர் ஆகிய இடங்களில் நடைபெற்றவை ஆகும். அதிலே, மாண்புமிகு கே. டி. கே. தங்கமணி அவர்கள் எடுத்துக் காட்டியது போல், நவம்பர் 4-ம் தேதி காலை 10 மணி அளவில் செங்கோட்டை அரசு உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் 13 வயதுச் சிறுவன் வகுப்பை விட்டு வெளியே வந்த நேரத்தில், வெள்ளைச் சட்டை அணிந்து கொண்டு கையில் பையுடன் நரைத்த தாடியுடன் இருந்த அந்நியர் ஒருவர் சிறுவனை அணுகி பேருந்து நிலையத்திற்கு வழி எது என்று கேட்டுக் கொண்டே தோளின் கை போட்டதாகவும், அதற்குப் பிறகு அவனுக்கு மயக்கம் ஏற்பட்டு

எதுவும் தெரியவில்லை என்றும், பிறகு ஒரு வாடகைக் காரில் மதுரையில் இருக்கும்போதுதான் நினைவு வந்ததாகவும், அப்போது தாடிக்கார ஆசாமி 'உன் பெற்றோருக்கு நீ எத்தனையாவது பிள்ளை?' என்று கேட்க, அவன் 'இரண்டாவது பிள்ளை' என்று பதிலளித்ததும் மூன்று ரூபாயை அவன் கையில் கொடுத்துப் போய் விட்டான் என்று சொல்லப்படுகிறது.

அதற்குப் பிறகு அந்தச் சிறுவன் வாடகைக்கு ஆட்டோ ஒன்றை அமர்த்திக் கொண்டு மதுரை காவல் துறை கன்ட்ரோல் ரூமுக்குச் சென்று நடந்தவைகளைப் போலீஸ் அதிகாரிகளிடம் தெரிவித்ததாகவும், போலீஸ் அதிகாரிகள் செங்கோட்டையிலுள்ள அச்சிறுவனின் சகோதரருக்குத் தகவல் கொடுத்து, அவர் மதுரை வந்து சிறுவனை அழைத்துச் சென்றதாகவும் கூறப்படுகிறது.

இது குறித்து செங்கோட்டை காவல் நிலையத்தில் வழக்கு ஒன்று—குற்ற எண் 674/75—இ.பி.கோ. 363 வது பிரிவின்கீழ் 6—11—75 அன்று பதிவு செய்யப்பட்டு தீவிரமாகப் புலனாய்வு செய்யப்பட்டு வருகிறது.

அடுத்து, மதுரையில் கே. டி. கே. அவர்கள் எடுத்துக் காட்டியது போல் ஒரு சிறுவனை மஞ்சள் நிற ஆடை அணிந்த ஒரு பெண் அவனைப் பேருந்து ஒன்றில் அழைத்துச் சென்றதாகவும், அவனுக்குப் பிரயாணச் சீட்டும், சிற்றுண்டியும் வாங்கித் தந்ததாகவும், சேலத்தில் பஸ் போய் நின்ற பிறகு அந்தப் பெண் அந்தச் சிறுவனை அங்கேயே விட்டு விட்டுப் போய்விட்டாள் என்றும் தெரிகிறது. அந்தச் சிறுவன் அங்கே அழுது கொண்டு நின்றிருந்ததைக் கண்டு பேருந்துத் தொழிலாளி அவனை அழைத்துச் சென்று காவல் நிலையத்தில் ஒப்படைத்தார்.

இது குறித்தும் மதுரை நகர்—பி-3 காவல் நிலையத்தில் வழக்கு ஒன்று—குற்ற எண் 3739/75—இ.பி.கோ. 363 பிரிவின்கீழ் பதிவு செய்யப்பட்டு இந்த வழக்கு புலனாய்வில் இருந்து வருகிறது.

அரசுக்குக் கிடைத்த தகவல்களின்படி நான்கு சம்பவங்களில் இரண்டுதான் கடத்தப்பட்ட சம்பவம். இரண்டு சம்பவங்களில் விருப்பம் போல் சென்று திரும்பியிருக்கிறார்கள். இந்த இரண்டு



சிறுவர்கள் சம்பந்தப்பட்ட வரையிலும் கூட போலீசார் தீவிரமாகப் புலனாய்வு செய்து விசாரிக்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டுள்ளது.

இன்னும் யாரும் கைது செய்யப்படவில்லை என்று திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் குற்றஞ்சாட்டினார்கள். யாரை யாவது கைது செய்துவிட முடியாது. குறிப்பிட்டவர் யாரோ, உண்மையான குற்றவாளி யாரோ அவரைத்தான் கைது செய்ய வேண்டும். போலீசார் தீவிரமாக இன்று தங்களுடைய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதாக அரசாங்கத்திற்குத் தகவல் வந்திருக்கிறது. இந்தப் பையன்கள் வந்து சொன்னது உண்மை தானா, அப்படிப்பட்ட குற்றவாளிகள், உலவுகிறார்களா என்பதையெல்லாம் போலீஸ் துறையினர் விசாரிக்க வேண்டுமென்று, தீவிரமாக அதில் ஈடுபடவேண்டும் என்று அரசாங்கம் அவர்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறது. இதற்கு மேல் இதைப்பற்றி அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லை என்று சொல்லிக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இப்பொருள் குறித்து, அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லை என்று நான் கருதுவதால் இதற்கு அனுமதி அளிக்க மறுக்கிறேன்.

### (ஆ) பொள்ளாச்சி சக்தி டெக்ஸ்டைல்ஸ் லிமிட்டெட்டில் கதவடைப்பும், நிகழவிருக்கும் ஆட்குறைப்பும் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திருவாளர்கள் கே. டி. கே. தங்கமணி, ஏ. ஆர். மாரிமுத்து, சோ. அழகர்சாமி ஆகியோர் "

"the serious situation arising out of lock-out in Sakthi Textiles Ltd., Pollachi and threatened retrenchment of 215 workers from 17th November 1975 and failure of the Government to prevent the same as done in neighbouring States" என்கிற ஒரு பொருள்பற்றி சட்டமன்ற விதி 42-ன் கீழ் அவசர பொது

முக்கியமான பொருள் என்று கருதி அதுபற்றி விவாதிக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அது எப்படி அவசர பொதுமுக்கியம் வாய்ந்தது என்பதை மிகச் சுருக்கமாக விளக்குமாறு அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இந்த சக்தி க்ரூப்ஸ் சம்பந்தமாக இந்த மன்றத்தில் நாம் ஏற்கனவே விவாதித்திருக்கிறோம். இப்போது சக்தி டெக்ஸ்டைல்ஸ் என்று வந்திருக்கிறது பொள்ளாச்சியில். இவர்கள் எடுத்திருக்கிற நடவடிக்கைகளை எந்த முறையிலும் சட்டரீதியாக நியாயப்படுத்த முடியாது. 215 தொழிலாளர்களை 17-ம் தேதி முதற்கொண்டு ரிட்ரெஞ்ச் செய்வோம் என்று சொல்லி உத்தரவு போட்டிருக்கிறார்கள். இதேமாதிரி முயற்சியை இவர்களுக்குச் சொந்தமாக இருக்கக்கூடிய ஆலையில், சித்தூர் பக்கத்தில் உள்ள ஆலையில்—இம்மாதிரி நோட்டீஸ் கொடுத்தவுடன், அங்குள்ள அரசாங்கம் அதை உடனடியாக வாபஸ் வாங்கவேண்டும் என்று சொல்லி யாரையும் வேலையில் இருந்து நிறுத்தக் கூடாது என்று உத்தரவு போட்டு நிறுத்திவிட்டார்கள்.

இங்கு இவர்கள் செய்திருப்பதும் சட்டவிரோதமான செய்கை. உற்பத்தி பெருக வேண்டும் என்று சொல்லும்போது அதற்குத் தடங்கல் ஏற்படுத்தும் நிலை. இன்று அந்த மில் ஓடாமல் இருந்து கொண்டு இருக்கிறது.

இந்த 215 பேர்களில் 110 பேர்கள் நிரந்தர தொழிலாளர்கள். 215 பேர்களையும் உடனடியாக வேலையில் எடுத்துக் கொள்ள அரசாங்கம் வற்புறுத்தவேண்டும். அப்படிச் செய்யாது போனால் ஒரு தொழிலாளர் தகராறு இல்லாமலிருக்கும்போது ஒரு தொழிலாளர் தகராறை கிளப்பிவிடக்கூடிய முறையில் இவர்கள் நடவடிக்கை இருக்கிறது. ஏற்கனவே 9(எ) படி நோட்டீஸ் கொடுக்கப்பட்டது.

ஏற்கனவே சீப் பாக்டரி இன்ஸ்பெக்டர் விசுவநாதன் என்பவர் போலீஸை வைத்துக்கொண்டு வேலை செய்யவேண்டுமென்று வற்புறுத்தினார்கள் ஆப்பக்கூடலில். தொழிலாளர்களுக்கு இருக்கக்கூடிய பாதுகாப்பைக்கூட மீறக்கூடிய அளவிற்கு இந்த நிர்வாகம் செயல்படுகிறது. ஆகவே, இது பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்று நான் கருதுகிறேன். இது வெறும் சட்டப் பிரச்னை அல்லது தொழிலாளர் பிரச்னை மட்டுமல்ல என்று கூறி சபையை ஒத்தி வைத்து விவாதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** தலைவர் அவர்களே, இந்த சக்தி டெக்ஸ்டைல்ஸ் மூடப்பட்டு தொழிலாளர்கள் வேலையிலிருந்து விலக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலையை நாம் அனுமதிக்கக் கூடாது. அப்படி அனுமதித்தால் இன்னும் பல தொழிற்சாலைகளில் இப்படிப்பட்ட விளைவுகள் ஏற்படலாம். அதுவும் இந்த சக்தி க்ரூப் தொழிற்சாலை பற்றி, முன்னால் சர்க்கரை ஆலை பிரச்னை பற்றி இங்கு விவாதிக்கப்பட்டுள்ளது. இப்போது டெக்ஸ்டைல்ஸ் வந்திருக்கிறது.

அடுத்தடுத்து இப்படிப் போய்க்கொண்டேயிருக்குமானால் இவை எங்கே கொண்டுபோய் விடும் என்று என்னால் எண்ணிப் பார்க்க முடியவில்லை. அதுவும் இப்போது எமர்ஜென்ஸி இருக்கிறது. இம்மாதிரியான செயல்களை எல்லாம் செய்யக் கூடாது என்று கண்டிப்பாக சொல்லியிருந்தும்கூட அதையும் மீறி தொழிலாளர்களை வெளியே அனுப்பிவிட்டு தொழிற்சாலையை மூடக்கூடிய நிலை இருக்கிறது. எனவே, அரசாங்கம் மிகவும் கடுமையான நடவடிக்கைகளை எடுத்து அதைத் தடுத்து நிறுத்தக்கூடிய முறையில், அதைத் தடுத்து நிறுத்தி அடக்க வேண்டும் என்பதுபற்றி விவாதிக்க இந்தச் சபையை ஒத்திவைத்து விவாதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, பொள்ளாச்சியிலுள்ள ஸ்ரீ சக்தி நூற்பாலையில் சுமார் 771 தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். இந்த நிறுவனத்தில் கீழ்க்கண்ட தொழிற்சங்கங்கள் இயங்கி வருகின்றன :—

1. கோவை ஜில்லா தேசிய பஞ்சாலை ஊழியர்கள் சங்கம், கோவை.

2. தேசிய பஞ்சாலை தொழிலாளர் சங்கம், கோவை.

3. கோவை ஜில்லா மில் தொழிலாளர் சங்கம், கோவை.

4. கோவை மாவட்ட கிராமிய பஞ்சாலை தொழிலாளர் முன்னேற்றச் சங்கம், கோவை.

நிர்வாகத்தினர் தங்களது அறிக்கையில் 6—10—75 தேதியில் 215 தொழிலாளர்களை 17—11—75 முதல் ஆட்குறைப்பு செய்யப் போவதாக அறிவித்தனர். மேற்சொன்ன அறிவிப்பில்,

வியாபார மந்த நிலை ஏற்பட்டதின் விளைவாக நூல் தேக்கம் ஏற்பட்டதாலும், சன்ன இழை நூலிற்கு கிராக்கி இருப்பதனால் நிர்வாகத்தினர் மோட்டா ரக நூல் உற்பத்தியிலிருந்து சன்ன ரக நூல் உற்பத்திக்கு கட்டாயமாக மாறவேண்டியிருப்பதாலும், 215 தொழிலாளர்களை ஆட்குறைப்பு செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டு இருப்பதாக நிர்வாகத்தினர் அறிவித்தனர். இந்த ஆட்குறைப்புக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் தொழிலாளர்கள் 6—10—75-லிருந்து வேலைநிறுத்தம் செய்து வருகின்றனர்.

இத் தொழிற் தகராறின் மீது கோவை உதவி தொழிலாளர் துணை ஆணையர் முன்பு 9—10—75 அன்று பேச்சுவார்த்தை நடைபெற்றது. நிர்வாகத்தினர் மேற்கூறியபடி தங்களது நிலையையும், தொழிற்சங்கத்தினர் ஆட்குறைப்பு அறிவிப்பை நிர்வாகம் ரத்து செய்யவேண்டும் என்றும் வலியுறுத்தினர். பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்படவில்லை. ஆகவே, மேற்கொண்டு பேச்சுவார்த்தை கோவை துணை ஆணையர் முன்பு 14—11—75 அன்று நடைபெற இருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இது பேச்சுவார்த்தைகளை ஏற்றுக் கொள்ளக்கூடிய நிர்வாகம் அல்ல. கேரளாவில் செய்ததுமாதிரி உத்தரவு போட்டு இந்த ரிட்ரெஞ்ச்மென்ட் ஆர்டரை வாபஸ் வாங்கச் செய்யவேண்டும். லே ஆப் ரிட்ரெஞ்ச்மென்ட் கூடாது என்று டெல்லி அறிவித்துக்கொண்டிருக்கிறது. நம் சர்க்காரும் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறது. இந்த நிர்வாகம் இந்த 215 பேர்களை எப்படியாவது நீக்கிவிட்டு புது ஆட்களை எடுக்க வேண்டும் என்று கருதி இப்படிச் செய்கிறார்கள். எனவே, அப்படி செய்யாதிருக்கக்கூடிய முறையில் டெபுடி லேபர் கமிஷனர் மூலம் ஒரு தாக்கீதை அரசாங்கம் பிறப்பிக்குமா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** இப்போது ரிட்ரெஞ்ச் செய்கிறார்கள். புது ஆட்களை எடுப்பதாகத் தெரியவில்லை. இந்தப் பேச்சுவார்த்தை முடிந்தபிறகு இதற்கான நடவடிக்கைகளை நானே மேற்கொள்ளுவதாக இருக்கிறேன்.

**திரு. சு. துரைசாமி:** இதில் இந்த 215 தொழிலாளர்கள். . .

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** பாயின்ட் ஆப் ஆர்டர், ஸார். உறுப்பினர் அவர்கள். . .





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் ஒன்றும் கொடுக்கவில்லையே. பின் எப்படிப் பேசலாம்?

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையின் பிற அலுவல்களை நிறுத்திவைத்து இதுகுறித்து விவாதிக்கவேண்டிய தேவை இல்லை என்று நான் கருதுவதால் இதற்கு அனுமதி அளிக்க மறுக்கிறேன்.

**(இ) ஆப்பக்கூடல் சக்தி சர்க்கரை ஆலையில் லே ஆஃப் மற்றும் ஆட்குறைப்பும், அதனால் ஏற்பட்ட விளைவுகளும் குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள்.

"serious situation arising out of lay off and retrenchment of workers numbering thousands in the Appakoodal Sakthi Sugar Factory and continued harassment of senior workers resulting in crisis in the industry and the workmen and agriculturists generally and the unrest in these areas in Coimbatore district." என்று கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவசர, பொது முக்கியம் வாய்ந்தது என்பதை மிகச் சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவர் அவர்களே, இந்த சக்தி க்ரூப்ஸில் இது ஒரு ரொம்ப முக்கியமான விஷயம். ஏற்கனவே இதைப் பற்றி விவாதம் நடந்திருக்கிறது. இந்த சக்தி சர்க்கரை ஆலை தமிழ் நாட்டிலுள்ள மிகப் பெரியதொரு ஆலை. அந்த ஆலைக்கு கரும்பு சப்ளை செய்யக்கூடிய விவசாயிகளிடமிருந்து பலமுறைகளில் அந்த நிர்வாகம் பணம் வசூலிக்கிறது.

அந்த ஆலையில் ஆயிரத்திற்கு அதிகமான தொழிலாளர்கள் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். நிரந்தரமான தொழிலாளர்களை லே ஆப்-ல் அனுப்புவதே கிடையாது. இப்போது அங்கு நிரந்தரமான தொழிலாளர்களைக்கூட லே ஆப்-ல் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கனவே இருக்கக்கூடிய ஸீஸன் தொழிலாளர்களும் இருக்கிறார்கள். இப்போது அவர்களை என்ன செய்கிறார்கள் என்றால்—நான்கைந்து ஆண்டுகள் சர்வீஸான தொழிலாளர்களை நீங்கள் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு லீவ்

எடுத்தீர்கள் காரணம் இல்லாமல் நீங்கள் லீவ் எடுத்தீர்கள் என்றெல்லாம் ஏதோ காரணம் காட்டி மெமோ கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தத் தொழிற்சாலையைப் பொறுத்தமட்டில் தமிழ்நாட்டிலுள்ள எந்தவிதமான சட்டத்தையும் இவர்கள் மதிப்பதில்லை. எந்தவிதமான நடவடிக்கைகள் எடுத்தாலும் அதற்கு விரோதமாகத்தான் நடப்போம் என்ற முறையில், அரசாங்கம் எதுவுமே செய்யமுடியாது என்று பிடிவாதமாக இருக்கக்கூடிய ஒரு நிர்வாகம் இது. 9(எ)-படி நோட்டீஸ் போடுவார்கள், வேலையை மாற்றுகிறோம் என்று. அப்படிப் போடும்போது இந்த வேலையிலிருந்து மாற்றக்கூடாது என்று எல்லாச் சங்கங்களும் அரசாங்கத்திற்கு மனு செய்து கொள்வார்கள். பின்னர் பேச்சுவார்த்தை நடக்கும்.

ஆனால் இங்கு ஏற்பட்டது என்ன? பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. அதேநேரத்தில் சர்க்காரில் நல்ல அனுபவம் பெற்ற ஒரு சீப் பாக்டரி இன்ஸ்பெக்டர் விசுவநாதன் என்பவர் போலீஸை வைத்துக்கொண்டு தொழிலாளர்களை நீங்கள் புதிய வேலையில் சேர்ந்து வேலை செய்யவேண்டும் என்று சொல்கிறார். தெரிந்தால் ஐ.எல்.ஓ. இதைக் கண்டிப்பாக கண்டிக்கும். தமிழ்நாட்டில்தான் இந்தமாதிரி ஒன்று நடக்கிறது, போலீஸை வைத்துக்கொண்டு நிர்வாகம் வேலை வாங்குவது எனது அனுபவத்தில் சொல்கிறேன், சமீப காலத்தில் தமிழ்நாடு ஒன்றில்தான் **இப்படி நடக்கிறது. ஒன்றரைக்கோடி ரூபாய் பாக்கி இருக்கிறது.** எப்படி சக்தி பைப்ஸ் பற்றி பேச ஒரு சந்தர்ப்பம் ஒரு மசோதா மூலம் நமக்கு கிடைத்ததோ அதேமாதிரி இந்த சக்தி ஷுகர்ஸ் சம்பந்தமாகவும் விவாதிப்பது தமிழ்நாட்டுக்கும், தமிழ் நாட்டு மக்களுக்கும், தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் நல்லது என்றுதான் நான் அபிப்பிராயப்படுகிறேன்.

(முற்பகல் 10-30)

அவ்வளவு முக்கியமான விஷயமாக இருக்கின்ற காரணத்தால்தான், 1½ மணி அல்லது 2 மணி நேரம் விவாதிக்க சந்தர்ப்பம் கிடைத்தால் நாங்கள் சொல்வதை விட, ஆளும் கட்சியிலிருப்பவர்கள் நிறைய விவரங்களைக் கொடுத்து இந்த நிர்வாகத்தை



ஒன்று அரசு எடுத்து நடத்த வேண்டும் அல்லது அவர்களின் நிர்வாகத்தை கட்டுப்படுத்த வேண்டுமென்ற நிலையை எடுப்பார்கள். இப்போது விவசாயிகளே எங்களுக்கு 1½ கோடி ரூபாய் கிடைக்கவில்லை என்று சொல்கின்ற நிலைமையும். தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்குமா இல்லையா என்ற நிலையும் இருக்கிறது. உலகத்திலேயே தொடர்ந்து இத்தனை நாள் வேலை செய்யாத தொழிற்சாலை என்ற பெயர் பெற்ற தொழிற்சாலை, இந்தத் தொழிற்சாலை, தமிழ் நாட்டில் இருக்கிறது. ஆகவே இந்த முக்கியமான, அவசர நிலைக்கு உள்ளிட்டு இருக்கிற, மிக அவசியமான பிரச்னையை விவாதிக்க இந்த சபையை ஒத்திவைத்து பேசவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, சக்தி சர்க்கரை ஆலை, ஆப்பக்கூடல் என்னும் நிறுவனத்தில் சுமார் 1,149 தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். கீழ்க்கண்ட தொழிற் சங்கங்கள் இந்நிறுவனத்தில் இயங்கி வருகின்றன.

**1. சக்தி சர்க்கரை ஆலைத் தொழிலாளர் முன்னேற்ற சங்கம், சக்திநகர்.**

**2. சக்தி சுகர்ஸ் எம்ப்ளாயீஸ் யூனியன், சக்திநகர்.**

**29—9—75 அன்று நிர்வாகத்தினர் 350 தொழிலாளர்களை** 30—9—75 பிற்பகல் முதல் ஆட்குறைப்பு செய்யப் போவதாகவும். மேலும் மற்ற எல்லாத் தொழிலாளர்களையும் 1—10—75 முதல் மூன்று மாதத்திற்கு லே-ஆப் செய்யப் போவதாகவும் அறிவித்தனர். தொழிற்சாலைக்குத் தேவையான மூலப் பொருளான **கரும்புப் பற்றாக்குறையை முன்னிட்டு ஆட்குறைப்பு மற்றும் லே-**ஆப் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவித்தனர். ஆட்குறைப்பு செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு நஷ்ட ஈட்டுத் தொகையை தபால் மூலம் அனுப்பிவிட்டதாகவும் தெரிவித்தனர்.

நிர்வாகத்தினரின் மேற்கூறிய நடவடிக்கையை எதிர்த்து தொழிற்சங்கத்தினர் தொழிற் தகராறு எழுப்பினர். இத்தொழிற் **தகராறின்மீது கோவை மூன்றுவது வட்ட தொழிலாளர் துறை** அலுவலர் முன்பு 9—10—75 அன்று பேச்சு வார்த்தை நடைபெற்றதில் உடன்பாடு ஏற்படவில்லை.

ஆட்குறைப்பு சம்பந்தமாக பேச்சு வார்த்தை கோவை, தொழிலாளர் துறை துணை ஆணையர் முன்பு நடைபெறவிருக்கிறது.

லே-ஆப் சம்பந்தமாக 24—10—75 அன்று என் முன்பு பேச்சு வார்த்தை நடைபெற்றது. அதன் பின்னர் இரு தரப்பினரையும் நேரடியாகப் பேச்சு வார்த்தை நடத்துமாறு நான் ஆலோசனை கூறினேன். மீண்டும் 15—11—75 அன்று என் முன்பு லே-ஆப் பற்றி பேச்சு வார்த்தை தொடர்ந்து நடைபெறவிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து இது குறித்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்று நான் கருதுவதால் இதற்கு அனுமதி அளிக்க மறுக்கிறேன்.

## (3) கவன ஈர்ப்பு

### நெல்லிக்குப்பம் பாரீஸ் கன்பெக்ஷனரி மூடப்பட்டதும், தொழிலாளர் வேலை இழப்பும்.

THIRU V. KRISHNAMOORTHY: Sir, under Rule 41 of the Assembly Rules, I call the attention of the Hon. Minister for Labour and Transport to a matter of urgent public importance, i.e., the closure of the Parry Confectionery at Nellikuppam for the past several months by the management and the loss of work for about 1,500 workers.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, நெல்லிக்குப்பம் பாரீஸ் கன்பெக்ஷனரி லிமிடெட் தொழிற்சாலையில் சுமார் 600 தொழிலாளர்கள் வேலை பார்த்து வந்தனர். இத் தொழிற்சாலையில் மிட்டாய்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. வியாபார மந்த நிலையால் உற்பத்தியான பொருள்கள் விற்பனையாகாத காரணத்தைக் கூறி நிர்வாகத்தினர் 11—6—75 முதல் தொழிலாளர்களை வேலை வாய்ப்பில்லை என்று லே-ஆப் செய்தனர். அந்த நிலை நீடித்ததால் தொழிற்சாலையில் உற்பத்தி அளவையும், தொழிலாளர் தேவையையும் குறைக்க அவசியம் ஏற்பட்டதென்ற காரணத்தைக் கூறி நிர்வாகத்தினர் 291 தொழிலாளர்களை 1975-ம் ஆண்டு ஜூலை 7 முதல் ஆட்குறைப்புச் செய்துள்ளதாக அறிவிப்புக் கொடுத்தனர். இந்த ஆட்குறைப்பின் காரணமாக நிர்வாகத்திற்கும், தொழிலாளர்களுக்குமிடையே தகராறு ஏற்பட்டு ஆட்குறைப்பை ஆட்சேபனை செய்யும் வகையில் மற்ற தொழிலாளர்கள் நிர்வாகத்தினரால் வேலைக்கு அழைக்கப்பட்டபோதிலும் 26—7—75 முதல் வேலைக்குச் செல்லவில்லை.



இத்தொழிற் தகராறு சம்பந்தமாக தொழிலாளர் துறை உதவி ஆணையர் முன்பு சமரசப் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டன. இதற்கிடையில் தொழிலாளர்களுக்கு அதுமட்டும் கொடுக்கப்பட்டு வந்த சம்பளம் நிர்வாகத்தின் பொருளாதார சக்திக்கு அப்பாற்பட்டு இருப்பதாகவும், அந்தச் சம்பள விகிதங்களை தொடர்ந்து கொடுப்பதற்கு நிர்வாகத்தினரால் இயலாதென்றும், இதர மிட்டாய் உற்பத்தியாளர்களுடன் போட்டியிடும் நிலைக்கு நிறுவனத்தைக் கொண்டு வந்தால்தான் தொழிலைத் தொடர்ந்து நடத்த முடியும் என்றும் கூறி சம்பள விகிதங்களை குறைக்கும் வகையில் நிர்வாகத்தினர் 13—8—1975 அன்று அறிவிப்புக் கொடுத்துள்ளனர்.

இத்தொழில் தகராறு சம்பந்தமாக தொழிலாளர் துறை ஆணையர் முன்பு 21-8-1975 அன்று பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து 3-9-1975, 16-9-1975, 27-10-1975 ஆகிய தேதிகளில் என் முன்னிலையிலும் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. ஆட்குறைப்புச் செய்யப்பட்ட தொழிலாளர்களை திரும்பவும் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், நடைமுறையில் இருந்து வரும் சம்பள விகிதத்திற்கு குறைவு ஏற்படக்கூடாதென்றும் எழுப்பப்பட்டுள்ள பிரச்னைகளில் இன்னும் சுமுகமான உடன்பாடு ஏற்படவில்லை. மீண்டும் இரு தரப்பினரையும் கூப்பிட்டுப் பேசலாம் என நினைத்திருக்கிறேன். விரைவில் இரு தரப்பினரும் ஒப்புக்கொள்ளக்கூடிய முடிவு ஏற்படும் என நம்புகிறேன்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** சார், இந்த பாரீஸ் கன்பெக்ஷனரிதான் இந்தியாவிலேயே முதன்முதலாக வெள்ளைக்காரர்கள் ஆண்ட சமயத்திலிருந்து இருக்கக்கூடிய கன்பெக்ஷனரியாகும். அங்கே நிரந்தர தொழிலாளர்கள் ஏறக்குறைய 800 பேரும், காஷுவல் தொழிலாளர்கள் 700 பேரும், ஆக 1,500 பேர்கள் தொடர்ந்து இதுவரையில் வேலை செய்து வந்தார்கள். பாரி குரூப் பொதுவாக 2

அல்லது 2½ கோடி ரூபாய் லாபம் வருவதாக பாலன்ஸ் ஷீட்டில் காட்டியிருக்கிறார்கள். ஆனால் கன்பெக்ஷனரியைப் பொருத்த வரையில் 2, 3 ஆண்டுகளாக மானேஜ்மெண்டுக்கும் அங்கே இருக்கின்ற தொழிலாளர்களுக்கும் சரியான ரிலேஷன்ஷிப் இல்லாததால், பழி வாங்கும் எண்ணத்தோடு, நஷ்டம் வருகிறது என்று கணக்குக் காட்டி, அதை வைத்து விரும்பத் தகாத நிலையால் ஆட்குறைப்பு என்று சொல்லி, மறைமுகமாக ஆட்குறைப்புச் செய்வது, அப்படிச் செய்தால் ஸ்டிரைக் செய்வார்கள், அதன் காரணமாக சம்பளம் கொடுக்கக் கூடாத நிலை ஏற்படும் என்று மானேஜ்மெண்டே இதைச் செய்திருக்கிறார்கள். இது ஏற்பட்டு 5, 6 மாதங்கள் ஆகின்றன. ஒரு நாளைக்கு ஒரு தொழிலாளிக்கு சம்பளம் கிடைக்கவில்லை என்றால், அவன் வீட்டில் எதுவும் நடக்காது. 5, 6 மாதங்களாக கன்பெக்ஷனரி மூடி இருக்கிறது. தொழிலாளர்களுக்கு அரசாங்கம் என்ன நிவாரணம் தேடித் தந்தது? உடனடியாக லேபர் கமிஷனரைக் கொண்டு செட்டில் செய்ய ஏன் முயற்சி செய்யவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, தொழிலாளர் தரப்பிலும், நிர்வாகத் தரப்பிலும் ஓர் உடன்பாடு ஏற்பட முடியவில்லை. என்னுடைய அறிக்கையில் நானே மூன்று முறைகள் பேச்சுவார்த்தை நடத்தியிருப்பதைக் குறிப்பிட்டிருக்கிறேன். நான்காவது முறை பேச்சுவார்த்தை நடத்தும் சூழ்நிலை இருக்கிறது. சீரான நிலை இல்லாததால் ஒரு முடிவுக்கு வரமுடியவில்லை. உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல, இந்தத் தொழிற்சாலை வெள்ளைக்காரன் காலத்தில் உருவாக்கப்பட்ட பழைய இயந்திரங்களைக் கொண்டது. அதையும் பழுது பார்க்க வேண்டிய நிலைமையில் நிர்வாகம் இருக்கிறது.

## (4) தமிழ் நாடு மின்சார வாரியத்தின் 1975-76 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீதான விவாதம்—தொடர்ச்சி.

**திரு. தொ. ப. சீனிவாசன்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, 1974-75 ஆம் ஆண்டுக்கான மின்சார வாரியத்தின் துணை மான்யக் கோரிக்கையை வரவேற்று என் உரையைத் துவக்க விரும்புகிறேன்.



தமிழக அரசு தமிழகத்தில் மின்சாரத் துறை எவ்வளவு அத்தியாவசியமானது என்ற நிலைமையினை உணர்ந்து கடந்த காலத்திலேயே விவசாயிகளுக்கும் மற்றவர்களுக்கும் எளிய முறையில் பயன்படக்கூடிய அளவில் நல்ல காரியங்களைச் செய்துள்ளது கண்டு நாம் அந்த இலாக்காவைப் பாராட்டாமல் இருக்க முடியாது. அதிலும் சென்ற சில மாதங்களாக நமது அமைச்சர் அவர்கள் மாவட்ட வாரியாகக் கருத்தரங்கு நடத்தியிருக்கிறார்கள். ஒன்றியங்களின் மூலமாகக் கருத்தரங்குகளை நடத்தியிருக்கிறார்கள். அதன் பலனாக நாம் குறைபாடுகளை அதிகாரிகளிடம் சொல்லுகின்ற போது, வேலைகள் துரிதமாக நடைபெறுகின்றன. குறிப்பாக, என்னுடைய தொகுதியில் நீண்ட காலமாக விவசாயிகளுக்கு மின்சாரம் கிடைத்தும், அந்த மின்சாரத்தின் சக்தி அதிகக் குறைவாக இருக்கின்ற காரணத்தால், அதிக அளவில் பம்பு செட்டுகள் எல்லாம் எரிந்து கொண்டிருந்தன. அதை நான் பல ஆண்டுகளாக அதிகாரிகளிடம் எடுத்துச் சொல்லி வந்தேன். ஆனால் அந்தக் குறைபாட்டை நீக்குகின்ற வேலை ஏனோ தடைபட்டு வந்தது.

வேலூரில் கருத்தரங்கு நடைபெற்ற பிறகு அமைச்சர், அவர்களின் துரித நடவடிக்கைக்குப் பிறகு, வேலைகள் துரிதமாக நடைபெற்று, கடந்த மாதத்தில் அமைச்சர் அவர்கள் கால்கோள் விழா நடத்தி வேலைகள் விரைவில் நடக்கின்றன. இப்போது நடைபெறும் வேகம் விவசாயிகளுக்கும் மற்றவர்களுக்கும் நல்ல பயனை அளிக்கக்கூடியதாக இருப்பதால், இதைத் தொடர்ந்து சிறப்பாக நடத்தவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

அதே நேரத்தில் இப்போது மின்சார வாரியத்தில் விஜிலன்ஸ் என்ற ஒரு பிரிவு வைத்திருக்கிறார்கள். அது எப்படி வேலை செய்யப் போகிறதோ என்று எண்ணினேன். ஆனால், விஜிலன்ஸ் பகுதியின் வேலை சிறப்பாக அமைந்திருக்கிறது. அதில் மின்சாரத் திருட்டைக் கண்டுபிடித்துத் தடுக்கின்ற பகுதியிருக்கிறது. அதில் சிக்கிக்கொள்பவர்கள் எல்லாம் விவசாயிகளாகத்தான் இருக்கிறார்கள். பெரும்பகுதி மின்சாரத்தைத் திருடுகின்ற பெரிய ஆலை அதிபர்கள், முதலாளிகள் சிக்குவதில்லை. விஜிலன்ஸ் அதிகாரிகள், மற்ற ஏழை எளியவர்கள்பால் அதிக கவனத்தைச் செலுத்துவதைவிட, பெரிய ஆட்கள் பேரில் கவனம் செலுத்தினால் நன்றாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் நமது கருத்தரங்கிலே பல கருத்துக்கள் எடுத்துச் சொல்லப்பட்டன. கிராமப்புறங்களில் மின்சார விளக்குகள் எரிந்து கொண்டிருக்கின்றன. அதை எப்போதோ போட்டிருக்கிறார்கள்; பகலிலும் எரிந்து கொண்டு இருக்கிறது. அதைச் சரியாக நிறுத்துவதில்லை. அதனால் ஊராட்சி மன்றங்கள் பணம் கட்ட வேண்டிய நிலைமை இருக்கிறது. ஊராட்சி மன்றக் கூட்டங்கள், மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்கள் ஆகியவைகளில் இந்தக் கருத்துக்களை ஆணித்தரமாக எடுத்துச் சொல்லி இருக்கிறேன். ஆனாலும் குறை நீக்கப்படவில்லை. பரவலாக இது இன்னும் செயல் முறைப்படுத்தப்படவில்லை. இதற்கு அரசாங்கம் துரிதமாக நடவடிக்கை எடுத்தால் நமது கிராமங்களில் உள்ள பஞ்சாயத்துக்களுக்கு உபயோகமாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(திரு. வா. எம். அப்துல் ஜப்பார்—தலைமை)

3 ஹார்ஸ் பவர் உள்ள பம்புசெட் வாங்கி வைத்துள்ள சிறு விவசாயிகளுக்கு இந்த இலாகாவால் பலன் கிடைக்கவில்லை என்ற குறையை என்னாலே சொல்லாமல் இருக்க முடியவில்லை. காரணம், அதிகாரிகளைக் கேட்கின்றபோது சொல்கிறார்கள் 3 ஹார்ஸ் பவர் வைத்து இருப்பவர்களுக்கு 10, 15 ஆண்டுகளுக்கு முன்பு கட்டுமானத்திற்கு கியாரண்ட்டியாக 50 ரூபாய் நிர்ணயித்திருந்தார்கள். அந்த நேரத்திலே 1 ஹார்ஸ் பவருக்குக் கட்டணம் 7 பைசாவாக இருந்தது. 10, 15 வருஷங்களில் 16 பைசாவாக உயர்ந்திருக்கிறது. அந்தக் கட்டுமானச் செலவு 250 ரூபாய் என்று அவர்கள் கணக்கிட்டுப் பார்த்து, ரெவினியூ சரியாக வராது, அது மிகக் குறைவு, எனவே 3 ஹார்ஸ் பவர் வைத்திருப்பவர்களுக்கு மின்சாரம் கொடுக்க முடியாது என்று அதிகாரிகள் சொல்கிறார்கள் என்பதைச் சொல்ல ஆசைப்படுகிறேன். 7 பைசா, 16 பைசா ஆகியது, 50 ரூபாய் 100 ரூபாய் ஆகவில்லை என்கிறார்கள். இதனால் 3 ஹார்ஸ் பவர் வைத்துள்ள ஏழை விவசாயிகளுக்கு மின்சாரம் கிடைக்க முடியாத நிலைமை ஏற்படுகிறது. ஒன்றைத் தயவுசெய்து பரிசீலனை செய்தால் மிகவும் உபயோகமாய் இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் அமைச்சரவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு மின்சாரம் வராத நிலைமையில் டிரான்ஸ்பார்மரைப் பொருத்துகிறார்கள். அதிக அளவில் மின்சாரம் வந்தாலும் விவசாயிகளுக்கு அது வர முடியாத நிலைமைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. விவசாயிகள் எந்தத் துறையிலோ கடன் வாங்கி பம்பு செட்டு வாங்கி மிக்க ஆர்வத்தோடு விவசாயம் செய்ய முற்படுகிற நேரத்தில் 2, 3 ஆண்டுகளானாலும் அவர்களுக்கு மின்சாரம் கிடைக்காத சூழ்நிலை இருந்துகொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதிகாரிகளைக் கேட்டால் நாம் 100 ஹார்ஸ் பவர் டிரான்ஸ்பார்மரை அமைக்கிறோம். மேலும் 20 ஹார்ஸ் பவர் கொடுக்கலாம். அதற்கு மேலும் ஏராளமாக மின்சாரம் கொடுக்க வேண்டியிருக்கிறது. அதற்கான டிரான்ஸ்பார்மர்களை மாற்றுவது என்றாலும் நம்மிடம் அந்த அளவிற்குப் போதுமான டிரான்ஸ்பார்மர்கள் இல்லை என்பதை, நீங்கள் மக்கள் பிரதிநிதிகளாக இருப்பதால், உங்களிடம் தெரிவிக்கிறோம் என்கிறார்கள். எத்தகைய நிலைமைகளையும் சமாளிக்கிற இந்த அரசு இன்னும் அதிக அளவில் மின்சாரம் வழங்குவதற்குத் தேவைப்படுகிற "கெபாசிடி" உள்ள டிரான்ஸ்பார்மர்களைத் துரிதமாகக் கொடுத்தால் இந்தச் சிறிய குறைபாடுகளை அந்தப் பகுதியிலே தீர்க்க முடியும். புதிது, புதிதாக மின்சாரம் கொடுக்க வேண்டிய நிலை பெரிய அளவில் ஒருபுறம் இருந்தாலும் இருக்கின்ற விவசாயிகளுக்கு இரண்டாண்டுகளாகியும் மின்சாரம் கொடுக்காத விவசாயிகளுக்கு மின்சாரம் கிடைக்க ஏற்பாடு செய்தால் ஒரு பெரிய வாய்ப்பாக இருக்கும். இதைத் தயவுசெய்து இலாக்காப் பூர்வமாகத் துரிதமாக நடவடிக்கை எடுத்து இந்தக் குறையை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மற்றொரு சிறு குறையை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். 15 ஆண்டுகளுக்கு முன்பு மின்சாரம் கொடுப்பது தனியாரிடம் இருந்தது. மின்சாரக் கம்பங்களுக்கு காண்ட்ராக்ட் ஒப்பந்தம் இருந்தது. அந்த ஒப்பந்தக்காரர்கள் 15, 20 ஆயிரம் ரூபாய் என்று முன் பணம் கட்டியிருக்கிறார்கள். சிமெண்ட் பற்றாக்குறை காரணமாக, வேறு காரணங்களுக்காக இந்த ஒப்பந்தக்காரர்கள் ஒப்பந்தத்தை நிறைவேற்ற முடியாமல் பாதியிலோ, முக்கால் வாசியிலோ நிறுத்திவிட்டார்கள். 15 ஆண்டுகளில் இந்த ஒப்பந்தக்காரர்கள் ஏழைகளாகிவிட்டிருக்கிறார்கள். 15, 20 ஆண்டுகளாகியும் அவர்கள் கட்டிய முன் பணத்தைக்

கொடுக்க அதிகாரிகள் தயாராக இல்லை. 15, 20 ஆண்டுகளாகியும் இன்னும் காலதாமதமாகிக் கொண்டு இருக்கிறது. ஒன்று கொடுக்க முடியும், இல்லையென்றால் கொடுக்க முடியாது என்று அவர்களுக்குச் சொல்லி விட வேண்டும். அப்படியே அவர்கள் ஒப்பந்தப்படி நடந்து கொள்ளாமல் இருந்திருந்தால் "டோக்கன்" ஆக, அபராதமாக, குறித்த காலத்தில் சிமெண்ட் கம்பங்களைக் கொடுக்கவில்லை, தவறி விட்டீர்கள் என்று சொல்லி, ஒரு தொகையைப் பிடித்துக்கொண்டு பாக்கியைத் திருப்பிக் கொடுத்து விட்டால் விவகாரம் தீர்ந்து விடும்.

இந்த அரசாங்கம் பரவலாக நல்ல பெயர் எடுத்து விட்டது. இப்போது மின்சாரம் இல்லை என்றால் வாழ்வு இல்லை. மின்சாரமும், அரிசியும் மிக மிகத் தேவையாகி விட்டன. சென்ற ஆண்டு அரிசி இல்லை என்ற நிலைமை இருந்தது. இந்த ஆண்டு அரிசி இல்லை என்ற நிலைமை இல்லை. சென்ற ஆண்டு மின்சாரம் பற்றாக்குறையாக இருந்தது. இந்த ஆண்டு மின்சாரம் பற்றாக் குறையாக இல்லை. இதற்காக அமைச்சரையும், அதிகாரிகளையும் துணிந்து அவர்களுடைய நல்ல முயற்சிகளுக்காக நான் பாராட்டு கிறேன்.

ஆறு மாதங்களுக்குப் பிறகு பற்றாக்குறை இருக்குமா என்பது வேறு பிரச்னை. பெரிய முதலாளிகளைப்பற்றிக் கவலையில்லை. ஜெனரேட்டர் அமைத்துக்கொண்டு விடுவார்கள். ஆனால் ஏழை விவசாயிகளால் மின்சாரம் இல்லாமல் இருக்க முடியாது. 3 ஹார்ஸ் பவர் பம்புசெட் வைத்திருக்கிற விவசாயிகளுக்கு மாடு விழுந்து விட்டால் தண்ணீர் இறைக்க முடியாது. ஒரு மணி நேரமோ, இரண்டு மணி நேரமோ மின்சாரம் கிடைத்தால்தான் அவன் விவசாயத்தை நல்ல முறையில் செய்ய முடியும். இப்படிப்பட்டவர்களுக்கு நிச்சயமாக மின்சாரம் கிடைக்கும் என்று இந்த அரசாங்கம் அதிகாரிகளுடைய ஒத்துழைப்போடு அறிவித்தது மிகப் பெரிய வரப்பிரசாதம். இதை யாரும் மறுத்து விட முடியாது. அந்த அளவிற்கு இருக்கிற இந்த நிர்வாகத் துறை தமிழக அரசில் மிக மிக முக்கியமான இந்தத் துறை இனியும் நல்ல நிலைமையில் பாடுபட்டு, அதிகாரிகள் மேலும் ஊக்கத்துடன் வேலை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். கிராமப் புறங்களில் லைன்மென் என்பவர்கள் இருக்கிறார்கள். ஆங்காங்கு சிறு போட்டி அரசாங்கத்தை நடத்துகிறார்கள். விஜிலன்ஸ் அதிகாரிகள் இதை நன்கு கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த அரசாங்க அதிகாரிகள் போட்டி அரசியல் வாதியாக ஆங்காங்கு மாறி அவர்களுக்கு வேண்டாதவர்களுக்கு மின்சாரம் கிடைக்காமல் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் நீங்கள் தீவிரமாகக் கண்காணிக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அங்கே இருக்கிற சாமான்கள் திருடுபோகின்றன. அந்தச் சாமான்கள் எப்படித் திருடு போகின்றன, எங்கே விற்கப்படுகின்றன என்பதையெல்லாம் அதிகாரிகள் ஒப்புக் கொள்கிறார்கள். அதற்குப் பரிகாரம் என்ன? பல்புகளும், வேறு பொருட்களும் திருடு போகின்றன. அரசாங்கம் மின்சாரத் துறைக்கு வேண்டிய சாமான்களுக்குத் தனியார் கம்பெனிகளிடம் ஆர்டர் கொடுக்கின்றது. அந்தக் கம்பெனிகள் இந்தப் பொருள்களின்மீது "ஈ.பி." என்று போடும்படி "கண்டிஷன்" போட வேண்டும். இப்படிப் போட்டால் அப்படியே யாராவது அந்தப் பொருட்களைத் திருடிவிட்டாலும், விற்பதற்காகக் கொண்டுவரப்படுகிற நேரத்திலே அதைப் பார்க்கிறவர்கள் இது சர்க்கார் சொத்து என்று வாங்காத அளவிற்கு அடுத்த திருடனுக்கு அச்சம் ஏற்படுகிற வாய்ப்பு இருக்கும்.

மற்றொரு விவரத்தையும் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். இரண்டு மூன்று ஆண்டுகளாக மின்சாரம் கொடுக்கின்ற முறையில் பலவித சிக்கல்கள் ஏற்பட்டிருந்தன. இப்போது ஒன்றியத்தின்மூலம் பரிசீலனைசெய்து பரிகாரம் கொடுக்கப்படுகிறது. ஆனால் இது துரிதமாக மேலும் கிடைக்க வேண்டுமென்றால் எல்லா ஒன்றியங்களிலும் இருக்கின்ற மனுக்களைப் பரிசீலனைசெய்து துரிதமாக நடவடிக்கை எடுக்க வாய்ப்பு இருக்கிறது. திருவண்ணாமலையில் இரண்டு மின்சார நிலையங்களை ஒன்று சேர்த்து ஒரு எஸ்.ஈ. போடப்பட்டிருக்கிறது. அங்கு எஸ்.ஈ. ஆபீசிற்கு இடமில்லை என்று சொன்னார்கள். தற்காலிகமாக வாடகைக்கு ஒரு இடத்தை எடுத்திருக்கிறார்கள். அந்தக் கட்டடத்தில் நீண்டகாலம் இருந்தால் வாடகையைக் கணக்கிட்டுப் பார்த்தால் பல லட்ச ரூபாய் ஆகிவிடும். அங்கு பரவலாக இடம்

இருக்கிறது என்ற காரணத்தால் இந்த இடத்தில் ஆபீசும், ஸ்டாப் குவார்ட்டர்ஸ்ஸும் கட்டினால் நன்றாக இருக்கும் என்று சொன்னேன். அந்த மின் நிலையத்திற்கு 13 லட்ச ரூபாயில் இடம் பார்த்துக் கொடுக்கிற முழுப்பொறுப்பையும் ஏற்றுக் கொண்டேன். அங்கிருக்கிற விவசாயிகளிடத்தில் சொல்லி அரசாங்கம் எந்த விலை கொடுத்தாலும் வாங்கிக் கொள்ளச் சொல்லி அந்த இடத்தை வாங்கிக் கொடுத்தேன். இங்கு ஆபீசோடு அலுவலர்களின் குவார்ட்டர்சையும் கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் மின்சாரத் துறையிலே செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்று பெரிய அளவிற்கு அதிகாரிகளை நியமித்து விஜிலன்ஸ் அதிகாரிகள் மாநில அளவிலே இருக்கிறார்கள். இதை தாலுக்கா அளவிற்கு நியமித்தால் மிகவும் நல்ல முறையிலே செயல்பட முடியும். இந்த விஜிலன்ஸ் அதிகாரிகள் போரூருக்குப் பக்கத்திலே ஒரு வாரம் விசாரணை நடத்தினார்கள். எவரிடத்திலிருந்து மனுக்கள் வந்தாலும் அந்த விசாரித்தார்கள். அதனால் அங்கே ஒரு புதிய நிலைமை உருவாகியிருக்கிறது. யார் தவறு செய்தாலும் துரிதமாக நடவடிக்கை எடுக்கிற நிலைமைகள் உருவாகி இருக்கின்றன. இந்த இலாகா இன்னும் நல்ல முறையில் செயல்பட்டு நல்ல பெயர் எடுக்க வேண்டுமென்று அமைச்சர்மூலம் கேட்டுக்கொண்டு இந்த அளவிற்கு எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவரவர்களே, இந்த மின்சார வாரியத்தின் ஆண்டு அறிக்கையின் பேரில் நான் பேசுகிறபோது வரவு-செலவுக் கணக்கைப்பற்றி அதிகம் பேசாமல், இந்த மின்சார வாரியம் செயல்படுவதற்காகக் கடந்த காலத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் இன்றைக்கு எந்த அளவிற்கு அதைப் பூர்த்தி செய்திருக்கிறது என்பதைப்பற்றிச் சில கருத்துக்களைச் சொல்லாமல் என்று நினைக்கிறேன்.

1—7—57 க்கு முன்னால் மின்சார வாரியம் கிடையாது. தனியாக அரசாங்கத்தின் ஒரு இலாகாவாகத்தான் இருந்து வந்தது. 1—7—57-ல் மின்சார வாரியம் அமைக்கப்பட்ட நேரத்தில் தெளிவாகச் சொன்னார்கள். இந்த மின்சார வாரியத்தில் அதிகாரிகள் மட்டுமில்லாமல், அதிகாரிகளாக இல்லாதவர்களும் இருப்பார்கள்



என்ற வாக்குறுதியை அன்றைக்கு அமைச்சராக இருந்த திரு. ராமையா அவர்கள் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இன்றுவரை பார்த்தால் மின்சார வாரியம் அதிகாரிகள் நிறைந்த வாரியமாகத்தான் இருக்கிறது. ஒன்று பைனான்ஸ் செக்ரட்டரி இருக்கலாம். இன்டஸ்ட்ரீஸ் செக்ரட்டரி இருக்கலாம். இப்படி பல செக்ரட்டரிகள் கொண்ட ஒரு வாரியமாக அமைந்து அதற்கு ஒரு தலைவர் போடப்பட்டிருக்கிறார். இந்தத் தலைவரைப் பற்றி ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

அகில இந்திய ரீதியாக மின்சார வாரியத்தில் பணியாற்றக் கூடிய தொழிலாளர்களுடைய சம்மேளனம் சில கருத்துக்களை வைத்திருக்கிறார்கள். இம்மாதிரியான வாரியங்களில் தலைவராக இருக்கக் கூடியவர்கள் ஒரு என்ஜினீயராக இருப்பது சாலச் சிறந்தது என்ற கருத்து. அதை உடனடியாக அமல்நடத்த வேண்டுமென்று சொல்ல வரவில்லை. அப்படி அமல் நடத்த முடியாமல் வேறு சிவில் சர்வன்ட்ஸ் இருக்க வேண்டுமென்று சொன்னால் அவர் அனுபவம் பெறுவதற்கு ஒன்றிரண்டு வருஷ காலமாகும். குறைந்தது மூன்று வருஷம் சேர்மெனாக இருக்க வேண்டும். 1957 லிருந்து பார்த்தால் சராசரி வருஷம் ஒன்றுக்கு ஒரு சேர்மென் என்ற முறையில் வந்தால் அந்த இலாகாவைச் செம்மைப்படுத்துவதற்கு அல்லது அந்த இலாகாவில் செயல்படுகிறவர்களுக்கு உற்சாகம் ஊட்டக்கூடிய எந்தவிதமான ஏற்பாடும் இருப்பதாகத் தெரியவில்லை. குறைந்தபட்சம் மூன்று வருஷமாவது தேர்ந்தெடுக்கப்படும் சேர்மென் அந்தப் பதவியில் இருக்க வேண்டும்.

இப்போது சேர்மெனாக இருப்பவர்பெயரில் எனக்கு ரொம்ப மதிப்பு உண்டு. உண்மையிலேயே செயல்திறன் படைத்தவர். அதற்கு இடைஞ்சல் இல்லாமல் இருக்க வேண்டும். இப்போது ஏற்பட்டுள்ள அமைப்பில் இந்தச் சேர்மென் அல்ல, வேறு எந்தச் சேர்மென் வந்தாலும் செயல்பட முடியுமா என்பதில் எனக்கு ஐயப்பாடு உண்டு. அங்குள்ள அமைப்பு வாரியம் இருக்கிறது, அதன் கீழ் ஐந்து சீப் என்ஜினியர்கள் இருக்கிறார்கள். ஐந்து பேர் வேண்டுமா வேண்டாமா என்பதற்குள் போக விரும்பவில்லை. அவர்களுக்கும் அதிகாரம் இருப்பதாகத் தெரியவில்லை. இந்த ஐந்து சீப் என்ஜினியர்களுக்கு அப்பாற்பட்டு நேற்றைக்கு டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள், அமைச்சர் அவர்களுக்கும்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 நவம்பர் 11

கோபம் வந்தது, ஒரு எஸ்.ஈ. அமைச்சருக்கு பி.ஏ. வாக இருக்கிறார். நடைமுறை எப்படி ஏற்படும்? கட்சி அரசியல் அடிப்படையில் ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது.

அப்படியானால் திறமையாக வாரியம்செயல்பட வேண்டுமென்று இருக்கக் கூடிய தலைவருக்கு தனி உரிமை இருக்க முடியாது. வாரியம் ஒரு பக்கத்தில். அதன் கீழ் 5 சீப் என்ஜினியர்கள். இதற்கு அப்பாற்பட்டு அவர்களுக்கெல்லாம் ஆலோசனை சொல்லக்கூடிய அல்லது அவர்களைக் கண்காணிக்கக்கூடிய அதிகாரம் பெற்று, சர்க்காரின் செல்லப்பிள்ளை ஒருவரைப் போட்டால் அவர் நல்லவரோ கெட்டவரோ, அவர் கடைசியில் மின்சார வாரியத்திற்கு அதன் சீப் என்ஜினியர்களுக்கு அப்பாற்பட்டு செயல்படக்கூடிய நிலைமைதான் வரும். அதைத்தான் இப்போது அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். அதை ரெக்டிபை பண்ண வேண்டியது ரொம்ப ரொம்ப அவசியமாகும்.

இவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்டு ஏற்கனவே மின்சார வாரியம் நல்ல முறையில் செயல்படவேண்டுமென்று திரு. அப்பாத்துரை இருக்கிறார். அவரைப் பற்றிக் குறை சொல்லவில்லை. அவர் பல நல்ல காரியங்களைச் செய்தார். திரு. அப்பாத்துரை காலத்தில் என்ன திட்டம் போட்டோம்? அவர் போட்ட திட்டம் என்ன. பிரிட்டிஷ்காரனுடைய திட்டத்தை அமல் நடத்தினார். அதை அமல் நடத்த முடியாத நிலை இருக்கிறதேயொழிய புதிதாகத் திட்டம் போடுவதாகத் தெரியவில்லை. இன்றைக்கு அவரைக் கொண்டுவந்து போட்டிருக்கிறார்கள். போட்டது நல்லதா கெட்டதா என்ற விஷயத்திற்குள் போக விரும்பவில்லை ஏனென்றால் திடீரென்று மின்சார வெட்டு ஏற்படுகிறது. அவர்களுக்கு அதிர்ச்சி ஏற்படுகிறது. இதைப் பூர்த்திசெய்ய வேண்டுமென்று அவர்களைக் கொண்டுவந்து போட்டிருக்கிறார்கள். அவர்கள் வந்த காலத்தில் எமர்ஜன்சி வந்தது. நல்ல மழையும் பெய்தது. மின்சார வெட்டு இல்லை. காக்கை உட்கார பனம் பழம் விழுந்தது போல். அவர் வந்தவுடன் மின்சார வெட்டு இல்லை. அதன் காரணமாக அவர் வந்தார் மின்சார வெட்டு நின்றது என்று [illegible] நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாகும்.



1975 நவம்பர் 11] [திரு. கே. டி. கே. தங்கமணி]

அவரது சென்ற கால நிலைமை என்ன? பேசின் பிரிட்ஜ் மின் உற்பத்தி நிலையம் குளோஸ் பண்ண வேண்டுமென்று சொன்னவர். மின்சார வெட்டு உள்ள காலத்தில் நம்மைக் காப்பாற்றியது பேசின் பிரிட்ஜ்தான். இன்றைக்கு தலைவரைக் கேட்டுக் கொள்வதெல்லாம் பேசின் பிரிட்ஜை நூதனப்படுத்த ஏற்பாடு செய்யுங்கள். அதில் செயல்பட்டுக் கொண்டிருக்கிற தொழிலாளர்களுக்கு உற்சாகம் ஊட்டக்கூடிய ஏற்பாடுகளைச் செய்யுங்கள். பேசின் பிரிட்ஜ் கன்டின்யூஸ் டு பி தி மெயின் ஸ்டே.

அடுத்தாற்போல் எண்ணூர் மூன்றாவது யூனிட் இன் டால்டிரம்ஸ். நான்காவது யூனிட்டை கமிஷன் செய்யப் போகிறோம். இன்றைக்கும் அச்சம் இருக்கிறது. எண்ணூர் மாஸ்டர் பிளான், ஆப்பரேஷன் எண்ணூர் என்று இருக்கிறது. இரண்டு வருஷங்களுக்குப் பிறகு எண்ணூர் மூடுவிழா நிலை ஏற்படும். இப்போது எண்ணூரை நேரடியாகக் கவனிக்க வேண்டுமென்று திரு. அப்பாத்துரை அவர்களைக் கட்டளையிட்டிருக்கிறார்கள். அவர் இதில் கவனம் செலுத்த வேண்டும். எப்படி பேசின் பிரிட்ஜ் உதவியாக இருந்ததோ அதை நவீனப்படுத்தி எண்ணூர் நான்காவது யூனிட்டையும் நல்ல முறையில் செயல்பட அஸ்திவாரம் போட்டால் மிகவும் உதவிகரமாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயம். இப்போது நமக்கு ஒவ்வொரு வருஷமும் இந்தக் காலத்தில் நேரடியாக பட்ஜட் தந்தால் சென்ற ஆண்டிலிருந்து இந்த ஆண்டுவரை என்ன காரியம் செய்திருக்கிறார்கள் என்று கண்காணிக்க முடியும். 1956-ல் அன்றைக்கு இராமநாதபுரம் ராஜா அமைச்சராக இருந்த காலத்தில் 1952 முதல் 1957 வரை சட்டமன்ற உறுப்பினர்களின் எல்லோருடைய கருத்துக்களையும் அந்த இலாகா நல்லபடி செயல்பட எடுத்துக்கொண்டு, அதற்குச் சரியாக பதில் சொல்லிவிட்டு, வெட்டுப் பிரேரணைகள் அவ்வளவுக்கும் பதில் கொடுத்தார்கள்.

1956-ல் அன்றைக்கு எலக்டிரிசிட்டி காபிடல் அவுட்லேக்கு, ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 40 கோடி. இன்றைக்கு கேப்பிட்டல் அவுட்லே-க்கு ரூ. 39 கோடி ஒதுக்கியிருக்கிறோம் 20 வருஷங்களுக்குப் பிறகு, இப்போது ஒதுக்கப்பட்டுள்ள தொகையே 39

ஆபரேஷன்களுக்கு முன்பு கேபிடல் அவுட் லேக்கு ஒதுக்கப் படவில்லை. அந்த மாதிரி அடுத்த வருஷத்திலும். நாம் அதை கம்பேர் பண்ண முடியவில்லை.

ஒரு பக்கத்தில் இன்றைக்கு பிளான்மூலம் துண்டுகள் விழுகின்றன. இந்த இலாகா செயல்படுவதில் மிகவும் ஊனம் இருக்கிறது என்பதைத் தவிர வேறு என்ன சொல்ல முடியும்?

அநேகமாக ஆடிட் ரிப்போர்ட்டில் இந்த இலாகாவைச் சாடியது போல் வேறு எந்த இலாகாவையும் சாடியதில்லை. அதற்கு பிறகு காம்ப்ட்ரோலர் அண்டு ஆடிட்டர் ஜெனரல் ஒரு அளவு இன்டர்னல் ஆடிட் நடத்தினார்கள். மாநில சர்க்கார் பொறுப்பெடுத்து இன்டர்னல் ஆடிட் செய்தது உண்டா? எவ்வளவு வரவு செலவு என்று யாராவது சொல்ல முடியுமா? இப்படி நம் தமிழ் நாட்டில் பொதுத்துறையில் இயங்கக்கூடிய மிகப் பெரிய இலாகா என்று அமைச்சர் அவர்கள் பெருமையோடு சொல்லக்கூடிய இலாகாவின் வரவு-செலவுக் கணக்குத் தெரியாது. இன்டர்னல் ஆடிட் கிடையாது. அம்மாதிரி இன்டர்னல் ஆடிட் இல்லாமல் இருக்கும் போது ஏதாவது அகவுன்ட்ஸ் ஆபீசர் நாணயமாக நடந்தால் ஆடிட் வேலை செய்தால் மூன்று மாதங்களில் அவர் மாற்றப்படுவார். பெயரை வேண்டுமென்றால் சொல்லுகிறேன். நம் ராமலிங்கம் கதை என்ன? கன்னியாகுமரிக்குச் சென்றவர் இப்போது தர்மபுரிக்குப் போகிறார். நாணயமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற அதிகாரிகள் மாற்றப்படுவார்கள். நாணயமற்ற முறையில் செயல்படும் அதிகாரிகள் மாற்றவேபடமாட்டார்கள்.

அதற்கு வேண்டுமென்றால் ஒரு உதாரணத்தைக் காட்ட முடியும். தனிப்பட்ட அதிகாரியைப் பற்றிக் குறை கூறுவதாக நினைக்க வேண்டாம். எஸ். ஈ. (டி) எம்.இ.எஸ். பி.ஏ. ஓ.எஸ்.எஸ் புண்ட்ஸ் ஒரு அசிஸ்டெண்டு, ஐந்து வருஷத்திற்கு மேல் ஆகிறது. அவரை டிரான்ஸ்பர் செய்யவில்லை. ஏனென்றால் அவர் எஸ்.ஈ.யின் பி.ஏ.க்கு வேண்டியவர். எஸ்.ஈ.யின் பி.ஏ. எப்படிச் செயல்பட வேண்டும் என்பதற்குச் சில கைடுலைன்ஸ் வைக்க வேண்டும். அதிகமான அதிகாரங்கள் இருக்கின்றன. எனக்குக் கடன் வேண்டுமா. ரூ. 25 அசிஸ்டெண்டுக்குக் கொடுத்தால் போதும். விசாரித்ததில் இந்தக் குறைபாட்டை இலாகா முழுமையும் சொல்லுகிறார்கள்.



அடுத்து, ஏ.டி.எஸ். செக்ஷன். அங்கே இருக்கக்கூடிய அக்கவுண்டண்டு அவரைப்பற்றிப் பரிசீலனை செய்தால் பல மட்டங்களில் எல்லாம் விஜிலன்ஸ் கேஸ்கள்தான் அவர்கள் எல்லாம் வேலையில் இருக்க முடியாது. எந்தத் தனிப்பட்டவர்களும் அரசாங்கமும் அவர்களை வேலைக்கு வைத்துக் கொள்ள முடியாது. அவ்வளவு கேவலமான முறையில் சில அதிகாரிகள், மிகவும் கேர்புல் ஆகவே எச்சரிக்கையாகவே சொல்லுகிறேன், நடந்து கொள்ளுகிறார்கள்.

இந்த இரண்டு விஷயங்களைப் பரிசீலனை செய்ய வேண்டும். இது சம்பந்தமான விபரம் நேரிடையாக விஜிலன்ஸ் அதிகாரிகளைப் பார்த்தே கொடுக்க முடியும். விஜிலன்ஸ் ஹாஸ் ஆல்சோ பிகம் பார்ட் ஆப் தி மெஷினரி.

இப்படிக் கண்காணிப்பு வேலைகள் அவசியம் வேண்டும். பீப்பிள் ஆர் பிகமிங் பவர் ஹங்கிரி—அதிகாரம் வேண்டுமென்று அல்ல. பவர் அதிகமாக வேண்டும் என்று. எந்த அளவுக்கு பவர் அதிகமாக உற்பத்தி ஆகிறதோ அந்த அளவுக்கு நாட்டின் செல்வம் வளர்ச்சி அடைகிறது என்பது உலகம் அறிந்த விஷயம். அப்படி பவர் அதிகம் பயன்படுத்தும் நேரத்தில் இன்றைக்குப் பெருமையாக அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள் ஒரு லட்சம் பேர் இந்த இலாகாவில் பணியாற்றுகிறார்கள் என்று. அன்றைக்கு ராமநாதபுரம் ராஜா இருந்த காலத்தில் 25 ஆயிரம் பேர்கள்தான் பணியாற்றினார்கள். இன்றைக்கு ஒரு லட்சம் பேர் பணியாற்று

(முற்பகல் 11.00)

கிறார்கள். அதிகமாக நாம் பணிகளைச் செய்துகொண்டிருக்கிறோம். மின்சார வாரிய இலாக்காக்களை நாம் டோன் அப் செய்ய வேண்டுமென்பது என்னுடைய கருத்து.

அடுத்து, என்னுடைய நண்பர், முன்பு லேபர் கமிஷனராக இருந்தவர்தான் முன்பு சேர்மென்னாக இருந்தார். தொழிலாளர்களது பிரச்சினை எதுவுமே அப்போது வரவில்லை. ஒரு வருஷத்திற்குமேல் தொடர்ந்து சர்வீசில் இருந்தவர்கள் எவரையும் ரிட்ரென்ச்மெண்டு செய்யக்கூடாது என்று செய்தார். ஆகவே அப்போது இண்டஸ்ட்ரியல் பீஸ் இருந்தது. இப்போதும் தொழிலாளர்களது பிரச்சினைகளைத் தெரிந்தவர்தான் இருக்கிறார். திட்ட

வட்டமாக இந்தப் பிரச்சினையில் கவனம் செலுத்தி ஏதாவது செய்ய வேண்டும். ஏதோ நீயும் வந்தாய், நானும் வந்தேன் என்று போய்விடக்கூடாது.

இப்போது 24 எஸ். இ. க்கள் இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன், சப்ஜெக்ட் டு கரெக்ஷன். எத்தனை பேர் ரிடையர் ஆகப்போகிறார்கள் என்று தெரியாது. ஏற்கனவே சொன்னேன். ஈரோடில் இருக்கக்கூடிய எஸ். இ.

He is a just man. I am afraid he is going to be retired

அதேமாதிரி மேட்டூர் எஸ்.இ. மனுநீதித் திட்டம் என்கிறோமே—அப்போது சொல்கிறோம் கனெக்ஷன் கிடைக்கவில்லை என்று. அவர் சொல்கிறார் "நாங்கள் என்ன செய்ய முடியும்? தேவையான சாமான்கள் கிடைப்பதில்லை" என்கிறார். இப்படிச் சொன்னதனால் அவர் ரிட்டையர் செய்யப்படப்போகிறார். ஆகவே—

You are retaining corrupt and inefficient people and you are retiring efficient and honest men

என்ற முடிவுக்குத்தான் வரவேண்டியிருக்கும். அதற்காகத்தான் இந்த உதாரணத்தைச் சொன்னேன்.

எங்களுக்குச் சில விவரங்களைக் கொடுக்க வேண்டும். பத்திரிகையில் பார்த்தேன். சென்ற மாதம் சேர்மென் எஸ்.இ. க்களை அழைத்து திருச்சியில் மகாநாடு நடத்தியிருக்கிறார். அந்த மகாநாட்டின் அஜெண்டா—

1. Administration—Steps to be taken to improve efficiency and streamline the organisation.

2. Labour relations and labour management.

3. Introduction of *Manu Needhi Thittam*.

4. Inspection and their follow-up.

5. Problems faced in keeping up progress in work and suggestion to solve them.

6. Any other subject.



இந்த மகாநாட்டில் என்ன முடிவுகளை எடுத்தார்கள்? அந்த முடிவுகள் எந்த அளவுக்கு அமலாகியிருக்கிறது? பதில் சொல்லக்கூடிய நேரத்தில் விவரமாகச் சொன்னால் நன்றாக இருக்கும். என்ன என்ன செய்யப்பட வேண்டும் என்று நான் தெளிவாகச் சொல்வேன்.

There must be an internal audit. There must be introduction of cost accounting. Cost control must be there.

இன்றைக்கு சோஷலிஸ்டு நாட்டிலேகூட

They have three tests marketability, profitability and productivity.

என்று இருக்கிறது. நாம் இந்த மின்சார வாரியத்தில் மட்டும் 700 கோடி ரூபாய் முதலீடு செய்திருப்போம். மிக அதிக அளவுக்கு முதலீடு செய்யப்பட்டுள்ள இந்த நிறுவனம் திறம்படச் செயல்படுவதற்கு நாம் நடவடிக்கையை மேற்கொண்டாக வேண்டும்.

இன்றைக்கு ஐந்து சீப் என்ஜினியர்கள், பழைய காலத்து என்ஜினியர் ஒருவரைக்கூட கொண்டுவந்து போட்டிருக்கிறார்கள். இன்னும் மினிஸ்டருக்குக் கீழேயே ஒரு என்ஜினியர் எப்படி கோ-ஆர்டினேஷன் இருக்கும்? மூன்று கோஷ்டி, ஐந்து கோஷ்டி என்று கோஷ்டிகளைத்தான் ஏற்படுத்துகிறோம்.

The mistake is in the set-up.

இதனாலேயே செயல்படக்கூடியவர்கள்கூட செயல்பட முடியாத நிலைதான் ஏற்படுகிறது என்பதைச் சொல்லி நிறுத்திக் கொள்கிறேன்.

இன்னொன்று, என் அபிப்பிராயம் பிரிட்டிஷார் காலத்தில் இருந்து ரெவின்யூ டிஸ்ட்ரிக்ட் வந்திருக்கிறது. இன்றைக்கு இந்த ரெவின்யூ டிஸ்ட்ரிக்ட் அடிப்படையில் எஸ்.இ.க்கள் டிவிஷன்கள் அமைப்பது நல்லது. சிஸ்டம் அந்த முறையில் அமைவது நல்லது. இன்றைக்குத் திடீரென்று உடுமலைப் பேட்டையில் சர்க்கிள் ஆரம்பிக்கிறோம். நீலகிரி ஒரு மாவட்டம்—அது என்ன பாவம் செய்தது? அங்கே மாவட்டம் என்ற அடிப்படையிலாவது ஏற்படுத்தக்கூடாதா? கலெக்டர் இருக்கிறார். கண்ட்ரோல் பண்ணலாம். இந்தமாதிரியாகச் செய்வது நல்லது என்று கருதுகிறேன்.

இன்றைக்கு டிரான்ஸ்பர் சம்பந்தமாக 'கெய்டுலைன்ஸ் பை தி சென்டர்' வந்திருப்பதாகத் தெரிகிறது. இன்றைக்கு நன்றாக வேலைசெய்கிற ஆளை மாற்றுவது. வேலைசெய்யாமல் இருக்கிறவர்களை ஐந்தாறு வருஷம் அப்படியே மாற்றாமல் இருப்பது—மெலிஷியஸ் டிரான்ஸ்பர், அன்ஜஸ்ட் டிரான்ஸ்பர்—இது எல்லாம் இல்லாது ஒழுங்குபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

To put it mildly, it is unmoral (interuption). It is good English. Unmoral is much more expressive than immoral. There is a moral standard which we have and we are just contravening all the moral standards.
அந்தமாதிரி அரசியலுக்கேற்று செய்வது என்பது தப்பு.

இன்னும் ஜெனரேஷன் கப்பாசிடி சம்பந்தமாக நாம் கவனம் செலுத்தியாக வேண்டும். என்னுடைய பொறுத்தவரையில் நோட்ஸ் கொடுத்திருக்கிறார்கள். We have turned the corner' என்பதை நான் 'contest' செய்கிறேன். 3 ஆவது யூனிட் என்ன ஆகும் என்று சொல்ல முடியாது. It is in doldrums. நான்காவது யூனிட்டும் ஆபத்தாகவே இருக்கும் என்று கருதுகிறேன்.

இன்னும் வருஷா வருஷம் சொல்வதுதான் லைன் லாஸ். 21 சதவிகிதம் லைன் லாஸ். சப் ஸ்டேஷன்களை அதிகப்படுத்தினால் லைன் லாஸ் குறையும் என்று சொன்னார்கள். இன்றும் இதே சட்டமன்றத்தில் திரு. என். கிட்டப்பா கேள்விக்கு ஒரு ஸ்டேட்மெண்டு கொடுத்திருக்கிறார்கள்.

In reply to Starred Question No. 8745 of Thiru N. Kittappa. it was stated as follows:

1. Schemes for changing size of conductors to higher sizes and enhancing the distribution transformers, capacitors wherever they are overloaded are being implemented.

2. A Master Plan has been evolved for erecting new grid lines and new 230 KV, 110 KV, 66 KV and 33 KV sub-stations with a view to reduce transmission line losses.



3. The line loss which is partly due to low power factor loads of the agricultural pumpsets is being improved upon by installation of L.T. shunt capacitors at the motor terminals.

4. A number of H.T. shunt capacitors are being installed at sub-stations to reduce the line current wherever the power factor is low.

5. Synchronious condensers are also being installed in grid sub-stations to improve the overall voltage condition of the grid and to reduce the line current.

6. Surprise inspection squads have been formed at all operating systems to carry out surprise raids for checking the services in the area for defective meters, connected services, thefts, pilferage, etc. Prosecution has been launched in cases of pilferage where proper evidence is available

என்று சொல்லிவைத்திருக்கிறார்கள். ஒரு சிம்பிள் விஷயத்தை எடுத்துக் கொள்ளுங்கள். உங்கள் பிரசங்கத்திலேயே 21 ஆம் பக்கத்தில்

No. of E.H.T. sub-stations in 1966 was 98. On 31st March 1974 it was 146. On 31st March 1975 it was 150. என்று சொல்லியிருக்கிறீர்கள். ஏதாவது அமல் செய்யப்பட்டிருக்கிறதா? H.T. sub-stations 131 ஆக இருந்ததுகூட 129 ஆகக் குறைந்திருக்கிறது. நீங்கள் சொல்வதற்கும் செய்வதற்கும் சம்பந்தம் இல்லை. ரிவர்ஸ் டைரெக்ஷனுகப் போய்விட்டது இதற்கு அமைச்சர் பதில் சொல்வார், மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகிறபோது நமக்கு லைன் லாஸ் குறைவு என்று. கோர்ட்டிலே ஒருவன் 'அவன் எட்டு பேரைக் கொலை செய்தான், நான் 6 பேரைத் தான் கொலை செய்தேன்' என்றால் கோர்ட் அதைக் கேட்பதில்லை. லைன் லாசைக் குறைப்பதற்கு நீங்கள்தானே பல யோசனைகளைச் சொல்லியிருக்கிறீர்கள். எவற்றையாவது அமல்படுத்தினீர்களா?

தெப்டைப் பொறுத்தவரையில் தொழிலாளிகள் ஆதரவு இல்லாமல் தெப்ட் ஏற்படாது என்பதில் ஓரளவு உண்மை இருக்கிறது.

அமைச்சர் அவர்கள் ஆகஸ்டு மாதம் டெல்லியில் நடந்த கூட்டத்தில் 10 அம்சத்திட்டம் பற்றி பேசப்பட்டது குறித்துச் சொன்னார்கள்.

அதிலே மிக முக்கியமான ஒரு விஷயம் என்னவென்று சொன்னால், பல மட்டத்திலே ஒர்க்கர்ஸ் பார்ட்டிசிபேஷன் வேண்டுமென்றிருக்கிறது. அந்தப் பத்து அம்சத் திட்டம்பற்றி கடைசியிலே பேசுகிறேன். அதிலே ஒன்று, போர்ட் மட்டத்திலே எப்படியிருக்க வேண்டும்? அதில் யார், யார் பங்கேற்கவேண்டும்? எத்தனை நாளைக்கு ஒரு தடவை அவர்கள் கூடவேண்டுமென்ற விவரங்களைக் கொடுத்துவிட்டு, கடைசியிலே ஒரு விஷயத்தைத் தெளிவாகச் சொல்கிறார்கள். அங்கு பணியாற்றுகிற தொழிலாளிகளுக்கு 3 ஆண்டுகளுக்கு மேல் சர்வீஸ் இருந்தால் அவர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு ஒரு ஃபார்முலா போட்டிருக்கிறார்கள்.

தமிழ் நாட்டிலே முதலமைச்சரோடு பேச்சு வார்த்தை நடந்த பிறகு, 31—12—1974-லே, 3 வருஷத்திற்கு மேல் சர்வீஸ் உள்ளவர்களையெல்லாம் நிரந்தரமாக்குவோம் என்று சொன்னார்கள். இப்பொழுது 4,500 பேர் வரையிலே நிரந்தரமாக்கப் போகிறோம் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அங்கு 22,000 பேர் டெம்பரரியாக இருக்கிறார்கள். 4 வருஷக் கணக்கோ, 5 வருஷக் கணக்கோ, கடைசியிலே 22,000 பேரையும் அப்சார்ப் பண்ணவேண்டும். நான் சொல்வது, புதிதாக ஆட்களைச் சேர்க்க வேண்டாம். ஒரு பக்கத்திலே காஷுவல் லேபரை வைத்துக்கொண்டு, இன்னொரு பக்கத்திலே புதிதாக ஆட்களை எடுக்கிற போக்கு பல காரணங்களாலே வாரியத்திலே வளர்ந்து வருகிறது. 22,000 பேரைத் தயவு செய்து நிரந்தரமாக்குகின்ற ஏற்பாட்டைச் செய்யுங்கள். மூன்று வருஷத் திட்டம் என்று வைத்தாலும் சரி 4 வருஷத் திட்டம் என்று வைத்தாலும் சரி அவர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை எடுங்கள். பத்து அம்சத் திட்டத்தை நீங்கள் தயவுசெய்து அமல் நடத்த வேண்டும். பத்து அம்சத் திட்டத்தை கையிலே வைத்திருக்கிறேன்.





முதலிலே பிரசங்கம் செய்யும்போது என்ன சொன்னீர்கள்—10 அம்சத் திட்டத்தை ஏற்றுக் கொண்டோம் என்று சொன்னீர்கள். 10 அம்சத் திட்டம் என்ன என்று சொல்லுங்கள். என்ன, என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் என்ற விஷயத்தைச் சொல்ல வேண்டும். ஏனென்றால்,

'Workers' participation in industry is essential. Workers' participation in industry is an old concept especially in public sector. It has been left out in the Electricity Board.

எப்படி அதைச் செய்ய முடியும்? நீங்கள் அப்படிச் செய்ய முடியும் என்று சொன்னால் எனக்கு என்ன அபிப்பிராயம் என்றால், தொழிலாளிகளைப் பொறுத்தவரையில் தேச பக்தி உள்ளவர்கள். நாட்டினுடைய சொத்தை வீணாக்க விரும்பமாட்டார்கள். தேச பக்தி மற்றவர்களை விடத் தொழிலாளிகளுக்கு அதிகமாக இருக்கிறது என்று நாங்கள் எல்லாம் நம்புகிறோம். தொழிலாளிகளுக்கு அதிகமான பங்கைக் கொடுங்கள். பத்து அம்சம் என்று வைத்திருக்கிறார்களே, அந்த விவரங்களைப் பூராவும் அமல் நடத்தும்படியாகச் செய்தால் டெஃபிசிட் ரொம்ப ரொம்பக் குறையும். குறைவது மட்டுமல்ல, அப்பொழுது நான்

Then only you will be turning the corner.

வேறொன்றையும் நான் இந்த நேரத்திலே [illegible] சொல்ல ஆசைப்படுகிறேன்.

கடைசியில் ஒன்றிரண்டு சின்ன விஷயங்கள். தொழிலாளிகள் சம்பந்தமாகப் பார்க்கிறபொழுது ஏற்கனவே 30—11—1974-ஓடு தொழிலாளிகளுக்கு ஊதியம் சம்பந்தமான ஒப்பந்தம் காலாவதியாகிவிட்டது. ஒரு வருஷமாகியும் பேச்சு வார்த்தை நடக்கிறதென்று சொன்னால் என்ன அர்த்தம்? பாலசுந்தரம் காலத்தில் அப்படி நடந்திருக்குமா? ஒரு வருஷ காலமாக மேற்கொண்டு சம்பளம் உண்டா இல்லையா என்று அரசாங்கமே குழப்பமாக இருக்கிறதென்றால், தொழிலாளர்கள் மத்தியில் எவ்வளவு குழப்பம் ஏற்படும்? இதுதானே அன்ரெஸ்டுக்குக் காரணம். ஆகவே, இடைக்காலமாக அவர்களுக்கு ஊதியம் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

இந்தத் தடவை போனஸ் ரொம்பக் குறைந்துவிட்டது. எல்லோரும் காரணம் காண்பிப்பதைப் போல் நாமும் காரணம் காண்பித்து, போனஸை 4 சதவிகிதம் ஆக்கியிருக்கிறோம். அவர்களுக்குக் கொஞ்சம் அட்வான்ஸ் கொடுக்கலாம். இப்பொழுது அதைச் செய்யலாம். நஷ்டமாக இருக்கிறதென்று சொல்வார்கள். அவர்களுக்குக் கொடுப்பதால் ஒன்றும் வந்துவிடப் போவதில்லை.

தெஃப்ட் அன்ட் லைன் லாஸைப் பொறுத்த வரையில் சில விவரங்கள் எனக்கு வந்தன. கோயம்புத்தூரிலேயுள்ள மிகப் பெரிய மில் முதலாளியிடம் ஜெனரேட்டர் கிடையாது. அப்பொழுது 75 சதவிகிதம் பவர் கட் ஆனால் அவருக்கு 0 சதவிகிதம் பவர் கட் எப்படி நடந்தது? 6 மாதமாக 75 சதவிகிதம் பவர் கட் அவரிடம் ஜெனரேட்டரும் கிடையாது. ஆனால், 100 சதவிகிதம் பவர் உபயோகித்தார். இப்படியெல்லாம் நடந்தது, இந்த மாதிரி ஆட்களையெல்லாம் பாருங்கள்.

டெலிஃபோன் பில்களை போஸ்ட் ஆஃபீஸிலே கட்டச் செய்கிறார்கள். There seems to be little harassment on the consumers. இங்கு கன்ஸ்யூமர்ஸ் ஹாரஸ்மெண்ட் மாதிரி வேறு எங்கும் கிடையாது. சில விவரங்களை கொடுத்தார்கள். எஸ்.ஓ.க்களுக்கும் கன்ஸ்யூமர்களுக்கும் நடக்கிற தகராறுகள்—முரண்பாடுகள். அதையே கதையாகவும், புராணமாகவும் எழுதலாம். போனஸ் பொறுத்தவரையில். you can pay the workers 4 per cent as recoverable advance. ரெக்கவர் செய்வது எப்படி என்று பின்னால் பார்த்துக்கொள்ளலாம். பல தொழில்களில் அதைச் செய்திருக்கிறார்கள். நாம் எடுத்துக் காட்டாக இருக்கவேண்டுமென்றுதான் சொல்கிறேன்.

1972-ஆம் வருஷம் மிகப் பெரிய விவசாயப் போராட்டம் நடந்தது. அதிகமான விவசாயிகள் பங்கெடுத்துக் கொண்ட போராட்டம். ஆளுங்கட்சிதான் ஒரு பக்கத்திலே நின்றது. மற்ற எல்லா கட்சிகளும் ஒன்றாகச் சேர்ந்தன. ஸ்தாபனக் காங்கிரஸ் இருந்தது, ஆளுங்காங்கிரஸ் இருந்தது, கம்யூனிஸ்ட் இருந்தது. அப்பொழுது அவர்கள் பிரதானமாக வைத்தது இரண்டு விஷயங்கள். ஒன்று மின்சாரக் கட்டணத்தை உயர்த்தாதிருக்க



என்பது. இன்னொன்று, விவசாயிகள் உற்பத்தி செய்யக் கூடிய பொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டுமென்ற இரண்டு அம்சங்கள்தான் பிரதானமாக இருந்தன. இரண்டாவது அம்சத்திற்கும் இந்த இலாகாவிற்கும் சம்பந்தம் இல்லை. முதல் அம்சத்தைப் பொறுத்தவரை 7 பைசாவாக இருந்தது திடீரென்று விலையைக் கூட்டினார்கள்; 11, 12 பைசாவாயிற்று. இந்த ஆட்சி வந்தபிறகு மின்சாரக்கட்டணம் 2 மடங்காயிற்று. இப்பொழுது 12 பைசா 16 ஆகியிருக்கிறது. இப்பொழுது என்ன சொல்வார்கள்? எங்களுக்கு ஏதாவது வருமானம் வேண்டாமா? மத்திய சர்க்காரே சொல்லியிருக்கிறதே நீங்கள் வேண்டுமென்றால் உயர்த்திக் கொள்ளுங்கள் என்று—என்று அவர்கள் மேலே பழி போடுவார்கள். 12 பைசா உயர்வுக்கே மிகப் பெரிய போராட்டம் நடந்தது. இப்பொழுது 16 பைசா ஆக்குவது நியாயமல்ல. அதைக் கொஞ்சம் reconsider பண்ணவேண்டும். அமைச்சர் பிரசங்கத்தைப் பார்த்தால் இன்னும்கூட அதிகப்படுத்துவார் போலிருக்கிறது. அந்தப் போக்கை மாற்றிக்கொண்டு, 16 பைசாவை—ஏன் 12 பைசாவையே இன்னும் குறைக்கவேண்டும்.

அடுத்து, டிரவுட் ஒர்க்ஸ்—வறட்சிப் பணியின்கீழ் குடி தண்ணீருக்காகப் பல கிணறுகள் தோண்டப்படுகின்றன. அல்லது டீப் போர்கள் போடப்பட்டு தண்ணீர் வருகிறது. அங்கங்கே ஓவர்ஹெட் டாங்க் கட்டுகிறார்கள். It is energised. அது மின்சாரத்தால்தான் ஓடுகிறது. அந்த மின்சார பம்பை ஓட்டுவது பஞ்சாயத்தினுடைய பொறுப்பு. நீங்கள் 3 மாதம், 4 மாதம் என்று மொத்தமாக பில் போட்டால், பஞ்சாயத்து குளோஸ் ஆகிவிடும். இந்த மாதிரி டிரவுட் சம்பந்தமாக, தண்ணீர் சம்பந்தமாக, எனர்ஜைஸ் பண்ணவேண்டிய நிலை ஏற்படும்போது, அதற்கான கட்டணத்தைக் குறைக்க ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

அடுத்து, கன்ஸ்யூமர்ஸ்—குறிப்பாக டொமஸ்டிக் கன்ஸ்யூமர்ஸ் சம்பந்தமாக, அவர்களோடு நல்லுறவு வைத்திருக்கவேண்டும். அதே நேரத்திலே, தொழிற்சங்கங்களைப் பொறுத்தவரையிலே இந்த விவகாரம் முடிந்தால் சரியாகிவிடும் என்று நினைக்கிறேன். தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், எனக்குத் தெரிந்த வரையிலே, எல்லா சங்கங்களைச் சேர்ந்தவர்களும் சேர்ந்து ஒரு சம்மேளனம் ஏற்படுத்தினார்கள். அன்றைய தினத்தில் அப்பாதுரையைக் கேட்டாலும் சொல்வார்கள், இரண்டு

பிரிவுகளுக்கும் பல முரண்பாடுகள் வரும். இருந்தாலும், கடைசியிலே ஒன்றாகச் சாதித்துக் கொள்வார்கள். ஆளுங்கட்சிக்குத் தனக்குச் சங்கம் இருக்க வேண்டுமென்ற ஆசையிருக்கலாம். அங்கீகாரத்தை ஆதாரமாக வைத்துக் கொண்டு செயல்படவேண்டும்.

இன்றைக்கு இருக்கக்கூடிய "பெர்சனல் அசிஸ்டெண்ட்" அவருடைய செயல்பாட்டு முறை சரியாக இருப்பதாகத் தெரிய வில்லை. யாரைப் போட்டாலும் அப்படித்தான் வரும். ஆகவே, அதை மாற்றியமைக்க வேண்டும்.

It is a concrete thing on which you can take a decision.

அமைச்சர் யாரைக் கலந்து கொண்டு பேசவேண்டும்? நேரடியாக சேர்மனைக் கலந்துக் கொண்டு பேசவேண்டும். சேர்மன் மற்றவற்றைப் பேசட்டும். சேர்மன் பிளஸ் மினிஸ்டர் பேசுகிறார்கள் என்றால் அப்பொழுதுதான் கொஞ்சம் டோனிங் அப் ஏற்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மின்சார இலாகாவில் வரவு-செலவு கோளாறாக இருக்கிறது.

Unfeltered powers must be given to the Chairman.

இருக்கக்கூடிய கஷ்டத்தை எடுத்துச் சொல்லி, கொஞ்சம் மோசமாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார் அமைச்சர் இப்பொழுது ரெக்டிஃபை பண்ணுங்கள். எங்களுக்கு இதற்கு மேல் அதிகாரம் கிடையாது. இந்த ஆலோசனைகளை எடுத்துக் கொண்டு, உடனடியாக ஸ்ட்ரீம்லைன் செய்யவேண்டும். நான் கேட்ட சில கேள்விகளுக்கும் பதில் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. கே. எ. வகாப் மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரவர்களே, இன்றைய தினம் இங்கே விவாதிக்கப்படுகிற மிக முக்கியமான மின்வாரியத்தினுடைய வரவு-செலவு அறிக்கையின் பேரில் என்னுடைய கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன்.

மின்சாரம் சமுதாயத்திற்கும் மிகவும் தேவையான அத்தியாவசியமான ஒன்றாக, எப்படி உண்ண உணவும் உடுப்பதற்கு உடையும் சுவாசிக்க காற்றும் இருக்கிறதோ, அதைப்போன்று இன்றைய தினம் மின்சாரமும் அத்தியாவசியத் தேவையாக இருக்கிற



காரணத்தினால்தான் நாம் அதிகமாகக் கவனம் செலுத்துகிறோம், மக்களும் அதைப்பற்றி அதிகமாகப் பேசுகிறார்கள் என்ற அளவிலே மிக முக்கியமான தேவையான அம்சமாக இருக்கிறது, இன்றைய தினம் மின்சாரம் இல்லாவிட்டால் வாழ்க்கையே ஸ்தம்பித்துப் போய்விடும் என்ற நிலைமை ஏற்பட்டிருப்பதால்தான் நாம் அதிகமாக அதைப்பற்றிப் பேசிவருகிறோம்.

ஆனால் நிலைமை எப்படி இருக்கிறது என்றால், சொல்வார்களே, இரண்டு முழம் ஏறினால் மூன்று முழம் சறுக்கிறது என்று, அந்த வகையிலே மின்சார வாரியத்தின் நிலைமையைப்பற்றி கருத்துக்களைச் சொல்லவேண்டியிருக்கிறது.

அதே நேரத்தில் இந்த வாரியத்தினுடைய நிறைவுகளைச் சொல்ல வேண்டுமானால் நிச்சயமாக பாராட்டக் கூடிய கட்டத்திலே, அகில இந்தியாவிலேயே தமிழகத்தை மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால், மின்சார வாரியம் எடுத்துள்ள நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ள மிகமிக சிறப்பான பணிகளையும் பார்த்தால் பாராட்டாமல் இருக்கமுடியாது. மற்ற மாநிலங்களைவிட சிறப்பாக நடத்திக்கொண்டு வருகிறோம்.

இறைவைப் பாசனத்திற்கு மின்விசை வழங்கல் என்ற முறையிலே 6 லட்சம் 7 லட்சம் பம்புசெட்டுகளுக்கு மின்சாரம் கொடுத்திருக்கிறோம், இந்தியத் துணைக் கண்டத்திலேயே உள்ளவர்களில் மூன்றில் ஒரு பங்கு மக்களுக்கு மின்வசதியை நாம் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம் என்று சொல்லக்கூடிய பெருமை நமக்கு இருக்கிறது. அதிகமாகப் பணிகளைச் செய்கிறபோது அதிகமான குறைபாடுகள் இருப்பது இயல்பான ஒன்றுதான். ஆகவே இன்னும் திறமையாக செயல்படவேண்டுமென்ற முறையிலே கருத்துக்களைச் சொல்லவேண்டிய நிலைமை இருக்கிறது.

நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் பேசியபோது கூட அன்றைய தினம் ராஜா அவர்களையும் பாராட்டினார்கள், இன்றைய தினம் சாதாரணக் குடிமகனாக இருந்து அமைச்சராக வந்திருக்கின்ற இவர்களையும் பாராட்டினார்கள் என்றால் அதிலே அர்த்தம் இருக்கிறது என்று நினைக்கிறேன். இந்த அறிக்கையிலே எதிர்காலத்திலே மின்வெட்டு வராது என்று நம்பிக்கையூட்டக் கூடிய விதத்திலே அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

அமைச்சருக்கு ஒரு ராசி இருக்கிறது, அந்த ராசியினாலே அவர்கள் இப்படிப்பட்ட நம்பிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள்—எனக்கு ராசியிலே நம்பிக்கையில்லை—இருந்தாலும் எதிர்காலத்திலே மின்சார வெட்டு இருக்கிற நிலைமை இருக்காது என்று சொல்லியிருக்கிறார்கள், அவர்களை மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். எதிர்காலம் நன்றாக இருக்கிறது, கடந்த காலத்திய தவறுகளைச் சுட்டிக்காட்டி எதிர்காலத்திலே இன்னும் திறமையாக செயல்படுவதற்கு முயற்சிக்க வேண்டும். எனக்கு அளிக்கப்பட்டிருக்கிற நேரம் 10, 15 நிமிடங்கள்தான் என்று நினைக்கிறேன். அதற்குள்ளாக மிக முக்கியமான சில கருத்துக்களைமட்டும் சொல்லி முடித்துக் கொள்ளலாமென நினைக்கிறேன்.

முதலாவதாக தெரு விளக்குகள் தெரு விளக்குகளுக்காக 1.2 சதவிகிதம்தான் மின்சாரம் செலவழிகிறது. இருந்தாலும் இதிலே அதிகமான அக்கறை காட்டப்படவில்லை. ஆனால், பொது மக்களும் எந்த டி.டி.சி கூட்டத்தை எடுத்துக் கொண்டாலும், நகரசபை, பேரூராட்சி, ஊராட்சி அல்லது கிராமங்களை எடுத்துக் கொண்டாலும் தெருவிளக்குபற்றித்தான் பேசப்படுகிறது, அக்கறை எடுத்துக்கொள்ளப்படுகிறது, மக்களிடத்திலே அதிகமாக தெருவிலே திட்டுவாங்கக்கூடியது தெருவிளக்கு சம்பந்தமாகத்தான், அந்த அளவிற்கு இருக்கிற இந்த தெரு விளக்கு சம்பந்தமாக வாரியம் அதிகமான அக்கறை எடுத்துக் கொள்ளவேண்டும்.

இதற்காக மீட்டர்கள் பொருத்துவதாக முறை வகுக்கப்பட்டது. ஆனால் பல நகரங்களிலும் கிராமங்களிலேயும் தீர்மானங்கள் போட்டுக் கொடுத்தும்கூட மீட்டர்கள் கிடைக்கவில்லையோ என்னவோ, அல்லது அனுமதி கிடைக்கவில்லையோ என்னவோ இன்னும் வசதி செய்துகொடுக்கப்படவில்லை. வந்தவாசி போன்ற இடங்களிலே ஒரு ஆண்டுக் காலத்திற்கு முன்பே தீர்மானம் போட்டுக் கொடுத்தும்கூட இன்னும் மீட்டர்கள் போடப்படவில்லை என்ற நிலைமைதான் இருக்கிறது. எங்களுக்கும் மின்சார வாரியத்திற்கும், எங்களுக்கும் பொதுமக்களுக்கும் சச்சரவுகள் இல்லாமல் தீர்த்து வைக்க அது எதுவாக இருக்கும், ஆகவே உடனடியாகப் போடுவதற்கு அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதிகமான மின்சாரத்தைப் பயன்படுத்தக்கூடியவர்கள் தொழிலதிபர்கள்தான். அவர்களுக்கு 42.6 சதவிகிதம் அளவிற்கு மின்சாரம் கொடுக்கப்படுகிறது. ஆனால்

தமிழ் நாடு மின்சார வாரியத்தின் 1975-76 ஆம் ஆண்டுக்கான
நிதிநிலை அறிக்கை மீதான விவாதம்

1975 நவம்பர் 11] [திரு. கே. எ. வகாப்]

அவர்களுக்குக் கட்டணம் குறைவாக வாங்கப்படுகிறது. குறைத்துக் கொடுக்க வேண்டியது விவசாயிகளுக்கும் சிறிய தொழில் செய்கிறவர்களுக்கும்தான், அப்படி இல்லாமல் லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான ரூபாய்கள் லாபம் சம்பாதிக்கக்கூடிய பெரிய தொழிலதிபர்களுக்கு கட்டணத்தைக் குறைக்கக்கூடாது, அவர்களுக்கு வரியை, கட்டணத்தைக் கூட்டவேண்டும். ஆனால் அதே நேரத்திலே வீட்டிற்கு மின்சாரம் வாங்குகிறவர்களுக்கும் சிறிய தொழில் செய்கிறவர்களுக்கும் கட்டணத்தைக் குறைக்க வேண்டும். விவசாயிகளுக்கும், மின்சாரக் கட்டணத்தைக் குறைக்கவேண்டும். இவர்கள் எல்லாம் நஷ்டமடைகிற சூழ்நிலையைத் தவிர்க்கக்கூடிய முறையிலே கட்டணங்களை மாற்றியமைக்கவேண்டும்.

முன்பு 12 பைசாவாக இருந்தது 16 பைசாவாக திடீரென்று உயர்ந்திருக்கிறது, 1. 1½ பைசா ஏற்றியவுடனேயே இந்த நாட்டிலே அமளிகள் எப்படியெல்லாம் நடந்தன என்பது எல்லோருக்கும் தெரியும். நான் அப்படி உயர்த்தியதை ஆட்சேபிக்கவில்லை. ஆனால், இவ்வளவு அதிகமாக உயர்த்த வேண்டுமா என்பதைச் சிந்திக்க வேண்டும். 1 பைசாவை ஏற்றினாலே 5 கோடி ரூபாய் வரும் என்று சொல்கிறார்கள். விவசாயிகளுக்கு உயர்த்தப்பட்டிருப்பதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களும் முதலமைச்சர் அவர்களும் மறுபரிசீலனைசெய்ய வேண்டும்.

பல துறைகளிலேயும் விவசாயிகள் ஏற்கனவே பாதிக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். இவ்வளவு நாட்களாகத் தண்ணீர் இல்லாது இப்போதுதான் நீர் கிடைத்திருக்கிறது. தஞ்சாவூரில் இருக்கிறவர்களைப்பற்றிக் கவலையில்லை; ஆனால் வட ஆற்காடு போன்ற மாவட்டங்களிலே இருக்கிறவர்களை எடுத்துக்கொண்டால் மின்சாரத்தைக்கொண்டு பம்புசெட்டு வைத்து விவசாயம் நடத்துகிறவர்கள் அதிகமாக இருக்கிறார்கள் அவர்கள் எல்லாம் இதனால் பாதிக்கப்படுகிறார்கள்.

இன்றயதினம் ஆற்றுப் பாசனம், ஏரிப் பாசனம் மூலம் பயிர் செய்யப்படுகிற நெல்லுக்கு ஒரு அதிகமான விலை என்று ஏற்படுத்தினால்கூட நல்லது. ஏனென்றால் ஆற்றுப் பாசனத்திற்கு இருக்கிற நிலைமை இவர்களுக்கு இல்லை, இவர்கள் இறைவைச் சாதனங்களை வாங்க வேண்டும், மின்சாரக் கட்டணம் செலுத்த வேண்டும், இப்படிக் கஷ்டங்களையெல்லாம் சந்தித்து அதிகச்

செலவிடுகிற நிலைமையில் உள்ளவர்கள், அவர்கள் உற்பத்தி செய்கின்ற நெல்லுக்கு அதிக விலை கிடையாது. ஆகவே, அவர்கள் கொடுக்க வேண்டிய மின்சாரக் கட்டணத்தையாவது குறைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். மற்ற விவசாயிகளுக்கு ஆகிற செலவைவிட இவர்களுக்கு அதிகமான செலவாகிறது. மின்சாரக் கட்டண உயர்வால் அவர்களுடைய செலவு இன்னும் அதிகமாகிற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே லாப நோக்கத்தோடு இதை அணுகாமல் விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக்கூடிய தன்மையோடு இதை அணுக வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. மின்சார பம்புசெட்டுகளுக்கு சட்டமன்றத்திலே அறிவிக்கப்பட்டது 60 ஆயிரம் பம்புசெட்டுகளுக்கு புதிதாக மின்விசை கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் நாங்கள் எங்கள் தொகுதிகளுக்குச் சென்று நிலைமைகளைப் பார்க்கிறபோது வேண்டிய மெட்டீரியல்ஸ் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். கண்டக்டர்ஸ் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள், விரிவாக வேகமாக விரிவடைந்து கொண்டுவரும் மாபெரும் கடல்போன்ற இந்தத் துறையில், துறையினர் தாங்கள் திட்டங்களைப் போடுகிறபோது எவ்வளவு திட்டங்களை ஏற்படுத்தினால் முடிக்கமுடியும் என்று வரையறுத்துப் போட்டால் நல்லது. அப்படிச் செய்தால் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும், அரசாங்கம் சொன்னபடி திட்டத்தை நிறைவேற்றமுடியும்.

ஆனால், நிலைமை எப்படியிருக்கிறது என்றால் அரசாங்கம் அறிவித்தபடி திட்டங்கள் நிறைவேறவில்லையென்கிறபோது மக்கள் அரசாங்கத்தின் மீதுதான் வீண் பழிபோடுகிறார்கள். இதைத் தவிர்க்கக்கூடிய முறையிலே அதிகாரிகள் கூடுமான வரையில் எவ்வளவு முடியுமோ அந்த அளவிற்கு எவ்வளவு சாதனங்கள் கிடைக்குமோ அந்த அளவிற்கு கண்டக்டர்களை எடுத்துக்கொண்டால் அலுமினியக் கம்பெனியிடம் இந்த ஆண்டுக்கு எவ்வளவு கொடுப்பீர்கள் என்று கேட்டு அந்த அளவிற்குத் திட்டம் அமைய வேண்டும், எவ்வளவு அலுமினியம் கிடைக்கும் என்ற வரைமுறையைக் கணக்கிட்டு திட்டமிட்டால்தான் அரசாங்கத்திற்குக் கெட்ட பெயர் வராது. அரசாங்கம் அறிவித்தபடி திட்டங்கள் நடக்க முடியும், மக்களிடத்திலே அரசாங்கத்தினிடம் நம்பிக்கை ஏற்படும்.





ஒரு சில பகுதிகளை எடுத்துக்கொண்டால், எங்களுடைய பகுதி இராணிப்பேட்டைப் பகுதி அதை, செய்யாறை முன்பு வேலூர் பகுதியோடு சேர்த்திருந்தார்கள் மிகவும் வசதியாக இருந்தது. இப்போது இரண்டாகப் பிரித்திருக்கிறார்கள், எங்கள் பகுதியை திருவண்ணாமலையோடு சேர்த்திருக்கிறார்கள், ஏன் பிரித்தார்கள் என்று தெரியவில்லை, வேலூர் எங்களுக்கு வசதியாக இருந்தது, நிர்வாக வசதிக்காகச் செய்தார்களோ என்னவோ தெரியவில்லை. எது எப்படியிருந்தாலும் இருக்கிற நிலைமைகளைப் பார்க்க வேண்டும்.

தொகுதிமக்கள் எங்களை அணுகுகின்ற நேரத்திலே நாங்கள் அதிகாரிகளை அணுகுகின்ற நேரத்திலே அதிகாரிகள் மிகவும் சிரமப்படுகிறார்கள். கீழ் மட்டத்திலே உள்ள ஊழியர்கள் பற்றி கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள்கூடச் சொன்னார்கள், மின்சாரத் திருட்டுக்கு அவர்கள் கூட ஒத்துழைப்புத் தருகிறார்கள் என்று சொன்னார்கள், நிதர்சனமானவற்றை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள், அதைப் பாராட்டுகிறேன், அதையெல்லாம் நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எஸ்.இ. ஆபீஸில் கான்பரன்ஸ் வாரத்திற்கு 6 நாட்கள் நடத்துகிறார்கள். தொழிலாளர்கள் பிரச்னை பற்றிப் பேசுகிறோம் என்று சொல்கிறார்கள், வாரத்திற்கு 6 நாட்கள் என்ன பேசுகிறார்களோ தெரியவில்லை. பிறகு பொதுமக்களை என்றைக்குக் கவனிப்பது என்று அவர்களுக்குத் தெரியவில்லை.

(முற்பகல் 11-30)

நான் நினைக்கிறேன், அவர்கள் சொன்னதைப்போல, மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையில் 10 அல்லது 12 தொழிற் சங்கங்கள் இருக்கின்றன, அதில் ஆளுங் கட்சியைச் சார்ந்தவர்களும், எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்களும் இருக்கிறார்கள் என்று வைத்துக்கொண்டாலும்கூட, இந்த எமர்ஜென்சி அமலில் இருப்பதால், அதைப் பயன்படுத்தியாவது இவை எல்லாவற்றையும் சேர்த்து ஒரே சங்கமாக வைத்துக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும். எல்லாச் சங்கங்களையும் ஒன்றாகச் சேர்த்து ஒரே சங்கமாக அமைத்து தொழிலாளர்களின் குறைகளைச் சொன்னால் அதைக் கேட்பதற்கு வாரியம் தயாராக இருக்கிறது என்று சொல்லுங்கள்.

ஒருநாளைக்கு ஒருவர் என்ற முறையில் குறைகளைச் சொன்னால் எதைக் கவனிப்பது என்று தெரியவில்லை, உண்மையிலேயே மக்களைக் கவனிக்க முடியாது, உண்மையிலேயே விவசாயிகளுக்கு வேண்டிய, வீடுகளுக்கு வேண்டிய மின்சாரத்தைக் கொடுக்க முடியாவில்லை என்ற குறை இருக்கிறது. ஆகவே, அடிமட்டத்தில் பல கோளாறுகள் இருக்கின்றன. பெரிய அதிகாரிகள் அளவில் படுகின்ற சிரமங்கள் தெரிகின்றன. ஆனால் மக்களை அணுகிச் செய்ய வேண்டியவர்கள் யார்? கடைக்காலாக இருப்பவர்கள் யார்? பொதுமக்களை அணுகுவதில், ஓயர்மென், லயன்மென் போன்ற இவர்களின் அதிக்கம்தான் அதிகமாக இருக்கிறது. அவர்கள் எப்படிச் செல்கிறார்களோ அப்படியே அதிகாரிகளும் செல்ல வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். சில தவறுகள் நடக்கும்பொழுது யாரையும் கவனிக்க முடியாத சூழ்நிலையில் அதிகாரிகள் இருக்கிறார்கள். நான் கூறுவதைத் தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாது அதிகாரிகளே அந்த அமைப்புகளுக்குப் பயந்து கொண்டிருக்கிறார்களோ என்று அச்சப்படும் சூழ்நிலை இருக்கிறது. எனவே, இந்த எமர்ஜன்சி பீரியடிலேயாவது அதை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள், டிரான்ஸ்ஃபர் பற்றி. அண்மைக்காலத்தில் அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெறுவதாகத் தெரியவில்லை. நாங்களே அப்படிச் சென்று பல தோல்விகளை அடைந்திருக்கிறோம். அமைச்சரும், வாரியமும் கண்டிப்பாக, நீங்கள் வராமல் இருந்தால் நன்றாக நடக்கும் என்று சொல்வதால் அதிலுள்ள நியாயத்தை உணர்ந்து நாங்களும் ஒதுங்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதில் நீங்கள் கண்டிப்பாக இருந்தால் நல்லதுதான். அப்படி அணுகத்தான் செய்வார்கள்.

ஒரு அதிகாரி டிரான்ஸ்பர் வேண்டுமென்று கேட்கிறார் என்றால் அதற்கு முக்கிய காரணம், அவர்கள் சரியான இடத்திற்குச் செல்ல வேண்டும் அல்லது சொந்த ஊருக்குப் போக வேண்டும் என்பதுதான். நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன், அடிமட்டத் தொழிலாளர்கள் அதிகமாக உள்ளூரிலேயே இருப்பவர்கள் வேலைக்கு இருக்கிறார்கள். அப்படிப்பட்ட முறையை மாற்றி குறைந்தபட்சம் ஒரு மாவட்டத்தை விட்டு இன்றை



மாவட்டத்திலேயாவது வேலை செய்ய வேண்டும் அல்லது அந்த ஜில்லாவிலேயே தொலை தூரத்திலே, 50 மைல்களுக்கு அப்பால் வேலை செய்யும் முறையை அமைத்தால் இன்னும நலலமுறையில் அந்த வாரியம் செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

லைன் லாஸ் பற்றிக் கூறினார்கள். அதைப்பற்றிப் பலமுறை எடுத்துச்சொல்லி வாரியமும் நல்லமுறையிலே முயற்சி எடுத்துக் கொண்டு வருகிறது. திருட்டுகள் இன்னும் இருக்கின்றன. இப்படிப்பட்ட முயற்சிகளில் இந்தக் கீழ்மட்டத் தொழிலாளர்களை நீங்கள் சீர்திருத்தினாலொழிய லைன் லாஸ் குறையாது, திருட்டுகள் குறையவே குறையாது. அதற்கான திட்டங்களைத் தீட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய அரசாங்கம் தன்னுடைய 20 அம்சத் திட்டத்திலே, மிகப் பிரபல்யமாக, பெரியபெரிய திட்டங்களைப் போட்டு மின்சாரம் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அப்படி அவர்கள் சொல்லும்பொழுது நீங்கள் அதை அணுகிக் கேட்கலாம். ஆனால் அவர்கள் போட்டு நடத்தும் கல்பாக்கம் திட்டம் எப்பொழுது வரும் என்றே தெரியாது. அதற்கு வேண்டிய உறுப்புகள் இன்னும் செய்யப்படக் கூடிய நிலையில் இருக்கிறதா என்று பார்த்தால் அதற்கு ஐந்தாறு ஆண்டுகள் ஆகுமோ என்னவோ தெரியவில்லை. எனவே, அதைத் துரிதப்படுத்த அரசு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு தூத்துக்குடி மின்சார நிலையம் பற்றிய அம்சம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 20 அம்சத் திட்டத்தை மத்திய அரசு உண்மையிலேயே உடனடியாகச் செயல்படுத்த வேண்டுமென்று எண்ணினால் அவர்கள் பங்கேற்கும் நெய்வேலி திட்டம், கல்பாக்கம் திட்டம் ஆகிய திட்டங்களை உடனடியாக அமல் நடத்தினால் எந்தக் காலத்திலும் மின்சாரக் குறைவே இல்லை என்ற நிலையிலே நம்முடைய தமிழக அரசு நன்றாகச் செயல்பட முடியும், மக்களுக்கு வசதியாக இருக்கும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, முக்கியமான விஷயத்தைக் கூற விரும்புகிறேன். கீரம்பூரானை குழாய் நீரேற்றுத் திட்டத்தை அமல் நடத்த மத்திய அரசாங்கத்திடம் கேட்க வேண்டும். அமெரிக்க நாட்டிலே செய்கின்ற முறைப்படி பார்த்தால், இருக்கின்ற நீரைக்கொண்டு மின்சார உற்பத்தி செய்வதால் நல்ல அம்சமாக இருக்கும், செலவு கொஞ்சம் கூடுதலானாலும்கூட தேவைக்கேற்ற மின்சாரத்தை தயாரிக்க முடியும் என்ற உறுதியிருப்பதால் அப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மத்திய அரசிடம் கேட்க வேண்டும். (மணியடிக்கப்பட்டது)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எா. எம். அப்துல் ஜப்பார்)** : சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள், இன்னும் 7 பேர் பேச வேண்டும்.

**திரு. கே. எ. வகாப்** : அப்படிப்பட்ட திட்டங்களைப் பெற வேண்டும். குறிப்பாக ஒரேயொரு கோரிக்கையை மட்டும் கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

இந்த மின்சார சாமான்கள் திருட்டுப் போவதைப்பற்றி உண்மையிலேயே மாண்புமிகு உறுப்பினர் சொன்ன யோசனைப் படி, இரயில்வே போர்டிலே போடுவதைப்போல பெயர்களைப் பொறிக்க வேண்டும். அதற்கு சில பேட்டர்ன்கள் அமைக்க வேண்டும். சோக்குகள் வாங்குகிறோம் என்றால் காப்பர் சோக்தான் வாங்கவேண்டும், இந்தக் கம்பெனியில்தான் வாங்க வேண்டும் என்று போட்டால், லேபில் போட்டால் நலமாக இருக்கும். (மணியடிக்கப்பட்டது)

* **திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்)**: மாண்புமிகு தலைவரவர்களே, மின்சாரத் துறையைச் சார்ந்த அமைச்சரவர்கள் கொண்டு வந்துள்ள இந்தப் பிரேரணையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை நான் சொல்லலாம் என்று இருக்கிறேன்.

மின்சார இலாக்காவைப் பற்றியும், அது செயல்படுகின்ற விதங்களைப் பற்றியும் சென்ற ஆண்டிலேயேயும், அதற்கு முந்தைய ஆண்டிலேயும் நான் பல குறைபாடுகளைச் சுட்டி



காட்டினேன். அந்தக் குறைபாடுகள் இன்னும் இருந்து கொண்டேதான் இருக்கின்றன, தீர்க்கப்படவில்லை. தொடர்ந்து அந்தக் குறைபாடுகளை நான் வலியுறுத்துகிறேன்.

இந்த ஆண்டு நல்ல மழை பெய்ததன் காரணமாகவும், அதே சமயத்தில் வறட்சி காரணமாக கிணற்றிலே தண்ணீர் இல்லாத தன் காரணமாகவும் விவசாயிகள் தங்கள் பம்பு செட்டுகளை மூட வேண்டிய சூழ்நிலையாலும் அதிகமான அளவிற்குச் சென்ற ஆண்டைப்போல மின்சார வெட்டுகள் பற்றிப் பயங்கரமான சூழ்நிலையை இந்த ஆண்டில் நாம் அனுபவிக்கவில்லை. வருகின்ற ஆண்டிலே மின்வெட்டே வராது என்று அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். காரணம், மேட்டூர் நீர்த்தேக்கத்திலேயும், மற்ற நீர்த்தேக்கத்திலேயும் இந்த ஆண்டு போதுமான அளவிற்குத் தண்ணீர் வந்துவிட்ட காரணத்தினால் மின்சார உற்பத்தி நீரின் மூலம் உற்பத்தி செய்யும் மின்சார உற்பத்தி குறைவுபடாது என்ற எண்ணத்தில் எடுத்துச் சொன்னார்கள். அது மிகவும் வரவேற்கக் கூடிய விஷயமாகும்.

ஆனால், பொதுவாகப் பார்க்கின்ற சமயத்தில் நம்முடைய தமிழகத்தில் மின்சாரத் தேவைக்கேற்ப மின்சார உற்பத்தி நடைபெறவில்லை. நடைபெறவில்லை என்று நான் சொன்னால், இதற்கு யார் காரணம் என்று நாம் பார்க்கோமானால், நெய் வேலியில் 600 மெகாவாட்டுகள் அவர்கள் உற்பத்தி செய்ய வேண்டும். சென்ற ஆண்டுக்கு முன்புவரையில் அது சரியாக இயங்கவில்லை என்ற காரணத்தால் அப்படி இருக்கலாம். சென்ற ஆண்டில் எண்ணூரை எடுத்துக்கொண்டால், சில டர்பைன்ஸ் அளிக்காததால் 300 மெகாவாட் அல்லது 320 மெகாவாட்தான் உற்பத்தி செய்தார்கள். ஆனால் அதனுடைய ரேட்டட் கெப்பாசிட்டி 600 மெகாவாட். அந்த 600 மெகாவாட்டும் உற்பத்தி செய்யப்பட்டு, அதேபோல நெய்வேலியிலேயும் சரியான முறையில் இயக்கியிருந்தால் சென்ற ஆண்டிலேயும் சரி, அதற்கு முன்பும் சரி, நம்முடைய தமிழ்நாட்டில் மின்சார வெட்டைத் தவிர்க்கலாம் அல்லது ஓரளவு குறைத்துக்கூட இருக்கலாம்.

இரண்டாவதாக எண்ணூரில் ஏற்படுத்தியிருக்கும் 340 மெகா. வாட் உள்ள மின்சார நிலையம் ஆரம்ப ஸ்டேஜிலிருந்தே தகராறு பிடித்துக்கொண்டு வருகிறது. ஆரம்பத்திலேயிருந்தே சரியாக அது வேலை செய்யவில்லை. முதலிலே சொன்னார்கள், தண்ணீர் சரியாக வரவில்லை என்று. அதற்குப்பிறகு மத்தியிலே அடைப்பு அடைத்து விடுகிறது என்று சொன்னார்கள். மூன்றாவதாக, இப்பொழுது, உபயோகப்படுத்தப்படும் கரி சரியாக இல்லையென்று **சொல்கிறார்கள். ஆக, ஏதோ ஒரு கோளாறு இருக்கிறது.** 'ஆடத்தெரியாத மங்கைக்கு அறை கோணல்' என்று சொல்வார்களே அது மாதிரி இருக்கிறது. எண்ணூரில் உள்ள ஜெனரேட்டர்கள் அந்த ரேட்டட் கெப்பாசிட்டி அளவிற்கு வேலை செய்யும் அளவில் இல்லை. 50 மெகாவாட் என்றால் 70 சத விகிதம்தான் கொண்டு போகலாம், அல்லது 75 சத விகிதம்தான் கொண்டு போகலாம், அதற்குமேல் போனால் ஜெனரேட்டர் கெட்டு விடுகிறது. அதை எங்கே வாங்கினார்கள், ஏன் வாங்கினார்கள் என்று எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் கேட்கலாம். எல்லாம் நம்முடைய மத்திய சர்க்கார் போபாலிலேயிருந்தும், மற்ற இடத்திலேயிருந்தும் செய்ததைத்தான் வாங்கியது.

ஆகையால் எப்படி டிரான்ஸ்பார்மர்கள் வைக்கின்ற சமயத்தில் லைன்களில் போடும் ப்யூஸ் யூனிட்டின் ரேட்டெட் கெபாசிட்டியை அதிகமாக்க் கொடுத்து விடுகிறார்களோ அதே போன்று ஜெனரேட்டர்களிலும் இருக்கிறது. 100 கே. வி. டிரான்ஸ்பார்மர் என்றால் குறைந்தபட்சம் 200 ஆம்ப்ஸ் ப்யூஸ் யூனிட் இருக்க வேண்டும். வாங்குகின்ற சமயத்தில் 200 ஆம்ப்ஸ் ப்யூஸ் யூனிட் என்று வாங்கி போட்ட அடுத்த நாளே வெடித்து விடுகிறது. அதிலே போட்டிருப்பது 200 ஆம்ப்சே தவிர, தாங்கும் அளவு அந்த அளவுக்கு இல்லை. The capacity to carry Current is less than 100 amps 100 கே. வி டிரான்ஸ்பார்மர்வைத்து விட்டு 100 ஆம்ப்ஸ் ப்யூஸ் யூனிட் வைத்தால் என்ன ஆகும்? தமிழ்நாடு மின்சார வாரியம் வாங்குகின்ற பொருள்கள் அப்படி இருக்கின்றன. சீப் மெட்டீரியல்ஸ் **வாங்குகிறார்கள். டெண்டர் கோரும்போது சீப்பான மெட்டீரியல்களை வாங்குவதால், குறைந்த டெண்டர்களை எடுத்துக் கொண்டு வாங்குவதால் 'பேட் குவாலிடி'** யாக **இருக்கிறது.**





**மனிதனுடைய உயிரோடு ஒட்டிப் பயன்படுத்தப் படுகின்ற** ஆஸ்பத்திரி எக்விப்மெண்ட்சில் குவாலிடியைப் பார்க்க வேண்டும்; சீப்னஸைப் பார்க்கக் கூடாது. மின்சாரத்திற்குத் தேவையான பொருள்களிலும் சீப்பாக இருக்கிறது என்பதற்காக மலிவுப் பொள்களை குறைந்த குவாலிடி உள்ள பொருள்களை வாங்குவது மிக மிகத் தவறு.

எந்தெந்தப் பொருள்களை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்வது என்று பார்க்க வேண்டும். கம்பியை இறக்குமதி செய்ய வேண்டியதில்லை. டிரான்ஸ்பார்மர்கள் இந்தியாவிலேயே உற்பத்தி செய்யப்பட்டு மற்ற நாடுகளுக்கு வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. தரமான பொருள்கள் இங்கு **கிடைக்காதவற்றை வெளிநாடுகளிலிருந்துகூடத் தருவித்துக்** கொள்ளலாம். ப்யூஸ் யூனிட் விஷயத்தில் நிரந்தரமான ஒரு பரிகாரத்தைக் காண வேண்டும். எந்தக் கிராமத்திற்குச் சென்று பார்த்தாலும் அங்கு இருக்கக்கூடிய டிரான்ஸ்ஃபார்மரைப் பார்த்தால் ப்யூஸ் யூனிட் கிடையாது. ஆரம்பித்து வைக்கிற சமயத்தில் ப்யூஸ் யூனிட் போடுகிறார்கள்; பிறகு அது சப்ளை கிடையாது. ஹெல்ப்பர்கள் என்ன செய்கிறார்கள்? ஒயர்களை எல்லாம் முடித்து முடித்து மூன்று ஃபேஸ்களையும் சேர்த்து வைக்கிறார்கள். ஏ. பி. ஸ்விச் கிடையாது; ஆஃப் பண்ண வேண்டுமென்று நினைத்தால் முடியாது. டிரான்ஸ்பார்மர் இருக்கக்கூடிய பாக்சில் கேரியர் கிடையாது. கையில் க்ளவுசை மாட்டிக் கொண்டுதான் அவர்கள் வேலை செய்ய வேண்டும். 720 ஒயராக இருந்தாலும் மற்ற ஒயராக இருந்தாலும் அப்படித்தான் செய்கிறார்கள். இதன் காரணமாக ப்ளோ அவுட் ஆனால் முற்றிலும் மின்சார சப்ளை நின்று விடுகிறது.

சில மோட்டார்கள் 2 ப்யூசில் 10 நிமிஷம் நீர் இறைக்கும். பிறகு அது தீயும். விவசாயி தலையில் 500 ரூபாய், 350 ரூபாய் விடியும். வாங்கக் கூடிய பொருள்கள் தரமான பொருள்களாக இருக்காத காரணத்தால் இந்தக் குறைபாடுகள் வருகின்றன. போன வருஷத்திலேயே சொன்னேன். வைத்திருக்கும் ரிப்ளையில் கிருஷ்ணமூர்த்தி இந்த ஐடியாவைச் சொன்னார் என்று இருக்கிறதே தவிர, பரிகாரம் என்ன என்று தெரியவில்லை.

## தமிழ் நாடு மின்சார வாரியத்தின் 1975-76 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீதான விவாதம்

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1975 நவம்பர் 11

கிராம தெரு விளக்குகள் பற்றி நம்முடைய அமைச்சர் அவர்கள் எல்லா எம். எல். ஏ.-க்களுக்கும் எழுதிவைத்திருக்கிறார். எவ்வளவு தூரம் திருப்தி செய்கிறார்கள்? எப்படி சைலன்ஸ் செய்கிறார்கள்? இது ஒரு நல்ல கலை. அந்தக் கலையைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். 'உங்கள் பகுதியில் இவ்வளவு லைட்ஸ் இருக்கின்றன. 70 சத விகிதம் எரிகிறது. என்று எழுதுகிறார்கள். வானத்தில் எவ்வளவு நட்சத்திரங்கள் இருக்கின்றன என்று கேட்டாலும், 33 லட்சத்து 38 ஆயிரத்து, 438 என்று பதில் சொன்னாலும். எப்படி நீ சொல்லுகிறாய் என்று கேட்டதற்கு 'நீ எண்ணிப் பார்த்துவிட்டு இல்லை என்று சொல்; நான் சொல்வதுதான் கரெக்ட்' என்றாலும். அதே போல் ஒவ்வொரு எம். எல். ஏ.-க்கும் ஒரு லெட்டர், உன்னுடைய தொகுதியிலே 3438 பல்புகளில் 2278 பல்புகள் எரிகின்றன. எந்த ஊரில் எரிகின்றன; எந்த ஊரில் எரியவில்லை என்று நம்மால் பார்க்க முடியாது. பை அண்டு லார்ஜ் கிராமங்களில் பொதுவாக விளக்குகள் எரியாது நின்று போய்விடுகின்றன.

நான் பஞ்சாயத்து யூனியன் சேர்மனாக இருக்கிறேன். தண்டமாக, பயன் இல்லாமல் மின்சாரத்திற்காகப் பணம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இதற்கெல்லாம் பொறுப்பு அமைச்சர் என்றோ, அரசாங்கம் என்றோ, மின்சார வாரியம் என்றோ சொல்லவில்லை. கீழே இருக்கக்கூடியவர்களுடன் டைரக்டர் ஆப் ரூரல் டெவலப்மென்ட் உட்கார்ந்து பேசி முடிவு எடுத்து இப்படிச் செய்ய வேண்டுமென்று செய்தாலே போதும்.

மீட்டர் பற்றிச் சொன்னார்கள். சிம்கோ மீட்டர்ஸ், இந்தியா மீட்டர்ஸ் இல்லை என்று சொன்னாலும் பிர்லா நிறுவனம் மீட்டர்களை உற்பத்தி செய்து கொண்டேதான் இருக்கிறார்கள். மீட்டர் கிடைப்பதில் கஷ்டம் ஒன்றுமில்லை. எந்த மீட்டரை வாங்குவது, யார் கணக்கில் வாங்குவது, எப்படி வாங்குவது, எந்த ரேட்டில் வாங்குவது என்ற இந்தப் பிரச்சினையில்தான் ஒன்றரை, இரண்டு வருஷங்கள் ஆகிவிடுகின்றன. இது தவிர்க்கக்கூடியது. அந்த இலாகாவில் இருக்கக்கூடிய, அடிமட்டத்தில் இருக்கக்கூடிய அக்கவுண்ட்ஸ் மெம்பர்களும் ரூரல் டைரக்டரும் பேசித் தீர்த்து வைக்கலாம். இதைச் செய்யவில்லை.

தமிழ் நாடு மின்சார வாரியத்தின் 1975-76 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீதான விவாதம்

1975 நவம்பர் 11]. [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

அடுத்து, மின்சார டெஃபிசிட் தொடர்ந்து இருக்கிறது. அதைப் பற்றி ஏற்கனவே விளக்கினேன். எலெக்ஷன் வரும்போது இப்போது ஏன் அதைப் பற்றியெல்லாம் பேசிக் கொண்டிருப்பது? ஆகவே, அதைச் சொல்ல விரும்பவில்லை.

நாம் சில சாதனைகளைத் தமிழகத்தைப் பொறுத்தவரை செய்திருக்கிறோம். 60,000 பம்ப் செட்டுகளுக்குக் கனெக்ஷன் கொடுக்க வேண்டுமென்று முடிவு செய்து இதுவரை ஏறக்குறைய 16,000 பம்ப் செட்களுக்கு சர்விஸ் கனெக்ஷன் கொடுத்தாகி விட்டது. அதன் செலவு 26 கோடி ரூபாய். மீதி இருப்பதைப் பண்ண பணம் இல்லை. இருந்தும் நிதிப் பற்றாக்குறை.

மின்சார வாரியத்தைப் போல் வசதி குறைந்த வாரியம் வேறு எதுவும் இருக்க முடியாது. மின்சார வாரியத்திற்கு பாங்கில் பணம் கொடுக்க மாட்டேன் என்கிறார்கள். ரீ-பே பண்ண முடியாது என்று நினைக்கிறார்கள். மத்திய அரசாங்கமும் இந்தத் துறைக்காக இந்தியா முழுவதற்கும் எவ்வளவோ கோடி ஒதுக்கியும்—முதலமைச்சர் அவர்கள் படித்துக் காண்பித்தது போல் தமிழ் நாட்டுக்குக் கிடைத்தது ஒரு கோடி ரூபாய்தான். மற்றவர்களுக்கு 25 கோடி ரூபாய்; தீவிளிக்கு தீவிளி, தீவிளிக்குத் தீவிளி என்பது போல் நமக்குக் கொடுத்திருக்கிறார்கள், குறைவாகக் கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய அமைச்சர் அவர்கள் டில்லிக்குச் சென்று பேசப் போகிறார்கள். நானும் மற்றவர்களும் அவரோடு போகலாம் என்று இருக்கிறோம். அவரே டிக்கட்டை வாங்கிக் கொடுத்து விட்டால் எல்லாவற்றையும் பார்த்து விடலாம். (குறுக்கீடு) டில்லியில் நான் பார்க்காதது ஒன்றும் இல்லை. எல்லா பார்ட்டும் பார்த்தாகிவிட்டது.

மின்சார பம்ப் செட்டுகளுக்கு இனிமேல் சர்விஸ் கனெக்ஷன் கொடுக்க முன்பு ஆனதைவிட அதிகமாகச் செலவாகும். அலுமினியம் விலை ஏறிவிட்டது. 'கண்டக்டர்' விலை காற்றில் பறக்கிறது. ஸ்கீம் எப்படி இம்ப்ளிமென்ட் ஆகும் என்று தெரியவில்லை. அந்த அளவுக்கு நிலைமை மோசமாக இருக்கிறது.

கல்பாக்கம், கல்பாக்கம் என்று சொல்லிக் கொண்டு வந்தார்கள் ஆனால் ஆயுதப் பிரச்சினையில் பிரஞ்சுக்காரனும், கனடாக்காரனும் எப்போது ஒத்துப் போகிறானோ அதற்குப் பிறகுதான் நமக்குப் பயன் கிட்டும். 1978-ல் வருமா, 79-ல் வருமா, 80-ல் வருமா என்று சொல்ல முடியாது. இந்த அளவுக்கு மத்திய அரசாங்கத் திட்டங்கள் நமக்கு நேரடியாகப் பயன்படாமல் கிடக்கின்றன. சிலர் மத்திய அரசாங்க அமைச்சர்களாக இருக்கும் காரணத்தால் அவரவர்கள் ஊருக்கு டெவலப்மெண்ட் பண்ணிக் கொண்டார்கள்.

கே. எல். ராவ் மத்திய மந்திரியாக இருந்தார். அப்போதே தூத்துக்குடி மின்சாரத் திட்டம், மற்றத் திட்டங்கள் எல்லாம் இருந்தன. அவர் காலத்தில் ராமகுண்டம்-1 மின் திட்டம் கட்டியாகிவிட்டது. தூத்துக்குடி மின் திட்டத்திற்கு சாங்ஷன் பண்ணியும் போதுமான பணம் கொடுப்பதில்லை. ராமகுண்டம் செக்ஷன், 2000 மெகா வாட் திட்டம் எடுத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ராமகுண்டத்தில் கிடைக்கிற கரண்ட் இந்தியாவுக்குக் கிடைக்கிறது, ஆந்திராவுக்குக் கிடைக்கிறது. தமிழ் நாட்டுப் பகுதியில் மின்சாரத்திற்கு ஸ்கேர்சிடி. இங்கு எலக்ட்ரிசிடி இல்லாததால் விவசாயம் பாதிக்கப்படுகிறது, தொழில் பாதிக்கப்படுகிறது. இந்த இரண்டும் பாதிக்கப்பட்டால் இந்தியா எப்படி உருப்படும்? எமர்ஜன்சியில் 500, 600 கோடி சாங்ஷன் பண்ணுகிறார்கள், இரிகேஷன் மினிஸ்ட்ரி. ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரை மாற்றாந்தாய் மனப்பான்மைதான் காட்டுகிறார்கள். எமர்ஜன்சியின் போதும் அப்படித்தான் நடக்கிறார்கள்.

எஞ்சினியர்கள் மின் வாரியத்தில் அதிகமாக இருப்பதாக டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசியதாகக் கேள்விப்பட்டேன். அப்படி நிறைய எஞ்சினியர்கள் இல்லை.

என்ஜினியர்களுக்கு மேல் வாரியம் இருக்கிறது, வாரியத்திற்கு மேல் அரசாங்கம் இருக்கிறது. 63 யூனியன்கள் இருக்கின்றன. இரண்டுக்கும் இடையே மத்தளம் மாதிரி மாட்டிக் கொண்டிருக்



கிறார்கள் இந்த எஞ்ஜினியர்கள். இவர்களுக்கு மேலே இருப்பவர்கள் அதிகாரமும் கொடுப்பதில்லை. கீழே உள்ளவர்கள் இவர்கள் சொன்னால் கேட்பதும் இல்லை. அப்படிச் சொன்னால் கேட்பதில்லையே என்று இவர்களை மாற்றலாம் என்றால் அதற்கு அதிகாரம் கிடையாது.

ஒரு ஹெல்ப்பர் சரியாக வேலை செய்ய மாட்டேன் என்றால், ஒரு லைன்மானைக் கூப்பிட்டு ப்யூஸை மாற்றவேண்டும் என்று சொன்னால் ராத்திரி வேளையில் ஏறினால் விழுந்து விடுவேன், இரவு வேலையில் ஒன்றும் செய்ய முடியாது என்று ஆர்டர்சை disobey செய்கிறான் என்றால், வில்புல் டிஸொபீடியன்ஸ் ஆக இருந்தால் கூட அவனை வேறு இடத்திற்கு மாற்றவேண்டும் என்றால் அதற்கு அதிகாரம் கிடையாது அஸிஸ்டென்ட் என்ஜினியருக்கு. டி. இ. க்குத்தான் இந்த அதிகாரம் இருக்கிறது. ஸ்டேஷனை விட்டு ஸ்டேஷன் மாற்றுவதற்குள்ள அதிகாரம் டி. இ. க்குத்தான் இருக்கிறது. ஸ்டேஷன் விட்டு ஸ்டேஷன் என்றால், மாம்பலத்திலிருந்து சைதாப்பேட்டைக்கு மாற்றுவது. இடையே இருக்கக் கூடிய தூரம், அரை மைல்.

ஆனால், ஒரு ஜூனியர் என்ஜினியரை அரக்கோணத்திலிருந்து கன்னியாகுமரிக்கு மாற்றுகிறார்கள். ஆனால் ஒரு லைன்மானை எட்டு கிலோ மீட்டர் தூரத்திற்கு மாற்றக்கூடாதா? முதலில் ஒரு உத்தரவு போட்டார்கள் நல்லது செய்யவேண்டும் என்று. எட்டு கிலோ மீட்டருக்கு அப்பால் மாற்றலாம் என்று உத்தரவு போட்டார்கள். அதைத் திரும்பப் பெற்றுக்கொண்டுவிட்டார்கள், காரணம் நிர்வாகத்தில் இருப்பவர்களுக்கு பயம். எல்லோரும் சேர்ந்து ஏதாவது வம்பு செய்துவிட்டால் என்ன செய்வது என்ற பயம். ஒரு விவசாயி இரவு நேரத்தில் மோட்டார் பம்ப் செட் நின்றுவிட்டது அல்லது ஏதாவது ப்யூஸ் போய்விட்டது என்றால் உடனே ஒரு ஹெல்பரைக் கூப்பிடுகிறார் அல்லது ஒரு லைன்மானைக்

கூப்பிடுகிறார். நான்கு தடவை ஏ. இ. சொன்னாலும் ‘ப்யூஸ் காலை அட்டென்ட் செய்யமாட்டேன்’ என்கிறார்கள். அதில் வேறு பாலிடிக்ஸ்.

இப்படி ஒரு வேலையை ஒரு அதிகாரி சொல்லி அதைச் செய்யமாட்டேன் என்று சொன்னால் அவனை அங்கிருந்து மாற்றுவதற்கு நமக்கு தைரியம் இல்லை. உடனே எல்லோரும் எதிர்த்துவிடுவார்களோ, கும்பலாகக் கூடிக்கொண்டு லாரியில் வந்துவிடுவார்களோ என்று பயம். நமது மந்திரி வந்த பிறகு சிலயிடங்களில் சில நல்ல காரியங்களைச் செய்திருக்கிறார்கள். ஏதாவது ஆக்ஷன் எடுத்தால் எல்லோரும் வந்து விடுவார்களோ என்ற பயம். ஏதாவது செய்தால், உடனே ஒரு மாலையைப் போட்டு கன்யாகுமரியிலிருந்து. கோவையிலிருந்து லாரிகள் வருகின்றன. இப்படிப்பட்ட ஆக்டிவிட்டீஸ்க்கு எங்கிருந்தோ லாரிகள் வருகின்றன. டிபார்ட்மெண்ட் லாரிகளே வருகின்றன. தி. மு. க. மாநாட்டுக்கு வருகிற மாதிரி ஏறிக் கொண்டு வருகிறான். ஒரு லாரியில் 200 பேர்கள் ஏறிக் கொண்டு வருகிறார்கள். சும்மா ஏமாற்றுகிறார்கள். தி.மு.க. கொடியைக் கையில் வைத்துக்கொள்கிறார்கள். தாங்கள் வேண்டுவதை [illegible] அப்படி [illegible] வருகிறார்கள். இப்படிப்பட்ட நிலை இருந்தால் நமக்கு விமோசனமே கிடையாது. இப்படிப்பட்டவர்களை மாற்றக்கூடாது. மாற்றினால் அந்த எஞ்ஜினியருக்கு உதை, ஏ. இ.-க்கு உதை, டி. இ.-க்கு உதை, எந்தெந்த எஞ்ஜினியர்கள் உதை பட்டார்கள் என்று நமக்குத் தெரியும். (மணியடிக்கப் பட்டது).

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வா. மை. அப்துல் ஜப்பார்.) மற்றவர்களை விட நீங்கள் மூன்று நிமிடங்கள் அதிகமாக எடுத்துக் கொண்டுவிட்டீர்கள்.**



**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** ‘உதை’ என்று சொன்னார்கள். இவர் இவ்வளவு சொல்கிறார்களே, இவருக்கு ஒன்றும் ஏற்படவில்லை என்று நினைக்கிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): நான்** நியாயத்தைச் சொல்கிறேன். ஆகவே தகராறு வராது. என்ஜினியர் உள்ளூர்காரனாக இருந்தால் அவனும் உதைப்பான். கோவையிலிருந்து பண்ருட்டியில் போட்டால் அவரை யாருக்குத் தெரியும்? வொர்க்கோர்ஸ் பண்ருட்டிக்காரன், என்ஜினியர் என்ன பண்ண முடியும் ஏ. இ. பண்ருட்டிக்காரனாக இருந்தால் பயப் படுவார்கள். போலீசுக்கு போனாலும் ஒன்றுமில்லை. விதியே என்று சொல்லி வேறு இடத்திற்கு மாற்றிக்கொண்டு போகலாம் என்று வேறு ஊருக்குப் போகிறார்.

We have to sympathise with these people. **யாரை** வைத்துக்கொண்டு நிர்வாகம்செய்வது?

ஒன்று சொல்லவிரும்புகிறேன், ஆளும் கட்சியிலிருந்து கொண்டு, மின்சார வாரியத்தில் இருக்கக்கூடிய பணியாளர்கள், அவர்கள் கவர்ன்மெண்ட் வொர்க்கோர்ஸா அல்லது பப்ளிக் அண்டர் டேக்கிங்ஸ்-ஐச் சேர்ந்தவர்களா? எவ்வளவு யூனியன்கள், அந்தந்தக் கட்சிக்காரன், ஆளுக்கு ஒரு யூனியன். சீப்-எஞ்ஜினியரைக் கேட்டால் சொல்கிறார், 56 யூனியன்கள் இருக்கின்றன என்று. அவுனி 56 தேசங்கள் என்று முன்பு சொல்வார்கள். அதேபோல 56 யூனியன்கள். ஒன்றிரண்டல்ல, 56. இது உருப்படுமா?

எமர்ஜன்ஸியைப் பயன்படுத்திக்கொண்டு, இந்திரா காந்தி அவர்கள் போட்டிருக்கிற எமர்ஜன்ஸியைப் பயன்படுத்திக் கொண்டு இவற்றையெல்லாம் ஒழித்துக்கட்டுங்கள். அப்படிச் செய்வதில் தவறு ஒன்றும் இல்லை.

யார் தவறு செய்தாலும் சரி, ஒரு என்ஜினியர் தப்பு செய்தால் straight away dissmiss him. ஒருவர் லஞ்சம் வாங்கினால் straight away dissmiss him. சுப்பீரியோர்ஸ்-இன் ஆர்டர்ஸை டிஸ் ஓபே செய்தால் அவனை வீட்டுக்கு அனுப்புங்கள். இன்டிஸிப்ளின்ட்டாக இருப்பவர்களை வீட்டுக்கு அனுப்புங்கள். அல்லது அவர்களை ஸஸ்பென்ட் செய்யுங்கள். எம். எல். ஏ.-க்களின் சார்பாக நான் உறுதி கூறுகிறேன். நாங்கள் அவற்றில் தலையிடமாட்டோம் என்று. இன்டிசிப்ளின், டிஸொபேயல் ஆப் ஆர்டர்ஸ் இவற்றின்மீது நடவடிக்கை எடுக்கும் போது நாங்கள் குறுக்கே வரமாட்டோம், நிர்வாகத்தை ஒழுங்காக நடத்துவதில் நாங்கள் ஒத்துழைப்போம்.

ஆனால் இவ்வளவு யூனியன்கள் இருப்பதால், நிறையப் பேர்கள் வந்து சொல்லும்போது நமக்கே சில சமயங்களில் மயக்கம் வந்துவிடுகிறது, இவ்வளவு பேர்களா என்று. என்ஜினியர்கள் கொஞ்சம் பேர்கள்தான் இருக்கிறார்கள் (மணியடிக்கப்பட்டது) என்ஜினியர்கள் பற்றி நம் மினிஸ்டடரிடம் அடிக்கடி போய்ச் சொல்வேன். முதல் அமைச்சர் அவர்களிடமும் சென்று சொல்வேன். அவர்களுக்கு சில குறைபாடுகள் உள்ளன. கோடிக் கணக்கான ரூபாய் அளவிற்கு செலவழிக்கக்கூடிய குறைபாடுகள் அல்ல. ஐந்தாறு லட்சம் ரூபாய்க்குள் உள்ள குறைபாடுகள்தான்.

டி. ஏ. வை ரீபிக்ஸ் செய்யும்போது சில அனுமலீஸ் இருக்கின்றன. அதைப்பற்றி டிஸ்கஸ் செய்கிறார்கள். டிஸ்கஸ் செய்கிறார்கள், ஆனால் முடிவு ஒன்றும் வரமாட்டேன் என்கிறது. ஆந்திராவை எடுத்துக்கொண்டால் அங்கு 11,75,102 சர்வீஸஸ் உள்ளன. அங்குள்ள என்ஜினியர்கள் 2000. தமிழ்நாட்டில் 28 லட்சம் சர்வீஸஸ் இருக்கின்றன. அந்தக் கணக்கில் பார்த்தால் இருக்கவேண்டிய என்ஜினியர்கள் 4,000 பேர்கள். ஆனால் இருப்பவர்கள் 2,600 என்ஜினியர்கள்தான். நான் சொல்வது



இருக்கிற என்ஜினியர்களை வேலை செய்ய விடுங்கள். அவர்களை வேலை செய்யவிட்டால் போதும். அவர்களுக்கு வேண்டிய அதிகாரங்களைக் கொடுத்து முறைப்படி வேலை செய்ய விட்டால் போதும். அதுவே சரியாகிவிடும். (மணியடிக்கப்பட்டது.)

பின்னர், ரீ-டெஸிக்னேஷன். ஏ.இ.-யை அஸிஸ்டெண்ட் எக்ஸிக்யூட்டிவ் என்ஜினியராக ஆக்கவேண்டும். ஜே.இ. யை எ.இ. ஆக்கவேண்டும். ஆல் இந்தியா பாட்டேர்னில் அப்படி இருக்கிறது. இப்படி ரீ-டெஸிக்னேட் செய்தால்தான் அவர்களுக்கு வேறு இடங்களுக்குச் செல்லும்போது பலன் ஏற்படும். இவையெல்லாம் ஸ்மால் இஷ்யூஸ். இதில் கோடிக்கணக்கான ரூபாய் இன்வால்வ் ஆகப்போவதில்லை. அவர்கள், They are the nerves of the administration அதை தெரிந்துகொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டில் ஒரு எலக்ட்ரிஸிட்டி போர்ட் வைத்துக்கொண்டிருப்பதற்குப் பதிலாக நான்கைந்து செப்பரேட் கார்ப்பரேஷன்ஸ் வைத்துக்கொள்ளலாம். கோவையில் ஒரு எலக்ட்ரிஸிட்டி போர்ட், திருச்சியில் ஒரு எலக்ஸிட்டி போர்ட், திருநெல்வேலியில், ஒரு எலக்ட்ரிசிட்டி போர்ட் சென்னையில் ஒரு எலக்ட்ரிசிட்டி போர்ட் என்று தனித்தனியாக வைத்து அவ்வளவு சீஃப் என்ஜினியர்களையும் சேர்த்து தனியாக சென்ட்ரல் போர்ட் என்று ஒன்று வைத்தால் நிர்வாகம் நன்றாக இருக்கும். (மணியடிக்கப்பட்டது).

திரு. துரை முருகன்: பாயின்ட் ஆப் க்ளாரிபிக்கேஷன். என்ஜினியர்கள் அத்தனைபேர்களும் உத்தமபுத்திரர்கள் மாதிரியும், மற்ற வர்க்கங்கள் எல்லோரும் தப்பு பண்ணுகிறவர்கள் மாதிரியும் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசினார்கள். தவறு செய்பவர்கள் என்ஜினியர்களிலும் பலபேர்கள் இருக்கிறார்கள்

என்பதை அவர்கள் ஒத்துக் கொள்வார்களா? ஏதோ என்ஜினியர்கள் மட்டும் உத்தமபுத்திரர்கள் போலவும் மற்றவர்கள் தப்பு செய்கிறவர்கள் போலவும் ரிக்கார்ட் ஆகிவிடக்கூடாது.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்)** : ஏற்கனவே சொன்னேன். இன்டிஸிப்ளின் எந்த லெவலில் இருந்தாலும் சரி அதை கர்ப் பண்ண வேண்டும். அது எக்ஸிகியூட்டிவ் என்ஜினிய ராக இருந்தாலும் சரி அல்லது சூப்பரின்டென்டிங் என்ஜினிய ராக இருந்தாலும் சரி, லைன்மேனாக இருந்தாலும்சரி, ஹெல்ப்ப ராக இருந்தாலும்சரி, ஜே. இ. யாக இருந்தாலும்சரி, அல்லது ஏ.இ. யாக இருந்தாலும்சரி Inefficiency, favouritism and corruption should be curbed during the emergency. இதில் நான் யாருக்கும் வக்காலத்து வாங்கவில்லை.

[நண்பகல் 12-00]

**திரு. கா. காளிமுத்து** : பேரவைத் தலைவரவர்களே, மாண்பு மிகு. தொழில் மின்துறை அமைச்சர் அவர்கள் இந்த அவைக்கு வழங்கியிருக்கின்ற மின்சார வாரிய நிதி நிலை அறிக்கையின் மீது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எனது கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

வேளாண்மைத் துறையானாலும், தொழிற்துறையானாலும் அவைகளுக்கு எல்லாம் உயிர்ப்பு சக்தியாக இருக்கின்ற மின்சாரத் துறையின் மீது அரசு தனிக் கவனத்தை, முழுமையான கவனத்தை, ஆழ்ந்த கவனத்தைச் செலுத்த வேண்டுமென்பதில் இரண்டு கருத்துக்கள் இருக்கமுடியாது.

வளர்ந்து வருகின்ற மின்சாரத் தேவைகளை நாம் எண்ணிப் பார்க்கின்றோம். கடல் அலைகளிலிருந்தும், காற்றிலிருந்தும், சூரிய ஒளியிலிருந்தும் மின்சாரம் தயாரிக்க வேண்டும் என்கின்ற





அளவுக்கு நாம் இன்றைக்குச் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். அதுமட்டுமல்லாமல் தமிழகத்திலிருக்கின்ற மின்சார வாரியம் செழுமைப்பட வேண்டும். மின்சார உற்பத்தி அதிகப்பட வேண்டும் என்கின்ற எண்ணத்தின் அடிப்படையில், கர்நாடக அரசோடு பேச்சு வார்த்தை நடத்தி ஒகனேகல் மின் திட்டத்தில் பங்கு பெறவேண்டும். 880 மெகாவாட் திட்டதில் பங்கு பெறவேண்டும், கேரளத்தில் இருக்கின்ற இடிக்கி மின்திட்டத்தில் பங்கு றெவேண்டும். 880 மெகாவாட் திட்டத்தில் பங்கு என்று எண்ணிப்பார்த்துக் கொண்டிருக்கிறோம். நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இன்னொன்றை தெரிவிக்க விரும்புகிறேன்.

தமிழகத்தில் இருக்கின்ற 16 சர்க்கரை ஆலைகளில் நீராவியின் மூலமாக மின்சக்தியைத் தயாரிக்க முடியுமா என்பதை அரசு பரிசீலிக்க வேண்டும் என்பதனை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். சர்க்கரை ஆலைகளின் இயக்கத்தை உற்சாகப் படுத்துவது என்பது மட்டுமல்லாமல், அவைகளின் மூலம் நாம் மின்சாரத் தேவையைப் பெறுவதற்கு உரிய கவனத்தைச் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அமைச்சர் அவர்கள் இங்கே தந்திருக்கின்ற, வழங்கியிருக்கின்ற அறிக்கையின் இறுதியில் திருக்குறளைப் போல சுருக்கமாக ஒரு கருத்தைச் சுட்டிக் காட்டியிருக்கின்றார்கள். "பயன்பெறுவோரும், பாடுபடுவோரும் மேலான நலம் பெறுவதே, மின்வாரியத்தின் நன்னோக்கம்" என்று தெரிவித்திருக்கின்றார்கள். ஆனால் அமைச்சர் அவர்களுடைய அந்த நன்னோக்கத்துக்கு ஏற்ற வகையில் மின்சார வாரியத்தின் போக்கு இருக்கிறதா என்பதை நாம் பரிசீலித்தாக வேண்டும்.

நேற்றைய தினம் எங்களுடைய கட்சியைச் சேர்ந்த டாக்டர் ஹாண்டே அவர்கள் இங்கே வாரியத்தில் நிகழும் பல தவறுகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எதிர்க்கட்சியைச் சேர்ந்த

வர்கள் தவறுகளை எடுத்துரைக்கும்போது, அவர்கள் ஏதோ அரசின் சாதனைகளைப் பார்த்துப் பொறுமைப்படக்கூடியவர்கள், பொல்லாங்கு, எரிச்சல் படக்கூடியவர்கள் என்ற வகையில் ஆளுங்கட்சியில் இருப்பவர்கள் புறக்கணித்தாலும், அண்ணன் இருட்டிணமூர்த்தி போன்றவர்கள் சுட்டிக் காட்டியிருக்கின்ற தவறுகளை எண்ணிப்பார்த்தாக வேண்டும். எதிர்க்கட்சி பத்திரிகைகள் மட்டுமல்ல நடுநிலை ஏடுகள்கூட ஆளுங்கட்சியுடைய நிர்வாகத்தின் தவருன திட்டமிடுதல் குறித்து எடுத்துக்காட்டி, நிர்வாகத் திறமையால் மின்சாரத் துறையில். இப்படிப்பட்ட தவறுகள் ஏற்பட்டிருக்கிறது என்பதனை கடந்த காலத்தில்கூட எழுதிக் காட்டியிருக்கிறது. 28—9—75 நாளைய இந்து பத்திரிகையின் தலையங்கத்தில் இதை மிகத் தெளிவாக அவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிருர்கள். இந்தத் தவறுகளைப் பார்க்கையில் நமது மின்சார வாரியத்தின் மீது அரசு கவனம் செலுத்தியாக வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேசின் பிரிட்ஜில் இருக்கிற மின்நிலையம் அதன் உற்பத்தி சக்தியில் பாதி அளவுக்குக்கூட இன்னும் மின்சாரம் தயாரிக்கவில்லை என்பதனை நான் எண்ணிப் பார்க்கின்றேன். அதற்கான காரணத்தைக்கூட இந்த வாரப் பத்திரிகையில் குறிப்பாகப் போட்டு, கொதி கலன் பழுதாகி இருக்கிறது. சூடுபடுத்துகின்ற திறமை குறைவாக இருக்கிறது என்பன போன்ற பிரச்னைகள் இருக்கின்றன; ஆகவே இந்த பிரச்னைகள் காரணமாகத்தான் மின் உற்பத்தி தடைபட்டிருக்கிறது, குறைந்திருக்கின்றது என்று அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிருர்கள்.

ஆனல், பேசின்பிரிஜ் மின்நிலயத்தை விட பழைய மின் நிலையந்தான் ஆமதாபாத்தில் இருப்பது. அங்கே அதன் உற்பத்தி சக்தியில் 90 விழுக்காடு தயாரிக்கிருர்கள் என்பதை எண்ணிப் பார்த்து தமிழகம் சற்று வேகமாகச் செயல்படவேண்டும் என்று சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நேற்றைய தினம் பேசிய ஆளுங் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் அண்ணன் வேழவேந்தன் மிக நயமாகச் சுட்டிக்காட்டினர். இரவு நேரத்தில் விமானத்திலிருந்து பார்க்கின்றபோது, தமிழ





கத்தின் கிராமங்களை கீழே பார்த்தால் மல்லிகை பூத்தாற்போல் இருக்கிறது என்று எடுத்துக் காட்டினர். இருக்கின்ற பிரச்னையே அதுதான் நீங்கள் எல்லாவற்றையும் உயரத்திலிருந்து பார்க்கின்றீர்கள். கொஞ்சம் வீதியில் வலம் வந்து பார்த்தால்தான், விமானத்திலிருந்து கீழே இறங்கி வந்து பார்த்தால்தான் பிரச்னைகள் புரியும்.

இங்கே பலரும் சுட்டிக் காட்டினர்கள். கடிதங்களில்தான் விளக்கு எரிகிறதே தவிர, பல இடங்களில் மின்சார விளக்குகள் எரிவதில்லை என்பதை அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிருர்கள். எத்தனை விசை ஏற்றங்களுக்கு மின் இணைப்புக் கொடுத்தோம், அவை எல்லாம் அரசின் சாதனை அல்லவா என்று பளப்பளப்பான காகிதத்தில் அச்சிட்டு வழங்கியிருக்கிருர்கள்.

ஆளுங்கட்சித் தோழர்களுக்கு ஒன்றை நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். 1951 லிருந்து காங்கிரஸ் ஆட்சி காலத்தில் 1,813 இடங்களில் கொடுக்கப்பட்டிருந்த மின் இணைப்பு, 1966 வரையில் 22,137 கிராமங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. 14,373 விசை ஏற்றங்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த மின் இணைப்பு 2 லட்சத்து 56 ஆயிரத்துக்கு விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. அதைப் பார்த்தபோது அன்றைக்கு அரசாங்கத்தின் அசாதாரண சாதனை என்று ஒத்துக்கொள்ளாது, நிர்வாக இயந்திரத்தின் வழக்கமாக நடக்கின்ற பணிகள் என்று குறிப்பிட்டுக் காட்டினேமே தவிர, ஆட்சி ஏதோ பகீரதப் பிரயத்தனம் செய்து சாதனையை நிறைவேற்றிவிட்டது என்று சொல்லவில்லை.

ஆனல், இன்றைக்கு இத்தனை விசை ஏற்றங்களுக்கு மின் இணைப்பு தந்திருக்கிறேம் என்று கணக்குக் காட்டுகிறேம். அதே நேரத்தில் பல இடங்களில் விவசாயப் பெருமக்கள் பலமுறை விண்ணப்பம் போட்டும் விசையேற்றத்திற்கு மின் இணைப்பு கிடைக்க முடியாமல் இருக்கிறது. டாக்டர் ஹாண்டே. அவர்களுக்கு திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலிருந்து ஒரு விவசாயி கடிதம் எழுதியிருக்கிருர். அதை அமைச்சரிடம் தரத் தயாராக இருக்கிறேம்.

**திரு. நா. வீராசாமி** : தலைவரவர்களே, ஒரு கிளாரிபிகேஷன் 1951-ல் 14 ஆயிரமாக இருந்தது 1966 வரையில் 2 லட்சத்து 56 ஆயிரமாக உயர்ந்தது. அதை அரசின் சாதனையாக ஒப்புக் கொள்ளவில்லை. இப்போது நான் சொல்லுகிறோம் என்கிறார்கள். 15, 16 ஆண்டு காலத்தில் 2 லட்சத்து 56 ஆயிரம் விசையேற்றத்துக்கான மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டன. ஆனால் தி.மு.க. வின் 8 ஆண்டு ஆட்சி காலத்தில் இதுவரையில் 7 லட்சத்து 6 ஆயிரம் கொடுத்திருக்கிறோம். இதைத்தான் சொல்கிறோம். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன், விசை ஏற்றங்களுக்கு மின் இணைப்புக் கொடுப்பதில் ஆண்டுக்கு 20,000 என்றிருந்தால் குறைந்த தேவையை நிறைவேற்ற 20 ஆண்டு காலம் ஆகும். ஆகவே 50 ஆயிரம், 60 ஆயிரம் இணைப்புகள் (குறுக்கீடு).

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வா. மை. அப்துல் ஜப்பார்)** இது கிளாரிபிகேஷன் இல்லை. நேரம் குறைவாக இருக்கிறது. திரு. காளிமுத்து அவர்கள் பேசி முடிக்கட்டும்.

**திரு. கா. காளிமுத்து** : தலைவரவர்களே, அப்போது இருந்த மின்துறையின் வருமானம் என்ன என்பதையும், இப்போது இருக்கின்ற வருமானம் என்ன என்பதையும், அப்போது போடப்பட்ட மூலதனம் என்ன என்பதையும், இப்போது இருக்கிற மூலதனம் என்ன என்பதையும் ஒப்பிட்டுப் பார்த்து, அந்தக் கணக்கைப் பார்த்து பரிசீலிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

நான் தெரிவிக்க விரும்புவதெல்லாம் புள்ளிவிவரங்களில் இருக்கின்ற பல கருத்துக்கள் நடைமுறைக்கு வாவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கடந்த காலத்தில் விவசாயப் பெருமக்கள் மின்சாரக் கட்டணம் அதிகமானபோது பெரிய புரட்சி செய்தார்கள். 10 பேருக்கு மேல் இறக்க வேண்டிய அளவுக்கு நிலை ஏற்பட்டது. ஆனால் இப்போது அவசர நிலையைச் சாதகமாக்கிக்கொண்டு 12 காசு என்பதை 16 காசு ஆக்கியிருக்கிறோர். நான் இந்த அரசைப் பணிவோடு கேட்டுக் கொள்வேன், இதுதான் பசுமைப் புரட்சிக்கு நாம் செய்யக்கூடிய காரியமா? இதுதான் வேளாண்



மைத் துறைக்குச் செய்யக்கூடிய நல்ல காரியமா? ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி என்பது போல் விவசாயிகள் தலையில் தான் இந்த வரியைச் சுமத்த வேண்டுமா என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு மின் இணைப்பு கொடுக்கிறபோது, மீட்டர் இல்லை, ஆகவே இணைப்பு கொடுக்க முடியவில்லை என்கிறார்கள். ஆனால் இங்கே இந்தியா மீட்டர் தொழிற்சாலை மூடப்பட்டிருக்கிறது. ஆக, இந்த நிலைமைகளை எல்லாம் மாற்றியாக வேண்டும். மின்சாரத் துறையில் இருக்கின்ற தவறுகளைக் களைந்தாக வேண்டும். அண்ணன் கிருஷ்ணமூர்த்தி சொன்னது போல தேர்தல் வருவதை எண்ணிப் பார்த்தாவது இந்தக் காரியங்களைச் செய்ய முயற்சி செய்யவேண்டுமென்று கூறி அமர்கிறேன். வணக்கம்.

**திரு. கு. காமாட்சி**: திரு. கிருஷ்ணமூர்த்தி சொன்னார், தேர்தல் வருகிறது என்றார்? எப்போது வருகிறது என்று வருகிறது?

**மாண்புமிகு மாற்றுத்தலைவர் (திரு. வா. மை. அப்துல் ஜப்பார்)**: மின்சாரத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம். தேர்தலைப் பற்றி அல்ல.

**திரு. கா. காளிமுத்து** : அண்ணன் காமாட்சி முரசொலி பத்திரிகையைப் படித்தால் உண்மைகள் தெரியும்.

**திரு. வை. பாலசுந்தரம்** : தலைவரவர்களே, இன்றைய தினம் அரசு கொண்டு வந்திருக்கின்ற மின்சார நிதிநிலை அறிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்களைக் கூற முற்படுகின்றேன்.

மின்சாரம் இல்லை என்றால் சம்சாரம் நடக்காது என்று சொல்லப்படுகின்ற அளவுக்கு இன்றைக்கு சூழ்நிலைகள் இருந்து கொண்டிருக்கின்றன. அந்த அளவுக்குத் தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் நமது தமிழக அரசு தமிழ்நாட்டில் இருக்கின்ற குடும்பங்களுக்கு எல்லாம் சீரான முறையில் சம்சாரத்தை நடத்துவதற்கு பல கட்டங்களில் மின்சாரத்தை வழங்குவதன் மூலம் உதவி புரிந்திருக்கிறது என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. வை. பாலசுந்தரம்] [1975 நவம்பர் 11

குறிப்பாக, இந்த விவாதத்தின் அவலமான சூழ்நிலை என்று கருதுகிறேன். காரணம், இன்றைக்கு மின்சாரத்தைப் பொறுத்த வரையில் பற்றாக்குறை இல்லை. அதனால் சூடு இல்லை என்பது என்னுடைய கருத்தாகும். பற்றாக்குறை இல்லாத காரணத்தால்தான் இப்படிச் சூடில்லாத விவாதத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். நிர்வாகத் திறமையால் இந்த அரசு இதுவரையில் செய்திருக்கும் சாதனைகளைச் சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்ப்போமானால், யாரும் பாராட்டாமல் இருக்கமுடியாது.

குறிப்பாக, சென்ற ஆண்டில் இந்த நாளில் இப்படி நிதிநிலை அறிக்கையைக் கொண்டுவந்த நேரத்தில் மிகக் கடுமையாக மின்சாரத்தில் பற்றாக்குறை இருந்ததை நாம் நன்கு அறிவோம். அந்தக் கடுமையான சூழ்நிலையில் கூட நமது தமிழக அரசு எப்படித் திறமையாகச் சமாளித்துத் தமிழக மக்களுடைய ஏகோபித்த பாராட்டுதலோடு மட்டுமல்லாமல் இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள அத்தனை முக்கியமானவர்களின் பாராட்டுதல்களைப் பெற்றது என்பதை இங்கே நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, நிர்வாகத் திறமைக்கு முன்னிடம் கொடுத்து, அதற்கேற்ற முறையிலே எந்த அளவிற்கு நம்முடைய தமிழக அரசு செயல்படுகிறதோ, அதே அளவிற்கு அதற்கேற்றாற்போல இன்றைக்கு நிர்வாகத்திலே ஈடுபட்டிருக்கிற பொறியாளர்களும், இதற்கு ஈடு கொடுத்து செயல்திறமைத் தன்மையிலே இறங்கியிருக்கிறார்கள் என்பதைத் தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். மிகத் திறமையாகச் செயல்படுகின்ற அரசின் உறுப்பினர்களாக இருக்கிற அரசுப் பொறியாளர்களும் இதற்கு உதவி செய்கிறார்கள். எனவே தான் இன்றைக்கு எப்படிப்பட்ட இக்கட்டான நிலைமைகள் தமிழகத்திலே ஏற்பட்டாலும், இப்படிப் பற்றாக்குறை வந்தாலும் நிவர்த்தி செய்ய முடிகிறது.

குறிப்பாகத் தமிழ்நாட்டை எடுத்துக் கொள்வோமானால் வளமான நதிகள் எப்போதும் தமிழக முழுவதிலும் இருந்ததில்லை. ஆனால் வட பகுதியிலே வளமான நதிகள் பாய்கிற பகுதிகள், வளமான நதிகளிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யக் கூடிய பல



1975 நவம்பர் 11] [திரு. வை. பாலசுந்தரம்]

வளமான நதிகள் வட மாநிலங்களிலே இன்றைக்கு பல இருந்தும், இப்போது கூட மின்சாரப் பற்றாக்குறை பல வட மாநிலங்களிலே இருந்து வருகிறது என்பதைச் சுட்டிக் காட்டுகின்ற நேரத்திலே பருவ மழை இருந்தாலும், இல்லாவிட்டாலும் மற்ற மாநிலங்களிலும் இப்படிப்பட்ட பற்றாக்குறை இருந்து கொண்டிருக்கிற நேரத்தில், பற்றாக்குறை இருந்தாலும் அதை நிவர்த்தி செய்கிற வகையிலே, திறமையான முறையிலே நம்முடைய அரசு பல காரியங்களைச் செய்து கொண்டு வருகிறது. அப்படிச் செயல்படுகிற நேரத்தில் அக்கம் பக்கத்து மாநிலங்களிலேயிருந்து மின்சாரத்தை வாங்கித் தமிழ்நாட்டு மக்களுக்கு வினியோகம் செய்து கொண்டு வருகிறோம். இப்படி வினியோகம் செய்கிற நேரத்தில் பசுமைப் புரட்சிக்கு முதலிடம் கொடுத்து விவசாயப் பெருங்குடி மக்களின் கண்ணீரைத் துடைத்து அவர்களுடைய வாழ்க்கையில் நல்ல மறுமலர்ச்சியைக் காண வேண்டுமென்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து இருப்பது இந்த அரசு என்ற காரணத்தினால் மின் இணைப்பு பெறுகின்ற பம்பு செட்டுகள் இந்த அரசில், இந்தியத் துணைக் கண்டத்தில் இருக்கின்ற பம்பு செட்டுகளில் மூன்றில் ஒரு பங்கு பம்பு செட்டுகள் தமிழகத்தில்தான் இருக்கின்றன என்று மகிழ்ச்சியோடு எண்ணுகிறபோது விவசாயப் பெருங்குடி மக்களுக்காக இந்த அரசு எப்படி இத்தனைச் சிக்கல்களுக்கும் மத்தியில் வேலை செய்து வருகிறது என்பதைத் தங்கள் மூலம் அமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

வறட்சியான நிலைமை ஏற்பட்டாலும், வறட்சியால் புரட்சி தமிழகத்தின் பல பகுதிகளில் வெடித்து வெளியே வருமானாலும் அதைப் பற்றிக் கவலைப்படாது இந்த அரசு விவசாயிகளுடைய ஏற்றத்திற்காகப் பல காரியங்களைச் செய்து வருகிறது. அவர்களுக்குப் பல சலுகைகளை வழங்கி அந்த வறட்சியைப் போக்கியிருக்கிறது, மின்சாரப் பற்றாக்குறையைப் போக்குகின்ற அத்தனை காரியங்களையும் செய்து கொண்டிருக்கிறது என்பதைச் சொல்லுகிற நேரத்திலே இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகத்தில்தான் மின் விளக்குகள் அதிகம் என்ற சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது என்று சொல்லப்படுகிறது.

[திரு. வை. பாலசுந்தரம்] [1975 நவம்பர் 11

வடநாட்டிலே இருந்து வருகிறவர்களாக இருந்தாலும், வடக்கிலிருந்து வருகின்ற மந்திரிகளாக இருந்தாலும் தமிழகத்தைப் பெருமையோடு பார்த்து தமிழகத்திலேதான் அதிகமான கிராமங்களுக்கு மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டு மின் விளக்குகள் ஏற்றப்பட்டுள்ளன என்று இத்தனை சோதனைகளுக்கும் இடையிலும் இப்படிப்பட்ட சாதனையைச் செய்துள்ள அமைச்சர் அவர்களைத் தங்கள் மூலம் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன் என்பதைத் தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

தமிழக அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் காரணமாக தமிழ்நாட்டில், 6 மாத காலத்திற்குள், ஓராண்டு காலத்திற்குள் தமிழகத்தில் மின்சார விளக்குகள் இல்லாத கிராமங்களை இருக்காது என்று சொல்லப்படுகிற திட்டவட்டமான அறிவிப்பை இந்த அரசு அறிவிக்கின்ற வகையிலே இன்றைக்குத் தமிழ் நாட்டில் ஏறத்தாழ 98 சத விகிதம் விளக்குகள் போடப்பட்டாகி விட்டன என்று சொல்லப்படுகிறது. அதிலும் குறிப்பாகவும், சிறப்பாகவும் நான் மகிழ்ச்சியடைவதெல்லாம் ஏறத்தாழ 2,31,000 ஹரிஜன குடியிருப்புகளுக்கு இந்த அரசு மின் இணைப்பு வழங்கியிருக்கிறது என்று சொல்லப்படுகிறது என்பதை அறிய உள்ளபடியே நான் பெரிதும் பெருமைப்படுகிறேன். தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களின் சார்பாக தங்கள் மூலம் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் இந்த அரசு பசுமைப் புரட்சியை ஏற்படுத்த வேண்டுமென்ற காரணத்திற்காக இருக்கின்ற தரிசு, புறம்போக்கு நிலங்களையெல்லாம் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வழங்கிய காரணத்தினாலே அவர்கள் நல்ல ஆர்வத்தின் காரணமாக இந்தப் பசுமைப் புரட்சியில் ஈடுபடுகிறார்கள். அவர்கள் நிலம் இல்லாத ஏழைகள் இல்லை என்ற நிலைமை ஆக்கப்பட்டு, தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள் 1, 2 ஏக்கரா நிலத்தை அவர்கள் பெற்று இருக்கிறார்கள். நான் தங்கள் மூலம் அரசைக் கேட்டுக் கொள்வதெல்லாம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு மின் இணைப்புத் தருவீர்களானால், அவர்களுக்கு முன்னுரிமை வழங்குவதற்கு நம்முடைய அரசு ஆவன செய்ய வேண்டும்



1975 நவம்பர் 11] [திரு. வை. பாலசுந்தரம்]

என்பது என்னுடைய தாழ்மையான வேண்டுகோள் என்பதைத் தங்கள் மூலம் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அரசு எல்லோருக்கும் நிலம் வழங்கியிருக்கிறது. நிலமில்லாத ஏழைகளுக்கு நிலம் வழங்கியிருக்கிறது. இன்னும் ஊக்கமாகச் செயல்பட பம்புசெட் இல்லை என்கிற குறைபாடு சொல்லப்படுகிற சூழ்நிலை இருக்கிறது. அந்த ஹரிஜனங்களுக்கு பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக்கு முன்னுரிமை தருவார்களானால் அவர்கள் உற்சாகத்தோடு பாடுபடுவதற்கு, ஏழ்மை போக்கப்படுவதற்கு ஏற்ற நிலைமை உருவாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்சார உற்பத்திக்கு இருக்கின்ற தளவாடங்களை வைத்துக் கொண்டேதான் நாம் பணியாற்ற வேண்டியிருக்கிறது. ஆனால், இன்றைக்கு இந்தத் திட்டங்களை எடுத்துக் கொள்வோமேயானால், அது தூத்துக்குடி அனல் மின் திட்டமாக இருந்தாலும் எந்தத் திட்டமாக இருந்தாலும் அவற்றைச் சரிவர நிறைவேற்ற முடியவில்லை.

தூத்துக்குடி அனல் மின் திட்டத்தை எடுத்துக் கொண்டால் அது எந்த நிலையிலே இருக்கிறது? மத்திய சர்க்காருடைய ஒத்துழைப்பு இல்லாத காரணத்தினால் அது தூங்கிக் கொண்டிருக்கிறது.

அடுத்து, கல்பாக்கம் திட்டம் 1972–73 ஆம் ஆண்டில் நிறைவேறி இருக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. ஆனால் அதன் நிலைமையைப் பார்க்கிறபோது ஒரு பெரிய கேள்விக் குறியாக இருக்கிறது. மத்திய சர்க்கார் கடைப்பிடிக்கிற நடைமுறைகளைப் பார்த்தால் அது இன்னும் 10 ஆண்டு காலமாகுமோ, 15 ஆண்டு காலமாகுமோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. கல்பாக்கம் திட்டம் நிறைவேற்றப்படாமல் இருக்கின்ற சூழ்நிலைகளை எண்ணிப் பார்க்கிறபோது சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் எனக்கு ஏற்படுகிற வருத்தத்தைத் தங்கள் மூலம் மத்திய சர்க்காருக்கு நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. வை. பாலசுந்தரம்] [1975 நவம்பர் 11

அதே போல, நெய்வேலி இரண்டாம் திட்டம். அந்தத் திட்டத்தைப் பற்றி நிச்சயம் கிடையாது. ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். இரண்டாண்டுகளுக்கு முன்னால் ஆந்திராவில் அனல் மின் திட்டம் வருமென்று யாரும் எண்ணவில்லை. ஆனால் அப்படி எண்ணிக் கூடப் பார்த்திராத திட்டம். ஆயிரம் மெகாவாட் மின்சாரம் தயாரிக்கின்ற திட்டம் இன்றைக்கு ஆந்திராவில் உருவாகும் என்ற நிலைக்கு மத்திய சர்க்கார் திட்டம் தீட்டிக் கொண்டிருக்கிறது. நாம் நிறைவேற்றுகிற திட்டங்களைக் கூட நெய்வேலி இரண்டாம் திட்டத்தை ஆந்திரப் பகுதிக்கு கொண்டு சென்று விடுவார்களோ என்ற அச்சம் ஏற்படுகிற காரணத்தினால் அந்த அச்சத்தைத் தவிர்ப்பதற்கு, அதற்கான நடவடிக்கைகளில் மத்திய சர்க்கார் ஈடுபட வேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான வேண்டுகோள் என்பதைத் தங்களின் மூலம் மத்திய சர்க்காருக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஏனென்றால் தமிழகத்திலே துரதிர்ஷ்டவசமாக வளமான நதிகள் கிடையாது. இன்றையதினம் நதி என்று சொல்லப்படக் கூடியது காவிரி ஒன்றுதான். அதுதான் தமிழகத்தை வளப்படுத்திக் கொண்டிருக்கிறது. அதற்கும் எவ்வளவோ தொல்லைகள். கர்நாடகத்தின் தொல்லை. 12 இடங்களில் அணைகள் கட்டப்பட்டு வருகின்ற காரணத்தால் எதிர்காலத்தில் காவிரியில் தண்ணீர் வராமல் வற்றி, வரண்டு, தமிழகத்தின் வளம் குன்றிவிடும் என்று சொல்லப்படுகிற அளவிற்கு காவிரி நீர்ப் பிரச்னை இருந்து கொண்டிருக்கிறது. காவிரிப் பிரச்னையில் மத்திய சர்க்கார் ஏன் இவ்வளவு அலட்சியம் காட்டி வருகிறது என்று தெரியவில்லை. தமிழகத்தில் எடுக்கப்படுகிற எந்தத் திட்டமாக இருந்தாலும், அது அனல் மின் திட்டமாக இருந்தாலும், வேறு பல திட்டங்களாக இருந்தாலும் சரி, மத்திய சர்க்கார் தன்னுடைய மாற்றாந்தாய் மனப்பான்மையைக் காட்டுகிறது; ஒரு கண்ணுக்குச் சுண்ணாம்பு, மற்றொரு கண்ணுக்கு வெண்ணெய் போடுகிற சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கிறது.



1975 நவம்பர் 11] [திரு. வை. பாலசுந்தரம்]

நான் தங்கள் மூலம் கேட்டுக் கொள்வதெல்லாம் இந்த மின்சாரத் திட்டங்களைப் பொறுத்தவரையில் தமிழகத்தில் வளமான நதிகள் இல்லை. பெரிய நதிகள் இல்லை. இப்படியில்லை யென்றாலும் தமிழகம் தன்னிறைவு பெறுகின்ற அளவிற்குப் பல செயல்களைச் செய்து கொண்டு இருந்தாலும் எதிர் காலத்தில் தமிழகம் மிகப் பயங்கரமான இருளைச் சந்திக்க வேண்டிய நிலைமை உருவாகும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதை நிவர்த்தி செய்வதற்கு மத்திய சர்க்கார் இந்த மூன்று திட்டங்களை, தூத்துக்குடி அனல் திட்டம், கல்பாக்கம் திட்டம், நெய்வேலி இரண்டாம் திட்டம் ஆகியவைகளை உடனடியாக நிறைவேற்றச் செய்தால்தான் எதிர்காலத்தில் தமிழகம் பாதிக்கப்படாமல் இருக்கும். இல்லையென்றால் இந்தத் திட்டங்கள் கைவிடப்படுமானால், தவிர்க்கப்படுமானால் எதிர்காலத்தில் தமிழகம் இருளில் மூழ்கி விடும் என்பதைத் திட்டவட்டமாக உணர்கிறேன் என்பதைத் தங்கள் மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

பல நல்ல திட்டங்கள் இன்றைக்கு நிறைவேற்றப்படாமல் இழுத்துப் பறித்துக் கொண்டிருக்கிற நிலைமை உருவாகிக் கொண்டிருக்கிறது என்பதைத் தங்கள் மூலம் அமைச்சரவர் களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நெய்வேலி இரண்டாவது திட்டத்தைப் பொறுத்த வரையில் அதற்கான பேச்சே கிடையாது. என்ன காரணம் என்று தெரியவில்லை. இந்தத் திட்டம் வருமா வராதா என்று சொல்லி விட்டாலும் பரவாயில்லை. சொல்லவும் இல்லை. இப்படி விழுங்கியும் விழுங்காமலும் உள்ள சூழ்நிலையை அகற்ற வேண்டும்.

திறமையோடு பணியாற்றுகிற இந்த அரசு சில நேரங்களில் மாறுதல் செய்யக்கூடிய சூழ்நிலை ஏற்படும்பொழுது அரசு ஊழியர்கள் இங்கிருந்து அங்கு மாற்றப்படலாம். இங்கிருந்து திறன் உள்ளவர்களை வேறு பகுதிக்கு மாற்றலாம். வேறு சிலரை இங்கு கொண்டு வந்து போடலாம். இது ஒரு கடல் போன்ற பெரிய இலாகாவாகும். எவ்வளவு பெரிய காரியங்களை செய்ய

வேண்டிய இந்த இலாகாவை இதைப் பெரிய காரியமாக எடுத்துக் கொண்டு இங்கொன்றும் அங்கொன்றும் நடக்கின்ற தவறுகளைச் சுட்டிக்காட்டி இந்த இலாகா ஊழல், பாழ் அடைந்துவிட்டது என்று சொன்னால் துறைமைக்கு முட்டுக்கட்டை போடுகிறார்கள் என்று பொருளே தவிர வேறு காரணம் இல்லையென்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

எனவே, இன்றைக்குள்ள சூழ்நிலையில் மின்சாரம் நம் நாட்டுக்குத் தேவை. அந்த மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு நாம் எடுக்கிற முயற்சிகள் அத்தனையும் தனித்தனியாக எடுக்க முடியாது. மத்திய சர்க்காரின் கூட்டுத் துணையில்லாமல் தமிழக சர்க்கார் தனி முயற்சியால் வெற்றி பெற முடியாது. எனவே, மத்திய சர்க்கார் கருணை உள்ளத்தோடு கனிவோடு சிந்தித்து இந்த மூன்று திட்டங்களை நிறைவேற்றினால் நிச்சயமாக எதிர்காலத்தில் தமிழகம் பிழைக்கும், இல்லையென்றால் சாகும் என்று கூறிக் கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

* திரு. கே. என். குமாரசாமி: மாற்றுத் தலைவர் அவர்களே, சட்ட மன்றத்தில் மின் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட அறிக்கையின் மீது சில வார்த்தைகள் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய தமிழ் நாட்டில் மின்சார வாரியம் சரியாகச் செயல்படாத காரணத்தால் இந்த மின்சார வாரியத்தில் ஏற்பட்டிருக்கிற பல பிரச்னைகள் தீர்வு பெறாமல் சிக்கலாகியிருக்கின்றன என்பது அறிக்கையைப் பார்த்தால் நன்றாகத் தெரியும். காரணம், மின்சார இலாகா எந்தப் பிரச்னையில் தன்னுடைய முழுத்திறமையையும் பயன்படுத்தி, அதன் மூலம் ஏற்படுகின்ற நஷ்டத்தை எப்படி சரிக்கட்டுவது என்பதையெல்லாம் நீண்ட ஆலோசனையின் பேரில் செய்திருக்க வேண்டும்.

இப்போதுள்ள நிலைமை எல்லாம் அனல் மின்சார நிலையங்கள், நீர் மின்சார நிலையங்கள் இந்த இரண்டிலும் மின்சார உற்பத்தி, முழு அளவுக்கு உற்பத்தி செய்கிற திறனை நாம் இதுவரைக்கும் உண்டாக்கியிருக்கிறோமா என்று பார்த்தால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். திட்டங்களை விரிவுபடுத்திக்கொண்டு



போக மத்திய அரசு பணம் கொடுக்கவில்லை, அதனால்தான் இப்படி நிலைமை இருக்கிறது என்று பேசுகிறோம். ஆனால் இருக்கிற அனல் மின் நிலையங்களின் முழு கெப்பாசிட்டியைப் பயன்படுத்திக்கொள்ள ஏதாவது ஏற்பாடு செய்தோமா என்று பார்த்தால் இல்லை. காரணம், நெய்வேலி அனல் மின் திட்டம் 650 மெகாவாட் உற்பத்தி செய்ய வேண்டும். அது 250 அல்லது 300 மெகாவாட்டைத் தாண்டியது இல்லை. என்ன காரணம்? மின் நிலையங்களின் முழு கெப்பாசிட்டியை பயன்படுத்த வாய்ப்பு உண்டாக்கியது கிடையாது. அதிலுள்ள குறைபாடுகளைப் புரிந்து கொண்டு செயலாற்ற வேண்டும். அங்கு என்ன சொல்லுகிறார்கள், யார் வேலை செய்கிறார்கள், யார் கஷ்டப்படுகிறார்கள், யார் அதற்கான முழுப் பொறுப்பை எடுத்துக்கொள்ளுகிறார்கள் என்றால் ஒன்றும் இல்லை.

இப்படிப்பட்ட நிலைமையில் உற்பத்தி பாதிதான் தொடங்கியிருக்கிறது. எண்ணூருக்கும் அதே கதிதான். 1972 ஆம் ஆண்டிலிருந்து ஏதோ ஒரு சாக்கைச் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். முழு கெப்பாசிட்டியைப் பயன்படுத்திக் கொள்வதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை. ஆகவே இப்போதுள்ள நிலைமையில் மூன்று பிரிவுகளாக பிரிக்கலாம். ஒன்று உற்பத்தி முழுத் திறனைப் பயன்படுத்தாதது. இரண்டாவது லைன் லாஸ் 26 சத விகிதம், அதைக் குறைப்பதற்கு அரசாங்கம் என்ன வழி காட்டப் போகிறதென்றால் ஒன்றுமில்லை. மூன்றாவது விநியோகத்தில் ஏற்படுகிற கோளாறு. அதில் ஏற்படுகிற நஷ்டங்கள் எல்லாம் எங்கே கொண்டு போய்விடுகிறதென்றால் மின்சாரத்தை உபயோகிக்கும் ஆட்கள் பேரில். மின்சாரத்தின் கட்டணத்தை உயர்த்தி விடுகிறோம். அவ்வாறு உயர்த்துவதற்குப் பதிலாக, மின்சார வாரியம் உற்பத்தித் திறன் [illegible] பயன்படுத்திக் கொள்ள உருப்படியான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அதைச் செய்யாமல் மின்சாரத்தை உபயோகிக்கும் நுகர்வோரின் பேரில் மின்சாரக் கட்டணத்தை உயர்த்[illegible] தீர்மானமான முடிவை மின்சார வாரியம் எடுத்து[illegible] இதைத்தான் மின்சார வாரியம் திறமையாகச் செயல்படுகிறது என்று ஆளும் கட்சி உறுப்பினர்கள் பேசுகின்றனர்.

என்ன திறமை? 1972 ஆம் ஆண்டிலிருந்து சொல்லப்பட்டு வரும் ஆலோசனைகளை ஏற்றுச் செயல்பட்டிருந்தால் இந்த லைன் லாஸ் 25 சதவிகிதத்தைக் குறைத்திருக்கலாம். அதற்கு உற்பத்தித் திறனை அதிகரித்திருக்க வேண்டும். மேலும் நமது பற்றாக்குறை 20 சதவிகிதம் என்ற நிலையில் இருக்கிறது. அதைச் சரிக்கட்ட மேலும் உற்பத்தி செய்வதற்கு மத்திய சர்க்காரை அணுகி பேசி உருவான நடவடிக்கை எடுத்திருக்கலாம். அதை விடுத்து நம்மிடம் குறை முழுவதையும் வைத்துக் கொண்டு மத்திய சர்க்கார் பணம் கொடுக்கவில்லையென்று பேசினால் இது அரசியல். லைன் லாஸ்-ஐ எப்படிச் சரிக்கட்டுவது என்பதற்கு அரசாங்கம் இன்று அறிவித்திருக்கிறது, மின்சாரக் கட்டணத்தை மாற்றி அமையுங்கள் என்று. லைன் லாஸ்-ஐ சரிக்கட்ட வேண்டுமென்றால் உற்பத்தித் திறனை அதிகரிக்க வேண்டும். அதற்கு என்ன மார்க்கம் என்று அரசாங்கம் சொல்லவில்லை.

இன்றைய நிலைமையில் விவசாயிகள் செலுத்த வேண்டிய கட்டணம் 16 பைசா. ஏற்கனவே முதலமைச்சர் அவர்களிடம் பேசி, என் விவசாயிகள் தாங்கமாட்டார்கள், என்ன காரணம் என்று சொல்லி, 1972 இல் போராடி 19 பேர் உயிர்களை இழந்து, அதன் பிறகு பேச்சு வார்த்தை நடத்தி, எவ்வாறு விவசாயிகளுக்கு நஷ்டம் வருகிறது, கட்டுப்படியாகவில்லையென்று பேசி முடிவெடுத்து ஒரு ஒப்பந்தம் செய்து, அதாவது 11 பைசாவுக்கு மேல் உயர்த்துவது இல்லையென்று முடிவு எடுக்கப்பட்டது.

தமிழ் நாடு விவசாயிகள் தங்களுடைய நிலைமைகளைச் சொல்லியும் கூட திடீரென்று எமர்ஜன்சியைப் பயன்படுத்திக் கொண்டு 16 பைசா என்று உயர்த்தினால் விவசாயிகள் எப்படி விவசாயத்தில் ஈடுபடுவார்கள்? ரூ 100 என்று இருந்த மின்சாரக் கட்டணம் ரூ. 125 ஆகியிருக்கிறது. அன்றைக்கே சொன்னோம்.

மின்சாரத் துறையில் நஷ்டம் வருகிறதென்றால், ஸ்லாப் சிஸ்டம் வைப்பது என்று முடிவு எடுக்கலாம். அதாவது 2,000 ஆயிரம் யூனிட்டுகளுக்கு மேல் அல்லது 5,000 யூனிட்டுகளுக்கு மேல் உபயோகிப்பவர்களுக்கு இவ்வளவு. அதற்குக் கீழே உபயோகிப்பவர்களுக்கு இவ்வளவு என்று நிர்ணயம்





செய்திருக்கலாம். இந்த ஸ்லாப் சிஸ்டத்தை அமல் செய்திருக்கலாம். அவ்வாறு செய்யாமல் எமர்ஜன்சியைப் பயன்படுத்தி 16 பைசா என்று சொன்னால் விவசாயிகள் எமர்ஜன்சியை எதிர்த்துப் போராட முடியாது. அவர்கள் வாயில்லா பூச்சிகள், தலைவிதி என்று உட்கார்ந்து விட்டார்கள். விவசாயம் நடக்க வேண்டாமா?

முக்கியமாக கோவை ஜில்லாவை பாதிக்கக்கூடிய சூழ்நிலை. ஸ்லாப் சிஸ்டத்தைப் பரிசீலனை செய்ய வேண்டாமா? மின்சார வாரியத்திற்கு ஏற்படுகிற நஷ்டத்திற்கு விவசாயிகள்தான் ஈடு கொடுக்க வேண்டுமா?

46 சதவிகிதம் மின்சாரம் தொழில்களுக்குப் பயன்படுகிறது. தாங்கக் கூடிய தொழில்களுக்கு மின்சாரக் கட்டணத்தை அதிகப்படுத்தலாம். அவர்கள் ஆட்சேபணை செய்ய மாட்டார்கள். விவசாயிகளுக்குப் பயன்படும் மின்சாரம் 26 சதவிகிதம். இவர்கள் எவ்வளவு நஷ்டத்தை சரிக்கட்ட முடியும். என்றால் புரிந்து கொள்ள முடியவில்லை.

ஆகவே, விவசாயிகளுக்குப் போடப்பட்டுள்ள கட்டணத்தை ஸ்லாப் சிஸ்டம் என்ற அடிப்படையில் மாதம் 2 ஆயிரம் யூனிட் வரை பழைய அடிப்படை சார்ஜ். அதற்கு மேல் புதிய சார்ஜ் என்று மனது வைத்து இந்தப் பிரச்னைக்கு ஒரு முடிவு காண வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். அப்போது ஒரு அளவு விவசாயிகளுக்கு ரிலீப் கிடைக்கும்.

சிறு தொழில்களுக்கும் மின்சாரம் வழங்குகிறோம். யூனிட் 20 பைசாவிலிருந்து 35 பைசாவாக உயர்த்தப்பட்டுள்ளது. ஒரு லேத் அல்லது ஒரு பவர் லூம் என்று ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்டிரீஸ் என்ற அடிப்படையில் வைத்திருப்பவர்கள் பரிதாபப்படுகிறார்கள். அவர்களிடம் டெப்பாசிட் வேண்டுமென்று சார்ஜ் போட்டிருக்கிறோம். இந்தப் பளுவை ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்டிரீஸ் வைத்திருப்பவர்களால் தாங்க முடியவில்லை. மிகவும் கஷ்டம் என்கிறார்கள்.

[திரு. கே. என். குமாரசாமி] [1975 நவம்பர் 11]

நாம் கேரளாவிலிருந்து மின்சாரம் எட்டுப் பைசா என்றும் கர்நாடக மாநிலத்திலிருந்து ஒன்பது பைசா என்றும் வாங்குகிறோம். எப்படி விநியோகிக்கிறோம்? 16 பைசா, 25 பைசா, 35 பைசா. இப்படி உயர்த்தினோம் என்றால் அரசாங்கம் வியாபாரம் செய்யவில்லை. வெளி மாநிலத்தில் நாம் மின்சாரம் வாங்கினாலும் நிர்வாகச் செலவுக்காக இரண்டு பைசா வைத்து அந்த அளவுக்கு நிலைமையை உருவாக்கலாம். வெளி மாநிலத்திலிருந்து குறைந்த விலைக்கு வாங்கியும் கூட இப்படிச் செய்கிறோம்.

[பிற்பகல் 12-30]

அதிலே இன்னொன்றையும் நாம் பார்க்க வேண்டும். கேரளத்தில் ஒன்பது பைசா, எட்டு பைசா என்று சொன்னால் அங்குள்ள விவசாயிகளுக்கு வருமான வரி கிடையாது. மைசூரிலும் வருமான வரி கிடையாது. அங்கெல்லாம் 12 பைசா தான். இங்கேதான் அடிஷனல் சார்ஜ் என்றால், ஒரு விவசாயி ஒரு ஹார்ஸ் பவர் என்றால் 75 ரூபாய், 10 ஹார்ஸ் பவர் என்றால் 750 ரூபாய் கட்ட வேண்டும். இப்படி இங்கு ஆகிற செலவுகளை எல்லாம் கணக்குப் பார்த்தால் கிட்டத்தட்ட ஒரு விவசாயி ஒரு மின்சார மோட்டார் பம்புக்கு கனெக்ஷன் வாங்குவதற்குள் 2,500 ரூபாய் செலவழிக்க வேண்டிவரும்.

இப்படி மின்சாரத் துறை மூலமாக ஏற்படுகிற கஷ்டங்களை எல்லாம் உடனுக்குடன் எடுத்துச் சொல்லி நிவாரணம் தேட ஒரு குழு அமைத்து அரசாங்கத்திற்கு அந்தக் குழுவுடன் நேரடியாகத் தொடர்பு இருந்தால் நன்றாக இருக்கும், உடனுக்குடன் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும்.

ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்டிரிக்கு மின்சாரக் கட்டணம் ஜாஸ்தி. அதைக் குறைக்க பரிசீலனை செய்ய வேண்டும். அதோடு மொத்தமாக 10 தொழில்களுக்குச் சேர்த்து அப்ளை செய்து விட்டால் இணைப்புக் கொடுப்பதில் தாமதம் ஆகிறது. சென்னை சீஃப் இன்ஜினியருக்கு வந்துதான் சாங்ஷன் ஆக வேண்டும் என்கிறார்கள். மிஷின்கள் வாங்கி வைத்து ஓட்ட முடியாமல் கஷ்டப்படுகிறவர்கள் நஷ்டம் அடைகிறார்கள். ஆகவே இவற்றுக்கு அதிகக் காலதாமதமின்றி கனெக்ஷன் கொடுக்க முன்வர வேண்டும்.



1975 நவம்பர் 11] [திரு. கே. என். குமாரசாமி]

இன்றைக்கு உற்பத்தி மழையினாலோ, நிலக்கரி வாராததனாலோ பாதிக்கப்படுகிறபோது அப்படி பாதிக்கப்படுவது 20 சதவிகிதம் என்றால் நமக்கு வெட்டு 40 சதவிகிதம் வருகிறது. ஏன் என்று கேட்டால் முன் ஜாக்கிரதையாக நடந்துகொள்கிறோம் என்கிறார்கள். உற்பத்திக்கும், விநியோகத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இருப்பதாகத் தெரியவில்லை. உண்மையைச் சொல்லி விட்டால் மின்சாரத்தை நம்பியிருக்கிறவர்கள் தங்களை மாற்றிக் கொள்வார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

தொழிலாளர்களுடைய பிரச்சினைகளைப் பற்றியும் இவர்கள் கையாண்டு வருகிற முறைகள் சரியானதாக இல்லை. நிரம்ப வழக்குகள் இரண்டு மூன்று வருஷங்களாகக் கிடக்கின்றன. இப்படி வீண் தகராறு செய்வதன் மூலம் உற்பத்தித் திறன்தான் பாதிக்கப்படுகின்ற சூழ்நிலை ஏற்பட்டு விடும்.

இன்றைக்குக் கல்பாக்கம் பாதிக்கப்பட்டிருக்கிறது. பாண்டியாறு, புன்னம்புழா திட்டம், நடுவட்டம் திட்டம் எல்லாம் போன ஆண்டும் வந்தது. இந்த ஆண்டும் வந்து கொண்டிருக்கிறது. மின்சார உற்பத்தியை அதிகப்படுத்தக் கூடிய திட்டங்களை விரைவுபடுத்துவதில்லை.

இப்போது நிலக்கரி கொண்டுவரக்கூட கப்பல்களை வாங்கியிருக்கிறோம். திரு. கிருஷ்ணமூர்த்தி—ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்—பேசுகிறபோது கூட தேர்தல் வருவதனால் பயந்து பலவற்றைச் சொல்லவில்லை. உண்மை விவரங்கள் தெரிந்தவர்கள் சொன்னால் தான் மின்சார வாரியத்திற்கு அவற்றைத் திருத்திக் கொள்ள வாய்ப்பு இருக்கும். என்ன காரணத்தினாலோ அவர் சொல்லவில்லை. முகதாட்சண்யத்திற்காக பார்த்துக் கொண்டு போனால் இந்த இலாக்கா சரியாகச் செயல்படாது. அரசியல் புகுந்து இந்த இலாக்காவில் பல திருவிளையாடல்களைப் புரிகிறது. அப்படியின்றி இந்த இலாக்காவின் முழுத் திறமையையும் பயன்படுத்தி காரியங்கள் நடைபெற வழி செய்ய வேண்டும்.

இன்றைக்கு வீதி விளக்குகளைக் கணக்கு எடுத்துக் காட்டுகிறார்கள். 75 சதவிகிதம் விளக்குகள் எரிகின்றன. 25 சதவிகிதம் எரியவில்லை என்கிறார்கள். பஞ்சாயத்துக்களும் எரிகிற விளக்குகளுக்குப் பணம் கட்டுகிறோம் என்றுதான் சொல்கிறார்கள். அதை இவர்கள் ஒத்துக்கொள்ள மாட்டேன் என்கிறார்கள். அவர்களையே மீட்டர் பொருத்திக்கொள்ளச் சொல்லிவிட்டால் பொருத்திக் கொள்கிறார்கள். அவர்கள் உபயோகப்படுத்திக் கொள்கிற மின்சாரத்திற்குக் கட்டணம் வசூலிக்கக் கூடாதா ? அதைச் செய்ய மாட்டேன் என்கிறார்கள்.

இன்னும் 25 சதவிகிதம் கிராமங்கள் மின் இணைப்புப் பெறவில்லையென்றால் அவை ஆதிவாசிகள், மலைவாசிகள் வாழக் கூடிய பகுதிகள்தான். உடனடியாக அவற்றுக்கும் மின்சார வசதி செய்து கொடுக்க வேண்டும். மின்சார இலாக்கா லைன் லாசைக் குறைத்து, தன்னுடைய நிர்வாகத்திலுள்ள கோளாறுகளை நீக்கி செம்மையாகச் செயல்பட வசதி செய்து கொண்டு நட்டம் வருகிறது என்றால் மின்சாரக் கட்டணத்தை உயர்த்தலாமே தவிர, அப்படியின்றி மின்சாரக் கட்டணத்தை உயர்த்த முன்வரக்கூடாது. . . .(மணி அடிக்கப்பட்டது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தொழிலாளர் நலம்-போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அவைக்கு விதி 82 இன் கீழ் ஒரு அறிக்கை அளிப்பார்கள்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : On a point of Order, Sir, we have given an adjournment motion under Rule 42 on the same subject. If the Hon. Minister were to make a statement on the same subject now, that would be depriving our right to speak on the adjournment motion.

MR. DEPUTY SPEAKER : Before the Hon. Minister makes his statement, how can the hon. Member anticipate that it is on the same subject. That is improper.



(5) அறிக்கைகள் அளித்தல்

(அ) பல்லவன் போக்குவரத்துக் கழக பேருந்து மத்திய புகைவண்டி நிலையத்திற்குள் சென்று மோதியதால் ஏற்பட்ட விபத்து குறித்து.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைக்கு—போக்குவரத்துத் துறை அமைச்சர் என்ற முறையில் ஒரு செய்தியை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இன்று பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான வடபழனி டிப்போவில் உள்ள வழித்தடம் 17 ஆம் நம்பர் பேருந்தினால்—பஸ் நம்பர் ஏ. 331, ரிஜிஸ்தர் நம்பர் எம்.எஸ்.எஸ். 6745 காலை 9½ மணி அளவில் ஒரு விபத்து நேர்ந்திருக்கிறது.

வடபழனியில் இருந்து பாரீஸ் திரும்பி வரும்போது சென்டிரல் ஸ்டேஷனுக்கு அருகில் திரும்பும்போது, டிரைவரின் கருத்துப்படி ப்ரேக் பிடிக்காததனால் வண்டி நிற்காமல் நேராக சென்டிரல் ரெயில் நிலையத்திற்குள் புகுந்து நேராக 10 ஆம் நம்பர் ப்ளாட்பாரத்தில் போய் ஒரு மேன்ஹோலில் மோதி நின்றது.

வழியில் சைக்கிளில் மீன்கூடை ஏற்றி வந்த ஒருவர் மீது மோதி அவர் மாண்டுவிட்டார். மேலும் இந்த விபத்தில் தற்போதைய தகவல்படி பதினைந்து பேர்கள் காயமுற்று இருப்பதாகவும், மருத்துவமனையில் உடனடியாகச் சேர்க்கப் பட்டிருப்பதாகவும் இருக்கிறது. அவர்களுக்குத் தகுந்த சிகிச்சையும், வேண்டிய உதவியும் செய்யப்பட்டு வருகின்றன.

பேருந்தை ஓட்டிவந்த ஓட்டுநர் முத்தையாவை விசாரித்ததில் ப்ரேக் ஃபெய்லியர் ஆனதால் விபத்து நேர்ந்துவிட்டது என்று தெரிகிறது. மேலும் விபத்தின் காரணம் குறித்து ப்ரேக் இன்ஸ்பெக்டர் ரிப்போர்ட் கேட்கப்பட்டிருக்கிறது. மற்ற விசாரணைகள் தொடரும்.

விபத்தில் மாண்டுவிட்டவரின் குடும்பத்தாருக்கும், மற்றும் காயமுற்றவர்களுக்கும் அரசின் சார்பில் நான் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறேன். விபத்து நடந்த இடத்தையும் மருத்துவமனையில் உள்ளவர்களையும் நான் நேரில் சென்று பார்த்து விசாரித்து வந்தேன்.

## (6) நடைமுறைக் கேள்வி

**ஒரு குறிப்பிட்ட பொருள் குறித்து உறுப்பினர்கள் 42-வது விதியின் கீழ் அறிவிக்கை கொடுத்திருக்கும்போது, அதே பொருள் குறித்து அமைச்சர் 82-வது விதியின் கீழ் முன்னதாக, அறிக்கை அளிக்கலாமா என்பது குறித்து.**

THIRUMATHI T. N. ANANDANAYAKI: On a point of order, Sir . . . .

MR. DEPUTY SPEAKER: No point of order.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: When we give the same matter under Rule 42 motion, the members are given an opportunity for discussion . . .

MR. DEPUTY SPEAKER: May I tell you that as far as the Chair is concerned, no such motion has been received.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: I have just given an adjournment motion regarding this matter. It must have been received.

MR. DEPUTY SPEAKER: It has not yet been received.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: I have given it about half an hour before. When Hon. Ministers are asked to make such statements, you completely take away the right of the members for discussion on the subject. Under Rule 82, there can be no discussion on the subject. But under Rule 42, there is an opportunity for discussion and we can discuss about how you are going to rectify it and how you are going to solve the problem.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, இரண்டு விதமான வாதங்கள் உண்டு. சபை நடந்து கொண்டிருக்கிறது. நான் ஸ்தலத்திற்கு நேரிலே போய் பார்த்துவிட்டு வந்திருக்கிறேன். அங்கே காயம் பட்டவர்களுக்கு ஆறுதல் சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். மாலையிலே பத்திரிகைகளிலே வந்துவிடப் போகிறது. உடனடியாக என் சபைக்குச் சொல்லவில்லையென எழுப்புவீர்களென்று சொல்கிறேன். நீங்கள் தனியாக விவாதிக்க வேண்டுமென்று சொல்கிறீர்கள். இப்பொழுதைக்கு இரண்டாவதை விட்டுவிட்டு முதல் வாதத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.



**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், இந்த 82-வது பிரிவை நல்ல முறையிலே பயன்படுத்தியிருக்கிறார் அமைச்சர். அது பாராட்டத் தக்கது. ஆனால், நம்முடைய 82-வது பிரிவிலே, அதன் பேரில் விவாதம் இல்லையென்று போட்டிருக்கிறோம். ஆகவே, இப்படிப்பட்ட சம்பவம் வருகிறபொழுது மறுநாள் ஏதாவது விவாதிக்க ஏற்பாடு செய்தால் நன்றாக இருக்கும். அந்த முறையிலே விதிகளைத் திருத்தலாம் அல்லது தாங்களே டைரக்ட் பண்ணலாம்.

MR. DEPUTY SPEAKER: It is only proper that the Hon. Minister has made a statement at the appropriate time. Therefore, there is nothing wrong in it. There is no question of taking away any of the rights of the hon. Members. If the members want to have a discussion on the matter, they may raise it tomorrow by any other means.

## 4. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1975-76 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீதான விவாதம் (தொடர்ச்சி).

**திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன்:** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கொண்டு வந்துள்ள மின்சார வாரிய நிதிநிலை மதிப்பீட்டை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் பேச ஆசைப்படுகிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பகுதியாக செங்கம் தாலுகா இருந்து வருகிறது. அந்தப் பகுதியிலே இருக்கின்றவர்களும் என்னுடைய தொகுதியிலே இருக்கின்றவர்களும் பெரும்பாலும் முழுக்க முழுக்க விவசாயத்தையே தொழிலாகக் கொண்டு நடத்தி வருகிறார்கள். எஸ்.இ. ஆபீசுக்குப் போகவேண்டுமென்றால் காட்பாடிக்குப் போகவேண்டியிருந்த நிலை மாறி இன்றையதினம் மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தைத் திருவண்ணாமலையிலே வைக்கக் காரணமாக இருந்த வாரியத்திற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், வருவாய் வாரிய அலுவலகத்தையும் செங்கம் தாலுகாவிலே அமைத்திருக்கிறார்கள். அதற்கு வருவாய் வாரியத்திற்கு எனது தொகுதியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு அக்ரிமெண்ட் செய்தும், நிலவள வங்கியில் கடன் வாங்கிய விவசாயிகளுக்கு இன்னும் மின்னிணைப்பு கொடுக்கவில்லை. அப்பகுதியில் 4, 5 ஆண்டுகளாக மழை இல்லாமல் வறட்சியாக இருந்து வருகிறது. இந்த நிலையிலும் அங்கே இணைப்பு கொடுக்கவில்லை. தற்பொழுது எல்லாப் பகுதிகளிலும் மழை பெய்திருக்கிறது. ஆனால், திருவண்ணாமலைக் கோட்டத்தைப் பொறுத்தவரையில் இன்னும் ஏரிகளுக்கும் வாய்க்கால்களுக்கும் தண்ணீர் வரவில்லை. கிணற்றிலே குறைவான தண்ணீர் தான் இருக்கிறது. ஆதலால், நஞ்சைப் பயிர் செய்ய விவசாயிகள் அதிகாலையிலே வயலுக்குப் போய், மின்சார மோட்டாரை இயக்க வேண்டியிருக்கிறது. ஆனால், ஒருசில நாட்களில் காலையிலே மின்சார வெட்டு என்று சொல்கிறார்கள். ஆகவே, காலையிலே வெட்டு இல்லாமல் மோட்டார் இயங்க வழி செய்தால், ஒழுங்கான முறையிலே நடவு செய்ய முடியும்.

எனது தொகுதியைப் பொறுத்தவரையில், பெரும்பாலும் விவசாயத்தைச் செய்து கொண்டு வருகிற காரணத்தாலே 1 மணி நேரம் மட்டும் என்று மின்சாரம் அளிப்பதால் ரொம்பக் கஷ்டமாக இருக்கிறது. எனவே, அங்கே வெட்டு இல்லாமலிருக்க வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தச்சம்பட்டியிலே சப் ஸ்டேஷன் அமைக்க வேண்டுமென்று கோரிக்கொண்டிருக்கிறோம். அந்தப் பகுதிக்கு 20 மைல் தூரத்திலிருந்து மின் இணைப்பு கிடைக்கிற காரணத்தினால் முதலிலே இருக்கிற பம்ப் செட்கள் ஓடுகின்றபொழுது, தூரமாக இருக்கிற பம்ப் செட்கள் ஓடுவதில்லை. ஓடினாலும் மோட்டார் தீய்ந்து விடுகிறது. என்னுடைய பகுதியில் இப்படி அடிக்கடி நடக்கிறது.

எனக்குச் சொந்தமாகவே 7, 8 பம்ப் செட்கள் ஓடிக் கொண்டிருக்கின்றன. அவற்றிற்குக் கூட மாதத்திற்கு ஒரு முறை நாங்கள் காயில் போட வேண்டிய நிலைமையிருக்கிறது. இதற்



கெல்லாம் காரணம், டிரான்ஸ்ஃபார்மரை மாற்ற வேண்டுமென்று
அதிகாரிகள் சொல்கிறார்கள். 100 வாட்ஸ் கப்பாசிட்டி உள்ள
டிரான்ஸ்ஃபார்மர் இருந்தால், அங்கு 150 வாட்ஸ் அளவுக்கு மின்
னிணைப்பு கொடுத்திருக்கிற காரணத்தினால் ஃப்யூஸ் போகிறது.
ஆகவே, வேறு டிரான்ஸ்பார்மர்களை வைக்கவேண்டுமென்று
அதிகாரிகள் சொல்கிறார்கள்.

எனக்கு முன்னால் பேசியவர்கள், ஊராண்மைக் கழகத்திலே
எத்தனை விளக்குகள் இருக்கின்றனவோ அத்தனை விளக்கு
களுக்கும் கட்டணம் வசூலிப்பதாகச் சொன்னார்கள். என்னுடைய
பகுதியைப் பொறுத்தவரையில், எத்தனை விளக்குகள் இருக்
கின்றனவோ அத்தனை விளக்குகளுக்கும் கட்டணம் வசூலிப்ப
தில்லை. ஊராட்சித் தலைவர்கள், 50 விளக்குகள் இருந்தால் 30
விளக்குகள் எரிந்தன என்று சொன்னால் 30 விளக்குகளுக்கு
மட்டும்தான் கட்டணம் வசூலிக்கிறார்கள்.

அதே நேரத்தில் கிராமங்களுக்கும் மீட்டர்கள் வைக்கவேண்டு
மென்று சொன்னார்கள். தண்டராம்பட்டு ஒன்றியத்தில் 4 கிராமங்
களுக்கு மீட்டர்கள் வைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு கிராமத்
திற்கும் மாதாமாதம் மீட்டர்கள் வர வர வைப்பதாக உறுதி
அளித்திருக்கிறார்கள்.

ஊராட்சி ஒன்றியக் கூட்டம் நடக்கும்பொழுது மின்சார
வாரிய அதிகாரிகள் வந்து குறைகளைக் கேட்கிறார்கள். இந்த
மாதம் குறைகளைச் சொன்னால் கேட்டுக்கொண்டு போய் அடுத்த
மாதம் வரும்போது, இத்தனை குறைகளை நிவர்த்தி செய்திருக்
கிறோம், இவை இவை நிவர்த்தி செய்யப்படவில்லையென்று சொல்
கிறார்கள் கூட்டத்திலே. அந்த ஏற்பாட்டைச் செய்ததற்காக
இந்த அமைச்சரவைக்கு நான் என்னுடைய நன்றியை மீண்டும்
கூறிக்கொள்கிறேன்.

தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கொள
மஞ்சனூர், காமாசந்தல் கிராமங்களுக்கு இன்னும் மின் இணைப்பு
கொடுக்கவில்லை. அதனால், சில விவசாயிகள் மோட்டாரைக் கூட
விற்றுவிட்டார்கள். எனவே, மின்சாரம் விரைவாகக் கிடைக்க
வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன்] [1975 நவம்பர் 11]

திருவண்ணாமலை காந்தி நகர் பகுதியில் புதிய காலனி தோன்றியுள்ளது. அந்தப் பகுதி இரயில் நிலையத்திற்கு மிக அருகிலேயே இருக்கிறது. ஆனால், அங்கு விளக்குகள் எரிவதில்லை. அதனைச் சுற்றி அரசாங்க அலுவலகங்கள் உள்ளன. அலுவலர்களின் குடியிருப்புகளும் இருக்கின்றன. அங்கு விளக்கு இல்லாத காரணத்தால் அடிக்கடி திருட்டு நடக்கிறது. ஆகவே, மின்சார விளக்குகள் எரிய வேண்டிய வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே பேசும்பொழுது உறுப்பினர்கள், விவசாயிகளுக்கு மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று சொன்னார்கள். நானும் முழுக்க, முழுக்க விவசாயம் செய்பவன். விவசாய மின் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று மட்டும் சொல்கிறார்கள். ஆனால், அதற்குத் தேவையான உபகரணங்களை எல்லாம் பார்க்கும் போது அவற்றின் விலை அதிகமாக இருக்கிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே விவசாயிகள் போராட்டத்தை கோவை மாவட்டத்திலே நடத்தினார்கள். அடுத்த வருஷமே யூரியா விலை மூட்டைக்கு 2 மடங்கு, 3 மடங்கு உயர்ந்தது. அப்பொழுது எந்தப் போராட்டமும் நடக்கவில்லை.

இதையெல்லாம் அரசியல் பிரச்னையாக வைத்துத்தான் எதிர்க் கட்சிகள் போராட்டம் நடத்துகிறார்கள் என்று நான் நினைக்கிறேன். உரத்திற்கும் அந்த விவசாயிகள் ஏதாவது போராட்டம் நடத்தியிருந்தால் மிகவும் நன்றாக இருக்கும். ஆனால், 3, 4 ஆண்டுகளுக்கு முன்பிருந்த விலையை விட, இப்பொழுது உணவுப் பண்டங்களின் விலை அதிகமாக உயர்ந்திருக்கிறது. நெல் விலை ரூ. 90 இப்பொழுது. முன்னால் ரூ. 40, 50 விலைக்கு விற்றது. அப்படி ஏற்றியதில் தவறில்லை. ஆனால், 5 ஏக்கருக்குள் நிலம் உள்ளவர்களுக்கு கட்டணச் சலுகை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்:** தலைவரவர்களே, 1975-76-ஆம் ஆண்டு மின்சார நிதிநிலை அறிக்கை மீது ஓரிரு கருத்துக்களைக் கூற நான் முற்படுகிறேன். இந்த ஆண்டு மின் வெட்டு வராது என்று அமைச்சரவர்கள் கூறியதாக நான் செய்தித்தாளில் பார்த்தேன். அதற்கு என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்



1975 நவம்பர் 11] [திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்]

கொள்கிறேன், இந்தச் சந்தர்ப்பத்தில். இன்று விவசாயிகளுக்கு அதிகப்படியாக கட்டணம் போட்டிருக்கிறார்கள். இது ஏற்கனவே இருந்த கட்டணத்தைவிட கிட்டத்தட்ட 50 சத விகிதம் அதிகமான தொகையாகும். ஏற்கனவே, விவசாயியின் உரம், விவசாயக் கூலி, மருந்து போன்றவைகள் எல்லாம் எக்கச்சக்கமாக கூடியிருக்கிற இந்தச் சந்தர்ப்பத்தில் மின்சாரக் கட்டணத்தை 50 சத விகித அளவுக்கு கூட்டுவது முறையல்ல. அதை மறுபரிசீலனை செய்து குறைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல், மின்சாரம் இல்லாத கிராமமே கிடையாது என்று கூறப்படுகிறது. ஆனால், கிராமங்களிலே சென்று பார்த் தால் கிட்டத்தட்ட 50 சதவிகிதம் தெருவிளக்குகள்தான் எரிகின்றன. அதுவும் 60 வாட்ஸ் பல்ப் 15 வாட்ஸ் வெளிச்சம் தரக்கூடிய அளவில்தானிருக்கிறது. இப்படி மின்சாரம் குறைந்து வருவதற்கு என்ன காரணம் என்று அங்கேயுள்ள அதிகாரிகளைக் கேட்டால் அவர்கள் டிரான்ஸ்பார்மர் லோட் தாங்கவில்லை. மேலதிகாரிகளுக்கு எழுதியுள்ளோம், தகவல் இல்லை, அரசாங்கத்திற்குத் தெரிவித்திருக்கிறோம் தகவல் இல்லை என்று சொல்கிறார்கள். இப்படி குறைந்த கப்பாசிடி உள்ள டிரான்ஸ் பார்மர்களைப் போடுவதால் கிராமப்புறங்களிலே உள்ள விவசாயி களுடைய மோட்டார்கள் எரிந்துவிடுகின்றன, கிராமப் பகுதி களில் உள்ள மாணவர்கள் படிக்கமுடியவில்லை, அங்கேயுள்ள தொழிற்சாலைகள் எல்லாம் இதனால் பாதிக்கப்படுகின்றன. இப்படிப்பட்ட குறைபாடுகளை நீக்குவதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சார வாரியத்திலே வேலை பார்க்கக்கூடிய லைன்மேன் போன்றவர்களுக்கெல்லாம் வருடத்திற்கு இரண்டு செட் காக்கி உடைகள், ரப்பர் கையுறை, ஸ்க்ரூ டிரைவர், கட்டிங் பிளேயர் போன்றவையெல்லாம் முன்பு வழங்கப்பட்டதாகத் தெரிகிறது; கடந்த சில ஆண்டுகளாக வழங்கப்பட்டதாகத் தெரியவில்லை. இதற்காக பட்ஜெட்டிலே பணம் ஒதுக்கப்படுகிறது. ஆகவே அந்தப் பணம் எங்கே செல்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக என்னுடைய தொகுதியிலே வீரவனூரில் இப்படியொரு குறைபாடு இருப்பதாக என்னிடத்திலே வந்து முறையிட்டார்கள், இதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சார வாரியம் மனுநீதித் திட்டம், விஜிலன்ஸ் செல் போன்ற பிரிவுகளையெல்லாம் இப்போது ஆரம்பித்திருக்கிறார்கள். இதையெல்லாம் ஆரம்பித்தவுடன் இப்போது இருக்கிற நிலைமை முன்பு இருந்த நிலைமையைவிட மாறியிருக்கிறதா என்று பார்த்தால் முன்பு என்ன நிலவரமிருந்ததோ அதே தொடர்ந்திருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் சென்னையில் உள்ள மின்சார வாரியத்தில் பணியாற்றுகிற தொழிலாளர்களுக்கு வீடு கட்டுவதற்கு பண உதவி செய்யப்படுகிறது. இதில் எந்தவிதமான முறையும் பின்பற்றப்படுவதாகத் தெரியவில்லை. 16, 18 மாதங்கள் ஆகியுங்கூட மனுச் செய்தவர்கள் பலர் காத்துக் கொண்டிருக்கிறார்கள், அவர்களுக்குப் பணம் கொடுப்பதில்லை. ஆனால் புதிதாக மனுப் போட்டவர்களுக்கு அவர்கள் வேண்டியவர்களாக இருக்கின்ற காரணத்தினால் அவர்களுக்குப் பணம் கொடுத்துவிடுவது என்ற முறை இருந்து வருகிறது. வலசரவாக்கம் பகுதியிலே சிலர் வீடு கட்டுவதற்கு அவர்களிலே சிலர் வேண்டியவர்களாக இருந்தால் பணம் கொடுப்பது வேண்டாதவர்களாக இருந்தால் பணம் வழங்குவது கிடையாது என்ற முறையில் அவர்கள் மனுக்களைத் தள்ளுபடி செய்வதாக கூறப்படுகிறது. இதையெல்லாம் விசாரிக்க வேண்டும்.

மின்சார வாரியத்தின் தலைமைச் செயலகத்திலே புதிதாக 5 செகரட்டரிகளைப் போட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. ஐந்து ஆண்டுகளுக்கு முன்பெல்லாம் ஒரு நபர் இருந்த இடத்தில் இப்போது 5 பேர்களைப் போட்டிருக்கிறார்கள். இதனால் வேலையில் எந்தவிதமான முன்னேற்றமும் கிடையாது, வீணை அரட்டை அடிக்கிற சம்பவம்தான் நடக்கிறது. திடீரென்று அமைச்சரோ அல்லது சேர்மனோ போய்ப் பார்த்தால் தெரியும் என்று சொல்லப் படுகிறது. இரண்டு மூன்று செகரட்டரிகள் போட்டால் போதும் என்பதால் அது தேவையில்லை, இந்த முறையிலே சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



இந்த விஜிலன்ஸ் செல் சரியாக வேலை செய்கிறதா என்று பார்ப்பதற்கு இன்னொரு உதாரணத்தையும் சொல்ல விரும்புகிறேன். தலைமைச் செயலகத்தில் ஒரு பெண் செக்ஷன் ஆபீஸர் அடிக்கடி லீவ் போட்டுவிட்டு வேளாங்கண்ணிக்குப் போவதாகவும் அங்கேயுள்ள டி.இ.-க்கு போன் செய்து அங்கேயுள்ள ஜீப்பை ரெடியாக தனக்கும் தன்னுடைய குடும்பத்திற்கும் வைத்திருக்கச் சொல்லிப் பயன்படுத்துவதாகவும் தெரிகிறது. மாதத்திற்கு ஒரு முறை, இரண்டு முறை இப்படிப் போவதாகத் தெரிகிறது. இதையெல்லாம் கண்டித்தால் மின்சார இலாகாவிலே உள்ள குறைகளைப் போக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) :** வேளாங் கண்ணிக்குப் போகிறார்கள் என்பது எப்படித் தெரியும்? பெர்சனல் நாலட்ஜா?

**திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் :** வேளாங்கண்ணிக்குப் போவதைப் பற்றி எனக்கு ஆட்சேபனையில்லை; ஆனால் அங்கேயுள்ள ஜீப் போன்ற வாகனங்கள் குடும்ப சௌகரியத்திற்காகப் பயன் படுத்தப்படக் கூடாது என்பதைத் தான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஆங்காங்கே கிராமங்களில் அரிசனங்கள் சிறு சிறு கோயில்களை வைத்து இருக்கிறார்கள், அவர்கள் மின்சார பல்புகளைப் போடுகிறார்கள். அதற்காக மினிமம் கட்டணம் ரூ. 9.50 கட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள். அவர்கள் 1, 2 யூனிட்தான் எரிப்பார்கள். ஆகவே அவர்களுக்கு அவ்வளவு பெரிய தொகை செலுத்துவது சிரமமான காரியமாக இருக்கிறது. ஆகவே, அரிசனங்கள் வைத்து இருக்கிற சிறு கோவில்களில் உள்ள விளக்குகளுக்கு கட்டணத்திலிருந்து விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் பணியாற்றும் மின்சார ஊழியர்களுக்கு வீடுகள் இல்லை. மின்சார வாரியத்தின் மூலமாக அந்த ஊழியர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டும். எங்களுடைய ஊரில் ஜே. இ. ஆபீஸ் இருக்கிறது, ஆனால் அலுவலகக் கட்டடம் இல்லை, ஜே. இ.-க்கு வீடு கிடையாது. ஆகவே அங்கே ஆபீஸ்,

[திரு. கி. ரா. ஆ. வெப்பிரகாசம்] [1975 நவம்பர் 11]

வீடு இவற்றைக் கட்டிக் கொடுக்க வேண்டும், டெலிபோன் வசதியும் செய்து கொடுத்தால் உடனுக்குடன் தொடர்பு கொண்டு வேலைகளை உடனடியாகச் செய்வதற்கு உதவியாக இருக்கும்.

தெரு விளக்குகளைப் பொறுத்தவரையில் மீட்டர்கள் பொருத்த வேண்டுமென்று பலரும் பல காலமாகப் பேசியிருக்கிறார்கள். அமைச்சரவர்களும் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதையும் உடனடியாக எல்லா இடங்களுக்கும் செய்ய நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்.

புதிதாக இணைப்புக் கொடுப்பதற்காக 10 ஆண்டுகளில் அந்தத் தொகையைத் திரும்பத் தரவேண்டுமென்று எஸ்டிமேட் தயார் செய்கிறார்கள். 10 ஆண்டுகளுக்குப் பிறகும் 11 ஆவது ஆண்டு அதே அளவுத் தொகையை வசூல் செய்கிறார்கள். அப்படி இருக்கக் கூடாது. அதற்கு மேல் எவ்வளவு மின்சாரம் பயன்படுத்து கிறார்களோ அந்தத் தொகையைத்தான் வசூல் செய்ய வேண்டு மென்று உத்திரவிட வேண்டும். அதோடு அதிகமாக வசூலித்த தொகையைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

புதிதாக இணைப்புக்கு எஸ்டிமேட் தயார் செய்கிறபோது டெபாசிட் கட்டச் சொல்கிறார்கள். ஆனால் புதிதாக இணைப்புக் கொடுப்பதற்குத் தேவையான வயர் போன்ற சாமான்களை யெல்லாம் டிபார்ட்மெண்ட் வாங்கிக் கொடுப்பதில்லை. அவர்களே கையிலிருந்து பணத்தைப் போட்டு வாங்கிக் கொடுக்கிறார்கள். அதற்காக டெப்பாசிட் பணத்திலிருந்து கழித்துக் கொள்வதில்லை. ஆகவே, அரசாங்கம் ஒரு நிரந்தரமான உத்திரவைப் போட்டு வயர் போன்ற சாதனங்களை தனிப்பட்டவர்கள் வாங்கிக் கொடுத்தால் அவர்களுடைய பணத்தைத் திருப்பிக் கொடுக்கிற முறையில் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

**திரு. எம். ஆர். கண்ணன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் கொண்டுவரப்பட்டிருக்கிற மின்வாரிய நிதி நிலை அறிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1975-76 ஆம் ஆண்டுக்கான
நிதிநிலை அறிக்கை மீதான விவாதம்

[1975 நவம்பர் 11] [திரு. எம். ஆர். கண்ணன்]

இந்த மாநிலத்தில் ஒரு பெரிய பொதுத் துறையாக மின்சார வாரியம் இருக்கிறது. ஏறத்தாழ ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட பணியாளர்கள் இருக்கிறார்கள். இவ்வளவு பெரிய ஒரு வாரியத்தை நிர்வகிப்பது என்றால் மிகமிகச் சிரமமான காரியம். இதிலே சில குறைபாடுகள் தோன்றுவது இயல்புதான். அந்தக் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி திருத்தி இந்த வாரியம் நல்ல முறையிலே செயல்படக்கூடிய வகையிலே கொண்டுவருவதுதான் நம்முடைய அனைவரின் கடமையும் ஆகும்.

ஆனால், இங்கே பேசிய உறுப்பினர்கள் சொல்கிறார்கள் அவர்களுடைய கிராமங்களிலே மீட்டர்கள் பொருத்த வேண்டுமென்று சொன்னால் பொருத்துவது இல்லை, ஏறத்தாழ எரியாத விளக்குகளையெல்லாம் போடுகிறார்கள் என்றும், எரியாத விளக்குகளுக்கு கட்டணம் வாங்கிவிடுகிறார்கள் என்றும் சொன்னார்கள். ஆனால் ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. ராதாகிருஷ்ணன் அவர்கள்தான், மீட்டர்கள் எங்கே பொருத்த வேண்டுமென்று சொன்னாலும் உடனே பொருத்திக் கொடுக்கிறார்கள் என்றும், எரியாத விளக்குகளுக்கு கட்டணம் வாங்குவதில்லையென்றும் சொன்னார்கள். இருபது ஆண்டுகளாக இருந்துவந்த பழக்கத்தை மாற்றி நல்லமுறையைக் கொண்டு வருகிற அரசைப் பாராட்ட வேண்டும், மனமாரப் பாராட்டா விட்டாலும்கூட சும்மா இருந்தாலும் பரவாயில்லை, இல்லாத குறைகளைக் கூறுகிறார்கள். எங்களுடைய ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்தான் உண்மையைச் சொல்ல வேண்டி யிருக்கிறது.

எதிர்க்கட்சிகள் மக்களுடைய வாக்குகளைப் பெற்று தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் மக்களுடைய குறைகளைச் சொல்ல வேண்டும். அதே நேரத்திலே சொல்ல வேண்டிய உண்மைகளை மறைக்காமல் சொல்லியாக வேண்டும். அப்படி உண்மையைச் சொல்லாமல் இருக்கிறார்களே என்பதற்காக நான் மிகவும் வருத்தப்படுகிறேன். இங்கே கொஞ்ச நேரத்திற்கு முன்னால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு அறிவிப்பைத் தந்தார்கள். . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அது வேண்டாம், நீங்கள் எலக்ட்ரிசிடி போர்டு விவாதத்திற்கு வாருங்கள்.

**திரு. எம். ஆர். கண்ணன்:** ஒரு அறிவிப்பைத் தந்தார்கள். காஞ்சியிலே ஏற்பட்ட ஒரு நிகழ்ச்சியைப் பற்றி அவர்களே போய்ப் பார்த்து விவரங்களை இந்தச் சபைக்கு தருகிறார்கள். உண்மையிலேயே எதிர்க்கட்சிக்காரர்கள் அதைப் பாராட்ட வேண்டும், இல்லாவிட்டால் சும்மா இருக்க வேண்டும். ஒரு ஜனநாயக அமைப்பிலே உள்ள தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த உறுப்பினர்கள். . .

**திருமதி த. ந. அனந்தநாயகி:** பாயின்ட் ஆப் ஆர்டர், சார். உங்களுக்கு விளங்கவில்லை, விளங்கியிருந்தால் இப்படிச் சொல்லமாட்டார்கள். அவர்கள் ஸ்டேட்மெண்ட் கொடுக்கட்டும், யாரும் மறுக்கவில்லை. ஆனால் அதைப்பற்றி விதி 82 இன் கீழ் அறிக்கை கொடுத்தால் அதன்மேல் டிஸ்கஸ் பண்ண முடியாது. விதி 42 இன் கீழ் இதைக் கொண்டுவந்தால் விவாதிக்கலாம். ஏதோ பிரேக் பெய்லியர் என்று சொல்லி அதனால் இப்படிப்பட்ட விபத்து ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். மக்கள் பிரதிநிதியாக இருப்பதால்தான் விதி 42 இன் கீழ் விவாதிக்க வேண்டும் எனக் கேட்டிருக்கிறோம். ஆக, அவர்கள் விதி 82 இன் கீழ் அறிக்கை கொடுத்ததை யாரும் ஆட்சேபிக்கவில்லை.

[பிற்பகல் 1.00]

**திரு. கு. காமாட்சி:** மக்கள் பிரதிநிதிகள் என்றால் அம்மையார் ஒருவர்தான் மக்கள் பிரதிநிதியா? மக்கள் பிரதிநிதிகள் என்றால் எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் மட்டும்தானா? அவர்களெல்லாம் ரோட்டிலே இருப்பவர்கள்மாதிரியும், நாங்கள் அறையிலேயே இருப்பவர்கள், ஒன்றும் விஷயம் தெரியாது என்பதுமாதிரியும் பேசுவது சரியா?

**திருமதி த. ந. அனந்தநாயகி:** எல்லோரையும் சேர்த்துத்தான் சொல்கிறேன். நீங்கள் மட்டும்தான் மக்கள் பிரதிநிதிகள் மாதிரியும், நாங்கள் வேறு பிரதிநிதிகள்மாதிரியும் பேசுவது பொருத்தமா? எல்லோருமே ஓட்டு வாங்கித்தான் வந்திருக்கிறோம். நீங்கள் புரிந்து கொண்டது அப்படி இருக்கிறது. நீங்களும் எழுந்து கேளுங்களேன். 42-லே கொடுங்களேன். யார் வேண்டாமென்று சொன்னார்கள்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர்கள் என்னைப் பார்த்துப் பேச வேண்டும். நீங்களே ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டு ஏன் பிரச்னையை வளர்க்கிறீர்கள்?

**திரு. எம். ஆர். கண்ணன்:** ஏதாவது நாம் சொல்ல வேண்டும், நாம் சொல்லி பத்திரிகைகளிலே வர வேண்டும் என்று நினைக்கிறார்கள். இத்தனை ஆண்டு உங்கள் கால ஆட்சியிலே இதுமாதிரி ஏதாவது ஸ்டேட்மெண்ட் கொடுத்திருக்கிறார்களா? ரிக்கார்டைப் பாருங்கள். ஆனால் இவர்கள் இதைச் செய்கிறார்கள் என்றால் பாராட்டாமல் இருக்கிறீர்கள்.

அந்த முறையிலே மின்சார வாரியம் மிக மிகத் திறமையாகச் செயல்படுகிறது. இதை அனாவசியமாக குறை கூறுகின்றவர்கள் ஏதாவது நல்ல திட்டத்தைச் சொன்னார்களா என்றால் ஒருவர் கூடச் சொல்லவில்லை. இப்பொழுது நமக்குள்ள தேவைக்கும் உற்பத்தியாவதற்கும் வித்தியாசம் இருக்கிறது. அதை நாங்கள் ஒத்துக்கொள்கிறோம். அதை எப்படிப் பூர்த்தி செய்வது? அது தொடர்பாகச் சில திட்டங்கள் சொல்லியிருக்கிறோம். மேற்கொண்டு சில ப்ரப்போசல்களைக் கொடுத்திருக்கிறோம். இதற்கெல்லாம் 'கவர்ன்மெண்ட் ஆஃப் இந்தியா' அனுமதி தர வேண்டும். அவைகள் பூர்த்தியாக பல ஆண்டுகள் ஆகும். நீங்கள் அதுமாதிரி ஏதாவது ஐடியா வைத்திருந்தீர்கள் என்றால் அவைகளைச் சொல்லுங்கள். குறைகள் இருந்தால் அவைகளைச் சொல்லுங்கள். ஆனால் குறை இல்லை. அட்மினிஸ்ட்ரேட்டிவ் டிஃபெக்ட்ஸ் ஒன்றிரண்டு இருக்கலாம், அதை ரெக்டிஃபை செய்ய வேண்டியது கடமை.

டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள், ஸ்பெஷல் ஆபீசர் போட்டிருக்கிறார்கள், அவர் வாரியத்தின் சேர்மனைக் காட்டிலும் பெரிய தலைவராக ஆகிவிடுகிறார் என்று. இதைப்பற்றி உண்மையில் விசாரித்துப் பாருங்கள். வாரியத்திற்கு ஏராளமான வேண்டுகோள்கள் பொதுமக்களிடமிருந்து வருகின்றன. அவைகளுக்கான பதில்களை நிர்வாகிகள் உடனடியாகச் சொல்லி விட்டால் நிச்சயமாக எம். எல். ஏ க்களுக்குக் கூட அதிகமாக வேலையிருக்காது. ஆனால் அப்படி இருப்பதில்லை. ஆகவேதான் அதிகாரியைப் போட்டு உடனடியாக, மூன்று, நான்கு, ஐந்து

நாட்களுக்குள் பதில் அனுப்பிவிடுகிறார்கள், பதில் கேட்டு வாங்கி அனுப்புகிறார்கள். அது சிறப்பான பணி, நல்ல பணி. அதைப் பாராட்ட மனம் வரவில்லை.

ஏதோ சேர்மனின் மரியாதையைக் குறைத்து விடுகிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் உண்மையில் பார்த்தால் அதனால் சேர்மனுக்கு வேலை குறைகிறது, அவரே எல்லா பெட்டிஷன் களுக்கும் பதில் எழுதிக் கொண்டிருக்க அவசியமில்லாமல், இதுமாதிரி வைத்து பதில் சொல்வது மிக மிகத் தேவையானதாகும். இதுபோன்றுதான் இருக்க வேண்டும். இதில் ஏதாவது குறையிருந்தால் சொல்லுங்கள். உடனுக்குடன் பதில் தருவதுகூடவா குறை?

மனுநீதித் திட்டம் என்கின்ற திட்டம் கொண்டுவரப்பட்டது. அதை அண்ணா அவர்கள் கொண்டு வந்தார்கள். அது ஜனநாயகத்தில் ஒரு நல்ல கண்டுபிடிப்பு. அதன் மூலம் மக்கள் தங்கள் குறைகளை தகுந்த அதிகாரிகளிடத்தில் சொல்லி அந்தக் குறைகளைப் போக்கிக் கொள்ளலாம். அந்த முறையிலே பல துறைகளிலேயும் இருந்து வந்திருக்கிறது. இப்பொழுது மின்சாரத் துறையிலேயும் வைத்திருக்கிறார்கள். அதைப் பாராட்ட வேண்டும். குறைகளைக் கேட்டு உடனடியாகப் பதில் கொடுக்கின்ற முறையினால் மக்களுடைய குறைகள் தீர்க்கப்படுகின்றன. இதுபோன்ற புதுப்புது வேலைகளையும், நல்ல பணிகளையும் இந்த வாரியம் ஆற்றி வருகிறது. இவைகளையெல்லாம் பாராட்டா விட்டாலும் குறைகள் சொல்வதையாவது கொஞ்சம் குறைத்துக் கொள்ள வேண்டும்.

என்னுடைய பகுதியாகிய ஜார்ஜ் டவுனிலே 33 கே. வி. சப்-ஸ்டேஷனும், அடிஷனல் சப்-ஸ்டேஷனும் தேவையாக இருக்கிறது. செக்ரட்டேரியட், ஹைகோர்ட், ஜெனரல் ஹாஸ்பிடல் போன்ற பெரிய நிறுவனங்கள் இருக்கின்றன. அடிக்கடி கரண்ட் ஃபெயிலியூராகிறது. ஹைகோர்ட் பகுதியில் சிறு இடத்தை வாங்கி சப்-ஸ்டேஷன் அமைக்க முயற்சி யிருப்பதாகத் தெரிய வருகிறது. அது உடனடியாகக் கிடைப்பதற்கு சர்க்கார் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



ஜார்ஜ் டவுன் போன்ற இடங்களுக்கு சில சமயங்களில் பணம் கேட்டால் கிடைக்க மாட்டேனென்கிறது. எனவே, 10 இலட்சம் ரூபாயை வாஷர்மென்பேட், ஜார்ஜ் டவுன் போன்ற இடங்களில் அபிவிருத்தி செய்வதற்காக ஸ்பெஷல் கிராண்டாக ஏற்படுத்தித் தரும்படி அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

டிரான்ஸ்பார்மர்களை சிலயிடங்களில் நல்லமுறையில் பொருத்த வேண்டியுள்ளது. சிலயிடங்களில் பொருத்தினால் தனிப்பட்ட வீட்டுக்காரர்களும், மற்றவர்களும் அதை எதிர்த்து கோர்ட்டுக்குச் செல்கிறார்கள். அது அப்படியே நிற்கிறது, பல ஆண்டுகள் ஆகிறது. இதைத் தவிர்க்க நம்முடைய சீஃப் எஞ்சினியர்களில் ஒருவர் இருக்கிறார், அவரிடம் பிரையர் பர்மிஷன் வாங்கி இதுபோன்ற டிரான்ஸ்பார்மர்களை அமைத்து விட்டால் மேற்கொண்டு கோர்ட்டுக்குச் செல்ல முடியாத நிலையை ஏற்படுத்த முடியும். அவ்வாறு ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

Theft of copper and other parts நிறைய இருக்கிறது. அதை யாரும் ஒன்றும் செய்ய முடியவில்லை. வாரியத்தினாலும் முடியவில்லை. அவர்கள் போலீசுக்கு ரிப்போர்ட் செய்கிறார்கள். போலீசின் கோவாப்பரேஷன் இருந்து அதைக் கண்டுபிடித்து அவர்களுக்கு பனிஷ்மெண்ட் சிவியராக இருந் தாலொழிய இதை நீக்க முடியாது.

அடுத்து, சப்ளை ஃபார்ம்ஸ்களைப் பொறுத்தவரையில் எடுத்துக் கொண்டால், அந்த ஃபார்ம்ஸ் இனமாகக் கொடுக்கப்படுகிறது. அதில் டிபார்ட்மெண்டுக்கு அதிக வேலைகள் இருக்கின்றன. எஸ்டிமேட் பார்ப்பது போன்ற பல வேலைகளைச் செய்கிறார்கள். சிலபேர் சப்ளை வாங்குகிறார்கள், சிலபேர் வாங்காமல் இருக்கிறார்கள். அப்படி சப்ளை வாங்காமல் விட்டு விட்டால் இலாக்காவின் உழைப்பு வீணாகி விடுகிறது. எனவே, இனிஷியல் பீஸ் 10 ரூபாய் என்று வைத்தால், அவர்கள் பணம் கட்டும் பொழுது அதில் கழித்துக்கொள்ளலாம். இதனால் ஃபார்ம்ஸ் வீணாக்கப்படுவதைத் தவிர்க்கலாம், டிபார்ட்மெண்டின் உழைப்பும் வீணாகாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஃபீல்ட் ஒர்க்கர்ளைப் பற்றி எடுத்துக்கொண்டால், அவர்களுக்கு ஸ்பெஷல் செக்யூரிட்டி ரிலீஃபாக ஏதாவது கொடுத்தால்கூட நல்லதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏ.ஈ. ஆபீசிலே அவர்களுக்கு ஸ்டெனோ டைபிஸ்ட் கொடுத்தால் நலமாக இருக்கும். அவர்களுக்கு அதிக வேலையிருக்கிறது. பல வேலைகளை அவர்கள் கையால் எழுத வேண்டியிருக்கிறது. உண்மையிலேயே அவர்களால் முடியாத நிலைமையிருக்கிறது. அதற்கு அதிகப் பணம் செலவானாலும்கூட அவர்களுக்கு ஒரு சௌகரியத்தைக் கொடுத்தால் அட்மினிஸ்ட்ரேஷன் நல்லமுறையில் இயங்க முடியும்.

சில நேரங்களில் டிஸ்கனெக்ஷன் செய்துவிடுகிறார்கள். ஆனால் பணத்தைக் கட்டியவுடன் மீண்டும் இணைப்பு கொடுக்கப் படுவதில்லை. அதற்கு மெசஞ்சர் போட்டாவது கனெக்ஷன் கொடுக்க வழி செய்ய வேண்டும். சில அதிகாரிகள், யார் போய் பணம் கட்டுகிறார்களோ அவர்களையே திரும்பவும் ரீ-கனெக்ஷன் கொடுக்கும் ஆபீசுக்கு அனுப்புகிறார்கள். இதனால் பொதுமக்கள் கஷ்டப்படுகிறார்கள். செம்பியம் பகுதியிலே அப்படியிருக்கிறது. அதை நீக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிப் பல துறைகளிலேயும் மின்சார வாரியம் மிக மிக நல்ல முறையில் இயங்குகிறது. அந்த வாரியத்திற்கு நம்முடைய நல்லெண்ணத்தைத் தெரிவித்து அது வளர்வதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும். அப்படியின்றி இல்லாத குறைகளைச் சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது. விவசாயிகளைப் பற்றிச் சொல்லி சார்ஜை உயர்த்தி விட்டார்கள் என்று ஆர்ப்பாட்டமே செய்தார்கள். இந்த ஆட்சியை எதிர்க்க வேறு வழியேயில்லை என்று கருதி இப்படியாவது எதிர்த்துச் செய்யலாம் என்று அவர்களெல்லாம் சேர்ந்து—அவர்களுக்குள் ஒற்றுமை இருக்கிறதோ இல்லையோ—முயற்சித்தார்கள். எல்லா முயற்சிகளிலும் தோல்வியுற்றார்கள். எதைச் சொல்லி ஓட்டு கேட்பது என்ற நிலை. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னார்கள் ஏதோ எலக்ஷன் டைம் என்று. அவர் எங்கள் கட்சியின் கொள்கையையே ஃபாலோ பண்ணுவதில்லை, சிம்பதைசர். . .

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** பாயிண்ட் ஆஃப் ஆர்டர், சார்.





**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** பாயிண்ட் ஆஃப் ஆர்டர், சார். என்னவோ தெரியவில்லை. காலையிலே ஆரம்பித்ததிலிருந்து கண்ணன் அவர்கள் லயனை விட்டுப் போய்க் கொண்டே இருக்கிறார்கள். (குறுக்கீடு) எப்பொழுதும் அப்படித் தானா? எனக்கு அதிகம் தெரியாது. அவர் பட்டினத்துக்காரர். நான் இந்த இலாக்காவிலே செய்ய வேண்டிய சில திருத்தங்களைச் சொன்னேன். அதில் நான் பேசியது ஏதாகிலும் தவறு என்றால் பரவாயில்லை. எடுத்தவுடனேயே அவர் சரியாகப் பேசவில்லை என்று மெம்பர் சொல்ல வேண்டியதில்லை, அதை தலைவர் சொல்லிக்கொள்வார்.

**திரு. எம். ஆர். கண்ணன்:** எலக்ஷன் டைம் என்று சொல்கிறாரே, என்ன செய்யவில்லை? எல்லாவற்றையும் நான் சொல்கிறோம். குறை இருக்கிறது, பணம் போதவில்லை. முதல்வர் என்ன சொல்கிறார்? இருக்கிறவரையிலும் செய்திருக்கிறோம், முடிந்தவரையிலே செய்திருக்கிறோம், 'மோர் பவர்ஸ்' இல்லை, 'ட்யூ பவர்ஸ்' இருந்தாலும் போதும் என்று சொல்கிறார்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** பாயிண்ட் ஆஃப் ஆர்டர், சார். கனம் உறுப்பினர் திரு. எம். ஆர். கண்ணன் அவர்கள் கிருஷ்ணமூர்த்தி பேசியது தன்னுடைய கட்சியின் கொள்கை இல்லை என்று சொல்கிறார்கள். அதில் எது உண்மை? அவர் பேசியது கட்சியின் கொள்கையா அல்லது கண்ணன் பேசியது கட்சியின் கொள்கையா? இந்த நிலைமையைத் தெளிவுபடுத்தினால் நலமாக இருக்கும்.

**திரு. எம். ஆர். கண்ணன்:** அவர் பெரிய பக்தர் மாதிரி பேசுகிறார். எங்கள் கட்சிக்கு பிடிப்பது இல்லை. கட்சியின் சிம்பதைசராக இருக்கலாம்.

**திரு. எம். சுரேந்திரன்:** சார். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். திருமதி சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

**திருமதி சத்தியவாணிமுத்து:** துணைத் தலைவர் அவர்களே, ஒரு சுவையான விவாதத்தின்போது நான் இடைமறித்துப் பேசுகிறேன். அதை இன்னும் சற்று நேரம் கூட நீடித்திருக்கலாமே என்று ஆசைப்படுகிறேன். கட்சிக்காரர்கள் இரண்டு பேர்—ஆளும் கட்சி உறுப்பினர்கள்—பேசிக் கொள்ளுகிறார்கள். அதைப் பற்றி நான் சொல்லுவது சற்றுப் பொருத்தமாகக் கூட இருக்கும் என்றாலும் நீங்கள் பேச அனுமதிக்கமாட்டீர்கள் என்ற காரணத்தால் நான் பேச வேண்டிய பொருளுக்கு வருகிறேன்.

இந்த விவாதத்தைத் துவக்கி எங்கள் மத்தியில் அமைச்சர் அவர்கள் அறிக்கைகளைக் கொடுத்திருக்கிறார்கள். அமைச்சர் அவர்களுடைய அறிக்கையில் 7-வது பத்தியில்—

“. . . . . வேளாண்மைக்கான மின் கட்டணம் யூனிட்டுக்கு 16 காசு என்று உயர்த்தப்பட்டுள்ளது. இப்படியெல்லாம் செய்தும் கூட, 1975–76 இல் எதிர்பார்க்கப்படுகிற கூடுதல் வருவாயைக் கொண்டு, 1975–76 இல் தேய்மானச் செலவுகள் மற்றப்படி வட்டி கட்டுதல் போன்ற செலவினங்களை முழுமையாகச் சமாளிக்க முடியாத நிலையில் நிதிப் பற்றாக்குறை இருக்கும்” என்று கூறியிருக்கிறார்கள். 16 காசு யூனிட்டுக்கு என்று உயர்த்தியதை எதிர்க்க வேண்டுமென்று எதிர்க்கட்சிக்காரர்கள் நினைத்தாலும் மத்திய அரசு அப்படி உயர்த்த வேண்டுமென்று கேட்டது, எனவே உயர்த்தினோம் என்ற பதில் வரும் என்ற காரணத்தால் அதை நாங்களும் இன்று ஒத்துக்கொள்ளுகிறோம். அப்படி உயர்த்தியும் கூட நிதிநிலை பற்றாக்குறையாக இருக்கிறது என்று கூறப்படுகிறது.

இருபது அம்சத் திட்டத்தை எடுத்து விளக்கி இந்த நாடு அவற்றை ஏற்றுக்கொண்டு வேகமாகச் செயல்பட வேண்டுமென்று கேட்ட பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் ஸ்டேட் கவர்ன்மெண்டில் இருக்கிற எலக்ட்ரிசிடி போர்டை ஸ்ட்ரீம் லைன் பண்ண வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள்.

அதுபோன்ற பல கருத்துக்கள் இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லப்பட்டன. கடந்த ஆண்டும், இந்த ஆண்டும் பல பேர் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்த இலாகாவில் பல தவறுகள்



நடைபெறுகின்றன, சீர்திருத்தங்கள் செய்ய வேண்டும், பல ஒழுங்கீனங்களைக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வர வேண்டும்; பல கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது, அவற்றுக்கெல்லாம் யார், எவர் பொறுப்பு என்று பார்த்து, தாட்சண்யம் இல்லாத அளவுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற முறையிலே பல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள்.

இந்த இலாகாவில் உள்ள குறைகளைக் கண்டுபிடித்து நிறைவு செய்வதற்கான காரியங்களைச் செய்ய வேண்டும், சரியான முறையில் செயல்படுத்த வேண்டும் என்று—இப்போது அப்படி அதிகாரிகள் இல்லை என்று எண்ணியோ என்னவோ—ஓய்வு பெற்ற அதிகாரியை மீண்டும் கொண்டு வந்து போட்டு சீர்திருத்த வேண்டுமென்ற எண்ணத்தில் செயல்பட்டு வருவதாகக் காண்கிறோம்.

இதற்காக விஜிலென்ஸ் என்று தனியாகப் பிரித்து ஏற்பட்ட திருட்டுக்களையும், தவறுகளையும் கண்டுபிடிக்க வேண்டுமென்று போட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால் கூறப்படுகிற குற்றச்சாட்டுகள், ஏற்படுகின்ற நஷ்டங்கள் சாதாரணமாக ஒருசில ரூபாய்களா என்று பார்த்தால், இல்லை. பல கோடிக்கணக்கான ரூபாய்கள் இந்தப் பொது நிறுவனத்தால் நஷ்டமாக்கப் பட்டிருக்கிறது, களவாடப்படுகிறது, திருடப்படுகிறது என்றெல்லாம் இந்த மன்றத்தில் பல முறை கூறப்பட்டிருக்கிறது.

களவையோ, திருட்டையோ கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு நம்முடைய மாநிலத்திலுள்ள போலீஸ் இலாகா சோடை போனது அல்ல. ஸ்காட்லண்ட் யார்டுக்கு அடுத்து பெருமை வாய்ந்த ஒரு போலீஸ் இலாகா இது. அப்படிப்பட்ட இலாகா, நம்முடைய மாநிலத்திலிருந்து கோடிக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள திருட்டு, களவை, குறிப்பாக இந்தத் துறையில்—அதிலும் இது, உணவு, உடை எந்த அளவுக்கு மனிதனுக்கு முக்கியமோ அப்படி இந்த ஒளியும் முக்கியம் என்ற வகையில், ஒளி மாத்திரமல்லாது இதனால் உணவு உற்பத்தி, தொழில் உற்பத்தி அதிகரித்து மக்களை வாழவைக்கக்கூடியது என்ற வகையில் உள்ள இந்த முக்கியமான துறையில் கோடிக்கணக்கான ரூபாய் நஷ்டமாகும் வகையில் திருடு போகிறது என்றால் பிரசித்தி பெற்ற நம்முடைய போலீஸ்

இலாகா ஏன் இதைக் கண்டுபிடிக்கக் கூடாது? இதிலே களவு, திருட்டு என்றால் இராக்காலத்தில் தூக்கிக் கொண்டு போகிற களவு இல்லை. அரசாங்கத்தில் இருக்கிறவர்களும் உடந்தையாக இருந்தால்தான் அந்தக் களவுகள் நடைபெறும் என்பதையும் பலர் சொல்லுகிறார்கள். அதிலே நான் குறிப்பிட்டுச் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

எனர்ஜி தெஃப்ட் பற்றிச் சொல்லும்போது 10 கோடி ரூபாய்க்கு மேல் களவு போயிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். மீட்டர் மூலமா மின்சாரம் எடுக்கப்படுகிறது? இல்லை. ஆர். சி. போஸ்டிலிருந்து இரண்டு ஒயர்கள் மூலமாக நேரடியாக மின்சாரத்தைத் திருடுகிறார்கள். யார் திருடுகிறார்கள்? ரைஸ் மில் ஓனர்கள், பாக்டரி ஓனர்கள், பெரும் நிலச்சுவான்தார்கள், பெரிய பெரிய முதலாளிகள் இந்தக் களவுகளைச் செய்கிறார்கள். யாருக்கும் தெரியாமல் இந்தத் திருட்டைச் செய்ய முடியாது. இந்த இலாகாவில் உள்ளவர்களைக் கொண்டு அதிலும் கொஞ்சம் திறமையானவர்களைக் கொண்டுதான் செய்ய முடியும்.

அப்படிச் செய்து பல கோடி ரூபாய் அளவுக்கு எனர்ஜி திருட்டைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இது ஊருக்குத் தெரிந்த உண்மை. அதிகாரிகள் என்ன செய்கிறார்கள்? போலீஸ் என்ன செய்கிறது? ஒரு நாளா, இரண்டு நாட்களா? எனர்ஜி தெப்ட் பற்றிப் பல முறை இந்த மன்றத்தில் பேசப்பட்டிருக்கிறது. இதற்காக விஜிலென்ஸ் பிரிவு போடப்பட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். என்றைக்கு இது செயல்படப் போகிறதோ தெரியவில்லை. இது கண்டுபிடிக்க முடியாத காரியமா? உறுதியாகச் சொல்லுகிறேன், இது கண்டுபிடிக்கக்கூடிய காரியந்தான். ஆனால் யாரை யார் கண்டுபிடிப்பது? தொழிலாளி செய்தால் அதிகாரி கண்டுபிடிக்கலாம். அதிகாரி செய்தால் மேல் மட்டத்தில் இருக்கிற அமைச்சர்கள் அல்லது மேலதிகாரிகள் கண்டுபிடிக்கலாம். ஆனால் எல்லோரும் சேர்ந்து செய்யக்கூடிய காரியத்தை யார் கண்டுபிடிப்பது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எல்லோரும் சேர்ந்து என்பதிலே அமைச்சரையும் சேர்த்துக் கொண்டார்கள். பத்து கோடி





ரூபாய்க்கு எனர்ஜி திருட்டு நடைபெறுகிறது என்று சொல்லவில்லை. பத்து கோடி ரூபாய் எனர்ஜி லாஸ்; அதிலே ஒருசில பர்சன்ட் திருட்டு. பத்து கோடி ரூபாயும் எனர்ஜி திருட்டு என்று சொல்லப்படவில்லை.

திருமதி சத்தியவாணிமுத்து: அமைச்சர் அவர்களே நேரடியாகப் போய் ஆர். சி. போஸ்டிலிருந்து டைரக்ட் கனெக்ஷன் கொடுக்கிறார்கள் என்று சொல்லிவிட மாட்டேன். அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். அவர்களுக்கு இந்தச் செய்திகள் தெரிகின்றன. அவர்கள் நடவடிக்கை எடுக்க அஞ்சுகிறார்கள். காரணம் என்ன? அந்த ரைஸ் மில் ஓனர்கள், பாக்டரி ஓனர்கள் எல்லாம் . . . . .

திரு. கு. காமாட்சி: பாயின்ட் ஆப் ஆர்டர் சார். அம்மையார் அவர்கள் தங்களுடைய அனுபவத்தைச் சொல்லுகிறார்களா?

திருமதி சத்தியாவணித்து: நான் அமைச்சராக இருக்கும் போது பல பேரைக் காப்பாற்றியிருக்கிறேன். கட்சிக்காரர்கள் என்று சொல்லி ஊழல் செய்தவர்களைக் காப்பாற்றி இருக்கிறேன் என்று உங்களுக்காகச் சொல்லுகிறேன்; நீங்கள் கேட்டதற்காகச் சொல்லுகிறேன்; ஆனால் அது உண்மையல்ல; நான் அப்படிச் செய்தது இல்லை.

(திரு. எம். ஆர். கண்ணன் நின்று கொண்டிருந்தார்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் கண்ணன், உட்காருங்கள்.

திரு. கு. காமாட்சி: இவர்கள் உடந்தையாக இருந்தார்களா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சருக்குப் பொறுப்புக் கிடையாது என்றுதான் சொல்லுகிறார்கள்.

திருமதி சத்தியவாணிமுத்து: அமைச்சர் நேரடியாகப் போய்க் கேட்க முடியாது. லைன் லாஸ், தெப்ட் பற்றியெல்லாம் விளக்கமாகச் சொன்னார்கள். தெரியாமலா சொன்னார்கள்? தெரிந்துதான் சொன்னார்கள். அவருக்குத் தெரியவில்லை என்று

சொல்லி எப்படித் தப்பித்துக் கொள்ள முடியும்? தெரிந்தும் ஏன் நீங்கள் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கூடாது என்றுதான் கேட்கிறேன்.

ஏறத்தாழ 440 சப் ஸ்டேஷன்களில் புதிய மெட்டீரியல்சை, ஒயர்கள், அலுமினியம் ராட்ஸ் ஆகியவற்றை 4 கோடி ரூபாய்க்கு மேல் வாங்கிப் போட்டு உபயோகப்படாதவை என்ற முறையில் அப்படியே போட்டு வைத்திருந்து திருடு போயிருக்கிறது. அம்மையார் அவர்கள் 15 கோடி என்று கூறுகிறார்கள்; எனக்குக் கிடைத்த தகவல் 4 கோடி என்பது. ஏன் சப் ஸ்டேஷன்களில் உபயோகப்படுத்தவில்லை? ஏன் வேண்டாத சாமான்களை வாங்க வேண்டும்? ஏன் அவற்றை விற்று விடக்கூடாது? அவை திருடு போய்விடுகின்றன. அதை எதிர்க்கட்சிக்காரர்கள் சுட்டிக் காட்டுகிறோம். அதைச் சுட்டிக் காட்டும்போது என்ன, என்ன என்று எங்களையே திருப்பித் திருப்பிக் கேட்டால் நாங்கள் என்ன சொல்ல முடியும்? குறைகளைச் சுட்டிக் காட்டுகிறோம், நீங்கள் பரிசீலனை செய்யுங்கள். தூய்மைப்படுத்திக் கொள்ளுங்கள். இவ்வளவு பெரிய குறைபாடுகளை, மக்களின் வரிப்பணம் கோடிக் கணக்கான ரூபாய் விரயமாக்கப்படுகிறது என்பதைக் கேட்கக் கூடாதா?

எதிர்க்கட்சியினர் மட்டுமல்ல, ஆளும்கட்சியைச்சார்ந்தவர்களும் சொன்னார்கள். திரு. எம். ஆர். கண்ணன் அவர்கள் பேசினார்கள், திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசினார்கள். எல்லோரும் பேசுகிறார்கள், நாங்களும் பேசுகிறோம்.

அடுத்து, காண்ட்ராக்ட் லேபர் என்று கொடுக்கிறார்கள். இருபது முப்பது மீட்டர்களுக்கு கேபிள் போடுகிறார்கள். பத்து மீட்டர்களுக்கு போட்டுவிட்டு 50 மீட்டர்களுக்குப் போட்டதாக பில் போடுகிறார்கள். இதற்கு செக்ஷன் ஆபீசர் கையெழுத்து போடுகிறார். போட்டுவிட்டு பணத்தை வாங்கிக்கொண்டு போகிறார். ஏன் இவர்களைத் தவறு செய்ய விட வேண்டும்? இருபது மீட்டர்களுக்கு கேபிள் போடுவது. பிறகு 50 மீட்டர்களுக்குப் போட்டேன் என்று பில் போடுவது, செக்ஷன் ஆபீசர் அதை ஒத்துக்கொண்டு கையெழுத்து போடுவது, போட்டுவிட்டு,



பணத்தை வாங்கிக் கொண்டு போவது—அந்த அளவிற்கு அதிகாரிகள் உடந்தையாக இருப்பதாக எங்களுக்குத் தகவல் வருகிறது.

அடுத்து மீட்டர் ரீடிங். விட்டுக்குப் போகிறார்கள். 1200 யூனிட் என்றால் 120 யூனிட்ஸ் என்று போடுகிறார்கள். தவறைச் சுட்டிக்காட்டினால் சைபர் விட்டுப்போய்விட்டது என்று சொல்கிறார்கள். இல்லை, 200 என்று போட்டுவிட்டு, கேட்டால் 1 விட்டுப்போய்விட்டது என்று சொல்கிறார்கள். பிறகு டிஸ்கனெக்ட் செய்யவேண்டும் என்று உத்தரவு போட்டால் வீடு பூட்டிக் கிடக்கிறது, ஆகவே முடியவில்லை என்று சொல்கிறார்கள். இதெல்லாம் ஊர் அறிந்த சிதம்பர ரகசியம். இவையெல்லாம் எங்களுக்கே தெரிகிறது என்றால் உங்களுக்குத் தெரியவில்லை என்றால் என்ன அர்த்தம்?

சரியான முறையில் பில்கள் போடுவது கிடையாது. கேட்டால் பதில் சொல்வது கிடையாது. திடீரென்று டிஸ்கனெக்ட் செய்து விடுகிறார்கள். பணம் வாங்குவதற்கு ஒரு இடம், டிஸ்கனெக்ட் செய்வது ஒரு இடம். அதிலாவது பாரபட்சம் இல்லை என்கிறீர்களா, உங்களுக்கு வேண்டியவர்களுக்கு ஒரு சட்டம், வேண்டாதவர்களுக்கு ஒரு சட்டம். எவ்வளவு பேர்கள் இன்று பில் கட்டாமல் ஆயிரக்கணக்கில் ரூ. 25,000, ரூ. 30,000 என்று பில் கட்டாமல் ஒளிந்துகொண்டிருக்கிறார்கள்? அவர்கள் மீது என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறீர்கள் என்று கேட்கிறேன்.

வீடுகளுக்கு யூனிட் ஒன்றுக்கு 35 பைசா. அனாதை இல்லங்கள், பள்ளிக்கூடங்கள் இவற்றிற்கு யூனிட் ஒன்றுக்கு 70 பைசா.

நான் ஆளும்கட்சியில் இருந்தபோது அண்ணா அனாதை இல்லம் என்று ஒன்று வைத்தேன். என்று வைத்தேனோ! இன்று அண்ணா என்ற பெயரே இந்த ஆட்சிக்கு இவ்வளவு கசப்பாகப் போய்விட்டது. 19—4—1974-ல் ரூ. 453.63 காசுக்கு ஒரு பில் போட்டு அனுப்பியிருக்கிறார்கள். மூன்று நான்கு மாதங்களுக்குப் பிறகு ரூ. 700, 800 என்று பில் வருகிறது. ரூ. 455-63 கட்டிய பிறகு ஏன் இந்த 700 ரூபாய்க்கு பில் என்று கேட்டால் பதில் இல்லை.

அம்பத்தூரில் கேட்டால் ராயப்பேட்டைக்குப் போ என்கிறார்கள். ராயப்பேட்டையில் கேட்டால் புரசைவாக்கத்திற்கு போ என்று சொல்கிறார்கள். கடைசியில் டிஸ்கனெக்ட் செய்தார்கள். செக் ஹானராச்சா என்று பாங்கில் கேட்டதற்கு ஹானராகவில்லை. ரூ. 945 மே மாதம் கானரா பாங்க், நுங்கம்பாக்கத்தில் கட்டினோம். ரூ. 945 கட்டிய பிறகு மறுபடியும் டிஸ்கனெக்ட் செய்து சர்சார்ஜ் போன்று ரூ. 167 கட்டுங்கள் என்று சொன்னார்கள். அதையும் கட்டினோம்.

பிறகு கனெக்ஷன் கொடுத்தார்கள். ஜூலை மாதத்தில் கொடுத்தார்கள். ஜூலை கனெக்ஷன் கொடுத்த பிறகு மறுபடியும் இன்னொரு கணக்கு வருகிறது. சர்சார்ஜ் ரூ. 99 போட்டு ரூ. 124 கட்ட வேண்டும் என்று. அப்டு டேட்டாக பைனையும் சேர்த்து கட்டி, ரீகனெக்ஷனுக்கு உட்பட கட்டிய பிறகு கனெக்ஷன் கொடுத்தார்கள், அப்படியிருக்க, ஏன் இந்த சர்சார்ஜ் என்று கேட்டால் பதில் இல்லை.

இரண்டாவது முறை ரூ. 173 கட்டவில்லை என்று பதினைந்து நாட்களில் மறுபடியும் டிஸ்கனெக்ட் செய்கிறார்கள். இது அண்ணாவின் பெயரால் உள்ள அறுதை இல்லத்திற்கு. ஆனால் 'மேஃபெயர் ஹோட்டல்' எவ்வளவு ஆயிரக்கணக்கில் ரூபாய் கட்டாமலிருக்கிறது? கவிதா ஹோட்டல் எவ்வளவு ஆயிரக் கணக்கில் ரூபாய் கட்டாமலிருக்கிறது? கார்ப்பரேஷன் என்றால் ஒரு நியாயம், அறுதை இல்லங்கள் என்றால் ஒரு நியாயம், சர்க்கார் என்றால் ஒரு நியாயம்.

* * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அம்மையார் அவர்கள் பொறுப்போடு சட்டமன்றத்தில் பேச வேண்டும்.

* * * *

ஆகியோரைப் பற்றிச் சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகள் அனைத்தையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். அவை அவைக் குறிப்பில் இடம்பெறாது. பத்திரிகைகளிலும் அவற்றைப் பிரசுரிக்க வேண்டாம்.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பட்டது.





* * * *

திருமதி சத்தியவாணிமுத்து: அதை விட்டுவிடுகிறேன். சொல்லப்படுகிற குறைகளை எடுத்துச் சொல்கிறோம்.

* * * *

இலாகாவில் தவறுகள் நடக்கின்றன. ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்கிறேன் என்று சொல்வது, பிறகு அறுதை இல்லங்களுக்கு மின்சாரத்தை கட் செய்து கொடுக்காமல் இருப்பது. 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்கிறேன்—அறிஞர் அண்ணா' என்று ஒரு பானர். . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 16 நிமிடங்கள் எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள், இன்னும் எவ்வளவு நேரம் எடுப்பீர்கள்? (திருமதி சத்தியவாணிமுத்து: பத்து நிமிடங்கள்.) நீங்கள் நாளைக் காலை தொடர்ந்து பேசலாம்.

(5) அறிக்கைகள் அளித்தல்—தொடர்ச்சி.

(ஆ) அகதிகளின் மேம்பாட்டிற்கான குழுக்களின் உறுப்பினர் பட்டியல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, 82 (எ) விதியின் கீழ் அரிசன நலத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கை அளிப்பார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: விதி 82-க்குள்ள முக்கியத்துவம் 82 (எ) க்கு இல்லை. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: லிஸ்ட் ஆப் நேம்ஸ் கொடுக்கிறார்கள்.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பட்டது.

[பிற்பகல் 1.30]

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: துணைத் தலைவரவர்களே, காலையில் அகதிகள் மேம்பாட்டிற்கான குழுக்களின் உறுப்பினர்கள் யார் என்று கேட்கப்பட்ட துணை வினாவிற்கு, தனிக் கேள்வி போடும்படி கூறினேன். @ இப்பொழுது அந்தக் குழுக்களில் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டவர்களின் பட்டியலை பேரவைக்கு அளிக்கின்றேன்.

இலங்கை, பர்மா முதலான நாடுகளிலிருந்து வருகின்ற அகதிகளின் மேம்பாட்டிற்கென கீழ்க்கண்ட நான்கு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன :—

(1) தேயிலை, ரப்பர் போன்ற அரசுத் தோட்டங்களில், பணி புரியும் தொழிலாளர்களின் நலன்களைக் காக்கவும், திட்ட நிறைவேற்றத்தைக் கவனிக்கவும் ;

(2) ஐந்தாண்டுத் திட்டங்களில் அகதிகளின் புனர்வாழ்வு வழிவகைகளை ஆராய்வதற்கு ;

(3) அகதிகளைக் குடியமர்த்தும் திட்டங்களைக் கவனிப்பதற்கு மாநிலக் குழு ;

(4) தொழில் கடன் வழங்குவதற்கு மறுவாழ்வு இயக்குநருக்கு ஆலோசனை கூறுவதற்கு (ரீஜனல் கமிட்டி).

இந்தக் குழுக்களில் முதல் இரண்டு குழுக்களில் அரசு அலுவலர்கள் மட்டும்தான் உறுப்பினர்களாக உள்ளனர். மூன்றாவது குழுவில் கீழ்க்கண்ட அரசு அலுவலர் அல்லாத உறுப்பினர்கள் உள்ளனர்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்—தலைவர்

மாண்புமிகு அரிசன நல அமைச்சர்—உப தலைவர்

---

@ 43-ம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.



1. திரு. ஜி. ஆர். எட்மண்ட், சட்டமன்ற உறுப்பினர், திருச்செந்தூர்.

2. திரு. எம். பி. சாரதி, சட்டமன்ற உறுப்பினர், வேலூர்.

3. திரு. கே. ஆண்டி, சட்டமன்ற உறுப்பினர், ஸ்ரீவில்லிபுத்தூர்.

4. திரு. வி. கிருஷ்ணமூர்த்தி, சட்டமன்ற உறுப்பினர், திருச்சிராப்பள்ளி.

5. திரு. புலவர் சி. பழனிச்சாமி, சட்டமன்ற உறுப்பினர், பழனி.

6. திரு. எஸ். நடராசன், சட்டமன்ற உறுப்பினர், தஞ்சாவூர்.

7. திரு. சி. ஜி. விஸ்வநாதன், சட்டமன்ற உறுப்பினர், செங்கற்பட்டு.

8. திரு. எம். தேவராசன், சட்டமன்ற உறுப்பினர், உதகமண்டலம்.

9. திரு. வீ. கே. இராசா பிள்ளை, சட்டமன்ற உறுப்பினர், கன்னியாகுமரி.

10. திரு. கே. ரங்கநாதன், சட்டமன்ற உறுப்பினர், கோவை—கிழக்கு.

11. திரு. இ. செயராமன், சட்டமன்ற உறுப்பினர், சேலம்.

12. திரு. எம். எஸ். கே. சத்தியேந்திரன், சட்டமன்ற உறுப்பினர், சிவகங்கை.

13. திரு. எம். எஸ். சிவசாமி, நாடாளுமன்ற உறுப்பினர், தூத்துக்குடி.

14. திரு. ஆரியதாசன், வியாசர்பாடி, சென்னை.

... சாதிகள் மேம்பாட்டிற்கான குழுக்களின் உறுப்பினர் பட்டியல் குறித்து

[திரு. எஸ். இராசாங்கம்] [1975 நவம்பர் 11

நான்காவது குழுவில் கீழ்க்கண்ட அரசு அலுவலர் அல்லாத உறுப்பினர்கள் உள்ளனர்

1. திரு. எம். முத்தையா, சட்டமன்ற உறுப்பினர், திருநெல்வேலி.

2. புலவர் சி. பழனிச்சாமி, சட்டமன்ற உறுப்பினர், பழனி.

3. திரு. எஸ். சேதுராமன், சட்டமன்ற உறுப்பினர், இராமநாதபுரம்.

4. திரு. வெ. நா. முத்துத்தமிழ்ச் செல்வன், சட்டமன்ற உறுப்பினர், திருச்சிராப்பள்ளி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணியளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.31 மணியளவில் ஒத்திவைக்கப் பட்டது.

## (7) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

223. Notification issued in G.O. Ms. No. 426, Rural Development and Local Administration, dated the 23rd February 1974 in regard to redivision of wards and reservation of two seats for Scheduled Castes and one seat for women in the Tiruchirappalli Municipal Council. [Laid on the table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

224. Notification issued in G.O. Ms. No. 182, Rural Development and Local Administration, dated the 30th January 1974, in regard to redivision of wards and reservation of one seat for Scheduled Castes and one seat for women in the Cumbum Municipal



Council. [Laid on the table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

225. Notification issued in G.O. Ms. No. 869, Commercial Taxes and Religious Endowments, dated the 18th July 1975, in regard to amendments to the rules framed under the Tamil Nadu Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Tamil Nadu Act XXVI of 1948). [Laid on the table of the House under section 67 (4) of the Tamil Nadu Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Tamil Nadu Act XXVI of 1948).]

### B. *Reports, Notifications and Other Papers*

'Nil.'

## இணைப்பு.

[21-ம் பக்கத்திலுள்ள வெள்ளிக்குறியிட்ட வினா 285-க்கான விடையைக் காண்க.]

**விடை.**

(அ) ஆம்.

(இ) 1. ஜார்ஜ் டவுன், பார்க் டவுன், வியாசர்பாடி, அயோத்தியா குப்பம், நொச்சிக் குப்பம், திருவல்லிக்கேணி, மயிலாப்பூர், இராயபுரம், வண்ணாரப்பேட்டை, காசிமேடு முதலான நகரில் நோய் பாதிக்கப்பட்ட பகுதிகளில், மாநகராட்சி சுகாதார அதிகாரிகளால், டி. டி. டி. மருந்து தெளிக்கும் வேலை தொடங்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

2. கிணறுகளில் புழுக்களை உண்டு வாழும் "கம்பூசியா" (Gambusia) எனப்படும் மீன்களை விடுவதன் மூலம் கொசு உற்பத்தி கட்டுப்படுத்தப்பட்டு வந்தது. கடுமையான வறட்சியின் காரணமாக "கம்பூசியா" மீன் வளர்ப்பிடங்கள் உலர்ந்து விட்டதால் மீன்கள் உற்பத்தி தடைப்பட்டு, கொசு உற்பத்தியை புழுப் பருவத்தில் அழித்து ஒழிக்கும் வேலையும் தடைப்பட்டது. இதனால், மாற்று முறைகளில் இப்பணியை மாநகராட்சிச் சுகாதாரப் பணியாளர்கள் செய்து வருகின்றனர். கொசு உற்பத்தி ஆகும் இடங்களில் பாரிஸ் கிரீன் மற்றும் கொசுப் புழு ஒழிப்பு எண்ணெய் முதலியன இடுவதன் மூலம் கொசு உற்பத்தி தடுக்கப்பட்டு வருகிறது.

3. எல்லா மலேரியா நோயாளிகளையும் கண்டறிந்து, நோயை அறவே ஒழிக்கும் அடிப்படை சிகிச்சை அளிக்கின்ற முறை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கென்று, பெரிய மருத்துவ மனைகளின் வெளி நோயாளிகள் சிகிச்சைப் பிரிவுகளில் எல்லா காய்ச்சல் நோயாளிகளையும் பரிசோதித்து மலேரியா நோயைக் கண்டறியவும், மலேரியா நோயாளிகளின் இரத்தப் பரிசோதனைகளுக்குத் தற்காலிக ஆய்வகம் அமைக்கவுமான வசதிகள் பெருக்கப்பட்டுள்ளன. மலேரியா அடிப்படை சிகிச்சைக்கான மருந்துகள் போதுமான அளவு மருத்துவ மனைகளில் இருப்பு வைக்கப்பட்டு உள்ளன.





4. நகரில் மலேரியா காய்ச்சல் பரவி வருவது குறித்தும், அவற்றுக்கான தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும், மலேரியா நோயாளிகளுக்குச் செய்யப்பட்டுள்ள சிகிச்சை ஏற்பாடுகள் பற்றியும் பொது மக்களுக்கு எடுத்துக் கூறி விளக்கமளிக்கும் பொருட்டு தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வு, குடும்ப நலத் துறை இயக்குநர் அலுவலகம் 18—8—75 முதல் ஒரு வார காலம் செய்தி விளக்க இயக்கம் நடத்தியது. இதைத் தொடர்ந்து, நோய்த் தடுப்புக்கான செயல் திட்டமும் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

---

**புதன்கிழமை, 1975 நவம்பர் 12.**

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. நா. கணபதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

### மணலூர்—கோழிக்குத்தி சாலை

*குறுகியகால வினா—4 திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் ஒன்றியத்தில், சோழன்பேட்டை மகாராஜபுரம் பஞ்சாயத்துக்களை இணைக்கும் வகையில் மணலூர்-கோழிக்குத்தி ஆகிய ஊர்களுக்கிடையே சாலை அமைக்கப்பட்டதா?

(இ) ஆம் எனில், இந்தச் சாலை அமைக்கப்பட மாதுளம் வாய்க்காலின் கிளை வாய்க்கால் தூர்க்கப்பட்டது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, மாயூரம் ஒன்றியத்தில் சோழன்பேட்டை, மகாராஜபுரம் பஞ்சாயத்துக்களில் ஓடிக் கொண்டிருந்த மாதுளம் வாய்க்காலின் துணை வாய்க்காலைத் தூர்த்ததைப்பற்றி. இதற்கு முன்பு 4—11—75 அன்று பொதுப் பணித்துறை அமைச்சரவர்களிடம் இங்கே ஒரு வினா எழுப்பிய போது, மாயூரம் ஊராட்சி ஒன்றியந்தான் அந்தப் பணியை மேற்கொண்டது, பொதுப்பணித்துறைக்கும் இதற்கும் தொடர்பு இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே, அதைப்பற்றி ஏதாவது தகவல் அமைச்சரவர்களுக்குக் கிடைத்திருக்கிறதா என்பதை அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, மாயூரம் ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் பத்தாயிரம் ரூபாய்க்கு இந்த சாலைத் திட்டத்தைப் பொது நிதியிலிருந்து மேற்கொள்வதாகத் திட்டமிட்டு பொது நிதியிலிருந்து செலவழிப்பதற்கு ஒப்புதல் கோரி, டைரக்டர் ஆஃப் ரூரல் டெவலப்மென்ட் அவர்களுக்கு எழுதியிருக்கிறார்கள். அதற்கிடையில் டெண்டர்கள் வாங்கி லோயஸ்ட் டெண்டராருக்கு காண்டிராக்ட் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், அந்த வாய்க்காலை அந்த ஒப்பந்தக்காரர் ஊர் மக்களை வைத்துக்கொண்டு மூடியிருக்கிறார். இதற்கும் பஞ்சாயத்து யூனியனுக்கும் சம்பந்தம் இல்லை. இன்னும் ஓர்க் ஆர்டரே தரப்படவில்லை. இருந்தாலும், பாதிக்கப்பட்டவர்கள் அதன்மீது மேல் முறையீடு செய்த காரணத்தினால் மறுபடியும் அந்த வாய்க்காலைச் சரிசெய்திருக்கிறார்கள். அந்த வாய்க்காலைத் தூர்த்து ரோடு போடுவதாக இல்லை.

**திரு. டி. வி. சம்பத் :** தலைவர் அவர்களே, மாதுளம் வாய்க்காலின் கிளை வாய்க்கால்—ஏறத்தாழ 300 ஏக்கராவிற்கு பாய்கால் வசதியாக இருந்த புறம்போக்கு வாய்க்கால்—தூர்க்கப்பட்டதன் காரணமாக அந்தப் பகுதியில் இருக்கின்ற ஏழை விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் பாதை போடப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளுக்குத் தேவையான அந்த வாய்க்காலை—அது பாய்கால் வாய்க்காலாகவும், 150 ஏக்கராவுக்கு வசதியாக உள்ள வடிகால் வாய்க்காலாகவும் இருப்பதால், அதை உடனடியாக மறுபடியும் அமைத்துத் தருவதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல, ஒரு புறத்தில் பாசன வசதி; இன்னொரு புறத்தில் பாதை வசதி. ஆனால் பாதை போடும்போது, வாய்க்காலைத் தூர்த்துப் போடுவதற்குப் பதிலாக, அங்கேயுள்ள கரையையொட்டி, இருக்கிற பட்டா நிலங்களைக் கையகப்படுத்தி சாலை அமைக்கவேண்டும் என்பது ஊராட்சி ஒன்றியத்தின் திட்டம். அப்படி மாறி அவர்கள் போட்ட காரணத்தால் மறுபடியும் சீர் செய்யப்பட்டது.

**திரு. அ. தேவேந்திரன் :** தலைவர் அவர்களே, பசுமைப் புரட்சி (க்ரீன் ரெவல்யூஷன்) செய்துகொண்டிருக்கிற இந்த நேரத்தில், சாதாரண விவசாயிகள் பயன்படுத்திக் கொண்டிருந்த அந்த அருமையான பாய்கால் வசதியுள்ள வாய்க்காலை மூடிவிட்டார்கள்.



இது தொகுதியின் சட்ட மன்ற உறுப்பினருக்குத் தெரிந்ததற்குப் பின்னர், அங்கே சென்றவுடன், விவகாரம் வேறுவிதமாக மாறுகிறது என்று சொல்லி, திரும்பவும் ஆட்களை வைத்து வெட்டுகிறார்கள். இப்படிப்பட்ட அநியாயக்காரர் மீது இந்த அரசு உடனடியாக ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என அருள்கூர்ந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, பசுமைப் புரட்சிக்குப் பதிலாக நடந்திருப்பது பாதைப் புரட்சி. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 'நடவடிக்கை எடுப்பார்களா?' என்று கேட்கிறார்கள். இது ஊராட்சி ஒன்றியம் மேற்கொண்ட பணி அல்ல. ஊராட்சி ஒன்றியம் அனுமதி வழங்குவதற்கு முன்னாலேயே ஒப்பந்தக்காரர், சில பேர்களை வைத்துக்கொண்டு இந்தப் பணியினை மேற்கொண்டிருக்கிறார். ஆகவே, அவர் அப்படிச் செய்ததை எதிர்த்து, பாதிக்கப்பட்டவர்கள்தான் வழக்குத் தொடர வேண்டும்.

**திரு. எஸ். வடிவேல் :** தலைவர் அவர்களே, பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் ஏழை எளிய குடியானவர்கள்; தாழ்த்தப்பட்டவர்கள். பாதை போட்டது மட்டுமல்ல; வாய்க்காலையே தூர்த்தாகிவிட்டது. அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, பாதையைச் சீர் பண்ணி, வாய்க்காலை மறுபடியும் அமைத்தாயிற்று என்று சொல்கிறார்கள். வாய்க்காலை இன்னும் அமைக்கவில்லை. ஆகவே, அமைச்சர் அவர்கள் நேரடியாகக் கவனம் செலுத்தி, துரிதமாக நடவடிக்கை எடுக்க ஆவன செய்வார்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, பாதிக்கப்பட்டவர்களின் பக்கம் இந்த அரசு இருப்பதனால், நடவடிக்கை எடுக்கும்.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே. 18—8—75 ஆம் தேதி யன்று நடை பெற்ற மாயூரம் ஊராட்சி ஒன்றியக் கூட்டத்தில் இந்தப் பாதைக்காக—மணலூர்—கோழிக்குத்தி ஆகிய ஊர்களுக்கிடையே சாலை அமைப்பதற்காக பத்தாயிரம் ரூபாய் மதிப்பீட்டுத் தொகை அனுமதிக்கப்பட்டு, டெண்டர் கோரப்பட்டு, வேலையை ஒப்படைக்கும் நிலையில்—ஓர்க் ஆர்டர் தரப்படாத நிலையில்—அமைச்சரவர்கள் குறிப்பிட்ட ஒப்பந்தக்காரர், பெருமதிப்பிற்குரிய குத்தாலம் ராஜகோபால் வாண்டையார் அவர்களும் மாயூரம் ஒன்றியப் பொறியாளரும் மிகத் துணிச்சலோடு இரண்டு பர்லாங்கு நீளத்திற்கு இருந்த அந்த வாய்க்காலை அடைத்து, சாலை அமைத்

திருக்கும் கொடுமை நடைபெற்றிருக்கிறது என்று பெருமதிப்பிற்குரிய, மாட்சிமை தங்கிய தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவரவர்களிடம், தொகுதித் தொண்டன் என்ற முறையில் எடுத்துச் சொல்லியும்கூட, அது கேட்பாரற்ற நிலையில் நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கிறது. துணிந்து இம்மாதிரி காரியம் நடைபெறுகிறது. இரண்டு பர்லாங்கு நீளத்திற்கு சானல் புறம்போக்கு வாய்க்காலை, இந்தக் காலத்தில் அடைக்கக்கூடிய துணிச்சல்மிக்க அந்த நபர்கள்மீது குறைந்தபட்ச நடவடிக்கையாவது எடுக்க அரசு கருணை காட்டுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இந்த அரசாங்கம்; மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வை வரவேற்கிறதே தவிர, அத்தகைய துணிவை வரவேற்கவில்லை. அவர் குறிப்பிடுகிறபோது, ஒப்பந்தக்காரர் பெருமதிப்பிற்குரியவர் என்று குறிப்பிட்டார்; பெருமதிப்பிற்கும் உரியவராகத் தெரியவில்லை.

**திரு. குழ. செல்லையா :** * * *

MR. DEPUTY SPEAKER : The question is disallowed.

**திரு. ந. சோமசுந்தரம் :** தலைவர் அவர்களே, இந்த வாய்க்கால் தூர்க்கப்பட்டதன் காரணமாக, நம்முடைய அருள்மிகு தான்தோன்றீசுவரர் ஆலயத்திற்குச் சொந்தமான 250 ஏக்கரா நிலம் பாசன வசதியற்று. அதிலே சாகுபடி செய்துவந்த பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட அரிசன விவசாயிகள் இந்த ஆண்டு விளைச்சல் செய்ய முடியாமல். குத்தகை நெல்லை அளக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு, நிலத்திலிருந்து வெளியேற்றப் படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அந்தக் குத்தகையை வஜா செய்வதற்காவது அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே. வரிவஜா செய்வது என்கிற பிரச்னை இப்பொழுது எழவில்லை. உண்மையிலேயே மகசூல் பாதிக்கப்பட்டிருக்குமானால் அதுபற்றி அரசு ஆராயும்.

**திரு. அ. தேவேந்திரன் :** தலைவர் அவர்களே, டெண்டர் விட வேண்டும். அதற்குப் பின்னர் ஓர்க் ஆர்டர் தர வேண்டும். அதற்குப் பின்னர்தான் வேலை துவங்கவேண்டும். பொதுப் பணித்

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பட்டது.



துறை சம்பந்தப்பட்ட வேலையாக இருந்தாலும், உள்ளாட்சித் துறை சம்பந்தப்பட்ட வேலையாக இருந்தாலும், இவ்வாறு தான் செய்யவேண்டும். இது எல்லோரும் அறிந்த ஒன்றுதான். ஆனால், ஓர்க் ஆர்டர் கொடுக்கப்படாமலேயே இந்த வேலையைத் தன்னிச்சையாகச் செய்திருக்கிறார்கள். உறுப்பினர் அவர்கள் எடுத்துக் காட்டியதைப்போல், நானும் சம்பந்தப்பட்டவன், அந்தத் தொகுதியைப் பொறுத்த வரையில். 200—300 விவசாயிகள் அநியாயமாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பொதுப் பணித் துறையைக் கேட்டால் உள்ளாட்சித் துறை என்கிறார்கள், உள்ளாட்சித் துறையைக் கேட்டால் பொதுப் பணித் துறை என்கிறார்கள். இப்படிப்பட்ட சமாதானங்களைச் சொல்லிக் கொண்டிருப்பதைத் தவிர என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறீர்கள்? இப்படி அத்துமீறி இரண்டு பர்லாங்கு அளவிற்கு பாய்கால் வாய்க்காலைத் தூர்த்து பாதை போட்டு விட்டு, அவர் வெளியில் இருக்கிறார்—அதுவும் எமர்ஜென்ஸி இருக்கும் இந்த நேரத்தில்—இருக்கிறார். ஆகவே, அருள்கூர்ந்து, தவறு செய்தவர் யாராக இருந்தாலும் அவர்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முறையைப்பற்றி விளக்கினார்கள். அதுதான் முறையும் கூட. ஆனால், இதில் முறை தவறி நடந்திருக்கிறார்கள் என்பது உண்மை. பொதுப் பணித் துறை உள்ளாட்சித் துறையையும், உள்ளாட்சித் துறை பொதுப் பணித் துறையையும் சுட்டிக் காட்டுகின்றார்கள் என்று குறிப்பிடுகிறார்கள். அப்படியல்ல. உள்ளாட்சித் துறையைப் பொறுத்த வரையில் நானும் இங்கே தெளிவாகப் பதில் சொல்லியிருக்கிறேன். பொதுப் பணித் துறையைப் பொறுத்த வரையில் அன்றைக்கு பதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்தப் பிரச்னை எழவில்லை.

ஆனால், இந்தச் சாலை போடும்போது, வாய்க்காலைத் தூர்க்கின்ற அளவு பொதுப் பணித் துறையினர் கவனிப்பு இல்லாமலிருந்திருக்கிறார்கள். அந்த வேலையை அளிக்கின்றபோது அந்த வேலை எவ்வளவு தூரம் நடந்திருக்கிறது என்று யூனியன் இன்ஜினியரும் அதைப் போய்ப் பார்த்ததாகத் தெரியவில்லை. பொதுப் பணித் துறையின் சார்பில் அந்த வாய்க்காலை யார் மேற்பார்வையிடுகிறார் என்பதையும், சாலையை யார் மேற்பார்வையிடுகிறார்—ஊராட்சி

ஒன்றியத்தின் சார்பாக—என்பதையும், இந்த இரண்டு துறையினரும் ஏன் இதில் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதைப் பற்றி அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, சோழன்பேட்டை பஞ்சாயத்து மாதுளம் வாய்க்கால் ஆர். எஸ். 5, 6, 9 என்று எழுதப்பட்டிருக்கிறது. இது சேனல் புறம்போக்கு. பொதுப் பணித் துறைப் புறம்போக்காக இந்த வாய்க்கால் இருக்கிறது. இதற்கு அனுமதி வாங்காமல் எப்படி இந்த வாய்க்கால் தூர்க்கப்பட்டது என்பதற்கு இது வரையிலே விளக்கம் கொடுக்கப்படவில்லை. எப்படி இருந்தாலும் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்வியாகக் கேட்க வேண்டும்.

**திரு. என். கிட்டப்பா :** பக்கத்திலே பாதை போடப்படுகிறது, அந்தப் பாதையில், போடப்பட்ட மண் சரிந்து இந்த வாய்க்கால் கொஞ்சம் மூடப்பட்டு விட்டது என்பது போல பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் தன்னுடைய பதிலிலே அறிவித்திருக்கிறார். மேற்கொண்டு அவர்கள் அதற்கான காரணகாரியங்களைச் சொல்லி ஏதாவது தகவல் கிடைக்குமானால் அதைப் பற்றி விசாரணை செய்து சொல்லுகிறேன் என்று அறிவித்து இருக்கிறார். எனவே, மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சரவர்களும், நமது உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களும், அவர்கள் இருவருக்கும் தொடர்பு உள்ள இந்தக் காரியத்தில் குறைந்த பட்ச விசாரணை ஒன்றைச் சிறிய அளவிற்கு, மிசா சட்டத்தில் பிடிக்கப்பட முடியாத அளவிற்கு இருந்தால், குறைந்த பட்ச அளவிற்கு விசாரணையையாவது மேற்கொள்ள முற்படுவார்களா என்பதைப் பணிவோடு தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, ஏற்கெனவே அளித்த விளக்கமே இதற்குப் போதும் என்று கருதுகிறேன்.

THIRU V. KRISHNAMURTHI (NELLIKUPPAM) : From the answers given to this House I come to know that there has been a lapse on the part of some departments. The contractor has misused and then irrigation channel has been completely blocked up. May I know from the Hon. Minister whether the responsibilities will be fixed by conducting a due enquiry by a Senior Member of the Board of Revenue? Will the Government order for it?



THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, in this particular case the road has been formed without prior approval from the Panchayat Union. The road also has not been formed according to the plan envisaged by the Panchayat Union . It has been formed in a different way. That is why those responsible will be taken to task by the Government. The question of appointing a Member, Board of Revenue, does not arise at this stage.

MR. DEPUTY SPEAKER : Question No. 306 . . . . .

## 2. தகவல் கோரல்.

### (அ) குறுகியகால வினாக்களுக்குப் பதிலளிக்க தாமதம் ஆவது குறித்து.

THIRU K. T. K. TANGAMANI : Before general questions are taken up, I understand that a number of short notice questions have been tabled and they have been accepted by the Hon. Ministers. I would like to know what is the fate of those short notice questions. How many short notice questions have been received, whether they have been approved by the Hon. Ministers and if they have been approved by the Hon. Ministers why there is delay in answering them? If the delay is in the Department, I would certainly request you, Sir, to pull up the department concerned and see that the replies are filed. Otherwise, there is no purpose in giving short notice questions. When the short notice questions are accepted by the Ministers concerned, how can there be delay? I would like to have the information now or even later.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, இந்தக் குறுகிய காலக் கேள்வியைப் பொறுத்த அளவிற்கு அமைச்சர்கள் ஏற்றுக் கொள்வது என்ற பிரச்னை கிடையாது. அமைச்சர்களுக்குக் கிடைத்தவுடன் நாங்கள் இலாகாவிற்குக் கொடுக்கிறோம். அவர்களுடைய அறிக்கை வருவதற்கு முன்னால் நாங்கள் பதில் சொல்ல முடியாது. அறிக்கையைப் பெறாமல் பதில் சொல்வது என்பது சரியானதாக இருக்க முடியாது.

உதாரணமாக, திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் என்னிடத்திலே ஒரு கேள்வியைக் கொடுத்தார். ஒரு மூன்று தினங்களுக்கு முன்னால் அவரிடமிருந்து குறுகிய கால வினா ஒன்று வந்தது. அதிலே மின்சாரத்தால் தாக்கப்பட்டு ஒருவர் இறந்தாரா அல்லது ஏறும்போது தவறி விழுந்து இறந்தாரா என்பது கேள்வி. அவர்

சொன்ன பிரச்னையில் எனக்கே சந்தேகம் ஏற்பட்டதால் மேல் அதிகாரிகள் வாயிலாகச் சரியான தகவல் கொடுக்க வேண்டுமென்று நான் அவர்களைக் கேட்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

எனவே, முழுமையான தகவல் கிடைக்க வேண்டுமென்றால் 4, 5 நாட்களாகும். குறுகிய காலக் கேள்வியை நாங்கள் ஏற்றுக் கொண்டோம் என்று சொன்னால் அது பாலிசி கொஸ்டியனாக இருந்தால் நாங்களே பதில் சொல்லி விடலாம். மேட்டர்ஸ் ஆஃப் ஃபாக்ட் ( Matters of fact) ஆக இருந்தால் அந்தந்த இலாகாவிற்கு, அந்த இடத்திற்கே அனுப்பித்துச் சரியான தகவலைத் தருவித்துக் கொள்ளாமல் நாங்களே சொல்வது சரியில்லை. ஆகவேதான் காலதாமதம்.

Thiru K. T. K. TANGAMANI: I am not referring to this particular question alone. This may refer to a particular individual who died in the Vellore Central Jail. There was another question which I had tabled and which was accepted by the Minister for P.W.D. It was much earlier than the question referred to by the Hon. Minister. That is why I would like to know when these short notice questions will be taken up. I have received information from the Speaker that the short notice question for which the Minister for P.W.D. has to give the reply has been admitted. In the case of the other questions, I have not received any communication from the Speaker. That is why I want some guidance from the Speaker, when the Speaker himself says that it has been admitted, whether it will be admitted for reply in this session or in the next session.

Mr. DEPUTY SPEAKER: The usual procedure is . . . . .

Thiru G. R. EDMUND: பேரவைத் தலைவரவர்களே!

Mr. DEPUTY SPEAKER: I have not yet answered the hon. Member Thiru K. T. K. Tangamani.

Thiru G. R. EDMUND: It will be easier for you, Sir, to answer both of us.

Mr. DEPUTY SPEAKER: Are you making out a question of law or of fact?

Thiru G. R. EDMUND: It is a question of law.

பேரவைத் துணைத் தலைவரவர்களே! சட்டமன்ற விதி 42-ன் பிரகாரம் . . . . .

Mr. DEPUTY SPEAKER: That is a different thing. This relates to a short notice question.



Thiru G. R. EDMUND: I have to say something on that
also. அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த காரியங்களில்
ரூல் 42, 41-ன் கீழ் நோட்டீஸ் கொடுக்கலாம் என்று
இருக்கிறது. இதன் படி ரூல் 42-ன் படி நோட்டீஸ் கொடுத்தால்
அதை சபாநாயகர் ஏற்றுக் கொள்ளாமல் சட்டசபையில் இவற்றை
எழுப்பாமல், அவருடைய அறையில் வந்து கேளுங்கள், அவையில்
கேட்கக் கூடாது என்று என்னைக் கூப்பிட்டு அனுப்பி இருந்தார்.
ரொம்ப முக்கியமான சம்பவங்கள் குறித்து சட்டசபையில் ஒரு
கவன ஈர்ப்புத் தீர்மானம், சபாநாயகரிடத்திலே கொடுத்தேன்.
அதற்கு இன்றைய வரையில் பதில் வரவில்லை. இப்படி முக்கிய
மான காரியங்கள் பற்றிக் கூட சட்டசபையில் விவாதம் நடத்த
முடியவில்லை. இன்று இதோடு இந்தச் சபை முடிந்து விடுகிறது.
பிறகு சட்டசபை இருக்கிறதோ, இல்லையோ. இது ஒரு பெரிய
சங்கடமான காரியம்.

Mr. DEPUTY SPEAKER: The usual procedure is, the ques-
tions are forwarded to the concerned departments. If the Hon.
Minister waives the notice, then it is treated as a short notice
question. If he does not waive the notice, then it is treated as
an ordinary question. Only one short notice question seems to be
pending. But the Hon. Minister for Public Works is not here.
All the questions for which the Legislative Assembly Department
has received replies have been added in the agenda.

Thiru G. R. EDMUND: A short notice question is also pending.

திரு. ஏ. சுப்பிரமணியம்: இப்பொழுதே இந்தக் குறுகிய கால வினா . . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்பொழுதே இந்தக் குறுகிய கால வினாவிற்குப் பதில் கொடுக்க முடியாதா என்பது பிரச்னை. இந்தப் பிரச்னையைப் பற்றி . . . .

Thiru A. SUBRAMANIAM: This arises from the reply given
by the Hon. Minister. The Hon. Minister said that if it were
a policy question, he could answer it. I have given a short notice
question on a policy matter about the release of women prisoners
in the jails. It is only a policy matter. It involves eliciting
of information from the department. I had given notice of the
same and it was admitted four or five days back. I was expecting

the answer day before yesterday, yesterday or even today. The answer has not been given. The answer is not forthcoming. Just now the Hon. Minister said that if it were a policy matter, he could answer immediately. Why should there be delay in answering a short notice question regarding the policy of the Government?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இதுவும் தவறான தகவல். இப்படிப்பட்ட வினாவை ஏற்றுக் கொள்வதற்கு என்று ஒரு "புரோசீஜர்" இருக்கிறது. திரு. கே. டி. கே. பி.டபிள்யூ.டீ—யைப் பற்றிச்சொன்னார். இதில் பாலிசி வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருப்பது — எந்த உத்திரவின் பேரில் சிறையிலிருந்து யார், யார் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று கேட்டிருக்கிறார்கள். அந்தக் கேள்விக்குப் பதில் சொல்வது என்றால் எந்த உத்தரவின் கீழ் எத்தனை பேர் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்ற கணக்கைப் பெறாமல் பதில் அளிப்பது என்பது முடியாத காரியம்.

THIRU A. SUBRAMANIAM rose.

MR. DEPUTY SPEAKER: I am not permitting you.

THIRU A. SUBRAMANIAM: Then I will raise a privilege matter.

MR. DEPUTY SPEAKER: You may raise the privilege issue, not now, but after question hour. Question No. 306.

## (1) வினாக்கள்-விடைகள் (தொடர்ச்சி)

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்—தொடர்ச்சி

### பொது மருத்துவமனையிலுள்ள இரத்த சேகரிப்பு நிலையம்.

* 306 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை பொது மருத்துவமனையில் இரத்த தானம் பெறுவதற்கான திட்டத்தை ஊக்குவிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் யாது?



மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) நோயாளிகளின் உறவினர்களையும், நண்பர்களையும்
தொடர்பான மருத்துவ அலுவலர்கள் மூலமாக அணுகியும், தனி
யார் துறை நிறுவனங்கள், தொழிற்சாலைகளில் வேலை பார்க்கும்
நபர்களை அந்நிறுவனங்களின் மூலமாக அணுகியும், மருத்துவக்
கல்லூரி மற்றும் இதர கல்லூரி மாணவர்களை மாணவர் மன்றங்கள்
மூலமாக அணுகியும் இரத்த தானம் செய்யும்படி கேட்டுக்கொள்ளப்
படுகிறது. மற்றும், பொதுத் தொண்டு செய்யும் நிறுவனங்களை
அணுகி அவர்கள் மூலமாக இரத்த தானம் பெற்றுக்கொள்ளப்படு
கிறது. தாமாகவே முன்வந்து இரத்த தானம் செய்பவர்களுக்கு
நற்சான்றிதழ் அளிக்கப்படுகிறது. பல நபர்கள் கூட்டமாக வந்து
இரத்த தானம் செய்வது விளம்பரப்படுத்தப்படுகிறது. இதனால்
மேலும் பலர் தாமே பயமின்றி முன்வந்து இரத்த தானம்
செய்கின்றனர்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, பஞ்சாயத்து மருத்துவ
மனைகளில் சிலவகையான குரூப் ரத்தம் கிடைக்க வேண்டும் என்
பதற்காக, அதைப் பெற்றுக் கொள்வதற்காகத் தரகர்கள் மூலம்
ஏற்பாடு செய்கிறார்கள். இப்படிப்பட்ட குரூப் வேண்டியவர்கள்
இத்தகையவர்கள் மூலம் அந்தக் குறிப்பிட்ட குரூப் இரத்தத்தை
பெற்றுக் கொள்கிறார்கள். எனவே, வெளியாரிடமிருந்து தரகர்கள்
என்ற முறையில் இல்லாமல் குறிப்பிட்ட குரூப் வேண்டியவர்
களுக்கு வேண்டிய இரத்தத்தைக் கொடுக்கும் பணியில் ஈடு
பட்டிருப்பவர்களை ஊக்குவிப்பதற்கு ஊக்க போனஸ் முறை மூலம்
கொடுத்து அவர்களிடமிருந்து இரத்தம் பெறும் முறையை அரசு
ஆலோசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இப்படி
ரத்தம் கொடுக்க முன் வருகிறவர்களில் ஒரு சிறு பகுதியினர்தான்
அதை இலவசமாகக் கொடுக்கின்றனர். பெரும்பாலோர் ரத்த
தானம் கொடுக்க முன் வருவார்களேயானால் ஓரளவு ரூ. 10, அல்லது
ரூ. 15 ஊதியம் பெறுவது என்ற பழக்கத்தை மேற்கொண்டுள்
ளனர். ரத்தம் தரக்கூடியவர்களின் பட்டியல், அவர்களுடைய
ரத்தம் எந்த வகையைச் சேர்ந்தது. எந்த குரூப் ரத்தம் என்ற
விவரத்தோடு இருக்கிறது. ஒரு நோயாளிக்கு திடீரென்று ரத்தம்
தேவையானால் அந்த குரூப் ரத்தம் உள்ளவர்களைக் கேட்டால் அவர்
களைக் கட்டாயம் வரவேண்டுமென்ற சட்டம் இயற்ற முடியாது.
அவர்களுடைய நல்லெண்ணத்தைப் பொறுத்து சிறு தொகையைப்
பெற்றுக்கொண்டு ரத்தம் கொடுத்தால் அவர்களுக்கு நன்றி

செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்கள் வருவதற்கு இசையாமல், இசையாத நிலைமை இருந்தால் இடையில் உள்ள தரகர்கள் ஒரு தொழில் நடத்துகிற அளவுக்கு நிலைமை உருவாகிறது. அப்படி ஆபத்தான நேரத்தில் ரத்தம் கொடுப்பவர்களுக்கு ரூ. 100 வரையில், அதிகம் கூட நோயாளிகள் சார்பாகக் கொடுக்க முன் வருகிறார்கள். அதையும் பெரும் குற்றம் என்று கருத மனம் இடம் தரவில்லை. அவர்களுடைய நெருக்கடி நிலை ஒரு பக்கம். அதே நேரத்தில் ரத்தம் கொடுப்பவர்கள் தனிப்பட்ட பெருந்தன்மையைக் காட்டக்கூடிய நிலையில்லாத தன்மை. சமுதாயத்தில் உள்ள குறைபாடு இவைகள் இருக்கின்றன. கூடுமானவரையில் ரத்த தானம் கொடுக்க வருகிறவர்கள் தாமே கொடுப்பதற்கு முன் வரும் நிலைமையை உருவாக்கினால் குறைபாடுகளை நீக்க இயலும்.

**திரு. அ. தேவேந்திரன் :** தலைவர் அவர்களே, சிறைச்சாலையில் ரத்த தானம் செய்தால் தண்டனைக் காலம் குறைக்கப்படுகிறது. ஜெனரல் ஹாஸ்பிட்டல் போன்ற இடத்தில் ரூ. 15 தருகிறார்கள். குடும்பக் கட்டுப்பாட்டுக்கு ஊக்கம் அளிப்பதுபோல், ரூ. 15 கொடுப்பதையும், தண்டனைக் காலத்தை கூடுதலாக்கவும் அரசுக்கு உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தவறியும் கூட தண்டனைக் காலத்தைக் கூடுதலாக்க மாட்டோம். கனம் அங்கத்தினர் குறைப்பதை நினைத்துக் கொண்டு அவ்வாறு சொல்லியிருப்பார் என்று கருதுகிறேன். உள்ளபடியே சிறைச்சாலையில் உள்ளவர்களிடத்தில் ரத்தம் கிடைப்பதாக இருந்தாலும் கூட அதற்கும் எந்த அளவு கிடைக்கும், எந்த அளவு கொடுக்க முன் வருவார்கள் என்பதைப் பொறுத்திருக்கிறது. சில குரூப் ரத்தம் 50, 100 பேர்களிடத்தில் கிடைக்காத கட்டத்தில் இருக்கலாம். ஆகவே, இதை பொது மக்கள் இயக்கமாக உருவாக்கினால் இது பயன்படும். தேவைப்பட்ட நேரத்தில் உடனடியாக ஒரு குரூப் ரத்தம் வேண்டுமென்றால், கிடைத்தால் நல்லது. பிரஷ் பிளட் ப்ரம் தி டோனர், அப்படிக் கிடைப்பது நல்லது. அந்த இயக்கத்தை வெற்றி பெறச் செய்ய சட்டமன்ற உறுப்பினர்கள் முன்வரவேண்டும். அது மட்டுமல்ல. 70 தடவை தம் ஆயுளுக்குள் ரத்த தானம் கொடுத்தவர்கள் 50, 60 வயதிற்குள்ளாக சென்னையில் சிலர் இருக்கிறார்கள். மூன்று மாதத்திற்கு ஒரு முறை ரத்த தானம் செய்யலாம். இந்த இயக்கம் வெற்றி பெறவேண்டும்.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவர் அவர்களே, ரத்த தானம் கொடுப்பதில் கொடுக்கிறவர்களுக்குக் கெடுதல் என்று எண்ணுகிறார்கள். அது சம்பந்தமாக அரசாங்கம் விளம்பரம் செய்து



அந்த வீக்னெஸை எப்படிப் போக்குவது, பாதுகாப்பு எப்படிக் கொடுப்பது என்பதை விளக்கி ரத்த தானம் கொடுப்பவர்களை ஊக்குவிக்கும் முறையில் தொகையை அதிகப்படுத்த உண்டான ஏற்பாடு செய்தால் பொதுமக்கள் நிச்சயம் இதற்கு ஒப்புவார்கள். இதை அரசாங்கம் செய்ய முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** ரத்தம் கொடுப்பவர்களிடமிருந்து எடுக்கப்படுகிற அளவு 300 சி.சி. மிகக் குறைந்த அளவு. அந்தக் குறைந்த அளவு ரத்தம் எடுக்கப்படுவதை உடம்பு இயற்கையாகவே ஈடு செய்து கொள்ளுகிறது. It is merely compensated by nature. இயற்கையால் ரத்தம் விருத்தியாகி விடுகிறது. ஆனால், 45, 50 வயதுக்கு உட்பட்டவர்களிடமிருந்துதான் ரத்தம் எடுக்க வேண்டும். வயதான பிறகு எடுத்தால் இவ்வாறு ஈடு செய்கிற ஆற்றல் அவர்களுக்குக் குறைந்து விடுகிறது. யாரும் தரலாம் என்ற கருத்து நாடெங்கும் சொல்லப்படுகிறது. ரத்தம் தருகிறபொழுது ரத்தம் எடுப்பவர்களுக்குத் தகுந்த டையட் கொடுக்க சத்துள்ள உணவு அதாவது பால், ரொட்டி போன்றவைகள் தர ஏற்பாடு இருக்கிறது. ஏழைகளாக இருந்து அதற்காக அவர்கள் நிதி பெற விரும்பினால் ரூ. 10 கொடுக்கும் முறை இருக்கிறது. இதை அதிகப்படுத்தினால் தொழில் நோக்கு வந்து விடும் என்ற கருத்து இருக்கிறது. ஆகவேதான் கடந்த இரண்டு திங்களுக்கு முன்னால் அகில இந்திய ரீதியில் ரத்த தானத்தை ஊக்குவிக்கும் இயக்கம்—அகில இந்தியாவில்—தமிழ் நாட்டிலும்—சென்னையில் நடைபெற்றது.

**திரு. ஏ. சுப்ரமணியம் :** தலைவர் அவர்களே, இந்த பிளட் பாங்கைத் தொடங்குவதற்குச் சில நிபந்தனைகள் இருக்கின்றன. ரிஜிஸ்டர்டு மெடிகல் பிராக்டிஷனர் வேண்டும், குவாலிஃபைடு நர்ஸ் வேண்டும். ஏர் கண்டிஷன் அறை வேண்டும் என்று. சாதாரணமாக அறுவை சிகிச்சைக்கு ஏர் கண்டிஷன் அறை தேவை. காரணம், கண்டாமினேஷனுக்கு அதிக வாய்ப்பு இருக்கிறது. இருந்தாலும் கூட அங்கு ஏர் கண்டிஷன் அறை இல்லை. சீல்டு பாட்டிலில் பிளட் வருகிறது. அப்படி இருக்கும்பொழுது ஏர் கண்டிஷன் ரூம், ரிஜிஸ்டர்டு மெடிகல் பிராக்டிஷனர், குவாலிபைடு நர்ஸ் என்பன போன்ற நிபந்தனைகளைச் சொல்லி அதனால் லைசென்ஸ் மறுக்கப்படுகிற நிலைமை இருக்கிறது? லைசென்ஸ் இல்லாமல் பலர் பிளட் பாங்க் நடத்துகிறார்கள். எனவே, இந்த நிபந்தனைகளைத் தளர்த்த அரசுக்கு ஏதாவது உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, பிளட் பாங்க் நடத்துவதற்கு லைசென்ஸ் கொடுப்பது என்ற முறை இல்லை. காரணம், அது வியாபாரம் அல்ல. எங்காவது நடைபெறுமானால் தகுந்த நடவடிக்கை எடுக்கலாம். கனம் உறுப்பினர் திரு. சுப்ரமணியம் எங்கு நடைபெறுகிறது என்று சொன்னால் விஜிலன்சுக்குத் தெரிவித்து நடவடிக்கை மேற்கொள்ளலாம். பிளட் பாங்குக்கு லைசென்ஸ் கொடுப்பது என்று ஒரு முறை கிடையாது. யாராவது தனிப்பட்டவர்கள் ரத்தம் எடுக்க, எமர்ஜன்சி கேஸுக்கு யாருக்காவது சிகிச்சை செய்ய இன்னொருவரிடமிருந்து பிளட் டிரான்ஸ்பியூஷன் செலுத்துகிற முறையில் அந்த இடத்தில் வேண்டுமென்றால் செய்யலாம்.

ரத்தம் சேகரிக்கும் நிலையங்களில் சேகரிக்கும் ரத்தம் தூய்மை உடையதாக, கெடுதலுக்கு உட்படாது இருக்கவேண்டும். எடுத்த ரத்தம் கெட்டுவிட இடம் தரக்கூடாது. ஆகவே, சேகரித்து வைக்கும் நிலையங்களில் இந்தப் பாதுகாப்புத் தேவை. ஒருவரிடமிருந்து எடுக்கப்படும் ரத்தம் நேரடியாக இன்னொருவருக்குச் செலுத்தப்படக்கூடிய இடங்களில் இந்தக் கன்டிஷன் தேவை இல்லை. சேகரித்து வைக்கப்படும் நிலையங்களுக்கு நிச்சயமாகப் பாதுகாப்புத் தேவை. இல்லாவிட்டால் பல தீமைகள் விளையலாம்.

**திரு. பெ. சீனிவாசன் :** தலைவர் அவர்களே, சில மருத்துவ வட்டாரங்களிலாவது குவாலிஃபைடு பிளட் டோனர்ஸ் என்ற ஒரு பட்டியலைத் தயாரித்து அவர்களுக்கு பீரியாடிகல் மெடிக்கல் செக் அப் செய்து அவர்களுக்குச் சத்துணவைக் கொடுத்து அவர்களிடமிருந்து வேண்டும்போது ரத்தம் எடுத்துக் கொள்ளும் முறைக்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, இந்த ரத்தம் கொடுப்பதற்குப் பட்டியல் இருக்கிறது. அதாவது கொடுக்க விரும்புகிறவர்கள் பட்டியல். நாளை காலை 8 அல்லது 9 மணிக்கு ரத்தம் வேண்டுமென்று இன்றைக்குத் தெரிவித்தால் அவர்களுக்கு சௌகரியப்பட்டால்தான் வந்து கொடுப்பார்கள். தங்களுக்கு சௌகரிப்படாவிட்டால் ரத்தம் கிடைக்காது. உறுப்பினர் திரு. சீனிவாசன் கொடுப்பதாய் இருந்தாலும் அவருக்கு வாய்ப்பு இருக்காது. அந்த வாய்ப்பு உள்ளவர்களுக்கும் ஒரு சிலருக்கும் ஏற்பாடு செய்வது என்பது கடினமான காரியம். ஏனென்றால் ரத்தம் கொடுப்பவர்களுக்கு நல்லெண்ணத்துடன் கொடுக்க வேண்டிய





நிலைமை இருக்க வேண்டும். கட்டாயப்படுத்தப்படுகிறார்கள் என்ற சூழ்நிலை இருக்கக் கூடாது. ஒரு வேளை அது அடிப்படை உரிமைகளைப் பாதிக்கக்கூடியதாக இருக்கும்.

**திரு. கோவை செழியன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது ரத்த தானம் செய்பவர்கள் நேராக மருத்துவ மனைக்குச் சென்று கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, பலர் பணத்திற்காக செல்லுவதை நாம் இயற்கையாகவே பார்க்கிறோம். வறுமையின் காரணமாகக் கூட தங்களுடைய ரத்தத்தைக் கொடுத்து அன்றைய வாழ்க்கையை நடத்தலாம் என்று எண்ணுகிறார்கள். ஆகவே, வசதி உள்ளவர்களிடம் இருந்து ரத்த தானம் பெறுவதற்கு ஒரு மொபைல் யூனிட் ஏற்பாடு செய்ய வேண்டும். ஆஸ்பத்திரிக்குச் செல்ல கஷ்டப்படுகிறார்கள். பெரிய நிறுவனங்கள், தொழிற்சாலைகள், ஆபீஸ் முதலிய இடங்களுக்குச் சென்று எடுத்தால் ரத்தம் தருகிறவர்களுக்கு ஒரு இன்சென்டிவ் மாதிரி புரொமோஷன் கொடுக்க ஏற்பாடு செய்யலாம். இப்படி அசெம்பிளிப் பக்கம் மொபைல் யூனிட் வந்தால் பல சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். அதற்கு நானும் தயாராக இருக்கிறேன். ஆஸ்பத்திரிக்குப் போய் வெயிட் பண்ணுவது என்பது மிகவும் சிரமமாக இருக்கிறது. அதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** மாண்புமிகு உறுப்பினர் சொல்லுவது அதை ஒரு இயக்கமாக நடத்துவது என்பது. ஒரு வட்டாரத்தில் இந்த குரூப் 50 அல்லது 100 மாணவர்களோ, தொழிலாளர்களோ, வேறு சிலரோ ரத்தம் கொடுக்க முன் வந்தால் அந்த இடத்திற்குச் சென்று பெற்றுக் கொள்வதற்கு இப்போது ஏற்பாடு இருக்கிறது. வாலன்டரி ஆர்கனைசேஷன் மூலம் ரத்தம் கொடுப்பவர்களிடமிருந்து முன் கூட்டியே அறிவிப்பு செய்யப்பட்டு ரத்தம் தரப்படுகிறது. சட்டமன்ற உறுப்பினர்களில் யார் யார் ரத்தம் கொடுக்கிறவர்கள் என்ற பட்டியல் எடுக்கப்படவில்லை. ஏற்கனவே அது சம்பந்தமான ஒரு நிகழ்ச்சியில் அவர்கள் கலந்து கொள்ளவில்லை. 50 வயதுக்கு மேற்பட்டவர்களிடமிருந்து ரத்தம் எடுக்க மாட்டார்கள். முதலில் ரத்தம் கொடுப்பவர்களின் உடல் நலம் பரிசோதிக்கப்படும். ஆகவே, எல்லா சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்தும் ரத்தம் எடுக்கப்படும் என்ற உறுதியைக் கூற என்னால் இயலாது.

[1975 நவம்பர் 12

வெங்கல் கிராமத்திலுள்ள ஒன்றிய மருத்துவமனை

* 307 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம், வெங்கல் கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய மருத்துவமனையை அரசு மேற்கொள்ளும் செயற்குறிப்பு ஆய்வில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

(முற்பகல் 9-30)

திரு. கா. வேழவேந்தன் : இந்த ஊராட்சி ஒன்றியப் பகுதியில் அரசாங்க மருத்துவமனையில்லை. பிணியாளர்களும் அதிகமான அளவுக்கு வந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த வெங்கல் கிராமத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய மருத்துவமனைக்கு ஒரு முக்கியத்துவம் கொடுத்து, இதனை அரசே ஏற்றுக்கொள்ள முன் வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இதே போல பல்வேறு மருத்துவ மனைகள் இருக்கிற காரணத்தினால் 'priority list of each dispensary' வைத்துக்கொண்டு அந்த அடிப்படையில் பரிசீலிக்கப்படுகிறது. எடுத்துக்கொள்வதற்கு முன் அங்கே ஒரு மருத்துவ மனைக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்துகொடுக்க முடியுமா என்பதும் ஆலோசிக்கப்படுகிறது. அதன் பின்னரே முடிவு எடுக்கப்படும்.

உணவுக் கலப்படக் குற்றங்கள்

* 308 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலப்படக் குற்றங்களைக் கண்டுபிடிக்க தனி போலீஸ் படை ஏற்படுத்த அரசு உத்தேசித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், விபரம் யாது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) இல்லை.



1975 நவம்பர் 12]

திரு. என். கிட்டப்பா : உணவுப்பொருளில் செய்யப்படுகிற கலப்படங்களே பல வியாதிகளுக்கு மூலகாரணமாக இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். எனவே அவசரகால நிலைமையைப் பயன்படுத்தி, கலப்படம் செய்பவர்களைத் தடுக்க தீவிரமான தனி நடவடிக்கையை எடுக்க அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தனி நடவடிக்கை என்பது ஒன்று. தனியாகப் போலீஸ் படையை ஏற்படுத்த வேண்டுமென்பது ஒன்று. போலீஸ் படையினால் இந்தக் கடமையை எந்தவகையில் நிறைவேற்ற முடியும் என்பதை ஆலோசித்துப் பார்க்கிறபோது—இதற்கென்று அவர்களுக்குத் தனித் தேர்ச்சி இருந்தால் அல்லாது முடியாது என்பது புலனாகும். இன்றைக்கு உணவுக் கலப்படத்தை துப்புரவு ஆய்வாளர் உடல்நல ஆய்வாளர்—இப்படிப்பட்டவர்கள் மூலமாகத்தான் கண்டுபிடிக்க எளிதாக இருக்கும். கலப்படம் செய்வதைத் தடுக்க தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ள இவர்களிடம்தான் அதிகாரமும் இருக்கிறது. அந்தப் பணியைச் சிறந்த முறையில் நிறைவேற்ற இந்தத் துறை தொடர்ந்து நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

திரு. கோவை செழியன் : ஒரு தனி மனிதன் விஷம் வைத்து யாரையாவது கொன்றுவிட்டால் அவனுக்குத் தூக்குத் தண்டனை தர சட்டம் இருக்கிறது. கலப்படம் செய்கிறவர்கள்—சமுதாயத்தில் பலபேரைக் கொல்கிற குற்றத்தைச் செய்கிறார்கள். ஆகவே இத்தகைய உணவுக் கலப்படம் செய்கிறவர்களைக் கண்டுபிடித்து, உடனடியாகத் தூக்குத் தண்டனை அளிக்கக்கூடிய வகையில் சட்டத்தில் ஒரு திருத்தத்தைச் செய்வதற்கு அரசு முன்வருமா ? பருப்புக்குப் பதிலாக விஷவிதைகள், கடுகுக்குப் பதிலாக விஷ விதைகள் ஆகியவற்றைக் கலப்படம் செய்கிறவர்களுக்கு உடனடியாகத் தூக்குத் தண்டனை அளிக்க இந்த அரசுக்கு எண்ணம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மாண்புமிகு உறுப்பினர் தூக்குத் தண்டனையில் அக்கறையாக இருக்கிறார்கள். தண்டனை சமுதாயத்தைத் திருத்த இருக்கவேண்டுமே தவிர ஒரு பகுதியை ஒழிப்பதற்கு இருக்கக்கூடாது.

அதேநேரத்தில் குற்றங்களைக் கண்டுபிடித்து, இன்னும் செம்மைப்படுத்த வேண்டும் என்பது அகில இந்திய ரீதியிலேயே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. புது டில்லியில் மக்கள் நல் வாழ்வு குடும்பநல அமைச்சகத்தில் மைய அரசு உள்பொருள் கண்

காணிப்புக் குழு ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. அந்தக் குழுவினர் தமது பணியைச் செய்யுங்கால் அவர்களுக்கு எல்லாவிதமான உதவியையும், ஒத்துழைப்பையும் அளிக்குமாறு காவல்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல், மக்கள் நல்வாழ்வுப் பணிகள் குடும்பநலத் துறை இயக்குநர் ஆகியோரையும், தொடர்புடைய ஏனைய அதிகாரிகளையும் மாநில அரசு கேட்டுக்கொண்டது.

இன்னும் சொல்லப்போனால் நாடாளுமன்ற ஆலோசனைக் குழு பின்வரும் கருத்தினைத் தெரிவித்துள்ளது. அதாவது மாநில அளவில் காவல்துறை டெபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஒருவரின் தலைமையிலும், கோட்டத் தலைமையிட அளவில் காவல்துறை சூப்பிரண்டெண்டெண்டு தலைமையிலோ அல்லது மக்கள் நல்வாழ்வுப் பணிகள் இயக்குநர் தலைமையிலோ உணவுக்கலப்பட வழக்குத் தொடர்துறை ஒன்று அமைக்கப்படவேண்டும் என்று தெரிவித்துள்ளது. இப்போதுள்ள முறைகளை இன்னும் தீவிரப் படுத்தும் முயற்சிகள் நடைபெறுகின்றன. இன்னும் திட்ட வட்டமாக முடிவு ஏற்படவில்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இப்போது கலப்படம் செய்வதைக் கண்டுபிடித்துத் தடுக்கக்கூடிய அதிகாரம் சானிடரி இன்ஸ்பெக்டர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவர்களுக்கு சானிடரி சம்பந்தப்பட்ட இதர பொறுப்புகளே இருப்பதால் வேறு எந்த இலாக்காவுக்காவது கொடுப்பது நல்லது அல்லவா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** சானிடரி இன்ஸ்பெக்டர்கள் என்றால் துப்புரவுப் பணிகளை மட்டும் கவனிப்பவர்கள் என்று கருதக் கூடாது. அவர்கள் பஞ்சாயத்துத் துறையை, நகராட்சித் துறையைச் சார்ந்தவர்களாகப் பணியாற்றுகிறபோது உணவுக் கலப்படத்தைக் கண்டுபிடிக்கிற வாய்ப்பு இருக்கிறது. நலத்துறை அலுவலகத்தில் ஹெல்த் ஆபீசராக பணியாற்றுகிறவர் இது போன்ற உணவுக் கலப்படக் குற்றத்தைக் கண்டுபிடிக்கவும் வாய்ப்பு இருக்கிறது. இவர்கள் ஏதாவது தவறாக நடந்து கொண்டார்கள் என்றால் அதைத் திருத்த முயற்சிக்கலாம்.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** இப்பேர்ப்பட்ட உணவுக் கலப்படத்தைத் தடுக்கச் சட்டம் இருக்கிறது. பொதுவாக அந்தச் சட்டத்தை உணவுக் கலப்படத்தைக் கண்டுபிடிக்க இருக்கிற அதிகாரிகளே தவறான வழியில் பிரயோகம் செய்கிறார்கள். ஒன்று தங்களுக்கு யாராவது விரோதமாக இருந்தால் அவர்களைப் பழி வாங்கப் பயன்படுத்திக்கொள்வது. இல்லையென்றால் அதன்மூலம்

வினாக்கள்—விடைகள்



தங்கள் வசதிகளைப் பெருக்கிக்கொள்ளப் பயன்படுத்திக்கொள்வது என்று இருக்கிறார்களே தவிர உண்மையான கலப்படக் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** paraphrase பண்ணிக்கொண்டு இருப்பதிலே என்ன பயன்? கேள்வியாகப் போடுங்கள்.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** அகப்பட்டுக் கொண்டவர்களுக்குக் கடுமையான தண்டனை கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. இதை எல்லாம் உத்தேசித்து உயர்மட்டத்திலுள்ள பொறுப்புள்ள அதிகாரிகளிடம் இந்த அதிகாரத்தை ஒப்படைக்க வழிவகை செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** சட்டத்தை அமல்படுத்துகிற அதிகாரம் நகரசபையில், முனிசிபாலிட்டியில் உள்ள அதிகாரிகளிடம்தான் இருக்கிறது. ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஆணையர், அதற்கடுத்து இருக்கிற அலுவலர்களிடம் அந்த அதிகாரம் இருக்கிறது. மாநில மட்டத்தில் அசிஸ்டெண்ட் டைரெக்டர், டைரெக்டரிடம்தான் அந்த அதிகாரம் இருக்கிறது. ஆகவே, பொறுப்புள்ள பெரிய அதிகாரிகளிடத்தில் அந்தப் பொறுப்பைக் கொடுத்திருப்பதில் பிரச்சினை இல்லை. சாதாரண அலுவலர்கள் தவறு செய்கின்றவர்களாக இருக்கிறார்கள் என்றால், அந்தத் தவறுகளைக் கண்டுபிடிக்கிற ஆற்றல் நம்முடைய சமுதாயம் பெற்றிருக்கக் கூடிய நிலையில்தான் எதுவும் சரியாக இருக்கும்.

கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் கலப்பட தடைச் சட்டம் சரியாகச் செயல்படாத அளவுக்குக் கீழே உள்ளவர்கள் யார் தவறு செய்கிறார்கள் என்பதை, தவறு செய்பவர்களுக்கு எந்த அதிகாரிகள் உடந்தையாக இருக்கிறார்கள் என்பதை திரு. எட்மண்ட் அவர்களோ, மற்றவர்களோ என்னிடம் சொல்லியிருந்தால் நானே கூட இன்னும் அக்கறையோடு இதுபற்றிக் கவனித்திருக்க முடியும். யாரும் என்னிடம்—திரு. எட்மண்ட் உட்பட—இதுவரை சொன்னது கிடையாது. எங்காவது தவறு நடந்தால், அதை உடனடியாக எங்கள் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு—அது பற்றித் தெரிந்தவர்கள் முன்வரவேண்டும்.

**திரு. பெ. சீனிவாசன்:** கலப்படக் குற்றங்களைக் கண்டுபிடிக்க தனி போலீஸ் படை எதற்கு என்றால்—இப்போது ஹெல்த் இன்ஸ்பெக்டர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. என்றாலும் உடனடியாக அவர்களைக் கைது செய்ய அதிகாரம் இல்லை.

பிராசிக்யூட் செய்யும்போது நூற்றுக்கு 99 பேர் தப்பித்து விடுகிறார்கள். விருதுநகரில்கூட கலப்படம் செய்பவர்களைப் பிடித்தார்கள். அதுவும் சாதாரண குற்றம் இல்லை. சாம்பார், ரசப்பொடியில் இரும்புத் தூளையே கலக்கிற பயங்கரமான குற்றத்தைச் செய்கிறார்கள். ஆரம்பத்தில் அவசர நிலையைப் பயன் படுத்தி அவர்களைப் பிடித்தபோது கொஞ்சம் பயம் ஏற்பட்டு அது நின்றது. தொடர்ந்து அவசரகால நிலையைப் பயன்படுத்தி கலப்படம் செய்பவர்களைப் பிடித்துத் தண்டிக்க தனி போலீஸ் படையை ஏற்படுத்தும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னை இரண்டு மூன்று கோணங்களிலேயிருந்து எடுத்துக் கொள்ளப்படவேண்டும். பெரிய முதலாளிகள் கலப்படம் செய்வார் களானால் அவர்கள் எந்த இடத்திலே வணிக நிலையம் வைத்திருக் கிறார்களோ அந்த இடத்திலே கலப்படம் செய்யப்படுவதாக சில செய்திகள் வருமானால் அதைத் தனியாகத் துப்பறிந்து கண்டு பிடிக்க வேண்டியுள்ளது.

அப்படியில்லாமல் சாதாரண வியாபாரிகள் அந்தந்தக் கடை களிலே கொடுக்கப்படுகிற சாமான்களிலே ஏற்படுகிற கலப்படத் தைத்தான் இப்படிப்பட்ட துப்பறிவாளர்கள் காணமுடியும். அப்படி கலப்படம் என்று சொல்லி எடுக்கப்படுகிற பண்டங்கள் ஆய்வுக்கு அனுப்பப்பட்டு கலப்படம் எவ்வளவு இருக்கிறது என்று கண்டுபிடிக்கப்படுகிறது. சில பண்டங்களிலே கலப்படம் எவ்வளவு பர்சன்டேஜ் இருக்கிறது என்று கண்டுபிடிக்கப்படுகிறது. பாலில் தண்ணீரைக் கலந்தால் எவ்வளவு பர்சன்டேஜ் கலப்படம் செய்யப் பட்டிருக்கிறது என்பதைப்பொறுத்து கலப்படம் இருக்கிறது. அதேபோன்று வெண்ணெயிலே கூடுதலாக மாவாக இருக்கிற பொருளைக் கலப்படம் செய்தால் அதிலே இருக்கிற பர்சன் டேஜைப் பொறுத்து கலப்படம் இருக்கிறது.

இப்படி வெவ்வேறு பொருள்களை ஆய்வுக்கு அனுப்பி எவ்வளவு கலப்படம் இருக்கிறது, எத்தனை பர்சன்டேஜ் இருக்கிறது என்று ஆய்வு செய்து அதற்குப் பிறகுதான் நீதிமன்றம் போகவேண்டி யிருக்கிறது. ஆகவே, இந்த ஆய்வை இன்னும் பரவலாகச் செய்யக்கூடிய முறையில் மாவட்டத்திற்கு ஒரு இடம் அல்லது இரண்டு இடங்கள் என்ற முறையிலே வைத்து ஆய்வு செய்தல், புள்ளி விவரங்களைச் சேகரித்தல் போன்றவற்றைத் தருவதற்காக நம்முடைய துறையின் மூலமாக அலுவலகங்கள் திறக்கப்பட இருக் கின்றன. அவைமூலமாக இந்தப் பணி செம்மையுற நடைபெற வழிசெய்யலாம்.



**திரு. எம். சுரேந்திரன்:** இப்போது கலப்படச் சட்டம் அமலில் இருக்கிறது. ஆனால் கலப்படத்தைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கவேண்டியவர்கள் சரியாக நடவடிக்கை எடுப்பதில்லை என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மையாகும். இதற்கு அடிப் படையாக உள்ள ஒரு காரணம் நகரசபைகளிலே இருக்கின்ற, இந்த கலப்படத்தைக் கண்டுபிடிப்பதற்காக இருக்கின்ற, அதிகாரி கள் பல வருடங்கள் ஒரே ஊரிலே இருப்பதால்—தொடர்ந்து ஒரே இடத்திலேயே இருந்துகொண்டு இருப்பதால்—அவர்களுக்குள் ஒரு உறவு ஏற்பட்டு கலப்படத்தைக் கண்டுபிடிக்காமல் வருமானத்தைப் பெருக்கிக்கொள்ளக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே அவர்களை வெவ்வேறு இடங்களுக்கு அடிக்கடி மாற்றுவது இதைக் கண்டு பிடிப்பதற்கு உதவியாக இருக்கும். கலப்படத்தைத் தடுப்பதற்கு ஏற்கனவே சொல்லப்பட்டு இருக்கிற நடவடிக்கைகள் இருந்தும் கூட நடவடிக்கைகள் மேலோங்கியிருக்கிற நேரத்திலே புதிதாக நடவடிக்கைகளை எடுக்காமல் ஏற்கனவே இருக்கிற நடவடிக்கை களைப் பயன்படுத்தியும் அது பலனளிக்கவில்லையென்று தெரிந்தும் கூட பேசாமல் இருப்பது நல்லதல்ல என்பதால் விசேஷமாக புதிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு உறுப்பினர், சானிடேரி இன்ஸ்பெக்டர்கள் நகரமன்றங்களிலே ஒரே இடத்தி லேயே தொடர்ந்து நீண்டநாட்கள் பணியாற்றக்கூடாது என்று சொன்னார்கள். அது அரசாங்கக் கொள்கை. நகரமன்றத் தலைவர்கள் அவரவர்களுடைய நகரமன்றங்களிலே இருக்கின்ற நிலைமைகளுக்கேற்ப கேட்டுக்கொள்கிறபடி அந்த அடிப்படையிலே மாற்றப்படுகிறார்கள்., அப்படி மாற்றுவதற்கு அவர்களுக்குச் சில உரிமைகள் இருக்கின்றன. அந்த லோகல் போர்ட்ஸ் உரிமை களிலே அரசுத் துறை அதிகமாகத் தலையிடக்கூடாது. அவர்கள் விரும்புகிறபோதெல்லாம் நாங்கள் மாற்றித் தருகிறோம். எந்த நகரசபையிலாவது அப்படிப்பட்ட குறைகள் இருந்தால், அவை அந்த நகரமன்றத் தலைவர்கள் மூலமாகத் தெரிவிக்கப்பட்டால் நடவடிக்கை எடுக்கலாம்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** தலைவர் அவர்களே, மஞ்சளிலே ஈயம் இருக்கிற காரணத்தினாலே கலப்படச் சட்டத்தின்கீழே நடவடிக்கை எடுக்கவேண்டிய நிலைமை இருக்கிறது. உற்பத்தி செய்கின்ற இடத்திலேயே—அந்த பூமியிலேயே—லெட் அதிகமாக இருக்கக்கூடிய பூமியாக இருந்தாலும்கூட மஞ்சளிலே அதிகமாக ஈயக் கலப்படம் ஏற்படுகிறது. இப்படி உற்பத்தியிலே ஒரு பங்கு

ஏற்படுவதைத்தவிர அதைப் பாலிஷ் செய்யக்கூடிய நேரத்திலே குரோமெட் லெட் போட்டு பாலிஷ் செய்யப்படும்போது அதிகப் படியாக கலப்படம் ஏற்படுகிறது. இப்படி பாலிஷ் செய்வதற்குப் பயன்படுத்துகின்ற லெட்டைக் குறைத்துக்கொள்ளும்படி அவர் களுக்கு உத்திரவு பிறப்பிக்க அரசு ஆவன செய்யுமா? அது மட்டு மல்லாமல் உற்பத்தியிலேயும் லெட்டைக் கலக்காமல் இருக்கிற முறையில் உரம்போடக்கூடிய வழியை அரசு உத்திரவுமூலம் தெரிவிக்குமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, அம்மையார் அவர்கள் கேட்ட கேள்வி, ஏதோ இயற்கையாகவே மஞ்சள் தயாரிக்கப்படுகிறபோது இயற்கையாகவே அதிலே அதிகமாக லெட் கலந்துவிடுகிறது என்பது போலவும், அதிலே அதிகமான அளவிற்கு புரப்போர்ஷனேட்டாகப் பார்க்கிறபோது பர்சன்டேஜ் அதிகமாக இருக்கிற காரணத்தினாலேயும் வியாபாரிகள் தண்ட னைக்கு ஆளாகிறார்கள் என்று தெரிவித்தார்கள்.

இந்தச் செய்தியை இரண்டு மூன்று முறைகள் ஆய்வுசெய்யச் சொல்லி அனுப்பி பரிசீலனைசெய்து பார்த்துச் சொல்லும்படி கேட்டோம். அவர்கள் ஆய்வு செய்து பார்த்து குறைந்த பர்சன் டேஜ் லெட் இருப்பதற்கு நியாயம் உண்டு, ஆனால் இவர்கள் சொல்கிற மஞ்சளில் செயற்கையாகக் கலப்படம் இருக்கிறது, புரப்போர்ஷன் அதிகமாக இருந்தால் அதனால் உடலுக்கும் உயிருக்கும் தீங்கு ஏற்படும், இயற்கையாக இருப்பதைவிட அதிகமாக லெட் இருப்பதாகத் தெரிவித்துவிட்டார்கள். அதனால் தான் இப்படிப்பட்ட சலுகைகள் காட்டமுடியவில்லை. ஆனால் அவர்கள் தாங்கள் செய்யும்போது லெட் கலப்பதில்லை என்றும், தானாக அதிலே இருப்பதாகவும் தெரிவித்து இருக்கிறார்கள்.

**திரு. ந. தருமலிங்கம்:** இப்போது கலப்படம் செய்கிற வியாபாரிகளைத் தண்டிப்பதோடு, அவர்களுடைய லைசென்ஸ் களையும். உடனடியாக ரத்துசெய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** கலப்படம் செய்யப்பட்ட தாக நீதிமன்றத்திலே உறுதி செய்யப்படவேண்டும். நீதி மன்றத்திலே உறுதிசெய்யப்பட்டதற்குப் பின்னால் நீதிபதிகள் கொடுக்கிற தண்டனையின்படி நாம் நடவடிக்கை எடுக்க முடியும். அகில இந்திய அடிப்படையிலே பல விதிமுறைகள் இருக்கின்றன என்று தெரிவிக்கிறார்கள், அதன்படி நாம் நடவடிக்கை எடுக்கிறோம்.



**திரு. ந. சோமசுந்தரம்:** தலைவர் அவர்களே, இந்தக் கலப்படம் சம்பந்தமாக தண்டனை வழங்கும்போது விற்கின்ற கடைக்காரர் களுக்குத்தான் தண்டனை வழங்கப்படுகிறது, அதை உற்பத்தி செய்கின்ற மொத்த வியாபாரிகளுக்கும் அல்லது நிறுவனங் களுக்கும் சேர்த்து நீதிமன்றத்திலே வழக்கு தொடரவும் தண்டனை வழங்கவும் அரசு வகை செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** சட்டத்தின் முறையிலே திருடுகிறவனுக்கு மட்டும் தண்டனை கொடுப்பது முறையல்ல, திருட்டு நகையை வைத்திருக்கிறவனுக்கும் தண்டனை அளிக்கப்படு கிறது. ஆகவே எவன் கலப்படம் செய்தாலும் அதை விற்பவனும் அதற்கு உடந்தையாக இருக்கிறான், மக்களுக்கு ஊறு விளைவிக் கின்ற முறையிலே யார் கலப்படத்திலே ஈடுபட்டாலும் தண்டிக்கப் படுகிறார்கள்.

**திரு. கே. எ. வகாப்:** பேரூராட்சி, நகராட்சிகளிலே இருக்கிற சானிடரி இன்ஸ்பெக்டர்கள் குறிப்பிட்ட அளவிற்குத்தான் கலப்பட சோதனைகள் செய்யலாம் என்ற முறை வைத்திருக் கிறார்கள். இதைக்கூட நான் ஏற்கனவே அமைச்சரிடத்திலே சொன்னேன். அப்போது அவர்கள் சொன்னார்கள் அப்படி இல்லை என்று. ஆனால் நான் பார்க்கிறபோது அப்படி ஒரு வரையறை வைத்திருக்கிறார்கள். ஒரு அளவிற்கு மேலே செய்தால் பொருளாதாரத்திலே கமிட்மெண்ட்ஸ் என்ற காரணத்தினாலே ஒரு மாதத்திற்கு பாலில் கலப்படம் என்றால் இவ்வளவு, மளிகைக் கடைகள் என்றால் இவ்வளவு என்று ஒரு வரையறை வைத்திருக் கிறார்கள், இதனால் கலப்படம் அதிகமாக இருக்கிறது. அதைத் தளர்த்தி கலப்படம் எல்லா இடங்களிலும் கண்டுபிடிக்கப்படு வதற்கு வாய்ப்பு ஏற்படுத்த அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** அப்படியொரு விவரம் என்னிடத்திலே இல்லை. இவ்வளவு கேஸ்களாவது போட வேண்டுமென்றுதான் இருக்கிறதே தவிர இவ்வளவுக்கு மேல் கூடாது என்று இல்லை என்றுதான் என்னிடத்திலே தெரிவித் தார்கள். குறைந்த பட்சம் இவ்வளவு வழக்குகள் போடவேண்டு மென்றுதான் இருக்கும். இப்படி ஒரு முறை இருக்கமுடியாது. அதைப்பற்றி என்னிடத்திலே தகவல் இல்லை, தனிக் கேள்வி போட்டால் சொல்ல முடியும்.

**திரு. கே. என். குமாரசாமி:** கலப்படம் சம்பந்தமாக ஒரு கேஸிலே நானே பாதிக்கப்பட்டிருக்கிறேன், நானே பிடித்துக் கொடுத்தேன், தப்பித்துவிட்டார்கள். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விளக்கம் சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம், என்ன குறை என்று சொல்லுங்கள், உங்கள் அனுபவத்தைச் சொன்னால் நேரம் இருக்காது.

**திரு. கே. என். குமாரசாமி:** @

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்கள் கேள்வியை நான் அனுமதிக்கவில்லை.

**திரு. கே. என். குமாரசாமி:** நான் என்னுடைய கேள்வியில் இருக்கிற டிபிகல்டியை சொல்கிறேன். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது என்ன டிமாண்டா, இருக்கிற டிபிகல்டியைச் சொல்ல? கேள்வியைப் போடுங்கள்.

**திரு. கே. என். குமாரசாமி:** கலப்படம் சம்பந்தமாக சானிடேரி இன்ஸ்பெக்டர்களும், கூட இருக்கிற அதிகாரிகளும் சாம்பிள் சரியான முறையிலே எடுப்பதில்லை. இதனால் அவர்கள்மேல் நடவடிக்கை எடுக்க முடியவில்லை. ஆகவே சரியான முறையிலே சாம்பிள் எடுத்து நடவடிக்கை எடுக்கச் செய்ய அரசு முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு அங்கத்தினர் எந்த இடத்திலே இப்படி இக்கட்டான நிலைமை இருக்கிறது என்ற விவரத்தைச் சொன்னால் பரிசீலனை செய்யச் சொல்லலாம்.

## குடிநீர் வழங்கு திட்டங்கள்

** 309 வினா—திரு. என். கிட்டப்பா:*

**திரு. என். கே. பழனிசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகருக்கு குடிநீர் வழங்கும் திட்டம் ஐ. நா. சபை உதவியுடன் செயல்பட ஏற்பாடு செய்யவேண்டுமென மத்திய அரசை, மாநில அரசு அண்மையில் வலியுறுத்தியுள்ளதா?

(இ) ஆம் எனில், விபரம் என்ன?

---

@மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பட்டது.



**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) ஆம்.

(இ) தமிழக அரசு மத்திய அரசின் அனுமதியுடன் "ஐக்கிய நாடு முன்னேற்ற திட்டத்தின்" கீழ், சென்னை நகர் மற்றும் சென்னை புறநகர் வளர்ச்சி திட்டத்திற்கான குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றுதல் போன்ற திட்டத்திற்குத் தேவையான முன்னிலை முதலீடு ஆய்வு (Pre-investment study) செய்யுமாறு கோரியது. இதற்கு ரூ. 2.00 கோடி ஐக்கிய நாடு முன்னேற்றத் திட்டத்தின் கீழ் உதவி கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. மாநில அரசு 1975-76, 1976-77 மற்றும் 1977-78 ஆகிய மூன்று ஆண்டுகளில் அதற்காக ரூ. 43.6 லட்சம் செலவு செய்யவேண்டி உள்ளது என மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கான அனுமதி இன்னமும் ஐக்கிய நாட்டு சபையிலிருந்தும், மத்திய அரசிடமிருந்தும் கிடைக்கப் பெறவில்லை.

**திரு. என். கிட்டப்பா:** தலைவரவர்களே, சென்னை நகருக்குக் குடிநீர் வழங்க பேரறிஞர் அண்ணாவால் உருவாக்கப்பட்ட வீராணம் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இந்த ஐ. நா. சபை உதவி ஏதேனும் அளித்துள்ளதா? அதைப்போலவே மத்திய அரசு ஏதேனும் உதவி அளித்துள்ளதா என்பதையும், வீராணம் திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, இந்தத் திட்டம் வீராணம் திட்டத்தோடு நெருக்கமான தொடர்புடையது அல்ல. வீராணம் திட்டம் நிறைவேறி அதன் தண்ணீர் கிடைத்தாலும்கூட 15 ஆண்டுகள் கழித்து மறுபடியும் புதிய தேவை ஏற்படுகிறது. ஏனென்றால் ஆந்திராவிலிருந்து கிருஷ்ணா நீரைக் கொண்டு வரும் திட்டம் நீண்டகாலமாகக் கருதப்பட்டாலும் பல்வேறு நிலைமைகளாலும் வடிவு எடுக்காததால் வேறுவகையான சாத்தியக் கூறுகள் ஆராயப் பட்டு சென்னை நகர் பெருநகர் என்ற வளர்ச்சி ஏற்படும்பொழுது அடிப்படையை உருவாக்க வேண்டுமென்று பேசப்படுகிறது. வீராணம் திட்டத்திற்கு மத்திய அரசு தன்னுடைய வெளிநாட்டுச் செலாவணி 'கண்டென்ட் ஆஃப் ஃபாரின் எக்சேஞ்ச்' என்ற அந்த அளவிற்கு ஏற்றுக் கொண்டிருப்பதாக என்னுடைய நினைவிலிருந்து தெரிவிக்க விரும்புகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சார், இது வீராணம் திட்டமும் அல்ல, கிருஷ்ணா நதி திட்டமும் அல்ல என்றால் வேறு எங்கேயிருந்து தண்ணீரைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். திருவான்மியூர் போன்ற பலயிடங்களில் கிடைத்திருக்கிறது என்ற தகவல் இருக்கிறதா? இல்லையென்றால் இரண்டு கோடி ரூபாயை வாங்கி என்ன செய்யப் போகிறார்கள் என்பதை அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, கண்டு பிடிக்கிற வேலைக்குத்தான் அவர்கள் வருகிறார்கள். அது எனக்குத் தெரிந்திருந்தால் அவர்களைக் கூப்பிட மாட்டேன்.

**திரு. இராம. அரங்கண்ணல்:** தலைவரவர்களே, சென்னை மாநகரத்திற்குத் தண்ணீர் வழங்கும் இந்தத் திட்டம் கார்ப்பரேஷனால் பரிசீலிக்கப்படுகிறதா? அல்லது மெட்ராஸ் மெட்ரோபாலிடன் டெவலெப்மென்ட் அதாரிட்டியினால் பரிசீலிக்கப்படுகிறதா? அல்லது வீட்டு வசதி வாரியம், குடிசை மாற்று வாரியம் ஆகிய இவைகளினால் பரிசீலிக்கப்படுகிறதா என்பதை அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, இதை நினைத்தவர்களெல்லாம் பரிசீலிக்க முடியாது. சென்னை நகரத்தின் அன்றாடத் தேவைகளை நிறைவேற்றும் முறையில் மாநகராட்சி மன்றம் பல கடமைகளைச் செய்து வருகிறது. நீண்ட காலத் தேவைக்கேற்ற முறையில் 'மெட்ராஸ் மெட்ரோபாலிடன் டெவலெப்மெண்ட் அதாரிட்டி' மூலம் இந்தக் காரியங்கள் பிற துறைகளையும் கலந்து கொண்டு நடைபெறுகின்றன.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** தலைவரவர்களே, ஆந்திராவிலிருந்து கிருஷ்ணா தண்ணீர் நமக்குக் கிடைக்க வேண்டுமென்று கூறும்பொழுது மத்திய அரசு சோமசிலா பிராஜக்ட் சம்பந்தமாக ஒரு நிர்ப்பந்தம் போட்டிருந்தார்கள். அதை இந்த அரசு பரிசீலித்து அந்த நிபந்தனை விலக்கப்பட்டிருக்கிறதா? அல்லது மத்திய அரசு இந்த சோமசிலா பிராஜக்ட் பற்றி கிருஷ்ணா நதியிலிருந்து கொண்டு வரும் தண்ணீருக்கு என்ன செய்ய வேண்டுமென்ற கருத்துரைகளைக் கூறியிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, அதைப் பற்றிய முழு விவரங்களை நான் இந்த நேரத்தில் தர முடியாத வகை இருக்கிறேன். தனிக்கேள்வி இருக்குமானால் விவரங்கள்





முழுவதையும் தர முடியும். ஆனால் மாநில அரசு திரும்பத் திரும்ப மத்திய அரசை, ஆந்திரப் பகுதியிலிருந்து கிடைக்க வேண்டிய தண்ணீருக்குத் தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டும், ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறது. அண்மையிலேகூட வலியுறுத்திக் கேட்டிருக்கிறோம்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** தலைவரவர்களே, ஐக்கிய நாடுகள் சபையிலிருந்து பெறுகின்ற இந்தக் கடன் தொகை தண்ணீர் எங்கே இருக்கிறது என்று கண்டுபிடிக்க மட்டும்தானா? அல்லது விநியோகம் செய்கின்ற செலவுகளுக்கும் சேர்த்தா? ஏற்கனவே போடப்பட்டிருக்கும் திட்டங்கள் பூர்த்தியாகி சென்னை நகரில் குடிதண்ணீர்ப் பஞ்சம் இல்லை என்ற நிலை எந்த ஆண்டில் ஏற்படும் என்ற உறுதியைத் தெரிவிக்க முடியுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, சென்னை நகரம் வளர்கின்ற நகரம். அந்த வளர்ச்சி வேகம் தொடர்ந்து அதிகமாகி, 'ஆக்சலரேட்டட் குரோத்' இருக்கும் என்றுதான் எதிர்பார்க்கப்படுகிறது. சென்னை நகரத்தைச் சுற்றி 'சாட்டிலைட் டவுன்' போன்றவைகள் அமைக்கப்பட்டாலும்கூட வேகமாக வளருகின்ற அந்தப் பகுதிகளுக்கும் தேவைப்படும்.

ஆகவே, சென்னை நகர 400 சதுரமைல் பரப்பளவுக்கு அதிகத் தண்ணீர் தேவைப்படும். மிகவும் வேகமாக வளரும் வசதியும் இருக்கிறது. எனவே, நாம் ஏற்கனவே போட்ட திட்டங்கள் பலனுக்கு வந்தாலும் மறுபடியும் வளர்ச்சிக்கான தண்ணீர் தேவை. ஆகவே, உதவித் தொகை என்று கருதப்படுகிறது. அவர்கள் நம்முடைய திட்டங்கள், ஆலோசனைகள் முதலிய இவைகளைப் பார்த்து நல்லமுறையிலே 'மெட்ராஸ் மெட்ரோபாலிடன் டெவலப்மென்ட் அதாரிட்டி' மூலமாகத் தகுந்த அடிப்படை ஆராயப்பட வழிகோலப்பட்டிருக்கிறது. ஆகவே முன்னோடித் திட்டம் என்ற வகையில் 'பிரீ-இன்வெஸ்ட்மென்ட் ஸ்டடி'க்கு இந்த உதவியை அவர்கள் கொடுத்து, நாமும் அரைக் கோடி ரூபாய் செலவிட்டு அவர்கள் சொல்லும் பரிசீலனை முறைகளைக் கையாண்டு முடிவெடுக்க வேண்டிய காலம் வரும்.

* 310 வினா—திரு. கி. செயராமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சேலம் நகரத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்டிருக்கும் குடிநீர் விநியோகத் திட்டம் எந்நிலையிலுள்ளது ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** சேலம் நகரத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்டிருக்கும் குடிநீர் வினியோக வளர்ச்சித் திட்டம் மூன்று நிலைகளாகப் பிரிக்கப்பட்டு முதல் நிலைப் பணியாகக் குழாய்கள் இரட்டிப்பு செய்யும் வேலை முடிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் நிலையில், கூடுதல் தெளிநீர் தேக்கத் தொட்டி கட்டும் வேலையும் முடிவு பெற்றுள்ளது. சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் வேலையில் ஏறக்குறைய 75 சதவிகிதம் முடிக்கப்பட்டுள்ளது. ஏனைய வேலைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. மூன்றும் நிலையாக நீர் ஏற்றும் இயந்திரங்கள் நிறுவும் வேலைக்கு நீர் ஏற்று இயந்திரங்கள் வாங்குவதற்கான ஆணை பிறப்பிக்கப்பெற்றுள்ளது. இயந்திரங்கள் வந்ததும், வேலை விரைவாக மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்படும்.

**திரு. அ. ஆறுமுகம்:** தலைவரவர்களே, சேலம் நகரத்திற்குக் குடிநீர் பற்றாக்குறை இருக்கிறது. இப்பொழுது காவிரியிலிருந்து சேலம் நகருக்குத் தண்ணீர் எடுத்து வரப்படுகிறது. அது போதுமானதாக இல்லை. அதை விரைவுபடுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, இந்தத் திட்டமே இப்பொழுது முடியப் போகிறது. முடிந்தால் சேலத்தினுடைய தேவை நிறைவேறிவிடும்.

* 311 வினா—திரு. வ. முத்து : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேலம் மாவட்டம், சங்ககிரி நகரப் பகுதிக்கு காவிரியிலிருந்து குடிநீர் வழங்கப்படுவதற்கான திட்டம் ஏதேனும் உள்ளதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** இல்லை.



**திரு. வ. முத்து:** தலைவரவர்களே, சங்ககிரி நகரப் பஞ்சாயத்து மிகவும் வறண்ட பகுதியாக இருக்கிறது. அதற்கு அருகில் உள்ள சிமெண்ட் ஃபேக்டரிக்குக் காவிரி நீர் வருகிறது. அந்தப் பகுதிக்கு அங்கேயிருந்து குடிதண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, வறண்ட பகுதி என்ற அந்த அடிப்படையில் கிடைக்க வேண்டிய தண்ணீருக்கு ஏற்கனவே வழி செய்யப்பட்டு தினம் 3,000 காலன் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் காவிரியிலிருந்து தண்ணீர் கொண்டுவருவதும் ஆலோசிக்கப்பட்டது; 18 கிலோமீட்டர் தொலைவிலிருந்து வரவேண்டும். அதற்கு 36 இலட்சம் ரூபாய் நிர்மாணச் செலவு, 1¼ இலட்சம் ரூபாய் ஆண்டு பராமரிப்புச் செலவு ஆகும். இந்தத் தொகையை ஈடுகட்டுவதற்கான வாய்ப்பு சங்ககிரி பேரூராட்சி மன்றத்திற்கு இல்லை. ஆகவே, சிறிய அளவில் போர் பம்புகள் மூலம் பக்கத்திலுள்ள குவாரி அடிவாரத்திலே கிடைக்கும் தண்ணீரை மேலே கொண்டு வருவதன் மூலம் இந்த நகரின் தேவைக்கு இலட்ச ரூபாய் செலவில் ஏற்பாடாகி இருக்கிறது. தண்ணீர் கிடைக்கிறது.

* 312. Q.—THIRU A. PARANTHAMAN : Will the Hon. the Minister for Health be pleased to state :

(a) the number of schemes that were taken up and sent to the Central Government for approval, under the Accelerated Rural Water Supply Scheme in Chingleput district during the period 1973–74 ; and

(b) the number of schemes approved by the Central Government during this period?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) இதுகாறும் செங்கற்பட்டு மாவட்டத்தில் பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களில் 354 திட்டங்கள் மத்திய அரசிற்கு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளன.

(இ) அதனுள் 1972-73-ல் மத்திய அரசு 40 திட்டங்களுக்கு (சோழவரம், கும்முடிப்பூண்டி, மீஞ்சூர், ஸ்ரீபெரும்புதூர் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில்) அனுமதி அளித்தது. அவ்விதம் அனுமதி அளிக்கப்பட்ட திட்டங்கள் யாவும் 1972-73-ல் மட்டுமன்றி தொடர்ந்து, 1973-74, 1974-75 முதலிய ஆண்டுகளிலும் தொடங்கப்பட்டு, நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, செங்கல்பட்டு மாவட்டத்திற்கு மட்டும் இந்தத் திட்டமா? அல்லது வேறு மாவட்டங்களுக்கும் இப்படிப்பட்ட திட்டங்கள் உண்டா? ஏதாவது அனுப்பியிருக்கின்றார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்தக் கேள்வி செங்கல்பட்டு மாவட்டத்தைப் பற்றியது. ஆகவே, செங்கல்பட்டு மாவட்டத்தைப் பற்றிய விவரம் இருக்கிறது. மற்ற மாவட்டங்களைப் பற்றிய கேள்விகள் வரும்பொழுது அதன் விவரங்கள் தரப்படும்.

## பென்னலூர்பேட்டை துணைவட்டம்

* 313 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள பென்னலூர்ப் பேட்டை துணை வட்டத்தினை வட்டமாக உயர்த்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது நிறைவேறும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) வாக்காளர்பட்டியலை திருத்தும் பணி முடியும் வரையிலும் மறுஉத்திரவு பிறப்பிக்கப்படும் வரையிலும் தற்போது உள்ள நிர்வாக அமைப்பில் எந்தவித மாற்றமும் செய்யக்கூடாது என மத்திய அரசு உத்திரவு பிறப்பித்துள்ளது. ஆகையால் மற்ற துணை வட்டங்களுடன் இதையும் 1976-77 ஆம் ஆண்டில் படிப்படியாக செயல்படுத்தும் திட்டத்தின் கீழ் அரசு பரிசீலித்து தக்க தருணத்தில் முடிவெடுக்கும்.

திரு. கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, டீலிமிடேஷன் கமிஷனின் இந்தப் பணி முடிந்ததும் இது எடுக்கப்படும் என்று கூறினார்கள். எல்லையோரத்தில் உள்ள இந்த பென்னலூர்ப் பேட்டையை வட்டமாக உயர்த்துவதற்கு முன் உரிமை வழங்கப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, இப்பொழுதே அப்படிப்பட்ட செயற்குறிப்பு இருப்பதாகத்தான் சொன்னேன்.



## விசைத்தறிகள்

* 314 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அதிக விசைத் தறிகளுக்கு உரிமம் வழங்கும்படி மத்திய அரசிடம் நமது மாநில அரசு கோரிக்கை ஏதேனும் அண்மையில் விடுத்துள்ளதா?

(இ) ஆம் எனில், மத்திய அரசு அளித்த பதில் யாது?

மாண்புமிகு திரு. செ மாதவன்: (அ) ஆம்.

(இ) இதுவரை இறுதி முடிவு தெரிவிக்கப்படவில்லை.

## *Inam lands*

* 315. Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Revenue be pleased to state :

(a) whether appeals against the taking over of the Inam lands in Tirunelveli district and Dharmapuri are pending with the Supreme Court; and.

(b) if so, the steps taken thereon?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) தர்மபுரி மாவட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட எந்த இனாம் அல்லது மைனர் இனாம் எஸ்டேட் சம்பந்தமாக இந்தியத் தலைமை நீதி மன்றத்தில் அப்பீல் எதும் இல்லை. ஆனால் திருநெல்வேலி மாவட்டம், கொடாரங்குளம் கிராமத்தில் உள்ள இனாம் எஸ்டேட் எடுத்துக் கொள்ளப்பட்டதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட சிவில் அப்பீல் இந்தியத் தலைமை நீதி மன்றத்தில் விசாரணையில் உள்ளது.

(இ) தலைமை நீதி மன்றத்தில், அப்பீல் துரிதமாக பைசல் செய்யப்பட வேண்டும் என்று அரசால் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

THIRU B. VENKATASWAMY : From the answer given by the Hon. Minister I came to understand that there is a case pending in the Supreme Court from Hosur Taluk. May I know from the Hon. Minister whether it will be expedited, so that people there will be benefited by getting lands for them?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : தலைவரவர்களே, அதுபோன்ற வழக்குபற்றி எதுவும் தகவல் கொடுத்தால் அதைப்பற்றி விசாரிக்கின்றேன்.

*Movement of rice.*

* 316. *Q.*—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Revenue be pleased to state :

**(a) whether the State Government have sought the Co-operation of the Railways to check illicit movement of rice ; and**

**(b) if so, the details thereof?**

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) ஆம்.

(இ) கள்ளத்தனமாக அரிசி கடத்திச் செல்லப்படுவதைத் தடுக்க வருவாய்த் துறை அலுவலர்களும், கண்காணிப்புக் காவற் குழுவினரும் ரயில்களை நிறுத்திச் சோதனையிட்டு வந்தனர். இதனால், ரயில்கள் உரிய நேரத்தில் வருவது பாதிக்கப்பட்டது. ரயில்கள் ஓடிக் கொண்டிருக்கையிலேயே சோதனை முழுவதையும் முடித்து விடலாம் என்று ரயில்வே பொது மேலாளர் கருத்துத் தெரிவித்ததோடு வருவாய்த் துறை அலுவலர்கள், கண்காணிப்புக் காவற்குழுவினர் ஆகியோர் ரயில்களில் பயணம் செய்ய இயலும் வகையில் அவர்களுக்குப் பயண இசைவுச் சீட்டுகளை வழங்கவும் அவர் ஒப்புக் கொண்டார். இந்த ஏற்பாட்டினை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

(முற்பகல் 10-00)

THIRU B. VENKATASWAMY : May I know from the Hon. Minister for Revenue, whether any seizure has been made in Railways?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** கேள்வி ரயில்வே துறையோடு நாம் ஏற்பாடு செய்து கொண்டிருப்பதைப் பற்றியது. எவ்வளவு டன் என்ற விவரம் என்னிடத்தில் இல்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** ரயில்வே மூலமாக அரிசியை மற்றப் பகுதிகளுக்கு அனுப்ப அரசு ஏற்பாடு செய்திருந்தாலும் இன்னும் பல இடங்களில் ஸ்டாக் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட ஸ்டாக்குகளைத் துரிதமாக வெளியேற்ற அரசாங்கம் ஆவன செய்யுமா?



**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இது கள்ளத்தனமாக அரிசியைக் கடத்திச் செல்லுவதைப் பற்றிய கேள்வி. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரை அரிசியை மற்றப் பகுதிகளுக்கு அனுப்ப ரயில்வே துறை உதவி செய்திருக்கிறது. வேகன் லோடு என்ற முறையில் ஏராளமான நெல் அனுப்பப்பட்டிருக்கிறது. அதோடு ஆயிரத்துக்கு மேற்பட்ட லாரிகளில் வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

**திரு. கே. எ. வகாப் :** கள்ளத்தனமாக அரிசி கடத்தப்படுவதை அரசு பிடித்தாலும்கூட, சொந்த உபயோகத்திற்கு என்று பத்து கிலோ வரை எடுத்துச் செல்லுகிறவர்களை அனுமதிக்க, குறிப்பாக வட ஆற்காடு மாவட்டத்திலிருந்து சென்னைக்குச் சொந்த உபயோகத்திற்கு எடுத்துச் செல்லுவதை அனுமதிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** சொந்த உபயோகத்திற்கு ஓரளவு எடுத்துச் செல்லும் அளவை நிர்ணயித்திருக்கிறார்கள். கொண்டு வரும்போது சில சமயம் தகராறு ஏற்பட்டு விடுகிறது. கடத்தல்காரர்கள், சொந்த உபயோகத்திற்கு எடுத்துக் கொண்டு வருகிறவர்கள் என்ற முறையில் பார்த்து கடத்தல்காரர்களைப் பொறுத்தவரை மட்டும் கண்டிப்பாக இருக்கவேண்டும். சொந்த உபயோகத்திற்கு எடுத்துச் செல்லுகிறவர்களைத் தடுக்க வேண்டாம் என்று அதிகாரிகளிடத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். பொதுமக்களுக்குத் தொல்லை ஏற்படாதவாறு கடத்தல்காரர்களை மட்டும் பிடிக்க வேண்டுமென்று கண்டிப்பாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

**திரு. பெ. சீனிவாசன்:** தஞ்சையிலிருந்து இராமநாதபுரத்திற்கு ஒதுக்கப்பட்ட அரிசியைக் கொண்டு வர தனியார் காண்டிராக்ட் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா அல்லது அரசாங்கமே நேரடியாக லிஃப்ட் செய்கிறதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** லாரி சொந்தமாக வைத்திருப்பவர்கள் இதற்கு முன்வர வேண்டுமென்று கோரிய டெண்டருக்கு யாரும் வரவில்லை. ஆகவே, டெண்டரில் என்ன தொகையோ அந்தத் தொகைக்கு எந்த லாரிக்காரர் வந்தாலும் சரி அவர்கள் மூலம் அனுப்பத் திட்டமிட்டோம். அதற்கும் யாரும் வரவில்லை. பிறகுதான் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்தில் சொல்லி "உங்கள் மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நெல்லை

நீங்களே எடுத்துச் செல்ல, உங்கள் மாவட்ட லாரிகளை எல்லாம் சட்டத்தைப் பயன்படுத்தி லாரிகளைக் கைப்பற்றி நெல்லை எடுத்துச் செல்லுங்கள்" என்று கூறினோம். அதன் விளைவாக ஏராளமான நெல் மற்ற மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றது.

*Price list of commodities.*

* 317 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Revenue be pleased to state the number of shop owners arrested during the month of July and August 1975 for not displaying the list of commodities and their prices in front of their shops?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** பதினைந்து.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இப்போது பிரைஸ் லிஸ்ட் மட்டுமல்லாது ஸ்டாக் லிஸ்டும் வைக்க வேண்டுமென்று உத்தரவு போடப்பட்டிருக்கிறதே. ஆனால் அந்த மாதிரி ஸ்டாக் லிஸ்ட் வைப்பதாகத் தெரியவில்லையே. ஸ்டாக் லிஸ்ட் கண்டிப்பாக வைக்க வேண்டுமென்று அரசு உத்தரவு பிறப்பிக்குமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இந்த உத்தரவைப் பொறுத்தவரை அமல் நடத்துவது சிரமமான காரியம். ஒவ்வொரு கடையிலும் உள்ள பல பொருள்களின் ஸ்டாக்கை ஒவ்வொரு நாளும் எழுதிக் கொண்டிருப்பது இயலாத காரியம். ஆகவே, ஜாக்கிரதையாகச் சிறிய வியாபாரிகள் பாதிக்கப்படாத அளவுக்கு அமல் நடத்த வேண்டியிருக்கிறது. விலைப் பட்டியல் வைக்க வேண்டுமென்பது கட்டாயப்படுத்தப்பட்டு வருகிறது.

DR. H. V. HANDE : Sir, the Hon. Minister for Revenue in his reply said that fifteen persons have been arrested so far. May I know whether there is any proposal on the part of the Government to insist the necessity of displaying the price lists along with the name boards in shops? If so, whether it will be extended to the vegetables also?

MR. DEPUTY SPEAKER : The hon. Member is asking a supplementary question about vegetables which did not relate to the main question. Therefore, I am not allowing that part of the question relating to vegetables.



DR. H. V. HANDE : I am rising on a Point of Order.

MR. DEPUTY SPEAKER : The hon. Member can raise it after the Question Hour.

DR. H. V. HANDE : For the last few days, I have not asked any question at all. I am asking a supplementary only to-day.

MR. DEPUTY SPEAKER : I request the hon. Member not to comment about the prices of the vegetables which has no relevance to the main question. The hon. Member can stop with the first part of his question.

DR. H. V. HANDE : I am asking only within the main question. The question relates to exhibition of price lists at the shops with regard to essential commodities. The vegetables will also come under Essential Commodities.

MR. DEPUTY SPEAKER : That is entirely different. I feel that it will not come within the purview of the Essential Commodities. Therefore, the hon. Member can proceed with his supplementary without putting that question.

DR. H. V. HANDE : My supplementary has relevance to the main question. For the last few days, I have not asked a single question. I am only asking a supplementary to-day. On the last day why should the Chair produce heat, I do not know.

MR. DEPUTY SPEAKER : The Chair is only asking the hon. Member to refrain from putting that part of the question relating to vegetables. If the hon. Member wants to persist that question, he may do it.

DR. H. V. HANDE : I am only putting that question with due and proper respect to the Chair. For the past few days, the prices of vegetables have gone up. I have also given a Call Attention Notice in this regard. By way of putting this supplementary, I want to elicit information from the Hon. Minister. Therefore, I said that it would be better to exhibit the price of vegetables aslo at the shops.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** விலைப் பட்டியலைப் போடுவதால் விலை குறைந்து விடும் என்ற கொள்கையில் எனக்கு நம்பிக்கையில்லை. வேறு ஒரு இடத்திலிருந்து சொல்லுவதால்

டாக்டர் ஹாண்டே அவர்கள் அதை விரும்பலாம். விலைப் பட்டியலைப் பொறுத்தவரை ஓரளவு வைக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தப்படுகிறது. இதன் விளைவாக சிறிய வியாபாரிகள் பாதிக்கப்படக் கூடாது. காய்கறியைப் பொறுத்தவரை ஏராளமான பேர் நடைபாதையில் விற்கிறார்கள். தாய்மார்கள் கூறு கட்டி சாலைகள் முழுவதும் விற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு விலைப் பட்டியலை எங்கே தொங்க விடுவது? ஆகவே, அது தேவையில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** அமைச்சர் அவர்கள் விலைப் பட்டியலைப் போடுவதாலேயே விலை குறைந்து விடும் என்பதில் நம்பிக்கை இல்லை என்று தெரிவித்தார்கள். அது ஒரு பக்கம் இருக்கட்டும். விலைப்பட்டியல் போட வேண்டுமென்ற நிலையை அமல்படுத்தும் பொறுப்பை இந்த அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. அதற்காக மகிழ்ச்சி. விலைப் பட்டியலைப் போடும்போது கொள்முதல் விலையையும், விற்பனை விலையையும் ஒழுங்கான முறையில் வைத்திருக்கிறார்களா, ஒழுங்காக விற்கிறார்களா என்பதைக் கண்காணிப்பதை அதிகாரிகளை மட்டும் வைத்துச் செய்ய முடியாது. பொது மக்கள் கொண்ட கமிட்டியை, சர்வ கட்சிக் கமிட்டியை அமைக்க ஏன் அமைச்சர் அவர்கள் முன்வரக் கூடாது? வேறு கட்சியினர் தாங்களாகச் செய்ய முன் வந்தால் போலீசார் தடுக்கிறார்கள். இதிலே சர்க்காருக்கு நம்பிக்கை இல்லை என்ற காரணத்தால் அப்படி ஒரு பொதுமக்கள் கமிட்டியைப் போடாமல் விட்டிருக்கிறார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஏதோ விலைப் பட்டியலைப் போடவேண்டுமென்பதை இந்த அரசாங்கம் ஏற்றுக் கொண்டதற்காக மகிழ்ச்சி தெரிவித்தார்கள். 1973-ம் ஆண்டிலேயே நாங்கள் இதற்கான உத்தரவைப் போட்டுவிட்டோம். இப்போது பேசப்படுவது வேறு வகை.

அடுத்து, விலைப் பட்டியலைப் போடுவதன் மூலம் லாப வேட்டைக்காரர்களைத் தடுக்க முடியுமா என்று கேட்டார்கள். இந்தக் கேள்வியைத்தான் நாங்கள் மத்திய அரசாங்கத்தைக் கேட்டோம். அதற்கு ஒரு அதிகாரத்தைக் கொடுக்காமல் விலைப் பட்டியலைப் போடுவதால் என்ன பயன்? கொள்முதல் விலைக்கு மேல் எவ்வளவு லாபம் வைத்து விற்கிறார்கள் என்பதைக் கண்காணிக்கச் சட்டம் கிடையாது. இதுதான் அதிலுள்ள குறைபாடு. இதைத்தான் மத்திய அரசாங்கத்தில் சொல்லி உற்பத்தி விலைக்கு மேல் இவ்வளவு லாபம் என்று சொல்லி, நிர்ணயிக்கப் பட்ட லாபத்திற்கு மேல் வைத்து விற்கக் கூடாது என்ற வகையில் மத்திய அரசு சட்டம் கொண்டு வந்தால், அதிலே மாநில அரசுக்கு அதிகாரம் இருந்தால் உண்மையிலேயே லாப வேட்டைக்காரர்களைத் தடுக்க முடியும் என்று கூறியிருக்கிறோம்.



MR. DEPUTY SPEAKER: Next question 318.

(Thiruvalargal A. R. Marimuthu, M. Surendran, P. Soundarapandian and Dr. Hande rose to raise a point of order).

MR. DEPUTY SPEAKER: The hon. Members can raise the point of order after the questions are over.

*Loans for purchase of diesel engines*

* 318. Q.—THIRU N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Co-operation be pleased to state:

(a) whether it is a fact that the Tamil Nadu State Co-operative Land Development Bank has resumed issue of loans for the purchase of diesel engines; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** (அ) ஆம்.

(இ) டீசல் எண்ணெய் தட்டுப்பாடு, விலை உயர்வு ஆகிய காரணங்களால் டீசல் பம்பு செட்டுகளுக்கு நிலவள வங்கிகள் மூலம் கடன் வழங்குவது 1974 மார்ச் திங்களில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்தது. தட்டுப்பாடு நீங்கி போதிய டீசல் எண்ணெய் கிடைக்கும் நிலை ஏற்பட்டவுடன், டீசல் பம்பு செட்டுகளுக்கு மீண்டும் நிலவள வங்கிகள் மூலம் கடன் வழங்க அனுமதியளித்து 9—10—1974 இல் அரசு ஆணை பிறப்பித்தது.

**திரு. சோ. அழகர்சாமி:** மீண்டும் கடன் வழங்க அனுமதிக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பல கிராமச் சங்கங்களுக்கு வறட்சி காரணமாகக் கடன் வசூலிப்பதை நிறுத்தி வைத்ததன் மூலம் ஓவர் ட்யூஸ் அதிகமாக இருப்பதால் கடன் கிடைக்காத ஒரு நிலைமை இருக்கிறது. ஆகவே அந்தச் சங்கங்களுக்கு மீண்டும் கடன்கள் கிடைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** ஓவர் ட்யூஸ் இருந்தால் மீண்டும் கடன் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். தகுதி பற்றி ஆராய்ந்துதான் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** டீசல் இன்ஜின்கள் வாங்குவதற்குக் கடன் வழங்குகிற திட்டத்தோடு ஆயிரம் ரூபாய் சப்ஸிடி கொடுக்கும் திட்டமும் இருந்ததே, அது இப்போது இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** கேள்வியே அதுதான். அதற்குப் பதில் சொல்லியிருக்கிறேன்.

### சென்னை நகரில் பலமாடிக் கட்டடங்கள்

* 319 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில், கூவம் நதிக்கரை ஓரங்களில் உள்ள இடங்களில் பலமாடிக் கட்டடங்கள் கட்டிடும் செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரம் யாது ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** (அ) ஆம்.

(இ) கூவம் ஆற்றங்கரை ஓரத்தில் கீழ்க்குறிப்பிட்ட மூன்று இடங்கள் பலமாடிக் கட்டிடங்கள் அமைக்க வீட்டுவசதி வாரியத்தினரால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது :—

(1) ஸ்பர்டாங்க் சாலை, சேத்துப்பட்டு.

(2) கிரீம்ஸ் சாலை, எழும்பூர்.

(3) டாம்ஸ் சாலை (அண்ணா சாலை அருகில்).

மேற்கூறிய இடங்களைப் பொதுப்பணித் துறையிடமிருந்து வீட்டு வசதி வாரியத்திற்கு மாற்றுவது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

**திரு. என். கிட்டப்பா :** இந்த கூவம் நதிக்கரை ஓரங்களில் மூன்று இடங்கள் பலமாடிக் கட்டடங்கள் அமைக்க தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அப்படி பலமாடிக் கட்டடங்கள் கட்டினால் வீட்டுப் பிரச்சினைகூட ஓரளவிற்குச் சரிவர நிறைவேறும் நிலை



இருக்கிறது. அதேபோல் வெளி நாடுகளில் இருந்து வருகிறவர்கள், வெளி மாநிலங்களில் இருந்து வருகிறவர்கள் கூவம் நதியைக் கண்டுகளிக்கும் முறையில் அது சிறப்பாக அமைய முடியும் என்ற நிலையும் இருக்கிறது. அத்தகைய முறையில் நம் அரசு நடவடிக்கைகள் எடுக்க முயற்சி எடுக்க முன்வருமா ? அதேபோன்று காஷ்மீரில் உள்ளதைப் போன்று, . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்வியைக் கேளுங்கள். ஒரு சப்ளிமெண்டரியில் ஒரு கேள்வி கேளுங்கள். முதல் கேள்வியோடு நிறுத்திக் கொண்டு பின்னர் காஷ்மீருக்கு வாருங்கள்.

**திரு. என். கிட்டப்பா :** துணைக் கேள்வியே நான் கேட்கவில்லை. இனிமேல் எந்தக் கேள்வியையும் கேட்கவில்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். நம்முடைய விதிமுறைப்படி முதல் ஒரு மணி நேரம் கேள்வி நேரம். பேரவைத் தலைவர் அவர்கள் விரும்பினால் ஐந்து நிமிடங்கள் அல்லது பத்து நிமிடங்கள் அதை நீட்டிக்கலாம். இன்னும் கேள்வியில் கால் பகுதி கூட முடியவில்லை. கேள்வி நேரம் முடிந்து மின்சார வாரிய அறிக்கை மீது நாம் விவாதிக்க வேண்டியிருக்கிறது. பூராக் கேள்விகளும் முடிய வேண்டுமென்றால் இன்னும் அரை மணி நேரமாகும். நம்முடைய சுற்றறிக்கைப் படி மின்சார வாரியத்தின் மீதான விவாதத்தை இன்று எடுக்கப் போகிறீர்களா இல்லை கேள்வி நேரத்தை இன்று நாள் முழுவதும் நீட்டிக்கப் போகிறீர்களா ? இது முறைதானா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் எழுப்பியது நல்லதொரு பாயின்ட் ஆஃப் ஆர்டர். ரூல் 22 படி முதல் ஒரு மணி நேரம் கேள்வி நேரம். மீண்டும் இஷ்டப் பட்டால் வைத்துக் கொண்டு, இல்லை என்றால் ரூல் 35 (4) படி விடையளிக்கப்படாத கேள்விகளும் விடைகளும் ரிக்கார்டில், சட்டசபைக் குறிப்பேட்டில், பதியப் பெற்று வேறு பிஸினஸுக்குப் போகிறோம். உறுப்பினர்கள் விரும்பினால் மீதி வினாக்கள் விடைகளை ரிக்கார்ட் செய்துவிட்டு வேறு பிஸினஸுக்குப் போகலாம் ஆகவே, உறுப்பினர்கள் விருப்பப்படிச் செய்யலாம்.

**திருமதி த. . ந. அனந்தநாயகி :** மூன்று கேள்விகள்தான் 10—10.10-க்குள் நடந்து கொண்டிருந்தது . . . .

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** உறுப்பினர் அவர்கள் தாமதமாக வந்துவிட்டு கேட்கிறார்கள். அவையில் முதலில் குறுகிய கால வினா நீண்ட நேரம் நடைபெற்றது. அதற்குப் பின்னர்தான் மற்ற கேள்விகள் எடுக்கப்பட்டன.

**திரு. பெ. சீனிவாசன்:** கேள்விகளைக் குறைக்க வேண்டாம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** இப்போது சென்னையில் பல மாடிக் கட்டடங்கள் அதிகமாக வந்துகொண்டிருப்பதால் அவற்றைப் பராமரிப்பதற்காகக் கடன் வசதிகள் செய்து கொடுப்பதற்கு, மஹாராஷ்ட்ராவில் ஒரு சட்டம் இருப்பதைப் போல் இங்கும் அப்படிப்பட்டதொரு சட்டத்தை அமைச்சர் அவர்கள் சீக்கிரம் கொண்டு வருவார்களா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** நம்மிடம் இருக்கிற சட்டங்களை, பிரப்போசல்களை—முடித்துவிட்டு—வேண்டுமானால் இன்னொரு பக்கம் போகலாம். நம் சட்டத்தைப் பார்க்க வெளி மாநிலங்களிலிருந்து அதிகம் பேர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள்.

**திரு. செ. அரங்கநாயகம்:** கூவம் நதிக்கரை ஓரங்களில் வீடுகள் கட்டப் போவதாகத் தெரிவித்தார்கள். கூவம் நதிக் கரை ஓரத்தில் குடியிருப்புகள் அமைத்தால் சுகாதாரக் கேடு ஏற்படும் என்று கருதுகிற காரணத்தால் அதற்குச் சுகாதாரத் துறையின் ஒப்புதலைப் பெற்றிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** திரு. கிட்டப்பா அவர்கள் எழுப்பிய கேள்விக்கு நான் குறுக்கிட்டுப் பதில் சொல்ல விரும்பினேன். கூவம் நதிக்கரை ஓரத்தை எப்படி வளர்ச்சி பெறச் செய்வது என்பதற்கு ஏற்கனவே ஒரு திட்டம் இருக்கிறது. அது முடியுமா முடியாதா என்பது பரிசீலிக்கப்பட வேண்டும். ராப்பிட் டிரான்ஸிட் ஸிஸ்டம் என்று பக்கிங்காம் கால்வாய் வழி பெரிய விரைவுப் போக்குவரத்து ஒன்றை மத்திய ரெயில்வே இலாகா ஏற்படுத்துவதற்கு ஏறத்தாழ ஆலோசனை நடத்தி நிறைவேற்றலாம் என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறது. மூன்று இடங்களில் நாம் பல அடுக்கு மாடிக் கட்டடங்கள் கட்டினால் நகரத்தில் உள்ள மற்றப் பகுதிகளுக்குள்ள காற்றோட்ட வசதியை அது குறைக்காதா என்று மெட்ரோபாலிட்டன்



அதாரிட்டி கருத்து வழங்க வேண்டும். ஏற்கனவே பொதுப்பணித் துறைமூலம் இன்னின்ன இடங்களில் பல அடுக்கு மாடிக் கட்டடங்கள் குடியிருப்பு வசதிக்காகக் கட்டுவது என்று தீர்மானிக்கப்பட்டிருந்தாலும்கூட அவற்றை மறுபரிசீலனை செய்ய வேண்டுமா என்பது இப்போது ஆலோசனையில் இருக்கிறது. மக்களின் பொது நலனுக்கு உகந்த வகையில் மட்டும்தான் பல அடுக்கு மாடிக் கட்டடங்கள் கட்டுகிற இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற ஆலோசனை இருக்கிறது என்பதை மட்டும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பெ. சீனிவாசன்:** ஏற்கனவே சென்னை நகரம் மிகவும் நெருக்கடியாக இருக்கிறது. காற்றோட்டம் பாதிக்கப்படுகிறது. எனவே இந்தத் திட்டத்தை, கூவம் நதிக்கரை ஓரமாக கட்டடங்கள் கட்டும் திட்டத்தை அரசு அடியோடு கைவிட்டுவிட முயற்சி எடுக்குமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** சென்னை நகரில் காற்று கடற்கரையில் இருந்து நகரத்தின் உள்நோக்கி வர வாய்ப்பிருக்கிறது. அப்படி உள்நோக்கி வருகிற காற்றைத் தடுக்கிற முயற்சியில் சுவர்போன்று கட்டடங்கள் அமையாமல் வேறு வகையில் அமையும் முறையில், அண்ணா சாலை போல், கிழக்கு மேற்கு அல்லது தென் கிழக்கு, வட மேற்கு என்று போனால் காற்று வரலாம். எட்வேர்ட் எலியட்ஸ் ரோடில் வரலாம். மற்றப் பகுதிகளில் உள்ள இயற்கை காற்று வசதியைக் குறைக்காது—இவையெல்லாம் ஆலோசனைகள்தான். நான் சொல்வது அத்தனையும் ஆலோசனைகள்தான். அவை வரையறுக்கப்பட்ட தீர்மானங்களாக சொல்ல முடியாது. எல்லாம் ஆலோசனைகள்தான். இந்த ஆலோசனைகளின் அடிப்படையில் மேலும் ஆலோசிக்கப்படும்.

**திரு. எம். சுரேந்திரன்:** கூவம் நதிக்கரை ஓரங்களில் மாடிக் கட்டடங்கள் கட்டுவதாகத் தீர்மானிக்கிறபோது—கூவம் நதியிலிருந்து இன்னும் வாசனை வந்து கொண்டிருக்கிறது—ஆகவே, இம்மாதிரி நதிக்கரையோரங்களில் பல அடுக்கு மாடிக் கட்டடங்கள் கட்டும்போது கூவம் நதியிலிருந்து வரும் வாசனையால் ஏற்படுகிற சுகாதாரக் கேடுகளைப் பற்றியும் சிந்திக்க வேண்டும். பல மாடிக் கட்டடங்கள் கட்டுவது அழகாக இருக்குமே தவிர கூவம் நதியில் வாசனை ஏற்படாத ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் முதலில். அதன் பின் முடிவு செய்வது நல்லதல்லவா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** அதற்கான திட்டங்கள் போட்டு கார்ப்பரேஷன்மூலம் வடிகால் எல்லாம் தயார்செய்து விரைவில் நாற்றம் நீக்கப்படும்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** கூவம் நதிக் கரை ஓரங்களில் பல அடுக்கு மாடிக் கட்டடங்கள் கட்டுவதுபற்றிச் சொல்லப்பட்டது. என்.ஜி.ஓ.-க்களுக்காக நந்தனத்தில் கட்டப்பட்ட பல மாடிக் கட்டடம் பழுதடைந்திருக்கிறதே, அதைப் பழுதுபார்க்க அரசாங்கம் ஏதாவது முயற்சியை மேற்கொண்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** எங்கெங்கு பழுது ஏற்பட்டாலும் அவற்றை உடனடியாகப் பழுது பார்ப்பதற்கு அரசாங்கம் அதற்கான அதிகாரிகளை எல்லாம் வைத்துக் கொண்டிருக்கிறது. அந்த வேலை நடந்துகொண்டுமிருக்கிறது.

### குடிசைமாற்றுப் பணிகளுக்கு உலக வங்கி உதவி

* 320. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடிசைமாற்று வாரியத்தின்மூலம் கட்டப்பட்ட வீடுகள் உள்ள பகுதிகளில் சாலை வசதி, குழாய் வசதி, விளக்கு வசதி போன்ற அடிப்படை வசதிகளுக்கென 1975–76 ஆம் ஆண்டில் உலக பாங்கு நிறுவனம் நிதி உதவி அளிக்க முன்வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

### *Conference of Labour Ministers.*

* 321. Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Labour and Transport be pleased to state :

(a) whether the Central Government have invited the State Government during July 1975 to participate in the All India Labour Ministers' Conference to discuss ways and means to abolish the practice of bonded labour and redemption of debts attached to its victims; and

(b) If so, the details of the same?



**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** (அ) ஆம். 19—7—75 அன்று நடந்த மாநிலத் தொழிலாளர் நல மாநாட்டில் நான் கலந்து கொண்டேன்.

(இ) அடிமைத் தொழிலாளர் முறை இம்மாநிலத்தில் இருந்ததாகச் சொல்லப்படுவதை நான் மறுத்தேன். கீழ்க்கண்டவைகுறித்து ஒருமித்த கருத்து உள்ளது :—

1. அடிமைத் தொழிலாளர் முறையை ஒழிக்கச் சட்டம் ஒன்று இயற்ற வேண்டிய இன்றியமையாமை மைய அரசுக்கு ஏற்பட்டது.

2. இதனால் ஏற்படுகின்ற நிதிப் பொறுப்புகள், இதனைச் செயற்படுத்தத் தேவைப்படும் நிர்வாக அமைப்புகள் ஆகியவை பற்றி மாநில அரசுகள் ஆய்வுசெய்து, அடிமைத் தொழிலிலிருந்து விடுவிக்கப்பட்ட தொழிலாளர்கள் கடன் கொடுப்பவர்களிடம் மீண்டும் சிக்கி அடிமைத் தொழில் செய்வதைத் தடுக்க மறுவாழ்வுத் திட்டங்களைத் தயாரிக்க வேண்டும்.

3. இப்பணியைக் கவனித்துக் கொள்ளவும், அவற்றை விரைவாகச் செயற்படுத்தவும் பொருத்தமான துறைகளையும் நிறுவனங்களையும் மாநில அரசுகள் குறிப்பிட வேண்டும்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவரவர்களே, தகராசுத்தித் தொழிலாளர்கள் அதிகமான கடன்பட்டவர்களாக இருப்பதால், அவர்களின் கடனை ரத்து செய்யவேண்டுமென்று இந்த மாநாட்டில் பேசப்பட்டதா ? இதுபற்றி அரசின் ஆலோசனை என்ன ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, அப்படிப் பட்ட கருத்துக்கள் அங்கே பேசப்பட்டதாக எனக்கு நினைவில்லை. அங்கே அடிமைத் தொழிலாளர்களைப்பற்றிய பேச்சுக்கள்தான் வந்தன. பல்வேறு மாநிலங்களில் அப்படிப்பட்ட முறை இருப்பதை அந்த மாநிலத்திலிருக்கின்ற அமைச்சர்கள் சுட்டிக் காட்டினார்கள்.

**திரு. செ. அரங்கநாயகம் :** தலைவரவர்களே, தமது மாநிலத்தில் அடிமைத் தொழிலாளர் முறை இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எந்த அடிப்படையில் சொல்கிறார்கள் ? ஏதாவது சாம்பிள் சர்வே எடுக்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, அடிமைத் தொழிலாளர்பற்றிய பிரச்னை வந்தவுடன், அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களை அழைத்து எங்கேயாவது அப்படிப்பட்ட பிரச்னையிருக்கிறதா என்று அரசு ஆராய்ந்தது. அதன் பேரில் எடுக்கப்பட்ட முடிவுதான் அடிமைத் தொழிலாளர்கள் இல்லை என்பது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவரவர்களே, இப்போது மத்திய சர்க்கார் சட்டம் நிறைவேற்றியிருக்கின்ற காரணத்தினாலே, அப்படி ஏதாவது அடிமைத் தொழிலாளர்கள் இருந்தால், அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, அடிமைத் தொழிலாளர்கள் எங்கேயிருக்கிறார்களென்று கண்டுபிடிக்கப்பட்டு காட்டப்பட்டாலும், அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தயங்காது.

**திரு. எம். சுரேந்திரன்:** தலைவரவர்களே, பல நிலச் சுவான்தார்கள், அரிசன விவசாயத் தொழிலாளர்களை வருடத்திற்கு ஆயிரம் ரூபாய், இரண்டாயிரம் ரூபாய் என்று விலை பேசிக் கொண்டு, அவர்களை நிலையாக வைத்துக் கொள்ளும் ஏற்பாடு தமிழ்நாட்டில் இருந்து கொண்டிருக்கிறதே, அது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அது அடிமை முறையில் கணக்கிடப்படுமா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, அப்படிப் பட்ட முறைகள் எங்கேயாவது இருப்பதை உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டினால், நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

**திருமதி சத்தியவாணிமுத்து:** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாநிலம் பூராவிலும் இப்படிப்பட்ட விவரக் குறிப்பு எடுக்கப்பட்டது என்றும், அடிமைத் தொழிலாளர்கள் இல்லை என்றும் சொன்னார்கள். சேலம், கோவையில் இருப்பதாக மாவட்டக் கலெக்டர்கள் ஏற்கனவே அறிவிப்புத் தந்திருக்கிறார்கள். அதுகுறித்து அரசு ஆராயுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே, கோவை மாவட்டத்தில் ஒரு பிரச்னை இப்படி எழுப்பப்பட்டு, அந்தமாதிரி விவகாரங்கள் இருக்கிறதா என்று பரிசீலிக்க வேண்டுமென்று



முடிவுசெய்து, மாவட்ட வாரியாகக் கேட்டு, பின்னால் மத்திய சர்க்காருக்கு இந்த அரசாங்கத்தின் சார்பில், நாங்கள் இவ்வாறு பரிசீலித்தோம், அப்படிப்பட்ட பாண்டெட் லேபர் இல்லை என்று தெரிய வருகிறது என்றுகூட எழுதி அனுப்பியிருக்கிறோம்.

### தொழிலில் அமர்த்தப்படுவதற்கான குறைந்த அளவு வயது

*322. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழிலாளர் நலன்-போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாக்டரி சட்டத்தின்கீழ் வேலை பெறுவதற்கான குறைந்தபட்ச வயதை 16 ஆக உயர்த்தக் கோரி மத்திய அரசுக்கு மாநில அரசு அண்மையில் கோரிக்கை ஏதேனும் விடுத்துள்ளதா ?

(இ) ஆமெனில், மத்திய அரசு அளித்த பதில் யாது ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) ஆம்.

(இ) 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் வேலையில் அமர்த்தப்படுவதற்கான குறைந்த அளவு வயதை 14-லிருந்து 16-ஆக உயர்த்துவது விரும்பத்தக்கதல்ல என்று மத்திய அரசு மாநில அரசுக்குத் தெரிவித்துள்ளது. இதற்குக் காரணமாக இத்தகைய நடவடிக்கையால் பிற வேலைவாய்ப்புத் துறைகளிலும் பாதகமான விளைவுகள் ஏற்படக்கூடும் என்றும் மேலும், பெரும்பாலான மாநிலங்களிலும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளிலும் கல்லூரிப் புகுமுக வகுப்புவரை இலவசக் கல்வி வசதிகள் இல்லை என்பதையும் மத்திய அரசு சுட்டிக் காட்டியுள்ளது.

### அரசு தொழிலாளர் காப்புறுதித் திட்ட மருத்துவ மனைகள்

*323. வினா—திரு. மே. சி. தூயமணி: மாண்புமிகு தொழிலாளர் நலன்-போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையம் நகரில் உள்ள E.S.I. மருத்துவ மனைக்குச் சொந்தக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** இல்லை.

*324. வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலன்-போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இ.எஸ்.ஐ. திட்டத்தின்கீழ் திருப்பூர் அரசாங்க மருத்துவமனையில் தற்போதுள்ள படுக்கைகளின் எண்ணிக்கையை ஆயிரம் தொழிலாளர்களுக்கு ஏழு படுக்கைகள் என்ற விதத்தில் அதிகரிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) தற்போது இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவரவர்களே, திருப்பூர் நகரத்தில் 10,000 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அங்கே இப்போது ஆறு படுக்கைகள் மருத்துவ மனையில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த எண்ணிக்கையை அதிகரிக்கும் முறையில், இ.எஸ்.ஐ. மருத்துவமனை கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, திருப்பூர் தொழிலாளர்களுக்காக நலத் திட்டம் ஒன்று ஏற்படுத்தி வைக்கப்பட்டது. இத்திட்டச் சலுகைகள் காப்புறுதி செய்துகொண்ட தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு 2—9—1961 முதற்கொண்டு நீடிக்கப்பட்டது. திருப்பூர் பகுதியில் 1974-75-ம் ஆண்டில் காப்புறுதி செய்துகொண்டவர்களது குடும்பங்கள் மொத்தம் 9,650 ஆகும். இம்மாநிலத்தைப் பொறுத்தவரையில் தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டத்தின்கீழ் 1,000 குடும்பங்களுக்கு 11 படுக்கைகள் என்ற அடிப்படையில் உள்ளது. இத் திட்டத்தின் கீழ் காப்புறுதி செய்துகொண்டவர்களுக்கு திருப்பூர் அரசு மருத்துவ மனையில் 11 படுக்கைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

சரக்குகள் போக்குவரத்து நிறுவனம்

*325. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழிலாளர் நலன்-போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

மாஜி ராணுவத்தினர்களுக்கென லாரி சர்வீஸ் ஒன்று துவக்கிடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?



மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, அண்மையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட லாரி கார்ப்பொரேஷனில் 100 லாரிகள் முதலாவதாக ஓட்டத் திட்டமிட்டு அதில் முன்னாள் ராணுவத்தினருக்கும் மட்டும் வேலை வாய்ப்பு அளிக்கத் திட்டமிட்டுள்ளது. தற்போது 40 லாரிகள் சிவில் சப்ளைஸ் இலாகாவில் உணவு தானியங்களை ஏற்றிச் செல்வதில் ஈடுபட்டிருக்கின்றன.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, இந்த ரோட் டிரான்ஸ்போர்ட் கார்ப்பொரேஷன் நல்ல முறையில் இப்போது செயல்பட்டு வருகிறது. மத்திய சர்க்கார் இப்போது அகில இந்திய பர்மிட்டுகள் வழங்கப்போவதாகவும், ஒவ்வொரு மாநிலத்திற்கும் 250 பர்மிட்டுகள் வழங்கப்போவதாகவும் பத்திரிகைச் செய்தி வந்திருக்கிறது. அந்தப் பர்மிட்டுகள் இந்த ரோட் டிரான்ஸ்போர்ட் கார்ப்பொரேஷனுக்கு வழங்கப்பட்டிருக்கின்றனவா அல்லது தனியாருக்கு வழங்கப்பட்டிருக்கின்றனவா? மத்திய அரசாங்கத்திடமிருந்து மாநில அரசிற்குத் தகவல் கிடைத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, மற்ற மாநிலங்களுக்கு மத்தியில் லாரிப் போக்குவரத்துக்காக 250 பர்மிட்டுகள் இந்த மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கழகம் அதில் எந்த இடத்தில் செலுத்துவது என்று ஆராய்ந்து வருகிறது.

திரு. எம். சுரேந்திரன்: தலைவரவர்களே, இந்த லாரிப் போக்குவரத்துக் கழக லாரிகள் இப்போது சிவில் சப்ளைஸ் இலாகாவில் உணவுப் பண்டங்களை ஏற்றிச் செல்வதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். நேற்று முன்தினம் பத்திரிகையில் உணவுப் பண்டங்களை ஏற்றிச் சென்ற ஒரு லாரியும், டிரைவரும் காணவில்லை என்று செய்தி வந்தது, அது இந்தக் கார்ப்பொரேஷனின் லாரியா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, எனக்குத் தகவல் வராததால், அது கழகத்தைச் சேர்ந்த லாரியாக இருக்க முடியாது.

### மோட்டார் வாகனங்கள் சோதனை.

*** 326 வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு தொழிலாளர் நலன்—போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மோட்டார் வாகனச் சட்டத்தின்கீழ் தமிழ் நாட்டில் இணை மண்டலப் போக்குவரத்து (Joint Regional Transport Officer) அதிகாரியின் மேற்பார்வையில் மதுரையில் மண்டலப் பறக்கும் படை அமைக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அந்தப் பறக்கும் படை 1973-74, 1974-75 நிதி ஆண்டுகளில் செய்த வேலைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** (அ) ஆம். ஆனால் 15—9—74 முதல் இணை மண்டலப் போக்குவரத்து அதிகாரிக்குப் பதில் கொங்கு மண்டலத் துணைப் போக்குவரத்து ஆணையரின்கீழ் இந்தப் பறக்கும் படை இயங்கி வருகிறது.

(இ) விவர பட்டியல் * பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்:** தலைவரவர்களே, இந்தப் பறக்கும் படை, பேருந்துகளில் அதிகப் பயணிகளை ஏற்றி வருவதைக் கண்டுபிடித்திருக்கிறது. அப்படிக் கண்டுபிடித்ததில் தனியார் பஸ் எவ்வளவு கார்ப்பொரேஷன் பஸ் எவ்வளவு ? இந்தத் திட்டம் மற்றப் பகுதிகளுக்கு விரிவுபடுத்தப்படுமா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, இந்தப் பறக்கும் படை மூன்று பகுதிகளாகப் பிரிந்து வேலை செய்கிறது. ஓவர்லோட் போடுகின்றவர்களைக் கண்டுபிடித்து வருகிறது. தனியார் பஸ்ஸிலும், அரசு பஸ்ஸிலும் கண்டுபிடித்து வருகிறது.

---

* 572–577 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப் பட்டுள்ளது.





### தொழிற்பயிற்சி நிலையங்களில் மாணவர் அனுமதி.

*** 327 வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு தொழிலாளர் நலன்-போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1975-76 கல்வி ஆண்டில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையில் உள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் அதிக அளவில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) இல்லை.

(இ) எழவில்லை.

### புதிய மீன்பிடி படகுகள்.

*** 328 வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு சமூக நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தமிழ்நாடு மீன்வள வளர்ச்சிக் கழக சார்பில் மீன்பிடி படகுகள் வாங்கப்பட்டுள்ளனவா?

(இ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை:** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவரவர்களே, ஏற்கனவே மீன்வளத் துறையின் சார்பில் மீன்பிடி படகுகளை வாங்கத் திட்டம் தீட்டப்பட்டதாகத் தெரிய வருகிறது. அப்படி ஆலோசனையில் இருந்தது தள்ளிப் போடப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை:** தலைவரவர்களே, அரசாங்கம் இதற்கு முன்பு இரண்டு மீன்பிடி படகுகள் வாங்க வேண்டுமென்று தீர்மானித்து, இத்தாலி நாட்டு நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துகொண்டது. ஒப்பந்தம் செய்துகொண்ட பிறகு அதை உடனே நிறைவேற்ற முடியாமல், இத்தாலி நாட்டிலிருந்து அந்த நிறுவனம் கூடுதல் பணத்தைக் கேட்டதால், பிறகு வேறு ஒரு நிறுவனத்துடன் ஒப்பந்தத்தை மேற்கொண்டு, தற்போது

கூடிய விரைவில் இரண்டு டிராலர்களை வாங்கவும், தமிழ்நாட்டில் அதற்கு ஒப்புக்கொண்ட வகையில் இரண்டு டிராலர்கள் செய்யவும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 10-30)

**திருமதி த. ந. அனந்தநாயகி :** மீன்பிடி படகுகள் கொடுக்கப்படுமா என்று கேட்டதற்கு இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். சில படகுகள் மீன் பிடிப்பதற்குப் பயன்படவில்லை. இவைகளை வேண்டாமென்று சொல்லுகிறார்கள். முப்பத்து ஆறு அடிப் படகுகள் கடலில் போகவில்லை என்பது இந்த அரசுக்குத் தெரியுமா? அதற்கு பதிலாக 32 அடிப் படகுகள் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை:** மீனளக் குழுவின் மூலம் 30 அடி, 32 அடி படகுகள் வழங்கப்பட்டு வருகின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

### புன்னைக்காயலில் மீன்பிடி துறைமுகம்.

* 329 வினு—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு சமூக நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், புன்னைக்காயல் கிராமக் கடற்கரைப் பகுதியை மீன்பிடித் துறைமுகமாக மாற்றும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை :** (அ) இல்லை.

(இ) எழவில்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, புன்னைக்காயல் கடற்கரைப் பகுதியை மீன்பிடி துறைமுகமாக மாற்றுவதற்கு எப்போதேனும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதா? மேற்படி இடத்தை மீன்பிடி துறைமுகமாக மாற்றுவதற்கு என்ன காரணத்தினுல் அரசு மறுக்கிறது என்பதை அறியலாமா?

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை :** தலைவரவர்களே, புன்னைக் காயல் முகத்துவாரத்தில் ஒரு மீன்பிடி துறைமுகம் ஏற்படுத்துவதற்கு மத்திய அரசு சார்பில் பெங்களூரில் இருக்கிற ஆய்வு நிறுவனத்தால் ஆய்வு செய்யப்பட்டு அங்கு மீன்பிடி



துறைமுகம் அமைப்பதற்கு கூடுதலான பணம் ஆகும் என்றும், அதற்கு மிக அருகாமையில் தூத்துக்குடியில் ஒரு மீன்பிடி துறைமுகம் ஏற்கெனவே அமைக்கப்பட்டுவிட்டதால் இந்த இடத்தில் மற்ருெரு மீன்பிடி துறைமுகம் தேவையற்றது, வீண் செலவாகும் என்று இந்த முயற்சி கைவிடப்பட்டு விட்டது.

### உடல் ஊனமுற்ருேருக்குப் பயிற்சித் திட்டம்.

* 330 வினு—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு சமூக நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடல் ஊனமுற்ருேர் புதுவாழ்வுத் திட்டத்தின்கீழ் பயிற்சித் திட்டம் ஏதேனும் கும்முடிப்பூண்டி வட்டாரத்திலும், எல்லாபுரம் வட்டாரத்திலும் அமைக்கும் செயற்குறிப்பு ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை:** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவரவர்களே, முட்டிக்காடு போன்ற பகுதியில் தொழில்பேட்டை அமைந்து உள்ளது பெரும் பயன் தருவதாக உள்ளது. அந்த அளவிற்கு மிகப் பெரிய அளவில் இல்லாவிட்டாலும், சிறிய அளவில் இந்தப் பகுதியில் தொழிற் பயிற்சிக் கூடங்கள் அமைப்பதற்கு எதிர்காலத்தில் இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை அரசு ஆய்வு செய்யும்.

### செவிடர்களுக்கான பள்ளி.

* 331 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு சமூக நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், தஞ்சை மருத்துவக் கல்லூரி அருகே நீலகிரி என்னும் இடத்தில் செவிடர் பள்ளி ஒன்று அமைத்திட அரசு உத்தேசித்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை:** (அ) & (இ) இல்லை.

மகேந்திரவாடி கால்வாயின் குறுக்கே பாலம்.

*332 வினா—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாலாஜா வட்டம் (வட ஆற்காடு), பூண்டி கிராமத்தில் இருந்து சென்னசமுத்திரம் இடையே மகேந்திரவாடி கால்வாயின் குறுக்கே பாலம் ஒன்று கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. எ. வகாப்: இது மகேந்திரவர்ம பல்லவனால் வெட்டப்பட்ட கால்வாய். இது பல கிராமங்களுக்கும் மக்கள் போக்குவரத்திற்கும் இடையூறாக இருக்கிறது. இதில் நம்முடைய அரசு முயற்சி எடுத்து ஒன்றியத்தின் அளவிலாவது அவர்களுடைய நேரடி மேற்பார்வையின்கீழ் இந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு ஆணையிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இது குறிப்பிட்ட இரண்டு ஊர்களுக்கு இடையில் கட்டப்படுகிற பாலத்தைப் பற்றிய திட்டம் என்று கூறப்பட்டாலும், இதே போன்று இன்னும் பல ஊர்களுக்கு இடையில் இந்தக் கால்வாய் ஓடுகிறது. இந்த வாய்க்கால்களுக்குப் பாலம் கட்டுவதற்கு ரூ. 1¼ லட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்குத் தற்போது நமது திட்டத்திலே வேண்டிய தொகை ஒதுக்க இயலவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ராம நதியின் குறுக்கே பாலம்.

*333 வினா—திரு. ச. சங்குமுத்து தேவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) அம்பாசமுத்திரம் தாலுகா, ரவணசமுத்திரம் கிராமத்தையும், கோவிந்தபேரி கிராமத்தையும் இணைக்கும் வகையில் ராமநதியில் தாம்போதி பாலம் கட்டுவதுகுறித்து அரசு ஆய்வுசெய்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ச. சங்குமுத்து தேவர்: இந்தப் பகுதியில் நீண்ட காலமாகப் பாலம் கட்டவேண்டுமென்று இந்தப் பகுதியிலுள்ள விவசாயிகள் கேட்டு வருகிறார்கள். பாலம் கட்டுவது மிகவும் அவசியமானதாகத் தெரிகிறது. இதை ஆய்வு செய்வதற்கு அரசாங்கம் உத்திரவிடத் தீர்மானத்திருக்கிறதா? மாவட்ட ஆட்சித் தலைவர் இதுபற்றி எழுதியிருப்பதாகத் தெரிகிறது. அமைச்சரவர்கள் இதுபற்றி விளக்குவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இந்தப் பாலம் கட்டுவதற்கு ரூ. 4½ லட்சம் செலவாகும் என்று தெரிகிறது. ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டுள்ள திட்டங்களை முதலில் நிறைவேற்றியாக வேண்டியிருக்கிறது.

கொமட்டேரியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி.

*334 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) குளித்தலை வட்டம், விரியபாளையம ஊராட்சியைச் சேர்ந்த கொமட்டேரியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் பணி எப்போது ஆரம்பிக்கப்பட்டது?

(இ) தற்போது எந்த நிலையில் உள்ளது?

(உ) இதுவரை மேற்படி பணி பூர்த்தியடையாமல் இருப்பதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) 1968-ம் ஆண்டு மார்ச் திங்களில் இப்பணி தொடங்கப்பட்டது.

(இ) 1971-ம் ஆண்டு மார்ச் திங்களிலேயே பணி முழுவதும் முடிந்துவிட்டது.

(உ) வினாவிற்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பணி முடிந்துவிட்டது என்று பதில் சொன்னார்கள். கடந்த வாரம்கூட அந்த ஊராட்சி மன்றத்தின் தலைவர்

என்னிடம் வந்து பணி முடியவில்லை என்று கூறி உள்ளார். ஆகவே பணி முடிவடையாமல் இருந்தால் இனியாவது மாண்புமிகு அமைச்சரவர்கள் இதில் கவனம் செலுத்தி இதை முடித்துக்கொடுக்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, 20 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு உயர்நிலை மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியொன்றை அமைததிருக்கிறார்கள். ஆனால் கிணற்றில் தண்ணீர் வற்றிவிட்ட காரணத்தினால் மறுபடியும் 6,500 ரூபாய் செலவில் இந்தக் கிணற்றைக் தோண்டிக் கொண்டிருக்கிறார்கள்.

### சீர்பருவச் சாலைகள்.

*335 வினா—**திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிற்றூர்களுக்கு சீர்பருவச் சாலை அமைக்கும் திட்டத்தின்கீழ் எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்திலும், கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்திலும் எடுத்து நிறைவேற்ற உத்தேசித்துள்ள சாலைகள் எவை, எவை?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** ஒரு விவர அறிக்கை* அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. கா. வேழவேந்தன்:** தலைவரவர்களே, இந்த விவர அறிக்கையில் 21 வேலைகள் எவை, எவை எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று விவரம் தரப்பட்டிருக்கிறது. அண்மையில் பெய்த மழையால் பல சாலைகள் பெயர்ந்து உடைப்பெடுத்து இருக்கிறது. தொடர்புச் சாலைகளை விரைவாக ஏற்படுத்துவதற்கு அரசு ஆணையிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, ஏற்கெனவே எடுத்துக்கொண்ட திட்டங்களுக்கே நிதிப் பற்றாக்குறை இருக்கிறது. நிதி நிலைமை சீர்பட்டவுடன் இந்த வேலைகள் துவங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

* 578–580-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### அறிவிப்பு.

### (3) ஓர் உரிமை மீறல் பிரச்சினையை அடுத்த கூட்டத் தொடரில் எடுத்துக்கொள்வதுகுறித்து.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்கள் விதி 184-ன்கீழ் ஒரு உரிமை மீறல் பற்றிய பிரச்சினையைக் கொண்டுவந்துள்ளார்கள். அதைப் பரிசீலித்துப் பிறகு எடுத்துக்கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** உரிமை மீறல் பிரச்சினையைப் பிறகு எடுத்துக்கொள்ளலாம் என்றால் இன்றைக்குக் கடைசி நாள்; பிறகு என்று சொன்னால் இன்றைக்கேயா அல்லது பிறகா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சட்டசபை இதோடு முடிவு அடைந்துவிடாது. அடுத்த சிட்டிங் இருக்கும். போது பார்த்துக்கொள்ளலாம். Let me consider it. Let me go through it and consider it.

*THIRU A. SUBRAMANIAM: Mr. Deputy Speaker, Sir, the Proviso to Rule 184 of the Assembly Rules says:

"Provided that in respect of a matter of privilege arising during the sitting of the House, the Speaker may waive such notice."

Again, Sir, Rule 186 says:

"A matter of privilege must be raised after the questions and before the list of the business for the day is entered upon:

Provided that a matter of privilege arising during the sitting of the House shall be entitled to immediate precedence over all other business."

அதனால் இந்த இடத்திலேயே—

Sir, the spirit of all these rules is that an issue of privilege should get precedence over all other business. That is because the privilege of the House and the privilege of every Member of this House are sacrosanct. They get precedence. They are more sacrosanct, more sanctified than any other business. That is the spirit of these rules. So, I would request, Mr. Deputy Speaker, to take up this question immediately. It need not take much time to consider this matter because the issue of this privilege motion arose during the sitting. It is a very simple matter. It is not a very detailed matter. There is no need for any enquiry. In fact, it is a very simple matter. One does not know if and when the Assembly will meet again. The purpose of the motion will not be served, if it is postponed. So, I would request that it be taken up even now before any other business is taken up.

MR. DEPUTY SPEAKER: I would say that as the Chair, I have to go through all these things and find out whether a *prima facie* case has been made out or not. For that, I require some more time. I must know what question the Hon. Member has given and what answer the Hon. Minister has given. To know all these things, I have to go through the records. What question the Hon. Member has given to the department, I have to find out. All these things are there. Therefore, I will take it up after considering all these things.

### (3) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

**(அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள முந்திரிப் பருப்புத் தொழிற்சாலைகள் மூடப்பட்டது குறித்தும், தொழிலாளர்கள் பாதிப்பும் குறித்தும்.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேரள அரசு அந்த மாநிலத்திலிருந்து முந்திரி அனுப்புவதைத் தடை செய்துள்ள காரணத்தால், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள எல்லா முந்திரித் தொழிற்சாலைகளும் மூடப்பட்டு விட்டதால், 40,000-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலையிழந்து, அதனால் அம்மாவட்டத்திலுள்ள தொழிலாளர்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க வேண்டும் என்று பேரவையின் 42-ம் விதியின் கீழ் திரு. ஜே. ஜேம்ஸ் அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம்,



கொடுத்துள்ளார். இது எப்படி அவசர முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இப்போது இருக்கும் நூற்றுக்கும் அதிகமான முந்திரிப்பருப்புத் தொழிற்சாலைகள் செயல்பட்டுக் கொண்டிருந்தன. அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இந்தத் தொழிற்சாலைகளைத் தவிர வேறு எந்தவிதமான தொழிற்சாலைகளும் இல்லை. அங்குள்ள மக்களுக்கு தொழில் வாய்ப்பு இந்தத் தொழிற்சாலைகளின் மூலமே கிடைக்கின்றதே தவிர வேறு வழி கிடையாது என்பதை இந்த அரசாங்கம் நன்றாக அறிந்திருக்கிறது. இந்த முந்திரிப் பருப்புத் தொழிற்சாலைகளுக்கு "ரா நட்ஸ்" ( (raw nuts) ) கிடைப்பது கேரள மாநிலத்திலிருந்து இங்கு வந்து கொண்டிருக்கிறது. அந்தத் தொழிற்சாலைகளை நடத்துகின்ற முதலாளிகள் இந்த அரசாங்கத்தின் வழியாக அந்த "ரா நட்ஸ்"-களை வரவழைத்துக் கொண்டிருந்தார்கள். இப்போது பல வேறுபாடுகள் காரணமாக அந்த மூலப்பொருள் அவர்களுக்கு வருவதில் சங்கடம் ஏற்பட்டுள்ளது.

அதோடு அநேகமாக அனைத்து முதலாளிகளும் கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்கு இந்தத் தொழிற்சாலைகளை நடத்துவதற்கு லைசென்ஸ் அங்கேதான் இருக்கிறது. ஆகவே, கேரள மாநிலத்தைச் சார்ந்துதான் இந்தத் தொழிற்சாலைகள் நடைபெற்றன. இப்போது இதுவென்று காரணம் தெரியவில்லை, அங்கிருந்து மூலப் பொருளான ரா நட்ஸ் கொண்டு வருவதற்கு கேரள மாநிலம் தடை விதித்ததாகத் தெரிகிறது. இப்போது சில நாட்களாக ரா நட்ஸ் வராததால் இயங்கிக் கொண்டிருந்த தொழிற்சாலைகள் மூடப்பட்டு ஏறத்தாழ நாற்பதாயிரம் தொழிலாளர்களுக்கு மேல் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஆகவே, இந்த அரசு இதில் உடனடியாகத் தலையிட்டு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு அங்கே ரா நட்ஸ் கிடைப்பதற்கும், கேரள அரசாங்கம் விதித்த தடையைத் தளர்த்துவதற்கும் அந்த அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டு ஆவன செய்ய வேண்டும். இல்லாவிட்டால் மத்திய சர்க்காரோடு தொடர்பு கொண்டு அந்தத் தொழிற்சாலைகளை நடத்துவதற்கு

## கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள முந்திரிப் பருப்புத் தொழிற்சாலைகள் மூடப்பட்டது குறித்தும், தொழிலாளர்கள் பாதிப்பும் குறித்தும்



ஈர-நட்டல் வருவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஆகவே, இது முக்கியமான பிரச்சினை. ஏறத்தாழ 40, 50 ஆயிரம் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிற பிரச்னை. அதற்கு ஒரு முடிவு காண்பதற்கு இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இதை விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, முந்திரிக் கொட்டையை நமது மாநிலத்திற்குள் கொண்டு வருவதை தடை செய்து கேரள அரசு ஓர் உத்தரவு பிறப்பித்திருப்பது உண்மை. நமது மாநிலத்தில் உள்ள இந்த முந்திரிப் பருப்புத் தொழிற்சாலைகளுக்கு இங்கே விளையும் முந்திரிப் பழங்கள் போதுமானதாக இல்லை. நாம் பெரும்பாலும் கேரளா, கருநாடகம் கோவா முதலிய மாநிலங்களிலிருந்து கிடைக்கும் மூலப் பொருளைத்தான் நம்பியிருக்க வேண்டியிருக்கிறது. கேரள அரசு பிறப்பித்த இந்த உத்தரவு குமரி மாவட்டத்திலுள்ள தொழிலைப் பாதித்திருக்கிறது என்பது உண்மை. இந்த நெருக்கடியைத் தவிர்க்க, தொழிலாளர்களின் துயரைப் போக்க அரசு முயற்சி எடுத்து வருகிறது. இதுபற்றி கேரள தொழிலாளர் நல அமைச்சர் திரு. புருஷோத்தமன், தொழில், தொழிலாளர் நல இலாகா செயலாளர்கள், தொழிலாளர் நல ஆணையர் ஆகிய அனைவரும் வரும் 21-11-1975 அன்று கன்னியாகுமரியில் கூடி பேசவிருக்கிறோம். பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு அவசியம் ஏற்பட்டால் மத்திய அரசையும் தலையிடக் கோரி ஆவன செய்யலாம் என்று எண்ணுகிறேன்.

கடந்த 10-11-1975 நான் குமரி மாவட்டத்திலே இந்தத் தொழிலதிபர்களைச் சந்தித்துப் பேசியிருக்கிறேன். அவர்களும் 21-11-1975 அன்று கேரள அமைச்சருடன் நடக்கவிருக்கும் பேச்சு வார்த்தையில் கலந்துகொள்ளுகிறார்கள். ஆகவே நிலைமையை உணர்ந்து அரசு ஆவன செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இதுபற்றி தொழில் துறை அமைச்சரையும் கலந்து ஆவன செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர்நலத் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இதுகுறித்து அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்கத் தேவையில்லையென்பதால் இதற்கான அனுமதியை மறுக்கிறேன்.



## (ஆ) மேட்டூர் ஸ்பின்னிங் மில்லில் சில தொழிலாளர்கள் நீக்கமும் அதனால் நடைபெறும் வேலைநிறுத்தமும் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மேட்டூர் ஸ்பின்னிங் மில்லில் நீண்ட நாட்களாகப் பணியாற்றி வந்த 7 தொழிலாளர்களை நியாயமான காரணமில்லாமல் வேலைநீக்கம் செய்துவிட்ட காரணத்தால் 17—10—1975 லிருந்து மேற்படி தொழிற்சாலையில் வேலைநிறுத்தம் நடந்து வருகிறது. இதனால் உற்பத்தி தடைப்பட்டும் தொழிலாளர் குடும்பங்கள் துன்பப்பட்டு இருந்து வரும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து விவாதிக்க, பேரவையின் 42-வது விதியின்கீழ் ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறார் திரு. எம். சுரேந்திரன் அவர்கள்.

**திரு. எம். சுரேந்திரன்:** தலைவர் அவர்களே, மேட்டூரில் ஒரு ஸ்பின்னிங் மில் இருக்கிறது. அதில் 300 தொழிலாளர்களுக்கு மேல் வேலை செய்கிறார்கள். அங்கே நிரந்தரமாக வேலை செய்கிற தொழிலாளர்கள் வேறு வேலைகளுக்கு மாற்றப்பட்டு, அந்தத் தொழிலாளர்கள் வேறு வேலையில் மற்றவர்கள் செய்கிற அளவுக்கு வேலை செய்ய வேண்டுமென்று கட்டாயப்படுத்தப்பட்டு அதைச் செய்யாததால் இந்த ஏழு பேர்கள் பலர் தொழிற்சங்கத்தின் நிர்வாகத்தில் முக்கியமான பொறுப்புடையவர்கள் இப்போது வேலையிலிருந்து டிஸ்மிஸ் செய்யப்பட்டுள்ளனர். எல்லா நேரங்களிலும்போல் இந்த நேரத்தில் செய்வது சரியானது அல்லவென்று அந்தத் தொழிற்சாலை நிர்வாகத்திற்கு எடுத்துக்காட்டினேன். அந்தத் தொழிலாளர்கள் நிரந்தரமான வேலையில் செய்யும் அளவுக்கு தற்காலிகமாக மாற்றப்பட்டிருக்கும் அந்த வேலையில் அளவு குறைவுபடுகிறது என்பது நிர்வாகத்தின் குற்றச்சாட்டு. இந்தக் குற்றச்சாட்டு இன்றைக்கு அல்ல, ஆறு வருஷங்களாக இருக்கிறது. அப்படி ஆறு வருஷங்களாக இருந்து கொண்டிருக்கிற காரியத்தை இந்த நேரத்தில் பார்த்து அவர்களை டிஸ்மிஸ் செய்வதென்றால் அவசர கால நிலைமையை அவர்கள் சிறிதும் பொருட்படுத்தவில்லை என்பதுதான் தொழிற்சாலை நிர்வாகத்தின் நிலை.

தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்யக்கூடாது, உற்பத்தி தடைபடக்கூடாது, அதே நேரத்தில் தொழிற்சாலை நிர்வாகம் தொழிலாளர்கள் மீது வேலைநீக்கம் நடவடிக்கை எடுக்கக் கூடாதென்ற பொதுவான கருத்து, தார்மீகமான நிலையில் நாட்டு நிலைமைக்கேற்ப உருவாக்க வேண்டுமென்ற ஒரு சூழ்நிலை தேச

முழுவதும் ஏற்பட்டிருக்கும்பொழுது, வேண்டுமென்றே அந்தத் தொழிலாளர்களே ஆத்திர மூட்டும் வகையில் தங்களுடைய தொழிற்சாலே நடக்காமல் இருந்தால் நல்லது என்று எண்ணுகிருர்கள் போல் தோன்றுகிறது.

அப்படிப்பட்ட காரணத்தால் இப்படி ஒரு செயலேச் செய்து தொழிலாளர்கள் வேலேநீக்கம் செய்யப்பட்டு கிட்டத்தட்ட ஒரு மாதமாக வேலேநிறுத்தம் நடக்கிறது. இதுபற்றி லேபர் ஆபீசர், டெபுடி கமிஷனர், கமிஷனர் அவர்கள் எல்லாம் பேச்சு வார்த்தை நடத்தியும்கூட இந்தப் பிரச்னே தீரவில்லே என்ற தகவல் வந்திருக்கிறது. இதனுல் உற்பத்தி பாதிக்கப்படுகிறது. மேலும் இது தொடர்ந்து நடைபெற அனுமதிக்காமல், இந்த அவசர நிலேமையில் தொழிலாளர்களே டிஸ்மிஸ் செய்தது கண்டிக்கத்தக்கது என்று நிர்வாகத்திற்கு எடுத்துக் காட்டி அந்தத் தொழிலாளர்களே வேலேக்கு எடுத்துக்கொள்ளும்படி செய்ய வேண்டும் என்ற முக்கியமான விஷயத்தைப்பற்றி ஆராய வேண்டியது அவசியம் என்று கருதுகிற காரணத்தால் மற்ற பிரச்னேகளேயெல்லாம் ஒத்திவைத்து இதை விவாதிக்க இந்தச் சபையில் கொண்டுவந்திருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மேட்டூர் ஸ்பின்னிங் மில்ஸ், மேட்டூர் அணே என்னும் நிறுவனத்தில் சுமார் 470 தொழிலாளர்கள் வேலே செய்து வருகின்றனர். இந்த நிறுவனத்தில் கீழ்க்கண்ட தொழிற்சங்கங்கள் இயங்கி வருகின்றன :—

1. மேட்டூர் ஸ்பின்னிங் மில்ஸ் தொழிலாளர் சங்கம், மேட்டூர் அணே.

2. மேட்டூர் ஸ்பின்னிங் மில்ஸ் பஞ்சாலேத் தொழிலாளர் சங்கம் மேட்டூர் அணே.

ரீலிங் பிரிவில் நிர்ணயிக்கப்பட்டுள்ள உற்பத்தி அளவை கொடுக்கவில்லே என்ற காரணத்தினல் நிர்வாகத்தினர் கீழ்க்கண்ட 7 தொழிலாளர்களே 15-9-1975 அன்று வேலே நீக்கம் செய்தனர் :—

1. திரு. ஏ. கிருஷ்ணன்.
2. திரு. வி. வெங்கடசாமி.
3. திரு. என். நடராஜன்.
4. திரு. எம். ராஜப்பன்.



5. திரு. கே. பழனியப்பன்.
6. திரு. ஏ. நாராயணசாமி.
7. திரு. என். தண்டபாணி.

இதை எதிர்த்து மேட்டூர் ஸ்பின்னிங் மில்ஸ் தொழிலாளர் சங்கம், 16-9-1975 அன்று 1-10-1975 முதல் வேலேநிறுத்தம் செய்யப் போவதாக வேலேநிறுத்த அறிவிப்புக் கொடுத்தது. இந்தத் தொழிற் தகராறு சேலம், தொழிலாளர் துறை அலுவலர் முன்பு பேச்சு வார்த்தையில் இருக்கும்போது 11-10-1975 அன்று மேட்டூர் ஸ்பின்னிங் மில்ஸ் தொழிலாளர் சங்கம், தங்களுடைய வேலே நிறுத்த அறிவிப்பை வாபஸ் பெற்றுக் கொண்டு வேலே நீக்கப் பிரச்னேயை மட்டிலும் வற்புறுத்துவதாகவும் தெரிவித்தனர்.

16-10-1975 அன்று கோவை, தொழிலாளர் துறை துணே ஆணேயர் முன்பு பேச்சு வார்த்தைகள் நடந்தன. அதன் முடிவு தெரிவதற்கு முன்பாக தொழிலாளர்கள் அனேவரும் 17-10-1975 காலே 7 மணி முதல் வேலேநிறுத்தம் செய்தனர்.

இதனிடையில் நிர்வாகத்தினர் தொழிற் தகராறு சட்டம் பிரிவு 33 (2) (பி)ன் கீழ் மேற்கண்ட 7 தொழிலாளர்களே வேலே நீக்கம் செய்ததை அங்கீகரிக்க சேலம் தொழிலாளர் துறை அலுவலருக்கு விண்ணப்பம் செய்தனர். இந்த விண்ணப்பத்தின் மீது சேலம் தொழிலாளர் துறை அலுவலர் விசாரணேக்குப் பிறகு அங்கீகாரம் கோரிய மனுவை 3-11-1975 அன்று தள்ளுபடி செய்துவிட்டார். இதனுல் இனிமேல் வேலேநிறுத்தம் தேவையில்லே என்றும் வேலேக்குத் திரும்புமாறும் தொழிற் சங்கங்களே சேலம் தொழிலாளர் துறை அலுவலர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இத்தொழில் தகராறு மீது சென்னே தொழிலாளர் துறை தனித் துணே ஆணேயர் முன்பு 27-10-1975, 28-10-1975 மற்றும் 3-11-1975 ஆகிய தேதிகளில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று முடிவு ஒன்றும் ஏற்படவில்லே. மீண்டும் பேச்சுவார்த்தைகள் மூலம் முடிவு காணலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலேவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இதுகுறித்து அவையின் இதர அலுவல்களே ஒத்திவைத்து விவாதிக்கத் தேவையில்லேயென்பதால் இதற்கான அனுமதியை மறுக்கிறேன்.

**(இ) சென்னை, ஸ்ரீலேகா ஓட்டலுக்குள் காவல் துறையினர் நுழைந்து தொழிலாளர்களைத் தாக்கி, கைது செய்ததாகக் கூறப்படுவது குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அண்ணா சாலையிலுள்ள ஸ்ரீலேகா ஓட்டலில் 10—11—1975 அன்று போலீசார் நுழைந்து சில தொழிலாளர்களை அடித்தும் நூற்றுக்கு மேற்பட்ட தொழிலாளர்களைக் கைது செய்தும் தொழிற் சங்க நடவடிக்கைகளை தடுக்க முற்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களைத் தள்ளி வைக்கவேண்டும் என்று பேரவையின் 42-வது விதியின்கீழ் ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கீழ்க்கண்ட மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ளனர்:—

(1) டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்கள்,

(2) திரு. மணலி சி. கந்தசாமி அவர்கள்,

(3) திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் மற்றும்

(4) திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஸ்ரீலேகா ஹோட்டலைப் பொறுத்தவரையில் ஏறக்குறைய இரண்டு மாதங்களாகவே அங்கே தொழில் தகராறு நடந்து கொண்டு வருகிறது என்பது நம் தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு வந்திருக்குமென்று நான் கருதுகிறேன். அங்கே இந்த முக்கியமான பிரச்னை இதுவரையில் தீர்க்கப் படாமல் இருக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டதால் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டுவரவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

அடுத்த கட்டமாக 12—9—1975 அன்று நடராஜன் என்ற தொழிலாளியை அங்கே மிரட்டி ஒரு வெள்ளைக் கடிதத்தில் அங்கே உள்ள முதலாளி கையெழுத்து வாங்கியதாக புகார் தரப்பட்டு அந்த வெள்ளைக் கடிதத்தில் அந்தத் தொழிலாளியின் ராஜினாமாவை எழுதிவிட்டு அந்தத் தொழிலாளிக்கே காட்டி னார்கள். அது முதல் கட்டம்.

அடுத்து 20 நாட்களுக்குப் பிறகு பழனி என்பவரை வேலை நீக்கம் செய்தார்கள். அதை எதிர்த்து 10—11—1975 தொழிலாளர் சங்கத்தில் உள்ளவர்கள் ஏன் இப்படிச் செய்கிறீர்கள் என்று கேட்டார்கள்.



கேட்டதற்குப் பிறகு, 10—11—1975 இல் 'சங்கம் என்று இருப்பதனாலேதானே இப்படிக் கேட்கிறீர்கள், சங்கம் உங்களுக்குத் தேவையில்லை' என்பதாக எல்லாம் அந்த ஓட்டல் தொழிற்சங்கத்தை அவதூறாகக் கூறி, சங்கத்தில் இருக்கக்கூடிய முக்கியஸ்தர்களை நீக்கியிருக்கிறார்கள். இப்படி படிப்படியாக 3 கட்டமாக இந்தத் தகராறு வளர்ந்திருக்கிறது.

இதன் காரணமாகத்தான்—அவர்கள் ஸ்ட்ரைக் கூடச் செய்ய வில்லை. 10—11—1975 அன்று கறுப்பு பாட்ஜ் அணிந்துகொண்டு பணியாற்றியிருக்கிறார்கள்.

உடனே ஓட்டல் முதலாளி டி.1 ஸ்டேஷனுக்கு போன் செய்து போலீஸ் அதிகாரிகள் ஜீப்பில் வந்திருக்கிறார்கள். வந்து கறுப்பு பாட்ஜ் அணிந்திருந்தவர்களின் மார்பிலேயே, உனக்கு பாட்ஜ் கூடவா என்று அடித்திருக்கிறார்கள். மண்டையில் காயம்பட்டவர் இருக்கிறார். சம்பத், பாண்டியன், மாணிக்கம் ஆகிய தொழிலா ளர்கள் அடிபட்டிருக்கிறார்கள். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் — அங்கு இருக்கக்கூடிய கோவிந்தசாமி என்ற இன்ஸ் பெக்டர் இந்த அளவுக்கு அத்துமீறி நடந்து கொண்டிருக்கிறார்.

முழு விவரம் அமைச்சர் அவர்களுக்குக் கிடைத்திருக்காது என்று நினைக்கிறேன். தொழிலாளர் நலத்தில் அவர் மிகுந்த அக்கறை கொண்டவர் என்பது எனக்குத் தெரியும். இங்கே நாம் தொழிலாளர்களுடைய நலனுக்காகச் சட்டங்களைப் போடுகிறோம். ஆனால் வெளியில் நடைபெறுவது இந்தச் சட்டங்களுக்கு முற்றிலும் மாறானதாக இருக்கிறது. முதலாளிகள். they take law into their hands.

கடைசியில் என்னவென்றால் அந்தத் தொழிலாளர்கள் போலீஸ்காரர்களைத் தாக்க வந்ததாக ஒரு கேஸ் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் ஒரு ஓட்டலில் நடந்தது என்று மற்ற ஓட்டல்களுக்கும் பரவ ஆரம்பித்துவிட்டால் இதுவே பூதாகாரமான பிரச்சனையாகிவிடும். It will spread to other hotels.

ஆகவேதான் அரசாங்கத்தின் பொறுப்பு தொழிலாளர் களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டும். போலீஸ்காரர்கள் அனாவசியமாக முதலாளிகளுக்குச் சாதகமாக தொழில் தகராறில்

தலையிடக்கூடாது; தவறான முறையில் இந்தப் பிரச்சனையில் நடந்துகொண்டுள்ள அதிகாரிகளின் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆகவே அவையின் மற்ற நிகழ்ச்சிகளை ஒத்தி வைத்து இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று சொல்லி அமர்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இந்தப் பிரச்சனையில் இரண்டு மூன்று முக்கியமான பிரச்சனைகள் இருக்கின்றன. ஒன்று, தொழில் தகராறுகளில் எந்த அளவுக்குப் போலீசார் தலையிடலாம் என்பது. தொழில் தகராறு நடந்துகொண்டிருக்கும்போது லேபர் கமிஷனர் அதில் தலையிடலாமே தவிர போலீஸ் இலாக்கா தலையிடுவது இப்போது அதிகமாகிக் கொண்டு வருகிறது. அத்துவானி கார்லிக் கம்பெனியை எடுத்துக் கொண்டால்கூட உள்ளே இருந்த தொழிலாளிகள் 200 பேர்களைக் கைது செய்து, ரிமாண்டு செய்யாமல், சப் ஜெயிலில் அடைத்து வைத்திருந்த சம்பவம் இருக்கிறது.

இது நடந்த இடம் சென்னையிலேயே மிகவும் பிசியாக இருக்கக்கூடிய அண்ணாசாலை—தேவி பாரடைஸ் தியேட்டர்கள் இருக்கக்கூடிய பகுதி.

ஓட்டல் முதலாளிகள் திடீரென்று பணக்காரர்களாக ஆகி விடுகிறார்கள். அவர்களுடைய செல்வாக்குதான் போலீசில் நடந்து கொண்டிருக்கிறது. அதுவும் இங்கே பணியாற்றிக் கொண்டிருந்த தொழிலாளர்களைப் போலீசார் தாக்கி யிருக்கிறார்கள்.

அதிலும் இன்னொன்று, இந்த ஓட்டலில் உள்ள தொழிலாளர்கள் சென்னையைச் சேர்ந்தவர்கள் அல்ல. செங்கல்பட்டு, மதுரை, இராமநாதபுரம் போன்ற ஜில்லாக்களைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்கு ஒரு தொழிற்சங்கத்தை அமைத்துக் கொடுத்தவர் ஆளுங்காங்கிரசைச் சேர்ந்த ஒரு வழக்கறிஞர். அந்தத் தொழிலாளர்கள் சட்ட ரீதியாகச் செயல்படத் தொடங்கிவிடக் கூடாது என்று, பழிவாங்கும் எண்ணத்துடனேயே இது நடைபெற்று இருக்கிறது.



போலீசார் உள்ளே புகுந்து பணியாற்றக்கூடிய தொழிலாளர்களை அடித்தது மாத்திரம் அல்ல, குதிரை கவிழ்ந்து ஆளைய மிதித்ததுபோல—இந்தத் தொழிலாளர்களை போலீசார் உள்ளே புகுந்து தாக்கியிருப்பதோடு, தங்களை அவர்கள் தாக்கியதாக அவர்கள் மீதே ஒரு வழக்கைப் பதிவு செய்திருக்கிறார்கள். இந்த மாதிரி சென்னை நகரத்தில் மிகவும் பிசியாக இருக்கக்கூடிய அண்ணா சாலையிலேயே தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்று சொன்னால் இதுபற்றி—போலீஸ் எந்த இவ்வளவுக்கு செயல்படலாம் என்பதை வரையறுக்க இதுபற்றி விவாதிக்க வேண்டுமென்று சொல்லி அமர்கிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியிருக்கிறார்கள். அதில் இருக்கிற பிரச்சனை தொழிற்சங்கப் பிரச்சனை. அவர்களுக்கும், மானேஜ்மெண்டுக்கும் உள்ள தகராறே. மானேஜ்மெண்டு சிலபேரை வேலையைவிட்டு நீக்கினார்கள். இதை எதிர்த்து தொழிலாளர்கள் ஸ்ட்ரைக் கூடச் செய்யவில்லை, கறுப்பு பாட்ஜைத்தான் அணிந்துகொண்டார்கள். அப்படி இருக்கிற போது முதலாளிகள் போலீசாரைக் கூப்பிடுவதும், போலீசார் உள்ளே நுழைந்து பணியாற்றக்கூடியவர்களைத் தாக்குவதும் மிகவும் அநீதமான செயல். 30 பேர்கள் சஸ்பெண்டு செய்யப் பட்டிருக்கிறார்கள். இது மிகவும் முக்கியமான விஷயம். அத்து மீறி நடந்த போலீசார்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதைப்பற்றி விவாதிக்க இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் தகராறுகளில் காவல்துறையினர் தலையிட்டு தொழிலாளர்களுக்குப் பாதகமாக, முதலாளிகளுக்குச் சாதகமாக நடந்துகொள்ளக்கூடாது என்பதை கொள்கை அளவில் இந்த அரசு ஏற்றுக்கொண்டிருப்பதோடு, பல ஆண்டுகளாக அந்தக் கொள்கையை இந்த அரசு கடைப்பிடித்துக்கொண்டு வருகிறது. அதை மீறி எந்தத் தொழில் தகராறு சம்பந்தமாகவும், எந்த இடத்திலும் சரி காவல்துறையினர் தலையிட்டு செயல்பட்டிருந்தால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொள்வது என்பதுதான் எங்கள் கொள்கை என்பதைத்

தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கொள்கையைப் பின்பற்ற வேண்டுமென்று திரு மாரிமுத்து அவர்கள் பேசினது மகிழ்ச்சி. தொடர்ந்து இந்தக் கொள்கையே கடைப்பிடிக்கப்பட்டு வரும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால் இதிலே நடந்திருப்பது வேறுவிதம் என்று காவல் துறையினர் தகவல் கொடுத்திருக்கிறார்கள். தொழில் தகராறு ஏற்பட்டு, மானேஜ்மெண்டார் 2 தொழிலாளர்களை வேலைநீக்கம் செய்து, வேலைநீக்கம் செய்யப்பட்ட 2 தொழிலாளர்கள் உள்ளே செல்லவும், உள்ளே சென்று மற்ற தொழிலாளர்களைத் தூண்டி விடவும், சேதம் விளைவிக்கவும் முயற்சிப்பதாக ஒரு புகார் போலீசாருக்கு எழுத்து மூலம் தரப்பட்டு, அதை விசாரிக்க அங்கே போலீசார் போய் இருக்கிறார்கள். அப்படிப் போன இரண்டு போலீசாருக்கும், வேலையைவிட்டு நீக்கப்பட்ட 2 தொழிலாளர்கள், அவர்களோடு சேர்ந்த தொழிலாளர்களுக்கும் தகராறு ஏற்படக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னால்தான் அதிகமான போலீசார் அங்கு சென்று, அவர்களைச் சமாதானப்படுத்தி, தகராறு செய்த 6 பேர்களைக் கைது செய்து கொண்டுபோயிருக்கிறார்கள். இந்த அமளியில் போலீசாருக்கும் காயம் ஏற்பட்டிருக்கிறது. தொழிலாளர்களுக்கும் காயம் ஏற்பட்டிருக்கிறது.

தொழில் தகராறு என்று எழுந்தவுடன் அது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் புகார் செய்யாமல்—தங்கள் கையிலேயே சட்டத்தை எடுத்துக்கொள்கிற முறை வருகிற போதுதான் போலீசார் தலையிட வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது.

[முற்பகல் 11.00]

தலையிட்டதற்குப் பின்னால் போலீசார் தரப்பிலே தவறு, தொழிலாளர் தரப்பிலே தவறு என்ற வாதப்பிரதிவாதங்கள் எல்லாம் நடைபெறுகின்றன. ஒரு உத்தரவு போடப்பட்டதற்குப் பின்னாலே அது சரியோ தவறோ அதைப்பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலே சொல்லாமல் தாங்களே தவறாக நடந்து கொள்ள முயல்வதால்தான் தொழிலாளர் பிரச்சினையாக இருந்தது சட்டம் ஒழுங்குப் பிரச்சினையாக மாறுகிற நிலைமை ஏற்படுகிறது.



இது ஒரு மார்ஜின் நிலைமையில் உள்ள பிராப்ளம் தான். இந்தப் பக்கம் என்று சொல்லிவிட முடியாது, அந்தப் பக்கம் என்று சொல்லிவிட முடியாது.

முதலாளிகளுக்குச் சாதகமாக சட்ட விரோதமான முறையிலே நடந்து கொள்ளக்கூடாது என்ற முறையிலேதான் நம்முடைய அரசாங்கம் நடந்துகொண்டு வருகிறது. ஆனால் ஆங்காங்கே சில தவறுகள் ஏற்படுமானால் காவல்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைமையிலே இருக்கிறார்கள்.

சில நேரங்களிலே சில தொழிலாளர்கள் தாங்களே சட்டத்தைக் குலைக்கக்கூடிய செயல்களைச் செய்வதில் ஈடுபடுகிற நிலைமையிலேதான் காவல் துறை தலையிட வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இந்தச் சம்பவத்திலே காவல் துறையினரில் காயம்பட்டவர்களும் தொழிலாளர்களில் காயம்பட்ட சிலரும் மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்கள். இதைப்பற்றி வழக்கும் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே இது அன்றாட நிர்வாகப் பிரச்சினை என்பதால் இதற்காக அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்கவேண்டிய அவசியம் இல்லை என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இதுகுறித்து அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்கத் தேவையில்லையென்பதால் இதற்கான அனுமதி அளிக்க மறுக்கிறேன்.

(ஈ) சென்னை, மையப் புகைவண்டி நிலையம் அருகில் 11—11—1975 அன்று பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்து ஒன்றினால் ஏற்பட்ட விபத்து குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, 11—11—1975 ஆம் நாளன்று சென்னை, மையப் புகைவண்டி நிலையம் அருகில் பல்லவன் போக்குவரத்துக் கழக பஸ் ஒன்றினால் ஏற்பட்ட விபத்து குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று திருமதி அனந்தநாயகி, திரு. கே. டி. கே. தங்கமணி, திரு. எம். சுரேந்திரன், டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. க. உரொ. எட்மண்ட், திரு. ஜே. ஜேம்ஸ்,

திரு. பி. வெங்கடசாமி ஆகியோர் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இதுகுறித்து ஏற்கனவே நமமுடைய தொழிலாளர்நலத் துறை அமைசசர் அவர்கள் ஓர் அறிக்கையை இந்த அவைக்கு அளித்திருக்கிறார்கள். அதற்குமேல் எதுவும் தகவல்கள் இருந்தால் சுருக்கமாக விளக்குமபடி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் சென்னை நகரில் மத்திய ரயில் நிலையத்தின் முன்னால் நடைபெற்ற விபத்துபற்றி மேலும் பல தகவல்களைக் கொடுப்பதற்கும், விவாதிப்பதற்கும் இந்த அவையின் பிற அலுவல்களை ஒததிவைத்து விவாதிக்கவேண்டுமென்ற முறையிலே நான் 42 வது விதியின்கீழ் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன்.

நேற்றைய தினம் நம்முடைய தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் நடைபெற்ற சம்பவம்பற்றி ஒரு சில விளக்கங்களை இங்கே அளித்திருக்கிறார்கள். நேற்று நடைபெற்ற சம்பவத்திற்கு முழுக்க முழுக்க அரசாங்கம்தான் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டிய நிலைமை இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காக நான் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ள முன்வந்திருக்கிறேன். பொதுவாக விபத்துக்கள் என்பது தானாக நடக்கக்கூடிய காரியங்கள், அதைத் தவிர்ப்பது என்பது முடியாத காரியம் என்பதை நாங்கள் எல்லாம் நல்லமுறையிலே உணர்கிறோம். ஆனால் நேற்றைய தினம் நடைபெற்ற சம்பவம் பற்றிப் பார்த்தால் இந்த விபத்து நடைபெறாமல் தடுத்திருக்க முடியுமா என்று பார்த்தால் நிச்சயமாக அரசாங்கத்தால் முடிந்திருக்கும்.

இன்றைய தினம் அரசாங்கத்தின் பொறுப்பிலே இருக்கின்ற பல்வேறு போக்குவரத்துக் கழகங்களிலே இருக்கின்ற பேருந்துகள் எப்படி கவனிக்கப்படாமல் இருக்கின்றன என்பதையெல்லாம் இந்த அவையிலே பல்வேறு எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்கள் பல முறைகளிலே வலியுறுத்தி கூறியிருக்கிறோம். கடந்த முறை நடைபெற்ற நிதிநிலை அறிக்கை விவாதத்தின் போதுகூட போக்குவரத்துத் துறைக்குண்டான மானியக் கோரிக்கையின்மீது நடந்த விவாதத்திலே இந்த அவையிலே





எடுத்துவைக்கப்பட்ட கருத்துகளைப் பார்த்தால் பொறுப்புள்ள பல்வேறு எதிர்க் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அரசுப் பேருந்துகள் எந்த அளவிற்கு சீர்கேடாக இருக்கின்றன, எந்த அளவிற்குச் சீர்கேடான நிர்வாகம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதையெல்லாம் பலமுறைகள் எடுத்துச் சொன்னாலும் அந்தத் தவறுகளையெல்லாம் பொறுப்புள்ள அரசாங்கம் திருத்துகின்ற அளவில் அரசாங்கம் இல்லை என்பதை எடுத்துக்காட்ட வேண்டிய கடமையில் நாங்கள் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நேற்றைய தினம் நடைபெற்ற சம்பவம்பற்றி எல்லாப் பத்திரிகைகளையும் படித்துப் பார்த்தால் மிகவும் மோசமான நிலைமையில் இந்த விபத்து நடந்திருப்பதாக தெளிவாகச் சொல்கின்றன. பேருந்தை ஓட்டிவந்த ஓட்டுநர்மீது எந்தவிதமான தவறும் இல்லை. அவர்மீது அஜாக்கிரதைக்கான குற்றச்சாட்டு எதுவுமில்லை என்பதைப் பத்திரிகைகளிலே பார்த்தால் தெரியும். அடிக்கடி ஒரு பழமொழி சொல்வார்கள். பகிய பழமொழி, பல்லவா உன்னைக் தள்ளவா என்றல்லவா சொல்வார்கள். பல்லவா உன்னைத் தள்ளவா என்ற நிலையில் இருந்த பேருந்து இவ்வளவு வேகமாக எப்படி ஓடியது என்று ஆச்சரியத்தோடு பத்திரிகைகளைப் பார்த்தால். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஆக்ஸிடெண்டுக்கான விவரங்களை எல்லாம் நேற்றே அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். அதற்குள்ளே போக வேண்டாம். . .

THIRUMATHI T. N. ANANDANAYAKI: In addition to the information given by the Hon. Minister, I would like to ask. . .

MR. DEPUTY SPEAKER: Thiru Edmund.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: My name is first in the notice. So far as Motion under rule 42 is concerned, I should have been asked to speak first. I do not know why I was not asked to speak.

MR. DEPUTY SPEAKER: Thiru Edmund happens to be a Leader of a party bigger than hon. Member's party.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : So far as the Motion under Rule 42—Adjournment Motion—is concerned, there is no major or minor party. Persons who have given the notice of adjournment motion must be given the first chance.

MR. DEPUTY SPEAKER : It is better the hon. Member applies brake.

திரு. க. உரொ. எட்மண்ட் : பல்லவா உன்னைத் தள்ளவா என்ற நிலைமை மாறி கொஞ்சம் வேகமாக ஓடியிருக்கிறது. ஓட்டுநர் ஒழுங்காக பிரேக்கைப் பயன்படுத்தியும்கூட பிரேக் ஒழுங்காக வேலைசெய்யவில்லையென்ற நிலைமையினாலே ரோடிலே ஓடவேண்டிய வண்டி ரயில் நிலையத்திற்குள் சென்று தண்டவாளத்திலே ஓடக் கூடிய முயற்சியெடுத்திருக்கிறது. பல்லவன் போக்குவரத்துக் கழகத்திலே ஒர்க்ஷாப் இருக்கிறது. அந்த ஒர்க்ஷாப்பிலே பணி யாற்றுகிறவர்கள் என்ன செய்கிறார்கள்? காலையிலே ஒரு பேருந்து வெளியிலே விடப்படுகிற நேரத்திற்கு முன்பே அடிப் படையாகப் பார்க்க வேண்டிய காரியங்கள் சில இருக்கின்றன. பிரேக் சரியாக இருக்கிறதா, ஒழுங்காக இருக்கிறதா, ஆக்ஸில் ரேட்டர் ஒழுங்காக இருக்கிறதா, கிளட்ச் சரியாக இருக்கிறதா என்று பார்க்கவேண்டும். இப்படிப் பார்க்காத காரணத்தினால் தான் பல்வேறு இடங்களிலே பல்வேறு கழகங்களைச் சார்ந்த பேருந்துகள் விபத்துக்குள்ளாகின்றன. ஆகவே முழுக்க முழுக்க நம்முடைய அரசாங்கம்தான் இதற்குப் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும். அவர்கள் எவ்வளவு காரணங்களைச் சொன்னாலும் சமாதானங்களைச் சொன்னாலும் எதிர்க்கட்சிகள் எடுத்துக் கொள்ள முடியாது. அமைச்சர் அவர்கள் நேற்று சொன்ன விவரங்கள் தவிர வேறு சமாதானங்கள் சொன்னாலும் அரசாங்கம்தான் முழுக்க முழுக்க இதற்குப் பொறுப்பேற்கவேண்டும். ஆகவே, அதைக் கொஞ்சம் விவரமாக விவாதிப்பதற்கு அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: துணைச் சபாநாயகர் அவர்களே, சென்னையிலே ஒரு பெரிய பரபரப்பு நேற்று ஏற்பட்டிருக்கிறது. பல்லவன் பேருந்து ஒன்று சென்ட்ரல் ஸ்டேஷன் உள்ளே சென்று பலபேர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனக்கு முன்னாலே பேசிய திரு. எட்மண்ட் அவர்கள் சொன்னதுமாதிரி பல்லவா



உன்னைத் தள்ளவா என்ற நிலைமை மாறி பல்லவா உன்னைக் கொல்லவா என்று போய்க்கொண்டிருக்கிறது. அதேமாதிரித்தான் இன்னொரு பஸ் அண்ணாநகரில் உள்ள குடிசையிலேயே போயிருக் கிறது. இந்த பஸ் இன்னும் கொஞ்சம் போனால் ரயில் டிக்கட் வாங்கிக்கொண்டு தண்டவாளத்திலே போகுமோ என்னவோ தெரிய வில்லை. தனியார் பஸ்களிலே ஓவர் கிரவுட் என்றாலும் ஓவர்ஸ்பீட் என்றாலும் உடனே போலீசார் நடவடிக்கை எடுக்கிறார்கள். ஆனால் அரசாங்க பஸ் என்றால் அது எவ்வளவு ஓவர் ஸ்பீடாக இருந் தாலும்சரி எவ்வளவு ஓவர் கிரவுட் ஆக இருந்தாலும்சரி நட வடிக்கை எடுப்பது கிடையாது. அரசாங்கம் ஓட்டினாலும் தனி நபர் ஓட்டினாலும் சட்டம் சட்டம்தானே.

அரசாங்க பஸ்கள் எதுசெய்தாலும் போலீசார் நடவடிக்கை எடுப்பது கிடையாது. அவர்கள் எப்படி வேண்டுமானாலும் ஓட்டிக்கொண்டுபோகலாமென்ற நிலைமைதான் இருக்கிறது.

அது மட்டுமல்ல, ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் டிரைவர்களாக வருகிறவர்களுக்குத் தகுந்த முறையிலே பயிற்சி கொடுக்கப்படுவ தில்லை. ஏதோ 'எல்' போர்டு மாட்டிக்கொண்டு பீச் ரோட்டிலே அரை மணிநேரம் ஓட்டச் சொல்லிவிட்டு கூட்டமான தெருக்களிலே ஓட்டச்சொன்னால் எப்படியிருக்கும்? பயிற்சி போதுமான அள விற்குக் கொடுக்காமல் ஓட்டச்சொல்வதால் தறிகெட்டு ஓடிக் கொண்டு, யமதர்ம ராஜா ஆளைத் தேடிக்கொண்டு போவதுபோல சென்ட்ரல் ஸ்டேஷனுக்குள் ஓடியிருக்கிறது. பஸ்களுடைய மெயின்டனன்ஸ் சரியில்லை.

எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர் சொன்னதுமாதிரி பிரேக் ஒழுங்காக இருக்கிறதா மற்றவையெல்லாம் சரியாக இருக் கிறதா என்று வண்டியை அனுப்புவதற்கு முன்னாலேயே பார்த்து அனுப்பியிருந்தால் இப்படிப்பட்ட நிலைமை வராது. திடீரென்று எப்படி பிரேக் பெய்லியர் ஆகும்? மெயின்டனன்ஸ் குறைவாக இருப்பதால்தான் இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது.

பெரிய நகரங்களிலே ஸ்பீட் பிரேக்கர்ஸ் போட்டிருக்கிறார்கள். ரொம்ப வேகமாக வராமல் ஜங்ஷன்களில், நிறைய மக்கள் கூடும் இடங்களில் ஸ்பீட் ப்ரேக்கர் போட்டு ஸ்பீடைக் குறைக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அம்மாதிரி நீங்களும் ஏன் செய்யக் கூடாது? இப்படி கட்டுக்கடங்காமல் ஓடுவதைத் தவிர்க்க ஸ்பீட் ப்ரேக்கர் களைப் போடுவது நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டி.வி.எஸ்-இல் எடுத்துக்கொண்டால் 30 மைல்களுக்கு மேல் யாரும் ஓட்ட முடியாமல் கண்ட்ரோல் செய்து வைத்திருந்தார்கள். அம்மாதிரியாவது' நீங்கள் செய்யுங்கள். கண்ட்ரோலும் செய்யாமல், சரியான பயிற்சி இல்லாதவர்களை டிரைவர்களாக நியமித்தும், 'போட் டெயின்டனென்ஸை வைத்துக்கொண்டு, ஸ்பீட் ப்ரேக்கரும் வைக்காமல்' கூட்டத்திற்கிடையில் ஓடும் நிலையில் நாம் நடத்திக்கொண்டிருக்கிறோம் என்றால் அதனால் தேசிய மயக் கொள்கைக்கே இழுக்கான நிலை ஏற்பட்டு விடுகிறது.

ஏதோ உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு காம்பன்சேஷன் என்று ஆயிரம், இரண்டாயிரம் ரூபாய் என்று கொடுக்கப்படுகிறது. ஆனால் அவர்களின் உயிர் விலை நிர்ணயிக்கப்படக் கூடியதா? பணம் வேண்டுமானாலும் கொடுத்து விடலாம். ஆனால் போன உயிரை யாரால் திருப்பிக் கொடுக்க முடியும்? எனவே உயிரைக் கொலை செய்வது என்பதை சாதாரணக் குற்றமாகக் கருதக் கூடாது. அந்த அளவிற்குக் கட்டுப்படுத்த இந்த அரசாங்கம் முன்வர வேண்டுமேயொழிய ஏதோ நஷ்ட ஈடு தருகிறோம் என்று சொல்லி உயிருக்கு விலை நிர்ணயிப்பது சரியல்ல. இதைத் தயவு செய்து அமைச்சரவர்கள் கவனிக்க வேண்டுமென்று கூறி, இதை விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காரணம், நகரத்திற்கு இது ஒரு நாகப் பிரச்னையாக இருக்கிறது. எனவே, இதைப்பற்றி விவாதித்து, இதை எப்படிக் கட்டுப்படுத்த வேண்டுமென்பதற்குத் திட்டவட்டமான முடிவுகளை எடுக்க அமைச்சரவர்கள் ஒத்துக்கொண்டு, அதற்கு இந்தச் சபையை ஒத்தி வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, இந்த நிகழ்ச்சியை ஒரு விபத்து என்று சொல்வதற்கில்லை, இதை ஒரு கோர சம்பவம் என்றே சொல்ல வேண்டும். நாங்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் இந்த மன்றத்தில் கூறியிருக்கிறோம். அடிக்கடி இம்மாதிரியான நிகழ்ச்சிகள், அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு இந்தப் போக்குவரத்து இலாக்காவில் நடைபெறுகிறது என்பதை இந்த நாடு நன்றாக உணர்ந்திருக்கிறது.

சாதாரணமாக நிதிநிலை அறிக்கையை வைக்கும்பொழுது ஒவ்வொரு ஆண்டும் எத்தனைபேர்கள் இம்மாதிரி மாண்டார்கள் என்ற அறிக்கை வரும். ஆனால் சென்ற இரண்டு மூன்று ஆண்டுகளாக





இப்படிப்பட்ட அறிக்கை நமது மன்றத்தில் வைக்கப்படவில்லை. அதன் இரகசியம் இப்பொழுதுதான் தெரிகிறது. எண்ணிக்கைக்கு அடங்காத அளவிற்கு இம்மாதிரி விபத்துக்களில் மக்கள் மாண்டுகொண்டே இருக்கிறார்கள்.

தலைநகரமாகிய சென்னையில், அதிகம் சட்டசபை நடந்து கொண்டிருக்கின்ற நேரத்தில் மட்டும் தான் அந்த நிகழ்ச்சிகளின் வாயிலாக ஏற்படும் உயிர்ச்சேதங்களின் எண்ணிக்கை மட்டும்தான் தெரிகிறதே தவிர, பல்வேறு மாவட்டங்களில் நடந்து கொண்டிருக்கின்ற கழகங்கள் எத்தனை உயிர்களைக் கொள்ளை கொள்கிறது என்ற விவரங்கள் நமக்குக் கிடைப்பதற்கு வழியில்லை. கிராமங்களில் எத்தனை மக்கள் சாகிறார்கள் என்ற விவரங்கள் வருவதற்கு வழியில்லை. இப்பொழுது நகரத்தில் நடந்திருப்பதன் காரணமாக, அதிலும் சட்டமன்றம் நடைபெற்றுக்கொண்டிருப்பதால்தான் நாம் இதை அறிய வாய்ப்பிருக்கிறது என்ற ஒரு மோசமான நிலை நமது மாநிலத்தில் இருக்கிறது என்றால் நிச்சயமாக அது விரும்பத் தக்கது அல்ல என்பதையும் மாண்புமிகு அமைச்சரவர்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இப்பொழுதாகிலும் இந்த நிகழ்ச்சி ப்ரேக் ஃபெயிலியரால்தான் ஏற்பட்டது என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. அண்ணாநகர் நிகழ்ச்சியைக்கூட ப்ரேக் ஃபெயிலியரால் ஏற்பட்டது என்பதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. ஆனால் என்னைப் பொறுத்தவரையில் இம்மாதிரி நிகழ்ச்சிகளுக்கு முக்கிய காரணம், இப்பொழுதெல்லாம் ஒர்க்ஷாப்புகளில் வேலை ஒழுங்காக நடைபெறுவதில்லை.

இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ஹைகோர்ட்டில் ஒரு ஜட்ஜ்மெண்டில் கூட கூறப்பட்டிருக்கிறது. எஃப். சி. இல்லாமல் வண்டி ஓடிக்கொண்டிருக்கிறது. ஒரு வண்டி ஒரு இலட்சம் மைல்கள் ஓட வேண்டும் என்றிருந்தால் அந்த வண்டி பல இலட்சம் மைல்கள் ஓடினாலும்கூட அதை ரோட்டிலேயிருந்து அகற்றுவதாக இல்லை. இப்படிப்பட்ட முறைகேடுகள் சாதாரணமாக நடைபெறுவதால்தான் இம்மாதிரி நிகழ்ச்சிகள் நடக்கின்றன. இந்த நிகழ்ச்சியில் மூன்று பேர் இறந்திருக்கிறார்கள் என்றால் இந்த உயிர்களுக்கு யார் சமாதானம் சொல்ல முடியும்? ஒருவேளை தனியார் நிறுவனமாக இருந்தது என்றால் தக்க பரிகாரம் தேடலாம், தக்க நிவாரணத்தை வாங்கிக்கொள்ளலாம். ஆனால் இந்த அரசாங்கம்

பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு இம்மாதிரி சாகின்றவர்களுக்கு நியாயமான காம்பன்சேஷன் கொடுக்கப்படவில்லை என்ற குற்றச் சாட்டைக் கூற விரும்புகிறேன்.

ஆகவே, இந்த நிகழ்ச்சியில் அரசாங்கத்தைத் தவிர வேறு யாரும், அந்த டிரைவர் கூட பொறுப்பில்லை. அரியலூரில் அன்றைக்கு நடந்த இரயில் நிகழ்ச்சியின்பொழுது அது இயற்கை யின் காரணமாக நடந்தது. beyond the control of man power அந்தச் சூழ்நிலையில் நடந்தாலும்கூட அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்த அமைச்சர் தனது பதவியை இராஜினாமா செய்தார். ஆனால் இங்கே நான் அதனைக் கூறவில்லை. ஏனென்றால் இந்த இலாக்காவைப் பொறுப்பேற்றிருக் கின்ற மாண்புமிகு அமைச்சரவர்கள் மிகவும் நல்ல அமைச்சர் என் பதில் கருத்து வேறுபாடு இல்லை.

இந்த நிகழ்ச்சி நடைபெற்ற உடனடியே அந்த இடத்திற்குச் சென்று அதில் மாண்டவர்களின் குடும்பங்களுக்கு ஆறுதல் கூறி யிருக்கிறார்கள். அதுமட்டுமின்றி என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ அந்த நடவடிக்கைகளை எடுக்கத் தயாராக இருக்கிறார்கள், அந்த மனநிலையில் உள்ளவர்கள்.

ஆனால் இம்மாதிரி நிகழ்ச்சி இந்த அரசாங்கம் தேசிய மய மாக்கிய போக்குவரத்து இலாக்காவில் நடைபெற்றிருப்பதால் இந்த அரசாங்கமே பதவியை இராஜினாமா செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அளவிற்கு முக்யத்துவம் வாய்ந்த பிரச்னையாக இது இருப்பதால் இதனை விவாதித்து, இன்றைக்கு அரசாங்கம் இராஜினாமா செய்ய வேண்டுமா வேண்டாமா என் பதைப்பற்றி முடிவு செய்ய இந்தச் சபையின் இதர அலுவல்களை யெல்லாம் ஒத்திவைத்து இந்தப் பிரச்னையைப் பற்றி இந்தத் தீர் மானத்தை நாம் விவாதிப்பதற்கு உத்தரவு பிறப்பிக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: உதவி சபாநாயகரவர்களே, 1971-ஆம் வருஷம் இந்தச் சட்டமன்றம் புதிதாகக் கூடியதற்குப் பிறகு நடந்த கோரமான ஒரு விபத்து இது என்பதை நான் முதலிலே சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த விபத்து ஏற்பட்ட உடனேயே நேற்று அமைச்சரவர்கள் 82-வது பிரிவின்படி அறிக்கை கொடுத்தது உண்மையிலேயே பாராட்டுக்குரியது. நாடாளு



மன்றத்திலேயும் இரயில் விபத்துக்கள், மற்ற விபத்துக்கள் ஏற் படும்பொழுதெல்லாம் உடனடியாக அமைச்சரவர்கள் அந்தச் சபைக்கு விவரங்களைச் சொல்வது வழக்கம். அந்த முறையில் இங்கே சொன்னார்கள். அவர்கள் கடமையைச் செய்தார்கள்.

இந்த விபத்து சம்பந்தமாக கண்டிப்பாக எங்கள் கருத்துக் களைக் கொஞ்சம் அழுத்தமாகவே சொல்ல வேண்டிய ஒரு நிர்ப்பந் தத்தில்தான் இருக்கிறோம் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் எடுத்துச் சொன்ன இரண்டு முக்கியமான விஷயங்களை அரசு கண்டிப்பாகக் கவனிக்க வேண்டும். இந்த அரசு ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு மெயின்டனென்ஸைப் பொறுத்தவரையில் மிகமிக மோசமாக இருக் கிறது. அதற்கு யார் பொறுப்பு என்று இப்பொழுது நம்மால் சொல்ல முடியவில்லை. சாதாரணமாக ஒரு சின்ன உதாரணத்தைக் கூறுகிறேன். 508 பஸ் சர்வீஸ் இருக்கிறது. இங்கிருந்து நாகப் பட்டிணத்திற்குப் போக வேண்டும். 8 மணிக்குப் போக வேண்டும், பிறகு எட்டே கால் மணிக்கு அதே பஸ் திரும்பவும் வருகிறது என்றால் அந்த பஸ்ஸை எப்படிக் கவனிக்க முடியும்? அதேபோல் நிர்வாகத்திலே எந்தவிதமான சரியான ஏற்பாடும் இல்லாத காரணத்தினால் இந்தக் காரியங்கள் செய்யப்படுகின்றன. பஸ்ஸுக்கு ரெஸ்ட் இல்லை.

அதேநேரத்திலே இந்த மெயின்டனென்ஸ் சம்பந்தமாக கொஞ்சம் 'டோன் அப்' பண்ண வேண்டும். அது சம்பந்தமாக இருக்கும் ஒர்க்ஷாப்புகளில் உள்ள அதிகாரிகள் சரியாகச் செயல் படுகிறார்களா இல்லையா என்று பார்க்க வேண்டும். நான் ஒரு தடவை அமைச்சரவர்களிடத்திலேயே சொல்லியிருக்கிறேன்.

மதுரையில் தியாகராஜன் என்பவர் டெப்போ சூப்பிரண்டெண்டாக இருந்தார். அவர் அதிகாலையில் சென்று முதலிலே செல்லும் பஸ் சரியாக இருக்கிறதா என்று கண்காணிப்பார். ஆனால் இப்பொழுது பல அதிகாரிகள் டெப்போ பக்கமே போவதில்லை. சரியாகக் கவனிப்பதில்லை. டிரைவர்கள் இந்த இந்தக் குறைகள் இருக்கின்றன என்று தகவல் கொடுத்தால் அதை முறையாக நிவர்த்தி செய்து செயல்படுவது கிடையாது. டி.வி.எஸ்.இல் ஒரு சார்ட்டே வைத்திருக்கிறார்கள். டிரைவர்கள்

எழுதிக் கொடுத்திருக்கின்ற குறைபாடுகள் சரி செய்யப்பட்டிருக்கின்றனவா என்று பார்த்து டிக் மார்க் பண்ணினால்தான் பஸ்ஸை எடுக்கிறார்கள். அப்படிப்பட்ட நடவடிக்கைகள் இந்த ஒர்க்ஷாப்புகளில் இருப்பதாகத் தெரியவில்லை. அரசு செய்யும் தவறு என்ன என்றால் ஒர்க்ஷாப்புகளில் இந்த பஸ் மெயின்டனென்ஸை சரிவர இல்லாமல் செய்து விடுகிறது.

இரண்டாவதாக, விபத்து ஏற்பட்டால் யாரும் யார் மேல் குற்றம் சொல்கிறார்கள் என்றால் டிரைவர்களின் மேல்தான் குற்றம் சொல்கிறார்கள். 5 வருஷம், 10 வருஷம் ஓட்டுகிறார், எந்தவிதமான விபத்தும் இல்லை. ஆனால் திடீரென்று ஒரு விபத்து ஏற்பட்டவுடனே அங்கே உள்ள ஜனங்கள் டிரைவரின் மேல் கோபம் கொள்கிறார்கள், டிரைவரின் உயிரைக் காப்பாற்றுவதே பெரிய கஷ்டமாக இருக்கிறது. அது அவருடைய தவறு? குறிப்பாக இந்தச் சம்பவத்தைப் பொறுத்தவரையில் எப்படி நாம் பார்த்தாலும், அந்த 17 ஆம் நம்பர் பஸ் வடபழனியிலிருந்து பாரிசுக்குப் போகும் பஸ், அது சென்ட்ரல் ஸ்டேஷன் பக்கமாக வரும்பொழுது மேடாக உள்ள இடத்திலிருந்து கீழே பள்ளமாக உள்ள இடத்திற்கு வர வேண்டும், அப்பொழுது ஸ்பீட் பிரேக்கர் கண்டிப்பாகப் போட வேண்டும். ஸ்பீட் பிரேக்கர் போட வேண்டிய இடங்கள் என்னென்ன என்பதைப் பற்றிக் கண்காணிக்க வேண்டும். லயன் கிளியராகும்பொழுது பஸ் ரைட்டில் டர்ன் பண்ண வேண்டும். இந்தச் சம்பவத்தில் டிரைவரைப் பாராட்டத்தான் வேண்டும், புத்திசாலித்தனமாகச் செய்திருக்கிறார். கேட்டுக்கு உள்ளே சென்றிருக்கிறார். அப்படியில்லாமல் இருந்திருந்தால், நேரடியாக அந்த 'வாலில்' இடித்து, பாசஞ்சர்களில் பாதிப்பேருக்குமேல் காயம் ஏற்பட்டிருக்கும், சிலபேர் செத்தாலும் செத்திருக்கலாம்.

பாசஞ்சர்களைக் காப்பாற்றியிருக்கிறார். பாசஞ்சர்கள் பீதியடையாமல் இருக்க கண்டக்டர் அவர்களை 'யாரும் எழுந்திருக்காதீர்கள்' என்றெல்லாம் சொல்லியிருக்கிறார். அதையெல்லாம் பாராட்ட வேண்டும். அந்த நேரத்தில் வரவேண்டிய ட்ரெயின் 10 நிமிடம் தாமதமாக வந்தது இல்லாவிட்டால் இன்னும் 50 பேர் இறந்திருக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கக்கூடும் என்று சொல்லுகிறார்கள். இதற்கு மேல் ஒன்றும் செய்ய முடியாது என்ற நிலைமையில் பிரேக் பெயில்யூர் ஆகிவிட்ட நிலையில் இந்த அளவுக்கு அவர் சமாளித்திருக்கிறார். டிரைவர் பெயரில் அனாவசியமாக தப்பு



சொல்லுவது தவறு. இந்த மாதிரி நேரங்களில் டிரான்ஸ்போர்ட்டில் டிரைவர்களுக்குத்தான் கெட்ட பெயர் உண்டாகும்.

அரசைப் பொறுத்தவரை பொறுப்பு இருக்கிறது. ரயில்வேக்கும் பொறுப்பு இருக்கிறது. மாநில அரசும் மத்திய அரசும் சேர்ந்து இம்மாதிரி சம்பவங்கள் வராமல் இருக்க எந்த மாதிரியான பாதுகாப்புச் செய்ய வேண்டும் என்பது பற்றி யோசிக்க வேண்டும். ஸ்பீட் லிமிட் ரொம்ப அவசியம். அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்—அண்ணா நகரில் அந்த அகலமான ரோட்டில் 50 மைல் வேகம் போக வேண்டுமென்று ஓட்டுபவர்களுக்குத் தோன்றுகிறது என்றார்கள். எந்த இடத்திலும் ஸ்பீட் ரெஸ்ட்ரிக்ஷன் பண்ண வேண்டும். குறிப்பிட்ட ஸ்பீடுக்கு மேல் போனால் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

I do not think that the Government can absolve themselves of their responsibility in regard to this matter.

இறந்து போனவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கிறோம் என்று சொல்லுவது சரிதான். ஆனால் அது மட்டும் திருப்தி அளிக்கக் கூடிய விஷயம் அல்ல.

பங்கி காலனியில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்து ஒருவர் இறந்துவிட்டார். அதுபற்றி நாடாளுமன்றத்தில் அட்ஜார்ன்மெண்ட் மோஷன் கொடுக்கப்பட்டது—

Adjcurnment motion allowed

நம்முடைய சட்ட மன்றத்திலும் ஒரு அட்ஜார்ன்மெண்ட் மோஷனாவது 'அலவ்' செய்யப்பட்டது என்ற வகையில் இதற்கு அனுமதி கொடுக்கலாம். அதற்காக சபையை இப்போதே ஒத்தி வைத்துவிட்டு விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்பதில்லை. நமக்கு அதிக நேரம் மற்ற விவாதத்திற்கும் தேவைப்படுகிறது. 1 மணியிலிருந்து 2 மணி வரை இதைப் பற்றி விவாதிக்க அனுமதி கொடுத்து அரசாங்கம் அதற்குப் பதில் கூறலாம். ஜனங்களுக்கும் அப்போது ஒரு நம்பிக்கை ஏற்படும். முக்கியமான அட்ஜார்ன்மெண்ட் மோஷன் இது. தாங்கள் அவசரத்தில் தீர்ப்புக் கொடுத்து விடாதீர்கள். தாங்கள் சற்று ஆழ்ந்து சிந்தித்து இந்த அட்ஜார்ன்மெண்ட் மோஷனை அலவ் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

THIRU B. VENKATASWAMY: Sir, I can say that this accident is due to the utter negligence of the technical staff in the workshop, as has been pointed out by the Hon. Member, Thiru Thangamani. I always travel in the bus. Last time I went to the Express Bus stand at 1 O'clock for going home. The route bus was cancelled, and another bus started at 7 p.m. Then there was a break-down of that bus at Poonamalee and I had to take another bus for going home. I asked the driver of the bus why such a thing had happened. He frankly told me that if he had told the workshop people that the bus was not fit for taking out, they would ask another driver to take out the bus and he would be immediately suspended. So, the driver was forced to take out that bus which was not in a fit condition.

I request the Hon. Minister to look into the grievances of the drivers and see that there is proper maintenance. Now, the maintenance is very bad. Also, I request the Hon. Minister to see that responsibility is fixed on the persons who are in charge of the Maintenance and Repair Section. Then only we can tone up the administration of the Transport Department.

So, I request the Hon. Deputy Speaker to a adjourn the House to discuss in detail the adjournment motion so that such accidents would not occur in future.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, நேற்று நடைபெற்ற ஒரு துக்ககரமான சம்பவத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். திரு. எட்மண்ட் அவர்கள் 'பல்லவா, தள்ளவா' என்றார்கள். அம்மையார் அவர்கள் 'பல்லவா, கொல்லவா' என்றார்கள். எது எப்படியானாலும் சம்பவம் எதிர்பாராமல் நடந்து விட்டது. பல்லவனைப் பொறுத்தவரை நல்லவனே தவிர, அவன் யாரையும் கொல்ல விரும்புகிறவன் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதைப் பற்றி நான் நேற்றே 82 ஆவது விதியின் கீழ் ஓர் அறிக்கையைக் கொடுத்திருக்கிறேன். பிரேக் பெயில்யூர் என்பது மெகானிகல் டிஃபெக்ட். இது எப்போது ஏற்படும், எப்போது ஏற்படாது என்று சொல்ல முடியாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் சொன்னதுபோல் மெயின்டனென்ஸ்—பராமரிப்பு உள்ளபடியே கவனிக்கப்பட வேண்டிய ஒன்றுதான்.

சென்னை மையப் புகை வண்டி நிலையம் அருகில் 11—11—1975
அன்று பல்லவன் போக்குவரத்துக் கழக பேருந்து
ஒன்றினுல் ஏற்பட்ட விபத்து குறித்து



இந்த மாதம் 15-ம் தேதி நகரத்தில் இருக்கும் ஏற்பாடுகளைக் கவனிக்க நகரத்திலே இருக்கும் காவல் துறை அதிகாரிகள், சம்பந்தப்பட்ட போக்குவரத்துத்துறை அதிகாரிகள், போக்குவரத்துச் செயலாளர் ஆகியவர்களை ஒரு மாநாடு போல் கூட்டி சென்னையில் நடைபெறும் காரியங்களை எல்லாம் எப்படிச் சரி செய்வது என்பது பற்றி ஆராய்ச்சி செய்யலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறேன்.

இந்த விபத்து பிரேக் பெயில்யூர் காரணமாக ஏற்பட்டு விட்டது. பிரேக் பெயில்யூர் ஏற்பட்டுவிட்டால் அதை எப்படிச் சமாளிப்பது என்பது டிரைவர்களுக்குத்தான் தெரியும். சில டிரைவர்கள் இந்த மாதிரி நேரத்தில் மயக்கம் போட்டுக் கூட விழுந்துவிடுவார்கள். இவர் முடிந்த அளவுக்குச் சமாளித்திருக்கிறார்.

வட பழனியிலிருந்து இந்த பஸ் ஒழுங்காகத்தான் வந்து கொண்டிருந்திருக்கிறது. சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு முன்னால் மேடு ஏறிய பிறகு பிரேக் பெயில்யூர் ஆகிவிட்டது. முடிந்த அளவுக்கு அவர் சமாளித்திருக்கிறார். சென்ட்ரல் ஸ்டேஷன் பகுதி மக்கள் திரளாக இருக்கும் பகுதி. பஸ் நேராகப் போனால் போலீஸ்காரர் மேடையில் மோதும். போலீஸ்காரரைக் காப்பாற்ற வேண்டுமென்று ஒரு பக்கம் திருப்பியிருக்கிறார். இந்தப் பக்கம் சுவற்றில் இடித்து நிறுத்தலாம் என்றால் நான்கு பேர் சைக்கிளில் சென்று கொண்டிருக்கிறார்கள். ஸ்டேஷனை நோக்கி நேராகப் போகும்போது க்யூவில் மக்கள் நின்று கொண்டிருக்கிறார்கள். கடைசியாக 'மேன் ஹோல்'—சாக்கடை சுத்தம் செய்யக்கூடிய ஒரு திட்டின் மேல் மோதியிருக்கிறது. அதற்குப் பக்கத்தில் வந்து கொண்டிருந்த மீன் கூடைக்காரர் வேலு என்பவர் நசுங்கிச் செத்தார். கடைசியாக வந்த தகவல்படி 3 பேர் இறந்திருக்கிறார்கள்; 15 பேர் காயமுற்றிருக்கிறார்கள். அந்தப் பெயர்ப் பட்டியல்கள் எல்லாம் தயாரிக்கப்பட்டு காவல் துறையிலிருந்தும் அறிவித்திருக்கிறார்கள்.

நாகப்பட்டினம் பஸ்ஸைப் பற்றிச் சொன்னார்கள். கனம் அங்கத்தினர் குறிப்பிட்ட உடனேயே சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில் சொல்லி நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

ஸ்பீட் பிரேக்குகள் எங்கெங்கு போடுவது, வேறு என்னென்ன காரியங்கள் செய்யலாம் என்பது பற்றி முடிவு எடுப்பார்கள்.

மொத்தம் 18 பேரில் மாண்டவர்கள் 3 பேர் போக மீதி 15 பேர் பொது மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதிலே ஒரு பெண்ணின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

நான் ஏற்கெனவே கூறியபடி உயிர்நீத்த குடும்பத்தாருக்கு அரசின் சார்பிலும், போக்குவரத்துக் கழகத்தின் சார்பிலும் என் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அந்தக் குடும்பங்களுக்கு நிதி உதவி இழப்புத் தொகையாகக் கொடுப்பது பற்றி அனுதாபத்தோடு கவனிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் பேசும்போது இந்த அரசாங்கமே ராஜிநாமா செய்யவேண்டுமென்று சொன்னார்கள். இன்னும் இரண்டு மாதங்களில் தேர்தல் வந்தாலும் வரும். அதுவரை அவர்கள் பொறுத்திருக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு சபையை ஒத்திவைத்து இதை விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இது குறித்து மேலும் விவாதிக்க வேண்டிய தேவை இல்லை என்று கருதுவதால் நான் இதற்கு அனுமதி அளிக்க மறுக்கிறேன்.

## (5) அறிக்கை அளித்தல்

### பொதுக் கணக்காய்வுக் குழுவின் அறிக்கையை அளித்தல்.

THIRU B. VENKATASWAMY : Sir, I rise to present the report of the Public Account Committee on the excess over voted grants and charged appropriations for the year 1971-72.





## (6) தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1975-76 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீதான விவாதம்—(தொடர்ச்சி).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திருமதி சத்தியவாணி முத்து. நேற்று நீங்கள் 16 நிமிடங்கள் எடுத்திருக்கிறீர்கள். இன்னும் பத்து பேர்கள் பேசவேண்டியிருக்கிறது. நீங்கள் ஐந்து நிமிடங்களில் முடித்துவிடுங்கள்.

**திருமதி சத்தியவாணிமுத்து :** தலைவர் அவர்களே, நேற்றைய தினம் நான் பேசும்போது இந்த பில் செக்ஷனில் இருக்கிற தவறுகளைச் சுட்டிக் காட்டச் சொன்னேன். அவர்கள் தவறான கணக்குகளை அனுப்புகிறார்கள். வசூல் செய்பவர்கள் வேறு, டிஸ்கனெட் செய்பவர்கள் வேறு. மக்களுக்கு சரியானபடி விவரங்கள் தெரியாத அளவிற்கு அந்த செக்ஷன் செயல்படுகிறது. அங்கு வொர்க் லோட் அதிகமாக இருக்கிறது என்றும் அதனால் தவறுகள் ஏற்படுகின்றன என்றும், அந்த வொர்க் லோட் விஷயத்தில் தீர்வுகாண மானேஜ்மென்ட்—வொர்க்கேர்ஸ் இடையே சிறு தகராறுகள் இருக்கின்றன என்றும், அந்தத் தகராறு தீர்த்து வைக்கப்படுமானால் இப்படிப்பட்ட கோளாறுகள் ஏற்படாது என்றும் என்னிடம் பல பேர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவற்றைக் கவனித்து அந்தக் குறைகள் உரிய காலத்தில் தீர்த்து வைக்கப்படுமானால் இப்படிப்பட்ட தவறுகள் ஏற்படாமல் இருக்கும்.

(திரு. வா. மை. அப்துல் ஜப்பார் தலைமை.)

அடுத்து, ஏழை ஹரிஜனக் காலனிகளுக்கு மின் இணைப்பு போட்டுக் கொடுப்பதாக புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. நான் அமைச்சராக இருந்தபோது கூட அவற்றைப் பற்றிக் கூறியிருக்கிறேன். அதிலுள்ள தவறு என்னவென்றால் ஹரிஜனக் காலனிகளைத் தொடுகிற வகையில் லைன் போய் சேருகிறதே தவிர அங்கு எவ்வளவு தெருக்கள் இருக்கின்றன. அதில் எவ்வளவு விளக்குகள் இருக்கின்றன என்று கணக்கெடுத்துப் பார்த்தால் கிடையாது, சிலயிடங்களில் விளக்குகள் எரிவதே கிடையாது. இருக்கிற பல்புகளும் சரியாக எரிவதில்லை, டிரான்ஸ்பார்மர்களும் சரியாக வேலை செய்வதில்லையென்று காரணங்கள் சொல்லப்படுகின்றன.

எண்ணிக்கை பெரிதல்ல. அத்தனை மக்களுக்கும் ஒளி தர வேண்டும். காலனிகள், ஹரிஜனக் காலனிகள் பூராவிற்கும் விளக்குகள் போடவேண்டுமே தவிர காலனிகள் வரை கொண்டு

போய் இணைப்பை விட்டுவிட்டு வந்து விடக்கூடாது. தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகம் பேர் பம்ப் செட்ஸ் வைத்திருப்பது கிடையாது. ஏதோ சில பேர்கள் கஷ்டப்பட்டு பணம் சம்பாதித்து பம்ப் செட் வாங்கினால் இணைப்பு கொடுப்பதில் தாமதம் ஏற்படுகிறது. இது எல்லா சிறு விவசாயிகளுக்கும் உள்ள ஒரு குறைபாடாக இருந்தாலும் கூட தாழ்த்தப்பட்ட மக்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களது கோரிக்கைகள் கேட்கப்படுவதில்லை. அவர்களது கோரிக்கைகள் நிராகரிக்கப்படுகின்றன. பின் நாங்கள் எப்படி வாழமுடியும் என்று அவர்கள் குறைபட்டுக் கொள்கிறார்கள்.

எனவே, மின் இணைப்பு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விரைவில் கொடுக்கப்படவேண்டும். டிரான்ஸ்பார்மர்கள், பல்புகள் இவை சரியாக வேலைசெய்யாமல் இடையில் கெட்டுப் போகின்றன என்று குறை சொல்லப்படுகிறது. டிரான்ஸ்பார்மர்களை ஈஸன் என்சினியரிங் கம்பெனியில் இருந்து வாங்குகிறார்கள் என்றும் பல்ப்ஸ், ட்யூப் லைட்ஸ் இவற்றை பிலிப்ஸ் கம்பெனியில் இருந்து வாங்கப்படுவதாகச் சொல்கிறார்கள். கடந்த ஆண்டு சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் கூறிய கருத்துக்களுக்கு பதில் தந்திருக்கிற ஒரு விவர அறிக்கையில் இதுபற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இந்தக் குற்றச்சாட்டு சொல்லப்பட்டிருக்கிறது. குறிப்பாக, ஈஸன் என்ஜினியரிங் கம்பனிக்கு இரண்டு கோடி ரூபாய் முன்பணம் கொடுக்கிறார்கள், கொடுக்கலாமா என்ற கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். கொடுத்தும் உரிய காலத்தில் பொருள்கள் வந்து சேரவில்லை என்றும் குறைபாட்டைக் கூறியிருக்கிறார்கள். அந்தக் குறைபாட்டிற்கு விளக்கம் தரும்போது 10 சதவிகிதம் எல்லோருக்கும் கொடுக்கிறோம். ஈஸன் என்ஜினியரிங் கம்பெனிக்கு மட்டுமல்ல. பம்பாய் க்ராம்ப்டன் கம்பனி, கோரா கம்பனி இப்படி பல கம்பனிகளுக்கு முன்பணம் கொடுப்பது ஒத்துக்கொள்ளப்பட்டிருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. அதனால் இருபது கோடிக்கு இரண்டு கோடி ரூபாய் கொடுத்தோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் உரிய காலத்தில் பொருள்கள் வந்து சேரவில்லையே என்பதற்கு பதில் இல்லை.



**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வா. மை. அப்துல் ஜப்பார்):** ஒரு நிமிடத்தில் முடித்துவிடுங்கள். கடுமையாக நேரத்தைப் பின்பற்ற வேண்டும் என்று ஸ்பீக்கர் உத்தரவு இருக்கிறது. உறுப்பினர்கள் அதற்கு ஒத்துழைக்கவேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே ஒரு நிமிடத்தில் முடித்துவிடுங்கள். ஏற்கனவே ஐந்து நிமிடங்கள் முடிந்தாகிவிட்டது.

**திருமதி சத்தியவாணிமுத்து:** வாங்குகிற டிரான்ஸ்பார்மேர்ஸ் மழைக் காலங்களில் வேலை செய்வதில்லை. சரியாக வால்டேஜ் பிக் அப் செய்வதில்லை. முன்பணம் கொடுக்கிறபோது பெரிய கம்பெனிகளிடமிருந்து உரிய காலத்தில் பொருள்களை வாங்க வேண்டும். தரமான பொருள்களை வாங்க வேண்டும், நேற்று கூட நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி அவர்கள், ஆளுங்கட்சி சொன்னார்கள். மலிவாக இருக்கிறதா என்று பார்க்க வேண்டாம், தரமான பொருள்களாக இருக்க வேண்டும். மலிவான பொருள்களை வாங்குவதால் அவை குறுகிய காலத்திற்குத்தான் பயன்படுகிறது. பிறகு அவை பயனற்றுப் போய்விடுகின்றன. எனவே, தரமான பொருள்களை வாங்க வேண்டும். எந்த வகையில் டெண்டர் மூலம். . . (மணியடிக்கப்பட்டது.)

**திரு. ஈ. எஸ். தியாகராசன்:** தலைவர் அவர்களே, மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்லிட விழைகிறேன்.

இன்றையதினம் தமிழ் நாட்டில் மின்சாரம் இல்லாத கிராமமே இல்லை என்ற ஒரு நிலைமை நம் அரசு செய்திருக்கிறது. அதற்காக தமிழக அரசைப் பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றையதினம் எல்லாக் கிராமங்களுக்கும், கிராமங்களை ஒட்டியிருக்கிற அரிஜனக் காலனிகளுக்கும், வீதி விளக்குகள் போடப்பட்டு எங்கும் ஒளிமயமாகக் காட்சியளிக்கிறது என்பதை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். இது 1967 ஆம் ஆண்டுக்கு முன் இருந்ததை விட பன்மடங்கு அதிகமாக வளர்ச்சி பெற்றிருக்கிறோம் என்பதை நல்லமுறையில் எடுத்துக் காட்டுகிறது.

எல்லாக் கிராமங்களுக்கும் இன்றையதினம் வீதி விளக்குகள் போடப்பட்டு அவை நல்ல முறையில் ஒளிமயமாகத் திகழ்ந்து வருகின்றன. அதேநேரத்தில் போடப்பட்டிருக்கிற பல விளக்குகள்

இன்று எரியாமல், பழுதுபார்க்கப்படாமல், குழல்விளக்குகள் நல்ல முறையில் எரியாமல் இருந்து கொண்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் என்னால் சுட்டிக்காட்டாமல் இருக்கமுடியாது. இதற்குக் காரணம், குழல் விளக்குகள் நல்லமுறையில் இல்லை, போட்ட சில மாதங்களில் ப்யூஸாகிவிடுகின்றன, ஸ்டார்ட்டர்கள் சரியாக வேலை செய்வதில்லை என்பதுதான் வீதி விளக்குகள் சரியாக எரியாமல் இருப்பதற்குக் காரணம்.

அடுத்தபடியாக, தமிழ்நாட்டில் மின்சாரம் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டு அதன் காரணமாக தமிழ்நாட்டில் பல தொழிற்சாலைகள், புதுத் தொழிற்சாலைகள் துவக்கப்பட்டு அவை முன்னணியில் நிற்கக் கூடிய ஒரு சூழ்நிலை மின்சாரவாரியத்தால் ஏற்பட்டிருக்கிறது. அதற்காக நாம் மின்சார வாரியத்தை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அடுத்து, பவர் கட் என்ற நிலைமை வரும்போது ஒரு முக்கியமான குறைபாட்டைச் சொல்ல விரும்புகிறேன். கடந்த ஏப்ரலில் இருந்து ஜூன் வரை பவர் கட் இருந்தது. அதை உபயோகிப்பவருக்கு சில கட்டுப்பாடுகள், கோட்டா நிர்ணயம் செய்து அதன்படி அவர்கள் உபயோகிக்க வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் அந்த கன்ஸ்யூமர்ஸ்க்கு அந்தத் தகவல் அனுப்பப்படவில்லை. அப்படி தகவல் அனுப்பாதது மட்டுமல்ல. அடுத்த மாதமே அவர்களுக்கு பில் கொடுத்திருப்பார்களானால்—இன்று பில் கொடுப்பதில் மூன்று மடங்கு அதிகப்படுத்தித் தந்திருக்கிறார்கள். ஏப்ரல் பில் மே மாதத்தில் கொடுத்திருந்தால் அவர்களுக்கு கொடுத்த கோட்டாவை விட அதிகமாகச் செலவு செய்திருக்கிறோம், எனவே அதைக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு தோன்றியிருக்கக்கூடும். ஆனால், துரதிருஷ்டவசமாக, நம்முடைய மின்சார வாரியம் எப்ரல் மாதத்திலிருந்து ஜூன் மாதம் முடிய கொடுக்க வேண்டிய பில்களை நவம்பர் மாதத்திலே கன்ஸ்யூமர்களுக்குத் தருகிறது. அப்படித் தருகிற பொழுது, கட்ட வேண்டிய கட்டணத்தைவிட 3 பங்கு அதிகமாக வசூலிக்க பில் தந்திருக்கிறார்கள். அப்படி ஒரு நிலை ஏற்பட்டுள்ளதன் விளைவாக அங்குள்ள கன்ஸ்யூமர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, ஒன்று அரசு அதற்கு விதி விலக்கு அளிக்க முன் வரவேண்டும். அல்லது இது போன்ற நிலைமை உருவாகாமலிருக்கப் பார்த்துக் கொள்ள வேண்டும். கோட்டா ஃபிக்ஸ் பண்ணும்போது, கன்ஸ்யூமர்களுக்குத் தகவல் தந்துவிட்டால் அதன்படி அவர்கள் நடந்து கொள்ள வேண்டும் என்றும் அப்படி நடந்துகொள்ளாதவர்களுக்குத் தண்டனை கொடுக்கப்படும் என்றும் சொல்வது சரியாகும். ஆனால், கன்ஸ்யூமர்களுக்குத் தகவலே தராமல், நீங்கள் கோட்டாவை மீறிவிட்டீர்கள், ஆகவே மூன்று பங்கு கட்டித்தானாக வேண்டுமென்று துன்புறுத்துகிற நிலை இப்பொழுதிருக்கிறது. எனவே, அதை மாற்றி ஏதாவது ஒரு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1975-76 ஆம் ஆண்டுக்கான
நிதிநிலை அறிக்கை மீதான விவாதம்

1975 நவம்பர் 12] [திரு. ஈ. எஸ். தியாகராசன்]

அடுத்தபடியாக, பில் ரொம்ப தாமதமாகத் தரப்படுகிறது. லோக்கல் எஸ்.ஓ., அல்லது எ.இ.-க்கு அந்தப் பொறுப்பை ஒப்படைத்தால், சாதகமான சூழ்நிலை வரலாம் என்று நான் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

மின்சார வாரியத்திலே பல யூனியன்கள் இருக்கின்றன. அதன் விளைவாக, டிசிப்லின் இல்லாமல் போய்விடுகிறது. குறிப்பாக, காஞ்சிபுரத்திலே அடிக்கடி போராட்டம் நடக்கிறது. எதற்காக அவர்கள் ஸ்டிரைக் செய்கிறார்கள் என்று தெரியமுடியாத சூழ்நிலை இருக்கிறது. அந்த அலுவலகத்திற்குள் நுழைந்தால் சந்தைக் கடை இருப்பதுபோல் தெரிகிறதே தவிர, அலுவலகம் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே, டிசிப்லினை உருவாக்க நடவடிக்கை எடுக்கவில்லையென்றால், ஒழுங்காகச் செயல்பட முடியாது. எஸ். ஓ. சொல்வதை ஹெல்ப்பர் கேட்பதில்லை; ஹெல்ப்பர் சொல்வதை அவருக்குக் கீழ் உள்ள ஆள் கேட்பதில்லை; ஏ. இ. சொல்வதை எஸ். ஓ. கேட்பதில்லை. இதுபோன்ற சூழ்நிலை சில இடங்களிலே இருக்கிறது. அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த வாரியத்திலே விஜிலன்ஸ் குழு அமைத்திருக்கிறார்கள். அது வேகமாக வேலை செய்வதாகத் தெரியவில்லை. அமைச்சரவர்கள் வந்தபிறகு அதை அமைத்திருக்கிறார்கள். அது தீவிரமாக வேலை செய்தால், ஒழுங்கை நிலைநாட்டமுடியும். எனவே, அதைத் தீவிரப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, இந்த விவாதத்திலே கலந்துகொண்டு ஒருசில வார்த்தைகள் சொல்வதற்கு விழைகிறேன்.

மின்சார வாரியத்தைப் பொறுத்த அளவிலே அது ஒரு அரசாங்கப் பொது நிறுவனமாக இருக்கிறது. இந்தப் பொது நிறுவனம் இன்று என்ன முறையிலே நடந்து கொண்டிருக்கிறது

என்பதைப் பற்றி நாம் ஆராய்வது பொருத்தமாக இருக்கும் என்றே கருதுகிறேன். ஏறத்தாழ ஒரு இலட்சத்திற்கு மேலான ஊழியர்களைக் கொண்ட இந்த நிறுவனம் ஒரு கமர்ஷியல் அண்டர்டேக்கிங்காக இருந்தாலும் அதிலேயிருக்கிற கணக்குகளைப் பார்க்கிற நேரத்திலே அது சரியான முறையிலே இயங்குகிறதா என்று ஐயப்பட வேண்டிய நிலைதான் உருவாகிக் கொண்டிருக்கிறது. ஏனென்றால், அதிலே தணிக்கை சரியாக இருக்கிறதா, ஆண்டுதோறும் பாலன்ஸ் ஷீட் ஒழுங்காகப் போடுகிறார்களா என்பதையெல்லாம் பார்க்கிற நேரத்திலே, அதிலே எவ்வளவு ஓட்டை, உடைசல் இருக்கிறது என்பதை அறிந்துகொள்ளக் கூடிய ஒரு நிலைமை உருவாகிறது.

பொதுவாக, இந்த எலெக்ட்ரிசிட்டி போர்டிலே பெருத்த செலவும் ஏற்படுகிறது, பெருத்த நட்டமும் ஏற்படுகிறது என்பதை பொது மக்கள் எல்லோரும் உணர்ந்து கொண்டேயிருக்கிறார்கள். இவ்வாறு நடப்பதற்கு என்ன காரணம் என்று பிரச்னைகளைப் பற்றியெல்லாம், பல்வேறு அறிக்கைகளையெல்லாம், பல்வேறு ஆலோசனைகளையெல்லாம் இந்த மன்றத்திலே பலரும் கொடுத்திருக்கிறார்கள். அதிலேயிருக்கிற நிலைமையை ஆய்ந்து பார்க்கிற நேரத்திலே கழிந்த வருஷத்திலே எவ்வளவு சீர்கேடான நிலைமை ஏற்பட்டது இந்த மின்சார வெட்டின் காரணமாக என்பதையெல்லாம் நாம் உணர வேண்டியவர்களாக இருக்கிறோம்.

75 சதவிகிதம் மின் வெட்டு. நம் நாட்டிலே வளர்ந்து விட்டோம், வளர்ந்து விட்டோம், மின்சாரத்திலே முன்னணியிலே இருக்கிறோம், எல்லாப் பகுதிகளுக்கும் மின்சாரம் கொடுத்து விட்டோம் என்று பறை சாற்றினால், இந்த மாதிரி மின்சார வெட்டு ஏன் ஏற்பட்டது என்ற வினாவுக்கு விடையளித்துத்தான் ஆக வேண்டும்.

பலரும் சொல்லலாம்—மின்சாரம் கிடைக்கவில்லை. நெய்வேலியிலிருந்து கிடைக்கவில்லை, எண்ணூரிலிருந்து கிடைக்கவில்லை யென்ற விடைகளை யெல்லாம் இலகுவாக எடுத்துக் கூறிவிடலாம். ஆனால் இன்றிருக்கிற நிலைமையை நாம் பார்க்கிற நேரத்திலே அடுத்த வருஷமாவது மின்சார வெட்டு இல்லாமலிருக்கும் என்று கருதுகிறேன். ஏதோ பத்திரிகையிலே பார்த்தேன், அமைச்சர் அவர்கள் அப்படிக் கூறியிருக்கிறார்கள்; ஜூன் வரையில் வராது என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி ஒரு நல்ல எதிர்காலம்



வைத்தால் நிச்சயமாக இந்த வாரியத்திலே நல்ல வேலை செய்கிறார்கள் என்பதைச் சொல்லாமல் இருக்க முடியாது. அது ஒருபுறம் இருக்கட்டும்.

மின்சார வாரியச் செலவுகளைச் சிக்கனப்படுத்த இந்த மின்சார வாரியமானது வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அப்படிச் சிக்கனப்படுத்த வேண்டுமென்று சொல்கிற நேரத்திலே, ஊழியர்கள் அத்தனைபேரையும் பிரித்து விட வேண்டுமென்று நான் சொல்ல முற்படவில்லை.

இன்று பல இனங்களிலே செலவு அதிகரித்துக் கொண்டு வருகிறது. அந்தச் செலவுகளை எப்படி ரேஷனலைஸ் செய்ய வேண்டுமென்று சிந்திப்பது சாலச்சிறந்ததாக இருக்கும். எண்ணூரிலே இப்பொழுது நிலைமை அபிவிருத்தி அடைந்திருக்கிறது. எண்ணூரிலேயிருந்த சிக்கல்களை யெல்லாம் எக்ஸ்பெர்ட் கமிட்டி அறிக்கையின் அடிப்படையிலே மாற்றியமைக்க எல்லா வழிவகைகளையும் கண்டறிந்திருக்கிறார்கள். ஆனாலும் இன்று அதிகமான மின்சாரப் பற்றாக்குறை இருந்துகொண்டேயிருக்கிறது. மத்திய அரசாங்கம் ஏதோ கொஞ்சம் பணம் கொடுக்கப்போவதாக வாக்குறுதி தந்ததாகப் பத்திரிகையிலே பார்த்தோம். வாக்குறுதிகள் எல்லாம் நிறைவேற்றப்படுமா என்பதை ஆராய வேண்டிய நிலையிலேதான் இருக்கிறோம்.

நீர் மின்சாரம் அதிகமாக உற்பத்தி செய்யவேண்டுமானால், வேறு மாநிலங்களோடு தொடர்பு கொண்டால்தான் உற்பத்தி செய்ய முடியும். கேரள மாநிலத்தோடு, அதே மாதிரி கருநாடக மாநிலத்தோடு பேரம் பேசி, கூட்டுப் பொறுப்பிலே திட்டங்கள் தீட்டினால் தான் நமக்கு ஏதாவது கிடைக்கும். அப்படிக் கூட்டுப் பொறுப்பிலே ஏதாவது திட்டங்கள் தீட்டினோம் என்று சொன்னால் அதிலே ஏற்படக் கூடிய சங்கடங்களை நாம் நல்லமுறையிலே உணர்ந்து கொண்டோம். ஹொகேனக்கல் போன்ற திட்டங்களை யெல்லாம் உருவாக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வது நலமாக இருக்கும் என்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மத்திய அரசாங்கம் அணு மின் நிலையத்தை, திருநெல்வேலியிலே உள்ள தூத்துக்குடியிலே அமைக்கப் போவதாகக் கேள்விப்படுகிறோம். அதற்காக வேண்டிய ஆய்வுகளை யெல்லாம். . .

திரு. முனு ஆதி: ஆன் எ பாய்ன்ட் ஆப் ஆர்டர் சார். நம் விதிகள்படி கோரம் இல்லையென்று கருதுகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வா. மை. அப்துல் ஜப்பார்):** கோரம் இருக்கிறது. உறுப்பினர் பேச்சைத் தொடரலாம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** அணு மின் நிலையத்தை அந்தப் பகுதியிலே ஏற்படுத்த ஆய்வு செய்திருக்கிறோம். ஆய்வு செய்து அந்தப் பகுதியைத் தேர்ந்தெடுக்க எல்லா ஏற்பாடும் ஆகியிருக்கிறது என்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், கடலிலே கழிவைக் கொண்டுபோய் விடுவதிலே கஷ்டம் இருக்கிறது; கடலிலே ஆழம் போதாது என்ற கருத்தை யெல்லாம் கூறியதாக எனக்குத் தகவல் வந்தது. அப்படி அந்தப் பகுதியிலே ஏற்படக் கூடிய அந்தத் திட்டத்திற்கு எந்தவிதத்திலும் ஆபத்து ஏற்பட்டுவிடக் கூடாது என்பதிலே நாங்கள் மிகவும் ஆவலோடு இருக்கிறோம். மக்களுக்கு அதிகமான மின்சாரத்தைத் தருவோம் என்று பறை சாற்றுகின்ற நேரத்திலே நமக்கு நியாயமான பங்கு கிடைக்க என்ன கஷ்டம் ஏற்படுகிறது என்பதுதான் எனக்குத் தெரியவில்லை. ஆகவே, அணு மின் நிலையம் அந்தப் பகுதியிலே ஏற்பட்டால், தென் பகுதியிலே தொழில்கள் அதிகமாக அபிவிருத்தியடைய ஊக்கமும் ஆக்கமும் ஏற்பட வாய்ப்பிருக்கும். அதைச் செய்வார்கள் என்று நம்புகிறேன்.

விவசாயிகளுக்கு மின்சாரக் கட்டணத்தை உயர்த்துவதை வன்மையாகக் கண்டித்து எதிர்க்கிறோம். முன்பு அதற்காகப் போராட்டம் நடந்தது, துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது, பல்வேறு கிளர்ச்சிகளெல்லாம் நடந்தன. இப்பொழுது இந்த மின்சார ரேட்டை ரிவைஸ் செய்திருக்கிறார்கள் என்று சொன்னால், ஒருவேளை எமர்ஜன்ஸி இருக்கிறதென்ற காரணத்தினால், கிளர்ச்சி வராது என்ற காரணத்தினால், அதை உயர்த்தியிருக்கிறார்கள் என்றும் அதற்கு ஆட்சேபணையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஏழு இலட்சத்துக்கு மேல் பம்பு செட்களுக்கு மின் இணைப்புக் கொடுத்துவிட்டோம். பம்ப் செட்களுக்கு மின் இணைப்புக் கொடுத்ததால் பசுமைப் புரட்சி வந்து விட்டது என்றெல்லாம் நாம் பெருமிதத்தோடும் பெருமையோடும் இருந்தாலும் இன்று விவசாயிகள் படுகிற அல்லல் கொஞ்ச நஞ்சமல்ல.

இன்றைக்கு இன்னொரு கஷ்டமும் இருக்கிறது. மீட்டர் ரென்ட் ரூ. 5; ரூ. 90 உள்ள மீட்டருக்கு மாதாமாதம் ரூ. 5 என்று கேட்பது எப்படிப் பொருத்தம், எப்படி நியாயம் என்பதை



என்னைப் போன்றவர்கள் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஒரு வேளை, அவர்கள் சொல்வார்கள். இன்று முதலுக்கு மேல் வட்டி கொடுத்தால், அதைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்ற சட்டம் இந்த இலாகாவிற்குப் பொருத்தம் இல்லாமலிருக்கலாம் என்று. ஆனால், இது நியாயமற்ற வசூலாக இருக்கிறது என்பதையும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

ஆதலால் இந்த மீட்டர் ரென்ட் என்பது சர்வீஸ் சார்ஜ் என்ற முறையில், பராமரிப்புச் செலவு என்ற முறையில் வசூலித்தாலும், அது அதிகமாக இருக்கின்றது. சுமையாக இருக்கின்றது. ஆகவே, அதை ரத்து செய்ய வேண்டுமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக வேறு சில விஷயங்களைப் பற்றிக் கூற விரும்பு கிறேன். மின்சார இலாக்காவில் இருக்கின்ற ஊழியர்கள் பலருக்கும் அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள ஊதியம் போதாது என்ற கருத்து இருக்கிறது. அவர்களுக்கு நியாயமான ஊதியத்தை வழங்க வேண்டிய ஏற்பாட்டை இந்த வாரியம் உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அங்கே இருக்கின்ற என்ஜினியர்கள் எல்லோரும் தங்களை அசிஸ்டெண்ட் என்ஜினியர்கள் என்று பெயர் மாற்ற வேண்டும் என்ற கருத்தை நீண்ட நெடுங்காலமாக கூறிக் கொண்டிருக்கிறார்கள். இப்போது அவர்கள் ஜூனியர் என்ஜினியர்கள் என்று அழைக்கப் படுகிறார்கள். அவர்களுடைய பெயரை அசிஸ்டெண்ட் என்ஜினியர் என்று மாற்றவேண்டும் என்று விரும்புகிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற ஊதியம் போதிய அளவில் இல்லை. அவர்கள் வேண்டுகோள் எல்லாம் தந்திருக்கிறார்கள். அவைகளை எல்லாம் இந்த போர்டு நல்ல முறையில் பரிசிலனை செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து, எங்களுடைய பிராந்தியத்தில் இருக்கின்ற ஒரு சில குறைபாடுகளை இங்கே சுட்டிக் காட்டுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். கோதையாறு மின்சாரத் திட்டம், அந்தப் பகுதியில் செயல்பட்டுக் கொண்டு வருகிறது. அதில் உள்ள நிலைமையைப் பற்றிக் கூறுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். அந்த பிராஜெக்ட் ஆரம்பமான காலத்தில், ரோட் போட்டார்கள். அதைச் சரியான முறையில் பராமரிக்கவில்லை. அது ஒரு பஸ் வழித்தடமாக இருக்கிறது. சரியான முறையில் பராமரிக்கப்படாததால், அந்தத் தடத்தில் பஸ் போக முடியாமல் இருக்கிறது. எங்கே பார்த்தாலும் குண்டும் குழியுமாக இருக்கின்ற

நிலைமை இருக்கிறது. கட்டபொம்மன் கார்ப்பொரேஷனிலிருந்து போகும் பஸ்ஸை நிறுத்திவிட வேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறார்கள். ஏனென்றால் அந்த ரோட் அவ்வளவு மோசமான நிலையில் இருக்கிறது. இந்த ரோடை உடனடியாக ரிப்பேர் செய்வதில் என்ன கஷ்டம் இருக்கிறது என்று தெரியவில்லை. போர்டு கண்ட்ரோலில் இருக்கின்ற இந்த நேரத்தில் ஏன் இந்த அடிப்படையான தேவைகளை அவர்களுக்குச் செய்யக்கூடாது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

லோயர் கோதையாறு டெம்பரரி ஷெட்டில் ஊழியர்கள் தங்கி வேலை பார்க்கின்ற நிலைமை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அங்கே சரியான முறையில் பொருட்கள் இல்லை. ஆஸ்பத்திரி வசதி இல்லை. ஜெனரல் ஸ்டோர்ஸ், ஷாப்பிங் சென்டர் இல்லை. அப்படியிருந்தும் ஊழியர்கள் எல்லாம் அந்தப் பகுதியில் இருக்க வேண்டும் என்ற நிர்ப்பந்த நிலைமை இருக்கிறது. அடிப்படையான தேவைகள் இல்லாத நிலைமையில், குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புவதற்கும், ஆஸ்பத்திரிக்கு அனுப்புவதற்கும், சாமான்கள் வாங்குவதற்கும் 10, 12 மைல்கள் செல்ல வேண்டியிருப்பதால், அந்தப் பகுதியில் வாழ்கின்றவர்கள் எப்படி நல்ல முறையில் அங்கே தங்க முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று கோதையாறு 1, 2 இணைப்புச் சாலையை உடனடியாகப் போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது திருநெல்வேலி ஜில்லாவிலிருந்து 'அப்பர் கோதையாறு'-க்குப் போவதற்கு மார்க்கங்கள் இருக்கின்றன. அந்தப் பகுதியில் முன்பிருந்தது போல, முந்துக்குழி வழியாக 'அப்பர் கோதையாறு' போவதற்குச் சாலை அமைத்துக் கொடுக்க வேண்டும்.

பொதுவாக, இந்த கோதையாறு மின்சாரத்தை அதிகமாகப் பயன்படுத்த திட்டம் தீட்டியிருக்கிறார்கள் என்றாலும், அந்தப் பகுதியில் இருக்கிற ஒரு சில ரிப்பேர்களைச் சரியான முறையில் பழுது பார்க்கவில்லை. லீக்கேஜ் அடைக்கப்படவில்லை என்ற கருத்தும் இருந்து கொண்டிருக்கிறது. அதே மாதிரி பாளியாற்றுத் திட்டம் ஆய்வு செய்யப்பட்டு மத்திய சர்க்காருக்கு அனுப்பப்பட்டதாக ஆய்வுரையில் கூறப்பட்டிருக்கிறது. அதை அமல்நடத்த வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்தபடியாக, இந்த அகௌண்ட்ஸ் பிராஞ்சு பற்றி ஒரு கருத்தைக் கூற விரும்புகிறேன். கடைசி நாளில் மின்சாரக் கட்டணத்தைக் கட்டுவதற்கு கன்சியூமர்கள் செல்கிறார்கள். குறிப்பிட்ட 1, 2 மணிக்குப் பின்னால் வருகிறவர்கள் கட்டணம் செலுத்த கியூவில் நின்றாலும் அதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. கடைசி நாளில் ஏதோ பின்னால் வந்துவிட்டார்கள். அவர்கள் கியூவில் நின்றவுடன், அங்கேயிருந்து அகௌண்ட்ஸ் ஆபீசர் திடீரென்று வந்தாராம். 2½ மணிக்குப் பின்னால் வந்தவர்களிடம் பணத்தை வாங்கக் கூடாது என்று அவர் சொன்னதும், அந்தக் கன்சியூமர்கள் பெனல்டி கட்டுகின்ற துரதிருஷ்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஓட்டுச் சாவடிக்கு 5 மணிக்கு முன்னால் போனால் ஓட்டுப் போட உரிமை கொடுத்திருக்கிறார்கள். அதே போன்று கமர்ஷியல் ஸ்தாபனமாக இருக்கின்ற இந்த மாதிரியான ஸ்தாபனங்களில் ரூல்ஸை ஸ்டிரிக்டாக கடைபிடித்து மக்களை வேதனைக்கு உள்ளாக்காமல், அதிகாரிகள் சரியான முறையில் நடந்து கொள்கிறார்களா என்பதை அரசாங்கம் கவனிக்க வேண்டும்.

இந்த மாதிரியான தனிப்பட்ட அதிகாரிகளைப் பற்றிய புகார்களை எல்லாம் இந்த இலாக்காவுக்கு எழுதியிருந்தேன். அதைப் பற்றி எல்லாம் நான் இங்கே கூற முற்படவில்லை. அங்கே நடக்கின்ற தர்பார்கள் கேவலமாக இருக்கிறது என்பதை மட்டும் சொல்லிக்கொள்கிறேன். அங்கே இருக்கின்ற ஆட்களோடு வேண்டுமென்றே சண்டைபோடுகின்ற நிலைமையைப் பார்க்கிறோம். 'சன்ஸ் ஆப் தி சாயில்' என்று சொல்லி எள்ளி நகையாடும் நிலைமையில் அதிகாரி இருக்கிறார். அவரைப் போல் இருந்தால் எலெக்ட்ரிசிடி சிஸ்டம் எப்படி சிறப்பாக நடக்கும் என்று அமைச்சர் அவர்கள் சிந்தித்து, அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் பல்வேறு காரியங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. காலா காலத்தில் பில் போடுவதில்லை. டிசிப்ளின் அந்த இலாக்காவில் இல்லை என்று தான் சொல்ல வேண்டும். அண்மையில் செங்கற்பட்டில் சூபரெண்டிங் என்ஜினியர் ஒருவரை கேரோ செய்ததை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். எமர்ஜென்சி நேரத்தில் ஒழுங்கு இருக்கிறது. டிசிப்ளின் வந்துவிட்டது, தொழிலாளர்கள் சுபட்சமாக இருக்கிறார்கள் என்றெல்லாம்

கூறுகிறோம். ஆனால் உண்மையான நிலைமை என்ன என்பதைப் பார்க்க வேண்டும். இந்த இலாக்காவை நடத்துகின்ற என்ஜினியர் போன்றவர்களுக்கு கஷ்டம் இருக்கிறது. ஆகவே இவற்றை எல்லாம் பரிசீலித்து, அந்த இலாக்காவைச் சீர்செய்ய தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அகௌண்ட்ஸ் பிராஞ்சில் இருக்கின்ற டிபெக்ட்ஸ்களை ரெக்டிபை செய்யவேண்டும். எதிர்காலத்தில் இந்த இலாக்கா நல்லமுறையில் செயல்பட வேண்டுமானால், ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை எடுத்து, விவசாயிகளுக்கு மின்சாரக் கட்டணத்தை உயர்த்தாமல், மீட்டர் ரென்டைக் குறைத்து செயல்பட வேண்டும் என்று ஆலோசனை கூறி நான் அமர்கிறேன். வணக்கம்.

திரு. மா. வே. நாராயணசாமி: தலைவரவர்களே, 1975-76 ஆம் ஆண்டுக்கான மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை குறித்தும், 1974-75-ஆம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கை குறித்தும் மாண்புமிகு அமைச்சரவர்களின் உரையை வரவேற்று எனது கருத்துக்கள் சிலவற்றை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழகத்தில் மின் வாரியப் பணி பாராட்டத் தக்க பணி என்பதனை எல்லோரும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். மின்சாரத் தட்டுப்பாட்டுச் சூழ்நிலைக்கு இடையே இந்த அளவுக்கு மிகச் சீரான முறையில் மின்வாரியம் இயங்கி வந்திருப்பது பாராட்டத்தக்கது. இன்றைக்கு எந்தெந்த வகையிலே நமக்குத் தேவையான மின்சாரத்தைப் பெறவேண்டும் என்பதைப் பற்றி எல்லாம் திட்டங்களைத் தீட்டி மத்திய அரசாங்கத்திற்கு அளித்துள்ளதன் மூலம், நமது அரசு சீரிய பணியை ஆற்றியிருக்கின்றது.

பொதுவாக, நீர்மின் திட்டம், அனல் மின்திட்டம், அணு மின் திட்டம் என்ற மூன்று திட்டங்கள் வாயிலாக நமக்குத் தேவையான மின்சாரத்தை நாம் பெறவேண்டும் என்று முயன்று கொண்டிருக்கின்ற அதே நேரத்தில் நமது அரசு சூரிய சக்தியை (சோலார் பவர்) பெற ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப்பதை நாம் மனதார வரவேற்க வேண்டும். நமது தமிழகத்தைப் பொறுத்த வரையில், இந்த சோலார் பவர் ஆராய்ச்சியில் வெற்றி பெறுவோமேயானால், நம்முடைய வீடுகளுக்குத் தேவையான மின்சாரத்தை அதன் மூலம் பெறலாம் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, அதில் தீவிரம் காட்டி வெற்றி பெறவேண்டும் என்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.





தெரு விளக்குகள் பற்றிய புகார்கள் சம்பந்தமாக நான் கூட இந்த மாமன்றத்தில் சொல்லியிருக்கிறேன். மின்சார வாரிய அதிகாரிகள், அலுவலர்கள் அடிக்கடி நகராட்சி போன்ற பகுதிகளுக்கும், ஊராட்சி போன்ற பகுதிகளுக்கும் சென்று, சம்பந்தப்பட்ட உள்ளாட்சித் துறை அதிகாரிகள், நகரசபைத் தலைவர்கள் ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் இவர்களோடு பேசி, ஜாயிண்ட் இன்ஸ்பெக்ஷன் என்ற முறையில் வைக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். இன்றைக்கு மாண்புமிகு அமைச்சர் திரு. சாதிக் அவர்கள் எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கைகளின் விளைவாக சூப்பிரெண்டிங் என்ஜினியர்களே நேரடியாக வந்து இரவு நேரத்தில் தெருக்களில் மின்சார விளக்குகள் எரிகின்றனவா என்று பார்க்கின்ற அளவுக்கு மகத்தான முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதை இந்த மாமன்றத்தில் சுட்டிக் காட்டுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

(நண்பகல் 12.00)

இத்தகைய பாராட்டப்பட வேண்டிய பணிகள் பல மின்சார வாரியத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தெரு விளக்குகளை எல்லா இடங்களிலும் போடுவதற்கு ஏற்கனவே ஏற்றுக் கொண்டு அரசு அறிவித்துள்ள நடவடிக்கைகளை, அமைச்சர் தெரிவித்துள்ள பணிகளை விரைவாக முடித்தாக வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். 3, 3½ ஆண்டுகளுக்கு முன்னாலே பணம் செலுத்தப்பட்டு இருந்தும் கூட இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. நகராட்சி மன்றத்தில் நான் நேரிடையாக அநுபவம் பெற்றிருக்கிறேன். திருவொற்றியூரிலிருந்து மணலி வரையில் விளக்குப் போடுவதற்கு பணம் செலுத்தப்பட்டிருந்தும் அந்தப் பணி மேற்கொள்ளப்படவில்லை. அந்தப் பணிகளை விரைவாக அமல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

மின்சப்ளை சீராக, சமமாக இருக்க டிரான்ஸ்பார்மர்களை ஆங்காங்கு பொருத்தி எல்லோருக்கும் சரியான அளவிலே மின்சாரம் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும். இந்த டிரான்ஸ்பார்மர்களை வாங்கும்போது நம்முடைய மாநிலத்தில் இருக்கக் கூடிய நிறுவனங்களிடத்திலிருந்து டிரான்ஸ்பார்மர்களை வாங்க வேண்டும். இது மிக, மிகத் தேவையான பணி. நம்முடைய அரசு இதைக் கொள்கை அளவிலே ஏற்றுக் கொண்டிருப்பதைப் பாராட்டுகிறேன்.

அதே நேரத்தில் நான் கேள்விப்பட்டேன் நம்முடைய மின்சார வாரியம் ஏராளமான டிரான்ஸ்பார்மர்களை வெளி மாநிலங்களில் இருந்து வாங்குவதற்கு ஆர்டர் கொடுத்திருப்பதாகவும், அதற்கான நடவடிக்கைகள் எடுத்து இருப்பதாகவும் கேள்விப்படுகிறேன். இதுபோன்ற நடவடிக்கைகளின் மூலம் நம்முடைய மாநிலத்தில் இருக்கக் கூடிய நிறுவனங்களில் இருக்கக் கூடிய தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாமல் தவிக்கின்ற காட்சியைப் பார்க்கிறோம். ஆகவே விலை டெண்டர் கொஞ்சம்கூடுதலாக இருந்தாலும் அதற்கு 10 சதவிகிதம், 15 சதவிகிதம் மார்ஜின் கொடுப்பதன் மூலம், அப்படியே இருந்தாலும் இன்னும் அதிகமாக இருந்தாலும் "நெகோஷியேட்ட் செட்டில்மெண்ட்" என்ற முறையைப் பின்பற்றி இங்கே இருக்கக் கூடிய நிறுவனங்களுக்கு டிரான்ஸ்பார்மர்களை சப்ளைசெய்வதற்கு ஆர்டர் வழங்கலாம் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மற்ற மாநிலங்களில் இப்படி "நெகோஷியேட்ட் செட்டில்மெண்ட்" என்ற கொள்கையைப் பின்பற்றி அங்கேயுள்ள கம்பெனிகளுக்கு ஆர்டர் கொடுக்கிறார்கள். அதே கொள்கையை நாமும் பின்பற்ற வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எண்ணூர் அனல் மின் நிலையத் திட்டம் திருவொற்றியூர் நகர எல்லையில் உள்ள ஒரு பெரிய அமைப்பு. இந்த எண்ணூர் அனல் மின் நிலையத்தை விரிவு படுத்துவதற்கு வாய்ப்பு இருந்தால் அதைச் செய்ய வேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இன்னும் 110 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அங்கு வேலை செய்யக் கூடிய தொழிலாளர்கள் கன்ஸ்ட்ரக்ஷன் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள் இன்றைக்கு ஒரு அச்சுறுத்தல் சூழ்நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள், அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. இங்கே இருக்கிற அந்தத் தொழிலாளர்களை தூத்துக்குடி செல்ல வேண்டுமென்று அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. நூற்றுக் கணக்கான உள்ளூர் தொழிலாளர்கள், ஏற்கெனவே 5, 6, 7 ஆண்டுகளாகப் பணியாற்றியவர்கள், சொந்த வீடுகளையும், குடியிருப்புக்களையும் கட்டிக் கொண்ட தொழிலாளர்கள் இதனால் பெரும் அளவு பாதிக்கப்படுகிறார்கள். அதிலும் குறிப்பாக எண்ணூரில் இருக்கக் கூடிய மீனவ மக்கள், அவர்கள் தேவைப்



பட்டால் கடலிலே சென்று பணியாற்ற வேண்டியவர்கள் அவர்கள் கூட தூத்துக்குடிக்கு செல்ல வேண்டுமென்று சொல்லப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. எண்ணூர் மின் நிலையத்தை இன்னும் விரிவு படுத்த முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று அமைச்சரவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய அரசும், அதிகாரிகளும் தொழிலாளர்களின் குறைகளையும், கோரிக்கைகளையும் ஆழ்ந்து கவனித்து அவற்றைப் போக்கி, ஒரு மாடல் எம்ப்ளாயராக, நல்ல பெயர் எடுத்து, மற்ற தனியார் துறையில் இருக்கக் கூடியவர்களுக்கும் முன் மாதிரியாக விளங்கும்படியான ஒரு நிலைமையை உருவாக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன் என்பதைக் கூறி முடித்துக் கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சபாநாயகர் அவர்களே, ஒரு காலத்தில் மிக்க பாராட்டுதலுக்குரியதாக இருந்து இன்றைக்கு மிகச் சீர் கெட்ட ஒரு நிலையில் இருக்கக் கூடிய சூழ்நிலையில் நம் மின்வாரியம் இருப்பதை இந்த அரசுக்குத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிற காரணத்தினால் ஒரு சில கருத்துக்களைப் பேச ஆரம்பிக்கிறேன்.

இந்தியாவிலேயே முதல் இடம் ரூரல் எலெக்டிரிபிகேஷனுக்கு. அதே போன்று பல வழிகளிலும் நல்ல பெயர் எடுத்துக் கொண்டிருந்த இந்தத் தமிழக அரசு இன்றைக்கு என்ன பெயர் எடுத்திருக்கிறது என்றால் 75 சத விகிதம் மின் வெட்டு, 80 சத விகிதம் மின் வெட்டு, மின்சாரத்தை காசு கொடுக்காமல் யார் வேண்டுமானாலும் திருட முடியும், எடுக்க முடியும் என்ற 'நல்ல' பெயரை எடுக்கிற அளவிற்குக் கெட்டுப் போய் விட்டது என்பதை இந்த அரசுக்குச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு மின்சார வாரியத்தினால் மின்சாரம் உபயோகம் செய்கிறவர்களுக்கு ஏதாவது லாபம் இருக்கிறதா என்றால் இல்லை. 1966-ம் ஆண்டு 34 கோடி ரூபாய் இருந்த வருமானம் வரி போடாத இந்த அரசு ஆட்சிக்கு வந்த பிறகு என்ன நிலைமை என்றால் 1975-லே அதன் வருமானம் 104 கோடி ரூபாய். 34 கோடி ரூபாய் எங்கே, 104 கோடி ரூபாய் எங்கே, 3 மடங்கு, 4 மடங்கு வருமானம் உயர்ந்திருக்கிறது.

[திருமதி. த. ந. அனந்தநாயகி] [1975 நவம்பர் 12

இன்றைக்கு மின்சாரம் உபயோகப்படுத்துகிறவர்களுக்கு எவ்வளவு கஷ்டங்கள் ஏற்படுகின்றன என்பதைச் சொல்லத் தேவையில்லை. அவர்களைக் கஷ்டப்படுத்தக் கூடிய அளவிற்கு மின்சாரக் கட்டணத்தை உயர்த்திக் கொண்டே போகிறது.

அது போதாது என்று திடீரென்று அவர்களுக்குப் பணத் தட்டுப்பாடு ஏற்பட்டால் உடனே டிபாசிட் போதாது, ஒரு மாத டிபாசிட் போதாது மூன்று மாத டிபாசிட், நான்கு மாத டிபாசிட் கட்டுங்கள் என்று ஏற்றி விடுகிற தன்மையிலே இன்றைக்கு மின்சாரத் துறை இருக்கிறது. மூன்று மாத டிபாசிட்டை உடனே கட்டுங்கள் என்று உடனடியாக நோட்டீஸ் கொடுப்பார்கள் போல் இருக்கிறது. எப்போது பணம் தட்டுப்பாடு ஏற்படுகிறதோ அப்பொழுதெல்லாம் டிபாசிட் கேட்பார்கள் என்று நினைக்கிறேன். இதைப் பற்றி இந்த அரசு விளக்க வேண்டுமென்று நான் ஆசைப் படுகிறேன். ஒரு மாத டிபாசிட் போதாது, இரண்டு மாதம், மூன்று மாத டிபாசிட் உடனே எல்லோரும் கட்டுங்கள் என்று சொல்லி உடனடியாக நிர்வாகம் நோட்டீஸ் அனுப்பும். இன்னும் கொஞ்ச நாட்கள் போனால் 10 மாத டிபாசிட் வேண்டுமென்று கேட்குமோ என்ற பயம் ஏற்படுகிறது.

ஒன்றை குறிப்பிட விரும்புகிறேன். திடீரென்று மறைமுகமாக யாரும் எதிர் பாராத நேரத்தில் செய்து முடித்திருக்கிறீர்கள் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். விவசாயிகளுக்கு சப்ளை செய்து வந்த மின்சாரத்திற்கு யூனிட்டிற்கு நான்கு பைசாவை உயர்த்தி விட்டீர்கள். விவசாயிகளுக்கு இரண்டு பைசா உயர்த்திய நேரத்தில் 29 உயிர்களைக் குடித்த உங்கள் ஆட்சியிலே, அவர்களைப் பழி வாங்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, அவசர நிலையைப் பயன்படுத்திக் கொண்டு 16 பைசாவாக ஏற்றியிருக் கிறீர்கள். இது என்ன நியாயம். கேட்டால் பிற மாகாணங்களிலே இதை விட இன்னும் கட்டணம் அதிகம் என்று கூறுகிறீர்கள். இப்படிச் சொல்வது ஒத்து வராது. நம்முடைய மாநிலத்திலே அதிக நதிகள் கிடையாது. இங்கே பூமிக்கு அடியில் இருக்கிற தண்ணீரை நம்பித்தான் விவசாயிகள் கஷ்டப்பட்டு விவசாயம் செய்ய வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட விவசாயிகள் இரண்டு பைசா ஏற்றியதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள் என்பதற்காக அவர்களைப் பழி வாங்குகின்ற முறையிலே 12 பைசாவிலிருந்து 16 பைசாவாக உயர்த்தி விட்டீர்கள்.



1975 நவம்பர் 12] [திருமதி த. ந. அனந்தநாயகி]

மின்சாரத்தை நம்பியிருக்கிற மக்கள் சீயக்காய் அரைக்க வேண்டுமென்று மிஷினுக்குப் போனால் அங்கே மின்சாரம் பற்றாக் குறை இருந்த காலத்தில் உயர்த்தப்பட்ட கட்டணம் இன்றைக்கும் வசூலிக்கப்படுகிறது. அது குறைக்கப்பட்டு முன்பிருந்த நிலைக்குக் கொண்டு வரப்படவில்லை. ½ கிலோ சீயக்காய் 90 பைசா. அதை அரைக்கப் போனால் ரூ. 1.25 பைசா. சுண்டைக்காய் கால் பணம் சுமை கூலி முக்கால் பணம் என்கிற பழமொழிக்கு ஒப்ப ½ கிலோ சீயக்காய் 90 பைசா, அதை அரைக்கப் போனால் ரூ. 1.25. இதை அரைக்க 5 பைசா ஆகுமா. ஒரு யூனிட் ஆகுமா? 5 பைசா கூட ஆகாது. ஆனால் ரூ. 1.25 வாங்குகிறார்கள். மின்சார இலாகாவிலே இப்படிப்பட்ட நிலைமைகள் வந்து கொண்டிருக்கின்றது. இந்தக் கட்டணத்தைக் குறைப்பதற்கு எந்த வித நடவடிக்கையும் கிடையாது.

காங்கிரஸ்காரர்கள் ஆட்சிக் காலத்தில் 512 மெகாவாட்டாக இருந்த மின்சாரம் 1966-ல் 1,070 ஆக வளர்ந்து கொண்டு வந்தது. இது எங்கே போய் இப்போது நிற்கிறது என்றால் 1654 மெகா வாட்டிலே போய் நிற்கிறது. 500-த்துச் சில்லரை மெகாவாட் மின்சாரம் தான் அதிகமாக உற்பத்தி செய்ய முடிந்தது. கேட்டால் சொல்கிறார்கள் மத்திய அரசாங்கத்திடம் அனுமதி கேட்டால் கிடைப்பதில் காலதாமதமாகிறது. அதனால் செய்ய முடியவில்லை என்று மத்திய அரசாங்கத்தின் மீது பழியைப் போடப் பார்க்கிறீர்கள். மத்திய அரசாங்கம் அனுமதித்த கடம்பாறைத் திட்டத்திற்கு ஏற்கனவே கிளியரன்ஸ் கொடுத்து 4 வருஷமாகியும் இன்னும் ஏன் ஆரம்பிக்கவில்லை என்றால், உங்கள் நிறுவனம் அவ்வளவு சீர் கெட்டுக் கிடக்கிறது. இப்படிப்பட்ட நிறுவனத்தை வைத்துக் கொண்டு யார் மீதாவது பழியைப் போட வேண்டுமென்று பார்க்கிறீர்கள். நெய்வேலி இரண்டாவது திட்டத்தை நிறைவேற்ற முடியாததற்கு யார் மீது பழியைப் போடலாம் என்று பார்க்கிறீர்கள். இது மிகமிக வருந்தத்தக்கது.

அமைச்சர் அவர்களுக்கு ஒன்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இன்றைக்கு "ஜெனரேட்டர் கபாசிடி"யைப் பாருங்கள். ஜெனரேட்டர் கபாசிடி 200 மில்லியன் யூனிட். ஹைட்ரோ கபாசிடி 604 மில்லியன் யூனிட். எண்ணூர் அனல் மின் திட்டத்தை எடுத்துக் கொண்டால் இன்னும் கூட அதிகம் உற்பத்தி செய்ய முடியும். ஹைடல் திட்டத்தில் மழையை நம்பி மின்சாரம் உற்பத்தி செய்ய வேண்டியிருக்கிறது. பருவ மழை தவறிவிட்டால்

மின்சார உற்பத்தி குறைந்துவிடும். 340 மெகாவாட்தான் மின்சாரம் உற்பத்திச் செய்யமுடியும். ஜெனரேட்டரில் 672 மில்லியன் யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யமுடியும். எண்ணூர் நிலைமையை எடுத்துக் கொண்டால் இவ்வளவு மோசமாக இருப்பதற்குக் காரணம் என்ன, ஒரு அட்வைசரி கமிட்டி போட்டிருக்கிறீர்கள். பி.எச்.இ.எல்-ல் இருந்தும் நிபுணர்களை அழைத்து வந்திருக்கிறீர்கள். இந்த இரண்டு பேரும் ஒருவர் மீது ஒருவர் பழியைத் தூக்கிப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். "பெல்"-லைக் கேட்டால் அவர்கள் மெகானிகல் எபிஷியன்சி இல்லை என்கிறார்கள். இவர்கள் சொல்கிறார்கள் மெஷினிலே எபிஷியன்சி குறைவு ஒன்றும் இல்லை, அவர்களுக்குத்தான் எபிஷியன்சி குறைவு என்கிறார்கள். இது எதைப்போல இருக்கிறது என்றால் இரண்டு பேருக்கும் வேண்டாத விருந்தாளி கண்டிக்குப் போய்ச் செத்தாலும் என்பது போல எண்ணூர் இந்தக் கதியிலே இருக்கிறது.

தொழிலாளர்களுக்காவது ஏதாவது நிம்மதி இருக்கிறதா என்றால் அதுவும் கிடையாது. மின்சார இலாகாவை நடத்தக் கூடியவர்கள் யார் என்றால் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம். அங்கு இருக்கக்கூடிய மேனேஜ்மென்டோ, என்ஜினியர்களோ, மற்றவர்களோ யார் சொன்னாலும் நடக்காது. அவர்கள் என்ன சொல்கிறார்களோ அதுதான் நடக்கும். தொழிலாளர்கள் பொறுப்புணர்ச்சி இல்லாமல் இருக்கிறார்கள். நாய் வாலை ஆட்டுகிறது என்பதற்குப் பதில் நாயை வால் ஆட்டுகிறது என்ற நிலைமையில் இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்த மின்சாரத் தொழிலாளர்கள் மத்தியில் 270 கேட்டிகரி இப்படியிருந்தால் நமக்கு வேண்டியவர்களுக்கு ஒரு கேட்டிகரி போடுவோம், வேண்டாதவர்களுக்கு ஒரு கேட்டிகரி என்பது தானே. 270 கேட்டிகரி ஒரு இலாக்காவில் அவசியம்தானா? இது பற்றி தொழிற்சங்க வசதிகள் பேசினாலும் ஒரு முடிவும் காணப் படவில்லை. கூலி ரிவிஷன் தொழிலாளர்கள் 1—12—1974-லிருந்து கேட்கின்றனர். இதுவரையில் ரிவைஸ் பண்ணவில்லை.

குவார்ட்டர்லி டியர்னஸ் அலவன்ஸ் ரிவைஸ் ஆகியிருக்கிறது. வேஜஸ் ரிவைஸ் ஆகவில்லை. டி.சி.எல். என்று 20 ஆயிரம் பேர்களை வைத்திருக்கிறார்கள். 1972-ல் இரண்டாயிரம் கிளார்க்குகள் எடுத்திருக்கிறார்கள். இந்த 20 ஆயிரம் பேர்களில் வேலைக்கு லாயக்

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1975-76 ஆம் ஆண்டுக்கான
நிதிநிலை அறிக்கை மீதான விவாதம்



குள்ளவர்களை எடுத்திருக்கலாம். 1971-ல் அட்வர்டைஸ்மெண்டு கொடுத்து போஸ்டர் ஆர்டர் மூலம் பணத்தைத் திரட்டிக் குவித்தார்கள். அந்தப் பணம் திருப்பிக் கொடுத்ததாகச் சொல்லப் பட்டது. இன்னும் சிலருக்குத் திருப்பிக் கொடுக்கப்படவில்லை. வேலைக்கு எடுத்துக் கொண்ட இந்த 2 ஆயிரம் பேருக்கும் வேலை கொடுத்ததாகத் தெரியவில்லை. இப்படி தாங்குவதற்கு மேல் தொழிலாளர்களை வைத்துக் கொண்டு செலவழித்துக் கொண்டு இன்றைக்கு உங்களுடைய தொழிலாளர்களின் சக்தி என்ன என்று பார்த்தீர்களா?

திருச்சியில் ஒரு பிரைவேட் அண்டர்டேக்கிங்கில் ஒரு கிளார்க் மாதம் ஒன்றுக்கு 9,500 பில் போடுகிறார். மின்சார வாரியத்தில் எத்தனை பில் போடுகிறார்கள்? மாதம் ஒன்றுக்கு 700 பில்லுக்கு மேல் போடுவதில்லை. காரணம் நிர்வாகத்தை இங்கே சரிவர நடத்த முடியவில்லை. இதற்கு பல காரணங்கள் உண்டு.

முதலாவதாக, இந்த வாரியத்திற்கு சேர்மன் ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி இருக்கக் கூடாது. ஒரு டெக்னிகல் மேன்தான் இருக்க வேண்டும். இலாக்காவைப்பற்றி அவருக்கு விளக்குவதற்கு சீப் என்ஜினியருக்கு டைம் ஆகிறது. சேர்மனை 1, 2 வருஷத்திற்குள் மாற்றிவிடுகிறார்கள். அவர் இலாக்கா என்ன என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. எலக்ட்ரிசிட்டி போர்ஷன் சேர்மேன் ஒரு டெக்னிகல் மேனாக இருக்கவேண்டுமென்று மத்திய சர்க்கார் தாக்கீது அனுப்பியிருக்கிறது. மற்ற மாநிலங்களில் இதை அமல் படுத்துகிறார்கள். நீங்கள் மட்டும் ஏன் ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியைப் போடுவேன் என்று சொல்வதற்குக் காரணம் புரியவில்லை.

அதே மாதிரி இண்டர்னல் ஆடிட் இருக்கவேண்டும். இப்போது ஒரு அக்கவுன்ட்ஸ் ஆபீசர் இருக்கிறார். இப்போது அவர் பாதி நேரத்தைச் சீப் என்ஜினியர் [illegible] பாதி நேரத்தை சேர்மேன் [illegible] பார்க்கிறார். அவருக்கு வேறு வேலை செய்ய நேரம் இல்லை. இப்படி நிலைமை இருந்தால் எப்படி உங்களுடைய இலாக்கா முன்னுக்கு வரும்?

மத்திய சர்க்கார் கொடுக்க உத்தரவைக் கூட நடக்கவில்லை. [illegible] உற்பத்தியைப் பெருக்கவில்லை. அதுவும் விளம்பரத்திற்காக அங்கே செய்து காட்டுகிறீர்கள். இங்கே போட்டுவிட்டேன் என்கிறீர்கள். போட்டுவிட்டேன்,

[திருமதி. த. ந. அனந்தநாயகி] [1975 நவம்பர் 12

மின்சார விளக்குகள் தொடர்ந்து 30 நாட்கள் எரியாது. விளம்பரத்துக்காக போட்டேன் என்று சொல்கிறார்களே, உண்மையில் மக்கள் இதனால் பயனடைந்திருக்கிறார்களா என்றால் கேள்விக் குறிதான்.

ஊழலைப் பற்றி சொன்னால் நடவடிக்கை எடுப்பதில்லை. நாங்கள் ஏற்கனவே ஆட்சியில் இருந்தபோது இப்போது முதலமைச்சராக இருப்பவர் எருக்கன்சேரி ஊழல் என்ன ஆயிற்று, விசாரியுங்கள் என்று சொன்னார். இதை நாங்கள் விசாரித்தோம். யார் இதற்குப் பொறுப்பு என்று பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி விசாரித்து பொறுப்பை நிர்ணயித்தது. எட்டு ஆண்டுகளில் என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? கேட்டால் 'தி மேட்டர் இஸ் குளோஸ்டு' என்று பதில் கொடுக்கிறீர்கள்.

ஊழல் எவ்வளவு வேண்டுமானாலும் செய்யலாம். அடுத்த கட்சி ஆட்சியில் இருந்தால் சத்தம் போடுவது; தாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் அந்த ஊழலை மறைத்துவிடுவது. அதுதான் சாதனையா? ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? நீங்கள் எதை வேண்டுமானாலும் செய்யலாம். கேட்டால் எதிர்க் கட்சிக்காரர்கள் குறை பேசுகிறார்களே என்று குறைப்பட்டுக் கொள்ளுகிறீர்கள். குறையைப் பேசாமல் என்ன செய்வது? பல லட்ச ரூபாய் ஓரிரு நிமிஷங்களில் மின்சார வாரியம் ஏமாந்து விட்டது. வாரியம் ஏமாற்றப்பட்டு விட்டது என்றுதான் சொல்லவேண்டும். அதை வாங்க வேண்டுமென்று கஷ்டப்பட்டு கண்டு பிடித்துக் [illegible] நீங்கள் ஏதாவது செய்தீர்களா என்றால் அதுவும் கிடையாது. அதை கவனிக்கவில்லை. அந்த ஊழலை புதைத்து விட்டார்கள். எருக்கன்சேரி நிலம் வாங்கிய ஊழல், அந்த ஊழலைப் புதைத்து விட்டார்கள்.

அது மட்டுமல்ல, இன்றைக்கு ரயில் மூலம் ஒரு டன் நிலக்கரி கொண்டு வந்தால் ரூ. 137 ஆகிறது. கப்பல் மூலம் கொண்டு வந்தால் டன் ஒன்றுக்கு ரூ. 263 ஆகிறது. இவ்வளவு விலை வித்தியாசம் இருக்கும்போது நீங்கள் கப்பல் வாங்க வேண்டிய அவசியம் என்ன? நாங்கள் ஆட்சியில் இருந்தபோது 1,700 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்து 70 சதவிகிதம் மின்வெட்டு இல்லாமல் சீரான முறையில் விநியோகம் செய்யப்பட்டபோது கரி கப்பலில் வந்து சேரவில்லை, ரயிலில்தான் வந்தது.



1975 நவம்பர் 12]

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** நம்முடைய தெர்மல் ஸ்டேஷனுக்கு சிங்கரேணியிலிருந்து கரி வருகிறது. சென்ற ஆண்டில் போதுமான கரி கிடைக்கவில்லை. வங்காளத்திலிருந்து கொண்டுவரவேண்டுமென்று ஷிப் வாங்கினார்கள். சிங்கரேனிக்கு கப்பல் போகாது, கப்பல் போக வேண்டிய இடம் வங்காளம்தான்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** நமக்கு வேண்டிய கரியை அன்றைக்கு ரயில் மூலம் கொண்டுவந்தோம். இப்போதும் கொண்டு வரலாம். ரூபாய் 137 எங்கே போய் 263 எங்கே. இப்படி கொண்டு வரவேண்டிய அவசியத்திற்கு விளக்கம் தரவேண்டும். பல தெர்மல் ஸ்டேஷன்களுக்கு எக்கச்சக்கமாக கரி தேவை. உங்கள் புரொடக்ஷன் புரொகிரஸ்ஸாக இல்லை. பிக்சர் ரோஸியாக இல்லை. உற்பத்தித் திறனை அதிகரிக்காமல் செலவுத் திறனைத்தான் அதிகரித்திருக்கிறீர்கள் என்று சொல்லிக் கொள்ள ஆசைப் படுகிறேன்.

அடுத்தப்படியாக, டி.சி.எஸ். ஊழியர்களை நான்கு வருஷம் ஆனவர்களை ரெகுலரைஸ் செய்வதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 1-9-1972 அன்று என்ன நிலைமை இருந்ததோ அதுதான் இன்றும். அதற்குப் பின் ஒன்றும் நடக்கவில்லை. தொழிலாளர்களின் தினக் கூலி ரூ. 4 கொடுக்கப்படுகிறது. மின்சார இலாக்கா ஊழியர்களுக்கு தினக்கூலி ரூ. 4 கொடுத்தால் போதுமா? வெங்காயம் தக்காளி கிலோ ரூ. 4-க்கு விற்கிறது. அரிசி விலை என்ன, மிளகாய் விலை என்ன? ரூ. 4 கூலி கொடுத்தால் இது தொழிலாளர் நல அரசா என்று கேள்வி கேட்கவேண்டிய நிலையில் தொழிலாளர்கள் இருக்கிறார்கள் என்பதை சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, இங்கு மின்சார வாரியத்தில் வேலை செய்யும் ஜே. இ. இது மாதிரி பிற மாநிலங்களில் வேலை செய்பவர்களை ஏ.இ. என்று அழைக்கிறார்கள். மத்திய சர்க்கார் வேலை வாய்ப்புத் தரவேண்டுமென்று விண்ணப்பங்கள் கேட்கும்போது ஏ.இ. வித் திரீ இயர்ஸ் எக்ஸ்பீரியன்ஸ் என்று கேட்கிறார்கள். இங்கு ஜே-இ-க்கு வருஷம் எக்ஸ்பிரியன்ஸ் ஆனாலும் ஏ.இ என்று குறிப்பிடுவதில்லை. பிற மாநிலங்களில் ஜே.இ. என்று இல்லாமல் ஏ.இ. என்று இருப்பதால் அவர்கள் மத்திய சர்க்காரில் வேலை வாய்ப்பு அதிகம் பெறுகிறார்கள். நம்முடைய மாநில

என்ஜினியர்கள் அதிக வேலை வாய்ப்புக்களைப் பெறுவதில்லை. அவர்களுக்குப் பணம்தான் தரவேண்டாம். பெயரை மாற்றுவதற்கு வார்த்தைக்குக்கூட பஞ்சமா வந்துவிட்டது ஜே.இ. என்பதற்குப் பதிலாக ஏ.இ. என்று அழைத்தால் என்ன நஷ்டம்? இப்போது அவர்களுக்குக் கொடுப்பதை வைத்துக்கொண்டு பெயரை மட்டும் மாற்றினால் போதும் என்ற நிலையில் ஏன் செய்யக் கூடாது என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

பில் செக்ஷனில் ரொம்ப தப்பு, தவறுகள் வருகின்றன. என்னுடைய கேசில் ஒரு மாதம் 231 யூனிட்டுக்கு ரூ. 77 என்றும் அடுத்த மாதம் அதே யூனிட்டுக்கு ரூ. 99 என்று பில் போடப் பட்டுள்ளது. என்ன முறையில் கணக்குப் போட்டார்கள் என்று தெரியவில்லை. ஆகையால் பிசகான முறையில் கணக்குகள் வந்து கொண்டிருக்கின்றன.

நேற்று திருமதி. சத்தியவாணிமுத்து அவர்கள் சொன்ன மாதிரி செல்வாக்குப் படைத்தவர்கள் வேண்டுமானால் வராமல் பார்த்துக் கொள்ளலாம். செல்வாக்கு இல்லாதவர்கள் எங்கே போய் நிற்பது? அங்கே போ இங்கே போ என்று அலைய வைக்கிறார்கள். எதற்காக எட்டு எலக்டிரிசிட்டி சிஸ்டம்? நிர்வாக சீர்கேடுகள் நிறைய இருக்கின்றன. இதைச் சரி செய்ய, வருஷா வருஷம் ஏதோ ஒரு சடங்கு மாதிரி, சட்டமன்றத்தில் நிதி நிலை அறிக்கையை வைக்காமல், அமைச்சர் அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றிப் பார்க்க வேண்டும். எதற்காக ஸ்பெஷல் ஆபிசர்? இன்றைக்கு ஸ்பெஷல் ஆபிசர் உட்கார்ந்து கொண்டு அவருடைய வேலை என்ன என்று தெரியாமல் அலைய வேண்டிய நிலையில் இருக்கிறார். இதுவரையில் இல்லாததை ஏற்படுத்தவேண்டிய அவசியமில்லை. இப்போது இருக்கக்கூடிய அமைச்சர் தன்னால் கவனிக்கக்கூடிய சாமர்த்தியம் உள்ள அமைச்சர் என்று சொல்லப் படுவதால் இது அவசியமில்லை யென்று தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

செல் என்று வைத்து அதற்கு விஜிலன்ஸ் ஆபிசர் போட்டிருக்கிறீர்கள். அவர் யாராக இருக்க வேண்டும்? அவர் போலீஸ் அதிகாரியாக இருந்தால் அவருக்கு நல்ல பயிற்சி உண்டு. அவரை விஜிலன்ஸ் ஆபீசராகப் போடவேண்டும். அதற்குப் பதிலாக ஒரு என்ஜினியரைப் போடுகிறீர்கள். டெக்னிகல் மேன் போடவேண்டிய இடத்தில் ஒரு ஐ.ஏ.எஸ் அதிகாரியைப் போடுகிறீர்கள். எங்கே



போலீஸ் அதிகாரியைப் போடவேண்டுமோ அங்கே ஒரு என்ஜினியரைப் போடுகிறீர்கள்.

இந்த எண்ணூர் தர்மல் ஸ்டேஷனில் நான்காவது. ஐந்தாவது யூனிட் இன்னும் ஆரம்பிக்கப்படவேயில்லை. அதற்குள் இங்கே இருக்கிற தொழிலாளர்களை தூத்துக்குடிக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நான்காவது, ஐந்தாவது யூனிட்டுக்குத் தேவையான தொழிலாளர்களை வைத்துக்கொண்டு பாக்கிப்பேர்களையாவது அனுப்பினால் பரவாயில்லை என்று சொல்கிறேன். (மணி அடிக்கப்பட்டது).

**திரு. நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, "பயன் பெறுவோரும் பாடுபடுவோரும் மேலான நலம் பெறுவதே மின் வாரியத்தின் நன்னோக்கம்" என்கிற நல்லெண்ணத்தோடு, மின்சார வாரியம் இந்த 1975—76 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை ஒன்றினைத் தந்திருக்கிறார்கள்.

இதன்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் தங்கள் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். எனக்கு முன்னால் திருமதி அனந்தநாயகி அவர்கள் பேசும்போது எங்களது ஆட்சியில் மின்சார வாரியமே சீர்கெட்டுப் போய்விட்டது என்று சொன்னார்கள். அப்படிச் சொல்லிவிட்டு ஏன் ஐ.ஏ.எஸ். காரரை சேர்மென்னாகப் போட்டிருக்கிறீர்கள். இந்தத் துறையைச் சேர்ந்த வல்லுநரையே ஏன் போடவில்லை என்று கேட்டார்கள். அவர்கள் ஆட்சியில் டெக்னிகல் மேன் தான் சேர்மென்னாக இருந்தது மாதிரியும், இப்போது அதை மாற்றிவிட்டது மதிரியும் சொன்னார்கள்.

1957 இல் இருந்து, 1962 இல் இருந்து மின்சார வாரியத்தின் சேர்மென்னாக ஐ.ஏ.எஸ். காரர்கள் தான் இருந்தார்கள். இந்தியாவிலுள்ள 22 மாநிலங்களில் 17 மாநிலங்களில் ஐ. ஏ. எஸ். காரர்களைத்தான் போட்டிருக்கிறார்கள். அவர்கள் ஆளுகிற மாநிலங்களிலேயே ஐ.ஏ.எஸ். காரர்கள்தான் இருக்கிறார்கள். இங்கே இந்த நாட்டில் இப்படி அறிவுரை சொல்வது முறைதானா என்று தெரியவில்லை. (திருமதி அனந்தநாயகி—குறுக்கீடு)

எனக்கு நேரம் குறைவாக இருக்கிறது. இன்னொன்று கூடக் கேட்டார்கள், நீங்கள் கப்பலில் போய் கரி வாங்கலாமா என்று. மத்திய அரசாங்கம் கேட்டவுடன் வாகன் ஒதுக்கிக் கொடுப்பது போல, அதற்கு அம்மையார் அவர்கள் சிபாரிசு செய்வதுபோல-- நீங்கள் கப்பல் வாங்கலாமா என்று பேசினார்கள். இந்த வாரியம் மத்திய அரசாங்க ரெயில்வேயிடம் வாகன் கேட்டுக் கேட்டுப் பார்த்தாகிவிட்டது. அவர்கள் ஒவ்வொரு நெருக்கடியான நேரத்திலும் இல்லையென்று கைவிரித்து விட்டார்கள். இன்னும் சொல்லப் போனால் ஒரு வாகனுக்கு பத்தாயிரம் ரூபாய் லஞ்சம் கொடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறது என்று பத்திரிகையிலேயே வந்தது. இந்த இன்னல்களை எல்லாம் பார்த்துத்தான் கப்பல் வாங்குவதைத் தவிர வேறு வழியில்லை. கப்பல் வாங்கினால் நமக்கு வேண்டிய நிலக்கரியையாவது தட்டு இல்லாமல் கொண்டுவர முடியும் என்றுதான் கப்பல் வாங்கியிருக்கிறோம்.

இன்னும் அவர்கள் பேசும்போது ஏதோ காங்கிரஸ் ஆட்சியில் மின்சார வாரியத்தின் நிர்வாகம் ஒழுங்காக இருந்ததுபோலவும், இப்போது சீர்கெட்டுப் போய்விட்டது போலவும் பேசினார்கள்.

மொத்தம் உற்பத்தியாகின்ற மின்சாரத்தில் நாம் தொழில்களுக்கு மட்டும் 42.6 சதவீதம் பயன்படுத்தி வருகிறோம். வேளாண்மைக்கு 29.1 சதவிகிதம் பயன்படுத்தி வருகிறோம். அவர்களுடைய காலத்தில் மொத்தமே தொழில் துறைக்கு 21.66 சதவீதம் தான் பயன்படுத்தப்பட்டது. வேளாண்மைக்கு 11 சதவீதம் தான் பயன்படுத்தப்பட்டது. இப்படிப் பல முற்போக்குத் திட்டங்களைப் போட்டு தொழில்களுக்கும், வேளாண்மைத் துறைக்கும் அதிக அளவுக்கு மின்சாரத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் முறையில் மின்சார வாரியம் செயல்பட்டு வருகிறதே, இதற்குப் பெயர்தான் இது சீர்கெட்டுப் போய்விட்டது என்று சொல்கிறாரா என்று தெரியவில்லை.

மின்சாரம் பயன்படுத்துவோரின் எண்ணிக்கையை எடுத்துப் பார்த்தாலும் 1966 வரை 13.6 பேர்கள் தான் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். 31—3—1975 வரை பார்த்தால் தற்போது 28.35 லட்சம் பேராக மின்சாரம் பயன்படுத்துவோர் எண்ணிக்கை





உயர்ந்திருக்கிறது. இதற்குப் பெயர்தான் மின்சார வாரியம் சீர்கெட்டுப் போய்விட்டது என்று திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சொல்கிறார்களா?

அதேபோல இந்த நாட்டில்—இந்தியா பூராவிலுமாகச் சொல்கிறேன். 1975 வரை—இந்தியாவில் இருக்கிற மொத்த கிராமங்களில் 5,66,878—இவற்றில் மின்சார வசதி பெற்ற கிராமங்கள் 1,66,682.

உதாரணத்திற்குச் சொல்கிறேன். மின்சார வசதிப் பெற்ற கிராமங்களின் எண்ணிக்கையை—இந்தியாவின் மொத்த கிராமங்களின் எண்ணிக்கையோடு—மாநிலங்களை இணைத்து, ஒப்பிட்டுப் பார்த்தால் அஸ்ஸாம் மாநிலம் 5.8 சதவீதம் தான் பீகார் மாநிலம் 15 சதவீதம். ஆனால் இந்தியாவில் உள்ள உத்தரப்பிரதேஷ் 27.4 சதவீதம். ஆனால் இந்தியாவில் உள்ள மின்சார வசதி பெற்ற மொத்த கிராமங்களோடு, தமிழகத்திலுள்ள மின்சார வசதி பெற்ற மொத்த கிராமங்களைப் பார்க்கிறபோது 97.9 சதவீதம்.

இந்த அளவிற்கு இந்த அரசாங்கம் மின்சார வாரிய நிர்வாக இயந்திரத்தை முடுக்கிவிட்டு, தமிழகத்தில் மின்சார வசதி பெறாத கிராமங்களே இருக்கக் கூடாது என்கிற திட்ட அடிப்படையில் செயல்பட்டு வந்திருப்பதற்குப் பெயர்தான் மின்சார வாரியம் சீர்கெட்டுப் போய்விட்டது என்பதா?

சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கிற தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கின்ற பகுதிகளை எடுத்துக் கொண்டாலும்— தமிழகத்திலுள்ள மொத்த அரிசனத் காலனிகள் 24,799 என்றால் 31—3—67 முடியப் பார்த்தால் அவர்கள் ஆட்சிக் காலத்தில் மின்சாரம் வழங்கப்பட்ட அரிசனக் காலனிகள் 4,354 தான். அம்மையார் அவர்களுடைய கட்சி ஆட்சி நடத்திய காலத்தைத் தான் சொன்னேன். ஆனால் கடந்த ஏழெட்டு ஆண்டுகளுக்குள்ளாக நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு மின்சார வசதிகள் செய்து கொடுக்கப்பட்ட அரிசனக் காலனிகள் 24,004 ஆகும். இந்த அளவுக்குத் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கின்ற பகுதிகளுக்கு எல்லாம் மின்சார வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும் என்கிற லட்சியத்தின் அடிப்படையில் மிகத் தீவிரமாகச் செயல்பட்டு வந்திருப்பதற்குப் பெயர்தான் மின்சார வாரியம் சீர்கெட்டுப் போய்விட்டது என்பதா?

இதேநேரத்தில் பம்பு செட்டுகளைப் பற்றியும் கணக்கு எடுத்துப் பார்த்தேன். வேடிக்கையாகவும் இருந்தது. வேதனையாகவும் இருந்தது. அகில இந்தியாவிலேயே வேளாண்மைத் துறை விசையேற்றங்கள் மொத்தமாக இருப்பது 26,64,365 தான். அதிலே தமிழ்நாட்டில் மட்டும் இருப்பது 7,24,353 ஆகும். இன்னும் சொல்கிறேன்.

அஸ்ஸாம் மாநிலத்தில்—அம்மையார் அவர்களுடைய கட்சி தான் அங்கே ஆட்சி நடத்துகிறது—அங்கே இருக்கிற வேளாண்மை விசையேற்றங்கள் 729 தான். ஜம்மு-காஷ்மீரில் இருப்பது 417 தான். இது கூட வேடிக்கை இல்லை. நாகாலாண்டு என்று ஒரு மாநிலம் இருக்கிறது. அங்கே இருப்பது ஒரே ஒரு பம்பு செட்டுதான். இன்னும் ஒன்றொரு வேடிக்கையைப் பாருங்கள். ஒரு வேளாண்மை விசையேற்றம் கூட இல்லாத மாநிலங்கள்—சுதந்திரம் பெற்று 25 ஆண்டுகளுக்குப் பிறகும்—இருப்பது—மணிபூர், மேகாலயா என்கிற இரண்டு மாநிலங்கள், மணிபூர், மேகாலயா என்ற இந்த இரண்டு மாநிலங்களில் ஒரு பம்பு செட்டுக் கூடக் கிடையாது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** கனம் உறுப்பினர் தமிழ்நாடு மின்சார வாரியத்தைப் பற்றிப் பேசுகிறாரா, இந்தியாவைப் பற்றிப் பேசுகிறாரா?

(திரு. கோவை செழியன் எழுந்திருந்தார்)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர்:** (திரு. வா. மை. அப்துல் ஜப்பார்) அவர் பேசி முடித்த பிறகு பேசலாம்.

**திரு. கோவை செழியன்:** அப்புறம் மறந்துவிடும். நாகாலாண்டு, மேகாலயா பற்றிச் சொல்கிறாரே, மலைப் பிரதேசத்தில்—ஊட்டியை எடுத்துக் கொண்டால் எத்தனை கிணறு, எத்தனை பம்பு செட்டு இருக்கிறது? அதைத்தானா ஒப்பிட்டு இங்கே பெரிய சாதனையாகச் சொல்வது?

**மாண்புமிகு மாற்றுத் தலைவர்:** (திரு. வா. மை. அப்துல் ஜப்பார்) தயவு செய்து இதுபோல ஒருவர் பேசிக் கொண்டிருக்கும் போது யாரும் இடைமறிக்காதீர்கள்.





**திரு. நா. வீராசாமி:** திரு. கோவை செழியனுக்கு இது வேதனையாக இருக்கலாம். ஊட்டியிலே நூற்றுக்கணக்கில் எத்தனை பம்பு செட்டுகள் போடப்பட்டிருக்கின்றன என்பதை வேண்டுமானால் நான் அழைத்துப் போய் காட்டுகிறேன்.

**திரு. கு. அ. பொம்மன்:** நூற்றுக்கணக்கில் இல்லை. ஒன்றிரண்டு இருக்கலாம்.

**திரு. நா. வீராசாமி:** அதுசம்பந்தமாக நான் வேண்டிய புள்ளிவிவரங்களைத் தரத் தயாராய் இருக்கிறேன். நான் சொல்லிக் கொண்டு வருவதெல்லாம் இந்த ஆட்சியில் மின்சார வாரியம் சீர்கெட்டுப் போய்விட்டதா என்பதை உணர்ந்துகொள்வதற்குத் தான்.

அதேமாதிரி லைன் லாஸைப் பற்றிச் சொன்னார்கள். ஆந்திர மாநிலத்தில் உள்ள மின்சாரம் செல்லும் கம்பிகளின் நீளம் 1,19,318 கிலோ மீட்டர். அங்கே உள்ள லைன் லாஸ் 28.46 சதவிகிதம். அரியானாவில் உள்ள மொத்த கம்பிகளின் நீளம் 73,867 கிலோ மீட்டர் அங்கே லைன் லாஸ் 25.67 சதவிகிதம். இப்படி வரிசையாக எடுத்துக் காட்டிக் கொண்டே போகலாம். தமிழ்நாட்டில் உள்ள மொத்த மின் கம்பிகளின் நீளம் என்ன தெரியுமா? 2,44,126 கிலோ மீட்டர். இவ்வளவு அதிகமான நீளமுள்ள கம்பிகளைக் கொண்ட இந்த மாநிலத்தில் ஏற்படுகிற லைன் லாஸ் 20.20 சதவிகிதம் தான். இந்த லைன் லாஸையும் குறைக்க வேண்டும் என்பதற்கு எவ்வளவு முயற்சிகளை எடுத்துக் கொண்டு வருகிறார்கள் என்பதையும் பார்க்க வேண்டும்.

அடுத்துச் சொன்னார்கள். 'இந்த ஆட்சியிலே கடந்த ஏழெட்டு ஆண்டுகளாக விளம்பரத்திற்காக, "பார் எல்லா இடங்களிலும் விளக்குகளைப்போட்டுவிட்டோம்" என்பதாக மின்விஸ்தரிப்பைச் செய்தார்களே தவிர, மின்சார உற்பத்தியில் என்ன கவனத்தைச் செலுத்தினார்கள் என்று கேட்டார்கள்.

தூத்துக்குடி அனல் மின்திட்டத்திற்கு ஒப்புதல் தந்தாகி விட்டது. இந்தத் திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கு மொத்தம் தேவைப்படுவது 250 கோடி ரூபாய். 1 கோடி ரூபாயை மத்திய அரசாங்கம் இந்த ஆண்டு கொடுத்திருக்கிறது. (திருமதி. த. ந. அனந்தநாயகி குறுக்கீடு).

எப்படி மனம் வந்து இந்த ஒரு கோடி ரூபாய்க் கொடுத்தார் என்பதோ தெரியாது! அதற்கான நன்றி தெரிவித்துக்கொள்ள வேண்டும்.

இது அல்லாமல் இன்னும் எத்தனை திட்டங்கள் அனுமதிக்காக அவர்களுக்கு அனுப்பப்பட்டு, இன்னமும் அனுமதி கிடைக்காமல் இருக்கின்றன. தெரியுமா? அக்காமலை நீர்மின் திட்டம்—கிடைக்கக் கூடிய மின்சக்தி 25 மிலியன் யூனிட். இதற்கு ஆகக்கூடிய செலவு 8.98 கோடி—அனுமதிக்காக அனுப்பிவைத்தோம் மத்திய அரசுக்கு. சோழத்திப்புழா நீர் மின்திட்டம் 60 மிலியன் யூனிட் கிடைக்கும். இதற்கு 7 கோடி சொச்சம் தான் ஆகும். இதையும் மத்திய அரசின் அனுமதிக்காக அனுப்பிவைத்தோம். இப்படி மத்திய அரசின் அனுமதிக்காக ஒன்பது திட்டங்களை அனுப்பி வைத்திருக்கிறோம். என்ன ஆயிற்று என்றே தெரியவில்லை.

கல்பாக்கம் அணுமின் திட்டம் 1975 லேயே வந்திருக்க வேண்டும். ஏன் கவனம் செலுத்தவில்லை? இதில் மத்திய அரசாங்கம் தீவிர கவனத்தைச் செலுத்தியிருந்தால் 1975 லேயே இந்தத் திட்டம் வந்திருக்குமே. இது எப்போது வரும் என்றே தெரியவில்லை.

இன்னும் நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்ட வேண்டுமென்று சொன்னோம். இதுவரை மத்திய அரசாங்கம் கவனிக்கவில்லை. இதே மன்றத்திலே நாம் தீர்மானம் போட்டு மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறோம். இதுவரை கவனிக்கப்படவில்லை.

இன்னும் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் பேசும்போது பெரிய பிரச்சினையாகச் சொன்னார்கள், சப் ஸ்டேஷன்களிலே சாமான்களை வாங்கி வைத்திருக்கிறார்கள் என்று. உப்பு மிளகாயையா வாங்கிவைக்க முடியும்?

(THIRU J. KARUNAINATHAN rose.)

MR. CHAIRMAN: (THIRU V. M. ABDUL JABBAR): The hon. Member is not yielding. When he is not yielding you cannot interrupt. You please take your seat.

THIRU J. KARUNAINATHAN: On a point of order, Sir.

MR. CHAIRMAN (THIRU V. M. ABDUL JABBAR): The hon. Member wants to raise a point of order.





(பிற்பகல் 12-30)

திரு. சோ. கருணைநாதன்: ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர், சார். நான் இந்த மன்றத்லேயே இன்றுதான் பாய்ன்ட் ஆஃப் ஆர்டர் கேட்டிருக்கிறேன். நீலகிரி மாவட்டத்தைப் பற்றி பிரச்னை வந்திருப்பதால் சொல்கிறேன். அங்கே கிணறு வெட்டி, பம்ப் செட் போடப்பட்டிருக்கிறதா என்று கேட்டார்கள். அங்கே கிணறும் வெட்டப்பட்டிருக்கிறது. பம்ப் செட்டும் போடப்பட் டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. நா. வீராசாமி: நானே சொல்லிவிட்டேன், அம்மையார் பேசும்பொழுது ரூ. 4 கோடிக்குச் சாமான்கள் வாங்கி வைக்கப் பட்டிருக்கின்றன; ஆதலால் சாமான்கள் திருடு போயிருக்கின்றன என்று சொன்னார்கள். உடனே, அனந்தநாயகி அம்மையார் வர்கள் ரூ. 15 கோடி என்று சொன்னார்கள். இப்படி சொல் பேச்சுக் கேட்டுத்தான் அம்மையார் அரசியலில் கெட்டுப் போனார்களோ, என்னவோ, எனக்குத் தெரியவில்லை. இந்தச் சாமான்களெல்லாம் வாங்கி வைக்கப்பட வேண்டும். நீமோரென்று சாம்பாருக்கு உப்பு, மிளகாய் வாங்குவது போல் எச். டி. கப்பாசிட்டர்களை வாங்க முடியாது. எச். டி கப்பாசிட்டர்களை மளிகைக் கடையிலே போய் வாங்க முடியாது. இலட்சக்கணக் கான கிலோ மீட்டர் லைன்கள் இருப்பதாலே, எச். டி. கப்பாசிட்டர்களை வாங்கி வைப்பதிலே தவறில்லை.

திருமதி சத்தியவாணிமுத்து: சார், ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

திரு. நா. வீராசாமி: சார், எனக்கு டைம் வேண்டும்.

திருமதி சத்தியவாணி முத்து: ஆன் எ பாய்ன்ட் ஆஃப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் வீராசாமி அவர்கள் பேசும் பொழுது 2 கோடியா, 4 கோடியா, 15 கோடியா என்று சொல் கிறார்கள். ஆகவே, சப் ஸ்டேஷனிலே அன்யூஸ்ட் மெட்டீரியல்ஸ் இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்கிறார். 'பாவம் அந்த அம்மையார், ஆகவேதான் இப்படி ஆகிவிட்டார்' என்று அனாவசியமான வார்த்தைகளையெல்லாம் சொல்கிறார். நான் சொல்வது, சப் ஸ்டேஷனிலே அன்யூஸ்ட் மெட்டீரியல்ஸ் ரூ. 2 கோடியா, 4 கோடியா என்பதல்ல. அங்கு இப்படி இருக்கலாமா? இருந்தால் அது போய்விடாதா? அதை ஒத்துக்கொள்கிறாரா?

**திரு. நா. வீராசாமி:** அதைத்தான் சொல்கிறேன், அங்கே அன்யூஸ்டாக இல்லை. அவசரத்திற்குத் தேவைப்பட்டால், உடனடியாக மார்க்கெட்டுக்குப் போய் வாங்க முடியாது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஒரு பகுதியிலே கப்பாசிட்டர் போய்விட்டால், அந்தப் பகுதிக்கே மின்சாரம் கிடைக்காது. அந்தப் பகுதி மக்கள் என்ன ஆவார்கள்? ஓரிடத்தில் பலர் ஃபெயில்யூர் ஆகிவிட்டால் என்ன வாகும்? ஆகவே, இதையெல்லாம் கவனத்தில் வைத்துதான் ரூ. 2 கோடி பெறுமானமுள்ள கப்பாசிடர்ஸ், மற்ற பொருள்கள் ஆகியவற்றை வாங்கி வைக்க வேண்டும். தி.மு.க. ஆட்சியில் மட்டுமல்ல, யார் ஆட்சியிலிருந்தாலும் அவற்றையெல்லாம் வாங்கி ஸ்டோர் பண்ண வேண்டும்.

அடுத்து, அண்ணா பெயரிலே ஒரு அறிவை இல்லம். எனக்குப் பெரிதும் வருத்தமாக இருக்கிறது. காரணம் அண்ணா பெயராலே அறிவை இல்லம் வைத்திருப்பதாலே, மின்சார இணைப்பைத் துண்டித்தார்கள் என்று சொல்வது தான். காரணம் என்னவென்று பார்த்தால், மின்சாரக் கட்டணம் செலுத்தவில்லை. யார் மின்சாரக் கட்டணம் கட்டவில்லையென்றாலும் மின்சார இலாக்கா எச்சரிக்கைக் கொடுத்து, பிறகு 21 நாளைக்குள் துண்டிக்க வேண்டும். அவர்கள் பணம் கட்டவில்லை. ஆகவே துண்டித்தார்கள். அண்ணா லேபிளை போட்டுக்கொண்டு நாங்கள் செய்வோம். அரசாங்கம் பொறுத்துக் கொண்டிருக்க வேண்டும் என்று சொன்னால் எப்படி பொறுத்துக் கொண்டிருக்க முடியும்?

**திருமதி சத்தியவாணிமுத்து:** சார்,

**திரு. நா. வீராசாமி:** எனக்கு நேரமில்லையே, சார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் அவர்களது காப்பகத்தைப்பற்றி சொன்னீர்கள். ஆகவே அவர்கள் சொல்ல விரும்புகிறார்கள். சொல்லட்டும்.

**திருமதி சத்தியவாணி முத்து:** நான், அண்ணா அறிவை இல்லத்திற்கு அளித்த மின்சாரத்திற்குப் பணம் கட்ட வேண்டியிருந்தது; பணம் கட்டாத காரணத்திற்காக மின்னிணைப்பு துண்டித்தார்கள் என்பதை ஒத்துக்கொள்கிறேன். ஆனால்,



அதைப் போல ஆயிரக்கணக்கான ரூபாய்களைப் பலர் கட்டாமல் இருக்கிறார்களே, அதற்கு இந்தச் சட்டத்தைப் பயன்படுத்த வில்லையோ, ஏதோ சமுதாயத்திற்குச் செய்ய வேண்டுமென்று தானேயொழிய, அண்ணாவின் பெயரைச் சொல்லி பிழைப்பு நடத்தவில்லை.

**திரு. நா. வீராசாமி:** திரு. தங்கமணி அவர்கள் சொன்னார்கள் நான் 8 கொலைதான் செய்தேன். நீங்கள் 8 கொலைக்கு மேல் செய்தீர்களே, என்றுசொல்வதுபோலிருக்கிறதென்று. அதுபோல், நான் கேட்பது, அண்ணா அறிவை இல்லத்தைச் சேர்ந்த அம்மையார் மின்சாரக் கட்டணம் கட்டினார்களா என்பதுதான்.

அடுத்து ஹாண்டே அவர்கள் கூட ஒன்றைச் சொன்னார்கள். அப்பாதுரை என்ற பெயரைக் கேட்டாலே அவருக்கு ஒரு அலர்ஜி. அப்பாதுரை திரும்பி இத்துறைக்கு வந்து விட்டார். அவருக்குச் சம்பளம் கிடையாது. அவர் அந்த இலாகாவிலே 13, 15 வருஷம் பொறுப்பிலே இருந்தார். அவருடைய அறிவு இந்த நாட்டுக்குத் தேவைப்பட்டது, இன்னும் தேவைப்படுகிறது. ஆகவே, வைத்திருக்கிறோம்.

அடுத்து, சி. ஈ. கீழே இருந்து மேலே வந்துவிட்டார் என்று சொன்னார்கள். நமது ஹாண்டேயுக்கு இராஜாஜி அவர்கள் தலைவராக இருந்தார். மூதறிஞர் இராஜாஜி, பெரியவர், அனுபவமிக்கவர் எல்லோரும் ஒத்துக்கொள்கிறோம். அவர் தலைமையிலே ஆட்சி நடக்கும்போதுதான் அப்பாதுரையைக் கொண்டு வந்தார்கள். அவரை சி. ஈ. யாக எப்படிக் கொண்டு வந்தார்கள்? ஓவர்லுக் செய்து கொண்டு வந்தார்கள். அது செலக்‌ஷன் போஸ்ட். யாரை வேண்டுமானாலும் அப்பதவிக்குக் கொண்டு வரலாம். அரசாங்கம், திறமையானவர்களை, நம்பிக்கையானவர்களை, நாணயமானவர்களை அப்பதவியில் நியமிக்கக் கடமைப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் அவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். 1954-ஆம் ஆண்டு சி.ஈ.-யாக அவர் . . . (மணி அடிக்கப்பட்டது) சார், சார், ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்த பாய்ன்ட்டை முடித்துவிட்டு உட்காருங்கள்.

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, நரசிம்ம மூர்த்தி, கந்தசாமி, நாராயண ராவ், கராந்தா, கோவிந்த மேனன், நாராயண மூர்த்தி, குருவில்லா, ஏகாம்பரம் ஆகிய எட்டு பேர் சி. ஓ. ஈ-க்களாக, எம். ஈ-க்களாக இருந்தார்கள். அந்த எட்டு பேரையும் ஓவர்லுக் செய்துதான். அப்பாதுரை அவர்களை அன்றையதினம் இராஜாஜி அவர்கள் நியமனம் செய்தார்கள். அந்த அடிப்படையிலேதான் நாட்டின் நன்மையைக் கருதி நிர்வாகத்தின் நன்மையைக் கருதி, இன்றையதினம் அவர் கொண்டு வரப்பட்டிருக்கிறார்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் ரூல் 41 ஸ்டேட்மென்ட் என்றாலும், கேள்வி போட்டாலும் உடனே, எண்ணூர், எண்ணூர் என்று சொல்வார்கள். எண்ணூரைப்பற்றி அடிக்கடி பேசியிருக்கிறோம். . . (மணியடிக்கப்பட்டு திரு. முனு ஆதி பேச அழைக்கப்பட்டார்) ஒன்றே, ஒன்று, தொழிலாளிகளைப் பொறுத்து . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முனு ஆதியைப் பேச நான் கூப்பிட்டிருக்கிறேன். வீராசாமியை உட்கார வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. நா. வீராசாமி:** சார் ஒரே ஒரு நிமிடம். முடித்துவிடுகிறேன். தலைவரவர்களே, ஒரே ஒரு நிமிடம் கொடுங்கள். தொழிலாளிகளுக்கு இந்த அரசாங்கம் எவ்வளவோ செய்திருக்கிறது. மின்சார வாரியத்திலே இருக்கிற எல்லா தொழிலாளிகளுக்கும் தயவு செய்து பாமிலி பெனிபிட் ஸ்கிமை இண்டிர்ட்யூஸ் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அவர்கள் ரிடையர் ஆகி, போகின்ற அன்றைக்கே பென்ஷன் கொடுக்கவேண்டும், கிராஜுவிட்டி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இங்கே பலபேர்கள் சொன்னார்கள், அங்கே 15,000 பேர்கள் என். எம். ஆர்களாக டெம்பரரியாக இருக்கிறார்கள். அவர்களை ரெகுலரைஸ் செய்யவேண்டுமென்று. அவர்களை ரெகுலரைஸ் செய்யவேண்டுமென்று நானும் கேட்டுக் கொள்கிறேன்.

1974-லே மாற்றியமைக்கப்பட வேண்டிய சம்பள விகிதங்கள் இன்னும் மாற்றியமைக்கப்படவில்லை. ஏப்ரல் மாதத்திலே கால் அட்டென்ஷன் கூடக் கொடுத்தேன். ஒரு மாதத்திலே கொடுப்ப



தாகச் சொல்லியிருக்கிறார்கள், நம்முடைய மாண்புமிகு மின்சார அமைச்சரவர்கள். அந்தத் தொழிலாளிகளுக்கு ஊதியத்தை மாற்றிக் கொடுக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

**திரு. முனு ஆதி:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த விவாதத்திலே நானும் கலந்துகொண்டு என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். எனக்கு முன்னாலே பேசிய அருமை கனம் உறுப்பினர் வீராசாமி அவர்கள் எல்லா அலங்கார வார்த்தைகளையும் முன்னேற்ற திட்டங்களையும் சொல்லிவிட்டு கடைசியிலே பென்ஷனைக் கையிலே கொடுங்கள், தொழிலாளிகளை நிரந்தரமாக்குங்கள் என்று குறைகளை ஒப்புக் கொண்டார்கள். மற்ற மாநிலங்களைப் பற்றி, அமைச்சர் சொல்ல வேண்டியவைகளையெல்லாம் அவரே சொல்லிவிட்டார் என்று கருதுகிறேன். அமைச்சருடைய வேலையைக் குறைத்து விட்டார் என்று கருதுகிறேன். மற்ற மாநிலங்களிலே அபிவிருத்தியானதைப் பற்றியோ அல்லது இங்கே அபிவிருத்தியானதைப் பற்றியோ சொல்வதால் பயனில்லை. கடைசியிலே மக்களுக்கு என்ன கிடைக்கிறது?

தமிழ்நாட்டில் பம்ப் செட்களுக்கு கனெக்ஷன் கிடைக்கிறதா? தொழிலாளிகள் நிம்மதியாக வசிக்கிறார்களா? 12 பைசா கட்டணத்தை 16 பைசாவாக்கிவிட்டார்கள். மற்ற மாநிலங்களிலே இத்தனை மெகாவாட் என்று சொல்கிறார், வீராசாமி, எழுதிக் கொடுத்ததைப் படித்துவிட்டார். எனக்கும் தெரியும். ஆனால் யதார்த்தமாக மக்களுக்கு என்ன கிடைக்கிறது? விவசாயிகளெல்லாம் கனெக்ஷன் கிடைக்காமல் எப்படி கஷ்டப்படுகிறார்கள்? 62 ஆயிரத்துச் சில்லறைக்கு இந்த வருஷம் கனெக்ஷன் கொடுத்தோம். 7 இலட்சத்துக்குக் கொடுத்து விட்டோம் என்று சொல்லிவிடலாம். இலையிலே முழுவதும் அரிசியை வைத்துவிட்டு, கடைசியிலே ஒரு பிடி மண்ணை வாரிப் போடுவதைப் போல இத்தனையையும், அலங்கரித்துச் சொல்லிவிட்டார்கள். மின்சார இலாகாவிலே கனெக்ஷன் கொடுக்கப்படாமல் விவசாயிகள் இன்னும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஒரு கிராமத்திலே 100 பேர் மனு போட்டால் 10 பேருக்குத்தான் கனெக்ஷன் கிடைத்திருக்கிறது. . .

திரு. எம். ஆர். கண்ணன்: கனெக்ஷன்தான் கொடுக்கிறார்கள். பம்ப் செட் கூடவா கொடுக்கிறார்கள்.

திரு. முனு ஆதி: கனம் உறுப்பினருக்குச் சொல்வது கூடப் புரியவில்லை என்று கருதுகிறேன். அவ்வளவு தூரத்திற்கு உங்களுக்குத் தெரியாது என்று இப்பொழுதுதான் தெரிகிறது. இப்பொழுது சொல்கிறேன். பம்ப் செட்டை அரசு கொடுக்கவில்லை. உங்களுக்கு இது தெரியும் என்று நினைத்திருந்தேன். இவ்வளவு தூரம் உங்களுக்குத் தெரியாது என்று நினைக்கவில்லை. விசித்திரமான கேள்வி. விசித்திரமான உறுப்பினர். வீராசாமி சொன்னார்—அதைப் போல் எதை வேண்டுமானாலும் பேசி விடலாமா ?

திரு. கு. காமாட்சி: வீராசாமி எதை வேண்டுமானாலும் பேசுவதாகச் சொல்கிறார், அது சரியா? எதை வேண்டுமானாலும் பேச முடியுமா?

திரு. முனு ஆதி: அவர் பேசுகிறமாதிரி நான் பேசிவிட முடியுமா. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் என்னைப் பார்த்துப் பேசுங்கள், அப்படிப் பேசினால் பிரச்னையே இருக்காது.

திரு. முனு ஆதி: மின்சார இலாகாவில் தெருவிளக்குகளை எடுத்துக்கொள்ளுங்கள். நான் ஒவ்வொன்றாகச் சொல்கிறேன். இத்தனை மெகாவாட் உற்பத்தி செய்தோம் என்றெல்லாம் அலங்காரமாகச் சொல்லிவிட்டால் போதுமா? தெருவிளக்குகள் ஒழுங்காக எரிகின்றனவா? டியூப் லைட்ஸ் எல்லாம் 15 நாட்களுக்கு மேல் எரிவதில்லை. கம்பிகள் திருட்டுப் போகின்றன. கண்டுபிடிக்கமுடியவில்லை. சோக் இல்லை என்கிறார்கள், கன்டன்ஸர் இல்லையென்கிறார்கள், கம்பி இல்லையென்று சொல்கிறார்கள். மின்சார இலாகாவிலே இதைச் செய்துவிட்டோம், அதைச் செய்துவிட்டோம் என்று சொல்கிறார்களே. நிலைமை என்ன? விவசாயத்திற்கு மின்சாரம் கிடையாது, விவசாயி 12 பைசா செலுத்தவேண்டுமென்று சொன்னபோதே ஒரு பெரிய போராட்டம் நடந்தது, வெற்றி கண்டது, இப்போது திடீரென்று 16 பைசா உயர்த்தியிருக்கிறீர்கள். எப்படி விவசாயி கொடுக்க முடியும்?





இப்படி விவசாயியைக் கஷ்டப்படுத்திவிட்டு அலங்கார வார்த்தைகள் பேசிக் கொண்டிருக்கிறீர்கள், தனியார்கள் நடத்திய மின்சார நிறுவனங்களை தேசியமயமாக்கினீர்களே, நீங்கள் நடத்துகிறீர்களே என்ன லட்சணம்? முன்பெல்லாம் ஏதாவது சொன்னால் உடனுக்குடன் அட்டெண்ட் பண்ணுவார்கள், ஆனால் இப்போது என்ன நிலைமை? ஏதாவது செய்யவேண்டுமென்று போய்ச்சொன்னால் எழுதி வைத்துவிட்டுப் போய்யா, வரும்போது வரும் என்று சொல்கிறார்கள். மக்கள் எதை எதிர்பார்க்கிறார்கள்? அலங்காரமாகத் திட்டம் போட்டுவிட்டோம் என்று சொல்வதையா? மத்திய சர்க்கார் கொடுக்கவில்லை என்று சொல்வதையா? நீங்கள் மக்களுக்கு என்ன செய்கிறீர்கள் என்பதைத்தான் பார்க்கிறார்கள். என்னிடம் டேட்டா இருக்கிறது, டி. இ. யிடமிருந்து கிடைத்த டேட்டா இருக்கிறது...

திரு. எம். ஆர். கண்ணன்: என்ன எவிடன்ஸ்?

திரு. முனு ஆதி: சென்னையிலிருந்து கொண்டிருக்கிறவர்களுக்கு ஒன்றும் இதைப்பற்றி தெரியாது, என்னிடம் டேட்டா இருக்கிறது. அதைப் பார்த்தால் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் கண்ணனை இருந்தாலும் யாராக இருந்தாலும் உட்கார்ந்து கொண்டே பேசுவது நம்முடைய வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்துகொண்டு பேசுவது மாதிரிப் பேசிக்கொண்டிருக்கக் கூடாது, ஏதாவது இன்டர்வீன் பண்ணவேண்டுமென்றால் என்னுடைய பெர்மிஷனோடு தான் பேசவேண்டும். உறுப்பினர் முனு ஆதி பேசிக்கொண்டிருக்கிறார், இருக்கிற நேரத்தில் அவர் முடிக்கட்டும்.

திரு. முனு ஆதி: வீராசாமி பேசிக்கொண்டிருந்தார், நாங்கள் எவ்வளவு பொறுத்துக்கொண்டு கேட்டுக்கொண்டிருந்தோம், நீங்கள் பொறுக்கக்கூடாதா? அவர் விவரம் புரியாமல் ஏதோ பேசிக்கொண்டிருந்தார், அதையெல்லாம் நாங்கள் கேட்டுக்கொண்டிருந்தோமே . . .

திரு. எம். ஆர். கண்ணன்: என்ன குறை என்று ஆதாரத்தோடு சொல்லுங்கள்.

**திரு. முனு ஆதி**: தாம்பரம் தெருவிளக்குகள் எரியவில்லை, சாங்ஷன் ஆகியும் இன்னும் லைட் போடவில்லையே, உங்களுக்கு என்ன தெரியும் அதைப்பற்றி, நீங்கள் ஏன் பேசுகிறீர்கள். . .

**திரு. எம். ஆர். கண்ணன்**: ரிப்போர்ட் பண்ணியிருக்கலாமே.

**திரு. முனு ஆதி**: முனிசிபல் கவுன்சிலில் தீர்மானமே போட்டு அனுப்பியாகிவிட்டது. நீங்கள் கார்ப்பரேஷனில் உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்கு என்ன தெரியப்போகிறது? தாம்பரம் எந்தப் பக்கம் இருக்கிறது என்பதாவது உங்களுக்குத் தெரியுமா? கவுன்சிலே தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறது, ஆதாரம் காட்டுகிறேன், நீங்கள் சும்மா இருங்கள்.

**திரு. கு. காமாட்சி**: முனு ஆதிக்கு என்று தனியாக டிபேட் வைத்தாலும் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

**திரு. முனு ஆதி**: ½ மணி நேரம் கொடுத்தால் ஆதாரத்தோடு பேசத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: 7, 8 நிமிடங்களில் முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. முனு ஆதி**: என்றால் ஒன்றும் இல்லை, 16 பைசா என்று யாரைக் கேட்டு உயர்த்தினீர்கள். ஏழைகள் அரசு, விவசாயிகள் அரசு என்று சொல்கிறீர்களே, அந்த ஏழைகளுக்கு விவசாயிகளுக்கு 16 பைசா என்று உயர்த்தியிருக்கிறீர்களே, பத்தியிருக்கிறீர்கள். கடைசி நேரத்திலே 16 பைசாவாக உயர்த்தினால் எப்படி விவசாயிகள் கொடுக்க முடியும்? 12 பைசாவாக உயர்த்திய போதே பெரிய போராட்டம் நடந்தது, அப்படி இருக்கும்போது எப்படி இதை ஒத்துக்கொள்வார்கள்? எண்ணூரிலே டி.சி.எல். தொழிலாளர்கள் இன்னும் ரெகுலரைஸ் பண்ணப்படாமல் இருக்கிறார்கள். 3, 4, 5 ஆண்டுகளாகப் பணியாற்றியவர்கள் எல்லாம் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள். இதிலே இரண்டு பிரிவு இருக்கிறது. ஒன்று பவர் அன்ட் மெயின்டனன்ஸ், இன்னொன்று கன்ஸ்ட்ரக்ஷன். அங்கே பணியாற்றுகிற டி.சி.எல். பணியாளர்களை நிரந்தரமாக ஏன் ஆக்கவில்லை? தொழிலாளர்களுக்குச் சரியாகப் பணம் கொடுக்கவில்லை. ஆனால் ஒரு எஞ்சினியருக்கு 6



எஞ்சினியர் என்று போடுகிறீர்கள். தொழிலாளர்களுக்குக் கேட்டால் பணம் இல்லை என்று சொல்லி வயிற்றிலடிக்கிறீர்கள், ஆனால் அதிகாரிகளை இஷ்டம்போல் போடுகிறீர்கள். இப்படி இருக்கும்போது என்ன என்னமோ அலங்காரம் பேசிக்கொண்டிருக்கிறீர்கள், அவர்கள் வயிற்றிலடித்து வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொண்டார்கள், பிப்ரவரியோடு தீர்ந்துபோய்விட்டது. உங்கள் கட்சிக்காரர் என்றால் ஒரு சாதகமான நிலை, மற்றவர்களுக்கு என்றால் கிடையாது.

டிரான்ஸ்பார்மர் 1, 2 லிருந்தும் கரன்ட் கொடுக்க முடியாது என்று மற்றவர்களுடைய மனுக்களை நிராகரித்துவிட்டு தி.மு.க. வைச் சேர்ந்தவர் கேட்டுவிட்டால் உடனே டி.இ. 1, 2 டிரான்ஸ்பார்மரிலிருந்து கனெக்ஷன் கொடுக்கிறார், மற்றவர்கள் கேட்டால் 3-வது டிரான்ஸ்பார்மர் வரட்டும் தருகிறேன், இதிலிருந்து கொடுக்க முடியாது என்று சொல்கிறார்.

இப்படி உங்கள் கட்சிக்காரர் கேட்டால் டி.இ. தருகிறார் என்றால் இது பேவரிட்டிசம் இல்லையா? ஆதாரத்தோடு பேசுகிறேன். இதற்கெல்லாம் கண்ணன் பதில் சொல்லமாட்டார். இதோ பாருங்கள் ஆதாரம். உங்களிடத்திலே காண்பித்தால் என்ன பிரயோசனம்? மினிஸ்டரிடம் காண்பித்தாலாவது பிரயோசனம் உண்டு.

அடுத்து, இந்தியா மீட்டர்ஸ் பிரச்னை என்ன ஆயிற்று? 14 மாதங்களாக லே ஆப் போட்டு மூடிக்கொண்டிருக்கிறார்கள். சென்ற சட்டசபைக் கூட்டத்திலேயே கிளப்பினேம். மூவர் கமிட்டி போட்டார்களே, என்ன ஆயிற்று? ரிப்போர்ட் கொடுத்தார்களா என்ன ஆயிற்று ஒன்றும் தெரியவில்லை, அங்கே 14 மாதங்களாக தொழிலாளர்கள் பட்டினி கிடக்கிறார்களே, தற்கொலை செய்துகொள்கிறான், ஒரு அம்மையார் கிரோசினை ஊற்றிக்கொண்டு தற்கொலை செய்துகொண்டாள். 14 மாதங்களாகச் சம்பளம் இல்லை, 750 தொழிலாளர்கள் பட்டினி கிடக்கிறார்கள் (குறுக்கீடு) நாங்கள் என்ன பண்ணுவது என்றால் எதற்காக நீங்கள் இருக்கவேண்டும், எழுந்து போங்கள். 14 மாதமாகச் சம்பளமில்லாமல் தொழிலாளர்கள் கூலி வேலை செய்து மூட்டை தூக்கிப் பிழைக்கிறார்கள். அந்த மூவர் கமிட்டி என்ன ரிப்போர்ட் கொடுத்தார்கள். . .

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): பாயின்ட் ஆப் ஆர்டர் சார், நம்முடைய நாட்டாண்மைக்காரர் அவர்கள் . .

திரு. முனு ஆதி: நான் என்னவோ நினைத்துக்கொண்டிருந்தேன், அவருடைய தரம் அவ்வளவுதான், பேசட்டும்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): இந்தியா மீட்டர்ஸ்பற்றிச் சொல்கிறார்கள். அது லேபர் டிமாண்டிலே வேண்டுமானால் பேசலாம், எலக்ட்ரிசிடி போர்டுக்கும் அதற்கும் என்ன இருக்கிறது?

திரு. முனு ஆதி: எம்.ஏ.பி.எல். படித்த வழக்கறிஞர், என்ன சம்பந்தம் என்கிறார். மீட்டர்கள் இங்கே கிடைக்கவில்லையென்று மற்ற மாநிலங்களிலேயிருந்து வாங்கிக்கொண்டிருக்கிறோம், மீட்டர்கள் இல்லாததால் கனெக்ஷன் கொடுக்கமுடியவில்லை. பாவம் இது கிருஷ்ணமூர்த்திக்கும் தெரியாது என்று நினைக்கிறேன். இந்தியா மீட்டர்ஸ் தான் மீட்டர் சப்ளை பண்ணிக்கொண்டிருந்தது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): திருச்சியிலே இருக்கிற சிம்கோ மீட்டர்கள்தான் நாம் வாங்குகிறோம், நாம் வாங்கமுடியாமல் மற்ற மாநிலங்களுக்கு அவர்கள் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அங்கே இருப்பது சுமார் 40 லட்சம் ரூபாய் அஸெட்ஸ். அந்த கம்பெனி பிரைவேட் கம்பெனி, நஷ்டத்தில் ஓடினால் அரசாங்கம் அதற்கு என்ன செய்ய முடியும்?

திரு. முனு ஆதி: மேற்கு வங்காளத்திலே ரேலி சைக்கிள் கம்பெனி இதே மாதிரி நஷ்டமடைந்து பிறகு அரசாங்கமே தேசியமயமாக்கி எடுத்துக்கொண்டு காப்பாற்றியிருக்கிறது. நீங்கள் அப்படிச் செய்யவேண்டியதுதானே? சக்தி பைப்ஸ்ஸைக் காப்பாற்றினீர்களே, இது தெரியாமல் கிருஷ்ணமூர்த்தி பேசிக் கொண்டிருக்கிறார். இந்தியா மீட்டர்ஸ் நாம் வாங்கவே இல்லையா? கலைஞர் இப்போது இங்கே இல்லை. அண்ணா அவர்கள் எதிர்க் கட்சியிலே இருந்த நேரத்தில்—அப்பொழுது நம்முடைய கலைஞர் அவர்களும் இருந்தார்கள்—ஒரு முறை சுப்பிரமணியம் அவர்கள் நம்முடைய அண்ணாவை பற்றிச் சொன்னார், "உங்களுக்கு யார் அறிஞர் என்ற பட்டம் கொடுத்தது, உங்களுக்கு அரசியல் தெரியாது" என்று அப்படி இப்படி என்று



காரசாரமாகப் பேசினார்கள். அப்பொழுது அண்ணா அவர்கள் சுப்பிரமணியத்தைப் பற்றி, "நீங்கள் பொருளாதார நிபுணர், நிர்வாகத் திறமை உள்ளவர், நல்ல அரசியல்வாதி" என்றெல்லாம் சொல்லி விட்டு வந்தார். பிறகு காரிலே போகும்பொழுது கலைஞர் அவர்கள் அண்ணாவைப் பார்த்துக் கேட்டார்கள், "அவர் அவ்வளவு வேகமாகப் பேசினார். ஆனால் நீங்கள் அவரைப்பற்றிப் பெருமையாக, புகழ்ந்து பேசினீர்களே" என்று. அதற்கு அண்ணா அவர்கள் சொன்னது, என்னுடைய தரத்தை நான் காட்டினேன், அவருடைய தரத்தை அவர் காட்டினார் என்று சொன்னார். அதுபோலத்தான் என்னுடைய தரம் இது, கிருஷ்ணமூர்த்தி அவர்களின் தரம் அது. எனவே, நான் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: சுப்பிரமணியம் அவர்களைப் பற்றிச் சொன்னதைத்தான் அவருக்கு நான் சொல்கிறேன். எனவே, பிரச்சினையை முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. முனு ஆதி: அமைச்சரவர்கள் நடுநிலையாக இருந்து தீர்ப்புக் கொடுத்தால் நான் ஏற்றுக் கொள்கிறேன். எனக்கு என்று தீர்ப்பு சொன்னார்கள். நாட்டாண்மைக்காரர் என்று சொல்வது வழக்கறிஞர் சொல்கின்ற வார்த்தையா?

திரு. என். எஸ். பலராமன்: வெளியே போ என்று நீங்கள் சொல்லலாமா?

திரு. முனு ஆதி: நான் ஆளை வெளியே போ என்று சொல்லவில்லை. ஆட்சியை விட்டுப் போ என்று தான் அதற்கு அர்த்தம்.

திரு. கு. காமாட்சி: வெளியிலே போ என்று சொல்வது நியாயமா?

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): அதை அவர்கள் பெருமையாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

திரு. முனு ஆதி: நான் அப்படி எடுத்துக்கொள்கிறேன். உங்களுடைய தரம் அது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் சப்ஜெக்டுக்கு வாருங்கள்.

**திரு. முனு ஆதி:** கடைசியாக ஒன்றைச் சொல்லிவிட் முடித்து விடுகிறேன். மின்சார வாரியத்திலே முன்பு ஒ சீஃப் எஞ்சினியர்தான் இருந்தார். எனக்கு முன்னல் பேசி கனம் உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் தம்முடைய பேச்சில் சில அதிகாரிகளுக்கு ஆபத்தை உண்டாக்கிவிட்டுப் போயிருக்கிறுர்கள். அதிகாரிகளுக்கு வக்காலத்து வாங்கிப் பேசுகிறுர். ஒரு சட்ட மன்ற உறுப்பினர் குறிப்பிட்ட அப்பா துரையைப் பற்றியோ சீஃப் எஞ்சினியரைப்பற்றியோ பேசுவ என்பது முறையாகுமா? அவர் மீது இது குறை, இது குறை என்று குறைகளைச் சொல்லும்பொழுது அவருக்கு வக்காலத் வாங்கிக்கொண்டு ஒரு எம்.எல்.ஏ. பேசினல். அது ப்ரிஜுடி ஆகாதா? நாளைக்கு அந்த அதிகாரியைப் பார்க்கும்பொழு இவர் வீராசாமிக்கு வேண்டிய ஆள் போல இருக்கிறது, தி.மு. போல இருக்கிறது என்ற எண்ணம் வராதா? எனவே, பொது படையாகப் பேச வேண்டுமே தவிர; யார் யாருக்கோ வக்காலத் வாங்கிக்கொண்டு பேசுவது சட்டமன்ற உறுப்பினருக் முறையானது அல்ல.

**திரு. நா. வீராசாமி:** பாயின்ட் ஆஃப் ஆர்டர், சார்.

THIRU MUNU ADHI: I am not yielding, I am not yielding I am not yielding.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்புகிறுர்.

**திரு. கு. காமாட்சி:** இதனல்தான் நாங்கள் நாட்டாண்மைக் காரர் என்று பெயர் வைத்தோம்.

**திரு. நா. வீராசாமி:** யாரோ ஒரு அதிகாரியை நான் பாராட்டி விட்டதாகச் சொன்னர்கள். நான் பாராட்டவில்லை. ஹாண்டே அவர்கள் குறிப்பிட்ட அதிகாரியின் மீது குற்றஞ் சாட்டினர்கள். அதற்கு பதில் சொல்ல உரிமை இருக்கிறது. உறுப்பினருக்கு எப்பொழுது குற்றஞ்சாட்ட உரிமை ஒரு ...றதோ அதைப்போல பதில் சொல்வதற்கு மற்ற இருக்க...ர்களுக்கு உரிமை இருக்காதா? எனவே, அவர்கள் உறுப்பினப்பக்கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். திசை திட





**திரு. முனு ஆதி:** அவர் யாரையும் பெயரைக் குறிப்பிட்டுக் குறை சொல்லவில்லை. இந்தப் பதவியிலே இருப்பவர் என்றுதான் சொல்லியிருந்தார். இந்த உத்தியோகத்திலே உள்ளவர் என்று குறிப்பிட்டுச் சொல்வதற்கு உரிமை இருக்கிறது. ஆனல் குறிபிட்ட பெயர் என்ற வகையில் சொல்லி வக்காலத்து வாங்குவது சரியல்ல.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** பொதுவாக அதிகாரியின் பெயரைச் சொல்லக்கூடாது என்ற நிலையிருந்தாலும், அமைச்சரின் பிரசங்கத்தில் அப்பாதுரையை விசேஷ அதிகாரியாகப் போட்டிருக்கிறேம் என்று குறிப்பிட்டிருக்கிறுர்கள்.

**திரு. முனு ஆதி:** அன்றைக்கு ஹாண்டே அவர்கள் அப்பா துரை என்ற பெயரைப் பயன்படுத்தவில்லை. ஒரு இலாக்காவின் குறைபாடுகளைச் சொன்னர்கள். ஆனல், அந்த அதிகாரிக்கு வக்காலத்து வாங்குவது சரியா?

மின்சார வாரியத்தில் ஏற்கனவே ஒரு சீப் எஞ்சினியர்தான் இருந்தார். ஆனல், இப்பொழுது 6 சீப் எஞ்சினியர்கள் இருக் கிறுர்கள். அது போதாது என்று அட்வைசரி கமிட்டி என்று வைத்திருக்கிறுர்கள். இத்தனை பேருக்கும் சம்பளம் கொடுப்பதற்கு வாரியத்தின் பணத்தைக் செலவழிக்கிறீர்கள். ஆனல், தொழி லாளர்கள் கேட்டால் பணம் இல்லை என்று சொல்கிறீர்கள். ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை இன்கிரிமென்ட் கேட்டால் இல்லை யென்று சொல்கிறீர்கள். வீராசாமி அவர்கள் சொன்னர்கள், அதைப்பற்றிச் சொல்கிறேன்.

அவர்கள் ஓய்வு பெறும்பொழுது பென்ஷனையோ, பிராவிடன்ட் பண்டையோ தீர்த்துக் கொடுக்கிறுர்களா என்றல் வருஷக் கணக்கில் கொடுப்பதில்லை.

இந்தியா மீட்டர்ஸைப்பற்றி மறுபடியும் துணைத் தலைவரவர் களின் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன். 750 தொழிலாளர்களின் துயரத்தை நீங்கள் நினைத்துப் பாருங்கள். மைசூரிலே போய் பாரதி என்ற தொழிலாளி தற்கொலை செய்து கொண்டிருக்கிறுர், அவரது பாக்கெட்டிலே எழுதி வைத்திருக்கிறுர், வறுமைதான் காரணம், வேலையில்லை என்று எழுதி வைத்திருக்கிறுர். அதேபோல் ஜெயா என்ற பெண் மண்ணெண்ணெயை ஊற்றிக்கொண்டு

இறந்திருக்கிறார். அவர் எழுதி வைத்திருப்பதிலும் வேலையில்லாததால் என்றுதான் இருக்கிறது. 14 மாதங்களாக வேலை இல்லையாம்.

இதையெல்லாம் நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், இந்தியா மீட்டர்ஸ் 14 மாதங்களாக மூடியிருக்கிறது. அவர்களுக்கு ஒரு விமோசனம் இல்லை. மூவர் கமிட்டியின் அறிக்கை வந்திருக்கிறதா என்பதைப்பற்றி அமைச்சரவர்கள் தெரிவிக்க வேண்டும். அதன் முடிவுகள் என்ன? அதன்மேல் அரசின் நடவடிக்கை என்ன என்பதைச் சொல்ல வேண்டும்.

எண்ணூர் தெர்மல் ஸ்டேஷனிலும் டி.சி.எல். தொழிலாளர்களை நிரந்தரமாக்க வேண்டும், அவர்களை அங்கேயே வைக்க வேண்டும். இவர்களைக் கொண்டுபோய் தூத்துக்குடியில் டி.சி.எல். ஆக வைக்கக் கூடாது.

கட்சிக்காரர்களுக்கெல்லாம் மின் வசதி கொடுப்பது, கட்சியில் இல்லாதவர்களுக்கு ஐந்தாண்டுகளானாலும் இல்லையென்ற முறையில் பாரபட்சமான, ஒருதலைப்பட்சமான முறையில் கட்சிக்கு என்று இருக்கிற வகையில் உள்ள மின்சார இலாக்காவைத் தூய்மைப்படுத்த வேண்டும். இதற்கெல்லாம் அமைச்சரவர்கள் தகுந்த பதில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மின்சார இலாக்கா ஊழல் நிறைந்த இலாக்கா, ஜனங்களுக்குப் பயன்படத்தக்க நிலையிலே இல்லாத இலாக்கா, விவசாயிகளுக்குப் பயன்படாத இலாக்கா, தெரு விளக்குகள் எரியாத அளவிற்கு வைத்திருக்கின்ற இலாக்கா என்று சொல்லி மொத்தத்தில் பரிபூரணமாகப் போன அரசு மின்சார இலாக்காவை வைத்துக் கொள்ள லாயக்கு இல்லை என்பதைத் தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. கோவை செழியன்:** பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். எங்கள் கட்சி உறுப்பினர் திரு. முனு ஆதி அவர்கள் இந்தியா மீட்டர்ஸைப்பற்றிச் சொல்லும்பொழுது என்னுடைய நண்பர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இதற்கும் அதற்கும் என்ன சம்பந்தம் என்று கேட்டார்கள். தமிழ்நாட்டிலே உற்பத்தியாகும் பொருள்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது பாயிண்ட் ஆஃப் ஆர்டர் இல்லை.



**திரு. கோவை செழியன்:** நான் சொல்வதை தயவுசெய்து கேளுங்கள். முழுவதும் கேட்காமல் . . . .

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவரவர்களே, இந்தியா மீட்டர்ஸ் பற்றி நம்முடைய மாண்புமிகு அமைச்சர் மாதவன் அவர்கள் தெளிவாகக் கூறினார்கள். சட்டசபை நடவடிக்கையைப் பார்க்க வேண்டும். என்ன நடவடிக்கையை எடுத்தோம் என்று சட்டசபையில் சொன்னார்கள். தினந்தோறும் அதைப்பற்றி பதில் சொல்லிக் கொண்டிருக்க முடியுமா?

**திரு. கோவை செழியன்:** நான் பேசுவதைக் கேட்ட பிறகு சொல்லுங்கள். நான் சொல்லும் கருத்து என்னவென்றால், தமிழ்நாட்டிலே உற்பத்தியாகும் சிறிய நிறுவனங்களுக்குப் போட்டியாக வடநாட்டிலுள்ள பிர்லா, டாட்டா போன்றவர்கள் முதலிலே விலையைக் குறைத்து இங்கேயுள்ள நிறுவனங்களைக் கொல்லுவார்கள், அதற்குப் பிறகு ஏற்றுவார்கள். அதற்காகத் தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த பொழுது 15 சதவிகிதம் தமிழ்நாட்டிலே உற்பத்தியாகும் பொருள்களுக்கு. . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது பாயிண்ட் ஆஃப் ஆர்டர் இல்லை. திரு. லத்தீப் அவர்கள் பேசுங்கள்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** துணைத் தலைவரவர்களே, இந்த மின்சார வாரிய நிதிநிலை அறிக்கையைக் குறித்து என்னுடைய கருத்துக்களை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மின்சாரத் துறையில் தமிழ்நாட்டில் அபரிமிதமான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதனை யாரும் மறுத்துவிட முடியாது. இன்றைக்கு நம்முடைய தமிழ்நாட்டில் பசுமைப் புரட்சி ஏற்பட்டிருப்பதும், விவசாயத் துறையிலே மிகவும் முனைப்பான பல திட்டங்களை வகுத்து அதன் வாயிலாக முன்னேற்றங்களைக் கண்டிருப்பதும், தொழில் துறையில் மிகச் சிறப்பான முன்னேற்றங்களை நாம் அடைந்திருப்பதும், கிராமப்புறங்களுக்கு மின்சார வசதிகளை மிக விரிவாக, மிகப் பரவலாக எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் கிடைக்கும் வகையில் இன்றைக்கு கிராமப்புறங்களில் மின்சார இணைப்பு கொடுத்து, இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் இந்தத் துறையிலே

முன்னணியில் நிற்கிறது என்று சொல்லும் அளவிற்கு இந்தத் துறையில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதும் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு உண்மையாகும்.

அதேநேரத்தில் ஏற்பட்டிருக்கின்ற முன்னேற்றம், உற்பத்தி செய்யப்படும் எலக்ட்ரிசிட்டி எவ்வளவு தூரம் மக்களுக்குச் செம்மையாக, முறையாகப் பங்கீடு செய்யப்படுகிறது என்பதைப் பார்க்கும்பொழுது அதிலே கூட சில குறைகள் இருக்கின்றன என்பதையும் நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். இன்றைக்கு இந்த நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு அமைச்சரவர்கள் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். மின்சார வாரியம் இன்றைக்கு நிதிப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டிருக்கிறது உண்மை என்பதனை மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக நான் அவர்களுக்குப் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், இது ஏன் ஏற்படுகிறது ? ஒரு துறை இயங்கும்பொழுது ஒவ்வொரு ஆண்டும் அந்தத் துறையிலே நிதிப் பற்றாக்குறையாக இருந்து கொண்டிருக்கிறது. இதற்கான காரணம் என்ன என்பதை ஆராய்ந்து அந்த அடிப்படையிலே இந்த நிதிப் பற்றாக்குறை என்ற நிலையை மாற்றி அந்தத் துறை செம்மையாக இயங்குவதற்கு என்னென்ன வழிகளை நாம் கண்டாக வேண்டுமென்ற திட்டங்களை வகுப்பது முறையானதாக இருக்கும், அது தேவையானதும்கூட என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1.00]

இன்றைக்கு இந்தத் துறையிலே நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். சாதாரணமாக ஒரு வியாபாரத்தையோ, தொழிற்சாலையையோ நடத்துவதாக இருந்தால், இலாப நட்டக் கணக்குகளைப் பார்ப்பார்கள். நஷ்டத்தோடு நடக்கின்ற தொழில்களை மேலும் நடத்த வேண்டிய தேவையில்லை என்று மூடிவிடுவார்கள். அப்படித்தான் வியாபாரத்திலும் கூட.

ஆனால் பொதுத் தேவையைப் பூர்த்தி செய்கிற— "Social Overhead facilities" என்று சொல்லக்கூடிய ஒரு துறையிலே அதனை எப்போதும் லாபத்தின் அடிப்படையில் நடத்த முடியாது என்பது உண்மை தான். அதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால்





அதே நேரத்தில் ஏன் நஷ்டம் ஏற்படுகிறது என்பதைப் பற்றி ஆராய்ச்சி செய்யாமல் இருப்போமானால் காலப் போக்கில் மிகப் பயங்கரமான சூழ்நிலைகள் உருவாகும் என்ற காரணத்தால் தான் இதை ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அறிக்கையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். தமிழ்நாட்டின் மொத்த மின்சாரத் தேவையில் 25 சதவிகிதத்தை நாம் வெளி மாநிலங்களிலிருந்து விலைக்கு வாங்கித்தான் நம்முடைய தேவையைப் பூர்த்தி செய்கிறோம். அந்த அடிப்படையில் பார்க்கும்போது நம்முடைய தேவையில் 25 சதவிகிதத்தை அதிகப்படியான விலை கொடுத்து மற்ற மாநிலங்களில் இருந்து வாங்கி நம்முடைய மாநிலத்தில் நம்முடைய மக்களுக்குப் போதிய அளவுக்கு நியாயமான விலைக்குக் கொடுத்து பங்கீடு செய்கிறோம் என்ற காரணத்தால் பற்றாக்குறையின் காரணமாக எடுக்கப்படுகிற இந்த நடவடிக்கைகளைப் புரிந்து கொள்ளவும் முடியும், பாராட்டவும் முடியும்.

ஆனால் அதே நேரத்தில் எத்தனை சதவிகிதம் இந்தக் காரணத்தால் இந்த மின்சாரத் துறைக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்ற விவரத்தைத் தரவேண்டும். மற்ற மாநிலங்களிடமிருந்து அதிக விலை கொடுத்து வாங்கி நம்முடைய மக்களுக்குக் குறைந்த விலையில் விநியோகம் செய்கிற காரணத்தால் இவ்வளவு தூரம் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பது பற்றி ஆய்வுரை செய்து அதற்கான விளக்கங்கள் உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

இன்னொன்று, நாம் இந்தத் துறைக்காக வாங்குகின்ற பொருள்கள்—பல்புகள், எலக்ட்ரிசிடி சாமான்கள் எந்த அளவுக்கு சிக்கனமாக, உன்னிப்பாக, கவனமாகப் பார்த்து வாங்கப் படுகின்றன, பயன்படும் வகையில் செலவழிக்கப்படுகின்றன என்று பார்த்தால் மிகவும் மோசமான நிலைமைதான் இருந்து கொண்டிருக்கிறது. பல்புகள், கம்பங்கள் போன்றவை வாங்குகின்ற இடத்திலிருந்து சேருகின்ற இடம் வரை கணக்குப் பார்த்தால் எவ்வளவு தூரம் நஷ்டம் ஏற்படுகிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

ஊழியர்களின் பொறுப்பற்ற தன்மையின் காரணமாக அதிகமான அளவுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. பல்புகள் ஃப்யூஸ் ஆகிவிட்டன என்று சொல்லிவிடுகிறார்கள்; போட்டதாகச் சொல்லப்பட்ட கம்பங்கள் கூட இல்லாமல் போய்விடுகின்றன. கம்பிகள் கூட இல்லாமல் போய்விடுகின்றன. இந்த வகையில் எவ்வளவு தூரம் இந்தத் துறைக்கு நஷ்டம் ஏற்படுகிறது? அந்த அடிப்படையில் இந்த நஷ்டத்தைத் தவிர்க்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றனவா? இது கால காலமாக நடைபெற்று வருகிறது, யுக யுகாந்திரமாக நடைபெற்று வருகிறது. இப்படி இந்தத் துறையிலே ஒவ்வொரு பகுதியிலும் நஷ்டம் என்று சொல்லிக் கொண்டிருக்கிற நிலையில் இந்தப் பற்றாக்குறையை எப்படித் தீர்ப்பது என்பது பற்றிய விவரங்களைக் குறிப்பிட்டிருப்பார்களேயானால் நம்மால் அதை உணர்ந்து கொள்ள முடியும். இந்த விவரத்தைப் பெற்று இந்தத் துறை நடவடிக்கை எடுத்து, கவனக் குறைவாக செய்யப்படுகிற காரியங்களைத் தடுக்க, ஊழியர்களிடையே பொறுப்புணர்ச்சியை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்.

இவை எல்லாம் பல இடங்களில் மின்சாரத் துறையில் நடைபெறுகின்ற உண்மைகள். அரசின்மீது குற்றச்சாட்டு சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. என்னதான் அமைச்சர் அவர்கள் முனைப்போடு செயல்பட்டாலும், பொறுப்போடு செயல்பட்டாலும் கீழே இருக்கக்கூடிய ஊழியர்களிடத்தில் பொறுப்புணர்ச்சி இல்லாவிட்டால் நிச்சயமாக இத்தகைய தவறுகள் ஏற்படத்தான் செய்யும். அதை நாம் ஒத்துக் கொண்டாக வேண்டும்.

பல இடங்களில் மின்சாரத் திருட்டு நடக்கிறது; உண்மை தான். இதைத் தடுக்க என்ன முறைகளை மேற்கொள்ள வேண்டும்? இதுவும் இந்தத் துறையில் நட்டம் ஏற்பட ஒரு காரணம். நேற்றையதினம் பேசிய உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள். குறிப்பாக, இந்தத் துறையில் ஈடுபட்டிருக்கும் உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள். இந்தத் துறையிலே வேலை செய்யக்கூடிய ஊழியர்களிடையே ஒழுங்கீனம் இருக்கிறது என்று தயவு செய்து சொல்லாதீர்கள் என்றார்கள். நான் சொல்லுகிறேன்—தயவு செய்து ஒழுங்கீனம் இருக்கிறது என்ற உண்மையை மறைக்காதீர்கள். அப்படி மறைப்பதால்



உங்களுக்கும் நன்மை இல்லை. அந்தத் துறைக்கும் நன்மை இல்லை; நாட்டு மக்களுக்கும் நன்மை இல்லை. நான் தெளிவாகச் சொல்லுகிறேன். இந்த மின்சாரத் துறையில் உள்ள ஒழுங்கீனத்தைப் போல் நாட்டில் இருக்கும் வேறு எந்தத் துறையிலும் இவ்வளவு பொறுப்பற்ற தன்மையும், ஒழுங்கீனமும் கிடையாது. இங்கே அதை எடுத்துச் சொல்லுவதன் மூலந்தான் இந்தத் துறை அமைச்சர் இதைப்பற்றிச் சிந்திக்க முடியும். அதிகாரிகள் சிந்திக்க முடியும்.

இந்தத் துறையிலுள்ள ஊழியர்கள் தங்கள் கடமையைச் செய்து உரிமையைப் பெற வேண்டுமென்ற அடிப்படையில் வேலை செய்ய வேண்டும். இப்படியே இந்தத் துறையில் இருப்பவர்கள் வாழ்ந்து கொண்டிருப்பார்களானால், நாங்கள் யூனியன் வைத்திருக்கிறோம், ஸ்ட்ராங்காக இருக்கிறோம் என்று சொல்லிக் கொண்டு எஸ்.இ.-க்களை, சி.இ.-க்களை, ஏ.இ.-க்களை டி.இ.-க்களைப் பயமுறுத்திக் கொண்டிருப்பார்களானால் எஸ். இ. க்கள், சி. இ. க்கள், அமைச்சர்கள் சென்று உங்களை அடக்குவதற்குப் பதிலாக பொதுமக்கள் உங்களை அடக்க நடவடிக்கை எடுத்துக் கொள்வார்கள் என்பதை எச்சரிக்கையாக இந்தத் துறையிலுள்ள பணியாளர்கள் கொள்ள வேண்டுமென்று தெரிவிக்கிறேன். தொழிலாளர்களுக்கு விரோதமாகப் பேச வேண்டுமென்ற அடிப்படையில் நான் பேசவில்லை, உண்மையின் அடிப்படையில் பேசுகிறேன்—

There cannot be any right without there being any duty. Rights only emanate from the fulfilment of the duty.

என்ற அடிப்படையில் கடமையைச் செய்யுங்கள். உரிமைக்காகப் போர்க் குரல் எழுப்புங்கள். இந்தத் துறையில் இருப்பவர்கள் பொறுப்புணர்ச்சியோடு பணியாற்ற முன்வந்தால்தான் இந்தத் துறை செம்மையாகச் செயல்பட முடியும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, காலம் குறைவாக இருக்கும் காரணத்தால் சில பிரச்சினைகளை மட்டும் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன். விவசாயத்திற்கு 29 சதவிகிதம் ஒதுக்கியிருக்கிறார்கள்; பாராட்டுக்குரியது. இது போதாது. இதை இன்னும் உயர்த்த வேண்டும். நம்முடைய நாடு விவசாயத் துறையில் அதிகமாக ஈடுபட்டிருக்கும் நாடு. கிராமப்புறங்களில்தான் மக்கள் அதிகமாக

வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். சாதாரண அந்தப் பாமர மக்களுக்கு விளக்கு வசதி இல்லை, பம்ப் செட் இணைப்பு சரியானபடி கொடுக்கப்படுவதில்லை. அதைப் பெறுவது பெரும்பாடாக இருக்கிறது.

என்னுடைய தொகுதியைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். ஆலங்காயத்திற்கு அப்பாற்பட்டு இருக்கும் பகுதிகளில் பல ஆயிரக்கணக்கான விவசாயிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் மின் இணைப்புக் கிடைக்கவில்லை. எப்படி விவசாயம் செம்மையாக நடைபெற முடியும்? எப்படி விவசாயம் மேம்பாடு அடையும்? குறிப்பாக மந்தாரக் குட்டை,—ஜவ்வாது மலைப் பகுதியில் இருக்கிறது—நாயக்கனூர், பூசமலை ஆகிய பகுதிகள் ஏழை மக்கள் வாழ்கிற பகுதிகள். அந்தப் பகுதிகளுக்கு மின் இணைப்புக் கொடுத்தால் விவசாயம் தழைக்கும். நான்கு ஆண்டுகளாக டிரான்ஸ்பார்மர் போடவில்லை, ஆகையால் கனெக்ஷன் கொடுக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். டிரான்ஸ்பார்மர் போட்டால் என்ன? விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நன்மை ஏற்படுமே. அவர்கள் பலவிதமான கஷ்டங்களைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார்களே. இந்தத் துறை நஷ்டமடையாமல் லாபத்தைக் கொடுக்கக்கூடிய காரியத்திற்கு செலவு செய்தால் என்ன?

இந்த நிலைமைகளுக்கெல்லாம் காரணம் உயர் அதிகாரிகள் அல்ல. கீழ்மட்ட அதிகாரிகள்தான் இதற்குத் தடங்கலாக இருக்கிறார்கள். இந்த உண்மைகள் எனக்குத் தெரியும். அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

பில்களைப் போடுகிறார்கள். பில் போட்டால் பணம் கட்டக் கூடியவன் எதற்காகப் பணம் கட்டுகிறான் என்று தெரிந்து கொள்ள உரிமை இருக்க வேண்டும்—

"Any payment that is made should be made with full conscience for the purpose for which it is made"

என்று சொல்லக் கூடிய அளவுக்கு எதற்காக இந்தப் பணத்தைக் கட்டுகிறார்கள் என்று தெரிய வாய்ப்பிருக்க வேண்டும்.

ஒரு பில். முதல் 19 யூனிட்டுக்கு 45 பைசா வீதம் 8 ரூ. 55 பைசா கட்ட வேண்டும். இவர்கள் போட்ட பில்லில் முதலில் ரூ. 14.15 என்று போட்டு அதை அடித்திருக்கிறார்கள்.





கடைசியில் ரூ. 14.83 பைசா என்று போட்டிருக்கிறார்கள். எந்த அடிப்படையில்? ரூ. 8.55 கட்ட வேண்டிய பில்லுக்கு ரூ. 14.83 எதற்காகப் போட்டிருக்கிறார்கள்?

ஏதாவது ஒரு கால்குலேஷன் இருக்க வேண்டும். மேற்கொண்டு இவ்வளவு செலவழித்ததற்கு எக்ஸஸ் கன்ஸம்ஷனுக்கு, இவ்வளவு யூனிட்களுக்கு ஒரு யூனிட்டுக்கு இவ்வளவு என்று சொல்லி இவ்வளவு ரூபாய் வந்திருக்கிறது என்று நீங்கள் பில்லில் குறிப்பிட்டு வசூலிக்க வேண்டும். ஆனால் அவர்கள் என்ன செய்கிறார்கள் ரூ. 8.55 கொடுக்க வேண்டிய பில்லுக்கு ரூ. 14.83. 19 யூனிட்ஸ்க்கு, யூனிட் ஒன்று 45 பைசா என்றால் ரூ. 8.55 வருகிறது. ஆனால் ரூ. 14.83 என்று போட்டிருக்கிறார்கள். எதற்காக ரூ. 14.83 கொடுக்க வேண்டும்? அதுபற்றி ஒரு விளக்கமும் இல்லாது இப்படி ஒரு பில் போடுகிறார்கள் என்றால்

Which Financial Code allows it, I do not understand. This kind of irresponsibility and irregularity and exploitation of the people cannot be tolerated. It is evident that the people are kept in darkness and their rights are being jeopardised. If this is the attitude of the lower officials of the Electricity Board, then people will have to take the responsibility of correcting the erring officials, if the Government do not come forward to correct them.

இதை நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இதற்கு ஒரு விளக்கமும் கொடுக்க துறையினர் கடமைப்பட்டவர்களாவார்கள்.

அடுத்து, தெரு விளக்குகள். தெரு விளக்குகளை எடுத்துக் கொண்டால் சில ஊர்களில் மீட்டர்கள் வைத்திருக்கிறார்கள். மீட்டர் வைத்தால் எவ்வளவு செலவாகிறது என்று தெரியும். அந்தச் செலவின் அடிப்படையில் மீட்டரில் கொடுக்கப்பட்டுள்ள எண்ணின் அடிப்படையில் லோக்கல் பாடீஸ் எலக்ட்ரிஸிட்டி டிப்பார்ட்மெண்ட்டுக்கு பணம் பே செய்கிறார்கள். எரியாவிட்டால் அதைப் பார்ப்பது அந்த யூனியன் பொறுப்பு அல்லது எ. இ. யின் பொறுப்பு என்று சொல்லலாம்.

கிராமங்களில் என்ன நடக்கிறது என்று சொல்கிறேன். மீட்டர் இல்லாமலேயே ஒவ்வொரு கிராமத்திற்கும் இவ்வளவு ரூபாய் என்று நிர்ணயம் செய்கிறார்கள். ஆனால் பல கம்பங்களில்

விளக்குகள் எரிவதில்லை. எரியாமலேயே, விளக்குகள் எரியாத அந்தக் கிராமங்களில் விளக்குகள் எரிக்கப்பட்டதாக கணக்கிட்டு பஞ்சாயத்து யூனியன்களிடமிருந்து பணம் வாங்குகிறார்கள் கட்டாயமாக. பஞ்சாயத்து யூனியன் கிராமப் பஞ்சாயத்துக்களிடமிருந்து பணம் வாங்குகிறார்கள். இது என்ன அநியாயம்?

There cannot be any case for demanding money without there being any corresponding benefit to the person who pays the money. If the Electricity Board would always try to exploit the people and to extract money without giving any corresponding benefit to the people, then it cannot be allowed to subsist. The Government must see that this is corrected.

நான் ஒன்று சொல்கிறேன். இதை நான் அத்தாரிட்டியோடு சொல்கிறேன். என் தொகுதியில் நான் எலக்ட்ரிஸிட்டி ஆபீசர்களை வைத்துக் கொண்டு ஒவ்வொரு தெருவாகப் போய் அவர்களை வைத்துக் கொண்டு கணக்கிட்டு எவ்வளவு விளக்குகள் எரியவில்லை என்று கணக்கெடுத்தேன். அவர்கள் காரணங்கள் எல்லாம் சொன்னார்கள். என் கணக்கு வேறு, அவர்களது கணக்கு வேறு. இருந்தாலும் அவர்கள் ஒத்துக்கொண்ட கணக்குப்படி சொல்கிறேன். வாணியம்பாடி நகரத்தில் மொத்தம் 947 தெரு விளக்குகள் எரிகின்றன. அந்தத் துறை ஏ.இ. ஒத்துக்கொண்டபடி 820 விளக்குகள்தான் எரிகின்றன. மிச்ச விளக்குகள், 127 கம்பங்களில் விளக்கு எரியவில்லை. வாணியம்பாடி நகரத்திலே, ஒரு நகராட்சியில், 947 கம்பங்களில் 820 கம்பங்களில் தான் விளக்குகள் எரிகின்றன என்றால் என்ன அர்த்தம்? மாராப்பட்டு, கிரிசமுத்திரம், வளயம்பட்டு இவ்விடங்களில் மாராப்பட்டில் 17 கம்பங்கள், விளக்குகள் உள்ளன. அவற்றில் 13 விளக்குகள்தான் எரிகின்றன. இது அந்தத் துறை அதிகாரி ஒத்துக்கொண்டது. கிரிசமுத்திரத்தில் 44 விளக்குகளில் துறையினர் ஒத்துக்கொண்டுள்ளபடி எரிகிற விளக்குகள் 36, வளயம்பட்டில் 33 விளக்குகளில் எரிவது 19 விளக்குகள்தான், என் தொகுதி பூராவும் சுற்றி வந்திருக்கிறேன். இதற்கான விளக்கங்களை என் தொகுதி பூராவும் வாங்கியிருக்கிறேன். என் தொகுதியை எடுத்துக் கொண்டால் அவர்கள் கணக்குப்படியே 61 சதவிகிதம் விளக்குகள்தான் எரிகின்றன. மற்ற இடங்களில் விளக்குகள் எரிவதில்லை. (மணியடிக்கப்பட்டது.)



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 17 நிமிடங்களாகி விட்டன.

**திரு. எம். ஏ. லத்தீப்:** நான் ஒவ்வொரு பாயின்டாகப் பேசுகிறேன். அவர்களுக்கு அரை மணி நேரம் கொடுத்தீர்களே.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்று கடைசி நாள்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** கடைசி நாள் என்பதால்தான் பேசுகிறேன். நான் ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் கூட எழுப்பவில்லை. நீங்கள். . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் யாருக்கும் அரை மணி நேரம் கொடுக்கவில்லை. பத்து பதினைந்து நிமிடங்கள் தான் கொடுத்திருக்கிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** நானும் பார்த்துக்கொண்டுதானிருக் கிறேன். எனக்கு கவனம் இல்லையா, கண் இல்லையா, பேச வேண்டாம் என்று சொல்லிவிடுங்கள். என் தொகுதியில் பத்து நாட்கள்வரை சுற்றிப் பார்த்துவிட்டு வந்து இங்கு பத்து நிமிடங்கள்கூட பேச வேண்டாம் என்று சொன்னால் என்ன அர்த்தம்?

என் தொகுதியில் இம்மாதிரி அநியாயம் நடந்துகொண் டிருக்கிறது. இதற்கு தக்க நடவடிக்கைகளை இந்தத் துறையினர் எடுக்கவில்லை. எஸ்.இ. யைக் கேட்டால் என்னால் முடியாது சார், என் கீழ் இருப்பவர்கள் சரிவர வேலை செய்வதில்லை, இதை நான் ஒத்துக்கொள்கிறேன், என்னால் முடியாது என்று சொல்கிறார்கள். இந்தமாதிரியான ஊழியர்களை வைத்துக் கொண்டு இந்தத் துறையை எப்படி நிர்வகிப்பது?

தொழிலாளர்களைப் பற்றிப் பேசாதீர்கள் என்று சொல் கிறார்கள், பணியாளர்களைப் பற்றி குற்றம் சொல்லாதீர்கள் என்று சொல்கிறார்கள். இந்த நாடு மக்களுக்கு உரிய நாடு. அதில் தொழிலாளர்களும் ஒரு அங்கம். முக்கியமான அங்கம் மக்கள். மக்களை இந்தத் துறையினர் சூரையாடுகிறார்கள் என்ற குற்றச் சாட்டைச் சொல்கிறேன்.

விளக்கங்கள் இல்லாத பில்களைப் போடுகிறார்கள். மக்களுக்கு எந்தவிதமான பயனும் இல்லாமல் அவர்களது பணம் பறிக்கப் படுகிறது. ஆலங்காயத்தில் ஒரு ஏ. இ. இருக்கிறார் அதைப் பற்றியெல்லாம் நான் விரிவாகச் சொல்ல விரும்பவில்லை. ஆலங் காயத்தில் ஒரு ஏ. இ. இருக்கிறார். அவரிடம் சொன்னேன், நீங்களும் என் கூட வாருங்கள், போய்ப் பார்க்கலாம் என்று. போய்யா எந்த எம்.எல்.ஏ. வந்தால் என்ன, மினிஸ்டர் வந்தால்கூட கூப்பிட முடியாது என்று அந்த ஏ.இ. சொல்கிறார். மினிஸ்டர் வந்தாலும் கூப்பிட முடியாது, ஒரு எம்.எல்.ஏ கூப்பிடமுடியுமா என்று சொன்னால் இது என்ன துறை?

இந்த நாட்டில் சட்டப்படி நடக்கிறதா? காலம் அதிகமாகி விட்டது என்பதால் நான் நீட்டிக்கொண்டு போக விரும்பவில்லை. நான் கேட்க விரும்புவது, இத் துறையில் ஏன் நஷ்டம் ஏற்படு கிறது?

அப்படி நஷ்டம் ஏற்படுவதற்கு இத்துறையில் ஈடுபட்டிருக்கக் கூடிய ஊழியர்களுடைய கவனக்குறைவுதான் காரணம்.

அவர்களிடம் கொடுக்கப்படுகிற மெட்டீரியல்ஸை பொறுப்பற்ற முறையில் பயன்படுத்துவதுதான் காரணம்.

பல பொருள்கள் ஆங்காங்கு விற்கப்படுகின்றன. அதிகமான திருட்டுக்களே இந்தத் துறையில் பணியாற்றுகிற பணியாளர்கள் செய்வதுதான் இதற்குக் காரணம்.

பலரிடத்தில் பணம் வாங்கிக் கொண்டு திருட்டுத்தனமாக மின்சாரம் கொடுப்பது இதற்குக் காரணம்.

சரியாக வேலை செய்யாமல் காலத்தைக் கடத்திக் கொண் டிருப்பது இதற்குக் காரணம்.

ஆகவே இந்தத் துறையில் நஷ்டம் ஏற்படுகிறது. இந்த நஷ்டத்தை யார் பங்கிட்டுக்கொள்கிறார்கள்? பொதுமக்கள் தலைமேல் விழுகிறது. ரூ. 8.55-க்கு பில் போட்டு ரூ. 14.83 பெறுகிறார்கள். எந்த அத்தாரிட்டியோடு பெறுகிறார்கள்? குற்றச்சாட்டு சொல்வதற்காக சொல்லவில்லை. இந்தத் துறையைச் செம்மைபடுத்த வேண்டும். இந்தத் துறை நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு, தொழில் வளர்ச்சிக்கு, விவசாய வளர்ச்சிக்கு அதிகமாகப் பயன்படக்கூடிய, அடிப்படையாக



இருக்கிறது இந்தத் துறை. நாட்டுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும். அதனால் நாடு நன்மை பெறவேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். நாம் எவ்வளவோ முன்னேற்றங்களைக் கண்டிருக்கிறோம்.

ஆகவே, நாம் கண்டுள்ள முன்னேற்றத்தின் முழுப் பலனையும் பெற முடியாத அளவிற்கு நிலைமைகள் இருக்கின்றன. ஆகவேதான் சொல்கிறேன். அவற்றை அகற்றவேண்டும். குறைபாடுகளை, குறைகளை அகற்றவேண்டியது நம் கடமை, அது மக்கள் பிரதிநிதிகளாகிய எங்களைப் போன்றவர்களின் கடமை என்ற எண்ணத்தில்தான் சொல்கிறேன்.

அங்கிருக்கிற அதிகாரிகளிடத்தில் பல முறை எடுத்துச் சொல்லியும் அவர்கள் கேட்காமல் போனால் சட்டமன்றத்தில் எடுத்துச் சொல்லவேண்டியது எங்கள் கடமை.

ஆகவே சொல்கிறோமே தவிர யார் மீதும் குற்றம் சொல்ல வேண்டும் என்று சொல்லவில்லை. நிதர்சனமான உண்மைகளை உண்மையான நிலைமைகள் இருப்பதைச் சொல்கிறேன். இப்போ இருக்கிற இத்துறை அமைச்சரானாலும்சரி அல்லது முன்னால் இருந்தவர்களானாலும்சரி இத்துறையைச் செம்மைப்படுத்த வேண்டுமென்று பல நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள். அவற்றை நான் பாராட்டி அதேநேரத்தில் இத்துறையில் மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளில் மிகுந்த கவனம் செலுத்தவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்து என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா:** மதிப்பிற்குரிய சட்டமன்ற உதவித் தலைவரவர்களே, இந்த மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை சம்பந்தமாக என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்பு கிறேன்.

நமது நாடு விவசாய நாடு. விவசாயிகளுக்கு வேண்டிய சலுகைகளை இந்த அரசாங்கம் செய்திருந்தபோதிலும், இன்றைய தினம் பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுப்பதில் பல குறைபாடுகள் இருக்கின்றன. அதை யாரும் மறுக்க முடியாது. எனக்கு முன்பு பேசிய நண்பர் லத்தீப் சொன்னது போல, விவசாயிகள் என்று சொன்னால் அவர்கள் புறக்கணிக்கப்படு கிறார்கள். அவர்கள் பல ஆண்டு காலமாக பம்ப் செட்டுகளுக்கு

மின் இணைப்புக் கேட்டாலும், அதை முறையாகச் செய்து கொடுப்பது கிடையாது. ஆகவே அரசு இதை அக்கறையோடு கவனித்து, விவசாயிகளுக்கு கால தாமதம் இல்லாமல் பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்க ஏற்பாடு செய்வது மட்டுமல்லாமல், அவர்களுக்கு சலுகை அளிக்கும் முறையில் மின்சாரக் கட்டண உயர்வைக் குறைக்க அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மின்சார சுய தேவையைப் பூர்த்தி செய்ய நமது அரசு தீவிர ஆலோசனை செய்து திட்டங்கள் தயாரித்தாக வேண்டும். புதிய புதிய திட்டங்களைத் தயாரித்து நமக்குத் தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்ய தக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். ஓகனேகல் திட்டம் என்னவாயிற்று என்று தெரியவில்லை. பல ஆண்டுகளாகப் பேசப்பட்டது. அதற்கு மதிப்பீடு தயாராகிவிட்டது என்றார்கள். மத்திய அரசாங்கத்தின் ஒப்புதல் கேட்கப்பட்டிருக்கிறது என்றார்கள். இப்போது அதைப் பற்றி பேச்சே இல்லாமல் இருக்கிறது. இந்தத் திட்டத்தை விரைவில் நிறைவேற்ற வேண்டிய ஏற்பாடுகளையும் அரசு செய்ய வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன்கள், பஞ்சாயத்துக்களைப் பொறுத்த வரையில், சில பஞ்சாயத்துக்கள் வருமானம் இல்லாத பஞ்சாயத்துகளாக இருக்கின்றன. நிறைய விளக்குகள் போட்டிருக்கிறார்கள். விளக்குகள் எரிந்தாலும், எரியாவிட்டாலும், ஒரு விளக்குக்கு இவ்வளவு கட்டணம் என்று சராசரியாக வசூல் செய்யப்படுகிறது. இது பற்றி இந்த மன்றத்தில் அங்கத்தினர்கள் பல தடவை சொல்லியிருக்கிறார்கள். ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் மீட்டர் வைக்கப்பட வேண்டும். எவ்வளவு கரண்ட் செலவாகிறது என்று மீட்டரில் கணக்கெடுத்து, அதற்குரிய கட்டணத்தை பஞ்சாயத்துக்களிடமிருந்து வசூல் செய்யவேண்டும் என்று ஆலோசனை சொல்லப்பட்டு, அதை அமைச்சர் அவர்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இன்னும் அது இன்றைக்கு நடைமுறைக்கு வரவில்லை. மீட்டர் வைப்பதன் மூலமாக பாரபட்சமில்லாமல், எரிகின்ற விளக்குக்கு கட்டணம் வசூலிக்கின்ற நிலைமை ஏற்பட அரசாங்கம் உடனடியாக அவசியம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைச் செய்ய வில்லை என்றால், சில பஞ்சாயத்துக்களுக்கு கட்டணத்தைச்



நிலைமை ஏற்படுகிறது. கிராம அபிவிருத்தி
செலுத்த முடியாத வேண்டிய பணத்தை, இதற்குக்
வேலைகளுக்குச் செலவு செய்ய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, இதை
கொடுக்க வேண்டிய செய்ய வேண்டுமென்று கேட்டுக்
அமைச்சர் அவர்கள் கவனித்துச்
கொள்கிறேன்.

மின்சாரக் கட்டணம் வசூலிப்பதை, மின்சாரத்
வீடுகளுக்கு வசூலித்தால் நலமாக இருக்கும்.
துறையில் இருப்பவர்கள் கோஷாக்கள், இவர்கள் மின்சார
கணவனை இழந்த பெண்கள், சென்று மின் கட்டணத்தைச் செலுத்த
அலுவலகத்திற்குச் பகுதிகளில் இருக்கிறது. இந்த
வேண்டிய நிலைமை கிராமப் இன்றைய தினம் லைன்மேன், மற்றவர்களை
நிலைமையை மாற்ற, வீடுகளில் மின் கட்டணத்தை
நியமித்து, அவர்கள் மூலமாக வசூல் தங்கு தடையில்லாமல் வரும்.
வசூலிக்க ஏற்பாடு செய்தால், இதையும் அரசு செய்ய
ஜனங்களுக்கும் கஷ்டம் இருக்காது. சொல்லிக் கொள்கிறேன்.
வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில்

விஸ்தரிப்பு செய்யப் பட்டிருக்
கிராமங்கள்தோறும் மின்சார இருந்தாலும், இன்றைய தினம்
கிறது. அதில் பல குறைபாடுகள் தீவிரமாக நிறைவேற்றியிருக்
அரசாங்கம் அந்தத் திட்டத்தை முன்னுரிமை அளித்து,
கிறார்கள். அரிசன தெருக்களுக்கு செய்ய வேண்டுமென்று
அங்கெல்லாம் மின்சார விஸ்தரிப்புச் நடைமுறையில் பார்த்தால் அரிசன
அரசாங்கம் ஆணையிட்டும், விஸ்தரிப்புச் செய்வதில் காலதாமத
தெருக்களுக்கு மின்சார செய்வதில்லை என்ற நிலைமை
மாகிறது. சில தெருக்களில் அரசாங்கமில்லை. கீழே
இருக்கிறது. இதற்குக் காரணம் தவறுகள் தான் காரணம்.
இருக்கும் அதிகாரிகள் செய்யும் அதிகாரிகள் தவறு
எவ்வளவு தூரம் நிர்வாகத்திலிருக்கின்ற நண்பர் லத்தீப் எடுத்துச்
செய்கிறார்கள் என்பதற்கு உதாரணம் அலட்சியப் போக்கு அந்தத்
சொன்னார்கள். அந்த அளவுக்கு இருக்கிறது என்றால், அதன்
துறையில் இருப்பவர்களுக்கு அரசாங்கம் ஆளாகும்
காரணமாக மக்களின் அதிருப்திக்கு அலட்சியப் போக்கு
நிலைமை ஏற்படும். அந்த மாதிரியான அதிகாரிகளிடமிருந்தாலும்,
சிப்பந்திகளிடமிருந்தாலும், தவறை ஒழுங்கு
அரசாங்கம் தீவிரமாக நடவடிக்கை எடுத்து, சந்தர்ப்பத்தில் சொல்லிக்
படுத்த முன்வரவேண்டும் என்று இந்தச்
கொள்கிறேன்.

Modernisation also is highly essential. We have to send the Engineers outside the country to find out as to how the line losses are rectified in foreign countries. Modern developments also should be introduced in our Electricity System. There is no use of simply saying that there is 23 per cent line loss, and even more. We must try to reduce it. I came to understand from efficient people that we could reduce it by 6 or 7 per cent. We can save 15 per cent loss out of the 23 per cent. I request the Hon. Minister to see that 15 per cent line loss is saved by adopting modern saving methods. The matter may be discussed with the technicians properly and a minmium of 15 per cent loss is saved, so that we can save about Rs. 15 crores. Ultimately there will not be any loss to the Electricity Board.

Some of our hon. Friends were saying that there were about 7 or 8 Chief Engineers and asked whether they were really essential. Really they are essential. They have got work. For example, for construction there must be a Chief Engineer, for O & M. there must be a Chief Engineer, for purchase there must be a Chief Engineer and for administration there must be a Chief Engineer and so on. To make the department function efficiently we must have Officers. There is no use of simply saying that we need not have so many Officers. Without sufficient number of officers, how can we run the Government? It is highly impossible. We must have good experts in the Department. We must make full use of the services of the engineers. That is what we lack.

Next, I come to understand that there is a lot of indiscipline in this Department. That is what everybody is telling. I am also feeling the same thing. Deterrent punishment should be given to such people who are not amenable to discipline. Otherwise, it will be really difficult to carry on the administration. Some of the hon. Members were telling that it was really a bad state of affairs only because of the Unions.

I came to know that recently at Chingleput because of emergency a man was asked to write the time of his arrival. He had refused. Then the matter was reported to the Section Head and the A.E. had suspended him. Then, the matter went up to the D.E. and the S.E. and they confirmed the suspension order of the



A.E. What happened then? The S.E. was gheraoed in the Office itself. Even at the time of emergency this kind of indiscipline is taking place.

If you want a good name to the Electricity Department, definitely deterrent action should be taken and such persons should be punished properly. Otherwise, there will be no moral fear and they will do whatever they like. I would, therefore, request the Hon. Minister to take special steps to enforce discipline in the Department and punish those who are responsible for indiscipline in the department.

Coming to the other points, I come to understand that there is a grievance amongst Junior Engineers. They want Junior Engineers to be designated as Assistant Engineers and Assistant Engineers to be designated as Assistant Executive Engineers. It is a matter of only changing the designation and there is no financial commitment. I request the Hon. Minister to consider the request very sympathetically and change the designations as they want.

Next, I want to stress about the economic feasibility to electrify all the pumpsets in the villages. For example, in our area there are ups and downs and economic feasibility is highly impossible because of the nature of the soil and the nature of the terrain. In such places they charge 10 per cent interest and within 10 years they will have to get back the capital. Otherwise, they won't connect electricity to the pumpsets. In such cases there should not be any such rigid policy (bell). I would finish in two minutes.

Mr. DEPUTY SPEAKER: The hon. Member may finish within a minute.

Thiru B. VENKATASWAMI: I must say that it is a social problem. Just like electrification of all the villages, why not you give electricity for agricultural purposes which will develop the national economy?

One last point I want to stress is this, the enhancement in the electricity tariff for agricultural operations. All the members, even some members of the ruling party have spoken about the enhancement of the tariff by 4 paise. Even according to the agreement

after agitation by the agriculturists, the Government have promised that they would not enhance the rate. At the time of emergency the rate has been enhanced.

Recently agriculturists came to request the Hon. Chief Minister and the Hon. Chief Minister has refused even to talk about the tariff because of emergency. I want to tell this Government definitely that there will be agitation after the emergency. There will be definitely agitation after some time. Before that I would request the Hon. Chief Minister to see that the tariff is reduced. Because of the 4 paise increase in the tariff one bag of paddy will cost Rs. 5 extra. Are you giving that Rs. 5 to the agriculturists at the time of procurement? It is a great injustice. Eighty per cent of the population are agriculturists. So, I request the Hon. Minister to re-examine this and see that this four paise increase is reduced.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** தலைவரவர்களே, இந்த 75-76 ஆண்டு மின்வாரிய நிதி அறிக்கையின் மீது என் கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

நமது மின்சாரத் துறை அமைச்சரவர்களின் உரையைப் பார்க்கும்போது இந்தத் துறையிலே நாம் என்றைக்குமே முன்னேற்றத்தை வாழ்க்கையிலே காண முடியாது என்ற அச்சம் ஏற்படக்கூடியதாக இருக்கிறது. அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை என்பதற்கு நியாயமான காரணங்கள் இருக்கின்றன. குறிப்பாக, நமது உற்பத்தியைக் காட்டிலும் மின்சாரத்தின் உபயோகத்தின் தேவை அதிகப்படியாக உயர்ந்து கொண்டே போகிறது. நமக்கு மின்சார வெட்டு முதலில் 25 சதவிகிதம் தான். பிறகு ஜூன் மாதத்தில் 60 சதவிகிதமாகி, அதன் பிறகு 75 சதவிகிதமாகி பெரும் இடைஞ்சலை ஏற்படுத்தியிருக்கிறது.

அடுத்து, மின்சார வாரியம் பொதுவாக, தொடர்ந்து மோசமான நிலையில் இருந்து கொண்டு வருகிறது. இந்த அறிக்கையைப் பார்க்கும்போது ஏறத்தாழ 12 கோடி ரூபாய் அளவிற்கு மின்சாரத்தை மற்ற மாநிலங்களிலிருந்து விலை கொடுத்து வாங்குகிற நிலைமையில் இருப்பதைப் பார்க்கிறோம். இப்படிப் பட்ட நிலைமையை எப்படி இந்த மின்சார வாரியம் தடுத்து நிறுத்தாமல் இருக்கிறது என்று தெரியவில்லை. இதை நிவர்த்தி செய்யாத அளவில் நாம் எப்படிப் பல மின்சார திட்டங்களையும் நிறைவேற்றப் போகிறோம் என்பது சந்தேகமாக இருக்கிறது.





எனக்கு ஞாபகம் வருகிறது. அன்றைக்கு காங்கிரஸ் ஆட்சியில் முதலமைச்சர் மதிப்பிற்குரிய பக்தவச்சலம் அவர்கள் 4-வது ஐந்தாண்டுத் திட்டத்தினை அறிவிக்கும் போது அந்த நிலையில் பல புது திட்டங்களை அறிவித்தார்கள். அப்போது அவர் கூறினார் இந்தத் திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட்டாலும் கூட மின்சாரம் நமக்குப் பற்றாக்குறையாகத் தான் இருக்குமே தவிர அதிகமாக இருக்காது என்று தெரிவித்தார்கள். இன்னும் 20 ஆண்டுகள் போனால் மின்சாரத்தின் தேவை இன்னும் அதிகமாகப் போய்விடும் என்று குறிப்பிட்டார்கள்.

மின்சாரத் துறையைப் பார்க்கும்போது மின்சாரத்தையும், உணவையும் சேர்த்துத் தான் நாம் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். உணவு நமக்கு எவ்வளவு அத்தியாவசியமோ அவ்வளவு அத்தியாவசியம் இந்த மின்சாரமும். விவசாயிகளுக்குக் கொடுக்கின்ற மின்சாரத்தின் கட்டணம் உயர்ந்து இருக்கிறது. இந்தக் கட்டண உயர்வைக் குறைக்க வேண்டுமென்று விவசாயிகளும், உறுப்பினர்களும் கூறி விட்டார்கள்.

இந்தக் கட்டண உயர்வைத் தளர்த்த வேண்டுமென்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

கல்பாக்கம் அணு மின் திட்டம் 235 மெகாவாட் என்று சொல்லியிருக்கிறது. 1973-74-லே இது குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் தற்போது அது 78-ம் ஆண்டுக்குள் வருமா என்பதே சந்தேகமாக இருக்கிறது. அதுவும் நிச்சயமில்லை. அதற்கு அடுத்தாற்போல் நெய்வேலி இரண்டாவது திட்டம். அதற்கு எப்போது விமோசனம் என்று தெரியவில்லை. என்னுடைய யோசனையெல்லாம் இன்றைக்கு சில சட்டசபை அங்கத்தினர் களையும், கனம் அமைச்சர் அவர்கள் தலைமையில், சேர்த்து ஒரு குழுவை அமைத்து மத்திய அரசாங்கத்தினிடம் இவைகளின் அத்தியாவசியத்தை எடுத்துக் கூறி, இந்தத் திட்டங்கள் நம்முடைய மாநிலத்திற்கு வருவதற்கும், விரைவு படுத்துவதற்கும், யோசனை கூறுவதற்கும் ஒரு குழு அமைக்கப்பட வேண்டுமென்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, இங்கே சட்டசபையில் கனம் அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள் "பவர் கார்ப்பொரேஷன்" பற்றி. இந்தப் பற்றாக்குறையை நாம் எந்த அளவிலே ஈடுகட்ட

[திருமதி ஜோதி வெங்கடாசலம்] [1975 நவம்பர் 12

வேண்டும் என்பதற்காக பவர் கார்ப்பொரேஷன் அமைக்க வேண்டும் என்று இந்தப் பவர் கார்ப்பொரேஷனைப் பற்றிய விவரங்கள் குறிப்பிலே காணப்படவில்லை. ஒரு வேளை மின்சாரப் பற்றாக்குறை காரணமாக இது குறிப்பிடாமல் விட்டுப் போய் இருக்கலாம் என்று கருதுகிறேன். எனவே பவர் கார்ப்பொரேஷன் அமைப்பதில் தாமதமிருந்தாலும் ஒரு எக்ஸ்பர்ட் கமிட்டி அமைத்தால் நன்றாக இருக்கும் என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். அந்த (Expert Committee) விரிவாக ஆராய்ந்து அறிக்கையை சமர்ப்பிக்க வழிவகை செய்ய வேண்டும்.

அதோடு இந்தத் தெரு விளக்குகளைப் பற்றிக் கூறினார்கள். மாண்புமிகு உறுப்பினர் மூனா ஆடு அவர்கள் கிராமத்தைப் பற்றி தாம்பரத்தைப்பற்றிக் கூறினார்கள். ஆனால், நாம் சென்னையில் பார்க்கிறோம். தினந்தோறும் தெரு விளக்குகள் எரிவதில்லை.

குறிப்பாக, கடந்த நான்கு மாதங்களாக, சான்தோம் ஏரியாவில் பார்த்தால், சாதாரணமாக பல வீடுகளில் மாலையில் 6 மணிக்கு விளக்கேற்றுவார்கள், ஆனால் கடந்த நான்கு மாதங்களாக மாலையிலிருந்து இரவு 9 மணி வரையில் மின்சாரம் இல்லாத குறை அப்பகுதி மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. என்ன காரணம் என்று தெரியவில்லை. தீபாவளி அன்று கூட விளக்கு இல்லாத நிலைமை அந்த மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. என்ன குறை என்பதை கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று அரசைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மின்சார வாரியத்தில் பணி புரியும் ஊழியர்களுக்கு ஊதியத்தைத் திருத்தி அமைக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுகிறேன், இந்தப் பிரச்சனையைத் தீவிரமாகக் கவனித்து மிகக் கவனத்தோடு அணுக வேண்டுமென்று.

அடுத்து ரூரல் எலக்ட்ரிபிகேஷன். என்னுடைய தொகுதியில் இன்னும் பல கிராமங்களுக்கு மின்சாரம் கொடுக்கப்படவில்லை. சென்ற முறையும்கூட ஸ்ரீரங்கம் தொகுதியைக் கட்சிக் கண்ணோட்டத்தோடு பார்க்க வேண்டாம் என்று சொன்னபோது கனம் முதலமைச்சர் அவர்கள் அப்படி அல்லவென்று பதில் கூறினார்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1975-76 ஆம் ஆண்டுக்கான
நிதிநிலை அறிக்கை மீதான விவாதம்

1975 நவம்பர் 12] [திருமதி ஜோதி வெங்கடாசலம்]

கிராமப் பகுதிகளுக்கு 97 சதவீதம் மின்சாரம் கொடுத்தாகி விட்டது என்று கணக்குக் கொடுத்தாலும் கூட என்னுடைய தொகுதியில் மக்களுக்கு இன்னும் மின்சார வசதி கிடைக்காததால், கிடைக்க வேண்டிய இந்த மின்சார வசதியைக் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

நேற்று திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் எம்.எல்.ஏ. என்ற காரணத்தால் என் இன்பிரூயன்ஸை உபயோகப்படுத்தி பணம் கட்டாமல் இருந்து விட்டேன் என்ற குற்றச்சாட்டை கூறினார்கள். நான் மின்சார வாரியத்திற்கு என்னுடைய பாக்கி எதுவும் கிடையாது, தற்போது கட்டவேண்டியது Current Bill தான் இருக்க வேண்டும் அது மட்டுமல்லாமல் இந்த பில்களில் உள்ள கோளாறுகளை பல அங்கத்தினர்கள் சுட்டிக் காட்டினார்கள். நான் எம்.எல்.ஏ. மற்றும் பல பதவிகள் வகித்த காரணத்தால் ஒரு நாளும் தனிப்பட்ட சலுகை கேட்டதுமில்லை, பதவியைத் துஷ்பிரயோகம் செய்ததும் இல்லை என்று கூறிக்கொள்வதோடு இப்படி தவறான தகவல்களை அந்த அங்கத்தினருக்கு கொடுத்த மின்சார வாரியத்தை மிக வருத்தத்தோடு கண்டிக்கிறேன் என்று கூறி அமருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மூன்று நாட்களாக மின்சார வாரிய பட்ஜெட் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களைத் தெரிவித்தார்கள். எல்லா உறுப்பினர்களுக்கும் தங்கு தடையின்றி தாங்கள் விரும்பியதை சொல்ல வாய்ப்புக் கிடைத்தது. எனக்குக் கிடைத்து இருக்கிற நேரம், மிகவும் சோதனையான நேரம். பசி நேரத்தில்கூட இந்த விளக்கங்களைச் சொல்ல வேண்டிய கடமையிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக இங்கு பேசப்பட்டது, மின்சார வாரியத்தில் ஒழுங்கு வேண்டும் டிசிப்ளின் வேண்டும் என்று. அதில் யாருக்கும் கருத்து வேறுபாடில்லை. மின்சார வாரியம் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கிற முக்கியமான பணியை ஏற்றுக் கொண்டிருப்பதால் இந்த மின்சார வாரியத்தில் பணியாற்றுகிறவர்களின் ஒழுங்கு முறைகள் காப்பாற்றப்பட வேண்டுமென்பதில் கருத்து

வேறுபாடில்லை. அதே நேரத்தில் அங்கே பணியாற்றுகிற ஊழியர்கள் சிறந்த ஒத்துழைப்புத் தரவேண்டுமென்று கோரிக்கையை வைக்கிறேன். ஒழுங்கு பற்றி சொல்லும்பொழுது இந்தியப் பிரதமர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

" We do not want discipline out of fear that somebody must take action : we want discipline because people realise that it is necessary for the country's good. If there is self-restraint and self-discipline then the State need not impose discipline, this will work on its own."

அவர்களுடைய கருத்தையும் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள கடமைபபட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் கருத்துக்களைச் சொல்லும்போது சிலர் குறைகளைச் சொன்னார்கள். சிலர் ஏற்பட்டிருக்கும் நல்ல நிலைமைகளைப் பாராட்டியிருக்கிறார்கள். எனவே, பாராட்டிய நண்பர்களுக்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். குறையைச் சுட்டிக் காட்டிய நண்பர்களுக்கும் நன்றியைத் தெரிவிக்க கடமைப் பட்டிருக்கிறேன். எல்லோருடைய பேச்சுகளில் எழுப்பிய பிரச்சனைகளுக்கு என்றால் பதில் கொடுக்க நேரம் இருக்காது என்ற காரணத்தால் முடிந்த அளவுக்கு அந்தப் பிரச்சனைகளுக்கு பதிலளிக்க விரும்புகிறேன்.

முதலில் பொதுவாக சில கருத்துக்களுக்கு பதிலளித்து விட்டு நேரம் இருக்குமானால் தனிப்பட்ட உறுப்பினர்கள் கருத்துக்களுக்கு முடிந்த அளவு பதில் சொல்லுகிறேன் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். பொதுவாக இங்கே சொன்னார்கள். 1967-க்குப் பிறகு தமிழ் நாட்டில் மின்சார உற்பத்தியில் எந்த வித முன்னேற்றமும் இல்லையென்று. புள்ளி விவரங்களைப் பார்த்தால் அப்படி இல்லை. 31—3—1967-ல் இன்ஸ்டால்டு கெப்பாசிட்டி (ஹைடல்) 969 மெகாவாட். இப்போது 1,224 மெகாவாட். தெர்மல் இன்க்ளுடிங். நெய்வேலி 501 மெகாவாட். இப்போது 1.030 மெகாவாட். மொத்தமாக 1.470-லிருந்து 2,254 மெகாவாட்டுக்கு உயர்ந்திருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை.

அதே போல் பீக் டிமாண்டு 1967-ல் 857 ஆக இருந்தது 1,446 ஆக உயர்ந்திருக்கிறது.

அதே போல் ஆவரேஜ் கிரிட் கன்சம்ஷன் பெர் டே 11.3 மில்லியன் யூனிட்டிலிருந்து இப்போது 25 மில்லியன் யூனிட்டாக உயர்ந்திருக்கிறது.





இணைப்புகள் கொடுத்த
அது போல் கிராமங்களில் மின்சார இணைப்புகள் கொடுத்த
வகையில் 1967 வரையில் 22,250, 32.5 சதவிகிதம் கிராமங்களுக்கு
மின்சார வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. இப்போது 51,258
கிராமங்கள், 98 சதவிகிதம் மின்சார வசதி செய்யப்பட்டிருக்கிறது.

இது போல் ஹரிஜன மக்கள் காலனிகளுக்கு 4,334 1967-ல்
செய்யப்பட்டிருந்தது. அது இப்போது 23,980 ஆக உயர்ந்திருக்கிறது.

மின்சார விசையேற்றங்கள் பொறுத்தவரையில் இப்போது
7,21,834 பம்பு செட்டுகள் 1—10—1975-ல் இயங்கி வருகிறது.
அவைகளுக்கு மின்சார வாரியம் மின்சாரம் கொடுக்கிறது
என்பதை மறந்து விடக்கூடாது.

1967-க்குப் பிறகு எந்தத் திட்டமும் நிறைவேற்றப்படவில்லை
யென்று குற்றம் சாட்டினார்கள். 1967-க்கு பிறகு ஆளியாறில் 60
மெ. வா., சோலையாறு 125 மெ. வா., கோதையாறு 100 மெ. வா.,
அடிஷன் டு பேசின் பிரிட்ஜ் 30 மெ. வா., எண்ணூர் தெர்மல் ஸ்கீம்
340 மெ. வா. ஆக மொத்தம் 625 மெ. வா. உற்பத்திக்கு திட்டங்கள்
நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

மீண்டும் இப்போது திட்டங்கள் இல்லாமல் போய்விட்டதா
என்று பார்த்தால் திட்டங்கள் இருக்கின்றன. அதற்கு மத்திய
சர்க்கார் அனுமதித்த விவரம் இங்கே இருக்கிறது.

Execution of the following schemes have been contemplated
under the Fifth Five-Year Plan : ... 110 MW
Ennore Thermal Scheme Extension ... ... ... ... 110 MW
Kundah IV ... ... ... ... 35 MW
Suruliar ... ... ... ... 200 MW
Tuticorin ... ... ... ... ... 470 MW
Kalpakkam ... ... ... ...

மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னது போல் கல்பாக்கம் 1974-ல்
முடியும் என்று எதிர்பார்த்தது 1977-ல் முடிவு பெறலாம் என்று
இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே
பொதுவாக திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இன்னும்

பலதிட்டங்களுக்கு அனுமதி கோரி மத்திய சர்க்காரைக் கேட்டிருக்கிறோம். அனுமதி கிடைக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். மத்திய சர்க்காரிடம் தேங்கியிருக்கிற திட்டங்கள்:

Schemes pending sanction with the Centre :

| | | | | |
|---|---|---|---|---|
| Akkamalai H.E.S. | ... | ... | ... | 25 MW |
| Cholathipuzha H.E.S. | ... | ... | ... | 60 MW |
| Lower Mettur H.E.S. | ... | ... | ... | 160 MW |
| Manimuthar H.E.S. | ... | ... | ... | 65 MW |
| Paralayar H.E.S. | ... | ... | ... | 35 MW |
| Shanmuganadhi H.E.S. | ... | ... | ... | 30 MW |
| Upper Amaravathi H.E.S. | | ... | ... | 20 MW |
| Upper Thambaraparani H.E.S. | | ... | .. | 105 MW |
| Mettur Thermal Scheme | ... | ... | ... | 330 MW |
| Total | | | ... | 890 MW |

ஆக 890 மெ.வா. உற்பத்தியாவதற்குள்ள திட்டங்களுக்கு அனுமதி பெறும். கிட்டத்தட்ட ரூ. 200 கோடிக்கான திட்டங்கள் எதிர்பார்க்கி இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மின்சாரக் கட்டணத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் கருத்துக்களைச் சொன்னார்கள். இன்று விவசாயிகளுக்குப் பல சௌகர்யங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆகவேதான் 12 பைசாவில் இருந்து 16 பைசாவாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இப்படி 1[illegible] பைசாவாக உயர்த்தப்பட்டதைக் குறிப்பிட்டுத்தான் பலர் சொன்னார்கள்.

இன்று பத்திரிகையில் கூடப் பார்த்திருக்கலாம். மத்திய சர்க்காரில் இருந்து தாக்கீது வந்திருக்கிறது. மின்சாரக் கட்டணத்தை ரிவைஸ் செய்ய வேண்டுமென்று தாக்கீது கொடுத்திருக்கிறார்கள்.

"The Minister, Thiru K. C. Pant, expressed the hope that the States will be able to allocate necessary funds for meeting their requirements of Power Project as they are aware of the importance of the power sector. Recourse to deficit financing has to be kept to a well defined minimum. Inter-sectional outlays have, therefore, to be considered to complete the power projects. At the same time, the Electricity Boards should con-



sider how best they could maximise their internal resources. It has been observed that in the last few years, the balance sheets of Electricity Boards have been showing a deteriorating trend. Rising costs of inputs, including fuel and higher wage bills, together with inadequate power tariffs in some cases and low utilisation of capacity are responsible for this situation. The Electricity Boards have to recognise that they must meet a larger share of the financial resources required for power development from internal resources. The Boards should revise tariffs and tap internal resources, as the cost of input material had gone up including cost of fuel and higher wages."

அவர்கள் கூறிய காரணங்கள் என்ன? கோல் விலை உயர்ந்துவிட்டது. ஊதிய உயர்வு ஏற்பட்டுவிட்டது. ஆகையால் மின்சார கட்டணங்களை பரிசீலித்து உயர்த்த வேண்டுமென்று மத்திய அரசு மாநில அரசுகளை கேட்டிருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** மின்சார வாரியம் 1972-73-ம் ஆண்டுக்கான கணக்கைக்கூட அனுப்பவில்லையே. அப்போது இது எப்படி எழும்?

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** குறிப்பாக விவசாயத்திற்கு கட்டணம் உயர்த்த வேண்டுமென்று ஸ்பெசிபிக்காக தாக்கீதை மத்திய அரசு மாநில அரசுகளுக்கு அனுப்பியுள்ளதா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அதற்காகத்தான் அந்த பார்டிகுலர் போர்ஷனை இரண்டு தரம் ஸ்ட்ரெஸ் பண்ணி படித்தேன்.

What does it mean? "In case if you have levied a lower rate you must revise it". I am not telling this. This has been stated by Thiru K. C. Pant in clear terms.

இதில் உள்ள பிரச்சினை உற்பத்திச் செலவு என்ன ஆகிறது என்று பார்க்கவேண்டும். மின்சார உற்பத்தி யூனிட்டுக்கு 37 பைசா என்றாகிறது. ஏற்கெனவே குறைந்த கட்டணத்தில் கொடுத்துவந்தோமே என்றால் சப்ஸிடி கொடுக்க வேண்டியிருந்தது. கிட்டத்தட்ட 40 கோடிக்கு சப்ஸிடி வந்தது. இப்படி உள்ளடக்க விலையோடு டெப்பிடுகிற நேரத்தில்தான் விவசாயத்திற்கும் கட்டணத்தை உயர்த்த வேண்டிய தவிர்க்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டதே தவிர வேறு இல்லையென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. என். குமாரசாமி:** மின்சாரக் கட்டணத்தை 16 பைசா என்று உயர்த்தியது பற்றி பிரச்சினை இல்லை, அடிஷனல் செக்யூரிடி டெபாசிட், மினிமம் டெபாசிட், கனெக்ஷன் சார்ஜஸ் என்று இப்படி பலவிதமாகப் போடுவதை எல்லாம் சேர்த்தால் 25 பைசா என்று வருகிறதே. இதைச் சர்க்கார் பரிசிலனை செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அதனால்தான் மற்ற மாநிலங்களில் யூனிட்டுக்கு 25 பைசா, 26 பைசா என்று வைத்திருக்கும்போது, இங்கே 25 பைசாவாக ஆக்காமல் 16 பைசாவாக வைத்திருக்கிறோம்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** இன்னும் ஒரு சிறு விளக்கம், முதலமைச்சர் அவர்களே பதில் சொல்லலாம். விவசாயத்திற்கு உயர்த்தவேண்டுமென்று நாங்கள் சொல்லவில்லை என்று மத்திய சர்க்காரில் உள்ளவர்கள் சொன்னதாக நான் கேள்விப்பட்டேன். ஸ்பெசிபிக்காக விவசாயத்திற்கு உயர்த்தவேண்டுமென்று அவர்கள் சொன்னார்களா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நீங்கள் வேண்டுமானால் டெல்லியிலேயே விசாரித்துத் தெரிந்துகொள்ளலாம். முன்பு இருந்த நிதி அமைச்சர் திரு. சவானுடனும், இப்போதுள்ள நிதி அமைச்சர் திரு. சுப்பிரமணியத்திடமும், திட்டக்குழுத் தலைவரிடமும் நான் பேசியிருக்கிறேன். தமிழகத்தில்தான் டாரிப் மிகக் குறைவானது, இதை அதிகப்படுத்தவேண்டுமென்று வலியுறுத்தியிருக்கிறார்கள். (டாக்டர் எச். வி. ஹாண்டே: விவசாயத்திற்கா?) விவசாயத்திற்கு என்று வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னால் நீர்ப்பாசன அமைச்சர்கள் மகாநாட்டிற்கு நான் டெல்லி சென்றிருந்தபோது, நிதி அமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்களும், பிளானிங் கமிஷன் டெபுடி சேர்மென் ஹக்ஸர் அவர்களும், திரு. ஜகஜீவன்ராம் அவர்களும் என்னிடத்தில் தமிழகத்தில் விவசாயத்திற்குள்ள குறைந்த டாரிபை உயர்த்த வேண்டுமென்று வலியுறுத்தியிருக்கிறார்கள். பிறகு அந்தக் கருத்தைத் தீர்மானமாகவே மின்சார உற்பத்திச் செலவை விட குறைவாக விதிப்பதைத் தவிர்க்க விவசாயத்திற்கு மின் கட்டணத்தை உயர்த்தவேண்டுமென்கிற அளவில் தமிழகத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள்.





**திரு. கே. என். குமாரசாமி:** மற்ற மாநிலங்களைக் காட்டிலும் இங்கு விவசாயத்திற்கு மின் கட்டணம் குறைவு என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கேரளத்திலே 9 பைசா தான். கருநாடகத்திலே 12 பைசாதான். இன்னும் கருநாடகத்திலே ஒவ்வொரு மாதமும் 21 ஆம் தேதிக்குள் கட்டவேண்டுமென்று கம்பல் பண்ணுவதில்லை. பயிர் வருமானத்திற்குப் பிறகு கட்டலாம். இங்கே உடனே டிஸ்கனெக்ட் பண்ணிவிடுவார்கள். இப்படி அண்டையிலுள்ள 2 மாநிலங்களில் குறைவாக இருப்பதைக் கருதி இங்கேயும் மறுபரிசீலனை செய்வார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** கேரளாவில் ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு மின்சாரத்தை எடுத்துப் போவதில் இங்கு ஆவதைப்போல கம்பு, போஸ்டுகள் ஆகியவற்றில் எல்லாம் அதிகச் செலவு ஆவதில்லை. இங்கு ரொம்ப அதிகமாகச் செலவாகிறது, கேரளத்தில்தான் அதிக அளவு மின்சாரம் உற்பத்தியாகிறது. மின்சார ரேட்டும் குறைவாக இருக்கிறது. இங்குள்ள அளவுக்கு அங்கே பம்பு செட்டுகளும் கிடையாது. இங்கு இருப்பதுபோல, இந்தியாவில் வேறு எங்கும் 7 லட்சம் பம்பு செட்டுகள் கிடையாது.

இந்தியாவில் மற்ற மாநிலங்களில் உள்ள டாரிப் ரேட்டை விவசாயத்திற்கு எடுத்துக்கொண்டாலும்

| Agricultural tariff : | Rs. P. |
|---|---|
| Andhra Pradesh ... ... ... ... ... | 19.67 |
| Kerala ... ... ... ... ... | 9.90 |
| Karnataka ... ... ... ... ... | 17.22 |
| Bihar ... ... ... ... ... | 17.73 |
| Gujarat ... ... ... ... ... | 19.32 |
| Haryana ... ... ... ... ... | 20.84 |
| Madhya Pradesh ... ... ... ... ... | 16.00 |
| Maharashtra ... ... ... ... ... | 21.50 |
| Orissa ... ... ... ... ... | 17.26 |
| Rajasthan ... ... ... ... ... | 21.00 |
| Uttar Pradesh ... ... ... ... ... | 18.40 |
| West Bengal ... ... ... ... ... | 28.00 |
| Tamil Nadu ... ... ... ... ... | 16.00 |

அவர்கள் சொன்னதுபோல கருணாடகத்தில் 12 பைசா இல்லை, 17.22 பைசா, கேரளத்தைவிட இங்கு ஜாஸ்தி தான் என்றாலும் நமக்குச் செலவு அதிகமாக இருக்கிறது. இன்னும் கிணறுக்கு கனெக்ஷன் கொடுக்கிறபோது வாரியத்திற்கு 440 ரூபாய் செலவாகிறது. இதை வாரியமேதான் ஏற்றுக்கொள்கிறது.

அடுத்து லைன்லாஸ், தெப்ட், இதைத் தடுப்பதற்கு இலாக்காவில் ஸ்க்வாட் இருக்கிறது. பல நடவடிக்கைகளை எடுத்தும் இருக்கிறார்கள். போலீஸ் உதவியும் கண்டுபிடிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மற்றபடி லைன்லாஸ் என்பதை மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது ஆந்திராவில் 28.40 சதவிகிதம் இருக்கிறது, பஞ்சாபில் 23.19 சதவிகிதம் இருக்கிறது. இராஜஸ்தானில் 30.86 சதவிகிதம் இருக்கிறது. நமது தமிழ்நாட்டில் 20.20 சதவிகிதம் என்ற அளவிற்குத்தான் இருக்கிறது.

(பிற்பகல் 2-00)

நம்முடைய மாநிலத்திலே 20 சதவிகிதம் என்று இருந்தாலும் கூட, அதையும் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத்தான் நான் தெரிவித்துக் கொள்கிறேன். லைன் லாஸைக் குறைப்பதற்குத் திட்டங்கள் எல்லாம் போடப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் தங்கமணி அவர்கள் கூட அவைகளை எடுத்துச் சொன்னார்கள். எனவே, லைன் லாஸைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஜோதி அம்மையார் அவர்கள், தன்னைப் பற்றி ஏதோ தவறாக சத்தியவாணிமுத்து அம்மையாரவர்கள் சொன்னதாகச் சொன்னார்கள். சத்தியவாணிமுத்து அம்மையார் சொன்னார்களே தவிர, இப்பொழுது பதில் சொல்ல அவர்கள் அவையில் இல்லை. ஜோதி அம்மையாரைப் பொறுத்தவரையில் எந்தத் தவறும் இல்லையென்று இலாகாவால் குறிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால், அதே சத்தியவாணிமுத்து அம்மையாரவர்கள் அண்ணா இல்லத்தைப் பற்றிச் சொன்னார்கள். அவர்கள் காலாகாலத்திலே பணம் கட்டவில்லை. அதனாலே சம்பந்தப்பட்ட அதிகாரி காலம் கொடுத்து, மாதங்கள் கொடுத்து, அதற்கும் பின்னால் பணம் கட்டாததால் டிஸ்கனெக்ட் செய்தார்கள். அப்பொழுதும் பணம்





கட்டாமல் கனெக்ஷன் வாங்கினார்கள். பிறகும் பணம் கட்டவில்லை. ஆகவேதான் டிஸ்கனெக்ட் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, தவறாக நடவடிக்கை எடுக்கப்படவில்லையென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். விவரம் கூட என்னிடம் இருக்கிறது—வேண்டுமானால் தருகிறேன்.

அடுத்து, அம்மையாரவர்கள் ஈசன் இன்ஜினீயரிங் கம்பெனிக்கு சப்ளை ஆஃப் அட்வான்ஸ் 10 சதவிகிதம் கொடுக்கப்பட்டது என்று சொன்னார்கள். அவர்கள் நமக்கு 20 டிரான்ஸ்ஃபார்மர்கள் கொடுத்தார்கள். அவர்களிடம் கண்டிஷன் போட்டு, கொடுக்கா விட்டால் நடவடிக்கை எடுப்போம் என்றுதான் அட்வான்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது.

நான் சென்னையிலிருக்கிற ஸ்டோரைப் பார்த்தபொழுது குறித்த காலத்தில் சில பொருள்கள் கொடுக்கப்படவில்லையென்று அறிந்து உடனே நடவடிக்கை எடுத்திருக்கிறேன். இது போன்ற காரியங்களுக்காகத்தான் ஸ்பெஷல் ஆஃபீஸரைப் பயன்படுத்துகிறேனே தவிர, மாண்புமிகு உறுப்பினர்கள் ரெப்ரசன்டேஷன் கொடுத்தால் அதை அமைச்சரிடம் கொடுத்தால் அவரால் ஒவ்வொன்றையும் நேரடியாகப் பார்க்கமுடியாது என்றுதான் நினைக்கிறேன். ஆகவே, அவர் அவைகளைப் பார்க்கிறார். ஆனால், சேர்மனுக்கு, சி.இ.க்குத் தகவல் கொடுக்கப்படுகிறது. அவர் இருப்பதால், உடனடியாகத் தகவல் வேண்டுமென்றால் விவரம் பெறமுடிகிறது.

செங்கல்பட்டு முனிசிபாலிட்டியிலே தெரு விளக்குகள் எல்லாம் எரியவில்லை என்று பத்திரிகையிலே பார்த்தேன். அதைக் கண்டறிய அந்த அதிகாரியை நேரடியாக அனுப்பி, அவர் நேரில் பார்த்துவிட்டு வந்து, ஆம் அங்கு விளக்குகள் எரியவில்லையென்று சொல்லி, உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அம்மாதிரி காரியங்களுக்குத்தான் அவர் பயன்படுத்தப்படுகிறாரே தவிர, வேறல்ல என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மின் வாரியத்தில் பணியாற்றுகிற ஸ்டாஃபைப்பற்றி உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள். டி.சி.எல். ரெக்ரூட்மென்ட் பொறுத்தவரையில், 31—12—1972-க்குப் பிறகு யாரையுமே எடுப்பதில்லை. அப்படி ஆனபிறகு, 4 ஆண்டுகளுக்கு யாருக்கு சர்வீஸ் ஆகியிருக்கிறதோ அவர்களை ரெகுலரைஸ் செய்யவேண்டு

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1975 நவம்பர் 12

மென்ற கொள்கையின் அடிப்படையிலே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. 30—4—1974-லே 7,900 டி.சி.எல். ரெகுலரைஸ் செய்யப்பட்டிருக்கிறார்கள். 31—12—1972-லே 5,500 டி.சி.எல் ரெகுலரைஸ் செய்யப்பட்டிருக்கிறார்கள். பாக்கி 15,000 பேர்கள் இருக்கிறார்கள். அந்த 15,000 பேரை ஒரு பிரின்சிப்பில் வைத்து 3 ஆண்டோ, 4 ஆண்டோ வைத்து ரெகுலரைஸ் செய்வார்கள். 31—12—1976-ல் அத்தனைபேரும் ரெகுலரைஸ் செய்யப்படுவார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதிலே கூட இன்னொரு விளக்கம் தெரிவித்துக்கொள்கிறேன், எண்ணிக்கையைப் பொறுத்து முன்னாலே கூட ரெகுலரைஸ் செய்யப்படுவார்கள். 31—12—1976-க்குப் பிறகு அங்கே டெம்பரரி காஷுவல் லேபர்ஸ் இருக்கிறார்கள் என்ற நிலை இருக்கக் கூடாது என்பது இன்று மின்சார வாரியத்தில் எடுக்கப்பட்ட முடிவு என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இனிமேல் டெம்பரரி காஷுவல் லேபரர்ஸ் ரெக்ரூட்மென்ட் செய்யப்படாமல், ரெகுலர் ஆகத்தான் ரெக்ரூட்மென்ட் செய்யவேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் நண்பர் வீராசாமி அவர்கள் ஃபாமிலி பெனிஃபிட் திட்டத்தை டெம்பரரி ஸ்டாப்புக்கும் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கை வைத்தார்கள். அந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு, இனிமேல் இந்த ஃபாமிலி பெனிஃபிட் ஸ்கீம் எல்லோருக்கும் பொருந்தும் என்ற உத்தரவு மின்சார வாரியத்தில் போடப்படும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போல் அவரே, ரிட்டையர் ஆகிப் போகிற ஊழியர்களுக்கு உடனே பென்ஷன் கொடுப்பதில்லை, கிராஜுவிட்டி கொடுப்பதில்லை என்று சொன்னார்கள். ஊழியர்கள் ரிட்டையர் ஆகிப் போகிற அன்றைக்கே பென்ஷன், கிராஜுவிட்டி எல்லாம் கொடுத்து, அவர்கள் சந்தோஷமாக வீட்டுக்குப் போக நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் போகிற நேரத்திலே அதற்கான முடிவுகள் எடுக்கப்பட்டு பென்ஷன், கிராஜுவிட்டி ஆகியவைகள் கொடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து. நிலக்கரி எடுத்து வருவதைப் பற்றி உறுப்பினர்கள் எல்லாம் பேசினார்கள். பொதுவாக, பார்க்கும்போது நிலக்கரியைக் கடலின் மூலமாகக் கொண்டு வருவதாக இருந்தாலும்.



1975 நவம்பர் 12] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

கூட, இரண்டு மூன்று ஸ்டேஜ்களிலே ரோடு வழியாகத்தான் வரவேண்டியிருக்கிறது. எனவே, கட்டணம் அதிகமாகத் தானிருக்கிறது. மத்திய அரசாங்கத்தின் தூண்டுதல் கடலின் மூலமாகத்தான் கொண்டுபோக வேண்டுமென்றிருக்கிறது.

It is a well-known fact that in India the transport of coal by rail-*cum*-sea is costlier than all rail route. But still, on account of the congestion in the railways, the Government of India themselves are inducing people to take coal by sea subsidising the difference between the cost of movement by rail-*cum*-sea and cost of movement by all rail route to some extent. The very fact that an approved subsidy scheme exists goes to prove that the cost of movement by rail-*cum*-sea route is higher.

Substantial reduction in cost in the case of sea-borne coal is expected to be achieved by mechanisation of loading and unloading at the ports. The Government of India themselves have appointed Special Consultants to study the problem and they are now in India. With mechanisation of the ports the turn-over period for ships will be lower and there is bound to be reduction in the ocean freight charges as also the handling charges at the ports.

நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பம்ப் செட்கள் ஒன்றும் இல்லையென்ற பிரச்னையை எழுப்பினார்கள். 31—3—1967-ல் நீலகிரியில் 34 பம்ப் செட்கள் தானிருந்தன. ஆனால், இப்பொழுது 195 பம்ப் செட்களிருக்கின்றன. மற்ற மாவட்டங்களுக்கும் புள்ளி விவரம் இருக்கிறது. அவைகளையெல்லாம் படிக்க நேரமில்லையென்பதற்காக நான் சொல்ல விரும்பவில்லை.

மாண்புமிகு உறுப்பினர் ஹாண்டே அவர்கள் பேசும்பொழுது ஏதோ அக்கவுண்ட்ஸைப் பற்றிச் சொன்னார்கள். 1971-72 பற்றிச் சொன்னார்கள்—1972-73 கணக்கு என்னவாயிற்று, 1973-74 கணக்கு என்னவாயிற்று என்று கேட்டார்கள். 1972-73 கணக்கு இப்பொழுது அச்சாகிக் கொண்டிருக்கிறது. இப்பொழுது மன்றம் கலைந்தாலும்கூட அவர்களுக்கு அந்த அறிக்கை அனுப்பி வைக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

1973-74-க்கு ஏ.ஜி.-யினுடைய சர்டிபிகேட் தேவையாக இருக்கிறது. அவர்கள் விளக்கங்களையெல்லாம் கேட்டிருக்கிறார்கள். இப்பொழுது விளக்கங்களைக் கொடுத்துக் கொண்டிருக்

கிறார்கள். கணக்குத் தயாராகிவிட்டது. சில கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லவேண்டிய நிலையிருக்கிறது. அவைகள் கொடுக்கப்பட்ட பிறகு ஏ.ஜி. யினுடைய சர்டிபிகேட் சீக்கிரமே கிடைத்துவிடும்.

1974-75 கணக்கைப் பொறுத்தவரையில், எல்லா சிஸ்டங்களிலிருந்தும் கணக்கு வருகிறது. இரண்டு மூன்று சிஸ்டங்களிலிருந்துதான் கணக்கு வரவில்லை. அவைகள் வந்தபிறகு இதுவும் தயாராகிவிடும். கணக்குகள் எல்லாம் சரியாகத் தானிருக்கும் என்ற நிலைமையிருப்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அப்படிப் பேசும்பொழுது ஹாண்டே அவர்கள் காப்பிட்டல் அவுட்லேயைப் பற்றிச் சொன்னார்கள்.

**Dr. H. V. HANDE**: Sir, is it not better if we have our own Internal Audit so that the whole thing can be audited quickly and then the accounts can be finalised? I think the previous Government had some idea about it and somehow or other it has been shelved. இன்டர்னல் ஆடிட் வைத்துக்கொள்ள வேண்டுமென்ற பரிந்துரை ரொம்ப நாளாக இருந்தது. What is the practical difficulty in implementing it?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தங்கமணி கூடச் சொன்னார்கள். இன்டர்னல் ஆடிட் இன் எலெக்டிரிசிடி போர்ட் வேண்டுமென்று. ப்ரீ ஆடிட், போஸ்ட் ஆடிட் என்றிருக்கிறது. இப்பொழுது ப்ரீ ஆடிட் நடக்கிறது. அவர்கள் கணக்குப் பார்க்கிறார்கள். ஒவ்வொரு பில்லும் செக் பண்ணப்பட்டு வருகிறது. இன்டர்னல் ஆடிட் செய்கின்ற செயற்குறிப்பு பரிசீலனையில் இருப்பதாக நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் தங்கமணி அவர்கள் 10 அம்சத் திட்டம்பற்றிச் சொன்னார்கள். நாடு பூராவும் 20 அம்சத் திட்டம், 10 அம்சத் திட்டம், 14 அம்சத் திட்டம்—அதிலேதான் நடக்கிறது. 10 அம்சத் திட்டத்தில் எங்களுக்கு ஆட்சேபனை கிடையாது. நல்ல திட்டங்களைச் சர்க்கார் ஏற்று ஆதரித்து வருகிறது. மின்சார வாரியமும் ஏற்றுக் கொண்டிருக்கிறது.



மாண்புமிகு உறுப்பினர்கள் கூடக் கேட்டார்கள், 10 பாயின்ட் புரோகிராம் என்னவென்று. அவற்றை நிறைவேற்றுவார்களா? அதுபற்றி அரசின் கருத்து என்னவென்று கேட்டார்கள்.

In the 10 point programme approved in the meeting convened at New Delhi on the 14th August 1975, the following items 1 to 5 relate to the participation of the workers in the management by way of forming joint committees of the representatives of the management as well as trade union organisations :—

1. Joint Committees of representatives of managements and of trade union organisation should be set up at each district or sub-divisional level. These committees will, in addition to acting as Vigilance Committees to prevent sabotage, theft of power and abuses in the use of stores, be also responsible for the task of improving operational efficiency of the system and ensuring consumers' satisfaction, besides consideration of suggestions that may be made by individual or group of workmen, with a view to their adoption.

2. Similar Committees should also be set up at each generating station, which will be responsible for proper operation and maintenance of equipment, availability of spares, etc.

3. Such committees should also be set up for each project to be responsible for reviewing the progress of work and for adopting measures for the timely and economical completion of project.

4. At the Electricity Board level, a joint committee of management and the representatives of trade union organisations should be set up; this committee should be enabled to discuss all aspects of the functioning of the power system of the Electricity Board.

5. These Committees should meet as frequently as is necessary but in any case once in three months. Representation to trade union organisations on these committees may be given to the nominees of All India Federations and of such other trade unions/organisations committed to the 20 point programme, as the management may consider necessary to be represented at the appropriate level on such committees. There should be full exchange of information so as to enable the committees to func-

tion effectively. Unanimous decisions of these committees should be implemented within a specified period of time as may be indicated in the decisions themselves. These committees would also be responsible for reviewing the implementation of the decisions.

The State Government have also in their letter, dated 1st October 1975 agreed in principle with the guidelines covered by the 10 point programme. இதை நாம் ஒத்துக்கொண்டிருக்கிறோம். Tamil Nadu Electricity Workers' Federation and the Accounts Subordinate Union இவர்களோடு பேசிக்கொண்டிருக்கிறோம். மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தி இந்தத் திட்டத்தை அமலாக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே தங்கமணி:** இந்த 10 அம்சத் திட்டத்தில் உள்ள விசேஷம் என்னவென்றால் இது தனியாக மத்திய அரசு அறிவித்தது அல்ல, எல்லா மாநில அரசுகளையும் கலந்துகொண்டு செய்திருக்கிறார்கள். இதே 10 அம்சத் திட்டத்தில் எல்லா டி.சி.எல். ஒர்க்கர்களையும் மூன்று ஆண்டுகளாகப் பணியில் இருந்தால் போதும் நிரந்தரமாக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் 1976-க்குப் பிறகு யாரும் அப்படி இருக்கமாட்டார்கள் என்று சொன்னார்கள். ஆனால், இந்த பத்து அம்சத் திட்டப்பிரகாரம் செய்தால் 1975 ஆம் ஆண்டு கடைசிக்குள்ளாக அப்படிப்பட்ட நிலைமை ஏற்படுமே, அதைப் பற்றி அமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அது ஆறாவது அம்சம்.

6. Keeping in view the substantial number of workers under various Electricity Boards and Undertakings who are still borne on the nominal muster rolls the system of NMR should not be resorted to in respect of work of a permanent or continuing nature. In all other cases, where NMR workers have been in employment for a period of 3 years or more, all such workers must be regularised in as short a time as possible, in a phased manner. It was strongly felt that all NMR workers should be



paid wages at rates not lower than the lowest rates of wages paid to regular workers of that category and it was agreed that the Minister of Energy and Minister of Labour will jointly communicate these feelings to the Chief Ministers for taking appropriate action on this.

There are no NMRs in the Board. There are only TCLs and there is already a separate scheme initiated to regularise their services in a phased programme. In accordance with this scheme TCLs with 4 years of service as on 31st December 1972 in the first stage and as on 30th April 1974 in the second stage have been absorbed in the regular Work Establishment. Third stage absorption of TCL workers with four years of service as on 31st December 1974 is being processed now.

அடுத்து 7-வது அம்சம்

Overtime work must, as far as possible, be eliminated.

To achieve this, overtime should normally be resorted to only for urgent operational reasons. At the same time, norms of work should be evolved without delay, for various categories of workers. Multiple shift working may be adopted in consultation with the Unions wherever necessary.

இந்தப் ப்ராஜக்டுகளைப் பொறுத்தவரையில் ஓவர்டைம் அலவன்ஸ் கிடையாது. பிறகு எட்டாவது அம்சம்:

8. To enable workers acquire and upgrdae their skills it is necessary to implement the provisions of the Apprentices Act fully.

ஆகவே, இந்த அப்ரண்டிசைப் பொறுத்தவரையிலே நாம் முழுதாக நிறைவேற்றிக் கொண்டு வருகிறோம். திரு. சுப்பையா அவர்கள் கேட்டார்கள். அரிசனங்களுக்கு ஒரு குறிப்பிட்ட சதவீதம் ஒதுக்கப்பட்டதா என்று கேட்டார்கள். மற்ற இலாக்காக்களிலே எப்படியோ என்னிடத்திலே தகவல் இல்லை. ஆனால், இந்தத் துறையைப் பொறுத்தவரையிலே அப்ரண்டிஸ் எந்த சதவீதம் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறோமோ அந்த சதவீதம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மின்சார இலாக்காவில் பல்வேறு பகுதிகளில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் இருக்கிறார்கள், ஆகவே எந்தவிதமான பாதகமும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

9. It should be examined whether long standing disputes cannot be settled as quickly as possible, including settlements outside the Courts.

Many long pending disputes have been settled. For example, the issue of payment of Bonus for the period prior to the advent of Bonus Act which was pending for a very long time has also been solved and talks are being held by the Industrial Relations Adviser, Deputy Chief Engineer and also Chief Engineer (General) wherever necessary to settle the problems between the labour and management.

10. Efforts must be made to extend the public distribution system to power station colonies which may be outside the areas covered by the Public Distribution System.

Co-operative Societies are functioning in all colonies. These Consumer Co-operative Societies are being given assistance by way of shares, loans, accommodation and electricity no nominal charges.

பத்தாவது அம்சத்தைப் பொறுத்தவரையில் நாம் நிறைவேற்றியிருக்கிறோம். மீதமுள்ளவற்றைப் பற்றி நாம் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறோம்.

அடுத்து, இங்கே பல உறுப்பினர்கள் 6 சி.இ. போட்டதைப் பற்றிச் சொன்னார்கள். 18—7—73-க்கு முன்னாலேயே சீப் இஞ்சினியர் (எலெக்ட்ரிசிடி) என்று ஒருவர் இருந்தார். சீப் ஆப்ரேஷன் இஞ்சினியர் என்று ஒருவர், சீப் டிஸ்டிரிப்யூஷன் இஞ்சினியர் என்று ஒருவர், சீப் கன்ஸ்ட்ரக்ஷன் இஞ்சினியர் என்று ஒருவர் ஆக மூன்று பேர்களும், மூன்று பிளஸ் ஒன்று ஆக நான்கு பேர்கள் ஏற்கனவே இருந்தார்கள்.

இப்போது தெர்மல் ஸ்டேஷன்களுக்கு ஒருவரும், பர்ச்சேஸ் அண்ட் ஸ்டோர்ஸ்—ஒருவரும் ஆக 6 பேர்கள் ஆக இருக்கிறார்கள்.

சில உறுப்பினர்கள் கேட்டார்கள். தெர்மல் ஸ்டேஷனுக்கு அனுபவம் இல்லாத ஒருவரைப் போட்டிருக்கிறீர்களே, போடலாமா என்று கேட்டார்கள். ஜெனரல் சூப்பிரண்டெண்டெண்ட் என்று ஏற்கனவே ஒருவர் இருந்தார். எஸ்.இ.-க்கு உயர்வாகவும், சி.இ.-க்கு குறைவாகவும் இருந்தார். இப்போது அவர் நெய்வேலிக்குப் போய்விட்டார். இப்போது திறமையான





ஒருவர்தான் தெர்மல் ஸ்டேஷனில் சி.இ. ஆக நியமிக்கப்பட்டிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சி.இ. (மெக்கானிக்கல்) என்று போடவேண்டுமென்று ஒரு உறுப்பினர் சொன்னார். ஏற்கனவே 6 பேர்கள் போட்டிருக்கிறார்கள் என்பதற்கே அட்டாக் இப்படி இருக்கிறது. இன்னொருவரைப் போட்டால் என்ன சொல்வார்களோ? இருந்தாலும் பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தங்கமணி சில அதிகாரிகளைப் பற்றிச் சொன்னார்கள். திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் சில விவரங்களை எழுதி இலாக்காவிடம் கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள், பெயரைச் சொல்லவில்லையென்று சொன்னார்கள். அவர்கள் சொன்ன கருத்தையெல்லாம் பரிசீலித்துக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்
Protection to Chief Engineers for marginal adjustment
வேண்டுமென்று சொன்னார்கள். அதை இலாக்கா ஒப்புக்கொண்டிருக்கிறது. அதற்கான உத்திரவு பிறப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சீனிவாசன் அவர்கள் பேசும்போது சிமிண்ட் போல் செய்வதற்கு காண்ட்ராக்ட் எடுத்தபோது கட்டிய தொகையைத் திருப்பிக்கொடுக்கவில்லையென்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள். காண்ட்ராக்டை முடிக்காமல் இருந்தால் பெனல்டி போக பாக்கித் தொகையைத் திருப்பிக் கொடுத்துவிடுவார்கள். பத்துப் பேர்களைப் பொறுத்தவரையில் கொடுக்கப்படாமல் இருக்கிறது. அதில் 2 பேர்கள் கோர்ட்டுக்கு போயிருக்கிறார்கள். எட்டு பேர்களைப் பொறுத்தவரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. சாமான்கள் எல்லாம் டி.ஜி.எஸ். அண்ட் டி. ரேட்படிதான் தரமான சரக்குகளைத்தான் வாங்குகிறோம். அதிலே ஒன்றும் தவறு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஸ்ட்ரீட் லைட்டுக்கள்பற்றிச் சொன்னார்கள். நான் அதைத்தான் சொன்னேன், எம்.எல்.ஏ.க்களுக்கு கணக்கு அனுப்பினால் நல்லது என்று. திரு லத்தீப் கூட ரொம்ப கோபமாகப் பேசினார். விளக்கு எரியவில்லை என்று குற்றச்சாட்டு சொன்னபோது சில இடங்களைப்பற்றிய புள்ளிவிவரங்கள் நமக்கு வந்திருக்கின்றன. 245 லைட்டுக்கள் என்றால் அதிலே 212 எரிகிறது என்றெல்லாம் அவர்கள் கணக்கைக் கொடுத்து இருக்கிறார்கள் . . .

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சில பகுதிகளில் லைட் பூராவும் இல்லாமல் இருக்கும். Some times statistics may be misleading. முக்கியமான சில இடங்களில் லைட் இல்லாமல் இருக்கிறது என்பதைத்தான் திரு. லத்தீப் அவர்களும் மற்றவர்களும் சொன்னார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அந்தந்த டி.இ.-க்கள் அந்தந்தப் பகுதிகளில் உள்ள அங்கத்தினர்களுக்கு இதுபற்றிய விவரங்களை அனுப்பினால் திரு. லத்தீப் போன்ற அக்கறையுள்ள உறுப்பினர்கள் அவர்கள் சொல்வது சரியா தவறா என்று பார்க்கலாம். தவறாகக்கூட இருக்கலாம். ஆனால் இங்கே இப்பொழுது ஒரு புள்ளி விவரமாவது கொடுக்கப்படுகிறது. நீங்கள் எந்தப் புள்ளி விவரத்தோடும் பேசவில்லை. நான் இவ்வளவு என்று சொல்கிறேன்.

பில் ப்ரிப்பரேஷனைப்பற்றிச் சொன்னார்கள். தவறாகத் தயார் செய்கிறார்கள் என்று சொன்னார்கள். முதலில் பில் ப்ரிப்ரேஷனுக்கு 4 மாதங்கள் ஆயின. ஆனால் இப்போது 1½ மாதத்திற்குள் தயாரிக்கப்படுகிறது. எனவே, பில்களைக் காலதாமதம் இல்லாமல் கொடுப்பதற்கான நடவடிக்கை இந்த அரசாங்கத்தின் மூலம் எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** என்ன போடுகிறார்கள் என்றால், முதலில் இத்தனை யூனிட்டுக்களுக்கு ஃப்ரீ ஆகயிருக்கிறது என்று சொல்லி, கடைசியில் மொத்தமாகப் போடுகிறார்கள். இதனால் மொத்தம் எத்தனை யூனிட்டுகளுக்கு சார்ஜ் என்று புரியவில்லை.

**திரு. எம். ஏ. லத்தீப்:** தலைவரவர்களே, யூனிட்டுக்கு 45 பைசா என்றால் 8 ரூபாய் 55 பைசா வருகிறது என்றால், 14 ரூபாய் 83 பைசா என்று போட்டிருக்கிறார்கள். மிச்சத்திற்கு என்ன விவரம் என்று தெரியவில்லை. பேயர்களுக்கு அந்த விவரம் தெரியவில்லை. எனவே, அந்த விவரமும் சேர்க்கப்பட வேண்டுமென்று உத்தரவு அனுப்பினால் பொதுஜனங்கள் அதிருப்தி அடைய மாட்டார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு உறுப்பினர் தங்கமணி அவர்கள் சொன்னது, பில்லில் விவரம் வேண்டுமென்று கேட்டார்கள். ஆனால் அதே ஒர்க்கர்ஸ் யூனியனோடு பேச்சுவார்த்தைகள் நடத்தி, சிம்ப்ளிஃபை பண்ண



வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார்கள். அவர் விரும்பினால் எல்லா டீடெயில்களையும் கொடுக்க வேண்டுமென்று சொல்லலாம். ஏற்கனவே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில்தான் நடைபெறுகிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறுவதை மனத்தில் கொள்வோம்.

நான் தங்கமணி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன், நீங்கள் இதைத் தொழிலாளர்களிடத்திலே சொல்ல வேண்டும், விவரங்கள் இல்லாமல் இப்படித் தயாரிக்கிறார்கள் என்று சொல்கிறார்கள், என்று இவர்கள் சொன்னால் அதற்கு ஒரு எஃபெக்ட்' இருக்கும் என்று நான் கருதுகிறேன். அதை அவர்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** தலைவரவர்களே, இந்த பிரிப்பரேஷன் செய்வதில் 'அலவ்ட் யூனிட்ஸ்' எவ்வளவு என்று போடும்பொழுது, 'எக்சஸ் யூனிட்டை' அவர்கள் போடும் பொழுது என்ன ஆகிறது என்றால், டெலிபோன் பில்லுக்கு அடுத்தது எலக்ட்ரிசிட்டி பில் உபயோகத்திற்கு மேல் அதிகப்படி பில் வருகிறது. எனவே, கணக்குப் பார்க்கும்பொழுது ஒழுங்காகக் கணக்குப் பார்த்து பில்போட வேண்டும். ஏனென்றால் வரும்பொழுது அதிகமாக இருக்கிறது. இந்த வித்தியாசத்தைத் தவிர்க்க வேண்டுமென்றுதான் கேட்டுக் கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** சார். .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் முடித்து விடலாம்.

DR. H. V. HANDE: Before the Hon. Minister finds out the relevant paper, I would also like to add a few words. This is a very important problem. A number of members have felt that the Bills are not properly made. So, may I suggest that you have a cell to deal with this particular point. Any person who wants to complain about the bills, like the Telephones, you have a cell, so that you may, cutting across all the red tape, rectify the defects in the bills.

அதுமாதிரி செல் வைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறதா? அதுமாதிரி டெலிபோன் டிபார்ட்மெண்டில் இருக்கிறது. அதுமாதிரி வைத்தால் பிரச்னை இருக்காது.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அதுபோன்ற குறைபாடுகளை மாண்புமிகு உறுப்பினர்கள் என்னிடத்திலேகூடச் சொல்லலாம், நான்கூட அதைப் பரிசிலனை செய்து நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறேன் you can communicate to my office. I will certainly look into it. அதேமாதிரி சீஃப் எஞ்சினியருக்குச் சொல்லலாம். மின்சாரம் அத்தியாவசியத் தேவையாக இருக்கிறது, எல்லோருக்கும் தேவையாக இருக்கிறது. எனவே, சிறிய விஷயம் கூடப் பெரிதாகச் சொல்லப்படுகிறது. அதனால்தான் சங்கடங்கள் ஏற்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் சொன்னது சின்ன விஷயம்தான். அதைப் பெரிதாக்குகின்ற நிலைமை ஏற்படுகிறது.

அடுத்து, பட்ஜெட் எஸ்டிமேட், கேப்பிடல் அவுட்லேயைப்பற்றி ஹாண்டே அவர்கள் பேசினார்கள். 48 கோடி ரூபாய் என்று போட்டு, இப்பொழுது குறைந்து விட்டது என்று சொன்னார்கள். ஆனால் நிலைமை என்ன? The Planning Commission approved only for Rs. 29 crores. ஆனால் நாம் வற்புறுத்தி 34 கோடியாகச் செய்திருக்கிறோம்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** சுமாராக 39 கோடி ரூபாய்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே சாதிக் பாட்சா:** 34 கோடி தான் செய்திருக்கிறோம். 13 கோடி இழப்பை எப்படி ஈடு செய்தார்கள் என்றால் 4 கோடி அரசாங்கத்தின் மூலமும், 4 கோடி ரூரல் எலக்ட்ரிக் சப்ளை கார்ப்பரேஷன் லோன் மூலமும், 3 கோடி இன்கிரீஸ்ட் டாரிஃப் மூலமும், 2 கோடி அடிஷனல் செக்யூரிட்டி டெபாசிட் மூலமும் சரிக்கட்டப்பட்டிருக்கிறது. பொதுவாக இந்த மின்சார வாரியம் திறமையாகச் செயல்படுவதற்கு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

Dr. H. V. Hande rose.

Mr. DEPUTY SPEAKER: You can have clarifications at the end. Already so many clarifications and interventions have been allowed.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** இது முக்கியமான பாய்ண்ட். பே ரிவிஷன் பற்றி.

Because hon. Member Thiru J. James was also asking. A number of people were asking about pay revision.

இந்த பே ரிவிஷன் பற்றி ஜூன் மாதத்தில். I am told that the Hon. Minister met the Central Minister and there was some discussion



அதற்கு பிறகு ஸ்டேட் கவர்ன்மென்ட் அவர்களைக் கேட்டிருக்
கிறீர்களாம், பணம் கொடுக்கத் தயாரா என்று கேட்டிருக்கிறீர்கள்,
அதற்கு நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்லியிருக்
கிறார்களாம். அந்த அடிப்படையில் மத்திய அரசு சொல்லிய பிறகு
பே ரிவிஷனைப் பொறுத்தவரையில் நீங்கள் என்ன முடிவு
எடுத்திருக்கிறீர்கள்? ஜூன் மாதம் முடிந்தது இப்பொழுது
நவம்பர் மாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த
5 மாதங்களில் என்ன முடிவு எடுத்திருக்கிறீர்கள்? பே ரிவிஷனைப்
பற்றி இந்த மன்றத்திற்கு என்ன சொல்ல வேண்டுமென்று
கருதுகிறீர்கள்?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** பே ரிவிஷனைப் பொறுத்தவரையில் ஏற்கனவே இன்டரிம் ரிலீஃப் கொடுத்திருக்கிறோம். ஆகவேதான் தொழிலாளர்கள் அமைதியாக இருக்கிறார்கள்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Interim relief is only regarding D.A. So far as wages are concerned, there is nothing done.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** வேஜ் ரிவிஷனைப் பொறுத்தவரையில் பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருக்கிறது. சீக்கிரம் முடிந்து விடும்; மின்சார வாரியத் தலைவருக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. 1—12—1975-க்குள் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இன்னும் பல்வேறு விஷயங்கள் இருக்கின்றன. ஆனால் அவைகளைச் சொல்வதற்கு நேரம் இல்லை. எல்லாக் குற்றச் சாட்டுகளுக்கும் பதில் இருக்கிறது. எல்லோரும் பசியோடு இருக்கிறார்கள். அதிகமாகக் காக்க வைப்பது நல்லது அல்ல என்பதால் இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. பேரவையை நாள் குறிப்பிடாமல் ஒத்தி வைப்பது குறித்த தீர்மானத்தை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் முன்மொழிவார்கள்.

## (7) அரசினர் தீர்மானம்

### பேரவை நாள் குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்படுவது குறித்து

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அலுவல் ஆய்வுக் குழுவில் தீர்மானித்த பேரவையின் அலுவல்கள் இன்றோடு முடிவடைவதால்

[டாக்டர் மு. கருணாநிதி] [1975 நவம்பர் 12

"பேரவை நாள் குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்பட வேண்டும்"

**என்ற தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.**

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** இது ஒரு மோஷன் மாதிரிதான். This is a resolution. Before tha t is put to vote, நெக்ஸ்ட் டைம் டிசம்பரிலா அல்லது எப்பொழுது கூட்டுவதாக இருக்கிறது? அதுசம்பந்தமாக அரசாங்கத்தின் கருத்து என்ன? ஒரு குழப்பம் ஏற்பட்டு அதனால் இந்த ரெசல்யூஷன் முறை வந்தது. அந்த விவரத்தைத் தெரிந்துக்கொள்ள வேண்டுமென்று கேட்கிறேன். மீண்டும் கூட்டுவதற்கான வாய்ப்பு இருக்கிறதா? முதலமைச்சருக்கு அது பற்றித் தெரிந்தால், அதைச் சொன்னால் அதற்கேற்றபடி இந்த மோஷனுக்கு ஓட்டு போடலாமா வேண்டாமா என்பதைப் பற்றி தீர்மானிக்கலாம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அதைப்பற்றிய விவரம் சொல்லலாம் என்றுதான் நேற்று வானொலியில் ஆவலோடு எதிர்பார்த்தேன். எதுவுமே கிடைக்கவில்லை.

## 2. தகவல் கோரல்.

### (ஆ) ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் எவருக்கும் கட்டாய ஓய்வு அளிக்கப்பட்டிருக்கிறதா என்பது குறித்து

THIRU K. T. K. TANGAMANI : Because today is the last day, some information is being spread in the lobby that one of the I.A.S. Officers has been compulsorily retired. This is the first time in Tamil Nadu that an I.A.S. Officer is being retired. I want to know whether there is any truth in that rumour.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** பெயரைச் சொல்லுங்கள்.

**திரு. கே. டி. கே தங்கமணி:** நம்பியார் என்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி ரிடையர் செய்யப்பட்டிருக்கிறார் என்று லாபியில் பேசப்படுகிறது, அது உண்மையா?

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** இன்னும் வேறு எதாவது ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை ரிடையர் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறார்களா? இதோடு சேர்த்து. இந்த ஒரு ஐ.ஏ.எஸ் அதிகாரி மட்டும்தானா? வேறு ஐ.ஏ.எஸ். அதிகாரிகள்மீதும் கை வைப்பதற்கு முடிவு செய்திருக்கிறதா என்பதை விளக்கமாகச் சொன்னால் நன்றாக இருக்கும்.



1975 நவம்பர் 12]

**திருமதி த. ந. அனந்தநாயகி:** வானொலியில் எதிர்பார்த்தேன் என்று சொல்கிறாரே. எதற்காக வானொலியை எதிர்பார்க்க வேண்டும்? ஜனவரியில் சட்டசபையைக் கூட்டுகிறீர்களா, கவர்னர்ஸ் அட்ரஸ் இருக்கிறதா என்பதற்காகக் கேட்கிறார்கள். ஐந்து வருஷம் முடிகிறது பிப்ரவரியோடு.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** வானொலியில் பிரதமர் பேசுகிறார் என்று நேற்று காலையிலிருந்தே பலமுறை, ஏழெட்டு தடவைகள் சொன்னார்கள். ஏதோ புதிய விஷயங்கள் வரும் என்று எதிர்பார்த்தேன். தேர்தல் பற்றி இருக்கும் என்று எதிர் பார்த்தேன். ஆனால் விஷயம் கிடைக்கவில்லை. எனவே, அந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாது.

திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் கேட்டது உண்மைதான், அவர்கள் கேட்ட கேள்வி, தெரிந்து கொள்ள வேண்டுமென்று விரும்பியது, உண்மை தான்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** நான் கேட்ட விஷயம் . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** எத்தனை பேர் என்று கேட்டார்கள். பொதுவாக மத்திய அரசு எடுத்திருக்கின்ற முடிவுகளின்படி, நம்முடைய மாநில அரசு அதிகாரிகள், இங்கேயுள்ள ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எஃப்.எஸ். அதிகாரிகள் இதற்கென்று இருக்கின்ற குழுக்கள் பரிசீலித்து மாநில அரசு எடுக்க வேண்டிய முடிவுகளை எடுக்கிறோம். மத்திய அரசு எடுக்க வேண்டிய முடிவுகளுக்குப் பரிந்துரைகள் செய்கிறார்கள். அவர்கள் பரிசீலித்து ஒப்புதல் வழங்குகிறார்கள்.

## (7) அரசினர் தீர்மானம்—தொடர்ச்சி

### பேரவை நாள் குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்படுவது குறித்து—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி :

"பேரவை நாள் குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு **நிறைவேற்றப் பட்டது.**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை நாள் குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்படுகிறது.

பின்னர் பேரவை பிற்பகல் 2-29 மணி அளவில் நாள் குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டது.

## (8) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

226. Notification issued in G.O. Ms. No. 1449, Home, dated the 13th August 1975 in regard to amendment to Rule 189 E of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133(3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

227. Notification issued in G.O. Ms. No. 844, Home, dated the 14th May 1975 in regard to certain amendments to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133(3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

### B. Reports, Notifications and other Papers

134. Return of Assets submitted to the House by the Hon Members of the Legislative Assembly (*vide*-names below).

As on 31st March 1971.

1 Thiru T. P. Alagamuthu.
2. Thiru V. Rajagopal.
3. Thiru K. Periasamy.

135. Return of Assets submitted to the House by the Hon Members of the Legislative Assembly (*vide* names below) :

As on 31st March 1972.

1. Thiru T. P. Alagamuthu.
2. Thiru V. Rajagopal.
3. Thiru K. Periasamy.





136. Return of Assets submitted to the House by the Hon. Members of the Legislative Assembly (*vide*, names below) :

As on 31st March 1973.

1. Thiru T. P. Alagamuthu.
2. Thiru V. Rajagopal.
3. Thiru N. Krishnan.
4. Thiru P. R. Shanmugam.
5. Thiru K. Periasamy.
6. Thiru N. Muthuvel.

137. Return of Assets submitted to the House by the Hon. Members of the Legislative Assembly (*vide* names below) :

As on 31st March 1974.

1. Thiru T. P. Alagamuthu.
2. Thiru A. Arumugam.
3. Thiru M. Surulivel.
4. Thiru N. Dharmalingam.
5. Thiru M. V. Narayanasami.
6. Pulavar C. Palanisamy.
7. Thiru K. Periasamy.
8. Thiru N. Manickam.
9. Thiru R. Manickavasakam.
10. Thiru A. R. Marimuthu.
11. Thiru V. Muthu.
12. Thiru N. Muthuvel.
13. Thiru K. K. Muthiah.
14. Thiru K. Ranganathan.
15. Thiru C. G. Viswanathan (Includes return of Assets as on 31st March 1975 also).
16. Thirumathi Jothi Venkatachellum.

138. Return of Assets submitted to the House by the Hon. Speaker, Hon. Ministers and Hon. Members of the Legislative Assembly. (*vide* names below):

As on 31st March 1975.

1. HON. PULAVAR K. Govindan, Speaker.

2. HON. DR. V. R. Nedunchezhiyan, Minister for Education and Tourism.

3. HON. THIRU K. Anbazhagan, Minister for Health.

4. HON. THIRU P. U. Shanmugam, Minister for Public Works.

5. HON. THIRU S. J. Sadiq Pasha, Minister for Industries.

6. HON. THIRU C. V. M. Annamalai, Minister for Social Welfare.

7. HON. THIRU O. P. Raman, Minister for Commercial Taxes.

8. HON. THIRU M. Kannappan, Minister for Religious Endowments.

*Members.*

1. THIRU T. P. Alagamuthu.
2. THIRU S. Alagu Thevar.
3. THIRU A. Arumugam.
4. THIRU C. Arumugam.
5. THIRU V. Rajagopal.
6. THIRU P. Ettiappan.
7. THIRU G. R. Edmund.
8. THIRU J. Karunainathan.
9. THIRU K. Kamatchi.
10. THIRU K. S. Kothandaramiah.
11. THIRU V. C. Govindaswamy.
12. THIRU R. Govindarajan.
13. THIRU S. Sahadevan.
14. THIRU S. Sadasivam.
15. THIRU M. Surulivel.
16. THIRU V. Sellathurai.
17. THIRU A. R. Subbiah.



18. THIRU K. T. K. Thangamani.
19. THIRU A. P. Dharmalingam.
20. THIRU N. Dharmalingam.
21. THIRU E. K. Duraisamy.
22. THIRU Durai Murugan.
23. THIRU A. M. T. Nachiappan.
24. PULAVAR C. Palanisamy.
25. THIRU K. Periasamy.
26. THIRU T. Ponnumalai.
27. THIRU K. A. Mathialagan.
28. THIRU N. Manickam.
29. THIRU A. R. Marimuthu.
30. THIRU R. Manickavasakam.
31. THIRU V. Muthu.
32. THIRU P. S. Muthuselvan.
33. THIRU N. Muthuvel.
34. THIRU K. K. Muthiah.
35. THIRU M. Muthiah.
36. THIRU A. Muniyandi.
37. THIRU E. Ramaswamy.
38. THIRU V. K. Ramarasan.
39. THIRU A. M. Raja.
40. THIRU K. Vezhavendan.

139. Report of the Committee on Public Accounts on the Excesses Over Voted Grants and Charged Appropriations for the year 1971–72.

140. Report of the Hon. Thiru Justice T. Ramaprasada Rao, Commission of Inquiry, appointed to inquire into affairs concerning disposal of rice by Thanjavur Co-operative Marketing Federation.

141. Reply of the department with reference to Recommendation No. 26(i) made by the Public Accounts Committee in its Third Report (1971–72) on the Appropriation Accounts of the State of Tamil Nadu for the year 1968-69 and Audit Report, 1970.

இணைப்பு-I

[450-ம் பக்கத்திலுள்ள வெளிக் குறியிட்ட வினா (326) க்கான விடையைக் காண்க]

ENFORCEMENT OF WORK DONE BY THE FLYING SQUAD, MADURAI ZONE FROM THE QUARTER ENDING 30TH JUNE 1973 TO JANUARY 1975.

| Serial number and nature of irregularities. | Number of irregularities for the quarter ending. | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 30th June 1973. | 30th September 1973. | 31st December 1973. | 31st March 1974. | 30th June 1974. | 30th September 1974. | 31st December 1974. | January 1975. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1. Total number of vehicles checked. | 2,577 | 3,937 | 5,587 | 1,343 | 2,709 | 239 | 204 | 68 |
| 2. Number of cases detected for non-payment of motor vehicles tax. | 40 | 123 | 163 | 45 | 31 | 25 | 7 | 10 |
| | Rs. | | | | | | | |
| 3. Total amount involved in the cases of non-payment of tax/T.P.G. detected. | 1,30,021·40 | 2,24,573·60 | 1,57,588·85 | 85,854·40 | 41,108·25 | — | — | .. |
| | Rs. | | | | | | | |
| 4. Total amount of tax collected after detection. | 27,235·45 | 54,057·90 | — | 3,473·95 | 15,736·00 | — | — | — |
| 5. Number of cases overloaded in stage carriages. | 22 | 48 | 43 | 27 | 31 | 15 | 14 | 9 |
| 6. Number of cases overloaded by goods' vehicles (both by passengers and goods). | 19 | 82 | 97 | 21 | 29 | 3 | 8 | .. |
| 7. Number of cases of over-speeding booked. | 10 | 37 | 41 | 45 | 21 | .. | 9 | .. |
| 8. Number of illicit taxis booked. | 37 | 16 | 13 | 2 | 3 | 3 | 2 | .. |
| 9. Number of omni buses booked for plying on stage carriages. | 2 | 8 | 10 | 6 | 5 | .. | .. | .. |
| 10. Number of cases in which under T.P.G. Act collected from other state vehicles not coming under the reciprocal arrangement. | .. | .. | 1 | .. | .. | .. | .. | .. |
| 11. Amount of surcharge collected in the case coming under item 10 above. | .. | .. | 300 | .. | — | .. | .. | .. |
| 12. Number of public carriages impounded for plying without valid permits. | 2 | 23 | 20 | 14 | 1 | 7 | 5 | 10 |
| 13. Number of cases where assistance was rendered in cases of road accidents. | .. | .. | .. | .. | .. | — | .. | .. |
| 14. Total number of other irregularities detected. | 190 | 619 | 588 | 550 | 358 | 182 | 159 | 39 |
| 15. Total number of check reports issued. | 249 | 424 | 417 | 120 | 185 | 57 | .. | .. |

1975 நவம்பர் 12]

## இணைப்பு

**1973 ஜூன் 30-ம் நாளுடன் முடியும் காலாண்டு முதற்கொண்டு 1975 ஜனவரித் திங்கள் வரையில் மதுரை மண்டல பறக்கும் படையால் நிறைவேற்றப்பட்ட சட்ட அமுல் பணி.**

| தொடர் எண்ணும் முறை கேடுகளின் தன்மையும். | காலாண்டு இறுதியில் ஏற்பட்ட முறைகேடுகளின் எண்ணிக்கை. 30-6-1973. | 30-9-1973. | 31-12-1973. | 31-3-1974. | 30-6-1974. | 30-9-1974. | 31-12-1974. | ஜனவரி 1975. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 சோதனையிடப்பட்ட வாகனங்களின் மொத்த எண்ணிக்கை. | 2,577 | 3,937 | 5,587 | 1,343 | 2,709 | 239 | 204 | 68 |
| 2 மோட்டார் வண்டி வரி செலுத்தாதது கண்டுபிடிக்கப்பட்ட நேர்வுகளின் எண்ணிக்கை. | 40 | 123 | 163 | 45 | 31 | 25 | 7 | .. |
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | | | |
| 3 வரி செலுத்தாதது கண்டுபிடிக்கப்பட்ட பயணிகள் சரக்குப் போக்குவரத்து சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்டுள்ள முறை கேடுகள் கண்டுபிடிக்கப்பட்ட நேர்வுகளில் வசூலிக்கப்பட்ட மொத்தத் தொகை. | 1,30,021·40 | 2,24,573·60 | 1,57,588·85 | 85,854·40 | 41,108·25 | .. | .. | .. |
| 4 கண்டுபிடிக்கப்பட்ட பின்பு வசூலிக்கப்பட்ட மொத்த வரித் தொகை. | 27,235·45 | 54,057.90 | .. | 3,473.95 | 15,736.00 | .. | .. | .. |
| 5 பயணிப் பேருந்துகளில் மிகையான எண்ணிக்கையில் பயணிகள் ஏற்றப்பட்ட நேர்வுகளின் எண்ணிக்கை, | 22 | 48 | 43 | 27 | 31 | 15 | 14 | 9 |
| 6 சரக்கு வண்டிகள் நிர்ணயிக்கப்பட்ட அளவுக்கு மீறிய சுமை ஏற்றிய நேர்வுகள் (பயணிகள் சரக்கு வண்டிகள் உட்பட.) | 19 | 82 | 97 | 21 | 29 | 3 | 8 | .. |
| 7 அதிக வேகத்தில் சென்ற வண்டிகளின் எண்ணிக்கை. | 10 | 37 | 41 | 45 | 21 | .. | 9 | .. |
| உரிமம் இல்லாமல் ஓட்டும் வாடகை வண்டிகள் எண்ணிக்கை. | 37 | 16 | 13 | 2 | 3 | 3 | 2 | .. |
| பயணிப் பேருந்துகளாக ஓடும் வண்டிகளின் எண்ணிக்கை. | 2 | 8 | 10 | 6 | 5 | .. | .. | .. |

## இணைப்பு

காலாண்டு இறுதியில் ஏற்பட்ட முறைகேடுகளின் எண்ணிக்கை.

| தொடர் எண்ணும் முறை கேடுகளின் தன்மையும். | 30-6-1973 | 30-9-1973 | 31-12-1973 | 31-3-1974 | 30-6-1974 | 30-9-1974 | 31-12-1974 | ஜனவரி 1975 |
|---|---|---|---|---|---|---|---|---|
| 10 ஒரு மாநிலத்திற்கும் இன்னொரு மாநிலத்திற்குமான ஏற்பாட்டின் கீழ் வராத ஏனைய மாநில வண்டிகளிலிருந்து பயணிகள் சரக்குப் போக்குவரத்துச் சட்டத்தின்கீழ் வசூலிக்கப்பட்ட நேர்வுகளின் எண்ணிக்கை. | .. | .. | 1 | .. | .. | .. | .. | .. |
| 11 மேற்சொன்ன 10-வது இனத்தின்கீழ் வரும் நேர்வுகளில் வசூலிக்கப்பட்ட சர்சார்ஜ் தொகை. | .. | .. | 300 | .. | .. | .. | .. | .. |
| 12 செல்திறனுள்ள உரிமம் இன்றி ஓட்டியதற்காக கைப்பற்றி வைக்கப்பட்ட வாடகை லாரிகளின் எண்ணிக்கை. | 2 | 23 | 20 | 14 | 1 | 7 | 5 | 10 |
| 13 சாலை விபத்து நேர்வுகளில் உதவித் தொகை அளிக்கப்பட்ட நேர்வுகளின் எண்ணிக்கை. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 14 கண்டுபிடிக்கப்பட்ட ஏனைய முறை கேடுகளின் மொத்த எண்ணிக்கை. | 390 | 619 | 588 | 550 | 358 | 182 | 159 | 39 |
| 15 சரிபார்க்கப்பட்டு வெளியிடப்பட்ட அறிக்கைகளின் மொத்த எண்ணிக்கை. | 249 | 424 | 417 | 120 | 181 | 57 | .. | |

## இணைப்பு II.

[456-ம் பக்கத்திலுள்ள வெள்ளிக்குறியிட்ட வினா 335-க்கான விடையைக்காண்க.]

**கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம் :**

(அ) எடுத்துக்கொள்ளப்பட்ட வேலைகள்—

| வரிசை எண்ணும், வேலையின் பெயரும். | சாலை நீளம் | தற்போதைய நிலை. |
|---|---|---|
| 1 பெரியகோகு பாளையத்திலிருந்து சுண்ணாம்புகுளம் வரை சாலை அமைத்தல். | 2.5 | வேலை முடிக்கப் பட்டுவிட்டது. |
| 2 கே. எஸ். சாலையிலிருந்து நெமலூர் வரை சாலை அமைத்தல். | 2·0 | ,, ,, |
| 3 தண்டலத்திலிருந்து பூவாலை வரை சாலை அமைத்தல். | 3.0 | ,, ,, |
| 4 மேல்காலனியிலிருந்து ரெகோம் பாளையம் வரை சாலை அமைத்தல். | 3.0 | வேலை நடந்து வருகின்றது. |
| 5 மாவடியம் காண்டிகையிலிருந்து தண்டாலசேரி சிருபுலாபேட்டை வரை சாலை அமைத்தல். | 0.3 | ,, ,, |
| 6 செடில்பாக்கத்திலிருந்து ரோசா நகரம் வரை சாலை அமைத்தல். | 3.0 | வேலை முடிக்கப் பட்டுவிட்டது. |
| 7 ஜி. எம். சாலையிலிருந்து பண்ணூர் வரை சாலை அமைத்தல். | 2.0 | வேலை நடந்து வருகிறது. |
| 8 சின்னபூமாசகுளத்திலிருந்து கவராபேட்டை வரை சாலை அமைத்தல். | 1.5 | வேலை முடிக்கப் பட்டுவிட்டது. |
| 9 சந்திராபுரத்திலிருந்து நெல்வாய் வரை சாலை அமைத்தல். | 1.0 | ,, ,, |
| 10 கே. எஸ். சாலையிலிருந்து கீமலூர் வரை சாலை அமைத்தல். | 1.5 | ,, ,, |
| 11 புதுப்பாளையத்திலிருந்து மங்கலம் வரை சாலை அமைத்தல். | 3.0 | ,, ,, |
| 12 ஜி. எம். சாலையிலிருந்து மேல் பாகம் வரை சாலை அமைத்தல். | 1.5 | ,, ,, |

(ஆ) எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய வேலைகள்—

| வரிசை எண்ணும், வேலையின் பெயரும். | சாலை நீளம் | தற்போதைய நிலை |
|---|---|---|
| 1 அப்பாவரம் ஜி. என். டி. சாலையிலிருந்து மங்காவரம் வரை சாலை அமைத்தல். | 3.0 | வேலை துவக்கப் படவில்லை. |
| 2 வாணியமல்லியிலிருந்து கே. எஸ். சாலை வரை சாலை அமைத்தல். | 3.0 | ,, ,, |
| 3. படுகுதுறையிலிருந்து ஒப்புசமுத்திரம் சாலை வரை சாலைமைத்தல். | 2.0 | வேலை துவக்கப்பட வில்லை. |
| 4 பல்கிரி கண்டிகையிலிருந்து ஈடார் வரை சாலை அமைத்தல். | 1.0 | வேலை ஆரம்பிக்கப படவில்லை. |
| 5 சூராபூண்டி காலனியிருந்து சூராபூண்டி சாலை வரை சாலை அமைத்தல். | 0·5 | ,, ,, |
| 6 ஈடூர் காலனியிலிருந்து ஈடூர் சாலை வரை சாலை அமைத்தல். | 0·4 | ,, ,, |
| 7 கே. எஸ். சாலையிலிருந்து அமிர்த மங்கலம் வரை சாலை அமைத்தல். | 2·0 | ,, ,, |
| 8 ஜி. என். டி. சாலையிலிருந்து வெள்ளைமேடு வரை சாலை அமைத்தல். | 2·0 | ,, ,, |
| 9 முல்லைவயல்மேடு சாலையிலிருந்து சுண்ணாம்புக்குளம் வரை சாலை அமைத்தல். | 1·0 | ,, ,, |
| 10 எருக்வை கண்டிகையிலிருந்து காரணி வரை சாலை அமைத்தல் | 5·0 | வேலை எடுத்துக் கொள்ளப்படவில்லை |
| 11 தாத்தையூர்-கண்டிகையிலிருந்து சிருவடா வரை சாலை அமைத்தல். | 0·6 | வேலை ஆரம்பிக்கப் படவில்லை. |
| 12 கன்னிகோயில் மேட்டிலிருந்து பெரிய ஒபளாபுரம் வரை சாலை அமைத்தல். | 2·0 | ,, ,, |
| 13 ஆரமணியிலிருந்து தண்டலம் சத்தியவேடு சாலை வரை சாலை அமைத்தல். | 6·0 | ,, ,, |
| 14 கே. எஸ். சாலையிலிருந்து எருக வாய் வரை சாலை அமைத்தல். | 5·0 | வேலை எடுத்துக் கொள்ளப்பட வில்லை. |
| 15 பாப்பன்குப்பத்திலிருந்து கே. எஸ். ரோடு (வழி) பில்லாகுப்பம் வரை சாலை அமைத்தல். | 4·0 | ,, ,, |
| 16 சிலைவெட்டி கண்டிகையிலிருந்து ஒப்பசமுத்திரம் அரிஜன் காலனி சாலை வரை சாலை அமைத்தல். | 0·5 | வேலை ஆரம்பிக்கப்பட வில்லை. |

**எல்லபுரம் ஊராட்சி ஒன்றியம் :**

(அ) எடுத்துக்கொள்ளப்பட்ட வேலைகள்—

| வரிசை எண்ணும், வேலையின் பெயரும். | சாலை நீளம். | தற்போதைய நிலை. |
|---|---|---|
| 1 கடநல்லூரிலிருந்து மஞ்சக்காரனை வரை சாலை அமைத்தல். | 2·0 | வேலை நடந்து வருகிறது. |
| 2 வி. எஸ். சாலையிலிருந்து சின்ன நாங்கல் வரை சாலை அமைத்தல். | 3·0 | ஷை |

(ஆ) எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய வேலைகள்—

| | | |
|---|---|---|
| 1 மகரல்கோமகன் கிட்டிலிருந்து மாளியல்மேட்டு காலனி வரை சாலை அமைத்தல். | 1·0 | வேலை ஆரம்பிக்கப் படவில்லை. |
| 2 கே. பி. பி. சாலையிலிருந்து ஒட்ட கண்டிகை வரை சாலை அமைத்தல். | 0·6 | ஷை |
| 3 கே. பி. பி. சாலையிலிருந்து செஸ்டாபுரம் வரை சாலை அமைத்தல். | 0·6 | ஷை |
| 4 பி. பி. சாலையிலிருந்து அமித நல்லூர் வரை சாலை அமைத்தல். | 5·0 | வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட வில்லை. |
| 5 அனதான்காகாவாக்கத்திலிருந்து கே. பி. பி. சாலை வரை சாலை அமைத்தல். | 4·0 | ஷை |

### *How to use the index.*

The index is arranged alphabetically. The main headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every main heading including various names, entries pertaining to proceedings other than questions are indicated by printing immediately after the subject-matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading 'Bill(s)'.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said main headings, i.e., 'Committee(s)', 'Council(s)', 'Corporation(s)', etc.

Various subjects like Schools, Colleges, Conferences, Ports, Temples and similar other broad subjects are shown in alphabetical order under these very main headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the main heading "Papers laid on the Table".

Rulings and observations from the Chair are indexed under the main heading "Chair".

A list of abbreviations used in the index is given below:—

| | | |
|---|---|---|
| A.M./Ad. Motion | ... | Adjournment Motion. |
| **Ann.** ... ... | ... | Announcement. |
| **B.O.H.** ... ... | ... | Business of the House. |
| **C.A.** ... ... | ... | Calling Attention to a matter of urgent public importance. |
| **C.A. (St.)** ... | ... | Calling Attention Statement. |
| **Consid.** ... ... | ... | Consideration stage of a Bill. This stage includes—<br>(i) Motion to refer to Select/ Joint Select Committee |

(ii) Amendment to refer to Select/Joint Select Committee.

(iii) Amendment to circulate.

(iv) Motion to consider as reported by Select/Joint Select Committee.

(v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc.

| | |
|---|---|
| Consid. Cl. ... ... | Consideration of clauses of a Bill. |
| D.E.E. ... ... ... | Demands for Excess Expenditure. |
| Dis. S.D. or D.S.D. ... | Discussion for Short Duration on an urgent matter of administration. |
| D.S.G. ... ... ... | Demands for Supplementary Grants. |
| G.A. ... ... ... | Governor's Address. |
| G.D. ... ... ... | General Discussion. |
| H.A.H. Dis./H.H.D. | Half-hour Discussion. |
| Int. ... ... ... | Introduction stage of a Bill. |
| L.A. ... ... ... | Legislative Assembly. |
| L.C. ... ... ... | Legislative Council. |
| M. ... ... ... | Motion. |
| P.M. ... ... ... | Privilege Motion. |
| R/Res. ... ... ... | Resolution. |
| St. ... ... ... | Statement. |

# Index to Tamil Nadu Legislative Assembly Debates.

FOURTEENTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

*8th, 10th, 11th and 12th November* 1975.

VOLUME LXXVI—(Nos. 1 to 4).


PAGES

*A*

ACCIDENT(S)—
P.T.C. bus accident in Central Station (St.) .. 371

ALAGARSAMY, THIRU S.—
Agriculturists and Agricultural Labourers Debts Adjustment Bill, 1974 .. .. .. .. 37—38

ANANDANAYAKI, THIRUMATHI T. N.—
Electricity Board Budget, 1975-76, disscusion ... 382, 497—505, 549, 565
Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1975 .. .. .. .. 69—72, 82, 89
I.A.S. Officers, compulsory retirement (Point of Information) .. .. .. .. 567
Location of headquarters of proposed Leather Industries Development Corporation in Madras and the request to the Government of India to allow Leather Export Promotion Council to function with additional responsibility (R) .. .. .. 150—154
Pallavan Transport Corporation bus accident near Madras Central Station, on 11th November 1975 (A.M.) .. .. .. .. .. 472—474
Statement by a Minister under rule 82 pending disposal of the same matter under rule 42 (Point of Order) 372

PAGES

A—*cont.*

ANBAZHAGAN, THIRU K.—

Suspension of Rule 22 (M) .. .. .. 1—2

ARANGANAYAKAM, THIRU S.—

Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1975 .. .. .. .. 72—75, 83

*B*

BALASUNDARAM, THIRU V.—

Atcheeswarar temple, Achirappakkam, renovation 128—129

Electricity Board Budget, 1975-76, discussion .. 357—364

Removal of untouchability Act, number of arrests .. 297—299

BILLS—

Non-official—

Agriculturists and Agricultural Labourers Debts Adjustment Bill, 1974—Consid. lost ... ... 2—38

Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1975—Consid. ... ... ... 38—100

BRIDGE(S)—

Across Chinnakarai .. .. .. .. 279

Across Mahendravadi canal, construction ... ... 454

Across New Kattalai Channel .. .. .. 277

Across Veerachozhan river, construction .. .. 288

Causeway across Rama Nadhi, construction .. 454—455

BUILDINGS—

Multi-storeyed buildings, construction along banks of Cooum river ... ... ... ... ... 440—444

*C*

CALLING ATTENTION—

Closure of Parry Confectionery at Nellikuppam and consequent unemployment .. .. .. 310—312

PAGES

C—*cont.*

CHAIR—

*Announcement*—

Visit of the Delegates of Commonwealth Parliamentary Conference ... ... ... ... 94

Taking up of privilege matter at the next sitting (Ann.) ... ... ... ... ... 457, 458

*Rulings and observations*—

Adjournment Motions—

*Accident caused by a Pallavan Transport Corporation bus near Madras Central Railway Station.*

Consent was withheld on the ground that there was no need to discuss the matter after the explanatory statement given by the Minister. 469—482

*Alleged manhandling and arrest of workers by the Police in Hotel 'Sri Lekha', Madras.*

Consent was withheld on the ground that there was no need to adjourn the other business of the House and discuss the matter after the explanatory statement of the Revenue Minister. 464—469

*Closure of cashew factories in Kanniyakumari district and the resultant hardship to labourers.*

Consent was withheld on the ground that there was no need to adjourn the other business of the House and discuss the matter after the explanatory statement of the Labour Minister. 458—460

*Kidnapping of school boys and girls in many places and the failure of Police to apprehend the culprits and the concern among parents.*

Consent was withheld on the ground that there was no need to adjourn the other business of the House to discuss the matter after the explanatory statement of the Chief Minister. 300—303

*Lay-off and retrenchment in Appakoodal Sakthi Sugar Factory and its consequences.*

Consent was withheld on the ground that there was no need to adjourn the other business of the House and discuss the matter after the explantory statement of the Labour Minister. 307—310

CHAIR—*cont.*

*Rulings and Observations*—cont.

Adjournment Motions—*cont.*

*Lock-out in Sakthi Textiles Limited, Pollachi and the threatened retrenchment of workers.*

Consent was withheld on the ground that there was no need to adjourn the other business of the House and discuss the matter after the explanatory statement of the Minister ... 303—307

*Strike in Mettur Spinning Mills due to the dismissal of certain labourers.*

Consent was withheld on the ground that there was no need to adjourn the other business of the House and discuss the matter after the explanatory statement of the Labour Minister. 461—463

**Debate—**

Asking a Member to be brief in his speech, the Deputy Speaker observed that even in a Court, if arguments were advanced to the extent of irritating the Judge and testing his patience, one might not get justice at all. The Member concerned remarked that if it was a Court, he would have been brief, but he was addressing a Legislative Assembly. Thereupon, the Deputy Speaker observed that the Legislative Assembly was superior to the Courts and hence the Member should cultivate the habit of speaking briefly ... ... 65—66

Members should address the Chair and should not talk among themselves .. .. .. 383

Members should be brief when they intervened in the discussion .. .. .. .. 63

***Interruption—***

When a Member who held the floor was not yielding, another Member could not interrupt 510

***Time-limit—***

The Chair has got the right to fix a time-limit for speeches. ... ... ... ... [illegible]



CHAIR—*cont.*

*Rulings and Observations*—cont.

**Point of Order—**

*Propriety of a Minister making a statement about a subject on which a Member had given notice of an Adjournment Motion.—*

A Member rising on a point of order said that Members were deprived of their rights to speak on a matter over which she had tabled an Adjournment motion by allowing the Minister to make a statement on that matter. The Chair said that no such motion had been received so far from the Member. It was only proper that the Minister had made a statement at the appropriate time and there was nothing wrong in it.

The Chair also remarked that there was no question of taking away any of the rights of the Members and if they wanted to have a discussion on that matter they could raise it the next day by some other means .. .. .. .. .. 372—373

**Privilege Matter—**

On 12th November 1975, the Deputy Speaker announced that a privilege matter given notice of by a Member would be taken up later. The Member concerned pointed out that as under the rules, a matter of privilege should be taken up after the questions and before the list of business for the day was entered upon, he should be permitted to raise it just then and it should not be postponed to another date.

The Deputy Speaker observed that he had to go through the notice and other records to find out whether a prima facie case had been made out. That process would take some time and hence he would take up the matter later after considering all aspects ... ... ... ... 457—458

CHAIR—*cont.*

*Rulings and Observations*—cont.

*Questions and Answers.*—

Chair's direction to Minister to furnish information sought by Member.

On 11th November 1975, a Member wanted to know the names of Members of a particular committee. For that the Minister wanted a separate question to be put as the main question sought to know only whether a committee had been constituted and the reply had been in the affirmative.

On that the Chair remarked that it was not proper on the part of the Minister not to inform the names of Members of the Committee when the question itself related to that committee and desired that the names of members of the Committee should be announced at least the next day. However, before the House adjourned for the day, the Minister announced the names of the members of the Committee ... ... ... 295

*Supplementary questions.*

While putting supplementaries, clarifications should be avoided. If Members went on narrating their experience instead of confining to the point, there would be no time available ... 426

Should be in the form of a question .. .. 408, 421

Should relate to the main question .. .. 436—437

Should consist of only one question .. .. 440

**Speeches**—

Not to be made sitting.

No Member should speak sitting. If any Member wanted to intervene he could do so only with the Chair's permission .. .. .. 517

*Statements*—

Lengthy statements should not be read by Members 211



CHEZHIYAN, THIRU KOVAI—

Agriculturists and Agricultural Labourers Debts Adjustment Bill, 1974 ... ... ... ... 37

Electricity Board Budget, 1975-76, discussion ... 524, 525

CIVIL SUPPLIES—

Essential Commodities, distribution ... ... 287

COLLEGES—

Medical Colleges, recognition ... ... ... 272—273

COMMITTEE(S)—

Assurances, Nineth Report, presentation ... ... 2

Public Accounts—

Report on excess over voted grants and charged appropriations for 1971-72, presentation ... 482

Rules, Eighth Report, presentation ... ... 101

CO-OPERATIVES—

Co-operative Spinning Mills, appointment of Committee 283—285

Co-operative Spinning Mills, constitution of Advisory Committee .. .. .. .. .. 285

CROCODILE—

Farm, setting up .. .. .. .. 123—124

D

DENNIS, THIRU N.—

Government servants, transfer .. .. .. 262—266

High School, Nattalam, additional building .. 269

Medical Colleges, recognition .. .. .. 272—273

DROUGHT—

Relief works in Coimbatore district, allocation ... 287

DURAI MURUGAN, THIRU—

Electricity Board Budget, 1975-76, discussion ... 351—352

Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1975 .. .. .. 85—94

PAGES

D—*cont.*

DURAISAMI, THIRU S.—

Bridge across Chinnakarai ... ... ... ... 279

Drought relief works in Coimbatore district, allocation .. .. .. .. .. 287

E.S.I. scheme, in Thiruppur Government Hospital, increase in bed strength .. .. .. 448

E

EDMUND, THIRU G. R.—

Delay in answering short notice questions (Point of Information) .. .. .. .... .. 411

Pallavan Transport Corporation, bus accident, Central Station near Madras on 11th November 1975 (A.M.) .. .. .. .. .. 470—472

EDUCATION—

B.E. Part-time Course—Selection of students .. 117—118

Parents Teachers Association, Constitution .. 267—269

ELECTRICITY BOARD—

Discussion on Annual Financial Statement for 1975-76. 175—222, 312—370, 374—395, 483—565

ELEPHANTS—

Auction at Theppakkadu .. .. .. 122—123

EMPLOYMENT—

Minimum age, enhancement ... ... ... 447

EXHIBITIONS—

Permanent Fair for Madras City, setting up ... ... 270—272

EX-SERVICEMEN.

Operation of Lorry service ... ... ... 448—449

EYE CAMP—

Number of persons received treatment ... ... 111—113

PAGES

F

FACTORIES—

Closure of Parry Confectionary at Nellikuppam and consequent unemployment (C.A.) ... ... 310—312

FISHERIES—

Fisheries Development Corporation, purchase of fishing boats ... ... ... ... 451—452

Punnakkayal coast, conversion into fishing harbour ... 452—453

FOOD—

Adulteration cases, formation of separate police force 418—426

FOODGRAINS—

Rice, illicit movement through Railways ... 434—436

G

GANAPATHY, THIRU N.—

Rules Committee, Eighth Report, presentation ... 131

GANESAN, THIRU L.—

Eye camp scheme, number of persons received treatment ... ... ... ... ... 111

GANESAN, THIRU S—

Bridge across Veerachozhan river, construction ... 288

H

HANDE, DR. H. V.—

Adjournment of the House sine die (M) ... ... 566

Attack and arrest of workers by police in Srileka Hotel, Madras (A.M.) ... ... ... 464—466

Electricity Board Budget, 1975—76, discussion ... 176—181, 182, 183, 184, 185, 186, 187, 386, 387, 549, 550, 556, 563, 564, 565

H—*cont.*


HANDE, Dr. H. V.—*cont.*

Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1975 (Point of Order) ... 67, 94

I.A.S. Officers, Compulsory retirement (Point of Information) ... ... ... ... 566—567

Location of headquarters of proposed Leather Industries Development Corporation in Madras and the request to the Government of India to allow leather Export Promotion Council continue to function with additional responsibility (R) ... 147—150

Physically Handicapped, training schemes in Gummudipoondi and Ellapuram Blocks ... 453

HANDLOOMS—

Exhibition at Tirunelveli, fire accident ... ... 285—287

HARIJAN WELFARE—

District Office, Salem, shifting ... ... ... 129

Fund for 1973-74, allotment to Tirunelveli District ... 130

Harijan Colony, Annavaram, drinking water ... 130—131

Harijan hostels, construction in Thanjavur district ... 296—297

Removal of Untouchability Act, number of arrests ... 297—299

HOSPITALS AND DISPENSARIES—

E.S.I. Hospital at Mettupalayam, construction of building ... ... ... ... ... ... 447

E.S.I. Scheme in Thiruppur Government Hospital, increase in bed strength ... ... ... ... 448

General Hospital, Madras, incentives for blood donation ... ... ... ... ... ... 412—417

Hospital at Pathirivedu, Matharpakkam, construction of new building ... ... ... ... ... 113—114

Panchayat Union Dispensary at Vengal, take over by Government ... ... ... ... ... 418




I.


I.A.S. OFFICERS—

Compulsory retirement, (Point of Information) ... 566—567

IDOLS—

Unearthed in Vidividangan village, disposal ... 290—291

INDUSTRIES—

Industrial Training Institutes, admission of more number of students ... ... ... ... 451


J.


JAMES, Thiru J.—

Electricity Board Budget, 1975-76, discussion ... 217—219

JABAMALAI, Thiru J.—

Closure of cashewnut factories in Kanniyakumari district and consequent hardship to workers (A.M.) 474—476

Electricity Board Budget, for 1975-76, discussion ... 195—203

Pallavan Transport Corporation bus accident near Madras Central Station on 11th November 1975 (A.M.) ... ... ... ... ... ... 474—476

Tirunelveli-Kanniyakumari railway line, suspension of work ... ... ... ... ... ... 253—255

JAYARAMAN, Thiru K.—

Drinking water supply scheme for Salem town, present stage ... ... ... ... ... ... 430

JOTHI VENCATACHELLUM, Thirumathi—

Agriculturists and Agricultural Labourers Debts Adjustment Bill, 1974 ... ... ... ... 12—14

Electricity Board Budget, 1975-76, discussion ... 542—545, 563

Location of headquarters of proposed Leather Industries Development Corporation in Madras and the request to the Government of India to allow Leather Export Promotion Council to function with additional responsibility (R) ... ... 142—145

Pages.

## K


KALIMUTHU, Thiru K.—

Electricity Board Budget, 1975-76, discussion ... 352—357

KAMATCHI, Thiru K.—

Bridge across New Kattalai Channel .. .. 277

Electricity Board Budget, 1975-76, discussion ... 357, 382, 391

Location of headquarters of proposed Leather Industries Development Corporation in Madras and the request to the Government of India to allow Leather Export Promotion Council to function with additional responsibility (R) ... ... ... ... 146—147

KANNAN, Thiru M. R.—

Electricity Board Budget, 1975-76, discussion .. 380—387

KANNAPPAN, Thiru M.—

Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1975 ... ... ... ... ... 62—63, 80, 96—100

KARUNAINATHAN, Thiru S.—

Electricity Board Budget, 1975-76, discussion ... 511

KARUNANIDHI, Dr. M.—

Adjournment of the House, sine die, (M) .. 565—566

Electricity Board Budget, 1975-76, discussion ... 550

Fire in L.I.C., details (Point of Information) ... 132

Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1975 ... ... ... ... ... 66, 81, 83, 94

I.A.S. Officers, compulsory retirement, (Point of Information) .. .. .. .. .. 566, 567

Kidnapping of school-going children in many places and failure of Police to apprehend culprits and consequent concern among parents (A.M.) ... 301—303


PAGES

K—*cont.*


KITTAPPA, Thiru N.—

Agricultural Labour, minimum wages ... ... 101

Co-operative Spinning Mills, appointment of committee 283—285

Co-operative Spinning Mills, constitution of Advisory Committee ... ... ... ... ... 285

Crocodile Farm, setting up ... ... ... ... 123—124

Drinking water supply scheme for Madras City, implementation ... ... ... ... ... 426—429

East Coast Road, sanction of Government of India ... 280—282

Ex-servicemen, operation of lorry service ... ... 448—449

Food adulteration cases, formation of separate police force ... ... ... ... ... ... 418—426

General Hospital, Madras, incentives for blood donation ... ... ... ... ... ... ... 412—417

Harijan hostels, construction in Thanjavur district ... 296—297

High School, opening at Thirumullaivasal ... ... 120—121

Industrial Training Institutes, admission of more number of students ... ... ... ... 451

Malaria in Madras City, control ... ... ... 273—274

Manalur-Kozhikuthi road, formation ... ... 403—409

Mani Ayyanar Temple at Murugamangalam, take over ... ... ... ... ... ... 290

Mariyur road, metalling ... ... ... ... 288

Medical Colleges, recognition ... ... ... 272—273

Minimum age for employment, enhancement ... 447

Multi-storeyed buildings, construction along banks of Cooum river ... ... ... ... ... 440—444

Powerlooms, issue of more licences ... ... ... 433

Salt pan labourers, minimum wages ... ... 102—103

School for Deaf, establishment at Nilagiri in Thanjavur district ... ... ... ... ... 453

Sivapuram Natarajar Idol, restoration ... ... 121—122

Slum Clearance Schemes, World Bank assistance for basic facilities ... ... ... ... ... 444

Underground Drainage Scheme for Mayuram ... 276—277

Pages.

K—*cont*

KOTHANDARAMIAH, Thiru K. S.—

High School, Berikai, construction of additional buildings ... ... ... ... ... ... 269

KRISHNAMOORTHY, Thiru V. (Nellikuppam)—

Closure of Parry confectionery at Nellikuppam and consequent unemployment (C.A.) ... ... 310, 311, 312

Electricity Board Budget, 1975-76, discussion ... 340—351, 352, 379, 387

KUMARASAMI, Thiru K. N.—

Electricity Board Budget, 1975-76, discussion ... 364—370, 550—551

New tank for Vannathankarai Pallam, formation ... 278—279

L.

LABOUR—

Agricultural, minimum wages ... ... ... 101—111

Building construction workers, minimum wages ... 102—111

Cinema theatres, minimum wages ... ... ... 103—111

Labour Ministers' conference, discussion *re* bonded labour and redemption of debts ... ... ... 444—447

Plantation, minimum wages ... ... ... ... 102—111

Printing Press, minimum wages ... ... ... 103—111

Salt pan, minimum wages ... ... ... ... 102—111

LANDS—

Inam land in Tirunelveli district and Dharmapuri appeals against take-over ... ... ... ... 433—434

LATHEEF, Thiru M. A.—

Electricity Board Budget, 1975-76, discussion ... 525—535, 562

Location of headquarters of proposed Leather Industries Development Corporation in Madras and the request to the Government of India to allow Leather Export Promotion Council to function with additional responsibility (R) .. .. .. 154—161

Pages.

L—*cont.*

LOANS—

Diesel engine, loans for purchase ... ... ... 439—440

M.

MADHAVAN, Thiru S.—

Attack and arrest of workers by police in Sri Leka Hotel, Madras (A.M.) ... ... ... ... 467—469

Delay in answering short notice questions (Point of Information) ... ... ... ... ... 409—410, 412

MARIMUTHU, Thiru A. R.—

Attack and arrest of workers by police in Sri Leka Hotel, Madras (A.M.) ... ... ... ... 467

Location of headquarters of proposed Leather Industries Development Corporation in Madras and the request to the Government of India to allow Leather Export Promotion Council to function with additional responsibility (R) ... ... ... 165—168

Lock-out and threatened retrenchment in Sakthi Textiles Limited, Pollachi. (A.M.) ... ... 305

MILLS—

Lay-off and retrenchment in Appakoodal Sakthi Sugar Factory and consequences (A.M.) ... ... 307—310

Lock-out and threatened retrenchment in Sakthi Textiles Limited, Pollachi (A. M.) ... ... 303—307

MOTION(S)—

Ad. Motions :

Attack and arrest of workers by police in Sri Leka Hotel, Madras ... ... ... ... ... 464—469

Closure of Cashewnut factories in Kanniyakumari district and consequent hardship to workers ... 458—460

Kidnapping of school going children in many places and failure of Police to apprehend culprits and consequent concern among parents ... ... 300—303

MOTION(S)—*cont.*

Ad. Motions—*cont.*

Lay-off and retrenchment in Appakoodal Sakthi Sugar Factory and consequences ... ... 307—310

Lock-out and threatened retrenchment in Sakthi Textiles Limited, Pollachi ... ... ... 303—307

Pallavan Transport Corporation bus accident near Central Station, Madras on 11th November 1975 ... ... ... ... ... ... 469—482

Strike in Mettur Spinning Mill consequent on dismissal of some workers ... ... ... ... 461—463

Adjournment of the House *sine die,* ... ... ... 565—566, 567—568

Suspension of Rule 22 ... ... ... ... 1—2

MUNU ADHI, THIRU

Electricity Board Budget, 1975-76, discussion ... 515—524

MUTHIAH, THIRU M.—

B.E. degree, selection of students for part-time course ... ... ... ... ... 117—118

Harijan Welfare Fund for 1973-74, allotment to Tirunelveli district ... ... ... ... 130

Sivan temple at Kayathar, renovation .. .. 129

MUTHU, THIRU V.—

District Harijan Welfare Office, Salem, shifting ... 129

Sankari town drinking water-supply scheme .. 430—431

N.

NARAYANASWAMY, THIRU M. V.—

Electricity Board Budget, 1975-76, discussion .. 494—497

Polytechnic, opening at Thiruvottiyur .. 118—120

Under-ground drainage Scheme, Thiruvottiyur .. 276



NON-GAZETTED OFFICERS—

Government Servants, transfer ... ... ... 262—266

P

PALANISAMY, THIRU N. K.—

Agriculturists and Agricultural Labourers Debt Adjustment Bill, 1974 ... ... ... ... 26—36

Building construction works, minimum wages ... 102

Diesel engines, loans for purchase ... ... ... 439—440

Drinking water-supply scheme for Madras City, implementation ... ... ... ... ... 426—429

Electricity Board Budget, 1975-76, discussion ... 213—217

Elephants, auction at Theppakkadu ... ... ... 122—123

Essential commodities, distribution ... ... 287

Labour Ministers' Conference, discussion *re*- bonded labour and redemption of debts .. .. .. 444—447

List of commodities and their prices, non-display in front of shops ... ... ... ... ... 436—439

Prohibition Enforcement Committees, constitution ... 255—261

Road Inspectors, pension ... ... ... ... 282—283

PANCHAYAT(S)—

Unions, purchase of G.I. Pipes ... ... ... 125—126

PAPERS LAID ON THE TABLE—

Assurances Committee, 9th report ... ... ... 100

Committee on Delegated Legislation, Eighth Report (Fifth Assembly) ... ... ... ... 222

Co-operative Societies Rules, 1963, amendments ... 222

Estates( Abolition and conversion into Ryotwari) Act, 1948, notification ... ... ... ... 399

Madurai City Municipal Corporation Act, 1971, notification ... ... ... ... ... 100

Motor Vehicles Rules, 1940, notification *re.* amendments ... ... ... ... ... 568

PAPERS LAID ON THE TABLE—*cont.*

Municipalities Act, 1920, notifications ... ... 398, 399

Municipal Service Pension Rules, 1970, amendments... 222

Reply of the department with reference to Recommendation No. 23 (i) made by the Public Accounts Committee in its Third Report (1971-72) on the Appropriation Accounts of Tamil Nadu for 1968-69 and Audit Report, 1970 ... ... ... 571

Report of the Hon. Thiru Justice T. Ramaprasada Rao, Commission of Inquiry, appointed to inquire into affairs concerning disposal of rice by Thanjavur Co-operative Marketing Federation ... ... 571

Report of the Public Accounts Committee on Excess over Voted Grants and Charged Appropriations for 1971-72 ... ... ... ... ... 571

Returns of Assets of Members, as on 31st March 1971, 31st March 1972, 31st March 1973, 31st March 1974 and 31st March 1975 ... ... 568—571

Slum Areas Improvement and Clearance Act, 1971, notification ... ... ... ... ... 100

Speech of Minister for Industries and Electricity on Annual Financial Statement for 1975-76 and the Supplementary Financial Statement for 1974-75 of Electricity Board ... ... ... ... ... 222

PARANDHAMAN, THIRU A.—

Accelerated Rural Water-Supply Scheme, Chingleput district .. .. .. .. .. .. 431—432

PAULIAH, THIRU A.—

Drinking Water-Supply Scheme for Kallukoottam, implementation ... ... ... ... 114

PENSION(S)—

Road Inspectors ... ... ... ... 282—283

POINT OF INFORMATION.—

Delay in answering short notice questions ... ... 409—412

Fire in L.I.C. Building, details ... ... ... 131—132

I.A.S. Officers, compulsory retirement ... ... 566—567



POINT OF INFORMATION—*cont.*

Sale of Defence Ministry jeeps to Legislators ... 132

Supreme Court's Judgment on Prime Minister's Election case ... ... ... ... ... 3

POLICE.—

Kidnapping of school-going children in many places and failure of Police to apprehend culprits and consequent concern among parents (A.M.) ... 300—303

Station at Madurai, shooting ... ... ... ... 261—262

POLYTECHNIC.—

Opening at Thiruvottiyur .. .. .. 118—120

PONNAPPA NADAR, THIRU R.—

Electricity Board Budget, 1975-76, discussion ... 487—494

Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1975 ... ... ... ... 98

Supreme Courts' judgment on Prime Minister's Election case (Point of Information) ... ... ... 3

POWERLOOMS.—

Issue of more licences ... ... ... ... 433

PRICE.—

List of commodities and their prices, non-display in front of shops ... ... ... ... 436—439

PROHIBITION.—

Enforcement Committees, constitution ... ... 255—261

PUBLIC HEALTH.—

Malaria in Madras City, control ... ... ... 273—274

Underground Drainage Scheme for Mayuram ... ... 276—277

Underground Drainage Scheme for Thiruvottiyur ... 276

PAGES

R

RADHAKRISHNAN, THIRU M. S.—
Electricity Board Budget, 1975-76, discussion ... 373—376

RAILWAYS—
Tirunelveli-Kanniyakumari railway line, suspension of work ... ... ... ... ... ... 253—255

RAJA, THIRU A. M.—
Electricity Board Budget, 1975-76 discussion .. 203—213

RAJAH PILLAY, THIRU V. K.—
Repatriates, rehabilitation ... ... ... 293—295

RAJANGAM, THIRU N.—
Committee for welfare of repatriates (St.) ... 395—398

RAJARAM, THIRU K.—
Closure of cashewnut factories in Kanniyakumari district and consequent hardship to workers (A.M.). 460
Closure of Parry Confectionery at Nellikuppam and consequent unemployment (C.A.) ... ... 310—312
Lay-off and retrenchment in Appakoodal Sakthi Sugar Factory and consequences (A.M.) ... ... 309—310
Lock-out and threatened retrenchment in Sakthi Textiles Limited, Pollachi (A.M.) ... ... 305—306
Pallavan Transport Corporation bus accident in Central Station (St.) ... ... ... ... 371
Pallavan Transport Corporation bus accident in Madras Central Station (A.M.) ... ... 480—482
Statement by a Minister under rule 82 pending disposal of the same matter under rule 42 (Point of Order). 372
Strike in Mettur Spinning Mill consequent on dismissal of some workers (A.M.) ... ... ... ... 462—463

RAMAKRISHNAN, THIRU KUPPAL, K. S.—
Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1975 ... ... ... ... ... 92

RAMAN, THIRU O. P.—
Agriculturists and Agricultural Labourers Debts Adjustment Bill, 1974 ... ... ... ... 22—26, 38

PAGES

R—cont.

RAMASAMY, THIRU G.—
Road Inspectors, pension ... ... ... ... 282—283

RAMASWAMY, THIRU E.—
Plantation labour, minimum wages ... ... ... 102

REPATRIATES—
Committee for welfare of Repatriates (St.) ... ... 395—398
Rehabilitation ... ... ... ... ... 293—295

RESOLUTION—
Location of headquarters of proposed Leather Industries Development Corporation in Madras and the request to the Government of India to allow Leather Export Promotion Council to function with additional responsibility ... ... ... ... 132—175

ROAD(S)—
East Coast Road, sanction from Government of India. 280—282
Fair weather roads in Ellapuram and Gummudipoondi Panchayat Unions, improvement. ... 456
Irumporai-Periakomarapalayam road, repair ... 289
Manalur-Kozhikuthi road, formation ... ... 403—409
Maraiyur road, metalling . ... ... ... ... 288
Panchayat Union road to Sankarankoil, repairs ... 124—125
Thottam-Srinivasanallur road, repair ... ... ... 126—127

S

SADIQ PASHA, THIRU S. J.—
Electricity Board Budget, 1975-76, discussion ... 175—176, 349, 390—391, 545—549, 551—565
Location of headquarters of proposed Leather Industries Development Corporation in Madras and the request to the Government of India to allow Leather Export Promotion Council to function with additional responsibility (R) ... ... ... ... 133—138, 168—171, 172, 173, 174

SANGUMUTHU THEVAR, THIRU S.—
Causeway across Rama Nadhi, construction ... 454—455
Panchayat Union road to Sankarankoil, repairs ... 124—125

SATHYAVANIMUTHU, THIRUMATHI—
Electricity Board Budget, 1975-76, discussion ... 388—395, 483—485, 511, 512—513
Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1975 ... ... ... ... 63, 95—96

SCHOOLS—
Deaf, establishment at Nilagiri in Thanjavur district. 453
Government Boys High School, Mettupalayam, construction of building ... ... ... ... 269
High School, Berikai, construction of additional building ... ... ... ... ... ... 269
High School, Nattalam, additional building ... ... 269
High School, opening at Thirumullaivasal ... ... 120—121

SHANMUGAM, THIRU P. U.—
Electricity Board Budget, 1975-76, discussion ... 550

SIVAPRAKASAM, THIRU D. S. A.—
Drinking water supply scheme for Tirunelveli district, formulation ... ... ... ... ... 274—275
Electricity Board Budget, 1975-76, discussion ... 376—380
Regional Flying squads in Madurai, formation ... 450

SLUMS—
Slum Clearance Schemes, World Bank assistance for basic facilities ... ... ... ... ... 444

SONIAH, THIRU T.—
Rameswaram temple kumbabishekam, expenditure ... 129—130
Water-supply scheme, Thennavarayan Pudukottai village ... ... ... ... ... ... 275

SOUNDARAPANDIAN, THIRU P.—
Drinking water wells, Seethakattanoor, sinking ... 289—290
Handloom Exhibition at Tirunelveli, fire accident ... 285—287
Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1975 ... ... ... ... ... 38—68,87
Over-head tank at Kommatteri, construction ... ...455—456
Punnakkayal coast, conversion into fishing harbour ... 452—453
Thottiam—Srinivasanallur Road, repair ... ... 126—127

SRINIVASAN, THIRU T. P.—
Electricity Board Budget, 1975-76, discussion ... 312—318

SUBBIAH, THIRU A. K.—
Agriculturists and Agricultural Labourers Debts Adjustment Bill, 1974 ... ... ... ... ... 14—17
Electricity Board Budget, 1975-76, discussion ... 535—538
Panchayat Union, purchase of G.I. Pipes ... ... 125—126

SUBRAMANIAM, THIRU A.—
Agriculturists and Agricultural Labourers Debts Adjustment Bill, 1974 ... ... ... ... 4—12, 26, 33
Assurances Committee, Ninth Report, presentation 2
Delay in answering short notice questions, (Point of Information) ... ... ... ... ...411—412
Handloom Exhibition at Tirunelveli, fire accident ... 285—287
Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1975 ... ... ... ... 75—85
Taking up of Privilege Matter at the next sitting (Ann.) ... ... ... ... ... ... 457—458

SUBRAMANIAM, THIRU K. M.—
Electricity Board Budget, 1975-76, discussion ... 219—222
Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1975 ... ... ... ... 67, 68—69

S—*cont.*

SURENDRAN, THIRU M.—

Agriculturists and Agricultural Labourers Debts Adjustment Bill, 1974 ... ... ... ... 17—22

Strike in Mettur Spinning Mill consequent on dismissal of some workers (A.M.) ... ... ... ... 461—462

T

TANGAMANI, THIRU K. T. K.—

Attack and arrest of workers by police in Sri Leka Hotel, Madras (A.M.) ... ... ... ... 466—467

Delay in answering short notice questions (Point of Information) ... ... ... ... ... 409—410

Electricity Board Budget, 1975-76, discussion ... 318—332

Fire in L.I.C. Building (Point of Information) 558—562

I.A.S. Officers, compulsory retirtment (Point of Information) ... ... ... ... ... 131—132

Kidnapping of school-going children in many places and failure of Police to apprehend culprits and consequent concern among parents (A.M.) ... 566

Lay-off and retrenchment in Appakoodal Sakthi Sugar Factory and consequences (A.M.) ... 300—301

Location of headquarters of proposed Leather Industries Development Corporation in Madras and the request to Government of India to allow Leather Export Promotion Council to function with additional responsibility (R) ... ... ... 307—309

132—133

Lock-out and threatened retrenchment in Sakthi Textiles Limited, Pollachi (A.M.) 138—142

Pallavan Transport Corporation bus accident near Madras Central Station on 11th November 1975 (A.M.) ... ... ... ... ... ... ... 304—306

Road Inspectors, pension ... ... ... ... 476—479

Statement by a Minister under rule 82 pending disposal of the same matter under rule 42 (Point of Order). 282—283

Supreme Court's judgment on Prime Minister's Election case (Point of Information) ... ... 373

3



T—*cont.*

TANK(S)—

New tank for Vannathankarai Pallam, formation ... 278—279

Over-head tank at Komatteri, construction ... ... 455—456

TEMPLE(S)—

Atcheeswarar temple, Achirapakkam, renovation ... 128—129

Mani Ayyanar temple at Murugamangalam, take-over. 290

Pachur Sendrayasamy temple, take-over ... ... 291

Paleswaran temple lands, assignment of house-site pattas ... ... ... ... ... ... 292—293

Rameswaram temple kumbabishekam, expenditure ... 129—130

Sivan temple, Kayathar, renovation ... ... ... 129

Sivapuram Natarajar idol, restoration ... ... 121—122

THIMMARAYA GOUNDER, THIRU T. C.—

Pachur Sendrayasamy temple, take-over ... ... 291

THOOYAMANI, THIRU M. C.—

E.S.I. Hospital at Mettupalayam, construction of building ... ... ... ... ... ... 447

Government Boys High School, Mettupalayam, construction of building ... ... ... ... 269

Irumporai—Periakomarapalayam road, repair ... 289

THYAGARAJAN, THIRU E. S.—

Electricity Board Budget, 1975-76, discussion ... 485—487

TRANSPORT AND COMMUNICATIONS—

Pallavan Transport Corporation bus accident in Central station (St.) ... ... ... ... 371

Regional Flying Squads in Madurai, formation ... 450

V

VADIVEL, THIRU S.—

Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1975 ... ... ... ... ... 92

VADIVEL, THIRU S.— *cont.*

Idols unearthed in Vidividangan village, disposal ... 290—291

VADIVELU, THIRU S. K.—

Drinking water-supply scheme for Mettupalayam and Thathaiyangarpettai, implementation ... ... 114—115

VEERASAMI, THIRU N.—

Electricity Board Budget, 1975—76, discussion ... 181, 182, 356, 505—515, 522

Location of headquarters of proposed Leather Industries Development Corporation in Madras and the request to the Government of India to allow Leather Export Promotion Council to function with additional responsibility (R) ... ... ... 161—165

VENKATASWAMY, THIRU B.—

Electricity Board Budget, 1975-76, discussion ... 538—542

Inam lands in Tirunelveli district and Dharmapuri, appeals against take-over ... ... ... ... 433—434

Pallavan Transport Corporation bus accident near Madras Central Station on 11th November 1975 (A.M.) ... ... ... ... ... ... 480

Permanent Fair for Madras City, set-up ... ... 270—272

Police station at Madurai, shooting ... ... ... 261—262

Public Accounts Committee, Report on excess over voted grants and charged appropriations for 1971-72, presentation ... ... ... ... ... 482

Rice, illicit movement through Railways ... ... 434—436

VEZHAVENDAN, THIRU KA.—

Electricity Board Budget, 1975-76, discussion ... 187—195

Fair weather roads in Ellapuram and *Gummudipoondi* Panchayat Unions, improvement ... ... ... 456

Fisheries Development Corporation, purchase of fishing boats ... ... ... ... ... ... 451—452

Harijan colony, Annavaram, drinking water ... ... 130—131

PAGES

V—*cont.*

VEZHAVENDAN, THIRU KA.—*cont.*

Hospital at Pathirivedu, Matharpakkam, construction of new building ... ... ... ... ... 113—114

Labourers in Printing Presses and Cinema Theatres, minimum wages ... ... ... ... ... 103—111

Paleswaram temple lands, assignment of house-site pattas to poor tenants ... ... ... ... 292—293

Panchayat Union Dispensary at Vengal, take-over by Government ... ... ... ... ... 418

Pennalurpet Sub-taluk, upgrading ... ... ... 432

Physically Handicapped, training schemes in Gummudipoondi and Ellapuram Blocks ... ... ... 453

W

WAHAB, THIRU K. A.—

Bridge across Mahendravadi canal, construction ... 454

Electricity Board Budget, 1975-76, discussion ... 332—340

Parent-Teachers Association, constitution ... ... 267—269

Water-supply scheme in Kaveripakkam, commencement ... ... ... ... ... ... 116

WATER-SUPPLY—

Accelerated Rural Water-supply Scheme, Chingleput district ... ... ... ... ... 431—432

Drinking Water-supply Scheme for Madras City, implementation ... ... ... ... ... 426—429

Drinking Water-supply Scheme for Salem town, present stage ... ... ... ... ... 430

Drinking water wells, Seethakattanoor, sinking ... 289—290

Kallukoottam, implementation ... ... ... 114—117

PAGES

W—*cont.*


WATER-SUPPLY—*cont.*

Kaveripakkam, commencement ... ... ... 116—117

Mettupalayam and Thathaiyangarpettai Town Panchayats, implementation ... ... ... ... 114—117

Sankari town, drinking-water scheme ... ... 430—431

Schemes, Thennawarayan Pudukottai village ... ... 275

Schemes, Tirunelveli district, formulation ... ... 274—275


61726